பேராசிரியர் சு. வித்தியானந்தனின்

# பத்திரிகை ஆக்கங்களும் வாழ்க்கைப் பதிவுகளும்



பேராசிரியர் சுப்பிரமணியம் வித்தியானந்தன்
நூற்றாண்டு வெளியீடு
2024

**வெளியீடு**
பண்பாட்டலுவல்கள் அலகு, கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, வடக்கு மாகாணம்.

பேராசிரியர் சு. வித்தியானந்தனின்

# பத்திரிகை ஆக்கங்களும் வாழ்க்கைப் பதிவுகளும்

**தொகுப்பும் பதிப்பும்**


கலாநிதி.(திருமதி) மைதிலி விசாகரூபன்

திரு. யோகராஜா கேசவன்

திரு. கனகரத்தினம் சயந்தன்

கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன்



வெளியீடு

பண்பாட்டலுவல்கள் அலகு,
கல்வி, கண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு,
வடக்கு மாகாணம்.

பேராசிரியர் சுப்பிரமணியம் வித்தியானந்தன்
நூற்றாண்டு வெளியீடு
2024

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | பேராசிரியர் சு.வித்தியானந்தனின் பத்திரிகை ஆக்கங்களும் வாழ்க்கைப் பதிவுகளும். |
| தொகுப்பும் பதிப்பும் | : | கலாநிதி (திருமதி) மைதிலி விசாகரூபன்,<br>திரு. கனகரட்ணம் சயந்தன்,<br>திரு. யோகராசா கேசவன்<br>கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் |
| வெளியீடு | : | பேராசிரியர் சுப்பிரமணியம் வித்தியானந்தன் நூற்றாண்டு அறக்கட்டளை வெளியீடு |
| முதற்பதிப்பு | : | 2024 |
| விலை | : | இலவச வெளியீடு |
| பக்கங்கள் | : | xii , 243 பக். |
| பிரதிகள் | : | 235 |
| அச்சுப்பதிப்பு | : | மிக்கி பிறிண்டிங் ஸ்பெசலிஸ்ற், பலாலி வீதி, திருநெல்வேலி. |
| ISBN | : | 9789555334921 |
| அட்டைப்பட வடிவமைப்பும் படத்தொகுப்பு உதவியும் | : | திரு.இ.தனஞ்செயன் |

**வெளியீட்டிலுள்ள பட்டியல் தரவு**

பேராசிரியர் சு.வித்தியானந்தனின் பத்திரிகை ஆக்கங்களும் வாழ்க்கைப் பதிவுகளும் / தொகுப்பும் பதிப்பும் மைதிலி விசாகருபன்…[et al]. - யாழ்ப்பாணம் : பேராசிரியர் சுப்பிரமணியம் வித்தியானந்தன் நூற்றாண்டு அருக்கட்டளை வெளியீடு, 2024

xii , 243 பக்.

ISBN : 9789555334921

1. DDC 080 2. தலைப்பு 3. விசாகருபன், மைதிலி தொகுப்பும் பதிப்பும்

# ஆசியுரை

தமிழ்கூறு நல்லுலகம் அறிந்த நற்றமிழ் அறிஞர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்களின் சிறப்பை அறியாதவர்கள் இல்லை. வியத்தகு புலமையாளராகிய இப்பெருமகனாரின் நூற்றாண்டு குறித்துப் பல நூல்கள் வெளிவந்து கொண்டு இருக்கின்றன. அந்த வகையில் பேராசிரியரின் அரிய கட்டுரைகளைத் தொகுத்து ஆவணமாக வெளியிடும் பெருமுயற்சி பாராட்டுக்குரியது.

மிக இளம் பராயத்திலேயே தாய்மொழி மீது பற்றுக் கொண்டு எழுதத் தொடங்கியவர் இவர். யா/யூனியன் கல்லூரி மாணவராக விளங்கியபோதே கல்லூரிச் சமூகத்தால் இவர் அடையாளங் காணப்பட்டார். இருமொழிப் புலமையால் பல்கலைக்கழக மாணவப்பருவத்தில் இவரது ஆற்றல் உணரப்பட்டது. மாணவனாக எழுதத் தொடங்கிய கட்டுரைகள் இவரது புலமைக்குச் சான்றாகும்.

கொழும்பு பல்கலைக்கழகம், பேராதனைப் பல்கலைக்கழகம் வெளியிட்ட மலர்களில் இவர் எழுதிய சிந்தனைக்குரிய சிறப்புக் கட்டுரைகள் இன்றும் படிப்பவர்களை வியப்புக்குள்ளாக்குவன. பல்கலைக்கழக விரிவுரையாளராக, பேராசிரியராக, ஆய்வாளராக இவர் படைத்தவை பல. அவற்றுள் இவற்றை தேர்ந்தெடுத்து இந்நூ லில் தொகுத்துள்ளார்கள்.

உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகளில் இவரது தனித்துவமான ஆய்வுக் கட்டுரைகள் வெளிவந்துள்ளன. தமிழிலும் ஆங்கிலத்திலும் அரிய படைப்புக்களைத் தந்த பேராசிரியர் பல புலமையாளர்களின் நூல்களுக்கு எழுதிய முன்னுரைகள் கணக்கிலடங்காது.

தமிழ்க் களஞ்சியமாக எம் சமூகம் போற்றிய இப்பேராசான் சாதித்தவை ஏராளம். பிற நாடுகளில் நடைபெற்ற தமிழ் விழாக்களில் இவரது ஆக்கங்கள் பல வெளிவந்திருப்பதை நாம் அறிவோம். கீழைத்தேயக் கலைகளைச் சிறந்த ஆய்வுகளின் மூலம் உலக அரங்கிற்குக் கொண்டு செல்ல வேண்டும் என்பதே இவரது பெருங்கனவு. அதற்காக எம் கலைகளை நுணுக்கமாக ஆராய்ந்து வெளிப்படுத்தியதோடு, தனது மாணவர் பரம்பரையையும் அப்பாதையால் செல்ல வழிகாட்டியவர்.

இத்தகைய சான்றோரின் நூற்றாண்டு நினைவாக யாழ். பல்கலைக்கழகப் பிரதி நூலகர் கலாநிதி திருமதி. மைதிலி விசாகரூபன் அவர்களின் தலைமையில் இவர் பத்திரிகைகளில் வெளியிட்ட அரிய கட்டுரைகள் தேடி எடுக்கப்பட்டு தொகுக்கப்பட்டுள்ளமை பாராட்டுக்குரிய விடயமாகும். இக்கட்டுரைகள் பேராசிரியரது ஆக்கங்களின் சிறு துளியே. மேலும் எதிர் காலத்தில் பேராசிரியர் ஏனைய கட்டுரைகள் தொடர்ந்து தொகுப்புகளாக வெளிவரவேண்டும். பேராசிரியரின் புலமைசார் ஆக்கங்கள் ஏக காலத்துக்கும் பொருத்தப்பாடுடையவை. அதனை அனைவரும் உணர்ந்து கொள்வர்.

**செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன்,**
தலைவர், ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.
தலைவர், சிவபூமி அறக்கட்டளை.
2024

# வாழ்த்துச்செய்தி

*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதலாவது துணைவேந்தரும் தமிழ்ப்பேராசிரியருமான பேராசிரியர் சு. வித்தியானந்தனின் நூற்றாண்டைப் பயனுள்ள வகையில் கொண்டாடும் பொருட்டு, பேராசிரியரால் அவ்வப்போது பல்வேறு ஊடகங்களிலும் எழுதப்பட்டு வெளிவந்த ஆக்கங்களை ஒருங்குதிரட்டி, 'பேராசிரியர் சு.வித்தியானந்தனின் பத்திரிகைப் பதிவுகளும் நினைவுகளும்' என்ற தலைப்பில் நூலாக வெளிவருவதையிட்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொன்விழாக்காலத் தமிழ்த்துறைத்தலைவர் என்ற வகையில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.*

*பேராசிரியர் சுவாமி விபுலாநந்தர் வழி வருகின்ற ஈழத்து நிறுவனவழித் தமிழ்க் கல்விப் பாரம்பரியத்தின் பிரதான ஆளுமைகளில் ஒருவராக பேராசிரியர் விளங்கினார். தமிழ்கூறும் நல்லுலகில் மிகவும் நன்கு அறியப்பட்ட பேராசிரியர்களான கா.சிவத்தம்பி, க.கைலாசபதி, சி.தில்லைநாதன் முதலானவர்கள் பலரும் பேராசிரியருடைய பல்பரிமாண ஆளுமையின் வெளிப்பாடுகளாக விளங்கிய மாணவர்களாவர். இந்தப் புலமைப் பாரம்பரியமே இன்றுவரை ஈழத்துப் பல்கலைக்கழகங்களில் வேரோடி நிலைத்திருக்கின்றது. தமிழாய்வு என்பதை குறுகிய எல்லைகளைத் தாண்டி, தமிழியல் ஆய்வாக தமிழர்சால்பு என்ற தனது ஆராய்ச்சி நூலினூடே மடைமாற்றி பரிணமிக்கச்செய்ததில் பேராசிரியர் சு. வித்தியானந்தனுக்குப் பெரும் பங்குண்டு. பேராசிரியருடைய சிந்திப்புக்கள் பலவும் பல்வேறு ஊடகங்களில் வெளிவந்திருந்தன. அவற்றுட் பலவும் காலவெள்ளத்தில் அழியுண்டும் மறைந்தும் போயின. அவற்றையெல்லாம் ஒருங்கு திரட்டி நூலாக்கும் முயற்சியை எவரும் முன்னெடுத்திலர். பேராசிரியரது நூற்றாண்டு நினைவு நாளில் அக்குறையினை நிவர்த்தி செய்யும் முகமாக யாழ்ப்பாணம் தேசிய கல்வியற்கல்லூரியின் மேனாள் பீடாதிபதி கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் அவர்களது தலைமையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வித்தியானந்தன் நூலகத்தின் பிரதி நூலகர் கலாநிதி மைதிலி விசாகரூபன் உள்ளிட்ட குழுவினர் பெரிதும் முயன்றுழைத்து ஆங்காங்கே சிதறிக்கிடந்த பேராசிரியருடைய ஆக்கங்களை நூலுருவில் இன்று வெளிக்கொணர்கிறார்கள். பேராசிரியர் ஒருவருக்கான மிக உயர்ந்த கௌரவம் என்பது அவருடைய புலமைசார் எழுத்துக்களினூடே அவரை நினைவிற் கொள்ளுதலாகும். தன்னுடைய புலமைசார் எழுத்துக்களாலும் மிகச்சிறந்த நிருவாகத்திறனினாலும் தூரநோக்குடைய தமிழ்த்தேசிய சிந்திப்புக்களாலும் தமிழ்கூறும் நல்லுலகில் காலம் கடந்தும் நிலைத்து வாழ்பவர் பேராசிரியர் சு. வித்தியானந்தன். இந்த நூற்றாண்டு நிறைவில் இந்த மாபெரும் பணியை நிறைவேற்றுவதில் முயன்றுழைத்த அத்தனை நல்லுள்ளங்களையும் உளமாரப்பாராட்டி வாழ்த்தி வணங்குகின்றேன்.*

**பேராசிரியர். கி. விசாகரூபன்**
சிரேஷ்ட பேராசிரியர் மற்றும் தலைவர்
தமிழ்த்துறை, கலைப்பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# நெஞ்சினிலிருந்து...

ஈழத்தில் வாழ்ந்த தமிழ்ப்புலமையாளர்களுள் பேராசிரியர் சு.வித்தியானந்தன் உயர்வானவராகவும் தனித்துவமான ஆளுமைப்பண்புகள் பலவற்றைக் கொண்டவராகவும் விளங்கினார் என்பது மிகையான கூற்று அல்ல.

பேராசிரியரின் தாய்மொழிப்பற்று தமிழர்களின் கலை, இலக்கிய வடிவங்களில் அவருக்கிருந்த அபரிதமான வேட்கை குறிப்பாக நாட்டார் அரங்கை மீட்டெடுப்பதில் பேராசிரியர் காட்டிய அதீத ஈடுபாடு, பிறருக்கு உதவுவதில் அவரிடத்துக் காணப்பட்ட ஆர்வம், மானுடம் வென்ற அவரது மனிதாபிமானச் செயற்பாடுகள், தமிழ்த்தேசியத்தின்பால் அவருக்கிருந்த ஈர்ப்பு, கல்விப்பணியையும் நிருவாகப்பணியையும் சமதையாக சிறப்பாகக் கொண்டு நடத்திய பாங்கு முதலானவை பேராசிரியரை தமிழ் கூறும் நல்லுலகில் மாபெரும் மனிதனாக இனங்காட்டுகின்றன.

பேராசிரியர் தனது சிந்தனைகள் மற்றும் கருத்துக்கள் பொதுமக்களைச் சென்றடைய வேண்டும் என்பதில் ஆர்வமுடையவராக விளங்கினார். இவற்றை வெளிப்படுத்த தனக்குக்கிடைத்த மேடை வாய்ப்புக்களையும் பத்திரிகைகள், சஞ்சிகைகள், ஆய்விதழ்கள் முதலான பிற வாய்ப்புக்களையும் முறையாகப் பயன்படுத்திக் கொண்டார். இலங்கைப் பல்கலைக்கழகத்தின் தமிழ் மன்ற இதழான 'இளங்கதிரி'லும் பாடசாலைச் சஞ்சிகைகளிலும் தினகரன், வீரகேசரி, சுதந்திரன் முதலான நாளிதழ்களிலும் வார இதழ்களிலும் பேராசிரியருடைய எழுத்துக்கள் பலவும் கணிசமாக வெளிவந்தன. ஆயினும் நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலைகளால் இன்று அவற்றுட் பலவும் கிடைத்ததற்கு அரியனவாகியுள்ளன. அவற்றுட் பலவற்றைச் சுவடிகள் திணைக்களத்தில் பார்க்கவேண்டிய நிலையும் காணப்படுகின்றது. இவ்வாறான அரிய சிந்திப்புக்களைத் திரட்டி அவர் பிறந்த நூற்றாண்டு நினைவு நாளில் ஒரு நூலுருவில் வெளிக்கொண்டுவரவேண்டும் என்று நான் பெரிதும் விரும்பினேன். காரணம் என்னவெனில் ஆயிரத்துத்தொள்ளாயிரத்து நாற்பது, ஐம்பதுகளில் எழுதப்பெற்ற அவரது சிந்தனைகளில் பலவும் இன்றும் நமது சமுகத்திற்குப் பொருந்துவனவாகவும் வேண்டப்படுவனவாகவும் அமைந்திருத்தலாகும். பிறிதொருவகையில் சொல்வதானால் பேராசிரியருடைய எழுத்துக்கள் கடந்தகால முக்கியத்துவமும் நிகழ்கால அர்த்தப்பாடும் உடையனவாக விளங்குவதனாலாகும்.

மேலே சுட்டியவற்றை மனதிற்கொண்டு ஆங்காங்கே பல்வேறு ஊடகங்களிலும் சிதறிக்கிடந்த பேராசிரியருடைய ஆக்கங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வித்தியானந்தன் நூலகத்தின் பிரதி நூலகர் கலாநிதி (திருமதி) மைதிலி விசாகரூபன் அவர்களது தலைமையில் கடந்த ஓராண்டுக் காலப்பகுதியில் இயன்றவரை தொகுத்து முடித்தோம். இத்தொகுப்பினை அமரர் பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்களின் நூற்றாண்டு வெளியீடுகளில் ஒன்றாக வெளிக்கொணர்வதில் நாம் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றோம். வித்தியானந்தனது பத்திரிகை எழுத்துக்கள் பலவற்றுள்ளும் ஓரளவு முழுமையாகக் கிடைத்த கட்டுரைகள் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. கட்டுரைகள் வெளி வந்த திகதிகளின் படி இக்கட்டுரைகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

*ஏறத்தாழ 1950 காலப்பகுதியிலிருந்து தொடங்கி அவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தராகப் பதவிவகித்த நீண்ட காலப் பகுதிக்குள் எழுதிய இக்கட்டுரைகள் பலவும் இலங்கைத் தமிழ்ச் சமூகத்தின் வரலாற்றைப் பெரிதும் மையப்படுத்தியிருந்தன. இத்தன்மையைக் கண்டறிந்து, இவற்றை வெளியுலகிற்குக் கொண்டுவரவேண்டுமென எனக்கு இடித்துரைத்தவர் கலாநிதி மைதிலி விசாகரூபன் அவர்கள். இதற்குரிய நிதி பெருஞ்சவாலாக இருந்தது. பிரதம செயலாளர் நிதிக்கான ஏற்பாடு செய்வதாக உறுதியளித்த பின்னர் மிகக் குறுகிய காலப் பகுதியில் இப்பதிப்பு வேலைகள் இடம் பெற்றன. இவ்வாறு ஏனைய கட்டுரைகளையும் தமிழ்ச் சமூகம் முன்வந்து வெளிக்கொண்டுவர வேண்டும்.*

*இந்தக் கட்டுரைத் தொகுப்பு நூல் தமிழ் கூறும் நல்லுலகெங்கும் பரவலாக்கம் பெற பேருதவிபுரிந்தவர் வடக்குமாகாண கௌரவ பிரதம செயலாளர் திரு.இ.இளங்கோவன் அவர்கள். அவர் பேராசிரியர் சு.வித்தியானந்தனின் நேரடி மாணவர்களுள் ஒருவராக இல்லாவிட்டாலும் கூட, பேராசிரியரின் எழுத்துக்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து இந்தப் பெரும்பணியை நிறைவேற்றத் துணைபுரிந்தார். அவருக்கு என்றும் நாம் நன்றிக் கடப்பாடுடையோம். இந்தத் தொகுப்பு நூலாக்க முயற்சியில் எம்முடன் இணைந்து கரம்கோர்த்த அத்தனை நல்லுள்ளங்களையும் நன்றியோடு நினைவிற் கொள்கின்றோம். குறிப்பாக இந்நூலை அழகுற அச்சிட்டு உதவிய சாவகச்சேரி மிக்கி அச்சகத்தாருக்கு எமது உளமார்ந்த நன்றிகள் பல.*

**கலாநிதி. திருநாவுக்கரசு கமலநாதன்**
ஸ்தாபக பீடாதிபதி,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி,
கோப்பாய்.

# பதிப்புரை

இருபதாம் நூற்றாண்டுக் காலப்பகுதியில் இலங்கையில் வாழ்ந்து மறைந்த தமிழப் பேரறிஞர்களுள் பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்களுக்கெனத் தனித்துவமான வரலாற்றுப் பதிவுகள் பல எமது சமூகத்தில் உண்டு. தாம் வாழும் காலத்தில் தமிழியல் சார்ந்தும், உயர்கல்வித்துறை சார்ந்தும் பேராசிரியர் சு. வித்தியானந்தன் நிறைவேற்றிச் சென்ற பணிகள் பலவும் இற்றைக்குப் பல ஆண்டுகளைக் கடந்தும் எம் சமூகத்திற்கு நற்பயனை விளைவித்துக் கொண்டிருக்கின்றன. அவரால் விதைக்கப்பட்டனவற்றிலிருந்து தோன்றிய பெருவிருட்சத்தின் கீழ் இன்றைய தமிழ் கல்விச் சமூகம் நற்பயனடைந்து கொண்டிருக்கின்றது என்பது அவரது நூறாவது பிறந்தநாளிலே பகிர்ந்து கொள்ளப்பட வேண்டிய முக்கியமானதொரு செய்தியாகும்.

பேராசிரியர் சு. வித்தியானந்தனின் எழுத்து நிலைப்பட்ட ஆளுமை வெளிப்பாடுகள் ஆராய்ச்சி மற்றும் திறனாய்வு ஆக்கங்களாகப் பல்வேறு வடிவங்களில் எமது கைகளில் கிடைக்கின்றன.

பேராசிரியர் தனது கல்லூரி வாழ்வின் பின்னர் இலங்கைப் பல்கலைக்கழக உள்வாரி மாணவராக இணைந்து கொண்டார். தமிழ்ச் சிறப்புக் கலைமாணிப் பட்டம் பெற்ற பின்னர் அதே பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளரானார். தொடர்ந்து இலண்டன் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப்பட்ட ஆய்வை மேற்கொண்டார். தளராது தொடர்ந்தும் தனது எழுத்தாக்க முயற்சியில் ஓய்வின்றி ஈடுபட்டு வந்தார்.

இவரது எழுத்துக்கள் பலவும் தேவைக்கேற்ற வகையில் பல்வேறு வெளியீடுகளிலும் வெளியாகியுள்ளன. 1974லிருந்து வெளிவந்த இளங்கதிர் முதலான மாணவர் சஞ்சிகைகளில் இவர் தொடர்ந்து எழுதியுள்ளார். இலங்கை கலைக்கழகச் சஞ்சிகை, மலைமதி, இந்துதர்மம் முதலான பல்வேறு பல்வேறு வெளியீடுகளிலும் இதழ்களிலும் இவரது ஆக்கங்கள் பிரசுரமாகியுள்ளன.

அணிந்துரைகள், முன்னுரைகள், ஆசியுரைகள், மதிப்புரைகள், பாராட்டுரைகள் மற்றும் தோற்றுவாய், தொடக்கவுரை, தலைமையுரை என்றவாறெல்லாம் அவ்வப்போது வெளிவந்த வெவ்வேறு ஆக்கங்களுக்கு வழங்கிய உரைகளும் கூடப் பேராசிரியர் வித்தியானந்தனின் கருத்துப் பதிவுக் களங்களாக இருந்துள்ளன. மேற்குறிப்பிட்டவாறான இத்தகைய உரைகள் அவரது வெறும் சம்பிரதாய எழுத்துக்களாக இல்லாது பயனுள்ள பல கருத்துக்களை வலியுறுத்தும் ஆக்கங்களாகக் கொள்ளப்படத்தக்கவையே. நாட்டுக்கூத்து ஏடுகளைப் பதிப்பித்து வெளியிட்டபோது, அப்பதிப்பு நூல்களுக்கு எழுதிய முன்னுரைகள், நாட்டாரியலின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் ஒரு நீண்ட கட்டுரையாக உள்ளதை இவ்விடத்தில் எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம்.

இதுவரையும் மேற்குறிப்பிட்ட அனைத்து வெளியீடுகளிலிருந்தும் பேராசிரியர் சு. வித்தியானந்தனின் பத்திரிகை ஆக்கங்கள் சில தனித்துவமான அம்சங்களைக் கொண்டுள்ளமையை அவதானிக்க முடிகின்றது. பேராசிரியர் சு. வித்தியானந்தனின் ஆக்கங்களை உள்ளடக்கமாகக் கொண்டு வெளிவந்த பத்திரிகைகள் கால நீட்சி காரணமாக இன்று கிடைத்தற்கரியனவாகி உள்ளன. பழைய பத்திரிகைகளைப் பெற்றுக்

கொள்ளமுடியாமல் இருப்பதன் காரணமாக அவற்றில் வெளியாகிய ஆக்கங்களும் கிடைத்தற்கரியனவாகியுள்ளன. முன்னைய பழமைக்கும் பின்னைய புதுமைக்கும் ஏற்றதான கருத்துக்களைக் கொண்ட ஆக்கங்கள் பல மறந்தும், மறைந்தும் போகும் நிலையையெய்தியுள்ளன. இவற்றுட்பல இலங்கைத் தேசிய நூலகம், அரச ஆவணக் காப்பகம் ஆகியவற்றின் சேமிப்புக் குதங்களில் புதையுண்டு போயுள்ளன. இத்தகையதொரு அரிதான சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு இத்தொகுப்பு முயற்சி இடம்பெற்றுள்ளது.

இலங்கையில் வெளிவந்த தமிழ்ப்பத்திரிகைகளில் நூற்றுக்கு மேற்பட்ட பத்திரிகைக் கட்டுரைகளைப் பேராசிரியர் எழுதியமைக்கான வெளியீட்டு விபரங்கள் கிடைத்துள்ளன. ஆனால் அக்கட்டுரைகளை முழுமையாகப் பெறமுடியவில்லை. சில கட்டுரைகளின் தொடர்ச்சியையும், வேறு பக்கங்களில் வெளிவந்த முடிவுப் பகுதிகளையும் பெறமுடியவில்லை. கால நீட்சி காரணமாகப் பத்திரிகைத் தாள்களும் அச்சிடப்பயன்பட்ட மைகளும் நிற மாறுதலடைந்துள்ளமையால் பல கட்டுரைகளைத் துல்லியமாகப் பதிப்பிப்பதில் சவால்கள் எதிர்கொள்ளப்பட்டன.

இலங்கையின் தமிழ்ப் பத்திரிகைகளின் பொதுவான வரலாற்றை நோக்கும்போது சமயப் பிரசார நோக்கத்துடனேயே ஆரம்பகாலப் பத்திரிகை வெளியீடுகள் இடம்பெற்றன. காலவோட்டத்தில் 1930களின் பின்னர் சமூகப் பிரக்ஞையுள்ள பத்திரிகைகள் வெளிவர ஆரம்பித்தன. ஈழகேசரி (1930), வீரகேசரி (1930), தினகரன் (1932), சுதந்திரன் (1947), ஈழநாடு (1959) போன்ற பத்திரிகைகளின் வருகையும் அவற்றின் தொடர்ச்சியான வளர்ச்சியும் தமிழ்ப் பத்திரிகை வெளியீட்டில் புதிய பல பரிமாணங்களை ஏற்படுத்தின. இவை தகவல் ஊடகங்களாக மாத்திரமன்றி அறிஞர்களின் ஆக்கங்களையும் ஆங்காங்கு பிரசுரிக்க இடமளித்தன.

இத்தகையதொரு பின்புலத்திலே தான் பேராசிரியர் சு. வித்தியானந்தனும் பத்திரிகைகளில் எழுதலானார். வீரகேசரி, தினபதி, சுதந்திரன், ஈழநாடு, தினகரன் முதலான தமிழ்ப் பத்திரிகைகளிலும் Daily news ஆங்கிலப் பத்திரிகையிலும் பல கட்டுரைகளை இவர் எழுதியுள்ளார். ஒப்பிட்டு நோக்கும்போது பத்திரிகைகள் யாவற்றுள்ளும் தினகரன் பத்திரிகையே பேராசிரியர் சு. வித்தியானந்தனின் சிந்தனைக்கும் எழுத்திற்கும் எண்ண வெளிப்பாட்டிற்கும் அதிகூடிய இடமளித்திருந்தது. குறித்த சில காலப்பகுதியில் தினகரன் பத்திரிகையின் நான்காம் பக்கம் பெரும்பாலும் வித்தியானந்தனின் ஆக்கங்களைத் தாங்கி வந்த பக்கங்களாக இருந்துள்ளமையை அவதானிக்கமுடிகின்றது. இந்நூலில் வெளிவந்த 70 கட்டுரைகளில் மொத்தம் 62 கட்டுரைகள் தினகரன் பத்திரிகையில் வெளிவந்தனவாகும் என்பது இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கது.

பேராசிரியர் சு. வித்தியானந்தனின் பத்திரிகை ஆக்கங்களில் முனைப்புறுத்திக் காட்டக்கூடிய அம்சம் ஒப்பியல் நோக்கிலமைந்த கருத்து வெளிப்பாடாகும். இவர் 1950ம் ஆண்டுக் காலப்பகுதியில் இலண்டனில் கலாநிதிப்பட்ட ஆய்வை மேற்கொண்டார். அப்போது சங்க இலக்கியக் களத்தில் நின்று தமிழர்சால்பினைத் தரிசனம் செய்த பேராசிரியர், பிரிட்டிஷ் மக்களின் அக்காலச் சமுதாயத்துடன் ஒப்பியல் நோக்கிலமைந்த மூன்று விரிவான கட்டுரைகளை எழுதியுள்ளார். 1950 ஆண்டு நவம்பர் மாதத்தில் வெவ்வேறு திகதிகளில் இக் கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன. பிரிட்டிஷ் அதிகாரிகளின் கண்ணியமான நடத்தைகளையும், சமூகப் பழக்கவழக்கங்களையும்

முன்னிறுத்தி தமிழர்தம் வாழ்க்கை முறையுடன் ஒப்புநோக்கி விளக்கியுள்ளார். இலண்டன் வேல்சு நகர மக்களின் அக்கால வாழ்க்கை முறைகளையும் நாட்டாரியல் கூறுகளையும் தமிழ்சமூகத்தின் வாழ்வியல் நடைமுறைகளுடன் ஒப்பீடு செய்து மதிப்பிட்டுள்ளார்.

'ஆங்கில மகாகவியின் விழா' என்ற தலைப்பில் 1964 இல் தினகரனில் வெளியாகிய இவரது கட்டுரை அன்றும் இன்றும் என்றும் அறியப்பட வேண்டிய ஆங்கில நாடக இலக்கிய மரபின் அடிப்படைகளைச் சுவாரசியமான முறையில் வெளிப்படுத்தியுள்ளது. ஆங்கில மஹாகவி ஷேக்ஸ்பியர் வாழ்ந்த இல்லத்தைத் நேரில் தரிசித்த அனுபவங்களை பேராசிரியர் இக் கட்டுரையில் பதிவுசெய்திருப்பது அறிவுக்கு விருந்தளிப்பதாக உள்ளது.

தமிழியலக்கிய வடிவங்களுள் ஒன்றாகிய நாடக இலக்கியம் பற்றிய நோக்குடன் வித்தியானந்தனது பல கட்டுரைகள் தினகரன் பத்திரிகையில் பிரசுரிக்கப் பட்டுள்ளன. ஈழத்துத் தவப் பெரு நடிகர் கலையரசு சொர்ணலிங்கம் (1961) பண்பட்ட கலைஞர் (1962); நாடகத்திற்கு மதிப்பும் சிறப்பும் அளித்த மக்கள் கலைஞர் (1964); நாடக மேடைகளின் 65 ஆண்டுகள் (1966) கலையரசின் நாடக அனுபவங்கள் (1980) முதலான பல ஆக்கங்கள் பழமைக்கும் புதுமைக்கும் இடையிலான ஈழத்துத் தமிழ் நாடக மரபின் ஓட்டங்களையும் அரிய கருத்துக்களையும் பதிவு செய்துள்ளன. நாடகத்துறையில் கால்நூற்றாண்டின் போக்கினைப் பற்றிப் பேராசிரியர் இக் கட்டுரைகளில் பதிவு செய்துள்ளார்.

1974 இல் இடம் பெற்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தமிழாராய்ச்சி மாநாட்டு நிகழ்வுகளின் உண்மைச் சம்பவங்கள் இவரால் அறிக்கையாக பதிவு செய்யப்பட்டுள்ளன. சுதந்திரன் பத்திரிகையில் இது தொடர்பில் வெளியான காட்டமான விமர்சனங்கள் இன உணர்வு மேலோங்கிய பேராசிரியரின் சிந்தனைகளை ஆவணப்படுத்தியுள்ளன. 1974இல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழாராய்ச்சி மாநாடு பற்றிய வரலாற்றுச் சுத்தமான கருத்துக்கள் இக்கட்டுரைகளில் பதிவாகியுள்ளன.

இறுதியாக, இந்நூலின் ஒழுங்கமைப்புச் சார்ந்து இவ்விடத்தில் குறிப்பிடுவதும் பொருத்தமானது. நூற்றுக் கணக்கான கட்டுரைகளிலிருந்து பூரணமாகப் பெறக் கூடியதாக இருந்த கட்டுரைகள் யாவும் அவை வெளிவந்த கால ஒழுங்கின் படி இந்நூலில் முறைப்படுத்தப்பட்டுள்ளன. கட்டுரைகளின் எந்தவொரு இடத்திலும் தலைப்புக்களோ, சொற்களோ, அல்லது கருத்துக்களோ மாற்றஞ் செய்யப்படவில்லை. மூலப் படைப்பில் உள்ளவாறே அனைத்து ஆக்கங்களும் இந்நூலில் அச்சிடப்பட்டுள்ளன. கட்டுரையின் முடிவில் அந்தக் கட்டுரைகள் வெளிவந்த சரியான திகதிகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

இத்தகைய தொரு தொகுப்புப்பணி கடந்த ஒரு ஆண்டாக மேற்கொள்ளப்பட்டதொரு தொடர்ச்சியான பணியாகும் . இப் பணியில் என்னோடு "பயணித்தவர் எனது அன்பு மாணவன் இலங்கைத் தேசிய நூலாகத்தின் - நூலகத்தகவல் உதவியாளாரலான திரு .கா. அஜந்தன் அவர்கள். மூல ஆக்கங்கள்களைத் தேடி அனுப்புவதில் பெரும் பணியாற்றியுள்ளர். இவர் இவ் ஆக்கம் வெளிவருவதில் பெரும் உதவியாக இருந்துள்ளார். ஓராண்டுகளுக்கு மேலாக இதற்கான தேடுதலில் என்னோடு பயணித்த அஜந்தனுக்கு நன்றி கூற வாரர்த்தைகள் இல்லை.

பேராசிரியர் தனது வாழ்க்கைப் பயணத்தில் தடம் பதித்த சில முக்கிய தருணங்களை வெளிப்படுத்தும் புகைப்படங்கள் சிலவும் இங்கே இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. இவற்றைத் தேடித் தொகுப்பதில் எனது மூன்றாவது கையாகத் தொழிற்பட்டவர்

எனது மாணவ நண்பரும், நூலகத் தகவல் உதவியாளராக யாழ் பல்கலைக்கழக நூலகத்தில் பணிபுரிபவருமான திரு. இராமநாதன் தனஞ்செயன் அவர்களுக்கும் எனது நன்றிகள்.

பேராசிரியர் சு. வித்தியானந்தனின் பத்திரிகைக் கட்டுரைகள் அதிகளவில் காணப்படுகின்றன. அவற்றை நூலாகக் கொண்டுவரவேண்டும் என்பதில் தமிழ்கூறும் நற்சமூகத்திடம் கருத்தொற்றுமை இருந்தது எனினும் வெளிக்கொணர்வதற்கான நிதியைப் பெறுவதில் பல்வேறு இடர்பாடுகள் இருந்தன. இது பற்றி எடுத்துரைத்து உதவிகோரியபோது இந்நூலை வெளியிடுவதற்கான செலவினத்தை நன்கொடையாக வழங்க இசைவளித்த வடமாகாணத்தின் பிரதம செயலாளர் திரு. இ.இளங்கோவன் அவர்களின் உதவி காலத்திற்கும் மறக்கமுடியாத உதவி. பிரதம செயலாளர் அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம். இவ்விடயத்தில் எல்லாத் தொடர்புகளையும் ஏற்படுத்தி அயராது உழைத்த யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி முதலாவது பீடாதிபதி கலாநிதி தி. கமலநாதன் அவர்களின் பணி மதிப்பிடற்கரியது. இவரது முயற்சி இல்லாமல் இந்நூல் இல்லை என்றால் அது மிகையாகாது.

பேராசிரியர் வித்தியானந்தனுடைய ஆக்கங்கள் தொடாபில் நூல்விபரப்பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. அதனை உற்றுக் கவனித்தால் தெரியும் அவரது ஏனைய வெளியீடுகளில் வந்த எத்தனையோ கட்டுரைகளும் மீளப்பிரசுரிக்க வேண்டியனவாகவேயுள்ளன என்பது. நிதி ஆதாரம் ஒன்று ஏற்படுத்தப்படுமானால் அக்கட்டுரைகளையும் இவ்வாறு வெளியிடலாம்.

இந்நூலாக்க வேலையில் பரபரப்பாக ஈடுபட்டுத் திரிந்த காலத்தில் இந்நூலாக்க வேலையைப் பூர்த்தியாக்கக்கூடிய ஆக்கபூர்வமான கருத்துக்களையும் நல்ல அகச் சூழலையும் எனக்கு வழங்கி ஆதரவு நல்கிய எனது அன்புக்கணவர் சிரேஷ்ட பேராசிரியர் கி. விசாகரூபன் மற்றும் எனதன்பு மகன் வி. சண்முகன் ஆகியோருக்கும் மிக்க நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பேராசிரியர் சு. வித்தியானந்தனின் பிறந்தநாள் நூற்றாண்டு கொண்டாடப்படும் இந்நிகழ்விலே அவரது உள்ளத்து உணர்வுகளாக வெளிப்பட்ட பத்திரிகை ஆக்கங்களைத் தேடித் தொகுத்துப் பதிப்பித்து அடுத்த தலைமுறையினர்க்கு கையளிப்பதில் பதிப்பாசிரியர் குழு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றது. தேசம் கடந்து வந்து தமது தந்தையார் வாழ்ந்த சூழலில் பிறந்தநாள் விழாவெடுக்கும் அவரது பிள்ளைகள் மிகுந்த பாராட்டிற்கும் போற்றுதற்குமுரியவர்கள்.

**- பதிப்பாசிரியர்**
*08.05.2024*

## உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| *1.* | கைப்பச்சை கட்டவும் காத்திருக்கவும் வேண்டாம் | *01* |
| *2.* | வாக்குரிமையை விலைகொடுத்துப் பறிக்கும் வம்பர் இல்லை | *07* |
| *3.* | நாட்டுப் பாடல்கள் செறிந்து இலங்கும் வேல்சுநாடு | *10* |
| *4.* | தமிழ்மொழி வளர்ச்சிக்கு வழிகாட்டியவர் ஈழநாட்டவர் | *13* |
| *5.* | சேர, சோழ, பாண்டி நாடுகளுடன் என்றும் தொடர்புள்ள ஈழநாடு | *17* |
| *6.* | தமிழ் ஆசிரியர் தரித்திரத்திலுழன்றால் தமிழ்மொழி வளர்வதெங்ஙனம்? | *21* |
| *7.* | வள்ளுவர் கூறும் இன்பத்தின் இயல்பு | *25* |
| *8.* | பிறர் நலத்துக்குத் தொண்டாற்றிய தியாகமூர்த்தி மகாத்மா காந்தி | *40* |
| *9.* | வாழ்க்கையின் சகல துறைகளிலும் வழிகாட்டிய வள்ளல் நபி | *43* |
| *10.* | நீயும் வாழ், ஏனையோர் வாழவும் வழிவிடு | *47* |
| *11.* | நாட்டு மாந்தர் அனைவரையும் வாழ்விக்க வரும் நன்னாள்! | *48* |
| *12.* | வழிபிறக்குமா? | *51* |
| *13.* | கூடி வாழ்ந்தால் கோடி நன்மையுண்டு | *56* |
| *14.* | இன்றைய இழிநிலைமாறத் தமிழ்மொழிப் பற்று அவசியம் | *60* |
| *15.* | பங்குனித் திங்களில் நடைபெறும் தமிழ்விழா | *62* |
| *16.* | தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கத்திற்கு குழிதோண்ட ஆளும் கட்சியினர் எடுத்துவரும் முயற்சி | *65* |
| *17.* | தமிழர் வரலாற்றில் சமுதாய ஒற்றுமை - முற்பகுதி | *66* |
| *18.* | தமிழர் வரலாற்றில் சமுதாய ஒற்றுமை - பிற்பகுதி | *69* |
| *19.* | கூத்தாடுபவர் பொதுமக்கள் : அதை ரசிப்பதும் அவர்களே! | *74* |
| *20.* | இலங்கையிலே நாடகக்கலை இன்று இருக்கும் நிலை | *75* |
| *21.* | உலகெலாம் பரவிய தமிழும் தமிழர் சால்பும் | *77* |
| *22.* | சமுதாயப் பண்பைப் பிரதிபலித்துக் காட்டும் கிராமியக் கலைகள்: | *79* |
| *23.* | இடர்களுக்கு மத்தியில் ஈழத்து எழுத்தாளர்கள் | *81* |
| *24.* | ஈழத்துத் தவப் பெரு நடிகர் - கலையரசு சொர்ணலிங்கம் | *85* |
| *25.* | பண்பட்ட கலைஞர் | *91* |
| *26.* | மரபைக் காக்கும் அண்ணாவி நாடகம் | *93* |
| *27.* | தனிமனிதன் நலிவுறினும் தமிழினம் நலிவுறலாகாது | *96* |
| *28.* | ஈடிணையற்ற வெற்றிகண்ட இஸ்லாத்தின் திருநபி | *100* |
| *29.* | கர்ணன் போர் | *103* |
| *30.* | கிறித்தவரும் ஈழத்திலே தமிழ் வளர்ச்சியும் | *104* |
| *31.* | கலைஞரைப் பாராட்டுதல் | *109* |
| *32.* | பசியும் பிணியும் போக்கவும் கண்ணீருக்கு பதில் கழிப்பினைக் காணவும் | *111* |
| *33.* | பள்ளிவாசல்களில் வழங்கும் புனித மொழிகளில் ஒன்று தமிழ் | *114* |
| *34.* | சாதி, மத அடிப்படையில் இலக்கியத்தை நோக்குவது சரியல்ல | *117* |
| *35.* | ஈழத்து எழுத்தாளரும் நூல் வெளியீடும் | *120* |

36. Tamil Folk Drama 124
37. மரபுப்போர் அறிவுப் போரா? : தனிப்பட்ட சிலரை தாக்கும் போரா ? 129
38. இலக்கண நூல் கல்விக்கு தந்தை 134
39. பண்பாடான இனத்தை உருவாக்க கல்வி பயன்பட வேண்டும் 137
40. ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் குறிப்பிடக் கூடிய காலம் 140
41. நாடகத்திற்கு மதிப்பும் சிறப்பும் அளித்த மக்கள் கலைஞன் 143
42. தமிழர் வாழ்வில் மகிழ்ச்சி பொங்குக! 147
43. ஆங்கில மகாகவியின் விழா 151
44. மகாஜனக்கல்லூரி நிறுவியர் நினைவு நாட் பேருரைச்சுருக்கம் 156
45. நாடகமேடையில் 65 ஆண்டுகள் 160
46. தமிழ்க்கிராமியக் கலைமன்றம் உடனே நிறுவப்பட வேண்டும் 162
47. என்னை ஆளாக்கிய பெருமான் 164
48. சைவத்திற்குப் புரியும் தொண்டு 170
49. ஆண்டுதோறும் தமிழ் தின விழா கொண்டாட வேண்டும் 171
50. இலக்கியத்திலும் கலையிலும் கண்ட வளர்ச்சி 173
51. மேற்கில் முதல் உலகத் தமிழ் மாநாடு 175
52. பணியின் சின்னமாக விளங்கிய வி.ரி. செல்லத்துரை அவர்கள் 178
53. முஸ்லிம் அறிஞர்களின் தமிழ்த் தொண்டின் சிறப்பு 179
54. இலங்கைக்கு எதற்காக ஒரே பல்கலைக்கழகம் 181
55. மக்கள் சகாப்த முன்னோடி 184
56. பத்தாம் ஆண்டில் ஏற்படவிருந்த தத்திலிருந்து தப்பிப் பிழைத்து விட்டது தமிழ் ஆராய்ச்சி மன்றம்! 188
57. அறிஞர்களையும் பொதுமக்களையும் அவமதித்தவர் துரையப்பா! 193
58. பல்கலைக்கழகத் தமிழ் சங்கப் பொன்விழா இன்று ஆரம்பம் 197
59. கிழக்கிற்கும் வடக்கிற்கும் புலவர்மணி இலக்கியப் பாலமாயமைந்தவர் 198
60. நாடக வித்தகர் கலையரசு சொர்ணலிங்கம் 200
61. 4-வது தமிழாராச்சி மாநாடு வெற்றிபெற உழைத்தவர் திருமதி புனிதம் திருச்செல்வம் 201
62. ஆறுமுக நாவலருடைய பணிகளின் இக்காலப் பயன்பாடுகள் 203
63. உயர்கல்வி வாய்ப்பற்ற தமிழ் இளைஞரால்தான் தமிழ்ப் பிரச்சினை இன்று முனைப்புறுகிறது 208
64. உயர்கல்வி வாய்ப்பு 211
65. யாழ் பல்கலைக்கழகம் தமிழ் இளைஞர்கள் தேசிய வாழ்வில் நுழையும் வாயிலாகும் 213
66. Jaffna University, Tamil Youths Link With National Life 217
67. தேசிய வாழ்வுக்கு மாணவரைப் பயிற்றுவதே இலட்சியம் 219
68. பெரிய தமிழ் மேதையாகத் திகழ்ந்த வித்துவ சிரோமணி கணேசையர் 226
69. திருத்தொண்டர் பெரியபுராண வசனம் வெளியீட்டுரை 231
70. கலையரசின் நாடக அனுபவங்கள் 235

## 01

# ‘கைப்பச்சை’ கட்டவும் காத்திருக்கவும் வேண்டாம்:

### பிரிட்டிஷ் கந்தோர்களில் அதிகாரிகளின் கண்ணியமான நடத்தை : பொதுநல சேவையில் மக்களின் சிறந்த ஒத்துழைப்பு மனோபாவம்: மேனாட்டாரிடையே காணப்படும் உயரிய பண்புகள்

**ஒரு நாட்டு மக்கள் பிறநாட்டு மக்களோடு வாணிக நிமித்தமாகவும் அரசியல் தொடர்பு காரணமாகவும் ஊடாடுங்காலத்து இரு பகுதியினரது பண்பாடும் ஒன்றோடொன்று கலத்தல் இயல்பே. தமிழரின் பண்பாட்டு வளர்ச்சியை வரலாற்றுமுறையால் நோக்குமிடத்து தமிழருக்கும் பிறநாட்டாருக்குமிடையில் ஏற்பட்ட தொடர்பினால் தமிழரின் பாண்பாடு வேறுபட்டு வந்திருக்கின்றதென்பது புலனாகின்றது.**

*ஒரு நாடு பிறநாடுகளுடன் எவ்விதத் தொடர்புமில்லாது தனியே இயங்க முயன்றால் அந்நாடு நாளடைவில் வளர்ச்சி குன்றிச் சீர்குலைந்து அழிவுறும்.*

*அந்நாடு எக்காலத்திலும் தலைநிமிர்ந்து பிறநாடுகளுடன் ஒரே நிலையிற் போட்டியிடமுடியாது. ஆகவே சிறந்த தொன்மை வாய்ந்த பண்பாடு உடையோமென்று பறைசாற்றித் திரியும் தமிழரும் மேனாட்டினரது வாழ்க்கை முறையிலும் பழக்கவழக்கங்களிலும் சிறந்தனவாகக் காணப்படுவனவற்றை போற்றிப் பின்பற்றிக் கொள்ளல்வேண்டும்.*

*நான் லண்டன் போய்ச் சேர்ந்ததும் உணவுக் கந்தோருக்குப் போய் உணவுக் கூப்பன் புத்தகமும், சீலைக்கூப்பன் புத்தகமும் பதிவுத்துண்டும்பெறவேண்டியிருந்தது. இலங்கையிற் பல ஆண்டுகளாக இந்தக் கூப்பன் புத்தகங்கள் எடுத்த அனுபவம் எனக்கு உண்டு. தலையிடியான அலுவலாக இருக்கப்போகின்றதே என்ற எண்ணத்துடன் கந்தோருக்குச் சென்றேன். அங்கு இங்குபோல் பியோன்மார் (Peous) இல்லை. ஆனால் ஆட்களை வரவேற்பதற்குக் கதவடியில் போட்டர் (Porter) என்பவர் ஒருவர் ஆயத்தமாக இருப்பார். உள்ளே புகுந்ததும் அப் போட்டர் “ஐயா, வணக்கம், தாங்கள் ஏனோ வந்தது?” என்று கேட்டார். “நான் இலங்கையிலிருந்து மூன்று நாட்களுக்கு முன்தான் வந்தேன். கூப்பன் புத்தகங்கள் எடுக்கவேண்டும்” என்றேன். அதற்கு அவர் “வலது பக்கத்து மூலையிலுள்ள அம்மாவே இந்த வேலைகளைக் கவனிப்பது. பக்கத்திலுள்ள கதிரையில் இருங்கள், உங்களுக்கு முன் வந்தவரின் அலுவல் முடிந்ததும் அவர் உங்களுக்குவேண்டிய உதவி செய்வார்” என்றார். ஐந்து நிமிஷத்திற்குள் எனக்கு முன்னால் வந்தவர் அலுவல் முடித்துப்போய்விட்டார். உடனே அந்தப் பெண் என்னை விளித்து, “ஐயா, காலை வணக்கம், நான் உங்களுக்குச் செய்யக்கூடிய உதவி ஏதேனும் உண்டா?” என்று கேட்டார். அதற்கு நான் போன காரணத்தைக் கூறினேன். சிறிது நேரத்திற்குள் உணவுக் கூப்பன் புத்தகமும், சீலைக் கூப்பன் புத்தகமும் பதிவுத்துண்டும் தந்து அவற்றைப் பாவிக்கும் முறையையும் நன்கு விளங்கக்கூறி, மேலதிகமாகச் சீலைக்கூப்பன்*

தேவையாயிருந்தால் வங்கியின்மூலம் பெரியகந்தோருக்கு எழுதிப் பெறலாம் என்று கூறினார். ஆறு நிமிஷத்திற்குள் இதெல்லாம் முடிந்தது. அந்த ஆறு நிமிஷத்திற்குக்கூட அப்பெண்மணியின் வாய் சும்மா கிடக்கவில்லை. "நீங்கள் பிழையான காலத்தில் இங்கு வந்துசேர்ந்தீர்கள். அடுத்த ஐந்து ஆறு மாதங்களுக்குள் குளிர்மிகவும் மோசமாக இருக்கும். நீங்கள் தங்குமிடத்தில் வசதிகள் எப்படியோ? இலங்கைத் தேயிலையைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் எங்களுக்குக் கிடைப்பது கலவன் தேயிலை" என்று இவ்வாறு சொற்கள் கொட்டியவண்ணம் கதைத்து, அலுவல் முடிந்ததும் விழற்கதை பேசி மினைக்கெடுத்தாது "சரி வாருங்கள், நான் செய்யக்கூடிய உதவி வேறேதேனும் இருந்தாற் கூறுங்கள்" என்று இவ்வாறு முகம் மலர்ந்து புன்சிரிப்புடன் கூறினார். லண்டனிலுள்ள உணவுக் கட்டுப்பாட்டுக் கந்தோரில் மட்டுமன்று, எல்லாக் கந்தோரிலும் இவ்வாறே நடந்துவருகின்றது.

அலுவல் பார்ப்பதற்கு அறிமுகமானவர் தேவையில்லை. அலுவல் உடனே தீருவதற்குக் "கைப்பச்சை" கட்டத் தேவையில்லை. இலங்கையில் இவ்வாறு நடக்குமா? இல்லவே இல்லை. இங்கு வேலைபார்ப்பவர் அறிமுகமாக இருந்தால் ஒருவேளை சில மணித்தியாலத்திற்குள் அலுவல் முடியக்கூடும். அல்லது ஒரு நாளல்ல, சில சமயங்களில் ஒரு கிழமை கூட அலைக்கழியவேண்டும். யாராயினும் ஒருவரைக் காணச்சென்றால் கதவடியில் இருப்பவர் மணியைத் தட்டி, "பியோன்" என்பார். பியோன் தான் துரையின் கையாள். அவருடைய அருள் இல்லாது அங்கு ஒன்றும் பலியாது. கோயிலிலே ஐயருடைய அருள் இருந்தால் திரைச்சீலை விலகிக் கடவுளுடைய உருவச் சிலையைக் காண்கிறோம். அவருடைய மனம் இளகாவிட்டால் கடவுளைக் கண்டபாடில்லை. அதே போல் "பியோன் செல்லையா" அண்ணை (செல்லையா என்றால் அவருக்குக் கோபம் வந்துவிடும். அண்ணையென்றும் அழைக்கவேண்டும்) உள்ளம் இரங்கினால் துரையைக் காணலாம்; அல்லது முடியாது.

பியோனுக்குப் பல்லுக்காட்டி கைப்பச்சையும் கட்டி உள்ளே துரையிடம் சென்றால் அவர் பதினாயிரம் கேள்வி கேட்பார். வெடுக்கென்று விழுவார். அவருடைய அழகிய முகத்தைப் பார்த்தாலே ஏக்க வாய்வு பிடித்துவிடும். "என்ன ஐயா, கோபிக்காதேயுங்கோ, மெள்ளமாய்ப் பேசுங்கள்" என்று சொன்னாற்போதும்" அரோகராத்தான்" துஞ்சுகின்ற புலியைக் காலால் இடறிய குருடனுடைய கதிபோலாகிவிடும். நாக்கைப் பிடுங்கிக் கொள்ளவும் நேரிடும். எம்நாடு இம்முறைகளையெல்லாம் கைவிட்டு ஓங்குவது எந்நாளோ?

புகைவண்டிகளிலும் வசுக்களிலும் (Bus) மக்கள் பிரயாணஞ் செய்யும்பொழுது அமைதியாக இருப்பார்கள். வசுக்களில் நெருக்கடி இராது. ஏற்றக்கூடிய தொகைக்கு மேல் ஏற்றார்கள். கண்டாக்கர்மாரும் தயவாகவே நடப்பார்கள். டிக்கெற்றுக்கு (ticket) காசுகேட்கும்பொழுது தயவாகக் கேட்பார்கள். அத்துடன் நேர்மையும் உடையவர். இலங்கையில் என்ன நடக்கின்றதென்று கவனித்துப் பாருங்கள். மக்கள் தொகை எந்நாளும் மேலதிகமாகவே இருக்கும். மாட்டுப் பட்டிக்குள் மாடுகளை அடைப்பதுபோல வசுவுக்குள் மக்களைத் தள்ளி அடைவார்கள். வசு ஓட்டும் "பொன்னையா அண்ணை" என்னடா வேலும் மயிலும், ஏமிலாந்திப் போய் நிற்கிறாய்? ஆட்களைத் தள்ளித் தள்ளி இருக்கச் சொல்லன்" என்பார். உடனே கண்டாக்கர்ப் "பொடியன்", ஓம் தள்ளியிரு, வசு உன்னுடைய முதுசப்பொருள்போல் காலை நீட்டிக்கொண்டிருக்கிறாய், நெருங்கி

இரு" என்பார். யாராயினும் "என்ன தம்பி இருபத்தெட்டுப்பேர் இருக்கிற இடத்தில் நாற்பது பேர் என்னென்று இருக்கிறது?" என்று கேட்டாற்போதும், குளிக்கப் போய்ச் சேற்றைப் பூசிக்கொண்டவன் பாடுபோலாகிவிடும். "என்ன கனக்கப் பேசுகிறாய், நெருங்கி இரு அல்லது இறங்கிப்போ" என்பார். கழுதைக்கு வாழ்க்கைப்பட்டால் உதைக்கு அஞ்சிப் பயனில்லை என்பார்கள். அதுபோற் பிரயாணிகளும் "வசுவில் ஏறிவிட்டோம், ஏதோ ஒரு விதமாகப் போகவேண்டிய இடத்திற்குப் போகவேண்டும்" என இவற்றையெல்லாம் பொறுதியுடன் ஏற்றுக்கொள்கின்றனர். கண்டாக்கர் தயவாகப் பேசுகின்றாரா? அது கிடையாது. பட்டிக்காட்டார் மாதிரி, ஓய் காணும் எங்கே போறாய் என்பார்! நேர்மை உண்டா? அது மருந்துக்குங் கிடையாது. பிரயாணிகள் இறங்கும்போது அவரது துண்டுகளைப் பெற்று பின் அவற்றை வேறு ஆட்களுக்குக் கொடுத்துக் காசை மடக்கிக்கொள்வர். சில சமயங்களில் காசை வாங்கித் துண்டைக் கிழித்துக்கொடுக்கமாட்டார்கள். இலண்டனில் யாராயினும் காசு கொடுத்துத் துண்டு வாங்காது அவசரத்தில் இறங்கினால் துண்டைகிழித்துக் கீழே எறிவார்கள். இவர்கள் நேர்மைதான் என்னே!

கண்டாக்கரிற் பலர் பெண்கள். நீட்டுக்காற் சட்டை, கண்டாக்கருக்குரிய "கோட்" சட்டை, தொப்பி - பார்த்தால் உடனே பெண்ணென்று சொல்லமுடியாது. மயிரும் "சிலுப்பா". குரலில் இருந்தே பெண்ணென்று மட்டுக்கட்டலாம். இவர்களைக் காணும்பொழுதெல்லாம் யாழ்ப்பாணத்தில் இராமநாதன் கல்லூரிக்குப் பெண்பிள்ளைகளைக் கொண்டுசெல்லும் வசுவின் பெண் "கண்டாக்கராக" இருப்பது நினைவுக்கு வருவதுண்டு. ஆனால் இங்கு பெண்பிள்ளைகள் எல்லா வசுக்களிலேயும் கடமை பார்க்கின்றார்கள். மேனாட்டிற் பெண்கள் வசு ஓட்டும் காலம் நெருங்கிவிட்டதுபோலும்!

புகைவண்டியிற் பிரயாணஞ்செய்வோரை நோக்குவோம். ஒரே கூக்குரலாயிருக்கா? இல்லை. பெரும்பாலானோர் செய்தித் தாள்கள் வாசித்த வண்ணம் இருப்பார்கள். முகட்டைப் பார்த்துக் கொண்டாவி விடுவோர் தொகை மிகக் குறைவு. எம் போன்றவரே அவ்வாறிருப்பர். பெண்கள் பெரும்பாலும் பின்னல் வேலையிற் மினைக்கெடுவர். ஆட்கள் பலத்துக் கதைக்கும் சத்தமே இல்லை. எமது ஊரிலேயுள்ள புகைவண்டிகளில் என்ன நடக்கின்றது? தலைக்குமேல் பால் வடியும் பலாப்பழக்கடகம் அல்லது கருப்பணிப் பானை, காலுக்குக்கீழ் வாழைக்குலை அல்லது மரவள்ளிக்கிழங்குச் சாக்கு, பக்கத்தில் மீன்காறி மீன்கடகமும் முன்னாலே இருக்கும். கட்டாடி மயிலு அல்லது பரியாரி அச்செளுப் புகையிலையைச் சுருட்டிக் குடிக்கும் புகை. பக்கத்திலுள்ள "வள்ளியக்கை" வெற்றிலை பாக்குப்போட்டு இடையிடை எட்டி வெளியாலே துப்புதல் - இந்த நரக வேதனை போதாதென்று ஒரே ஆரவாரம் "எந்தக் கடையிலே வாங்கினனி உந்த இறவுக்கைச் சீலை?" என்று கேட்பா "சின்னாச்சி அக்கா".

"மாப்பாணி கடையிலே கூப்பனுக்குச் சீனி சரியாய் நிறுத்துக் கொடுக்கிறானில்லை; அவன் செலத்துரைப்பொடியன் எல்லாம் வீட்டை கொண்டுபோய்ச் சேர்க்கிறான் என்பார். "பெட்டைக்குரு நாதி" "கோட்டுப் புலி சின்னையாவின் மகள் அமாவாசைச் சின்னத்தம்பியின் மகனோடு கூடிக்கொண்டு ஓடிவிட்டான்" என்று அலர் தூற்றுவார் சிலர். "இறால் இப்பொழுது பெரும் ஒறுப்பாய் இருக்கு, துட்டுக்கு இரண்டு கேட்டால்

சீறி விழுகிறான் கொத்தி" என்று முறையிடுவார் "நல்லம்மா அக்கா" இப்படிப்பட்ட கதைகளே எந்நேரமும் காதில் ஒலித்த வண்ணம் இருக்கும். இவ்வாறெல்லாம் நாக்கை நீட்டுவதைவிட நேரத்தைப் போக்குவதற்குச் சிறந்த வழி வேறில்லையா?

அடுத்தபடியாக, மேனாட்டுப் போலிசுக்காரர் (Police) தமது வேலையைத் திறமையாக யாவரும் போற்றும் முறையில் நடத்துவதைப்பற்றிக் கூறுதல்மிகையாகாது. நான் லண்டனுக்குச் சென்ற நாட்களில் சில இடங்களுக்குப் போகும் வழி கண்டுபிடிப்பது பொறுப்பாகவிருந்தது. இலங்கையில் வழிகாட்டுவதில் பொலிசுக்காரர் எவ்வளவு பேர்பெற்றிருக்கிறார்கள் என்பதை அனுபவ வாயிலாக அறிந்த நான் முதலில் அவர்களிடம் விபரம் கேட்பதற்குத் தயங்கியதுண்டு. என்றாலும் என்ன செய்வது "பேய்க்கு வாழ்க்கைப்பட்டால் புளிய மரத்தில் ஏறித்தானே ஆகவேண்டும்" என்று சமாதானம் கூறிக்கொண்டு அவர்களை அடைந்து வழிகேட்பதுண்டு. அவர்களுக்கு அதிகமாக எல்லா இடங்களும் தெரியும். தெரியாவிட்டால் லண்டன் வழிகாட்டி நூலைக் "கோட் பைக்குள்" (Coat - Pocket) இருந்து எடுத்து பார்த்துப் போவதற்குரிய வழியைக் காட்டுவார்கள். கிட்டவாக இருந்தால் உடன் வருவார்கள். சிலவேளைகளில் இரவில் பத்துப் பதினொரு மணிபோல் வீட்டுக்குத் திரும்பி வரும்பொழுது வழி தெரியாது மயங்கி நின்றால் அவர்களில் ஒருவர் வீடு வரையும் உடன் வருவார்.

இப்படி இலங்கையில் நடக்குமா? யாழ்ப்பாணத்தில் பெரியகடை முச்சந்தியில் நிற்கும் பொலிசுக்காரரை ஆனைக்கோட்டைக்கு வழிகேட்டால் கள்ளியங்காட்டுக்குப் போகும் வழியைக் காட்டுவார். முதலாவதாக அவருக்கே வழி தெரியாது. எம்மைப்போல் "அரைகுடம்" தான். இரண்டாவதாக மற்றவர் கேட்பதைக் காதில் விழுத்துவதில்லை. "இந்த ஆய்க்கினை தொலைந்து போகட்டுமேயென்று, அந்நேரத்தில் மனதில் தட்டிய மாதிரிப் பதில் அளிப்பார். இரவில் பத்துப்பதினொரு மணியளவில் எங்கேயாயினும் போவதற்கு வழிகேட்டாற்போதும் பதினாயிரம் கேள்வி "இந்த நேரத்தில் எங்கே போகிறாய்?" "வீட்டில் இருக்க வேண்டிய வேளையில் தெரு அளக்கிறதா வேலை? ஆதரவு என்பது எள்ளளவும் இல்லை. "வெடுக்கென்று" கதைப்பார்கள். முகத்தைப் பார்த்தால் அழுமூஞ்சிகள் மாதிரி.

லண்டனில் இன்னுமொன்று கவனித்தேன். பிள்ளைகள் பள்ளிக்கூடத்திற்கு அண்மையில் ஒரு பக்கத்திலிருந்து மறு பக்கத்துக்கு கடந்துசெல்லும்பொழுது பொலிசுக்காரர், வசு, மோட்டார் வண்டி, சைக்கிள் முதலியவற்றை மறித்துப் பிள்ளைகள் அப்பாலே கடந்து சென்றபின்தான் அவற்றைப் போகவிடுவார்கள். இதனால் நாலு ஐந்து வயதுப் பிள்ளைகள்கூட தனியாகவே பள்ளிக்குச் செல்கின்றார்கள். இவர்களல்லவா உண்மையான நகரக் காவலாளர்! இரவில் நகரைச் சுற்றி உலாவும்பொழுது வீதிகளிலுள்ள கடைக் கதவுகள் பூட்டுப்பட்டு இருக்கின்றனவா என்று கவனமாகப் பார்ப்பார்கள். இவர்களைப் பற்றி இன்னும் கூறவேண்டுமா?

ஆங்கிலேயருக்கிடையே தேசிய உணர்ச்சியும் சமுதாய உணர்ச்சியும் வேரூன்றிவிட்டன. நாட்டின் பொது நலத்திற்காக எல்லோரும் ஒத்துழைகின்றனர். நாட்டிற்குச் சேவை புரியுமிடத்து இடையூறுகள் ஏற்பட்டபோதும் அவற்றை நல்மனத்துடன் ஏற்றுத் தம்மால் இயன்றவரை தொண்டாற்றி வருகின்றார்கள்.

இவர்களுடைய பரந்த நோக்கத்தினாலும் நாட்டுப்பற்றினாலும் ஒத்துழைப்பினாலுமே இன்று இவர்கள் தலைநிமிர்ந்து இயங்குகின்றார்கள். தாம்வேறு, அரசாங்கம் வேறு என்று கருதார். அரசாங்கத்துடன் சேர்ந்து ஒத்து இயங்கினாற்றான் நன்மை உண்டாகுமென்பதை நன்கு அறிவர்.

ஆகவே அரசாங்கம் விதித்தவாறே ஒழுகுகின்றார்கள். அவ்வாறு ஒழுகுவதால் இடர் ஏற்பட்டபோதும் அவற்றைப் பொருட்படுத்தாது மன உறுதியுடன், அரசாங்கம் எதிர்பார்க்கும் முறையில் நடக்கின்றனர். சீனி வரத்துக் கொஞ்சநாட்களாகத் தடைப்பட்டுவிட்டது. ஆகவே ஒரு மாதத்திற்குக் கூப்பனுக்குச் சீனி இல்லையென அரசாங்கம் அறிக்கை செய்தால், "ஐயோ, இதென்ன சங்கடம், சீனி இல்லாமல் என்னென்று சரிக்கட்டுவது, தேயிலை கோப்பி உள்ளுக்கு இறங்காதே" என்று உளம் வருந்தி ஏக்கவாய்வினாற் பீடிக்கப்பட்டு அரசாங்கத்தைத் திட்டுகின்றார்களா? இல்லை. "ஏதோ எதிர்பாராத முறையில் இவ்வாறு நிகழ்ந்தது" ஆக ஒரு மாதந்தானே சண்டைக்காலத்தில் உப்படி எத்தனை சாமான்களில்லாது எத்தனை ஆண்டுகளாகச் சமாளித்தோம். அந்த அனுபவம் உள்ள எங்களுக்கு ஒரு மாதத்திற்கல்ல ஒரு வரியத்துக்குக்கூடச் சீனியில்லாது சரிக்கட்டுவது பொறுப்பாகவிராது" என்றே கூறுவார்கள். தமது ஊராட்சிப் பொறுப்பை நன்கு உணர்ந்தமையாலன்றே இவ்வாறு செய்கிறார்கள். மரக்கறிக் கடைகளில் சாமான் வாங்குவதற்கு ஒருவருக்குப் பின் ஒருவர் வரிசையாகப் பொறுமையுடன் நிற்பார்கள். தெருவில் செய்தித் தாள் விற்பவரிடம் செய்தித்தாள் வாங்குவதற்கும் ஒருவருக்குப் பின் ஒருவர் வரிசையில் நிற்பார். யாவும் ஒழுங்காகவும் முறையின்படியும் சட்டத்தின்படியும் செய்யும் பழக்கம் இருப்பதே இதற்குக் காரணமாம்.

ஓரளவிற்குப் பொதுவாக எல்லோரும் நேர்மையுடையவர். புதினத்தாள்கள் விற்கும் கடையில் அவற்றைக் கடைக்கு வெளியில் ஒரு கதிரை அல்லது தட்டில் வைத்திருப்பார்கள். அவற்றை வாங்க விரும்புவோர் காசு ஒரு பணம் அந்தத் தட்டில் வைத்துவிட்டுத் தாளை எடுத்துச்செல்வர். புத்தகக் கடையில் புத்தகங்கள் வெளியே இருக்கின்றன. வாங்கச் செல்பவர்கள் தமக்கு வேண்டிய நூலைத் தெரிந்தெடுத்து உள்ளே இருப்பவரிடம் காட்டிப் பணம் கொடுத்துப் பெற்றுக் கொள்ளுவர். நேர்மை இல்லாவிட்டால் இவ்வாறு செய்வார்களா? "சும்மா வந்த மாட்டை ஏன் பல்லுப்பிடித்துப்பார்ப்பான்" என்ற மாதிரி நாலு பக்கமும் பாாத்துவிட்டு, "அப்பிக்கொண்டு" ஓடிவிடுவார்களல்லவா? புகைவண்டியிற் பிரயாணஞ்செய்வோர் இறங்கிப்போகும்பொழுது மேலதிகமாகக் காசுகொடுக்க வேண்டியிருந்தால் இடிக்கெற்றுகளை வாங்குபவர் அவர்கள் கொடுக்கும் பணத்தைப் புறம்பாக வைத்து ஒரு கடதாசித் துண்டிற் பதிவார். நேர்மை இல்லாமலிருந்தால் காற்சட்டைப் பைக்குள் போட்டுவிடுவார்களல்லவா? இதனால் இங்கிலாந்தில் களவு இல்லை என்று நான் கூறவில்லை. பொதுவாக நாளாந்தம் வாழ்க்கையில் யாவரும் நேர்மையுடன் வாழ்கின்றனர் என்பதே உறுதியுடன் கூறக்கூடியது.

மேனாட்டு மக்கள் ஒருவர் அலுவலில் மற்றவர் தலைப்போடுவதில்லை. எல்லோரும் நாம் விரும்பியவாறு நடந்துகொள்ளலாம். "நீ ஏன் இப்படிச் செய்தாய், நான் சொன்னமாதிரியல்லவோ செய்யவேண்டும், இனி மேல் எனக்குச் சொல்லித்தான் செய்யவேண்டும்" என்ற ஆய்க்கினைகள் இல்லை.

ஓரலுவலை இன்னமாதிரிச் செய்யென்று பத்துப்பேர் நெருக்குகின்றார்களே, ஆமாப்போடவேண்டியிருக்கே, என்று எண்ணமாட்டார்கள். பிறத்தியார் கரைச்சலே இராது. அடுத்த வீட்டில் யார் குடியிருக்கிறார் என்பதே தெரியாது. இலங்கையில் அடுத்த வீடல்ல, அடுத்த ஊரிலே உள்ளவரைக்கூடத் தெரியும். அடுத்த வீட்டுப் பூனை மோசம்போனால் மற்ற நிமிஷம் காதுக்கெட்டிவிடும்.

"நீ என்ன செய்கிறாய்? உனக்கு என்ன சம்பளம்? வீட்டுவாடகை என்ன? எவ்வளவு சீதனம் தந்தார்கள்? தங்கச்சி இன்னும் மணம் முடிக்கவில்லையா? ஏன் வயது போகும்வரையும்பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்பது இலங்கையில் பெருவழக்கம். ஆனால் மேனாட்டில் அப்படி ஒருவரைக் கேட்டால் அவருக்குச் செருப்பால் அடித்தது போலிருக்கும். இப்படிப்பட்ட கேள்விகள் கேட்கமாட்டார்கள். மற்றைவரைப் பற்றிப் பேசுவதே குறைவு. அடுத்த வீட்டுக்காரியின் தலைப்பிள்ளை முப்பது வயதாகியும் மணம் முடியாது இருக்குதே என்று அதைப்பற்றிக் கிளறிக் கதைத்து, அப்பெண்ணைப் படாதபாடு படுத்துவார் எம்நாட்டு மக்கள். ஆனால் அங்கு அடுத்த வீட்டுக்காரன் தலைகீழாய் நின்றாலும் "அது அவரைப் பொறுத்தது" என்பார்கள். இதனாலேயே அவர்கள் சச்சரவின்றி ஒற்றுமையாக வாழ்கின்றனர்.

(இக்கட்டுரையிலுள்ள பெயர்கள் எவரையும் குறிப்பிடுவனவல்ல)

தினகரன் 1950, நவம்பர் மாதம் 5ம் திகதி ஞாயிற்றுக்கிழமை

## 02

# வாக்குரிமையை விலைகொடுத்துப் பறிக்கும் வம்பர் இல்லை:

### கட்டாயப்படுத்துவதும் பயமுறுத்துவதும் கலகங்கள் புரிவதுமான காடைத்தனங்கள் கிடையா: பிரிட்டனில் சந்தடியெதுவுமின்றி அமைதியுடனும் கண்ணியமாகவும் நடைபெறும் பொதுத் தேர்தல்

**பல நாடுகளைச் சுற்றியுலாவுவோர் பிறநாட்டாரின் சிறந்த இயல்புகளை நேரிற்கண்டு அறியும்போதும், அவ்வியல்புகள் அவர்கள் உள்ளத்தில் சுறுக்கென வேருன்றிவிடுகின்றன.**

*அதுவும், அவை அவர்கள் சொந்த நாட்டு மக்கள் பண்பிலும், பன்மடங்கு சிறப்புடையனவாக இருக்கும்போது அவற்றைப்பற்றிப் பிறர்க்கும் பற்றிக் கூறாதிருக்கமுடியாது. இங்கிலாந்தில் பல நகரசபைத் தெரிவுகளும் பொதுத் தெரிவொன்றும் நான்அங்கு தங்கிய நாட்களில் நடைபெற்றன; அவை அங்கு நடக்கும் முறைக்கும் இலங்கையில் நடக்கும் முறைக்கும் எவ்வளவோ வேற்றுமைகள் உண்டு.*

*தெரிவு நடக்கும் நாட்களில் தெரிவு நடப்பதுபோலத் தோன்றாது. அவ்வளவு அமைதி. சிறப்பாக நடக்கும் ஒரு நிகழ்ச்சி போலில்லை. "இன்று தெரிவு என்று சொன்னார்கள். அப்படியொன்றையுங்காணோமே! ஒருவேளை இன்று, இல்லையாக்கும்" என்று நாம் எண்ணுவதுண்டு. இலங்கையில் என்ன நடக்கின்றது - ஒரே ஆரவாரம் - ஊரிலே நடக்கும் மணவீடு போன்ற முழக்கம். தெருவாற் போறவாறவரைப் பார்த்தால் உடனே தெரியும். ஏதோ இன்று சிறப்பாக ஒன்று நடக்கின்றதென்று "போடுபோடு வெள்ளைப்பெட்டி, போனமுறை வெண்டபெட்டி" என்று ஒரு பகுதியினர் தொண்டைகாயக் கத்துவர். வேறொரு பகுதியினர் "எங்கள் பலம் அருளம்பலம்" எனப் பறைசாற்றுவர்; இன்னும் சிலர் "பிள்ளை வீழ்க, நாயகம் வாழ்க" என வசை கூறி நாக்கு நீட்டுவர். இப்படி ஒவ்வொரு பகுதியினரும் முழங்கிக்கொண்டுபோகத் தெருவாலே போகிறவர் சும்மா நிற்பார்களா? எங்கே தருணம் வாய்க்கும், கத்தலாமென்று பார்த்துக்கொண்டிருப்பவரல்லவா? இவர்கள் நரிகள் ஊளையிடுவதுபோல இவர்களும் அவர்களுடன் சேர்ந்து குரலெழுப்புவர்.*

*இதற்குள் சண்டித்தனம் காட்டுபவர் தொகை ஒரு பக்கம். பச்சைக்கொடி பற்ற, மோட்டார் வண்டியில் மக்களை ஏற்றிக்கொண்டு சென்றால் நீலக்கொடியினர் வழிமறித்து வீரம் பேசுவது வழக்கமல்லவா? சிலர் இந்தத் தொந்திரவுகள் ஏன் என்று, எதிர்ப்பிரிவினர்க்குச் செல்வாக்குள்ள பகுதிகளுக்கூடாகச் செல்லாது, வேறுவழியாற் செல்வதுண்டு. எத்தனை மோட்டர் வண்டிகளுக்கு கல்லெறி விழுகுது! வாக்குரிமையை மக்கள் வழங்கச்செல்வதற்கிடையில் இவ்வளவு காடைத்தனம். தெரிவுக்கொட்டில்களுக்கு அண்மையிலுள்ள நிலையோ இதிலும் மோசமானது. கந்தையாவின் பெயருக்குப் பக்கத்தில் புள்ளியிடு என்பார் ஒருவர். அமிர்தலிங்கத்துக்கு வாக்குரிமையைக் கொடுத்துவிட்டு நீ வீட்டில் கால்வைக்கிறது பார்ப்போம் என்பார்*

*ஊர்அப்புக்காத்துச் சின்னத்தம்பி. இதற்குள் தொழிற்கட்சி கிட்டிணபிள்ளைக்கும் பொதுவுடைமைக் கட்சி நடராசாவுக்குமிடையில் வாய்ச்சண்டை ஏற்பட்டுவிடும். "எங்கள் கட்சிக்கு வாக்குரிமையை வழங்கவந்த மயிலுவுடன் உனக்கென்ன கதை என்று கேட்பார் நடராசா. உடனே கிட்டிணபிள்ளை, "நேற்று முளைத்த நீ என்னுடன் எதிர்த்துப் பேசவோ. மீசைமுளைக்கமுன் அவருக்கிருக்கிற கெப்பர். என்னுடைய சின்னிவிரலால் ஆட்டிவைப்பேன்" என வீரம் பேசுவார். வாய்சசண்டை பெலத்து பொல்லுத்தடியெடுக்கத் தொடங்கிவிடுவர். விலக்குத்தீர்க்கப் போவோருக்கும் பூசைதான்" இந்தச் சங்கடங்களுக்குள் பொதுமக்கள் என்ன செய்வதென்று அறியாது மயக்குற்று, உள்ளம் கலங்கி, உள்ளேசென்று பிழையாக வாக்குரிமையை வழங்கி, வெளியே கிளம்புவர்.*

*இங்கிலாந்தில் இப்படியொன்றும் நடவாது. "என்னுடைய ஆளுக்கு உன்னுடைய சீட்டைப்போடு" என நெருக்குபவர் இல்லை. முதலாவதாக இப்படி ஒன்றும் நடவாத வண்ணம் பொலிசுக்காரர் தங்கள் கடமையைச் செவ்வனே பார்ப்பர். அதனோடு இவ்வாறு நெருக்கினால் மக்கள் உள்ளத்தில் தெளிவான எண்ணம் இராதென இத்தகைய நடவடிக்கைகளில் ஒருவரும் ஈடுபடுவதில்லை. ஆறுதலாக அமைதியாக ஒருவருடைய கரைச்சலுமில்லாது உள்ளேசென்று, உள்ளத்தெளிவோடு சீட்டைப் பெட்டிக்குள் போட்டுவிட்டு, வெளியே வருவார்கள். ஓரிடத்திலாவது கலகம் ஏற்பட்டதாக நான் கேள்விப்படவில்லை. இவர்கள் தமது ஊராட்சிப்பொறுப்பை நன்கு உணர்ந்திருந்தமையாலன்றோ இவ்வாறு செய்கிறார்கள்.*

*தெரிவுநடப்பதற்குப் பலநாட்களுக்கு முன், தெரிவுக்கு முன்வருவோர் வீடுவீடாகச் சென்று, மக்களை மன்றாடியும் கெஞ்சியும் அவர்களுக்குப் பயமுறுத்தியும், பணம் கொடுத்தும், வாக்குரிமையைப் பெறமுயலுதல் இலங்கையிற் பெரும் வழக்கம் என்பதை நாம் பலர் நேரிற் கண்டறிந்திருக்கின்றோம்.*

*கல்வி அறிவில்லாதவருக்குக் கள்ளுச்சாராயம் முதலிய குடிவகைகள் இனாமாக அளித்துத் தம்வசமாக்குதலுமுண்டு. ஒரு சாராயப் போத்தலுக்கு ஈடாகத் தமது வாக்குரிமையைக் கொடுக்கிறார்கள் என்றால், இது மக்களுடய மடமையையும், சமூகத்தின் கீழான நிலைமையுமல்லவா குறிக்கின்றது?*

*இங்கிலாந்திலும், தெரிவுக்கு முன்வருவோர் வீடுவீடாகச் செல்வதுண்டு. ஆனால் அவர்கள் வீட்டுக்காரருக்குத் தமது குறிக்கோளை எடுத்து விளக்கி "நீங்கள் உங்களுக்கு எந்தக் கட்சி கூடிய சேவை புரியும் என்பதை ஆராய்ந்து, அதன்பின் உங்கள் உரிமயை வழங்குங்கள்" எனத் தாழ்மையுடன் கேட்பர்.*

*வாக்குரிமயைப் பணத்துக்கு வாங்கும் வாடிக்கை அங்கு இல்லை. குடிவகைகள் கொடுத்து, அவர்கள் புத்தியை மயக்கி, அவர்களுக்குரிய உரிமையைப் பணத்துக்கு வாங்குவதைக் கனவிலும் எண்ணார். "ஒட்டைச் சட்டியானாலும் கொளுக்கட்டை வெந்தாற் போதும்" என்பார்கள் எமது ஆட்கள். ஆனால் அவர்களோ நேர்மையான முறையில் உரிமையைப் பெறமுயலுவர். நாம் இவர் நடத்தையைப் பின்பற்றி முன்னேறுவது எக்காலமோ?*

லண்டனிலும், இலங்கையிலும் தெரிவுக் கூட்டங்கள் நடப்பதை ஒப்பிட்டுப் பாருங்கள். இலங்கையில் நடக்கும் ஒரு கூட்டத்திலாவது குழப்பம் ஏற்படாமலில்லை. முதலிற் கல்லெறிந்து கூட்டத்தைக் கலைக்க முயலுவர். வடலிகளுக்குப் பின்னால் ஒளிந்து நின்று, மேடையை நோக்கிக் கற்களைப் பொறுக்கி வீசுவர். அது கைகூடாவிட்டால் கூட்டத்திற்கு வந்து பேச்சாளரைப் பேசவிடாது, "இரும், இரும், போதும்" என்று கத்துவார்கள்; அல்லது இடையிலே மோட்டுக் கேள்விகள் கேட்டு, அவர்களைப் பேசவிடாது தடுப்பர். இந்நிலையில் இரு பகுதியினருக்குமிடையில் கலகம் ஏற்பட்டுவிடும். கூட்டத்திலுள்ள மேசைகளையும், கதிரைகளையும் எடுத்து வீசுவர். கத்தியும் நீட்டுவர். கொலைகூடச் சில வேளைகளில் நிகழும். "இதற்குள்ளே ஏன் வந்தோம், தப்பி ஓடிப்பிழைப்போம்" என மக்கள் கலக்கமுற்று, அங்குமிங்கும் பாராது ஓடி, ஒருவரோடு ஒருவர் மோதிக்காயப்படுவர்.

இங்கிலாந்தில் கூட்டங்களில் இவ்வாறு குழப்பங்கள் ஏற்படா. கல்லெறி விழுந்து கூட்டம் கலைவதில்லை. பேச்சாளரைக் கேள்வி கேட்பதுண்டு. ஆனால் பெரும்பாலும் பேசும்பொழுது இடையிற் குறுக்கிட்டுக் கண்ட கேள்விகள் கேட்கமாட்டார்கள். சிலர் இடையில் மறித்துக் கேள்விகேட்க உன்னுவதுண்டு. ஆனால், கூட்டத்திலே தலைமை வகிப்பவர், "பேசி முடிந்தபின் கேட்கலாம். இப்பொழுது கேட்டுக் குழப்பவேண்டாம்" என்றால் அமைதியாக இருந்துவிடுவார்கள். பேசி முடிந்தபின் கேள்விக்குரிய வேளையில் தமது ஐயங்களை நீக்குவதற்குக் கேள்வி கேட்பர். இவ்வாறு அங்கு ஒழுங்காக நடக்கின்ற தெரிவுக் கூட்டங்கள்.

இலங்கையில் காடைத்தனம் காட்டுபவருக்கு எவ்வளவு புத்தி கூறியும் காது கொடுக்கமாட்டார்; செவிடன் காதிற் சங்கூதியதுபோலிருக்கும். அரசாங்கம் இத்தகைய தீய செல்களை நீக்குவதற்கு ஏற்ற வழி வகைகள் தேடாததனால் இவர்கள் "இடங்கண்டு மடம் பிடுங்குகிறார்கள்". தட்டிப் பேச ஆள் இல்லாவிட்டால் தம்பி சண்டப்பிரசண்டன் என்பார்கள். இவர்களை அடக்கி நல்வழியிற் கொண்டுவர அரசாங்கம் முழு மனத்துடன் முயற்சிக்காததனால், இவர்கள் ஆட்சி இப்பொழுது எங்கும் நிலவுகின்றது. அரசாங்கம் இவர்களது நாட்டாண்மையை அறவே ஒழிப்பதற்குத் தகுந்த சட்டங்களை ஏற்படுத்தி, அவற்றை நடைமுறையில் கொண்டுவரவேண்டும். ஆனால் அதனிலும் அவசியமானது, மக்களே தமது ஊராட்சிப் பொறுப்பை உணர்ந்து அதன்படி ஒழுகுதல். அப்பொழுதுதான் எம் நாடும் திருத்தம் அடைந்து ஓங்கி வளரும்.

(கட்டுரையில் வரும் பெயர்கள் எவரையும் குறிப்பிடுவனவல்ல)

தினகரன் 1950, நவம்பர் 19, ஞாயிற்றுக்கிழமை

## 03

# நாட்டுப் பாடல்கள் செறிந்து இலங்கும் வேல்சு நாடு:

### தமிழரைப்போல் தனிப் பண்புடைய வேல்சு மக்கள்: ஆங்கில பாஷையே பேசுபவர்களாகவிருந்தும் தாய்மொழி வளர்ச்சியில் செலுத்திவரும் அக்கறை

**ஓய்வு நேரத்தை மகிழ்ச்சியுடன் கழிப்பதற்கும், நாட்டுப் பாடல்களைச் செவிஆரக் கேட்டு இன்புறுவதற்கும் ஏற்றநாடு வேல்சு எனப் பலர் எண்ணுகின்றனர்.**

*வேல்சு மக்கள் பலர் ஆங்கிலத்திலேயே ஒருவரோடு ஒருவர்பேசிவருகிறார்களாயினும் இவர்களுக்கும் ஆங்கிலேயருக்குமிடையே, திராவிடருக்கும் ஆரியருக்குமிடையேயுள்ள வேற்றுமைபோலப் பல வேற்றுமையுண்டு. வஞ்சனையற்ற தாழ்மையான மக்கள் இவர்கள். கமச்செய்கையாலும், தொழில்களாலும் வாழக்கைக்கு வேண்டிய பொருள்களைப் பெற்று ஆரவாரம் அற்ற வாழ்க்கை நடத்துகின்றனர். ஆனால் பெரும் முயற்சியுடையவர்.*

*அன்பு, ஆதரவு, அறிவுக்கூர்மை முதலிய பண்புகளை இயற்கையாக உடையவர். தலைமுறை தலைமுறையாக கமங்களிலும், மலைகளிலும், பிறநாடுகளுடன் நெருங்கிய தொடர்பில்லாது, வாழ்ந்துவந்திருக்கினறனர். இவரது தனியான நிலைக்கேற்ற பண்பாடும் இவரிடையே காணப்படுகின்றது. இப்பாண்பாடு, தமிழர் பண்பாடுபோல் காலக் கழிவினாலும் பிறகலைக் கலப்பினாலும் அழிவுறாது நிலைபெற்றுவிட்டது. மலைகளிலும் தூரக் கமங்களிலும் வாழ்பவர் பிறரை நேரே கண்டு அவருடன் கலந்து பேசுவது அரிதாகையினால், பிறருடன் கூடுவதற்குப் பெரிதும் ஆவல்கொள்கின்றனர். அதில் மட்டற்ற மகிழ்ச்சியுமடைகின்றனர்.*

*பிறருடன் கூடும் அவாவோடு நெருங்கிய தொடர்புடைய விருந்தோம்பல், அவர்கள் ஒருவருடைய இனத்தவரின் நண்பனாக இருந்தாற்போதும், உடனே நெடுநாட் பழகியதுபோல நட்புக்கிளைத்துவிடும். வெளிநாட்டினராக இருந்தால், உடனே வீட்டுக்கதவுகளின் குறுக்குத்தாள்கள் விலகுகின்றன. "உள்ளே வாருங்கள் தேனீர் அருந்துங்கள்" என முகம் மலர்ந்து விருந்தோம்புகின்றனர். தமிழ்மக்கள்போலத் தம் விருந்தோம்புவதன் பயனாகப்பிறர் இன்புறுவதைக்கண்டு, தாமும் இன்புறுகின்றனர்.*

*இவர்கள் பிறரைப் புறக்கணித்து நடப்பவரல்லர். மரியாதை உடையவர். பிறருக்குப் பிடியாதவற்றைக் கூறினால் அவர் உள்ளம் புண்படக்கூடும் என அஞ்சி, பிறர் உள்ளத்திற்கு உவகை அளிப்பதையே கூறுவர். இதனால் இவர்களை எளிதாக ஏமாற்றிப்போடலாம் என்று நாம் எண்ணக்கூடாது. அன்பும் ஆதரவும் உடையவராயினும் யாதாயினும் ஒன்று செய்யு முன் நன்றாக ஆராயந்தே செய்வர். தெளிவான நோக்கம் உடையவர். இதனால் முற்றாக ஒன்றுகூறவோ செய்யவோ முன், எண்ணித் துணிவர்.*

*அயலில் யாராயினும் ஒருவர் கெட்ட காலத்தின் பயனாக வறுமையுற்றுப் பிழைக்கும் வழியில்லாது தத்தளித்தால், அயலார் சிலர் ஒன்றுகூடிப் பணம் சேர்த்து*

உதவுவது நான் இவரிடையே கண்ட சிறந்த பண்பு. ஆசுப்பத்திரிகளைக் கொண்டு நடத்துவதற்கும் வேறு பலவிதமான தருமச் செயல்களின் பொருட்டும், தாராளமாகப் பணம் உதவுவர். போக்குவரத்து வசதிகள் குறைவாக இருந்த பகுதியொன்றில் மக்கள் தாம் விரும்பிய ஒருபோதகரைக் கிறித்தவ சபையின் உதவியின்றித் தமக்கிடையே சேரும் பணத்தைக்கொண்டு ஆதரித்துவந்ததை நான் நேரிற்கண்டறிந்தேன். மணவீடு என்றாற் போதும்; மணத்தின் முதல் நாளன்று அயலிலுள்ள பெண்கள் யாவரும் இரு பகுதியனரது வீடுகளிற் கூடி வேண்டிய அடுக்குகள் செய்வர். மேலும் கீழைத்தேசங்களிற்போல், மணமக்களுக்குப் பரிசிலாகப் பணமோ பொருளோ கொடுப்பது வழக்கம். இவ்வாறு பலரும் கொடுக்கும் பணத்தின் தொகை, பொருளின்வகை இவற்றைக் கவனமாக மணமக்கள் குறித்துவைப்பார்கள். கொடை வழங்கியவரின் குடும்பத்தில் பின்னடியில் மணம் நிகழ்ந்தால் தாமும் ஏற்ற கொடை வழங்குவதற்கு இவ்வாறு யாவரும் ஒருவருக்கொருவர் உதவி ஒன்று கூடி ஒத்துழைக்கின்றனர்.

வேல்சு மக்கள் இசையில் அதிகம் பற்றுடையவர். இவர் பாக்களை எழுத்திற் பொறித்துவைத்த புலவரோ பலர். அப்பாக்களை இசைக்கமைத்துப் பாடினர் பாட்டு வல்லுநர். இவர்களது பழைய இசைக்கருவிகளுள் சிறப்புடையது மூன்று நரம்புடைய யாழ். தமிழ் நாட்டிற்போல் ஊர்ஊராகத் திரிந்து பாடிய பாணர் குடும்பத்தினர் இப்பொழுதும் சிலர் உளர். பலர் இந்நாட்களிலும் தமது இசைக் கருவிகளில் பழம் மரபுக்கு ஏற்ற முறையில் இசையேற்றி வாசிப்பர். இவர்களிடையே வழங்கும் நாட்டுப் பாடல்கள் வனப்பு வாய்ந்தன.

பதினேழாம் பதினொட்டாம் நூற்றாண்டுகளில் இவர்கள் நாட்டிற் செய்தித்தாள் இல்லாதகாலத்துச் செய்திகளைப் பாக்களாக யாத்துச் சந்தை கூடும் இடங்களில் பாடினர். பாணர் விடுகதைகளையும் பாட்டுக்களாகப் புனைந்து பாடினர். ஆட்டுக்கடாவின் பிடரி மயிர், விளையாட்டுச்சாமான்கள், கனா, காதல், கமச்செய்கை முதலியவற்றைப் பொருளாக உடையன இவர்கள் நாட்டுப் பாடல்கள். இந்நாட்டுப் பாடல்களைப் பாடுவதில் இவர்கள் தனிப்பெருமைகொள்கின்றனர்.

கமச்செய்கையே பெரும்பாலானோர் தொழில், ஆடு, பன்றி, குதிரை முதலியவற்றை வளர்ப்பதிலும் பலர் ஈடுபட்டுள்ளார்கள். இவர்கள் வளர்க்கும் பன்றியின் இறைச்சி பேக்கன் (Bacon) ஆக்குவதற்குச் சிறந்ததாகக் கருதப்படுகின்றது. வேல்சுக் குதிரைகளும் பேர்பெற்றவை. இவர்கள் வளர்க்கும் ஆடுகளின் மயிர் சிறந்த கம்பளி பண்படுத்துவதற்கு உதவுகின்றது. நிலக்கரி, இரும்பு, தகரம், கற்பலகை, உருக்கு, செங்கல் முதலிய பொருள்களைப் பலர் விருத்தி செய்கின்றனர். உலகம் முழுவதிலும் ஏற்றுமதியாகும் தகரத்தட்டுக்களுள் நூற்றுக்கு ஐம்பது அறுபத்தைந்துவீதம் வேல்சின் தென்பகுதியிலிருந்து கிடைக்கின்றன. மேலும் இப் பகுதியிலேயே நிலக்கரிச் சரங்கங்கள் பல இருக்கின்றன. இப்பகுதியின் மலைச்சாரல்களிலே இத்தொழிலாளர் குடியிருக்கின்றனர். தொழிலாளருக்கு வாசிகசாலைகள், ஓய்விடங்கள், விளையாட்டு வசதிகள் முதலியன உண்டு. இவர்களுடைய இடர்பாடான தொழிலும் வாழ்க்கைத் தொல்லைகளும் நேரிற் பார்த்தாலொழிய அறியமுடியாது. கரி அதிகம் தேவையான இக்காலத்திலே இவர்களுக்குரிய மதிப்பும் ஏறிவிட்டது.

வேல்சின் எந்தப்பகுதிக்குச் சென்றாலும் கோட்டை ஒன்றைக் காணலாம். முற்காலத்தில் வேல்சு நாட்டிற் புகுந்து உரோமர், ஆங்கிலேயர் முதலியோர் வேல்சு நாட்டினைக் கைக்கொள்ளுவதற்கு இக்கோட்டைகளைக் கடற்கரைக்கு அண்மையில் கட்டிஎழுப்பினர். ஆகவே வேல்சு நாட்டைத் தாக்கி அடக்குவதற்கு இக்கோட்டைகள் அமைக்கப்பட்டனவேயொழிய வேல்சின் பாதுகாப்புக்காக நிறுவப்படவில்லை. நூற்றுக்கு மேற்பட்ட கோட்டைகள் பல இடங்களிலும் இருக்கின்றன. சில கோட்டைகளில் இப்பொழுது மக்கள் குடியிருக்கின்றனர். சில அழிந்துபோய்விட்டன. வேறு சில அரசாங்கக் கந்தோர்களாக அமைந்துவிட்டன. இன்னுஞ்சில மறியற்சாலைகளாக வழங்குகின்றன. வேல்சிற் போல வேறெந்தநாட்டிலும் இவ்வளவு எண்ணிறந்த கோட்டைகளைக் காணமுடியாது.

கடைசியாக வேல்சு நாட்டு மக்களின் மொழியைப்பற்றிச் சிறிது கூறுதல் அவசியமாகும். சில ஆண்டுகளுக்கு முன் வேல்சு நாட்டிலே அவர்களது தாய்மொழியைப்பற்றியும் பண்பாட்டைப் பற்றியும் மக்களுக்குக் கவலையே கிடையாது. வேல்சு மக்களே தமது பிள்ளைகள். தாய்மொழியைக் கற்கவேண்டுமென்று விரும்பவில்லை. ஞாயிற்றுக்கிழமைப் பள்ளிக்கூடங்களிலேயே தாய்மொழியைப் பயின்றனர். இதில் ஒரு வியப்புமில்லை. இலங்கையிலும் சில ஆண்டுகளுக்குமுன் தமிழ்மொழி இந்நிலையிலேயே இருந்தது.

மொழியும் தலைகாட்டுவது வில்லங்கமானது. இந்த உண்மை வேல்சு நாட்டுக்கும் பொருந்தும். ஆனால் இப்பொழுது அங்கு இந்நிலை மாறிவிட்டது. தேசிய இயக்கம் நாடு முழுவதும் பரவியதன்பயனாகத் தாய்மொழியைக் கற்க வேண்டும், போற்றி வளர்க்க வேண்டும், என்று பலர் முன்வந்திருக்கிறார்கள். பிள்ளைகளுக்குத் தாய்மொழி மூலம் கல்வி புகட்டுவதே சாலச் சிறப்புடைத்து என்ற நம்பிக்கை வேரூன்றிவிட்டது. வேல்சு நாட்டின் மொழி, இலக்கியம், வரலாறு, பூமி சரித்திரம் முதலியவை யாவும் தேர்வுப் பாடங்களாக அமைக்கப்பட்டுள்ளன. ஐம்பது ஆண்டுகளுக்கு முன் வேல்சு மொழி மூலம் கல்வி கற்பித்தலை பள்ளிக்கூட மாணவர் தொகை குறைந்து போகும் என்று அஞ்சியவர் இப்பொழுது அந்நிலை மாறியிருப்பதைக் கண்டு மகிழ்கின்றனர். பல்கலைக் கழகத்திற் கூடத் தாய்மொழி மூலம் எல்லாப் பாடங்களும் படிப்பிக்கலாம் என முற்றாக நம்புகின்றனர் பலர்.

ஆங்கிலேயர் பிறமொழிகளிடமிருந்து சொற்களைக் கடன் வாங்கித் தமது மொழியில் அமைத்தது போலக் கருத்துக்களை ஏற்ற முறையில் வெளியிடுவதற்குரிய சொற்கள் நமது மொழியில் இல்லாவிட்டால், உயிருள்ள, உலகவழக்குள்ள பிற மொழிகளிலிருந்து சொற்களைக் கடன் வாங்கித் தமது மொழிக்கு ஏற்ற முறையில் அமைத்தால் விரைவில் எல்லாவிதமான சாத்திரங்களையும் தமது மொழியிற் பெயர்த்துக் கொள்ளலாமென எண்ணுகிறார்கள். இவர்கள் முயற்சி கைகூடுமென நாம் எதிர்பார்க்கின்றோம்.

தினகரன் 1950, நவம்பர் 26, ஞாயிற்றுக்கிழமை

# 04

## தமிழ்மொழி வளர்ச்சிக்கு வழிகாட்டியவர் ஈழநாட்டவர்:

**ஈழத்துத் தமிழறிஞரின் நூல்களைப் பதிப்பித்து வெளியிட முன்வருக! தமிழ்ப் பிரசங்கிகளை இங்குமதி செய்வதற்குச் செலவிடும் பெரும் பணம் வீண் விரயம்: தமிழன்பர் போன்று நடிக்கும் அரசியல் சுயநலக்காரரிடம் இருந்து தமிழ்மொழி விடுதலைபெறவேண்டும்**

**தமிழ்மொழி வளர்ச்சிக்கு வேண்டற்பாலனவாகிய பல துறைகளில் தமிழ் மக்களுக்கு வழி காட்டியவர் ஈழநாட்டுப் பெரியரே. இவ்வுண்மை இவ்வாறு இருக்க, தமிழ் நாட்டவர் உள்ளதைப் பலவாறு மறைக்க முயலுகின்றனர். பல துறைகளிலும் வழிகாட்டியவர் ஈழநாட்டவரல்லர் தமிழ் நாட்டவர் என்ற கொள்கையைச் சிறிது சிறிதாகப் பரப்புகின்றனர்.**

*எடுத்துக்காட்டாகச் சில நாட்களுக்கு முன் வானொலியிலே நிகண்டுகளைப்பற்றிப் பேசிய இந்தியர் ஒருவர் அகராதிகளை வகுப்பதில் முன்னணியில் நிற்றவர் தமிழ் நாட்டவர் என்று குறிப்பிட்டார்.*

*நாவலர் பெருந்தகைக்கு உரிய மதிப்பை அளிக்கப் பின்வாங்குகின்றனர் வேறு சிலர். தாமோதரம்பிள்ளை பதிப்பித்த நூல்களைப் புதிதாகப் பதிப்பிக்க ஒருவரும் முயற்சி செய்கிறார்களில்லை. கனகசபைப்பிள்ளை எழுதிய ஆராய்ச்சி நூல் அச்சிலில்லாது அழிந்துபோவதையே இவர்கள் பெரிதும் விரும்புகின்றனர்போலும். மேலே குறிப்பிட்டவருக்குத் தாளம் போடுகிறார்கள் ஈழத்திலுள்ள போலித்தமிழர். "தமிழ் தெரிந்தவர் தென்னாட்டவரே, ஈழநாட்டாருக்கு என்ன தமிழ் தெரியும். தமிழோடு தொடர்புடைய எந்த அலுவலுக்கும் தென்னாட்டவரையே வரவழைக்கவேண்டும்!" என்று பறைசாற்றுகின்றனர். ஈழநாட்டில் தமிழ் அறிஞர் பலர் இருக்கின்றார். உள்ளூரிலே சரக்கிருக்க ஏன் வெளியூரை நாடவேண்டும் என்று சொன்னாற்போதும்; "உனக்கென்ன தமிழ் தெரியும்? நேற்று முளைத்த நீ தமிழைப்பற்றிப் பேச உரிமை பெற்றுவிட்டயா? உங்களைப்போன்றவர் ஈழநாட்டில் இருப்பதனாலேயே தமிழ்மொழி இங்கு இந்நிலையில் இருக்கின்றது. அதென்ன, தமிழ் என்றால் தென்னாடுதானே!" என்று போலியுரை பல பிதற்றத் தொடங்கிவிடுவர்.*

*கம்பன் விழா, வள்ளுவர் விழா, சங்க ஆண்டுவிழா, தமிழ்விழா முதலிய விழாக்களில் தென்னாட்டவர் பேசவசதியில்லை என்றால் விழா நடவாது. தென்னாட்டவர் வரும்வரைக்கும் விழாவைத் தள்ளிவைப்பர். ஐயர் இல்லாது பூசை நிறைவேறாதமாதிரி இவர்கள் இல்லாத விழாச் சிறப்புறாது எனக் கருதுகின்றனர் ஈழநாட்டவர் பலர். இவ்விழாக்களில் பங்குபற்றும் ஈழநாட்டவர் தொகை மிகக்குறைவு. ஏதோ "சாத்திரப்பாடிக்குச் சேர்ப்பது" போல ஒருவரை அல்லது இருவரைச் சேர்த்துக் கொள்வர். எட்டுத் தென்னாட்டுத் தமிழர் பேசுவதென்றால் ஈழநாட்டுப் பேச்சாளர்*

ஒருவரையும் சாட்டுக்குச் சேர்த்துக்கொள்வர். ஈழநாட்டிலே இக்காலத்திலும் எத்துணை உண்மைத் தமிழ் அறிஞர், தமிழ்ப்புலவர், தமிழ் எழுத்தாளர், இலக்கண வல்லுநர், ஆராய்ச்சியாளர், பேச்சாளர் இருக்கின்றர்கள் என்பதை இப்போலிகள் அறிவரோ? ஆனால் இவர்களைப் பொருட்படுத்துபவர் யார்? இப் பெரியார்களும் ஆதரவற்று உற்சாகமிழந்து தமிழாராய்ப் பிறந்தோமே என்று தம் தலைவிதியை நோகின்றார்கள். தமிழ் நூல்களைத் தொட்டது பெரும் பாவமாய் முடிந்ததே என வருந்துகின்றார்கள். தமிழ் வளர்ச்சிக்குப் பல துறைகளிலும் வழிகாட்டிய ஈழநாட்டில் தமிழ் படித்தவர்களுக்கு உரிய செல்வாக்கு இதுதானா என்று ஏங்கிப் பெருமூச்செறிகின்றனர். இந்நிலையில் ஈழத்தில் தமிழ் தழைத்தோங்குவதெப்படி?

ஈழத்திலே, இந்நாட்களிலும் தமிழ் பழைய முறையிற் கற்ற, உண்மை அறிவுற்ற பண்டிதர்மாருக்கு மதிப்பில்லை. தமிழ் நன்கு கற்று, அதன்பின் பிறமொழிகளும் கற்று, சிறந்த தமிழ்அறிஞர் என்று கொள்ளக்கூடிய ஆராய்ச்சியாளருக்கு மொழி நூலறிவே உண்டு. தமிழ் அறிவு இல்லை என்று முட்டுக்கட்டைபோடுவர் வேறு சிலர். இவ்விரு பகுதியினரையும் தலையெடுக்கவிடாது தடுத்து அவர்களுக்குப் பலவகையிலும் இன்னல் இழைத்துத் தமிழ் வளர்ப்போர் நாம் என்று பெருங்குரல் எழுப்புகின்றார்கள் சிலர் எம் ஈழநாட்டில். இவர்கள் யார்? உண்மைத் தமிழ் அறிவுடையவர்களா? சிறு வயதிலிருந்து தம் தாய்மொழி கற்ற பெரியோரா? சங்க நூல்களில் யாதாயினும் ஒன்றை முறைப்படி படித்தவர்களா? தமிழ் இலக்கணப் பயிற்சியுடையவர்களா? இயல்பாகத் தமிழ்பேசும் ஆற்றல் உடையவர்களா? இல்லை.

இவர்களுட் பெரும்பாலானோர் தமிழ் படிப்பதையே இழிவாகக்கருதியவர்; தமிழ் நூல் ஒன்று வாசிப்பதிலும்பார்க்கக் கொட்டாவி விட்டுக்கொண்டிருப்பது சாலச்சிறந்ததெனக் கருதியவர்கள் இவர்கள். ஆங்கிலப் பித்துப்பிடித்து ஆங்கிலம் பேசியும், ஆங்கிலப் பேசும் படத்தைப் பார்த்தும், திருக்குறள் திருக்கோவையார் ஆகிய நூல்களின் ஆங்கில மொழிபெயர்ப்பைப்படித்தும் காலங்கழித்தவர்கள் இவர்கள். தமிழ்ப்பண்பாடு என்றால் இவருக்கு என்ன என்று தெரியாது. தமிழ்ப்பேசிப் பயிற்சியடையாதவர், காலமாற்றத்தில் அகப்பட்டுத் தத்தளித்துக்கொண்டிருக்கிறார்கள். தமிழ்மொழிக்குச் செல்வாக்கு ஏற்பட்டிருப்பதைக்கண்டு தாமும் தமிழர்போலவே நடித்துத் தமிழ்வளர்ச்சி இயக்கத்தில் தாமே முன்னணியில் நிற்பவர் போலப் பாசாங்கு செய்பவர். உண்மையிற் தமிழ் கற்ற ஒருவனைக் கண்டால் பொறாமை கொண்டு அவனை நிமிரவிடாது தட்டித் தலைகுனியப் பண்ணுவோர் இவரே! இத்தகையோரே இக்காலத்தில் ஈழநாட்டில் தமிழ் அறிஞர், தமிழர் பண்பாட்டு ஆராய்ச்சியாளர், கலைவாணர், விழாக்கள் திறந்துவைக்கும் தமிழ்ப் பெரியோர், விழாத்தலைவர், தமிழ்ப் புலமைசான்ற பேச்சாளர் என இவ்வாறு நடிப்பர். தமிழிலே சிறந்ததோர் சொற்பொழிவை ஆற்றுவதிலும் பார்க்கத் தலையைநீட்டி அவைக்களத்தில் மாலை பெறுவதையே பெரிதாக இவர் கருதுவர். இவர்களின் நன்மதிப்பைப்பெறும் நோக்கத்துடன் அரைகுறைப் படிப்பாளிகளும் இவர்களை வாய்கிழியப் புளுகித் தமிழ்த் தாயின் அவதாரங்களாக உயர்த்திவைக்கின்றனர். இந்நிலை நீடித்துவருமாயின் தமிழ் என்றொரு மொழியையம் தமிழர் என்றோர் மக்கட்பிரிவினரையும் ஈழநாட்டில் சிறிது காலத்தில் காணமுடியாமல் வந்துவிடும்.

ஆண்டு தோறும் பல ஆயிரக்கணக்கான பணத்தைச் செலவு செய்து இந்தியாவிலிருந்து பேச்சாளரை வருவித்து விழாக்கள் கொண்டாடுகின்றோம். இவ்வாறு ஆண்டுதோறும்

இலங்கைக்கு வரும் பேச்சாளரிலும் பார்க்கச் சிறந்த பேச்சாளர், தமிழறிஞர், கலைவாணர், ஈழ நாட்டிலிருக்க, பணத்தை வாரிக்கொட்டி உணவுபோடுவதிலேயே, சேர்த்த பணத்தைச் செலவு செய்திலும் பர்க்க வேறு சிறந்த வழியில்லையா?

சில்லறைப் பேச்சாளரையும், பணம் சேகரிப்பதையே நோக்கமாகக்கொண்டு சஞ்சிகைகளை வெளியிடும் பதிப்பாளரையும் ஈழத்திற்கு அழைத்து, அவர்களை வணங்கி, வாய்கிழியப் புகழ்ந்து தமிழன்பர், தமிழறிஞர், தமிழ்ப்பண்பாட்டை வளர்க்கும் ஆராய்ச்சியாளர் என்று உயர்த்திப்பேசி அவர்களுக்குத் தகுதியற்ற பெருமையைக் கொடுத்தல் எவ்வளவு பேதமை. இவ்வழியிற் செலவிடும் பணத்தைத் தமிழ் வளர்ப்பதற்குரிய வேறு சிறந்த முறைகளிற் செலவிடலாமே!

இக்காலத்தில் ஈழத்திலே எண்ணிறந்த எழுத்தாளர், கவிஞர், மொழிநூல் ஆராய்ச்சியாளர், தமிழ் மொழியின் முன்னேற்றத்தில் உண்மையான கருத்துடைய பெரியார் பலர் ஆதரவற்றிருக்கின்றார்கள். இவர்கள் தாம் இயற்றிய பாடல்களையும், எழுதிய நூல்களையும், பல ஆண்டுகளாக ஆராய்ந்து கண்ட முடிபுகளையும், அச்சிட்டு நூல் வடிவமாக்கப் பணமில்லாது தமது ஆற்றலைத் தமிழ்நாடு அறிய வெளிப்படுத்த முடியாது தத்தளிக்கின்றனர்.

இந்தியாவில் எழுத்தாளரையும், கவிஞரையும் போற்றி ஆதரிக்கவும், அவர்கள் நூல் களை வெளியிடவும் பல கழகங்களும், வள்ளல்களும் இருக்கின்றார்கள். அத்தகைய கழகங்களும், வள்ளல்களும் ஈழத்தில்லாதிருப்பது வருந்தத்தக்கதே. எழுத்தாளரும், கவிஞரும், நாடகாசிரியரும் கடன்பட்டு நூல்களை வெளியிட்டாலும் அந்த நூல்கள் விலைபோகா. அச்சிட்ட செலவும் கையிற் பொறுத்துவிடுகின்றது. போதாக்குறைவுக்குப் பலர் இந்நூல்கள் ஏற்றனவல்ல என்று சிறிதும் ஆராய்ந்து பாராது கூறிவிடுகின்றனர். இப்படிக் கூறுவோர் தமது வாழ்க்கையில் ஒரு கட்டுரை எழுதாதவர். இலக்கியம் என்றால் என்னவென்று அறியாதவரே!

ஐயாயிரம், பத்தாயிரம், இருபதாயிரம் என்று பணத்தைச்செலவாக்கி இந்தியாவிலிருந்து பலரை அழைத்து, “நாம் தமிழ் வளர்க்கின்றோம்” என்று நடித்துப் பொது மக்களை ஏமாற்றுகிறோமேயொழிய உண்மையான தொண்டு செய்கின்றோமில்லை. இவ்வாறு செலவாகும் பணத்தின் ஒரு பகுதியையாவது இலங்கையிலுள்ள எழுத்தாளர், நாடகாசிரியர், கவிஞர் ஆகியோரின் நூல்களை வெளியிடுவதற்கு உதவுவது சிறந்ததல்லவா?

இப்பொழுது ஈழத்திலுள்ள தமிழ் முன்னேற்றக் கழகங்களுட் பல போலிக் கழகங்களே. தாம் தமிழறிஞர் எனத் தம்பட்டம் அடிப்போருக்கு அடிகோலிக்கொடுக்கும் சங்கங்கள் இவை. அரசியற் பதவிகள் பெறுவதற்கு ஒரு படியாக அமைந்துள்ளன. இக்கழகங்களுட் பெரும்பாலானவை தமிழறிவு இல்லாதவரைத் தமிழ் முன்னேற்றத்தில் பற்றுடையவர், தமிழ்ப் பண்பாட்டைப் போற்றிக் காப்பவர் என உயர்த்தி வைப்பதற்குத் துணைபுரியும் கழகங்கள் இவை. இக்கழகங்களை அறவே அழித்துத் தமிழில் உண்மையான பற்றுடையோரை ஆதரிக்கும் கலைக் கழகங்களைத் தோற்றுவித்தால் எவ்வளவு பயன் உண்டாகும்?

மேலும் ஈழநாட்டுப் பெரியார் பண்டைக் காலம் தொட்டு எழுதிய நூல்கள், அவர்கள் பதித்த நூல்கள், பல்லாண்டு உழைத்து ஆராய்ந்து வெளியிட்ட ஆராய்ச்சி நூல்கள்

ஆகியவை இப்பொழுது கிடைப்பது அருமை. இவைகள் எல்லாம் இப்பொழுது நூதன சாலைப் பொருள்களாகிவிட்டன. இன்னமும் சில காலம் சென்றால் இவ்வரிய நூல்கள் முற்றாக மறைந்துவிடக்கூடும். இவற்றை இறவாமற் காப்பதற்கு இதுவரை இந்தியாவில் வாழும் தமிழர் ஒரு முயற்சியும் எடுக்கவில்லை. இனி மேலும் எடுக்கப்போவதில்லை. அவர்களுக்கு அக்கறையிருந்தாலல்லவோ? ஈழத்தில் தமிழை வளர்க்கின்றோம் என்று ஆதரவளிக்கும் பெரியார்கள், அரசியற் புலிகள், தமிழர் பண்பாட்டைப்பற்றி ஆராய்ச்சி நிகழ்த்துவதாகச் செய்தித் தாள்களில் விளம்பரஞ்செய்யும் குடுமி ஆசிரியர் ஆகிய இவர்கள், நாவலர், தாமோதரம்பிள்ளை, கனகசபைப்பிள்ளை போன்றவர் பதிப்பித்த நூல்களைத் திருப்பி பதிப்பித்தால் ஈழநாட்டவரின் நன்றிக்கு உரிமையாவர்.

இதுவரை கூறியதிலிருந்து விழாக்கள் கொண்டாடக்கூடாது, இந்தியாவிலுள்ள தமிழ்ப் பெரியாரோடு தொடர்புவைத்திருக்கக்கூடாது என நாம் வாதாடுகிறோம் என்று சிலர் கொள்ளலாம். எமது கொள்கை அஃதன்று. விழாக் கொண்டாடத்தான் வேண்டும். இந்தியாவிலுள்ள தமிழறிஞருடன் தொடர்பு - நெருங்கிய தொடர்பு வைத்திருக்கத்தான் வேண்டும். ஆனால் எல்லாவற்றிற்கும் ஓரளவுண்டு. நூற்றுக்கணக்கானவரை அழைத்துப் பதினாயிரக் கணக்கில் பணத்தைச்செலவு செய்யக்கூடாது என்பதுதான் எமது கொள்கை. திரட்டும் பணத்தில் ஒரு பகுதியை விழாக் கொண்டாடச் செலவு செய்யலாம். எஞ்சிய பெரும் பகுதியைக் கொண்டு தமிழ் அறிஞர் நூல்களைத் திருப்பிப் பதிப்பதிலும், புதிய நூல்களைப் பதிப்பதிலும், வேறு சிறந்த வகைகளிலும் செலவு செய்யுங்கள் என்று தான் தாழ்மையாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

தமிழ் முன்னேற்றக் கழகங்களைத் தம் அரசியல் நிலையைப் பலப்படுத்தவதற்கு வழங்கும் தலைவர்களைச் சவுக்கடி போட்டுக் கலையுங்கள். உண்மைத் தமிழறிஞரைத் தலையெடுக்கவிடாது முயற்சிக்கும் வஞ்சகரை, அரை ஆங்கிலேயரைக் குடுமியைப் பற்றித் தள்ளிவிடுங்கள். போலித் தமிழரை அறைகூவப் பின்வாங்காதீர்கள். தமிழரின் பண்பாட்டை அழித்த ஆரியப் பிராமணர் வழித்தோன்றிப் தமிழர் பண்பாட்டை வளர்க்கின்றோமென்று இப்பொழுது முன்னணியில் நிற்கும் பசுத்தோல் போர்த்த புலிகளை விரட்டியடிக்கத் தயங்கவேண்டாம்.

தமிழ்மொழி வளர்ச்சிக்கு வழிகாட்டியவர் ஈழநாட்டவர் என்பதை மறந்து போகாதீர்கள். அவ்வுண்மையை மறுப்போரை, உமது தாய் தடுத்தாலும் விடாதீர்கள். இனி மேலும் பல துறைகளிலும் வழிகாட்டும் ஆற்றல் உடையவர் ஈழநாட்டவர் என்பதைச் செய்கையிலே காட்டுங்கள்.

தினகரன் 1951, மே 6, ஞாயிற்றுக்கிழமை

## 05

# சேர, சோழ, பாண்டி நாடுகளுடன் என்றும் தொடர்புள்ள ஈழநாடு:

## தமிழை வளர்க்க தமிழகத்திற்கு வழிகாட்டிய ஈழத்து மூதறிஞர்: மேலும் வழிகாட்ட ஈழநாட்டார் வல்லவர் என்பதைச் செயலிற் காட்ட வேண்டும்

**ஈழநாடு பண்டைக்காலந்தொட்டுச் சேர சோழ பாண்டி நாடுகளோடு நெருங்கிய தொடர்புடையதாய் இலங்குகின்றது. இத்தகைய தொடர்பு கலை அறிவிலும் காட்சியளிக்கின்றது. ஈழநாடும் தமிழ்மொழியைப் போற்றி வளர்த்துவந்திருக்கின்றது. தமிழ்மொழி வளர்ச்சியிற் பல துறைகளில் ஈழநாட்டுப் பெரியாரே இந்தியாவில் வாழ்கின்ற தமிழருக்கு வழிகாட்டி உதவியுள்ளார்கள் எனல் மிகையாகாது.**

**இதனை ஈழத்துத் தமிழர் மறந்து விடுகின்றனர். ஒரு சிலரே ஈழத்துத் தமிழ்ப் பெரியாரின் பெருமையை நன்கு அறிவர். ஈழத்துத் தமிழ்ப் பெரியார் ஆற்றிய அரும் பெரும் பணியைக் குறைவாகப் பேசியும், பிழையான கொள்கையைத் தமிழ் நாட்டில் பரப்பியும் வருகின்றனர் சிலர்.**

*எம்நாட்டுப் பெரியார் பலர் தமிழுக்குப் புத்துயிர் கொடுத்தலையே தமது குறிக்கோளாகக்கொண்டு பெரிதும் உழைத்து வெற்றிகண்டனர். இறக்கும் நிலையிலிருந்த ஏட்டுச் சுவடிகளுக்கு உயிர் கொடுத்தவர் ஈழநாட்டவரே. தெளிவான நடையில் வசன நூல் பல எழுதியும் பழந்தமிழ் நூல்கள் பலவற்றைப் பதிப்பித்தும் வழிகாட்டியவர் ஈழநாட்டுத் தமிழ்ப் பெரியாரே. தமிழ் மக்களின் பண்டை நாகரிகச் சிறப்பை முதன் முதற் புலப்படுத்தித் தமிழ் இலக்கியப் பெருமையைத் தெளிவாக உணர்த்தித் தமிழர் வரலாற்றை நன்கு விளக்கித் தமிழ் வரலாற்று ஆராய்ச்சிக்கு அடிகோலியவர் ஈழ நாட்டுப் பெரியார் ஒருவரே. தமிழில் முதன் முதல் வெளியிடப்பட்ட கலைக் களஞ்சியத்தின் ஆசிரியர் யாழ்ப்பாணத்தவர். மேனாட்டு முறையில் முதன் முதல் தமிழ் அகராதி இயற்றிய தமிழர் ஈழநாட்டார் ஒருவரே. இசைத் தமிழ் வரலாற்றைத் தமிழ் உலகிற்கு வழங்கியவர் மட்டக்களப்பு அடிகளே!. பேச்சு வழக்குத் தமிழை எழுத்திற் பொறித்து முதன் முதலாக நாடகங்கள் எழுதியவர் ஈழநாட்டுப் பேராசிரியர் ஒருவர். இது போன்ற பல துறைகளில் வழிகாட்டித் தமிழ் அன்னைக்கு ஊன்றுகோல் போலக் கைகொடுத்து அவளைத் தாங்கி வந்திருக்கின்றது ஈழநாடு.*

*தமிழப் புலவருடைய வீடுகளிற் பனையோலைச் சுவடுகளிற் சிறைப்பட்டு வெளியேற இயலாது தத்தளித்துக் கொண்டிருந்த தமிழை அச்சு ஊர்தியில் ஏற்றி நாடெங்கும் பரவச் செய்வதில் அதிகம் முயன்றவர் தாமோதரம்பிள்ளை. யாழ்ப்பாணத்துச் சிறுப்பிட்டியிற் பிறந்த இப்பெரியார் சென்னைக்குச் சென்று "தினவர்த்தமானி" என்ற தமிழப் பத்திரிகையை நாள்தோறும் பதிப்பித்தார். சென்னை இராசதானிக் கலாசாலையிற் தமிழப் பண்டிதராயும் அமர்ந்தனர். சென்னைப் பல்கலைக்கழகத்தாரால் முதல் முதலாக நடாத்தப்பட்ட கலைமாணிப்பட்டத் தெரிவுக்குத் தோற்றியவர்களுள் இவரே முதலாவதாகச் தேர்ச்சியடைந்தனர். பனையோலைச் சுவடிகளைப் பரிசோதித்து இவர் பதிப்பித்த நூல் களுட் பெரும்பாலான இலக்கண நூல்களே. இலக்கண நூல்கள் விலைபோவது மிகவும்*

அருமையாகவிருந்தபோதும் அவற்றை இவர் அச்சிட்டது போற்றற்குரியதே. இவர் பதிப்பித்த இலக்கண நூல்கள் தொல்காப்பியம், நச்சினார்க்கினியம், தொல்காப்பியம் சேனாவரையம், வீரசோழியம் இறையனர் அகப்பொருள் உரை, இலக்கண விளக்க உரை என்பனவாம். எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாகிய கலித்தொகை, திரிசொற்களால் ஆக்கப்பெற்ற தணிகைப்புராணம், ஐஞ்சிறுகாப்பியங்களுள் ஒன்றாகிய சூளாமணி ஆகிய இலக்கிய நூல்களும் இவர் முயற்சியினாலே வெளிவந்தன. இவ்வாறு இறக்கும் நிலையிலிருந்த பழஞ்சுவடிகளுக்கு உயிர் கொடுப்பதில் தமிழ் நாட்டிற்கு வழி காட்டினார் ஈழத்துத் தாமோதரனார்.

மேல்நாட்டிலிருந்து கிறிஸ்தவ சமயம் தமிழ்நாட்டிற் பரவி ஆதிக்கம் பெறத் தொடங்கிய காலத்திலே சைவசயமயத்தை அதற்குரிய நிலையில் வைப்பதற்குத் தோன்றினார் நாவலர் என்னும் பெருந்தகை. இவர் துண்டுக் கட்டுரைகளையும் சிறு நூல்களையும் எழுதியும், சொற்பொழிவு பல ஆற்றியும் சிறிஸ்தவப் பாதிரிமாரைக் கண்டித்துச் சைவரைத் தட்டி எழுப்பினர். சைவசமயப்பற்றையும் தமிழ்க் கல்வி வளர்ச்சியையும் தமிழ் நாடெங்கணும் பரவச்செய்தனர். மாணவர் தமிழ் அறிவும் சைவசமய அறிவும் பெறுதற் பொருட்டுப் பல கல்வி நிலையங்களை நிறுவி அப்பிள்ளைகளுக்காகவே முதன் முதலில் அச்சு நிலையங்களை உண்டாக்கித் தமிழ் நூல்களைப் பிழையறத் திருத்தி அச்சிடத் தொடங்கினார். இவர் இவ்வாறு திருத்தி அச்சிட்ட நூல்களைப் பின்பற்றியே பிற்காலத்திற் பலர் தமிழ் நூல்களைப் பிழையறத் திருத்தி அச்சிட நாவலர் பிறருக்கு வழிகாட்டினார் என்பது மிகையாகாது.

தமிழில் உணர்ச்சி ததும்பும் விரிவுரையாற்றலாம் என்பதைச் செயலிலே தமிழ் நாட்டவருக்கு எடுத்துக்காட்டியவர் ஈழநாட்டவர். நாவலரே இக்கலையை வளர்த்தார். இவர் காலத்திற்குமுன் விரிவுரை ஆற்றுவது கோயில்களிற் படிக்கும் புராண இதிகாசங்களுக்கு விரிவுரை கூறுவதாகும். இவற்றைத்தவிரப் புறம்பான பொருள் ஒன்றைப்பற்றித் தமிழில் விரிவுரை ஆற்றும் வழக்கம் தமிழ் நாட்டில் இருக்கவில்லை. ஆனால் நாவலரே ஆங்கில விரிவுரைகளை முன்மாதிரியாகக் கொண்டு புராண இதிகாசங்கள் அல்லாத வேறு பொருள்பற்றி விரிவுரை ஆற்றத் தொடங்கினார். இதில் இவர் திறம்பெற்றதனாலேயே நாவலர் என்ற பட்டமும் இவருக்குச் சிறப்பாக வழங்கப்பட்டது. இப்பொழுது தமிழில் விரிவுரை ஆற்றிச் சிறப்பொடு விளங்கும் அறிஞருக்கு நாவலரே வழிகாட்டினார்.

கற்றவருக்கும் கல்லாதவருக்கும் எளிதில் விளங்கக்கூடிய தெளிவான வசனநடை எழுதுவதிலும் வழிகாட்டியவர் ஈழநாட்டு அறிஞர். நாவலரே கல்லாதவரும் எளிதில் விளங்கக்கூடிய தெளிவான முறையில் முதன் முதல் செந்தமிழ்ச் சொல் அமைந்த வசன நடையைக் கையாண்டனர். பொருட்டெளிவுகருதி மேனாட்டார் வழங்கிவந்த முற்றுத்தரிப்பு முதலிய குறியீடுகளைத் தமது உரைநடையிற் கையாண்டனர். இவ்வீழ நாட்டுப் பெரியாரின் ஒப்புயர்வற்ற தொண்டினாலேயே தமிழ்மொழியும் இப்போது உலகத்தில் முன்னேற்றமடைந்த மொழிகளுட் சிறந்ததொன்றாக விளங்குகின்றது.

தென்னிந்திய வரலாறு, திராவிட நாகரிக வரலாறு ஆகியவற்றிற்கு அடிகோலி வழிகாட்டியவர் ஈழநாட்டுப் பெரியார் கனகசபைப்பிள்ளை. இவர் யாழ்ப்பாணத்து

மல்லாகத்தைச் சேர்ந்த விசுவநாதபிள்ளையின் மகன். இவர் தாம் சென்ற இடங்களிலே தமக்குக் கிடைத்த அச்சில்வராத தமிழ் நூல்களின் ஏட்டுப்பிரதிகளைத் தொகுத்து வைத்து அப்பிரதிகளைக் கடிதத்திற் பெயர்த்து எழுதி ஒன்றுசேர்த்தனர். தாம் சிரமப்பட்டுத் தேடிப்பெற்ற ஏட்டுப்பிரதிகளைப் பதிப்பாளருக்குக் கொடுத்துதவினர். கலாநிதி உ.வே.சாமிநாதையருக்குப் பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம் முதலிய நூல்களின் ஏட்டுப்பிரதிகளைக் கொடுத்தார். தமது தமிழ்க்கல்வி தேசவரலாறு, சமுதாய வரலாற்றறிவு, சாசன ஆராய்ச்சி, ஆங்கிலக் கல்வித்திறன் ஆகியவற்றைப் பயன்படுத்திச் சிறந்த நூலாகிய "1800 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த தமிழர்" என்பதை வெளியிட்டார். இவரது நூல் தமிழ் ஆராய்ச்சியின்போக்கு எவ்வகை இருக்கவேண்டுமென ஆராய்ச்சியாளருக்கு அறிவுறுத்தியது. இந்நூலிற்கண்ட வழியைப் பின்பற்றிப் பலர் ஆராய்ச்சி செய்யத் தொடங்கினர்.

மொழிக்கு இன்றியமையாத கலைக்களஞ்சியத்தைத் தமிழில் முதன்முதலாக வகுத்தவரும் யாழ்ப்பாணத்தவரே. யாழ்ப்பாணம் நாவலர் கோட்டத்து ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை அவர்கள் 1902ம் ஆண்டில் அபிதான கோசம் என்னும் நூலை அச்சேற்றினார். தமிழிலே கலைக்களஞ்சிய நூலை இயற்றுவதற்கு வழிகாட்டியாக விளங்கியவர் இவரே.

அகராதிக்கலைக்கு இருப்பிடமாக விளங்கியது யாழ்ப்பாணம் என்பது மறுக்கமுடியாத உண்மை. முதன்முதல் மேனாட்டு முறையில் எழுந்த நூல் சதுரகராதி. ஆனால் இதை எழுதியவர் வீரமாமுனிவர் என்னும் மேனாட்டவர். அதன்பின்னர் அகராதி ஆக்குந்துறையிற் பெரிதும் உழைத்தவர் ஈழநாட்டவரே. யாழ்ப்பாணத்தில் எழுந்த அகராதிகளுட் குறிப்பிடத்தக்கவை மானிப்பாய் அகராதி கதிரைவேற்பிள்ளை மதுரைத் தமிழ்ச்சங்க அகராதி, பேர்சிவல் அகராதி, வின்சிலோ அகராதி, முத்துத்தம்பிப்பிள்ளை அகராதி முதலியவை. இவ்வகராதிகளைப் பின்பற்றியே சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் அகராதி எழுந்தது. ஆகவே இத்துறையிலும் ஈழநாட்டவரே வழிகாட்டினர். இதைப்பற்றி விரிவாக பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை சென்ற ஐப்பசித் திங்கள் 22ம் நாள் வெளிவந்த "தினகரனில்" எழுதியுள்ளார்.

தமிழ் மக்களது இசைக்கருவி இசைமுறையைப்பற்றியும் சிறந்த முறையில் அரிய ஆராய்ச்சி நிகழ்த்தியவர் விபுலானந்த அடிகள். பன்னெடுங்காலமாகத் தமிழிசையும் தமிழ்க்கருவியையும் தமிழ் மக்கள் கையாண்டிருந்தனர் என்பதை இவர்பல சான்றுகள் கொண்டு தாம் இயற்றிய "யாழ் நூலில்" வெளியிட்டுள்ளார். வடிவம்கூடத் தெரியாதபடி மறைந்த பண்டைய யாழின் நுட்பங்களையெல்லாம் உலகறியவைத்தது இவர் செய்த தொண்டாகும். தில்லையின்எல்லையிலுள்ள அண்ணாமலைப் பல்கலைக்கழகத்து முதல் தமிழ்ப் பேராசிரியராக அமர்ந்து தமிழுக்குத் தொண்டு செய்தவரும் அவரே. இலங்கைப் பல்கலைக்கழகத்து முதல் தமிழ்ப்பேராசிரியாகவும் கடமை பார்தவரும் அடிகளே.

தமிழ்மொழியில் பேச்சுவழக்கில் வழங்கும் தமிழை எழுத்தில் பொறித்து முதன்முதல் நாடகநூல்களை இயற்றியவர் யாழ்ப்பாணத்துப் பருத்தித்துறையைச் சேர்ந்த பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை. யாழ்ப்பாணப் பேச்சுவழக்குத் தமிழின் "உடையார் மிடுக்கு" முதலிய ஆறு நாடகங்களை எழுதியுள்ளார். தமிழ்ல் சாசனங்களை ஆராய்ந்து அவற்றின்

இலக்கண இலக்கிய அமைப்பை எடுத்து வினவி அத்துறையில் வழிகாட்டிய பெருமையும் இவருக்கேயுரியது. இவரது ஆராய்ச்சிநூலைப் பின்பற்றியே பிற திராவிடமொழிச் சாசனங்களை ஆராய்ந்தவரும் இவரது முடிபுகளை மேற்கோளாகக்கொண்டு நூல்களை வெளியிட்டனர்.

இவ்வாறு தமிழ்மொழி முன்னேற்றத்திற்கு இன்றியமையாத பல துறைகளில் ஈழநாட்டுப் பெரியார் தமிழ் நாட்டவருக்கு வழிகாட்டியுள்ளார். இவ்வுண்மையைப் பலர் அறியமாட்டார். அதோடு தென்னாட்டவர் சிலர் நாவலர் வசன நடை தமிழ்வசனநடையன்று. பழம் நூல் பதிப்பதில் வழிகாட்டியவர் கலாநிதி உ.வே. சாமிநாதையர் என்று இவ்வாறெல்லாம் கூறவும் எழுதவும் தொடங்கிவிட்டார்கள். இவர்கள் கூறுவதும் எழுதுவதும் பிழையென நாம் எடுத்துக்காட்டத் தயங்கக்கூடாது. அத்துடன் தமிழ்மொழி முன்னேற்றத்திற்கு வேண்டிய பலதுறைகளில் ஈழநாட்டார் வழிகாட்டவல்லவர் என்பதையும் செயலிற்காட்டவேண்டும்.

தினகரன் 1951, மே. 13, ஞாயிற்றுக்கிழமை



பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை எழுதிப், பேராசிரியர் சு. வித்தியானந்தன் 1956களில் தயாரித்தளித்த "துரோகிகள்" நாடகக்குழுவில் கா. சிவத்தம்பி, க. கைலாசபதி ஆகியோருள்ளிட்ட பேராதனைத் தமிழ் சங்க அங்கத்தினரைப் படத்தில் காணலாம்.

06

# தமிழ் ஆசிரியர் தரித்திரத்திலுழன்றால் தமிழ்மொழி வளர்வதெங்ஙனம்?:

## ஈழத்துத் தூய தமிழைப் பேணி வளர்க்க வேண்டுகோள்

**பல ஆண்டுகளுக்குப்பின் இலங்கை ஒருவாறு சுதந்திரமடைந்துளது. வேறு நாட்டாரின் ஆதிக்கம் நிலைத்திருந்த காலத்திலே தமிழர் தமது மொழியையும் பண்பாட்டையும் மறந்து ஆங்கிலமொழியிலேயும் அதன் பண்பாட்டிலேயும் திளைத்தனர்.**

*ஆங்கிலத்தைப் படிப்பதிலும் பேசுவதிலும் பெருமைகொண்டனர். பாடசாலைகளிலும் பெருங் கல்லூரிகளிலும் தமிழும் ஒரு அனாதைக் குழந்தைபோலத் தேடுவாரற்று கிடந்தது. பல்கலைக்கழகத்திலே தமிழை நான் படித்துப்பட்டபாடு சாற்றமுடியாது. "சரியான வெண்காயமாயிருக்கு மினைக்கெட்டுத் தமிழைப்படிக்கிறான்" என்று எத்தனையோ பேர் என்னை எள்ளி நகையாடினர்.*

*இந்நிலையிலே அக்காலத்தில் தமிழை அறவே அழியவிடாது போற்றிக்காத்து வந்தன யாழ்ப்பாணத்திலும் கீழ் மாகாணத்திலும் மற்றும் பகுதிகளிலுமுள்ள தமிழப்பாடசாலைகளும் இலங்கைப் பல்கலைக்கழகத்தமிழ்களரியும். இங்கே குழுமியுள்ள ஆசிரியராகிய நீங்கள் அக்காலத்திலே இல்லாவிட்டால் தமிழின் பாடு எவ்வாறிருந்திருக்குமோ? உங்கள் தொண்டிற்குத் தமிழ் உலகம் என்ன கைம்மாறுதான் செய்யமுடியும்?*

*இன்று சிங்களமும் பாளியும் அவற்றைப்பேணி வளர்ப்போர் பலர் இருப்பதினாலே ஓங்கி வளர்கின்றன. அம்மொழிகள் குதிரைபோலத் தாவிச்சென்று முன்னேற ஈழத்துத் தமிழ் மாத்திரம் நத்தைபோல நகர்வதையும் நோக்க ஈழத்திலே தமிழர் என்றொரு மக்கட்பிரிவினரும் தமிழ் என்றொரு மொழியும் அழிந்துவிடும் எனப் பலர் அஞ்சுகின்றனர். இதிலும் உண்மையுண்டு. இப்பொழுது தமிழை வளர்க்கின்றோம் என முன்னணியிலே நிற்பவர் அரசியற் பதவிகளிலும் பட்டங்களிலும் நோக்கமுடையவர்கள். இவர்களுட் பலர் போலிகள். தம் நோக்கம் கைகூடுவதற்குத் தமிழை ஒரு துரும்பாகப் பாவிக்கின்றனர். இவர்களின் குரங்குப்பிடியிலிருந்து தமிழ் விடுதலையடையவேண்டும். இதற்கு நீங்கள் இயன்றவரை போராடத் தயங்கப்படாது.*

*செந்தமிழையே படித்து அதையே மாணவருக்கு இனிது கற்றுக்கொடுப்பதையே வாழ்வின் குறிக்கோளாகக் கொண்ட உங்கள் நிலை என்ன? தமிழராகப் பிறந்தோமே, தமிழைப்படித்து பெரும் பாவமாகவிருக்கின்றதே என்று எங்களுட் பலர் நோவதுண்டல்லவா? தமிழ் நூலைத் தொட்டோரை வறுமை தொடுகின்றது. அது தொடுவதோடு நின்றாற் போதாதா? இறுக அணைத்து வருத்துகின்றது. தமிழ் ஆசிரியர்கட்கு இப்போது கொடுக்கப்படும் சம்பளத்தைக் கொண்டு அவர்கள் ஒரு*

சிறிதேனும் சுகமாக வாழமுடியுமா? இல்லை. தமிழ் ஆசிரியர்கட்கு அதிகப்படியான சம்பளம் வழங்க அரசாங்கம் ஒரு போதும் தயங்கப்படாது. தமிழ் ஆசிரியர்கள் இளைத்துத் துரும்பாகிவிட்டால் தமிழ் - செந்தமிழ் எங்ஙனம் முன்னேறும்? தமிழ் ஆசிரியர்கள் இல்லாவிட்டால் தமிழ் ஏது?

உங்களில் எத்தனையோ பேர் நூல்கள் இயற்றும் ஆற்றல் உடையவர்கள். ஆனால் பணம் இல்லாது பிணம்போலக் கிடக்கின்றீர்கள். இலங்கையிலே தமிழ்மொழியை வளர்ப்பதாகப் பல அரசியற் புலிகள் ஆரவாரஞ்செய்கின்றார்கள். நூல்கள் வெளியிடமுடியாது தவிக்கும் உங்களுக்கு இவர்கள் தகுந்த உதவி செய்யலாமே! தமிழ் வளர்ச்சிக்கென முப்பது நாற்பது ஆயிரம் எனச் செலவுசெய்து தமிழை வளர்க்கின்றோமெனத் தம்மை வளர்க்கின்றார்கள். இதுவோ தமிழ் வளர்க்கும்முறை?

ஒரு நாட்டின் சிறப்பும் அதன் மேன்மையும் அந்நாட்டு ஆசிரியரிலேயே தங்கியிருக்கின்றது என்பது மறுக்க முடியத உண்மை. இவ்வுண்மையைப் பலரும் மேடைகளில் நின்று பேகின்றார்கள். ஆனால் வறுமையாலே பீடிக்கப்பட்டு வருந்தும் உங்கள் நிலையை மேம்படுத்த ஏதாவது செய்கின்றார்களா? ஆசிரியர் சம்பளத்திற்கும் ஏனையோர் சம்பளத்திற்கும் அதிகவேற்றுமையுண்டு. அமெரிக்கா ஒழிய ஏனைய நாடுகளுட் பெரும்பாலான நாடுகளில் இந்நிலையே நிலவுகின்றது. அதைப்பார்த்துவிட்டு நீங்களும் சும்மாவிருக்கப்படாது. ஆசிரியர்கட்குச் சம்பளம் உயர்த்திக் கொடுக்கப்படவேண்டுமெனக் கிளர்ச்சி செய்தபோதும் அரசாங்கம் பேசாதிருக்கின்றது. ஆசிரியர் தொகை அதிகமாம். அவர் எல்லோருக்கும் சம்பளம் உயர்த்திக் கொடுப்பதற்கு நாட்டிலே போதிய பணம் இல்லையாம். இஃது இவ்வாறாயின் நாட்டு மக்களின் கல்வி நிலை உயர்வது எங்ஙனம்? அரசாங்க உத்தியோகத்தர்களுக்குக் கொடுக்கப்படும் விசேட சலுகைகள் பல உங்களுக்குக் கொடுக்கப்படவில்லை. அனாதைகள் சீவனாம்சப் பணம் உங்களுடைய குடும்பத்தாருக்கு வழங்கப்படுவதில்லை. தமிழாசிரியன் இறந்ததும் அவனுடைய குடும்பத்தினர் தெருவிலே நின்று தத்தளிப்பதைப்பார்க்க அரசாங்கம் பெரிதும் விரும்புகின்றதுபோலும்!

அத்திவாரம் பிழைத்தால் வீடு நிலைக்காது. உங்களுட் பலர் சிறுவர்களுக்குத் தமிழ் கற்றுக்கொடுப்பவர். நாட்டு நலனுக்கு அடிகோலவேண்டிப் பெரிதும் உழைப்பவர் நீங்கள். தமிழ் ஆசிரியர்களாகிய நீங்கள் ஒத்துழைக்காவிட்டால் அரசாங்கம் எந்தச் சட்டம் அமைத்தும் பயன்யாது? ஆங்கிலம் கற்றுக் கொடுக்கும் ஆசிரியரிலும் பார்க்க உங்களுக்கு மிகவும் குறைந்த சம்பளம் வழங்கப்பட்டபோதும், அதைத் தமிழுக்குச்செய்யும் தொண்டின் பெயரால் ஏற்று நீங்கள் சிறந்த பணியாற்றியுள்ளீர்கள். அப்படியிருந்தும், “தமிழ்ச் சட்டம்பிமாருக்கு ஏன் கூடிய சம்பளம் கொடுப்பான்? அவர்கள் மாணவரின் நலத்தைக் கருதுவது கிடையாது. காலையில் எழுந்து பள்ளிக்குப்போய் ஏதோ கடமைக்குப் படிப்பித்துவிட்டு வீடு திரும்புபவர்கள்தானே இவர்கள்” என்ற பேச்சைச் சிலர் எங்கும் பரப்புகின்றனர். இவ்வாறு இவர்கள் தூற்றுவது தவறு; பொருந்தாது.

ஈழத்திலே தமிழ்ப்புலமை வாய்ந்தோருக்குத் தக்க ஆதரவில்லை. எமது அறிஞர் யாத்த நூல்கள் படிப்போரில்லாது பதிப்பேரில்லாது இருந்த இடம் தெரியாது மறைகின்றன. இது இவ்வாறு நடவாத வண்ணம் தடுப்பதும் உங்கள் கடன்.

தமிழை வளாப்பதாகச் செய்தித் தாள்களிலே விளம்பரஞ் செய்யும் கழகங்களும் அரசியற் புலிகளும் பாசாங்கு பண்ணுகின்றன. பிழையான முறைகளிலே போகின்ற இக்கழகங்களின் முயற்சியைத்தடுத்துச் சரியான வழிகாட்டுவதும் உங்கள் பொறுப்பு.

யாழ்ப்பாணத்தார் பேசுந் தமிழ் தூயதமிழ் - சங்ககாலத்தில் இலக்கிய வழக்கிலிருந்து இப்பொழுது இலக்கிய வழக்கிலும், இந்தியாவிலே பேச்சு வழக்கிலும் இல்லாது அற்றுப்போன சொற்கள் பல யாழ்ப்பாணத்தில்பொது வழக்கிலிருக்கின்றன. மேலும் யாழ்ப்பாணப் பேச்சுவழக்கில் வடமொழிக் கலப்பு மிகமிகக் குறைவு. வடமொழி எழுத்துக்கள் (ஷ, ஜ, ஹ போன்றவை) யாழ்ப்பாணத்து வாழும் பொதுமக்கள் வாயிலிருந்து பிறக்கமாட்டா. ஜனம், வருஷம் என்பவற்றை முறையே சனம் வருடம் என வழங்குவர் யாழ்ப்பாணத்தார்.

ஆனால் இந்தியத் தமிழைப் பின்பற்றி அதனை யாழ்ப்பாணத்தில் பரப்ப முயலுகின்றனர் ஒருசாரார். இவர்களுக்கு இலங்கை வானொலி நிலையத்தாரும் செய்தித்தாள் ஆசிரியர்களும் பக்கபலமாகவிருந்து வருகின்றனர். இதனைத் தடுப்பதும் உங்கள் கடமையாகும். தமிழ்பாட நேரத்தில் இந்தியாவிலே இருந்து வெளிவரும் சஞ்சிகைகளைப் புதினத்தாள்களையும் வாசித்துக்காட்டி அவற்றிலேயுள்ள பிழைகளைச் சுட்டிக்காட்டவும் வேண்டும்.

இப்பொழுது நாங்கள் வாழுவது விஞ்ஞான உலகிலே. நாளுக்குநாள் உலகம் மாறிக்கொண்டு வருகின்றது. எம் மொழியைப் படித்துப் பெருமை பேசுவது போதாது. இக்காலக் கல்வி விருத்திக்கு ஆங்கில அறிவு ஒரு சிறிதாயினும்வேண்டும். தமிழைப் படியுங்கள் - நல்லாகப் படியுங்கள் - அத்துடன் ஆங்கிலத்தை ஒரு சிறிது படியுங்கள். மேல் நாட்டினர், தமிழர் நாகரிகம் பண்பாடு ஆகியவற்றைப்பற்றி ஆங்கிலத்தில் பல அரிய நூல்கள் எழுதியுள்ளார்கள். மேலும் தமிழ் இலக்கியத்தைப் பிறமொழி இலக்கியத்துடன் ஒப்பிட்டுத் தமிழின் சிறப்பியல்புகளையும் குறைபாடுகளையும் அறிய ஆங்கில அறிவு இன்றியமையாதது.

தமிழாசிரியர்கள் குறுகிய நோக்கமும் தாம் கொண்டதே சரி என்ற பிடிவாத இயல்பும் பொருந்தியவர் எனப் பலர் கூறக்கேட்டிருக்கின்றேன். இவ்வாறு பேசுவேர் கூற்றின் யாதாயினும் உண்மை இருக்குமாயின் அக்குறைகளை நீக்குதல் உங்கள் கடன். தமிழ்ச் சட்டம்பி என்றால் ஏதோ பொருட்படுத்துவதற்கு உரிய ஒருவன் அல்லன் என்ற நிலையும் வந்துவிட்டது. இதற்கு நீங்கள்பொறுப்பாளிகல்ல. இருந்தும் இந்தப் பிழையான கொள்கையைச் செயல்மூலம் களைந்தெறிதல் உங்கள் பொறுப்பு.

“குட்டக் குட்டக் குனியிறவன் பேயன்” என்பார்கள். இவ்வளவு காலமும் குனிந்தது போதும், இனி நிமிர்ந்து நிற்கவேண்டும். உங்களிடையே காணப்படும் குறைகளை நீக்கி உண்மையிலே தமிழை வளர்ப்பவர்கள் தமிழ் ஆசிரியர்கள் என்பதை உலகறியக் காட்டுதல் உங்கள் கடன். பிறர் அறிய மேடையிலேறி உங்கள் பணியைப்பற்றி விளம்பரம் செய்வது உங்கள் மரபல்ல. விளம்பரஞ் செய்யாததனாலே பலர் உங்களின் பணியின் மேன்மையை உணர்வதில்லை. காவடியின் பாரம் சுமக்கிறவனுக்கல்லவோ தெரியும். நீங்கள் மனம் வைத்து மாணவர்க்குத் தமிழ் மொழியிற் பற்றுண்டாகும் வண்ணம் தமிழைக் கற்றுக்கொடுக்காவிட்டால் ஒரு பொழுதும் தமிழ் முன்னோறாது. கழுதைக்கு

வாழ்க்கைப்பட்டால் உதைவாங்கித்தீரவேண்டும் என்பது போல தமிழ் ஆசிரியத் தொழிலுக்கு வாழ்க்கைப்பட்டுவிட்டோம். இவ்வாழ்க்கையில் ஏற்படும் இன்னல்களை அனுபவித்துத் தீரவேண்டும். ஆனால் உதைக்கஞ்சிப் பேசாதிருத்தல் தவறு.

(வலிகாமம் வடக்குத் தமிழ் ஆசிரியர் சங்க 23ம் ஆண்டு நிறைவு விழாவிலே நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம்)

தினகரன் 1951, ஜூ. 03, ஞாயிற்றுக்கிழமை




யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நூலகத்தில் நிறுவப்பட்டுள்ள பேராசிரியர் சு. வித்தியானந்தனின் உருவச்சிலை. இது 10.06. 2009 அன்று பேராசிரியர் நா. சண்முகலிங்கன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது,

# 07

## வள்ளுவர் கூறும் இன்பத்தின் இயல்பு:

### திருக்குறளில் காமத்துப்பால் இடம்பெற்றதன் காரணங்கள்

**அறத்தினைப்பற்றி, பொருளினைப் பற்றிப் பேசலாம், ஆனால் இன்பத்தினைப் பற்றி – அதுவும் சிற்றின்பத்தினைப் பற்றி மக்களுக்கு எடுத்து மொழிந்து, அவர் தம் உள்ளத்தினை மாயையிற் சிக்கவைக்க கூடாதென வேறுசிலர் கூறக்கூடும்.**

உலகிலே பிறந்தது வாழவல்ல உடனேயே மேலுலகத்தை அடைய என்பது இவர்கள் கொள்கை. சிறுவயதிலேயே சுடலை ஞானம் பிறந்தவர்கள் இவர்கள். "காயமே இது பொய்யடா, வெறும் காற்றடைத்த பையடா" என்று வேதாந்தம் பேசுவர். ஆம் இன்று தமிழன் பிறந்த உடனேயே "வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம்; எனவே உலக வாழ்க்கையில் ஈடுபடாது மேலுலக வாழ்க்கையை அடைய முயற்சிசெய்தல் வேண்டும்" எனக்கூறும் மனப்பான்மை பெற்றவனாக வந்துவிட்டான். ஒரு தமிழன் தன் நண்பன் ஒருவனைக் காணும்பொழுது உடல் நலம் விசாரித்தால், நன்றாயிருக்கிறேன், இல்லை என்று மறுமொழி கூறமாட்டான். "ஏதோ இருக்கிறோம்" என்பான். அப்படிச் சொல்லும்பொழுது அவன் விடும் பெருமூச்சைக் கேட்டாலே எமக்கு ஏக்கவாய்வு பிடித்துவிடும். மேநாட்டார் ஒருவரை காணும்பொழுது, அவரின் சுகத்தை வினாவினால், நல்லாயிருக்கிறேன்; நன்றி என்பார். இதனாலேயே அவர்கள் நன்றாக இருக்கிறார்கள். நாம் "ஏதோ இருக்கிறோம்".

**வாழ்க்கை**

ஆனால் தமிழருக்கு உண்மையாக வாழ்க்கையில் வெறுப்புண்டோ என்று ஆராய்ந்தால் அதுவும் இல்லை. உதாரணமாக, "பரமசிவா, உனது தாமரைத் திருவடிகளை எப்போது அடியேன் அடைவேன்" என வரங்கிடக்கும் ஒருவர் முன் இன்னொருவர் சிவன் வேடம் பூண்டு காட்சியளித்து பக்தா, உன் அன்பினை மெச்சினோம். இனி கவலைப்படாதே; என்னிடம் இரண்டறக்கலந்து கொள்ளலாம், வா என்றார் போவாரா? இல்லை!, "சாமி, கொஞ்சம் பொறுத்தருள வேண்டும்; என்னுடைய தலைப்பிள்ளையின் மணம் இன்னும் முடியவில்லை; அதை முடித்துவைத்து வருகிறேன்" என்பார். அல்லது "ஈட்டுக்குக் கொடுத்த நாலாயிரம், பத்தாயிரம் ஆவதற்கு இன்றும் நான்கு மாதங்கள் தான் இருக்கின்றன. அதுவரை தவணை வேண்டும்" என்பார். எனவே சிறிது நாடிப் பார்த்தால், இவர்களுக்கு உலக இன்பத்தில் வெறுப்பு இருக்கிறதெனவும் கூறமுடியாது. இதனால் இத்தகையோர் கூற்றையும் நான் பொருட்படுத்தவில்லை.

மேலும் இன்பம் என்பது உலக இயற்கை, தமிழகத்தில் எந்தப் பகுதியிலாயினும் சரி, ஆணும், பெண்ணும் ஒருவரையொருவர் சந்தித்து இன்பமுறுதல் இயற்கையே. இதற்கு நாடோடி இலக்கியம் தக்க சான்று பகரும். இக்காலத்திலும் எமது

*ஊர்ப்புறங்களில் கன்னியைக் காணவிரும்பும் காளையொருவன் " ஆடு பார்க்க வந்தேன், காட்டுவீரா" என்று கேட்க அவன் காட்டிநிற்க "தண்ணீர் விடாய்த்து நிற்கின்றேன்; விடாய்தீரத் தண்ணீர் தருவீரா" என்று கேட்க, அவள் காட்டி நிற்க "தண்ணீர் விடாய்த்து நிற்கின்றேன் போய்த்தீரத் தண்ணீர் தருவீரா" என்று மேலுங்கேட்க, அவள் செம்பைமினுக்கித் தண்ணீர்கொடுக்கின்றாள். அவன் தாகந்தணிந்த சாட்டில், அவளின் நடை, உடை, பாவனை, பேச்சு முதலியவற்றை அறிகின்றான்; அறிந்து, மகள் பேசி அனுப்பி வைக்கின்றாள். இவ்வாறன்றிக் களவிலும் காதல் நாடகம் நாட்டில் நடைபெறுகின்றது. அக்காதல் நாடகத்திற்குரிய களம், தென்னந்தோப்பு, தொருவோரம், தோயிலைத்தோட்டம், புகையிலைத்தோட்டம், படச்சாலை, பாடசாலை, பந்தடியிடம், வயல்வெளி, கள்ளுக்கடை, கடற்கரை, கோயில் இவற்றுள் எதுவும் ஆகலாம். இக்கீழ் மாகாணத்தில் இவ்விடத்திலிந்து பன்னிரண்டு கடைகளுக்கு அப்பாலேயுள்ள நெல்லுக்குப் பெயர்போன தம்பலகாம் என்னும் இடத்தில் வழங்கும் நாட்டுப்பாடலை கவனித்துப் பாருங்கள். கூலிக்கு நாற்றுநடும் ஆண்களும், பெண்களும் வயலில் நாற்று நடுகிறார்கள். அவர்களுள் மச்சான், மச்சாள் இருவர் உளர். பாட்டுடன் நடுகை மிக மும்முரமாக நடக்கின்றது. மச்சான் தான் பாடும்முறை வரும்பொழுது,*

*"மாமி மகள் ஒருத்தி*
*மாம்பழுப்பு போலிருக்காள்*
*மாலையொன்று சூட்ட - ஒரு*
*மாசம் பிறக்குதில்லை"*

*என்றுபாடினான். மச்சாள் நாணமேலீட்டினால் நிலத்தைப் பார்த்தவண்ணம் நாற்றை நட்டுக்கொண்டு இருக்கிறாள். மச்சான் பயிரொன்றை சிறிது ஊன்றி இழுத்தான். பெரும்சத்தத்துடன் பயிர் வெளிவந்தது. அதன் வேருடன் வந்த சேறு அவனின் மச்சாள் கண்களில் தெறித்தது. மச்சான் தனக்கு மண்ணினால் எறிந்தான் போலும் என எண்ணினாள் அவள். கண் கறுக்கத் தொடங்கியது. தன் சேலையின் தலைப்பால் கண்ணுக்குள் விழுந்த சேற்றையெடுக்க முயன்றாள்! என்னெடி கண்ணுக்குள்ளே என்று வினாவினான். அயலிலே நின்றவளொருத்தியுடனே*

*கல்லால் எறிந்தால்*
*கலகம் வரும் என்றெண்ணி*
*மண்ணால் எறிந்து மச்சான்*
*மச்சிமுறை கொண்டாடுகின்றான்*

*என்றாள் மச்சாள். எல்லோரும் கொல்லெனச் சிரித்தார்கள். மச்சான் நினைவு தடுமாறித் தான் செய்வது என்னவென்பதை மறந்து நாற்றை நடுவதற்குப் பதிலாக நட்ட நாற்றைப் பிடுங்கிக்கொண்டு நின்றான். இது நாடோடி இலக்கியத்தில் இன்பம்.*

*இது நிற்கத் தெய்வப்புலமை திருவள்ளுவநாயனார் தமது அரிய நூலில் இன்பத்தினைக் கூறும் காமத்துப்பாலை அமைந்தது அந்நூலின் சிறப்புக்கும், அப்பெரியாரின் தன்மைக்கும் ஒவ்வாதென்று கருதுவருமுளர். இது காமத்துபாலின் உண்மையான தன்மையை உணராததால் எழுந்த தவறான கொள்கையாகும். பேரின்பத்தின் பெருமையையும், கைம்மெயையும் மக்கள் செவ்வனே அறிந்து அதற்குரிய வாழ்க்கையை அடைய விருப்பம் கொள்ளுதல் பொருட்டே இன்பத்தின் வகையினை ஆசிரியர் வகுத்துக்காட்டினார்.இன்பம்*

என்ன என்பதை அறியாத ஒருவனுக்கு மேலுலகத்தின் பெருமையை எடுத்துரைத்து அவனை அந்நெறியில் ஈடுபடச் செய்ய முயல்வது வீண்முயற்சியாகும். சுவை எப்படிப்பட்டது என்பதை அறியாத ஒருவனுக்கு மாம்பழம் இனிக்கும், புளியம்பழம் புளிக்கும் என்று கூறினால் அவனுக்குக் கூறுவது என்னவென்று விளங்காது. அதபோலவே இன்பம் என்றால் என்னவென்று அறியாத ஒருவனுக்கு பேரின்பத்தின் பெருமையைப் பற்றிக் கூறுவதில் பயனில்லை. எப்பொழுதும் மறைபொருள் மேல் மக்கள் உள்ளம் மிகுந்துசென்று அதனை அறிய விருப்பம் கொள்ளுதல் இயற்கையே. இன்பம் விருப்பப்படுவதென்றன்று. அதை நுகர்தல் குற்றமென்று, அதனை மறைபொருளா வைத்தால் மக்களுக்கு அதன்மேல் உள்ள பற்று நெருப்பிலே நெய்வார்த்தாற்போலப் பன்மடங்கு மிகுதிப்பட்டே வரும். ஆனால் சிற்றின்பத்தின் மனதைச் சொல்லாவிட்டால் அதன் சிறுமையையும் பயனின்மையும் மக்கள் தெளிவாக விளங்கி அதனினும் மோங்கிய பொருளில் ஆர்வம் கொள்வர். எனவே பேரின்பத்திற்கு கொண்டுபோய் சேர்க்கும் ஆற்றல் இன்பத்திற்கு உரியதாகையால் அதனை வள்ளுவர் காமத்துப்பாலாகத் தமது நூலில் அமைத்தார்.

இக்காமத்துப்பாலில் அன்பின் ஐந்திணை ஒழுக்கத்தினையே ஓதுகின்றார். அவ் ஒழுக்கம் களவியலாக எழுந்து, கற்பியலாக ஒளிர்வது, களவியலாவது ஒத்த தலைவனும் தலைவியும் கொடுப்பாரும் அடுப்பாருமின்றித் தாமே தனியிடத்து இறைவனின் அருளினால் எதிர்ப்பட்டு ஒன்றுகூடி ஈருடல் ஒருயிருமாய் பிணைந்து பேரன்போடு பேரின்பம் பெறுவதாகும். தலையணங் குறுத்தலோடு இன்பத்துப்பால் தொடங்குகின்றது. தகையணங்குறுத் தலாவது தலைவியினுடைய தகுதி தன்னை மிகவும் வருத்துவதாகத் தலைவன் கூறுவர். இவ்வதிகாரத்தில் முதற்குறள் ஐயங்கூறுகின்றது. தலைமகளைக் கண்டதும் அவள் தெய்வப் பெண்ணோ, மயிலோ மானிடப் பெண்ணோ என்ற ஐயம் எழுகின்றது. தலைமகனுக்கு, இதனால்,

அணங்குகொல் ஆய்மயில்
கொல்லோ கனங்குழை
மாதர் கொல் மாலுமென் நெஞ்சு.

என்று கூறுகின்றான். அவ்வுருதன்னை வருத்துவதனால் அணங்கொல்லோஎன ஐயம் நிகழுகின்றது. பொழிலிடத்து நிற்பதனாலும் சாயல் பற்றியும் ஆய்மயில் கொல்லோ என ஐயப்படுகின்றான். தன்நெஞ்சம் அவளிடத்துச் சென்றமையாலும் அவள் எதிர்நோக்கிய காரணத்தாலும் மாதர் கொல் என ஐயச் சான்றுகின்றது.

இவ்வாறு ஐயம் பிறந்தபின் அவளின்கண், நுதல், துகில் முதலியவற்றைக் கொண்டு அவள் மானிடப் பெண்தானெனத் துணிகின்றான். அவ்வாறு துணியும் பொழுது அவளுடைய நோக்கினைப்பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகின்றான்:

கூற்றமோ கண்ணோ
பிணையோ மடவரல்
நோக்கமிம் மூன்றுமுடைத்து

அவளுடைய நோக்கு இவனைக் கொலை செய்கின்றது. கொலை என்றதும் அவனுக்கு இயமனின் எண்ணம் வருகின்றது. எனவே கூற்றமோவென வினவுகின்றான். ஆனால் கொலைசெய்யினும் நோக்கம் அவன்மேல் ஓடுகின்றது. அதனை உணர்ந்ததும் கண்ணே

என்று எண்ணுகின்றான். மேலும் நோக்கம் அவன்மேல் ஓடினாலும் அதற்குரிய இயல்பான தெருவுதல் தன்மை நீங்கியபாடில்லை. அந்த வெருட்சித் தன்மையைக் கண்டதும் பெண்மானின் நினைவு வருகின்றது. எனவே கூற்றமோ கண்ணோ, பிணையோ, மடவால் நோக்கம் அம்மூன்றுமுடைத்து என்று கூறுகின்றான்.

இவ்வாறு இவளது நோக்கம் முதலியவற்றைச் சுவைத்த தலைமகன் காமம் நுகர்தற்கு இடனாகிய இவளைக் கள்ளுடன் ஒப்பிட்டுப்பார்க்கின்றான். கள்ளானது தன்னை உண்டார் மாட்டே மகிழ்ச்சியைச் செய்யவல்வது. தன்னைக் கண்டார் மாட்டு மகிழ்சியைச் செய்யும் ஆற்றல் அதற்கில்லை. ஆனால் காமம் நுகர்தற்கு இடமாகிய இவள் காமத்தை அனுபவிப்பவர்களுக் மாத்திரமின்றிக் கண்டார் மாட்டும் மகிழ்ச்சியைச் செய்யும் ஆற்றல் உடையவள் எனவே,

உண்டார்கண் அல்லது
அடுநறாக் காமம் போல்
கண்டார் மகிழ்செய்தல் இன்று
எனக் கூறுகின்றார் திருவள்ளுவர்.

அடுத்தது குறிப்பறிதல் அதாவது தலைமகளின் உள்ளக்குறிப்பினைத் தலைமகன் அறிதல். இங்கு குறிப்பினை அறிவிப்பது பேச்சு இல்லை, கண்களே. இந்தக் கண்கள் செய்து முடிக்கும் செயல்கள் அற்புதமானவை. நீங்கள் இவற்றை இதுவரை அறியாதுவிட்டால் என்னுடன் வாருங்கள் பேராதனைக்கு எங்கள் பல்கலைக்கழகத்திற்கு அங்கு பார்க்கலாம் கண்களின் திருக்கூத்துகளை ஏன், மட்டக்களப்பிலுள்ள மண்டூர் என்னும் பகுதியில் கண்கள் செய்த வேலையைக் கேளுங்கள். இந்த ஊரிலே வயல்களுண்டு. வயல்களுக்கு அண்மையில் விழுதுவிட்டு அகன்ற ஆலமரம் ஒன்றுண்டு. வயலில் நெற்கதிர் வெட்டிய அரிவையர் பலர் ஆலமர நிழலில் பழஞ்சோறு உண்ண வந்தார்கள். அன்று சித்திரவேலு என்பவனும் அங்கு வந்தான். அவனைக் கண்டதும் பெண்கள் ஒரு பக்கமாக ஒதுங்கிநின்றனர். பின் வயல்களுக்குச் சென்று அரிவுசெய்யத் தொடங்கினர். சித்திரவேலுவின் கண்களும் வேலை செய்யத் தொடங்கின. கன்னியரின் இளமை வனப்பைச் சித்திரவேலுவின் மோகக் கண்கள் எடைபோட்டுக் கொண்டிருந்தன. காமனும் இதுதான் தருணமென்று தன்னுடைய அம்புகளைத் தொடுத்தான். கனகம் என்னும் அரிவையின் கட்டழகு சித்திரவேலுவைத் திணற அடித்தது. கனகம் திரும்பும் இடமெல்லாம் அவன் கண்களும் திரும்பின.

வைத்தகண் வாங்காது வட்டமிடும் சித்திரவேலுவின் கண்வீச்சைக் கனகம் கண்டாள். கண்டதுதான் தாமதம் பெண்மானின் கண்கள் போல அவள் கண்களும் வெருட்சியடையத் தொடங்கின. இருவர் கண்களும் பேசத்தொடங்கின. கண்கள் பேச, கதிர் அறுக்கும் கனகத்தின் அரிவாள் அவள் கையை அறுத்துவிட்டது.

கத்தி எடுத்துக்
    கதிர் அரியும் வேளையிலே
கள்ள நினைவு வந்தது - என்ரை
    கையறுத்துப் போட்டுது

என மெல்ல முணுமுணுத்தாள் காயமோ பெரிது, கனகம் கலங்கினாள். இரத்தம் சிந்தும் கையுடன் ஆலமரநிழலுக்கு வந்தாள். வலியக் கிடைத்த சந்தர்ப்பத்தை

நழுவவிடுவானா வேலு? "காயம் பலமாக இருக்கவேண்டும். எங்கே கையை நீட்டு பார்ப்போம்? என்றான். அவளும் நீட்டினாள். "எவ்வளவு இரத்தம் சிந்துகிறது பார் என்று கூறிக்கொண்டே அண்மையில் போய்க் கையை எட்டிப்பிடித்தான். இரத்தப்போக்கை உடனே நிறுத்தவேண்டுமென்று சொல்லி, அயலிலுள்ள ஒரு பரியாரியிடம் அழைத்துச் சென்றான். போகும் வழியில், "இரத்தம் இன்னுஞ் சிந்திக்கொண்டிருப்பதால் உனக்குக் களைப்பு ஏற்படக்கூடும்" என்று அவள் தோள்களையும் தன்னுடைய இரு கைகளாலும் அணைத்துக்கொண்டான். அதன்மேல் நடத்தை ஊகித்துக்கொள்ளுங்கள், பாருங்கள், கண்களின் சேட்டையை!

பூவானது செவ்வி வந்த காலத்து மலர்ந்து நறுமணம் பரப்பும்; அதுபோலக் காதல் உணர்ச்சியும் ஏற்ற செவ்வியில் வெளிப்பட்டு இன்பம் பயக்கும். தலைமகனும் தலைமகளும் ஒருவரையொருவர் கண்டு உணர்ந்துகொள்ளும் வேளையிலே வாய்ப்பேச்சுக்கு இடமில்லை; கண்களே பேசும். காதலர் உள்ளம் உணர்ச்சிவசமாக இருக்கின்றது; அந்த உணர்ச்சி கண்வழியாக வெளியே வருகின்றது. காதலன் வாயாற் பேசாமல் கண்ணாற் பேசுகின்றான். அதற்கு ஏற்ற விடையைக் கண்ணால் அளிக்கின்றாள் தலைவி. தலைமகளின் இக்கண்கள் இருநோக்குடையன; ஒரு நோக்கு நோய்நோக்கு; இந்நோக்கு அவள் மனத்தினால் காமக்குறிப்பினை வெளிப்படுத்துகின்ற நோக்கு. ஏனையது அந்நோய்க்கு மருந்தாகிய நோக்கு. இது தலை மகனிடத்து நிகழுகின்ற அன்பு நோக்கு. இவற்றைத் திருவள்ளுவர்,

இருநோக சிவளுண்கண்
உள்ள தொருநோக்கு
நோய்நோக்கென் றந்நோய் மருந்து

எனக் குறிப்பிடுகின்றார். இதனைத் திருக்கோவை ஆசிரியர், "பிணியும் அதற்கு மருந்தும்... பெருந்தோளி படைக்கண்களே" என்று பாடி சென்றார்.

இவ்விரு நோக்குடைய பெண்ணைத் தலைவன் நோக்குகின்றான் அவன் நோக்க, அவள் நிலத்தைப் பெருவிரலால் கீறிக்கொண்டு தரையை நோக்கிற்தாகப் பாவனை செய்கிறாள். அவன் நோக்காதபோது, அவள் அவனைக் கடைக்கண்ணாற் பார்த்து ஒரு புன்னகையும் புரிகின்றாள். இதனை வள்ளுவர் வெகு அழகாக,

யான் நோக்குங்காலை
நிலநோக்கும் நோக்காக்கால்
தான் நோக்கி மெல்ல நகும்.

என்று கூறுகிறார்.

இத்தகைய இவர்கள் பார்வைகள் வெறும் பார்வைகள் அல்ல. கண்ணுக்கு ஊடாக உள்ளந்தான் பார்த்தது. கண்மூலம் பேசியது உணர்ச்சி இருவரும் பேசாமலே தமது சம்மத்தைத் தெரிவித்துக் கொண்டார்கள். இவ்வாறு இவர்களின் உணர்ச்சிகளை உள்ளக் கருத்துக்களை ஒன்றுபடுத்துவதற்குக் கண்கள் பயன்படுகின்றன. இதனைத் தொல்காப்பியர்,

நாட்டம் இரண்டும் அறிவுடம் படுத்தற்குக்
கூட்டி உரைக்கும் குறிப்புரை யாகும்

எனக்கூறிச் சென்றார். வாய்ப்பேச்சின் எல்லையைக் கடந்து நிற்கின்றது காதல். அந்தக் காதல் வெளிவரும்போது, "அவள் எங்கே, எங்கே" என்று தேடிய தலைமகனும் சந்திக்கின்றனர். அப்பொழுது, தேடித்திரிந்தவர்களைக் கண்கள் பேசி இணைத்து வைக்கின்றன. ஆம், இங்கு இவர்களைப் பேசிக் கூட்டிவைப்பதற்கு அம்பட்டன் தேவையில்லை, வண்ணான் தேவையில்லை; கண்களே அவ்வேலையை முடித்து வைக்கின்றன. இவ்வாறு இக்கண்கள் பேசிய பேச்சு எங்களுக்கு விளங்காது; அவர்களுக்குத்தான் விளங்கும். இந்நிலையில் வாய்ப்பேச்சுக்கு அங்கு இடமேயில்லை; வாய்ப்பேச்சாற் பயனுமில்லை. இதனையே தெய்வப்புலமைத் திருவள்ளுவர்,

கண்ணோடுகண் இணைநோக்கு
ஒக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனு மில

என்று திறம்பட மொழிந்தார். இதனையே மாணிக்கவாசகர் கம்பர் முதலியோர் கோவையாகக், காவியமாகப் பாடினர்.

இவ்வாறு காதலர் இருவரும் கலந்தபின் தலைமகள் தன் கருத்திற்கிசைந்த, கண்ணிற் கிசைந்த காதலியின் நலத்தையும் குணத்தையும் பாராட்டி மகிழ்கின்றான். மட்டக்களப்பில் செங்கலட்டிக்கு அணித்தாயுள்ள கிராமமொன்றில் மச்சான் மச்சாள் ஆகிய இருவர் ஒருவரை ஒருவர் காதலித்தனர். கேளுங்கள் மச்சாள் மச்சாளின் நலத்தினைப் பாராட்டும் வகையினை

ஆலம் பழத்திலேயும்
        அழகான சீனிமுத்தே!
கொவ்வம் பழமே மச்சி - என்
        குணமயிலே...
கண்ணான கண்மணியே
        கண் குளிர்ந்த சீதேவியே
ஈரல் துளிரே! மச்சி - நீ
        என்ன நிறம் கொண்டிருக்காய்
மாமியட புள்ளே
        மகிழம் பூ வாயுடையாள்
அன்ன நடையே
        அலங்காரப் பெண்மணியே
சுந்தரியே அம்புயமே
        சொல்லுக்கொரு நங்கணமே
அந்தரித்த என்னை
        அழைத்தாதரிக்க மாட்டாயா?

இதேபோலத் திருவள்ளுவரின் தலைமகனும் தலைமகளின் நலத்தினைப் பலவாறு பாராட்டுகின்றான் மோப்பக் குழையும் அனிச்சமலரை நோக்கி, அதனிலும் தன் பெண் மெல்லியலாள் என்று சொல்லி மகிழ்கின்றான். சந்திரனைப்பார்த்து "நீ இந்த மலர்போன்ற கண்ணாள் முகம் போல மறுவற்று விளங்கவேண்டுமாயின் பலர் காணத் தோன்றாது

அவளைப்போல எனக்கு மட்டுமம் தோன்றுவாயாயின் உன்னிடமுள்ள மறு ஒழியும். உன்னிடத்துள்ள மறு ஒழிந்தால் நீயும் என் காதலுக்கு உரியாய்" எனக் கூறுகின்றான்.

மலரன்ன கண்ணாள்
முகமொத்தி யாயிற்
பலர்காணத் தோன்றன் மதி

இங்ஙனம் நலம் பாராட்டிப் பிரிகின்றான் தலைமகன். பிரிந்து தலைமகளைப் பகலிலும் இரவிலும் சந்தித்து வருகின்றான். காதலியின் வீட்டுக்கு அருகாமையிலுள்ள சிற்றொழுங்கைக்குள்ளாலே நாள்தோறும் இரண்டு செருப்பு அழுதுகொண்டுபோம். சந்தையாற் போகிற மச்சான் வீட்டுக்குத் திரும்பிப் போகும்பொழுது நேரத்துக்கொரு உடுப்பு அணிந்துகொண்டுசெல்கின்றான். பகலிற் சந்திக்க முடியாது இரவிற் சந்தித்து வருகின்றான். சில வேளைகளில் இரவிலும்கூடச் சந்திக்கமுடியாது மனம் தளர்ந்து திரும்பிப்போவதுண்டு. ஒருநாள் இரவு, பகல்போல நிலாவெறிக்கின்றது. நாயும் உறங்கியது; தாயும் உறங்கினாள். வேலியருகே ஒரு மூளையில் பற்றைக்குள் பதுங்கியிருக்கும் ஓர்உருவம், ஆட்சத்தம் கேட்கும் வேளைகளில் ஆமையைப் போலத் தலையை வெளியே நீட்டி நாற்புறமும் பார்ப்பதுவும் பின்பு ஏமாற்றத்தோடு தலையை உள்ளே இழுத்துக் கொள்வதுமாயிருந்தது. நுளம்புக்கடியோ தாங்க முடியவில்லை. போதாக் குறைச்சலுக்குக் கீழே தரையில் கல்லும் முள்ளும் உறுத்துகின்றன. மழையும் அடித்து ஊற்றுகின்றது. ஆறஅமர இருந்துகொள்ளமுடியாமலிருக்கின்றது. இரண்டொரு சீழ்க்கை விடுக்கலாமோ என்று கூட எண்ணினான். கைவிரல்கள் இரண்டினைச் சீழ்க்கை வலிக்கலாமோ என்று கூட எண்ணினான். கைவிரல்கள் இரண்டினைச் சீழ்க்கை விடுவதற்கு வாய்க்குள் திணித்தும்விட்டான். ஆனால் அன்று பகல்,

கோடியிலே வந்து நின்று
கொக்காட்டை கொள்ளாதே கா
வீடுநிறைந்த சனம் - எங்க
உம்மாவுந் திண்ணையிலே

என்று அவள் சொன்னது ஞாபகம் வந்தது. எனவே,

கடித்த நுளம்பும் நான்
காத்திருந்த மூலையும்
அடித்த மழையும் - எனக் கொரு
ஆள்வேணும் சொல்லி அழ

என்று அழுதுகொண்டு போகின்றான்.

இங்ஙனம் இவர்கள் இரவும் பகலும் பல தடைகளுக்கூடாகக் களவிற் சந்தித்து வருகிறார்கள். ஆனால் எவ்வளவு காலத்திற்குக் களவை நீடிக்கலாம். ஊரிலே உள்ளவர்களுக்குக் களவு அம்பலமாகிவிட்டது. அவர்கள் அலர் தூற்றத் தொடங்குகிறார்கள்.

ஆலமரம் அறியும்
அதன் கீழிருக்கும் வாங்கறியும்

*சேகு இஸ்மாயிலறிவாண்டி - உம்மா*

*இராமுழுதும் பட்டபாடு*

*என்று தலைவியோடு ஒத்த வயலதுப் பெண்களே கதைக்கத் தொடங்கிவிட்டார்கள். ஆலமரம்மட்டும் வாய்திறந்து பேசுமானால் ஆலயமத்தின் கீழிருக்கும் வாங்குக்குப் பேசும் ஆற்றல் இருந்தால் அவர்களின் திருவிளையாடல்களை நூல்வடிவிற் பொறித்துவிடலாமென்று ஊரார் அலர் பரப்புகின்றார். அப்பொழுது தலைமகன் தனக்குள் எண்ணுகின்றான் "ஊர் அறிந்த அலர் எனக்கு வரவேண்டியதொன்றுதான்; ஆனால் அவ்வலரினால் அவளை இப்போதுகூடாமலிந்தாலும் கூடியது போன்ற இன்பம் உண்டாகின்றது. இவ்வூர் தூற்றும் அலரால் என் காமம் மலர்ந்திருக்கிறது. இல்லையாயின் சுருங்கிவிடும். ஊரிலுள்ளோர் அலர் தூற்றத்தூற்றக் காமமானது நாளுக்குநாள் மலர்ந்து கொண்டேபோகின்றது."*

*கவ்வையால் கவ்விது காமம் அதின்றேல்*

*தவ்வென்னுந் தன்மை இழந்து*

*தலைவியும் இந்த அலருக்கு அசைகின்றாளில்லை. "இக்காம நோயாகிய பயிரானது இவ்வூரிலுள்ள மகளிர் எடுக்கின்ற அலர். எருவாக, அயவலர்கேட்டு அன்னை வெகுண்டு சொல்லுகின்றகொடிய சொல் நீராகவளர்கின்றது" எனக் கூறுகின்றாள்.*

*ஊரவர் கவ்வை எருவாக அன்னைசொல்*

*நீராக நீளுமிந் நோய்*

*"அயலார் தாம் எடுக்கின்ற அலரால் நம் காமத்தை அவித்துவிடுவோமென்று கருதுகிறார்கள். இது நெய்யினால் நெருப்பை அவித்துவிடலாமென்று கருதுதலோடு ஒக்கும்" என்று கூறுகின்றாள்.*

*நெய்யால் எநெதும்பேம்*

*என்றற்றால் கௌவையால்*

*காமம் நுதுப்பே மெனல்*

*அலர் வளர்ந்துவர, இறுதியில் இருவருக்குமிடையே மணம் நடைபெறுகின்றது. களவியல் முற்றுகின்றது; கற்பியல் தொடங்குகின்றது. இங்கு கவனிக்க வேண்டிய தொன்றுண்டு. அக்கால மணத்திற்கும் இக்கால மணத்திற்கும் வேற்றுமையுண்டு. அக்காலத்திலே இரண்டு மணித்தியாலத்திற்குமேல் ஐயர் மணச் சடங்கு நடத்துவர். எமக்கு விளங்காத மொழியில் ஏதோ அலட்டுகின்றார். மணமக்களை வாழ்த்துகின்றாரோ திட்டுகின்றாரோ நாம் அறியோம். மணச் சடங்கு எப்பொழுது முடியுமென்று மணமக்கள் ஏங்கியிருக்க பந்தியிலே எப்பொழுது குந்தலாமோவென்று அங்கு வந்துள்ளவர் முணுமுணுக்க ஐயரவர்கள் நெடுநேரமாக ஏதோவெல்லாம் வாயில் வந்தவாறு தாளித்துத் தள்ளுவார். ஆனால் திருவள்ளுவர் காலத்தில் ஐயருக்கு மணவீட்டில் இடமில்லை, பெண் பகுதியார் பெண்ணைக் கொடுக்க ஆண் அவளை ஏற்பதுடன் சடங்கு முடியும்.*

**இல்லற வாழ்க்கை**

*இவ்வாறு மணம் முடிந்ததும் இல்லற வாழ்க்கை நடைபெறுகின்றது. இவ்வில்லறத்தைப் பற்றி வள்ளுவர் இன்பத்துப் பாலிற் கூறவில்லை; அறத்துப் பாலிற் கூறினார்.*

இல்லறமொன்றே இயற்கையோடு இயைந்ததென்பது வள்ளுவரின் முடிந்த முடிபு. இருவேறு வகையாய் விளங்கும் ஆண்மக்களின் பண்பினையும் பெண் மக்களின் பண்பினையும் ஒன்று சேர்த்து விளக்குதலின் இல்லறம் நல்லறமாயிற்று; இயற்கை ஒழுக்கமாயிற்று. மனை நிலையில் மனைவியோடு வாழ்தலே முறை. மனையாள், கணவன் எந்நிலையில் நின்றாலும், அவன் உயிரோடு வாழும் வரை அவனுக்குத் துணையாகி நிற்பவள். இது கருதியே திருவள்ளுவரும் மனைவியை வாழ்க்கைத் துணை எனப் பொதுப்படக் கூறுகின்றார். இம்மனைவி வீட்டிற்கு உரியவளாகையினால் இல்லாள் எனப்படுகின்றாள். இல்லாள் இல்லினை - வீட்டினை ஆட்சி செய்பவள் - கணவன் பொம்மையாக இருக்க வீட்டை ஆட்டிவைப்பவள் அல்லள்.

இத்தகைய இல்லாளும் அவள் கணவனும் அன்பினை அடிப்படையாகக்கொண்டு வாழ்க்கையை நடத்தவேண்டுமென்று கூறுகின்றார் திருவள்ளுவர். இதற்குச் சிறந்த உதாரணங்களை நாட்டுப்புறத்திற் காணலாம். ஊர்ப்புறங்களில் இல்லற வாழ்க்கை எவ்வளவு தூரம் அன்பின் உருவமாகக் காட்சியளிக்கின்றதென்பதை நீங்களே கவனித்திருப்பீர்கள். வயலிலே தண்ணீர் இறைக்கின்றான் கணவன். கஞ்சிகுடிக்கும் நேரமாயிற்று. கண்கள் எல்லாத் திசையையும் நாடுகின்றன. அவனுக்கு வயிற்றுப் பசியிலும் கண்பசிதான் மேலானது. அசைந்து ஒசிந்து வருகின்றாள் அவனுடைய வேலாயிக்குட்டி. உடனே அவன் உள்ளம் உணர்ச்சி வசமாகின்றது. அவ்வுணர்ச்சி பாட்டாக வெளிவருகின்றது.

வேலிஓரம் வாரபுள்ளே - நம்ம
        வேலாயிக் குட்டி தாண்டா!
காலைக் கஞ்சியோட வந்தால் - நம்ம
        காதடைப்புத் தீருமடா

இன்னொரு காட்சி. வீட்டுப் புறத்திலே ஏற்றம் இறைக்கின்றான் கணவன்; வீட்டுக்குள்ளே கைவேலை செய்கின்றாள் மனைவி. கஞ்சிகொண்டுவரும்படி ஏவுகின்றான் அவன்; அதற்குப் பதிலளிக்கின்றாள் அவள். கேளுங்கள் அதனை,

ஏத்தம் இறைக்கிறேன் இறைப்பு இறைக்கிறேன்
        கொண்டாடி குட்டி கஞ்சி
        கொண்டாடி குட்டி கஞ்சி
கிண்ணம் விளக்கிறேன் சொம்பு விளக்கிறேன்
        கொண்டாரக் கொஞ்சம் நேரம்
        கொண்டாரக் கொஞ்சம் நேரம்
கூழுகுடிக்கிற நேரமாச்சு
        கொண்டாடி குட்டி கஞ்சி
        கொண்டாடி குட்டி கஞ்சி
குந்தக்கூட நேரமில்லை
        கொண்டாரம் ஏண்டா அத்தான்
        கொஞ்சம் பொறுத்துக்கோ மச்சான்

*பாருங்கள்! இவர்கள் தான்வாழ்க்கையைச் சுவைபெறவைத்து வாழத் தெரிந்தவர்கள். "குட்டி" என்ற சொல்லிலே எவ்வளவு அன்பு தொனிக்கின்றது. இவர்கள் குடிப்பது கஞ்சிதான்; ஆனால் இவர்கள் வாழ்க்கையில் குமிழியிட்டுக் கொப்பளிப்பது எங்கும்பெறமுடியாத அன்பு.*

**நிழலின் அருமை**

*தலைவனும் தலைவியும் இவ்வாறு அன்பின் துணையாக இல்லறம் நடத்திவருங்காலத்தில் இருவருக்குமிடையே பிரிவு ஏற்படுகின்றது. ஒத்த அன்புடன் வாழ்பவர்களிடையே பிரிவு ஏது. களவு ஒழுக்கத்தில்தானா ஒத்த அன்பு, "வரவர மாமி கழுதைபோலானாள்" என்ற கதைபோல, போகப்போக அன்பு குறைகின்றதா? வெளிக்கு வெறுப்புப்போலக் காட்டிப்பின், "பழைய குருடி கதவைத் திறவடி" என்ற கதைபோலாகிவிட்டதேயெனச் சிலர் எண்ணக்கூடும். ஆனால் இஃது அவ்வாறன்று. நிழலின் அருமை வெய்யிலிலேதான் தெரியும். அது போலப் புணர்ச்சியின் அருமை பிரிவிலேதான் காணப்படும். சிறிது பிரிந்து கூடினால்தான் இன்பம் முன்னிலும் பன்மடங்கு சிறந்து விளங்கும். இடையீடின்றி ஒரு பொருளைத் தின்று கொண்டுவந்தால் தெவிட்டாத தெள்ளமுதமும் தெவிட்டுப்போகுமென்பது உலகறிந்த உண்மை. தயிர்ச்சோற்றுக்கு இடையே ஊறுகாயை உண்பதுபோலத்தான் புணர்ச்சியினிடையே பிரிவு நிகழுகின்றது. இப்பிரிவு கல்வி, நாட்டுக்காவல், சமாதானம், அரசாங்கம் நன்மை, பொருளீட்டல் முதலிய பல காரணங்களால் நிகழும். இப்பிரிவின் தொடக்க நிலைப் பிரிவாற்றாமையிற் புனைந்துரைக்கின்றார் வள்ளுவர். பிரிந்து விரைவில் வருவேன் என்று தலைவன் தலைவியின் தோழிக்குக் கூறுகின்றான். அதனைக்கேட்ட தோழி.*

*செல்லாமை உண்டேல்*
*எனக்குரை மற்றுநின்*
*வல்வரவு வாழ்வார்க்குரை*

*எனவிடை பகருகின்றாள். அதாவது, நீ எம்மைப்பிரியாமை உண்டாயின் அதனை எனக்குச் சொல். அஃது ஒழியப்பிரிந்து போய்விரைந்து வருதல் சொல்வையாயின், அதனை அப்பொழுது உயிர்வாழ்வார்க்குச் சொல். தோழி இவ்வாறு கூறியும் தலைவன் பிரிகின்றான். அந்த நிலையில் தலைவி தன் கண் அனுபவிக்கும் துன்பத்தினை எண்ணி எண்ணி விம்முகின்றாள். காதலர் வராதபொழுது அவர் எப்பொழுது வருவாரோ என்று அவரின் வரவு பார்த்துத் துயில் கொள்ளமாட்டா கண்கள்; அவர் வந்தாலும், அவர் பிறகும் பிரியக்கூடுமென்ற அச்சத்தினாலும் துயில்கொள்ளமாட்டா. எனவே*

*வாராக்கால் துஞ்சா வரின்துஞ்சா ஆயிடை*
*ஆரஞர் உற்றன கண்*

*தலைவன் இன்னும் வரவில்லை. பிரிவு ஆற்றாமையினால் தலைவியின் உடல் நிறம் வேறுபடுகின்றது. அப்பொழுது ஊரிலுள்ளவர்கள் "இவள் பசந்தாள்" என மொழிகின்றனர். ஊராரின் இந்தக்கொடுமையைப் பொறுக்க முடியாததலைவி,*

*பசந்தாள் இவளென்ப தல்லாமல் இவளைத்*

*துறந்தர் அவரென்பர் இல்லையா என்று*

கேட்கின்றாள். என்மேனி பசந்தது என்று அலர் தூற்றுவதை விட்டு, இவளை அவர் விட்டுப்பிரிந்தாரேயென்று எனக்காக ஒரு சொல் மொழிவாரில்லையா என ஏங்குகின்றாள்.

**பிரிந்த தலைமகன்**

நாள் செல்லச்செல்ல, தலைமகள் தலைமகனைக் காணப்பெரிதும் விரும்புகின்றாள். அவன் சென்ற நாட்களைச்சுவரின் கண்தொட்டு எண்ணி எண்ணி அவள் விரல்கள் தேய்ந்துவிட்டன. அதுவேயன்றி, அவர்வரும் வழியை இடைவிடாது பார்த்து, அவள் கண்களும் தமக்குரிய ஒளியை இழந்துவிட்டன. இந்த நிலையில், தன்னுடைய காதலன் வரின் "புலப்பேன் கொல், புல்லுவேன் கொல்லோ, கலப்பேன் கொல்" என்று ஐயப்படுகின்றாள். அவர் வரவு நீடித்தமையால் அவர் வந்ததும் காதற்சண்டை தொடுப்பேனோ அன்றி என் ஆற்றாமை மிகுதியினால் அவருடன் கூடுவேனோ, அல்லது அவ்விரண்டும் வேண்டுதலால் அவ்விரு செயல்களையும் கலந்து செய்வேனோ, யாது செய்யக்கடவேன்" என்று வினாவுகின்றாள்.

பிரிந்துபோன தலைமகன் வருகின்றான். வந்ததும் தலைமகன், தலைமகள் தோழி என்றிவர் ஒருவர் குறிப்பினை ஒருவர்க்கு அறிவுறுத்துகின்றனர். இங்கேயும் இவர்கள் எண்ணத்தினைக் கண்தான் அறிவுறுத்துகின்றது. பாருங்கள், கண்ணின் ஆற்றலை, பிரிந்து வந்த தலைமகன் தன் நாயகியிடம் முன்பு ஒரு பொழும் காட்டாத அன்பு காட்டுகின்றான். அப்பொழுது அவளுக்குப் பழைய ஞாபகம் வருகின்றது. இவர் இவ்வளவு அன்பு பாராட்டுவதில் ஏதோ சங்கதி இருக்கத்தான் வேண்டும் என ஐயுறுகின்றாள். "மறுபடியும் பிரிந்து போவதற்காகவா இவ்வாறு பேரன்பு பாராட்டுன்றார்" என்று, அஞ்சுகின்றாள் அவளின் அச்சத்தை உணர்ந்த தலைமகன், "நான் இனி உன்னைப்பிரியமாட்டேன்" என்று உறுதி கூறுகின்றான். அவள் இது கேட்டு நாணம் உறுகின்றாள். "நான் அப்படி அஞ்சவில்லையே" என மொழிகின்றாள். இது வெறும் பொய்யல்லவா? தன் அச்சத்தினைத்தான் வாயால் எடுத்துக்கூறாமையால் அவன் அதை உணர்ந்திருக்கமாட்டான் என்ற துணிவினால் எழுந்த பொய் மொழியே இது. ஆனால் அவனுக்கா, இவள் வாயாற் பேசாதுவிட்டாலும் இவள் குறிப்பினை அறியத் தெரியாது? ஆகவே அவள் குறிப்பை அறிந்த முறையினைக் கூறுகின்றான். "நீ உன்கருத்தை வெளியிடவிரும்பாது அடக்கினாலும், உன்னை அறியாமலே சொல்லிவிட்டாய் - வாயாலல்ல, கண்களால்"

*கரைப்பினும் கையிகந்து ஒல்லாநின் கண்கள்*

*உரைக்க லுறுவதொன் றுண்டு.*

வள்ளுவர் இவ்வளவுடன் நிற்கவில்லை. மகளிர் தம் காமநோயைக் கண்ணாலே சொல்லுவார்களெனக் கூறுகின்றார். ஆணாக இருந்தால் "உன்னைநான் காதலிக்கிறேன்" என்று மொட்டையாக, வெளிப்படையாகச் சொல்லி விடுவான். ஆனால் பெண் நாணமுடையவள்; அது பற்றி அவ்வுணர்ச்சியைக் குறிப்பினாற் புலப்படுத்துகின்றாள். இவ்வாறு கண்ணினால் காதலைச் சொல்லி இரக்குந்தன்மை பெண்மைக்குள்ளே பெண்மை இருக்குமிடத்திற்றான் காணப்படும். இதனை வள்ளுவர் திறம்பட,

*பெண்ணினாற் பெண்மை உடைத்தென்ப கண்ணால்*

*காமநோய் சொல்லி இரவு*

*எனக்குறிப்பிடுகின்றார். இதன்மேல் தலைவனும் தலைவியும் புணர்ச்சிக்கணே விரைகின்றனர். தலைவி கள்ளையும் காதலையும் ஒப்பிட்டுப் பார்க்கின்றாள். ஆராய்ச்சி செய்கின்றாள்; முடிவைச் சொல்லுகின்றாள். கேளுங்கள் அதனை.*

*உள்ளக்களித்தலும் காண மகிழ்தலும்*
*கள்ளுக்கில்லை காமத்திற்குண்டு*

*கள்ளை எண்ணினாலும் பார்த்தாலும் கழிப்பேருவகையோ, போதையோ தோன்றுவதில்லை. அதனைக் குடித்தால்தான் "சூர்" ஏளும். ஆனால் காமம் அத்தகையதன்று. அதை எண்ணினாலும் போதை, பார்த்தாலும் போதை. ஆகவே கள்ளைவிடக் காமம் இன்பம் அளிப்பதில் அதிகவலுவுடையது! எப்படிக்காதல்!*

*இனிவருகின்ற இன்பத்துப் பாலிலுள்ள சிறந்த பகுதிகள், அவையாவன புலவி, புலவி நுணுக்கம், ஊடல், உவகை என்பன. புலவனின் பெண்பால் புலவி; காதற் சண்டையே புலவி எனப்படும். அதாவது தலைவனும் தலைவியும் காதல் காரணமாகத் தம்முள் புலத்தல். இப் "புலவி" என்ற பகுதியின் தொடக்கத்தில் தோழி தலைவியை நோக்கிக் கூறுகின்றாள், "நீ அவரை விரைந்துசென்று கூடாதே; புலந்திருப்பாயாக. அங்ஙனம் புலந்தாற் காதலர் எய்தும் அல்லல் நோயினை நாம் சிறிது காணலாம்" அப்பொழுது தலைவி தனக்குள் எண்ணிப்பார்க்கின்றாள்" இவள் புலந்திருக்கும்படி கூறுகின்றாள் ஆனால் புலவி நீடித்துவிட்டால் எல்லாந் "தொப்பி"யாய்ப் போனாலும் போய்விடும். புலவி உப்புப்போன்றது. உணவை இன்சுவையாக்குமளவு உப்பைப்பாவித்தால் உணவு சுவைக்கும். அளவுக்கு மேல்பட்டால் சுவை கெட்டுப்போகும். அதுபோலப் புலவியும் கலவியின்பம் செய்தற்கு வேண்டுமளவில் நின்றுவிட்டாற்போதும். அவ்வளவிற் சிறிது மிகுந்துவிட்டாலும் உப்பு அளவில் மிக்கதுபோலாகிவிடும்" இவ்வாறு தலைவி மனத்தோடு கூறி நிற்கின்றாள். என்றாலும் பொறாமையால் புலவி ஏற்படுகின்றது.*

**ஐயப்பாடு**

*தலைமகனோ உலகினர் கண்டறியாத கட்டழகுடையவன். அதனால் காதலி, தனது அன்பின்பெருக்கால், எண்ணாததும் எண்ணுகின்றாள். பிறபெண்கள் இவனின் கட்டழகில் மயங்கி இவனைத் தம் வசப்படுத்திவிடுவாரோ என அஞ்சுகின்றாள். பிற பெண்களோடு இவன் பேசுவதாகவும் கூடுவதாகவும் கனாவும் காணுகின்றாள். இவன் வெளியே சிறிது உலாவப்போய்வரினும் ஐயுறுகின்றாள். ஐயப்பாடு அன்பினால் வலியுறுகின்றது. வலியுறப் புலந்து நிற்கின்றாள். தலைவன் பேசிவரும் ஒவ்வொரு பேச்சிலும் குற்றம்கண்டு, அவன் கூறுவனவற்றிற்கெல்லாம் வேறு பொருள்கூறி, அவனைச் சிப்பிலியாட்டிப் புலந்து நிற்கின்றாள். இச்சந்தர்ப்பத்திலே தொடங்குகின்றது. தும்மற்கதை, துயிலுமிடத்துத் தலைவன் தும்முகின்றான். தும்மும்பொழுது அயலில் நிற்போர் தும்மியவரை வாழ்த்துதல் மரபு. ஆனால் மனைவி கணவன் தும்மியதைப் பொய்த் தும்மலாகக் கொள்கின்றாள். "இவர் தும்மியது புலந்து நின்றயான் அதனை மறந்து தன்னை வாழ்த்தித் தழுவுவேன் என்ற காரணத்தால்" எனக்கூறுகின்றாள்.*

*ஊடியிருந் தேமாகத் தும்மினார் யாந்தம்மை*

*நீடு வாழ்கென்பாக் குறித்து*

*மற்றுமொருமுறை தும்முகின்றான் தலைவன்; தலைவி, "நீடு வாழ்க" என்று தன்னையுமறியாது வாழ்த்துகின்றாள். இதற்குள் தும்மியதற்கு வேறொரு காரணம் இருக்கவேண்டுமென்று கொண்டு அழத்தொடங்கினாள். நாம் எமது நண்பர் தும்மினால் "யாரோ ஒருத்தி உன்னை நினைக்கின்றாள்; அதனாலேயே தும்மினாய்" என்று கேலிபண்ணுவதுண்டு. அதுபோலவே எண்ணினாள். இந்த அறிவிலாப் பெண்ணும் உடனே அழுதாள். "உம்மை எண்ணி வருந்துகின்ற மகளீர் பலருள் எவர் நினைத்தலால் நீர் தும்மினீர்" என்று வினாவுகின்றாள்.*

*வழுத்தினாள் தும்மினே னாக அழித்தழுதாள்*

*யாருள்ளித் தும்மினீரென்று*

*தலைவனுக்குத் தும்மல் தொடர்ந்தும் வருகின்றது. பாவம்பெருஞ்சங்கடமான நிலையிலிருக்கின்றான். திரும்பவும் தும்மினால் தலைவி என்னகுறை கூறுவானோ என்ற அச்சத்தினால் தும்மலை அடக்குகின்றாள். ஆனால் தலைவியோ இவன் தும்மல் அடக்கியதைக் கண்டுவிட்டாள். ஐயம் தலைக்கேறுகின்றது. "உம்முடைய அன்பிற்குரிய பெண்கள் உம்மை நினைப்பதனை எனக்கு ஏன்மறைக்கின்றீர். நன்றாகத் தும்முவது தானே" என ஊடி அழுகின்றாள்.*

*தும்முச் செறுப்ப அழுதாள் நுமருள்ளல்*

*எம்மைமறைத்திரோ வென்று*

*தலைவனின் பரிதாபமான நிலை இது. தும்மினாலும் வில்லங்கம். தும்மலை அடக்கினாலும் வில்லங்கம்.*

**வெளி ஏகுதல்**

*தலைவன் வெளியே போய் வருகின்றான். வந்ததும் அவனை அணைக்க அணுகுகின்றாள். அவள் இடம் கொடுக்கின்றாளில்லை; எட்டிப்போய் நிற்கிறாள். "பெண்ணியல்புடைய பலரும் உன்னைத் தம் கண்ணால் பொதுவாக உண்பர். அதனால், அவர்உண்ட எச்சிலை நான் பொருந்தேன்" என் ஊடுகின்றான்.*

*பெண்ணியலார் எல்லாரும்*

*கண்ணிற் பொதுவுண்பர்*

*நண்ணேன் பரத்த நின்மார்பு*

*பெண்புத்தி இதுதானா? தான் வெளியே உலவிவரும்பொழுது பிறர்தன் அழகினைக் கண்ணினாற் பருகுதலை இவனால் தடுக்க முடியுமா? இவனை அறையில் அடைத்துவைப்பதா? வெளியே போவதா; அல்லது மொட்டாக்கு அணிந்து உலாவுவதா? என்றாலும் தலைவன், அவன் மகிழப்பூமாலை சூடுகின்றான். உடனே, "எவள் கண்டு மகிழ இப்பூமாலை சூட்டினாய்" என்று புலக்கின்றாள்.*

*கோட்டுப்பூச் சூடினுங் காயு மொருத்தியைக்*
*காட்டிய சூடினீரென்று*

*இதைக்கேட்ட தலைவன் பணி மொழிகூறி, "காமம் நுகரும் இருவர் எவரினும் யாம் இருவரும் மிகுந்த காதலை உடையேம்" என்ற பொருளைவைத்து, "யாரினும் காதலம்" என்று தன்னையும் அவளையும் புகழ்ந்து கூறுகின்றான். "யாரினும் காதலம்" என்பதற்கு என்னால் காதலிக்கப்பட்ட பெண்கள் பலருள், உன்னிடத்துக்காதலுடையேன்" எனத் தலைவன் கூறியதாகப் பொருள் கொள்கிறாள் அவள். எனவே "மகளிர் பலர் என்றீரே! அவருள் எந்தஎந்தப் பெண்ணைக் காதலிப்பதிலும் பார்க்க மிகுதியாக என்னைக் காதலிக்கிறீர்" என்று வெகுண்டு எழுகின்றாள்*

*யாரினும் காதல மென்றேனா வூடினாள்*

*யாரினும் யாரினு மென்று*

*தலைவனும் விட்டுக்கொடுக்கின்றானில்லை. மேலும் முயலுகின்றான். "இம்மையாகிய பிறப்பில் இருவரும் பிரிவதில்லை" என்றான். உடனே அவள், "இம்மையில்தான் பிரியாதிருப்போம்; மறுமையில் பரிவோம்" என்று கொண்டு, கண்ணால் நீர் வழிய அழுதாள்.*

*இம்மைப் பிறப்பிற் பிரியலமென்றேனாக்*

*கண்ணிறை நீர் கொண்டனள்*

*மீண்டும் தலைவன் முயலுகிறான். "பிறந்த நாளெல்லாம் உன்னை இடையீடின்றி நினைத்திருந்தேன்" என்பதைக்குறிக்க, "உள்ளினேன்" என்றான். ஆனால் அதனிலும் நுட்பப்பொருள் காணுகின்றாள். "நினைப்பது ஒருமுறை மறந்தால் தானே" என உட்கொண்டு, "என்னை ஏன் மறந்தீர்" என வருந்திப் புலந்தாள்.*

*உள்ளினே னென்றேன்மற்*

*றென்மறந் தீரேன்னைப்*

*புல்லாள் புலத்தக்க னள்*

*தலைவனுக்கு மூளை கலங்குகிறது. எனவே "நான் செய்த அனைத்தும் பிழை" என்று காலில் விழுந்து இரக்கின்றான். இதுகண்டும் அவள் மனம் இளகவில்லை. "உமது அன்பிற்குரிய பிறபெண்கள் புலந்தவழி நீர் இவ்வாறு தான் பணிவீர்" என்று வெகுள்கின்றாள்.*

*தன்னை யுணர்த்தினுங் காயும் பிறர்க்கு நீர்*

*இந்நீ ராகுதி ரென்று.*

*இந்நிலையில் தலைவன் செய்வதொன்றறியாது அவளை நோக்கி நின்றான். அதுவும் குற்றமாகவே முடிந்தது. "நீர் என் உறுப்புகளை நோக்குகின்றீர். அவற்றது ஒப்புமையால் எவ்வெப்பெண்களை நினைத்தீர். அவர் எல்லோரையும் யான் அறியச்சொல்லுமின்" என்று கேட்கிறாள்.*

*நினைந்திருந்து நோக்கினுங் காயு மனைத்து நீர்*

*யாருள்ளி நோக்கினீரென்று*

இப்புலவி நுணுக்கம் (உள்வீட்டுச்சண்டைகள் - Civil war என்பார்கள் ஊரிலே) எந்நாளும் நிகழ்தற்குரியதாதலின், இதன் சிறப்பினைக் கடைசி அதிகாரத்தில் ஊடல் உவகை என்னும் பெயருடன் பாராட்டுகின்றார் வள்ளுவர்.

ஊடுதல் காமத்திற் கின்ப மதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின்
புலத்தலிற் புத்தேணோ டுண்டோ நிலத்தொடு
நீரியைந் தன்னா ரகத்து

என்னும் குறள்களை நோக்குக.

இத்தகைய புலவி நுணுக்கத்தோடும் ஊடல் உவகையோடும் நானும் உங்களைவிட்டுச் செல்லவேண்டும். நாம் கொழும்பிலிருந்து பேராதனைக்குப் போகும் வழியில், பேர்போன பசியாலை என்னும் இடத்தில் கசுக்கொட்டை வாங்குவதுண்டு. அப்பொழுது கசுக்கொட்டை விற்போர் அதன் சுவையை நாம் அறிய ஒரு கசுக்கொட்டை தருவார்கள். தின்று பாருங்களென்று. சந்தையிற்போய்ப் பலாப்பழத்துண்டு கேட்டாலும் சுளையிடுங்கித் தருவார்கள். சாப்பிட்டுப்பாருங்களென்று. இவர்களைப்போலவே நானும் இன்று திருவள்ளுவரின் இன்பத்துப்பாலிருந்து சில “சாம்பிள்”கள் தந்திருக்கிறேன். அவை சுவைக்குமாயின் இன்பத்துப்பால் முழுவதையும் படித்துச் சுவையுங்கள்.

தினகரன் 1953, ஜுன். 26 வெள்ளிக்கிழமை, ஜுலை 03 வெள்ளிக்கிழமை, ஜுலை 10, வெள்ளிக்கிழமை, ஜுலை 17 வெள்ளிக்கிழமை,

# 8

# பிறர் நலத்துக்குத் தொண்டாற்றிய தியாகமூர்த்தி மகாத்மா காந்தி

## அரசியல் சிறந்த அருளறத்தைப் புகுத்திய அண்ணலின் பெருமை: கண்டிக் காந்திச் சங்கத்தின் ஆதரவில் நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம்.

**எல்லாரும் இன்புற்று இருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்று அறியேன் பராபரமே என்று அந்நாளில் பாடி சென்றார் தாயுமான சுவாமிகள். அவர் பாடிய உண்மையின்படி ஒழுகி, அவ்வழி உலகத்தினைரையும் ஒழுகச் செய்ய முயன்றவர் காந்தியடிகள். அடிமைப் பிணியில் நம்பிக்கை இழந்து முதுகெலும்பு முறிந்திருந்த நாற்பது கோடி இந்திய மக்களை உறக்கத்திலிருந்து தட்டி எழுப்பியவர் காந்தியடிகள்.**

*சூரியன் உதிக்கவே அஞ்சும் படியான பிரித்தானிய ஏகாதிபத்தியத்தை ஆட்டிக் குலுக்கி அதன் ஆதிக்க போக்கை அளித்தொழித்தவர் இம் மகான். பல காலமாக இவ்வுலகில் என்றும் இருந்திராத ஆற்றலை மக்களிடம் உண்டாக்கி விட்டவர் மகாத்மா.*

**மதங்களும் போதனைகளும்**

*பெருமை சான்ற மதங்களும் போதனைகளும் கீழைத் தேசத்திலிருந்து உண்டாகி, உலகெங்கும் பரவின. இப்பெருமை ஆசிய கண்டத்திற்கு உரியது. முன்னர் புத்தர் ஏசுநாதர் போன்ற பெரியோர்கள் தோன்றியது போல, இக்காலத்தில் ஓர் அவதார புருஷர் தோன்றினார் இந்தியாவிலே. அவர்தான் மகாத்மா காந்தி. புத்தரும் ஏசுநாதரும் நல்வழிகளைக் கடைப்பிடித்து ஒழுகிய பொழுது மக்கள் அவர்களை பரிகசித்தனர். ஏசுநாதரைச் சிலுவையில் அறைந்தனர். அவர்களுக்கு பின் தோன்றிய மாட்டின்லூதர் முதலிய பலருக்கும் அநேக இன்னல்களுக்கு உள்ளாகினர். இவர்கள் போல மகாத்மா காந்தியும் புதிய முறைகளை கடைப்பிடித்து ஒழுகிய பொழுது மக்கள் அவரை எதிர்த்தனர். வீட்டில் ஒரு நாள் மாலை வேளையில் தம் வரவை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த மக்கள் முன் வந்து கொண்டிருந்தார். இன்னொரு வினாடியுள் அவர் அரங்கில் வீற்றிருந்து மக்களுக்கு ஒற்றுமையைப் பற்றி பேச போகின்றார். அந்த வேளையில் அவர் மேடையில் ஏறுவதற்குப் படிக்காட்டில் கால் வைக்கும் வேளையில் எவனோ ஒரு தீயவன் மூன்று குண்டுகள் துப்பாக்கியால் சுட்டான் மகாத்மா தரையில் சரிந்தார் துன்பக்கடலில் மூழ்கிற்று உலகம்.*

**மனித குலத்துக்கு அருந்தொண்டு**

*இவ்வாறு ஒரு கொடிய இந்து இளைஞனால் கொல்லப்பட்ட காந்தி அடிகளை மகான் என உலகம் போற்றுகின்றது. மனித சமூகத்திற்கு அருந்தொண்டு புரிபவரே மகான்கள் காந்தியடிகளுடைய கொள்கையை ஆதரிப்போரை எந்த மூளை முடுக்கிலும் காணலாம். உலகின் எந்தப் பகுதியாயினும் அங்கு காந்தி வருகின்றார் என்றால் கண் எட்டிய தூரம் வரை மக்கள் வெள்ளம் பெருகி வரும். வெயிலையும் மழையையும்*

பொருட்படுத்தாது அந்த வருகையை எதிர்பார்த்துக் காத்திருப்பர் இலட்சக்கணக்கான மக்கள். அவர் வந்ததும் மயிர் சிலிர்த்து நிற்பர். அவரது பொன் மொழிகளைக் கேட்டு தமக்குரிய துன்பங்களை மறந்து தாமும் மகிழ்ச்சி கொள்வர். அவரது கவர்ச்சி பொருந்திய புன்முறுவலைக் கண்டு அவருடைய பேச்சைக் கேட்க வெளிநாட்டு அரசாங்க தலைவர் விரைந்து ஓடி வருவர். அவருடைய மண் குடிசையிலே தங்கினால், அது மதிப்பிற்குரியது என மன்னா மன்னர் கொண்டாடினர். இவ்வாறு காந்தியடிகளை படித்தவர் படியாதவர், கிராமிய செயலாளர், பாராளுமன்றத்தினர், இந்தியர் , பிற நாட்டவர் யாவரும் அறிந்து போற்றி வந்தனர்.

**ஒப்புயர்வற்ற குணங்கள்**

தம்முடைய நாடு அந்நியரிடம் அடிமைப்பட்ட நாடு. தன்னாட்சி பெற வேண்டுமென இவர் விரும்பினார். இதற்காக மக்களிடையே ஒப்புயர்வற்ற குணங்கள் பலவற்றை பரப்பினர். அவற்றுள் ஒன்று தியாகம். தனக்குள்ளவை யாவற்றையும் பிறருக்கு மகிழ்ச்சியோடு கொடுத்தாலே தியாகம். காந்தியடிகளின் உள்ளத்தில் தியாகம் ஊற்றெடுத்திருந்தது தென்னாபிரிக்காவிலே அக்காலத்தில் தென்னாபிரிக்காவிலே வெள்ளையருக்கு நச்சுக்காற்று போலத் தோன்றினர் கறுப்பு நிறத்தவர். கறுப்பு இனமும் கடவுள் படைப்பு என அவர்கள் உணரவில்லை வகுப்புச் சீட்டுடன் முதலில் பிரயாணம் செய்வதற்காக சிறையிடப்பட்ட, போது காந்தியடிகள் நிறவேற்றுமையின் கொடுமைகளை எண்ணி எண்ணி உள்ளம் நொந்தார். பிறர் நலத்திற்காக தொண்டாற்ற வேண்டும் என்ற எண்ணம் அவர் உள்ளத்தில் வேரூன்றியது. தியாக மூர்த்தியாக திகழ்ந்தார்.

**புதுவிதமான விடுதலைப் போர்**

இவர் தொடங்கிய விடுதலைப் போர் புதுவிதமானது. ரகசியமாகவோ வெளிப்படையாகவோ, வேற்று நாட்டார் துணைகொண்டோ இராணுவத்தை திரட்டி, பொருட்களை குவித்து இவர் போர் தொடுக்கவில்லை. இவையாவற்றையும் வேண்டாம் என்று கூறியவர் உலக வரலாற்றிலே இவர் ஒருவரே. இவருடைய விடுதலை போர் கத்தியின்றி இரத்தமின்றி பழிக்கு பழி வாங்காது வகுக்கப்பட்ட உயரிய சால்புடைய போர். இவ்வன்பு போரினால் காந்தியடிகள் பலமுறை சிறைப்பட்டார். சிறையில் கல் உடைத்தார். இழிவான செயல்கள் செய்தார். உதை வாங்கினர். என்றாலும் உளம் தளரவில்லை: தன்னை துன்புறுத்தியவர் மீது சீறியெழவில்லை. தென் ஆப்பிரிக்காவில் வெள்ளையர் இந்தியரை பலவிதத்தில் துன்புறுத்திய போது அவர்களை இழித்து கூறவோ, வையவோ, அடித்துக் கொல்லவோ இவர் தமது நாட்டவரை ஏவவில்லை. துன்பத்தை அன்போடு பொறுக்கும் அருள் வழியில் நிறுவினர் உண்ணா நோன்பு மேற்கொள்வதனாலும் அகிம்சா தர்மத்தை உலகில் நிலை பெறச் செய்ய முயற்சி செய்தார். அரசியலிலே சிறந்த அருள் அறத்தை விரும்பிய அகிம்சா தர்மத்தை நுளைத்த பெருமை இவருக்கே உரியது.

அடுத்தது சத்யாகிரகம் சத்தியத்தை ஆக்கிரமித்து நிற்றல் அதாவது உண்மையை கடைப்பிடித்து நிற்றல் சத்யாகிரகம் எனப்படும். உண்மை அஞ்சாமை அன்பு அருள் ஆகியவற்றை உள்ளடக்கியதே சத்தியாகிரகம். தென் ஆப்பிரிக்காவில் காந்தியடிகள் தொடங்கிய பொறுமைப்போரே பின்பு சத்யாக்கிரகம் என வழங்கியது. உண்மையைக் கடைபிடிப்பவனின் பொறுமையையும் அன்பும் கெட்ட செயல்களை செய்பவோனின்

*நோய்களையும் மருந்தாக்கும். சத்யா கிரகம் என்னும் மெய்நெறி 1909 ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவில் முளை கொண்டது. அங்கிருந்து உலகம் முழுவதும் பரவியது. 1919 ஆம் ஆண்டு சித்திரைத் திங்கள் 6ம் நாள் இந்தியாவில் சத்யாகிரக நாள் கொண்டாடப்பட்டது.*

**பல கேடுகளை அகற்றினார்**

*இந்தியாவிலேயே வெள்ளையராட்சி தொலைந்து மக்களாட்சி நிலவ வேண்டும் என்பதுடன் காந்தியடிகள் அமையவில்லை. வெள்ளையர் ஆட்சிக்கு முன் அரசு செலுத்திய அரசர் அனுஷ்டித்த முறைகளால் சமூக அமைப்பினால் பழக்கவழக்கங்களால் மத அமைப்பினால் ஏற்பட்ட பல கேடுகளையும் களைந்து எறிய வேண்டும் என அவர் விரும்பினார். எனவே இந்து முஸ்லிம் ஒற்றுமை, தொழில்களின் விருத்தி, கல்வியின் பரப்பு சாதி வேற்றுமை ஒழிப்பு, தீண்டாமை விலக்கு, வறுமை நீக்கம் முதலியவற்றிற்காக அவர் பெரிதும் பாடுபட்டார். ஒதுக்கப்பட்ட சாதியினரின் நிலைமை கண்டு அவர் உள்ளம் துடித்தார் சமூகத்தில் அவர்களை தாழ்த்தி வைத்திருப்பது பற்றி கண்ணீர் வடித்தார். அவர்களை அடிமைப்படுத்துதல். இந்து மதத்திற்கு மானக்கேடு, மதத்திற்கு விரோதம், பெரிய குற்றம் என்பதே அவருடைய கொள்கை. எனவே ஒடுக்கப்பட்ட சிந்தனையினரை உயர்த்த அவர் பெரிதும் முயன்றார். 1921 ஆம் ஆண்டு தீண்டாமை மகாநாடு நடந்தது அதில் காந்தியடிகளே தலைமை வகித்து மிகவும் இறங்கி உற்சாகத்துடன் பேசினர். இவ்வாறு இந்திய சமூகத்தில் எறிப்போய் ஊற்றிப் போயிருந்த கேடுகளை நீக்க பெரிதும் முயன்றார் மகாத்மா காந்தி.*

**ஆச்சரியமான உயர்நிலை**

*காந்தி பிறந்த குலமும் குடும்பமும் ஆண்டவனின் அருள் பெறவில்லை. கோயில் அதிகார பலம் அடையவில்லை; அரசாள்வோரின் ஆதரவை பெறவில்லை; அவர் பிறந்த பொழுது அற்புத ஆற்றல்களுடன் பிறந்திருக்கவில்லை. எனவே அதிசயப் பிறவியல்லாத மகாத்மா எம் போன்ற ஒருவராகவே பிறந்து வளர்ந்தார். ஆனால் நாம் கண்டு அதிசயிக்கத்தக்க உயர்நிலை பெற்றார்.*

*அவர் பிறந்த பொழுது நாடு அரசு உரிமையை இழந்திருந்தது. அவர் மறைந்த போது அரசுரிமையைப் பெற்று விளங்கியது. பிறருடைய சுரண்டல்களுக்குக் குறியாகிச் சீர் குலைந்து இருந்த நாடு இன்று தன்னாட்சி பெற்று உலகின் பல பாகங்களிலும் தூ துவரையும் பிரதிநிதிகளையும் கொண்டு இயங்குகின்றது. உலக மன்றத்தில் இடம் கிடையாத இந்தியா இன்று உலகம் மன்றத்தில் முக்கிய இடம் வகித்து புகழுடன் செல்வாக்கு பெற்றிருக்கின்றது.*

*இத்தகைய அரியபணி செய்த பெரியாரின் 85 வது பிறந்த நாளை அக்டோபர் 2ந் திகதி, நாம் இன்று கொண்டாடுகின்றோம். மக்கள் யாவரும் தத்தம் வாழ்நாளில் பிறருக்கு பணி செய்வதே மறைந்து போன காந்தியடிகளுக்கு நாம் காட்டும் மரியாதையாகும். அனைவரும் ஒன்றுபட்டு நின்று நாட்டுப் பணி புரிவதையே அவர் விரும்புவார். இத்தகைய தொண்டினை நாம் ஆற்றினால் தான் உலகம் எம்மை பார்த்துக் காந்தியடிகள் வாழ்ந்த நாட்டு மக்கள் இவர்கள்தான் என்று கூறுவர்.*

தினகரன் 1953 ஒக்டோபர் 9 வெள்ளிக்கிழமை

9

# வாழ்க்கையின் சகல துறைகளிலும் வழிகாட்டிய வள்ளல் நபி

## சமத்துவ, சகோதரத்துவங்கள் அமைந்த சாந்தி மதமே இஸ்லாம்
## தொழுகையின் தாற்பரியங்கள்

**கடந்த வெள்ளிக்கிழமை அன்று கல்கினையில் நடைபெற்ற நபிகள் நாயகம் ( ஸல்) பிறந்த தினக் கொண்டாட்டத்தில் நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம்**

*நபிகள் நாயகம் ஒரு சாதாரண மனிதர் தான். ஆனால் உலகில் உள்ள மனித சமூகத்தின் மூன்றில் ஒரு மக்கள் தொகையால் பதின்மூன்று நூற்றாண்டுகளாக மகான் என கருதப்பட்டு வந்தவர் இவரே.*

*ஏனைய தீர்க்கதரிசிகளிடத்துச் சமய தொடர்பான அதிசயங்களை காண்கின்றோம். ஆனால் நபிபெருமானாரை ஒரு சிறு பிள்ளையாகவும், திக்கற்ற இளைஞராகவும், தொழிலாளியாகவும், வியாபாரியாகவும், பிரபுவாகவும், நண்பராகவும், அரசராகவும், வீரராகவும் காண்கின்றோம். வேறு எவரும் இவ்வண்ணம் எல்லாத் துறையிலும் அனுபவம் பெற்றுப் பின்னர் உபதேசிக்க முன் வரவில்லை. அவர் ஒரு மனிதராகவும் நபியாகவும் இருக்கின்றார். உண்மையிலே அவர் ஒரு புதிய சமயத்தை உபதேசிக்கவில்லை அவர் தம்முடைய முன்னோர் கூறிப் போனதையே உபதேசித்தார்.*

**வரலாற்று உண்மைகள்**

*மேலும் நபிபெருமானின் வரலாற்றுத் தொடர்பான உண்மைகள் சந்தேகிக்கப்படாமலும் அவருடைய நடை உடை பாவனைகள் யாவரும் போற்றக்கூடியனவாகவுமே இருக்கின்றன. கிறிஸ்தவ நாடுகளுக்கு ஒரு நடுக்கத்தை தரக்கூடியவராய் இருந்த இவரது சரித்திரத் தொடர்பான விஷயங்களில் சந்தேகம் ஒன்றுமில்லை.*

*பேராசிரியர் பாஸ்வொர்த்சிமிது என்பவர் “ இஸ்லாத்தில் எல்லாம் வேறு விதமாய் காணப்படுகின்றன. பொய்க்கதைகளும் உண்மைக்கு மாறானவைகளும் இயற்கைக்கு விரோதமானவையும் அங்கு கிடையா: குர்ஆனில் கூட்டாமாலும் குறைக்காமலும் நபி கூறிய மொழிகள் அப்படியே காணப்படுகின்றன” என்று கூறியுள்ளார்.*

*இஸ்லாத்தின் சிறந்த உறுப்புக்கள் எவை என்பதை அடுத்ததாக நோக்குவோம். இம் மார்க்கம் மக்களுக்கு அவசியமான தேவைகளுக்கு ஏற்பகவும் உண்மையோடு மாறுபடாத கொள்கைகளை உடையதாகவும் இருக்கின்றது. இஸ்லாத்தில் உயர்ந்த எண்ணங்களும் அறிவிற்குரிய அனுபவமான முறைகளும் சேர்ந்திருக்கின்றன. இது மானிட இயற்கையை அலட்சியம் செய்து விடவில்லை. உண்மையானதும் சரியானதுமான வழிகளை விட்டு அப்பால் விலகிச் செல்லவும் இல்லை.*

**யாபேரும் சகோதரர்கள்**

*இஸ்லாமிய சமயத்தின்படி எல்லா மனித கோடிகளும் ஒரு சகோதர குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். மேன் மக்கள் என்றும், கீழ் மக்கள் என்றும், அரசர் என்றும், அடிமை என்றும், செல்வன் என்றும், ஏழை என்றும், உயர்ந்த சாதி என்றும், தாழ்ந்த சாதி என்றும் ஒரு விதமான வேறுபாடும் போற்றப்படுவதில்லை. எல்லா மனிதரும் ஆண்டவனுடைய படைப்பு என்று கருதப்படுவதால் இஸ்லாத்தில் தீண்டாமை என்ற கொடிய வழக்கம் அடியோடு விலக்கப்பட்டு இருக்கின்றது. மக்கள் எத்தொழிலைச் செய்து வந்தபோதும் எப்படிப்பட்ட நிலையில் இருந்து வந்த போதிலும் இம்மார்க்கத்தில் குலப்பெருமை என்பதும், சாதி இறுமாப்பு என்பது ஒரு சிறிதும் போற்றப்படுவதில்லை. அவரவர் நன்மை தீமைக்குத் தக்கவாறு ஆண்டவனின் சன்மானமும் அருளும் கிடைக்குமேயல்லாமல் ஒருவருடைய பிறப்பினாலும் தொழிலினாலும் யாதொரு விதமான மேன்மை தாழ்மைகளும் உண்டாகி விடுவதில்லை என இம்மதம் இயம்புகின்றது.*

*ஒவ்வொரு முஸ்லிமும் தன்னிலேயே ஒரு கோயிலாக இருக்கிறான். ஒவ்வொருவரும் தம்முடைய மதத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்ய உரிமை பெற்றவராக இருக்கின்றார். மக்களுக்கும் ஆண்டவனுக்கும் இடையில் நடுவர்கள் எவரும் இல்லை. மத விஷயத்தில் ஞானமடைந்திருக்கும் எவரும் எப்படிப்பட்ட லௌகிக வைதிக காரியங்களையும் செய்யத் தகுதி உள்ளவராக இருந்தனர். இவ்விடத்தில் இஸ்லாத்தின் சிறப்பியல்பு ஒன்றைக் கவனித்தல் வேண்டும். அது யாதெனில், ஆண்டவனுக்கும் அடியார்களுக்கும் இடையில் குருமாரோ மற்றவரோ வந்து தூது செல்லத் தேவையில்லை. ஏனெனில் ஆண்டவனே ஒவ்வொருவருடைய கூக்குரலையும் கேட்டு அவருக்குரிய மன்னிப்பைத் தன் விருப்பம் போல அருளுகின்றார்.*

**தெய்வக் கொள்கை**

*இத்தகைய இஸ்லாம் மார்க்கத்தை இவ்வுலகில் இறுதியாக நிலை நிறுத்தியவர் நபி பெருமானாவர். இப்பெரு நபியை தான் இம் மதத்தினர் பின்பற்றுகின்றனர். இறுதி நபியாகிய இவரே இவ்வுலகத்தில் ஒரு தெய்வக் கொள்கையை இனி எக்காலத்திலும் எவராலும் அசைக்க முடியாதபடி அவ்வளவு அழுத்தமாய் அமைத்திருக்கிறார். நபி நாயகம் ஆண்டவனின் அடியாரே ஒளிய தேவ அவதார புருஷன் அல்ல. ஆண்டவனுடைய ஆணையைப் பெற்ற அவருடைய தூதராகவே நபிகள் திலகம் விளங்குகிறார். இத்தகைய நபியவர்களைக் கொண்ட இஸ்லாம் தூய்மையான கடவுள் உண்மைகளை ஒன்று சேர்த்து எல்லா காலத்துக்கும், எல்லா தேசத்துக்கும் எல்லா சாதியினருக்கும் பொருத்தமான ஒரு மதமாக ஆண்டவனால் அமைக்கப்பட்டிருக்கிறது.*

*இஸ்லாம் என்ற பெயருக்கு பல காரணம் கூறுவர். இம் மார்க்கம் இன்பமயமான சாந்தியை மிகுதியும் போதித்து வருவதால் இதற்கு இஸ்லாம் என பெயர் இடப்பட்டிருக்கிறது. இஸ்லாத்தில் அதிகமாக காணப்படுவது சாந்தியே. ஆண்டவன் இடத்திலிருந்து உண்டாகும் சாந்தியின் காரணமாக அவனுடைய படைப்புகளிடத்தில் எவன் ஒருவன் சாந்தியுடன் நடந்து கொள்கின்றானோ அவனே இஸ்லாத்துக்கு உரியவன். அவனுடைய மார்க்கம் தான் இஸ்லாம் எனப்படும். மேலும் முஸ்லிம்கள் ஒருவரை ஒருவர் சந்திக்கும் போது முதலில் கூற வேண்டிய வணக்கமும் சலாம் (சாந்தி - சமாதானம்) என்பதுதான்.*

சர்வலோகத்தில் முஸ்லிம்கள் ஒருவரோடு ஒருவர் முகம் செய்து கொள்ளும் போதும் சலாம் என்றும் சொல்லையே அதிகம் வழங்குவர். இஸ்லாத்தின் முறைப்படி ஒழுகுபர் இறுதியில் எழுதக்கூடிய நிலைக்கு " சாந்தி ஆச்சிரமம்" எனும் பெயர் என்று ஆண்டவனே கூறுகின்றார். ஆகவே சாந்தி என்பது இஸ்லாத்துக்கு ஒரு சிறந்த குணமாய் இருக்கின்றது: இதனால்தான் இம்மார்க்கத்தை "சாந்தி மார்க்கம்" என சிறப்பித்துக் கூறுவர்.

இஸ்லாத்தின் அனுட்டானக் கொள்கைகள் ஐந்தினுள் மூன்றன் சிறப்பினை குறிப்பிட விரும்புகின்றேன். அவற்றுள் ஒன்று தொழுகை. இதைப் பற்றி பேச முன் இம்மார்க்கத்தில் உள்ளவர் பொதுவாக எவ்வாறு தூய்மையுடன் இருக்கின்றார்கள் என்பதை கவனிப்போம். தூய உடம்பே தூய ஆத்மாவுக்கு இருப்பிடமாக இருக்கக்கூடியதாகலின், புறத்தூய்மையாகிய உடல் தூய்மையும் உடைத்தூய்மையும் மனத்தூய்மைக்கும் அதன் மூலம் ஆத்மா தூய்மைக்கும் இன்றியமையாத அடிப்படைகளாகக் காணப்படுகின்றன. இஸ்லாம் மதத்தில் புறத்தூய்மையைப் பற்றிய எல்லா நுட்பங்களும் சிறிதும் விடப்படாமல் எடுத்து இயம்புகின்றன. சுருங்கக் கூறின் புறத்தூய்மை இஸ்லாத்தில் கூறப்பட்டிருப்பது போல அவ்வளவு விரிவாக வேறு எங்கும் கூறப்படவில்லை. இன்னொரு சிறப்புத் தொழுகைக்கு அழைக்கும் விதத்தில் அமைந்திருக்கின்றது. இவ்வுலகில் உள்ள மற்றும் சமயங்களுக்கு உரியவர் மேளம் முதலிய வாத்தியங்களை முழங்குவதாலும், சங்கை தொனிப்பதாலும், மணியை அடிப்பதாலும் தத்தம் பூசைக் காலத்தை தெரியப்படுத்துகின்றனர். ஆனால் இஸ்லாத்தில் இருப்பதை போல ஆண்டவனுடைய உண்மையையும் தொழுகையின் பெருமையை வேறொருவரும் கூறிக் கூப்பிடுவதில்லை. இப்படிப்பட்ட மகிமையான அழைப்பு வேறு எங்கும் காணப்படுவதில்லை.

"இவ் வேதத்தில், உங்களுக்காக வெளியாக்கப்பட்டிருப்பதை ஓதி தொழுகையை நிலை நிறுத்துங்கள், உறுதியாகவே தொழுகையானது கெட்ட செயல்களில் இருந்தும் தீமைகளில் இருந்தும் ஒருவரை அப்பால் விலக்கி வைக்கின்றது. நிச்சயமாகவே அல்லாவை வணங்குவது மிக மேலானது" என்று திருவேதம் தொழுகையின் பெருமையை விளக்குகின்றது. ஆகவே இஸ்லாத்தில் தொழுகை என்பது மனிதனுடைய ஆத்மார்த்தத்தை முன்னுக்குக் கொண்டு வருவதற்காகவே ஆண்டவனால் அமைக்கப்பட்டிருக்கிறது. மனிதரின் உள்ளத்தில் தோன்றும் வழிபாட்டினை வெளிப்படுத்துவதே தொழுகையின் சிறப்பான நோக்கம். மனிதனுடைய ஆத்மாவை பக்குவப்படுத்துவதால் எத்துணை உன்னத நிலையை அடைய முடியுமோ அத்துணை உன்னதமான மேன்மையைப் பெறுவதற்கு வேண்டிய மனத்தூய்மையை அடைவதற்கு இத்தொழுகையானது மிகவும் துணை புரிகின்றது.

**இறைவனுடன் தொடர்பு**

இஸ்லாம் மதத்தினர் தவிர ஏனைய மதத்தினர் தேவபூசைக்காக பொதுவான ஒரு நாளைச் சிறப்பாக ஏற்படுத்தி, அந்நாளின் வேறு வேலையை ஒதுக்கி வைத்துத் தெய்வ வணக்கத்தை மட்டும் செய்ய வேண்டும் என்று கூறும் போது, இஸ்லாம் மட்டும் மனிதனுடைய நாளாந்த அலுவல்களுக்கு இடையில் ஐந்து கால பிரார்த்தனைகளைப் புகுத்தி தெய்வ வணக்கத்திற்கெனச் ஒரு புதிய முறையை விளைவித்திருக்கின்றது. இஸ்லாத்தில் தெய்வ வணக்கத்திற்கெனச் சிறப்பான நாள் ஒன்றும் ஒதுக்கி வைக்கப்படுவதில்லை. இதற்குக் காரணம் முஸ்லிம்கள் தங்களுடைய தினப்படியான வேலைகளில் அதிக கவனத்தைச்

செலுத்தியிருக்கும் வேளையிலும் தமது லௌகீக காரியங்களினின்றும் தமது மனதை திரும்பிக் கொண்டு, உடனே தெய்வத்தினிடத்தில் தங்கள் ஞாபகத்தைச் செலுத்த பழகிக் கொள்ள வேண்டும் என்பதுதான். இக்காரணத்தினால் தான் இஸ்லாத்தில் சந்தியாசம் என்பது கிடையாது. உலக காரியங்களுக்கிடையே ஒருவர் செய்து வரும் வைதிக முயற்சியினாலேயே இறைவனுடன் தொடர்பு கொள்வது இஸ்லாமியத்தில் எளிதாக இருக்கும்போது வாழ்வு முழுவதும் சந்தியாசத்தை ஏன் ஏற்றுக்கொள்ள வேண்டும் ?

**நோன்பின் தனிச்சிறப்பு**

நோன்பு நோற்பது என்பது இவ்வுலகில் ஒவ்வொரு மதத்திலும் ஒரு விதியாக நியமிக்கப்பட்டிருக்கிறது. அதுபோல இஸ்லாத்திலும் இது ஒரு முக்கிய கடமையாக இருந்துவருகின்றது. முஸ்லிம்கள் ரமலான் மாதத்தில் நோற்கும் முப்பது நாள் நோன்பிற்கும் மற்ற மதங்களில் காணப்படும் நோன்பிற்கும் ஒரு முக்கியமான வேற்றுமை உண்டு. மற்றய மதங்களில் துக்க காலங்களிலும், துயர காலங்களிலும் கோபம் கொண்ட தெய்வத்தைச் சாந்தி செய்யும் பொருட்டும், இறந்து போனவரின் ஆவிகளுக்கு திருப்தி செய்யும் பொருட்டும். பிராயச்சித்தமாக அம் மதவாதிகள் நோன்பு நோற்றல் வழக்கம். ஆனால் இஸ்லாம் மார்க்கத்திலோ அவரவரின் சன்மார்க்க மேன்மைக்காகவும் ஆத்ம ஞான உன்னதத்துக்குமாகவே நோன்பு நியமிக்கப்பட்டிருக்கின்றது. “ நீங்கள் உங்களை தீமையில் நின்றும் காத்துக்கொள்ளும் பொருட்டு - நோன்பானது உங்களுக்கு விதிக்கப்பட்டிருக்கிறது” என திருமறை கூறுகின்றது.

“ஜகாத்தை கொடுங்கள்” என்னும் விஷயம் அடிக்கடி குர்ஆனில் வற்புறுத்தப்படுகின்றது. எம்முடைய உடல் பொருள் ஆவி ஆகிய எல்லாவற்றையும் அல்லாஹ்வின் வழியில் அவனுடைய படைப் பொருள்களின் நன்மையின் பொருட்டுச் செலவு செய்தல் என்பதுதான் இதன் முழுக் கருத்தாகும். தர்மம் கட்டாயம் என்பதும் அதை இன்ன இன்ன விதமாகத்தான் செய்ய வேண்டும் என்பதும், இஸ்லாத்தில் தான் தெற்றென விளக்கப்பட்டுள்ளன.

தினகரன் 1953 நவம்பர் 24 செவ்வாய்க்கிழமை

## 10

# "நீயும் வாழ், ஏனையோர் வாழவும் வழிவிடு"

**"சிலந்திவலைபோற் சிக்கலான பல்வேறு பிரச்சினைகளையுடைய மக்கட் கூட்டத்தின் மத்தியிலே மாணவர்களாகிய நீங்கள் வருங்காலப் பிரசைகளாய் அதுவும் நற்பிரஜைகளாய் வாழவேண்டுமெனில், நீயும் வாழ் மற்றையோரையும் வாழவிடு, உன் உரிமைகளைக் காப்பாற்ற நீ எவ்வளவு தூரம் முயற்சிக்கின்றாயோ அதே போல் மற்றையோரின் உரிமைகளையும் காப்பாற்ற முயற்சி செய் என்ற போதனையைக் கைக்கொள்ள வேண்டும்"**

*அக்குறணைக் கனிஷ்ட பாடசாலையில், தலைமை ஆசிரியர் ஜனாப் ஓ.எஸ்.ஏ. அஹீஷின தலைமையில் நிகழ்ந்த கூட்டமொன்றில் பேசும்போது பேராதனைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் கலாநிதி சு.வித்தியானந்தன் மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து பேசியதாவது: பெறற்கரிய மானிடப் பிறவியெய்திய மனிதன் உலகில் இன்புற்றிருக்க வேண்டுமாயின் -சான்றோனாகத் திகழ வேண்டுமாயின் ஓர் ஆங்கிலப் பெரியார் கூறியிருப்பது போல மற்றையோர் மனம் நோகாது தம்மைப்போற் பிறரையும் கருதி வாழ வேண்டும். துன்பம் துயரிலிருந்து, பசி பட்டினியிலிருந்து மக்களைக் காக்க வேண்டும். இதுவே சான்றாண்மையாகும். நன்மை யெது, தீமையெது என்பதை யறிந்து நடப்பதே பகுத்தறிவு. கடவுளால் மனிதனுக்களிக்கப்பட்ட அதிவிசேட பொக்கிஷம் பகுதித்தறிவேயாகும். உனக்கு ஒருவன் அநீதி இழைப்பதை நீ எவ்வளவு தூரம் வெறுக்கின்றாயோ அதேபோல் நீ மற்றையோருக்குத் துன்பமிழைப்பதையும் வெறுக்கவேண்டும். ஒவ்வொரு தேசத்தாருக்கு ஒவ்வொரு சமயத்தாருக்கு ஒவ்வொரு செயல் அழிவானதாயிருக்கின்றது. தமிழனுக்கு இழிவு இருத்தல் அதனிலும் இழிவு ஈயேன் எனல். எனவேதான் ஈகையின் சிறப்பை இஸ்லாம் தன் ஐம்பெங் கடமைகளுள் ஒன்றாய்க் கருதி வர்ணிக்கிறது.*

*ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாய் வாழ்ந்துவந்த (தமிழர்களாகிய) நாம் நம் நாட்டில் நாமும் நம் மொழியும் மானத்துடன் வாழவேண்டும் எனக் கோரின் ஆட்சி மன்றம் அதனை மறுக்கின்றது. வெறுக்கின்றது. அப்பிரஜைகளை இப்படியான இன்றைய இன்னல்கட்கிடையே நாம் நற்பிரஜைகளாய் வாழ்ந்து காட்டினால் இது உலகிற்கே ஒரு எடுத்தக்காட்டாயிருக்குமென்பதில் ஐயமில்லை".*

தினகரன் 1957, ஜுலை. 29 திங்கட்கிழமை

## 11

# நாட்டு மாந்தர் அனைவரையும் வாழ்விக்க வரும் நன்னாள்!

**எல்லோருமின்புற்றிக்க நினைப்பதுவே யல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே. என்ற உள்ளத்தின் உணர்வே உலகிற்கொண்டாடப்படும் விழாக்களின் அடிப்படை.**

*உலகெங்கணும் வாழ்கின்ற மக்கள் நாம் என்றென்றும் இன்பத்திலே திளைக்க வேண்டுமென்று எண்ணுவதோடு நில்லாது, வாழ்விற் சில நாளாவது அனைவரும் ஒருசேர இன்புற்றுத் திளைக்க வேண்டுமென்று எண்ணுவதே இவ்வுணர்வாகும்.*

**நாடுதோறும் பல விழாக்கள்**

*சமயச்சார்புபற்றி நடக்கும் விழாக்கள், சமூகத்தொடர்பாக நடைபெறும் விழாக்கள், பருவமும் நாளும்பற்றிக் கொண்டாடப்படும் நாட்கள், பாரெல்லாம் சிறக்கவேண்டி ஆற்றும் வழிபாட்டு விழாக்கள் என்று பல விழாக்கள் நாடுதோறும் ஒவ்வொரு வகையில் நடைபெற்று வருகின்றன. இவை தனி மனிதனின் உடைமைகளல்ல. அரசருக்கேயுரிய பிறந்த நாள் விழா, நீராட்டு விழாபோன்றவை கூட அனைவரும் சேர்ந்து சிறப்புச் செய்யும் விழாக்களாக அமைந்துள்ளன. எனவே விழாக்களின் கருத்து, மனிதன் தன்னளவில் உண்டு உடுத்து உல்லாசமாக வாழ்க்கை நடத்துவதைக் குறிப்பதல்ல; ஒன்று சேர்ந்து வாழும் மனித சமுதாயத்தை இவ்விழாக்கள் அணைத்துச் செல்கின்றன.*

*விழா என்பது நாட்டு மாந்தர் அனைவரையும் வாழ்விக்க வரும் நல்ல நாளேயாம். மக்களிடையே எத்தகைய வேறுபாடு இருந்தபோதும் அவ்வேறுபாடுகள் விழாநாட்களில் நீக்கப்படுகின்றன. சாதி, சமயம், செல்வம், நிறம் போன்ற எந்த விதத்திலும் அன்று வேறுபாட்டினைக் காட்ட இயலாது அந்நாளில் ஒருவன் வறுமைப் பிணியாற் பரிதவிக்கக்கூடாது; நோயாளி என்று ஒருவரும் மருந்து நாடிச் செல்லக்கூடாது. இதுவே விழாவின் அடிப்படை.*

**தீபாவளியின் தனிச் சிறப்பு**

*இவ்வாறு நாட்டு மக்கள் யாதொரு வேறுபாடுமின்றி, அனைவரும் ஒன்றிக் கலந்து கொண்டாடும் விழாக்களுள் ஒன்று தீபாவளியாகும். இதன் நேர்ப்பொருள் 'தீபங்களின் வரிசை'என்பது. இவ்விழா ஒவ்வோரிடத்திலும் ஒவ்வொரு விதமாகக் கொண்டாடப்படும். இது தோன்றியதற்குக் காரணமாக ஒவ்வோரிடத்திலும் வேறுவேறான கதைகளைச் சொல்லுவர். இவை எவ்வாறாயினும், தீபாவளி கொண்டாடப்படும் வகையினை யாவரும் அறிவர். ஐப்பசித் திங்கள் அமாவாசைக்கு முதல் நாள், நரக சதுர்த்தசியன்றைக்கு விடியற்காலையில், ஆண் பெண் குழந்தை கிழவர் எல்லோரும் எண்ணெய் தேய்த்து நீராடிப் புதுவேட்டியும், புதுச்சேலையும் உடுத்துக்கொள்வர். அதன்மேல், சீனவெடி போன்ற வாணங்களை விட்டு பகலில் விருந்துண்டு, பண்டிகை கொண்டாடுவர். புதிதாக வந்த மாப்பிள்ளையை அழைத்து மாமனாரகத்தில் இப்பண்டிகையைப் பலர் கொண்டாடுவர். மனைவி கணவனுடன் இருப்பாளாகில் அவனை எவ்விதமும்*

*தான் பிறந்த அகத்திற்குக் கொண்டுவரவேண்டியது அவளுடைய கடமையாகும். வடநாட்டிற் சில சமூகத்தினர் இந்நாளிலேயே தம் கணக்குப் பொத்தகங்களைப் பூசித்துப் புதுக்கணக்குத் தொடங்குவர். எந்த வில்லங்கம் ஏற்பட்டபோதும் இந்தப் பண்டிகையைக் கொண்டாடியே தீருவர்.*

**பண்டிகைக்கு விளக்கங்கள்**

*சைவர், வைணவர், சமணர் ஆகியோர் இப்பண்டிகையின் தோற்றத்திற்குப் பல விதமாகக் காரணங்கூறுவர். முதலிற் சைவர் கொடுக்கும் விளக்கத்தைக் கவனிப்போம். இப்பண்டிகையுடன் தொடர்புடையவன் நரகாசுரன் என்பவன். இவன் பௌமன் (பூமியின் புதல்வன் என்பது இதன் பொருள்) என்ற மறுபெயர் கொண்டவன். இந்த அசுரன் பிராக் ஜோதிஷபுரம் என்னும் பட்டணத்தைத் தனது பிரதானமான நகராய்க்கொண்டு மூவுலகிலும் தனக்கு நிகர் எவருமிலர் என்று தன் விருப்பப்படி கொடுமைகள் செய்து வந்தான். இவ்வசுரனது கொடூரத்தைப் பொறுக்கமாட்டாத தேவர் முதலானோர் சிவனிடம் முறையிட, சிவனின் ஆணைப்படி வேலாயுதம் தரித்த அவர் குமரர் சென்று அவ்வசுரனைக் கொன்றார். இதற்கு அறிகுறியாய் அவர் வெற்றிபெற்ற அந்நாளை ஒரு விழாவாகக் கொண்டாவது வழக்கம். இது சைவரது சித்தாந்தத்தைப் பின்பற்றியது.*

*வைணவரது கோட்பாட்டின்படி நரகாசுரனுக்குப் பக்தத்தன் என்ற மகன் ஒருவன் இருந்தான். இந்திரபதவி அடையவேண்டுமென்ற பேராசை மிகுந்தமைபற்றி அவன் தகப்பனான நரகாசுரன் தேவர்களுக்குப் பல இன்னல்களை இழைத்தான். தேவர்கள் கிருஷ்ணபகவானைத் தோத்திரம் செய்ய, அவர் தம் தேவியான சத்தியபாமையின் உதவிகொண்டு நரகாசுரனை வென்றார். இந்நிகழ்ச்சியைக் கொண்டாடுவதற்கே இவ்விழா ஏற்பட்டதென இவர்கள் கூறுவர்.*

*சமணர், தீபாவளியை நான்கு நாட்களாக் கொண்டாடுவர். சதுர்த்தசியின் முதல் நாளில் அவர்கள் தங்கள் வீட்டு நகைகளை எடுத்துத் துடைத்து, மெருகிட்டு இலட்சுமி பூசை செய்வர். இரண்டாவது நாளைக் காளி சதுர்த்தசி என்பர். அன்று அவர்கள் நாற்சந்தியிலே வட்டமிட்டுப் பூதகணங்களை வழிபடுவர் . மூன்றாவது நாளாகிய அமாவாசையே அவர்களுக்கு முக்கியமான நாள். அன்று தான் மகாவீரர் மோட்சம் அடைந்தார். கடைசித் தீர்த்தங்கரரான வர்த்தமான மகாவீரர் பாவாபுரி நகரிலே அவ்வூர் அரசன் அரண்மனையிலே தங்கி மக்களுக்கு அறவுரைசெய்தார். சொற்பொழிவு இரவு முழுதும் நடைபெற்று விடியற்காலையில் முடிவடைந்தது. அதன்மேல், வர்த்தமான மகாவீரர் தான் அமர்ந்திருந்த இருக்கையிலிருந்தே வீடுபேறடைந்தார். இதைக்கண்ட அரசன் உலகிற்கு ஞானவொளியாகத் திகழ்ந்த மகாவீரரை மக்கள் நினைவுகூர்ந்து வழிபடும் பொருட்டு, அவர் வீடுபெற்ற நாளில் இல்லந்தோறும் விளக்குகளை ஏற்றிவைத்து விழாக் கொண்டாடும்படி ஏற்பாடு செய்தான். அது முதல் இவ்வீரர் தீபாவலி (தீபம் - விளக்கு, ஆவலி- வரிசை) என்னும் பெயராற் கொண்டாடப்பட்டதென்பர்.*

**வேற்றுமையில் ஒற்றுமை**

*இவ்வாறு பலராலும் பலவித வேறுபாடுகளுடன் தீபாவளி கொண்டாடப்பட்ட போதும், வேற்றுமைகளுக்கிடையே ஒற்றுமையையும் காண்கின்றோம். தீபாவளியின் பெயரால் மக்கள் யாவரும் ஒன்றுகூடி மகிழ்கின்றார்கள் அன்று என்றுமில்லாத மகிழ்ச்சி சமூகத்திலே நிலவுகின்றது. உலகிலுள்ள இருள் அகன்று மீட்சிக்கு வழிகோலப்பட்டதையே*

இவ்விழா குறிக்கின்றது. எம்மிடையேயுள்ள தீய உணர்ச்சிகளை அகற்றி, ஆத்ம ஈடேற்றத்திற்கு வழிதேட வேண்டுமென்பதையே இவ்விழா எடுத்தக் காட்டுகின்றது. ஒவ்வொரு மனிதரிடையேயும் நரகாசுரன் இருப்பதை நினைவுறுத்துகின்றது இவ்விழா. நம்மிடம் மலிந்துள்ள தீய உணர்ச்சியே இஃது. நரகாசுரனைத் திருமால் கொன்றதுபோல நாமும் தீய உணர்ச்சிகளை நேர்மையான வழியிலே தூய்மையான வாழ்க்கை நடத்துவதன் மூலம் நீக்கிக் கொள்ளலாம். அத்தகைய வாழ்க்கையிலே அன்பு மிக்க இடம் பெற்றுள்ளது. அன்பே தூய்மையையும் அளிக்கின்றது. தன்னலம் உள்ளத்தின் மாசு. அருளே உள்ளத்தின் தூய்மை. தன்னலம் எத்தகைய கேடுகளை விளைவிக்குமென்பதை இப்பண்டிகை குறிப்பால் விளக்குகின்றது. உள்ளத்திற்பொறாமை இல்லாதவாறு வஞ்சம் எழாதவாறு, பகை தோன்றாதவாறு ஒவ்வொன்றாகக் காத்துக்கொள்வதால் உள்ளத் தூய்மை வளரும். இவற்றைவிடச் சிறந்தது தன்னலத்தை ஒரேயடியாக அகற்றவல்ல அருள்; தொடர்பில்லாதவரிடத்தும் செலுத்தும் அன்பு.

**தூய்மையான வாழ்க்கை**

நம் வாழ்க்கையைப் பற்றி எண்ணும்போதெல்லாம் பிறர் வாழ்க்கைக்கு இடையூறு இல்லாத வகையிலே எண்ணவேண்டும். நம் வாழ்க்கையை நடத்தும்போது பிறர் நன்மையைக் கருத்திற்கொண்டே நடத்தவேண்டும்; அல்லது தீங்கே ஏற்படும். இதனைப் பண்டிகை எமக்குக் குறிப்பால் உணர்த்துகின்றது. சமுதாயத்தோடு தொடர்பான எண்ணங்களும் செயல்களும் பெருகவேண்டும். தனிமனிதர் தொடர்பான எண்ணங்களும் சடங்குகளும் குறையவேண்டும். இதுவே சமுதாய முன்னேற்றத்திற்கு உதவி செய்யும்.

மறந்தும் மக்களுக்குத் துன்பம் செய்யாமல் வாழவேண்டும். வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடும் உளப்பாங்கு வளரவேண்டும். உலகம் முழுவதுமே ஒரு குடும்பமாகக் காண்பதே உயரிய நெறி. எனவே தீய குணங்களை அகற்றுவதற்கும் தீய உணர்ச்சிகளை வெல்லுவதற்கும் அன்பு கனிந்த தூய்மையான வாழ்க்கையே சிறந்த சாதனம். இத்தகைய அன்பை யாவரும் உலகிற் பெருக்கும் விதத்தில் இப்பண்டிகை உதவுவதாக!

தினகரன் 1958, நவெம்பர். 10 திங்கட்கிழமை,

# 12

# வழி பிறக்குமா?

**குதிரைமலையிலே கண்குளிர் காட்சி ஒன்று. நீர்வீழ்ச்சியின் ஒலி "சோ" என்று கேட்கின்றது. வளம் பெற வளர்ந்த மூங்கில்கள் ஒன்றோடொன்று உராய்ந்து, இசை விருந்து அளிக்கின்றன. மலைச்சாரலில் பச்சைப் பசேலென்று காணப்படும் மிளகுக்கொடிகளின் கீழுள்ள கொல்லைகளிலே தினைப்பயிர் செழித்து வளர்ந்து கதிர்முற்றி அறுவடை செய்யப்பட்டு, வீட்டின் முற்றத்திலே கொட்டப்பட்டிருக்கின்றன.**

*புதிதாகக் கொண்டுவந்த தினை அரிசியைச் சேறாக்குவதற்குப் பானையை அடுப்பின்மீது ஏற்றி, விறகிற்கு அண்மையிலுள்ள சந்தன மரத்தை வெட்டிக்கொண்டு வந்திருக்கின்றார்கள். பசுவின் பாலை உலை நீராக ஊற்றுகிறார்கள். அதிலே தினை அரிசியைப் போட்டு எரிமூட்டுகிறார்கள். சந்தனப் புகையிற் பாற்பொங்கல் நிகழுகின்றது. பொங்கலை இறக்கி, இல்லத்தின் முற்புறம் கொண்டுவந்து சேர்க்கிறார்கள். பரப்பப்பட்டுள்ள அகன்ற வாழை இலைகளிற் பொங்கலைக் கொட்டி, நண்பர் உறவினருடன் கலந்திருந்து பகுத்து உண்ணுகிறார்கள். அவர்கள் உள்ளத்திற் பொங்கும் மகிழ்ச்சி முகத்திற் பிரதிபலிக்கின்றது.*

**தமிழருக்குரிய தனித்திருநாள்**

*சங்ககால மலைக்குடிமக்கள் பொங்கல் விழாக்கொண்டாடும் காட்சி இது. இக்காட்சியை எமக்கு அளிப்பவர் கருவூர்க் கந்தப்பிள்ளை சாத்தனார். இத்தொன்மைவாய்ந்த பொங்கல் தமிழருக்குரிய தனித்திருநாள். மக்கள் உலகிலே வாழ்வதற்குத் தேவைப்படும் உணவுப் பொருளைத் தரும் உழவுத் தொழிலில் ஈடுபட்ட உழவன், தனது தொழிலுக்கு இன்றியமையாது உதவும் இயற்கை ஆற்றல்களுக்குத் தலைவணங்கி நன்றிசெலுத்தும் நாளே பொங்கல் திருநாள். மண்ணில் விளைந்த தானியங்களைக் கண்குளிரக்கண்டு, அவற்றை உலையிலிட்டுச் சமைத்து, வயிறு நிரம்ப உண்டு. மகிழ்ச்சி அடைந்து, இன்பம் அனுபவிக்கும் நாளே தமிழர் தனிப்பெருமையுடன் கொண்டாடும் பொங்கல் நாள்.*

*இவ்வாறு அன்று அவர்கள் விழாக் கொண்டாடுவதற்குத் தமிழர் வாழ்ந்த நாடும் செழிப்பான நிலையில் இருந்தது. செந்நெல் செழிக்க ஆறுகள் வற்றாது நீர் அளித்த நாடு, வறுமை என்பதை அறியாத நாடு, செல்வங்கள் யாவும் நிரம்பிய நாடு, முத்துக்கொழிக்கும் கடல் சூழ்ந்த வளநாடு, தமிழர் வாழ்ந்த நாடு, அன்று திரைகடல் ஓடியும் திரவியந்தேடிச் செந்தமிழ்நாட்டின் செல்வத்தைப் பெருக்கி, அன்று வாணிபத்தை வளர்த்தவர்கள் தமிழர். அக்காலத்தில் உரோமாபுரி முதலிய தேசங்களிலிருந்து கப்பல்கள் பல தமிழ் நாட்டிற்கு வந்து பொருள்களை ஏற்றிச் சென்றன. நெய்யின் விலைக்காகக் கட்டிப் பசும்பொன் கொள்ளாது எருமை, நல்லான், கருநாகு பெற்றனர். ஆம், நாட்டிலே பொருள் நிறைவு இருந்தது ஆனால், தமிழர் இன்று வாழும் பகுதிகளின் இன்றைய நிலை என்ன? ஒரு பக்கத்திற் பால் பொங்குகின்றது. ஆனால் மறுபக்கத்தில் பாலுக்கு அழும் பச்சிளங் குழந்தைகளின் கோரக் குரல் ஒலிக்கின்றது. நீங்காத செல்வம் நிறைந்திருந்த நாட்டிலே பாலுக்குப் பஞ்சம் ஏற்பட்டுவிட்டது. மூன்று போகம் விளைந்து, மூன்றுவேளையும்*

மக்கள் வயிறு நிரம்ப உண்ட காலம் போய்விட்டது. அரிசிக்காக உலக நாடுகளிடம் பிச்சை எடுத்து, இறக்குமதியாகும் கூப்பன் அரிசியில் இன்று எத்தனை பானைகள் பொங்கல் பொங்குகின்றன.

**அவல நிலைக்குக் காரணம்**

காரணம் தமிழன் உழவுத் தொழிலை மதியாமையே. தன் காணிபூமியை விட்டு, உல்லாச வாழ்க்கைக்காக அரசாங்க உத்தியோகத்தை நாடிப் பிற பிரதேசம் சென்றான். தமிழன், தன் சொந்தப் பூமியில் பிற இனத்தான் வந்து குடியேற இடங்கொடுத்தான். ஆம், தன் வீட்டின் எல்லைப்புறத்தில் அரைக்குழி நிலத்தை அயல்வீட்டுக்காரன் அனுபவிக்க முயன்றால், கோடேறிச் சீமை வரையும் வழக்குப் பேசினான்; ஆனால், தான் வாழும் நாட்டிலே பிற இனத்தான் வந்து குடியேறினால் அதற்கு விட்டுக்கொடுப்பது ‘பரந்த உள்ளம்’ என்று வியாக்கியானம் செய்தான். பண ஆசை தலைக்கேறித்தன் சொந்தக் காணியை மாற்றானுக்கு விற்றான். இன்று, குடியேறியவனைக் கலைக்க முடியாத நிலையில் திண்டாடுகின்றான். குடிபுகுந்த மந்தை, புலியை அடக்கி ஆட்சிசெய்கின்றது. விலங்குகளுக்குத் தம் நாட்டின்மேலுள்ள பற்று மக்களாகிய எமக்கு இல்லை. எமது வீட்டிலே பூனை, நாய், கிளி முதலிய பிராணிகளை வளர்க்கின்றோம். எமக்கு விருப்பம் இருக்கிறவரை அல்லது வசதி உள்ளவரை அவற்றைப் பேணுகிறோம். பிறகு வெறுப்பு ஏற்படும்போது அவற்றை வீட்டிலிருந்து விரட்டி அடிக்கிறோம். ஆனால் அவை வீட்டைவிட்டுப் போகின்றனவா இல்லை ஏன்? தாங்கள் வளர்ந்த இடத்தில் அவ்வளவு பற்று! அவற்றை வெளியேற்றும்பொருட்டு நாம் அவற்றை எந்த விதத்தில் துன்புறுத்தியபோதும் அவை வெளியே செல்லமாட்டா. நாம் வளர்ந்த இடத்தைப் பார்த்துக் கண்ணீர் உகுக்கின்றன. தம்மை வளர்த்த முகங்களைப் பார்த்து வாலைக் குழைக்கின்றன. மிகக் கொடியவை என்று கருதப்படும் காட்டு மிருகங்கள்கூட தாங்கள் பிறந்து வளர்ந்து வாழ்கிற காட்டுப் பிரதேசத்தைவிட்டு வேறொரு காட்டுப் பகுதிக்குச் செல்லமாட்டா. மனிதர் அவற்றை எந்த விதத்தில் வேட்டையாடினாலும், வேறு எந்த இடத்திற்குத் துரத்தினாலும் திரும்பத் திரும்ப அவை பழைய இடத்திற்கே வந்து சேரும்.

**பண்டைக்காலப் பெருமுயற்சிகள்**

ஆனால், எமக்கு மட்டும் இத்தகைய பற்று எமது பூமியில் இல்லை. கிளிநொச்சிக்கு வயல் செய்யப்போவார்கள். ஒருபோகம் மழையில்லாது விளைச்சல் குறைந்துவிட்டால் திரும்பவும் ஊர்வந்து சேர்ந்துவிடுவார்கள். காரணம், இக்காலத் தமிழர் நோகாமல் வாழப் பார்ப்பவர். இவர்கள் வயலிலுள்ள எலியைப்போலச் சிறு முயற்சியாற் பெரும் பயன் அடைய விரும்புவர். பண்டைக்காலத் தமிழர் புலியைப்போன்ற பெருமுயற்சியுடன் வாழ்ந்தமையாலேயே மானத்துடன் வாழ்க்கை நடாத்தினர். நாமும் பெருமுயற்சியுடன் எமது பிரதேசத்திலுள்ள பூமியை வளம்படுத்தவேண்டும்.

இதற்கு நாம் எமது மனப்பான்மையை முற்றாக மாற்றி அமைத்தல் வேண்டும். நல்ல காலம், மாற்றன் கருணை, ஆட்சிபீடத்தின் சலுகை, கடவுள் அருள் என்றெல்லாம் பிறரின் தயையால் முன்னேறக் காத்துக்கொண்டிருந்தால், வாழ வழிபிறக்காது. நாம்உலகிலே பிறந்தது வாழ, உரிமையுடன் இன்பங்கள் அனுபவித்து, மானமாக வாழ; இன்னல் வந்துற்றிடும்போது அதற்கஞ்சாது ஏழையராகி இனி இங்கு துஞ்சாது, பாரம் பழியைப்

பிறர்மேற் சுமத்தாது, துன்பத்துடன் போராடி, வெற்றி காணவேண்டும். தமிழர் சோம்பேறிக் கூட்டத்தினரல்லர்; அறிவற்ற ஆட்டு மந்தையருமல்லர். உழைப்புத்திறனும் ஊராளும் ஆற்றலும் ஒருங்கே படைத்தவர் என்பதைச் செயலிற் காட்டவேண்டும்.

பொங்கல் திருநாள் உழவர் திருநாள் என்று கூறுகிறார்கள். ஆனால் உழவருக்கு வயிறார உண்ணுவதற்குத் தாம் உழைத்ததன் பயனாய் நடைபெறும் அறுவடையில் ஏற்ற பங்கில்லை. பழங்காலத்திலே பொங்கல் விழாவில், பாடுபடும்உ ழவனுக்குப் பூமி உண்டு, மாடு உண்டு. இன்று, பூமியுமில்லை, மாடுமில்லை. மேலும், உழவரிற் பெரும்பாலானோர் இன்று சமூகத்திலே தாழ்த்தப்பட்டு வதங்குகிறார்கள். தாழ்த்தப்பட்டவர் என்பவருட் பெரும்பாலானோர் உழைப்பாளிகள், விவசாயிகள், எமது தோட்டங்களையும் வயல்களையும் பண்படுத்தி எமக்கு வேண்டிய உணவுப் பொருள்களைக் கொடுப்பவர்; இரவு பகல் என்ற வேற்றுமை இல்லாது நெற்றியிலிருந்து வியர்வை சிந்த, நெல் ஆக்கி, அரிசி ஆக்கி, எமக்கு அளிப்பவர். நாம் உண்ணும் ஒவ்வொரு பருக்கையும் வாய் திறந்து பேசுமானால், இந்த மகத்தான மக்கட் கூட்டத்தின் உழைப்பை - ஈடற்ற பெருஞ்சேவையை -அவை ஒவ்வொன்றும் கதை கதையாகச் சொல்லும்.

**எல்லோரும் ஒரு குலம்**

பண்டைக்காலத்தில் தமிழர் சமுதாயத்திலே தாழ்த்தப்பட்ட சாதியினர் இருக்கவில்லை. மக்கள் தாம் தாம் வாழ்ந்த திணைகளுக்கு ஏற்பப் பெயர் பெற்று எல்லோரும் ஒரு குலமாக வாழ்ந்தனர். இடைப்பட்ட காலத்தில் ஆரியரின் ஆதிக்கத்தினால், ஆரியர் பண்பாட்டைத் தமிழர் மீது திணிப்பதற்குக் கையாளப்பட்ட சூழ்ச்சியால், ஆதித்திராவிட மக்கள் சமூகத்தில் தாழ்த்தப்பட்டனர். மோட்ச நரக உலகைக் காட்டி வயிறை வளர்க்கும் கோழைக் கும்பலுக்கு அடங்கி, அவர் வகுத்த சாதித்திட்டத்தைத் தமிழர் ஏற்றதன் பயனாகவே தீண்டாமை தமிழரிடையே பரவியது. ஒரு மக்கட் கூட்டத்தினரைத் தாழ்த்தப்பட்டோர் என்று நடத்திவருதல், நாம் பகுத்தறிவை இழந்துவிட்டோமென்பதை அல்லவா குறிக்கும்?

தமிழர் வாழும் பகுதிகளிலே எங்கு பார்த்தாலும் சிற்பிகளின் கைத்திறனை உலகிற்குக் காட்டும் கோயில்கள் இருக்கின்றன. இக்கோயில்களின் பெருமைகளையும், இவற்றிற்குப் போகவேண்டிய அவசியத்தையும், போவதனால் ஏற்படும் பயனையும் பலரும் பலவாறு பாராட்டிப் பேசுகின்றனர். இவ்வாறு பேசிவிட்டு, ஆசையைத் தட்டிஎழுப்பிவிட்டு, கோயில்களுக்கு வரக்கூடாது, அங்கே நுழையக்கூடாது என்று சிலரைத் தடுக்கின்றனர். பிள்ளையைத் தாயிடமிருந்து பிரிப்பதுபோன்ற கொடிய செயலாகும். பத்தர்களைப் பரமன் வாழும் இடத்திற்குச் செல்லவிடாது தடுப்பது, அவர்கள் கோயில்களைக் கட்டலாம்; கோபுரங்களை அமைக்கலாம்; அவற்றினால் எல்லாம் இறைவன் ஓடிவிடமாட்டார். ஆனால் அவர்கள் அமைத்த கோயிலுள் தன் முன்னிலையில் நிற்பது கடவுளுக்குப் பிடிக்காதாம்! எவ்வளவு காலத்திற்கு மக்களை ஏமாற்றலாம். இன்று இடையிடையே சில இடங்களிற் கோயில்களைத் திறந்து விட்டிருக்கின்றனர். இதனால் ‘உயர்ந்த சாதியினர்’ சிலர் அந்தக் கோயில்களுக்குப் போவதை நிறுத்திவிட்டனராம்! இது நன்மைக்கே. இத்தகைய மனப்பான்மை படைத்தோர் கோயில்களுக்குப் போவதே தீட்டாகிவிடும்! கோயில்களைத் திறந்து விட்டால் மட்டும் போதாது. இன்று பல உணவுச் சாலைகளில், தேநீர்க்கடைகளில் தாழ்த்தப்பட்டோர் புகுதல் தடைசெய்யப்படுகின்றது. எனவே,

சமூக பொருளாதார, அரசியல்துறைகளிலும் அவர்கள் முன்னேற வழிவகுத்தல் வேண்டும். தாழ்த்தப்பட்டோர் என்ற தனி வகுப்பினர் தமிழ்ச் சமூகத்திலே இல்லாமல் மற்றத் தமிழரோடு அவர்கள் எல்லாத் துறையிலும் இரண்டறக் கலந்துவிடவேண்டும். எனவே, அவர்களுக்குப் புதுவாழ்வு சமைப்பதற்கு, அவர்கள் மனக்கசப்பில்லாது வாழ வழிவகுப்போமாக.

**ஒற்றுமைப்பட அரியவாய்ப்பு**

தமிழர் வாழ்விலே தைப்பொங்கல், சித்திரை ஆண்டுப் பிறப்பு, தீபாவளி, சிவராத்திரி, விசாகம், ரம்ழான், நபிகள் நாயகம் பிறந்த நாள், நத்தர் எனப் பல திருநாள்கள் வந்து போகின்றன. இவற்றுள் பொங்கல் ஒன்றைத்தவிர, ஏனைய திருநாட்கள் தனித்தனி மதங்களின் திருநாட்கள். ஆனால் தைத்திங்களில் வரும் பொங்கல் திருநாள் தமிழ் மக்களின் ஒரு பகுதியினருக்கேயரிய சமயத்திருநாளன்று. எல்லாச் சமயத் தமிழரும் இணைந்து நின்று இன்பம் காணும் தேசீயத்திருநாளாகும் இது. ஆகவே, இத்திருநாள் தமிழர் யாவரையும் ஒன்று சேர்க்க ஒரு நல்ல நாளாகும். இன்று ஆட்சிபீடத்திலிருந்து அதிகாரப் பலன் கொண்டு கொடுங்கோலாட்சி செலுத்தும் பெரும்பான்மைச் சகோதரர் எம்மை மலைநாட்டுத் தமிழர், யாழ்ப்பாணத் தமிழர், மட்டக்களப்புத் தமிழர், இஸ்லாமியத் தமிழர், கிறிஸ்தவத் தமிழர், சிறுபான்மைத் தமிழர் என்றெல்லாம் பிரித்து, எம்மிடையே பிளவு ஏற்படுத்த முனைகின்றார்கள். இரு முழு மந்திரிமாரின் வெளிப்படையான பறைசாற்றலோடு, கூடுவிட்டுக் கூடுபாயும் ஓர் அரை மந்திரியின் குள்ளநரித் தன்மையோடு சில சமூகத்தினருக்குச் சிறப்பான சலுகைகள் செய்வதாகப் பாசாங்குபண்ணி, தமிழ் இனத்தைத் துண்டு துண்டாக்கிப் பிரித்து அடக்கி ஆளத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. தமிழர் யாவரும் ஒரு குடும்பத்தின் பிள்ளைகள். ஒரு குடும்பத்திற் பிள்ளைகள் எல்லோரும் ஒரு விதமாக இருப்பதில்லை. ஒரு கையில் ஐந்து விரல்களும் ஒருவிதமாக இராமைபோல. ஆகவே, மத அளவில் நாம் வேற்றுமையுடையோராயினும் ஒரு குடும்பத்தினரே, எம்மைப் பெற்றெடுத்த தாய் எமது மொழியேயாகும். அத் தாயானவள் எம்மைப் பிரியவிடாள். அதிகராபீடத்திலிருப்பவர் என்ன கொக்கரித்தாலும், இனவெறி மக்கள் எந்த வஞ்சகத்தை விதைத்தாலும், நாம் தமிழராகவே வாழ, தமிழர் என்ற பெயரில் எமது உரிமைகளுக்கு ஒன்று சேர்த்து போராடப் பொங்கல் திருநாள் வழிவகுக்கும்.

**தைபிறந்தால் வழிபிறக்கும்**

இன்று தமிழரிடையே அடிமை வெறுப்பும், சமத்துவ விழிப்பும், உரிமை வேட்கையும் வேரூன்றிவிட்டன. இன்று, குகைவாழ் புலிகள், உயிர் குணமேவிய தமிழர், கொடியோர் செயலற இதந்தரு மனையின் நீங்கி இடர்மிகுசிறை வாழ்க்கையும் அனுபவிக்கத் தொடங்கிவிட்டனர். உரிமை உணர்வு நாளுக்கு நாள் வலுப்பெற்று வருகின்றது. புகைந்த எரிமலை நெருப்பைக் கக்குங் காலம் வரப்போகின்றது. உரிமைக் குரலுக்கு இனி மதிப்பு அளித்தே ஆகவேண்டும்.

தை பிறந்தால் வழிபிறக்கும் என்பார்கள். நாட்டுப் பற்றுக்கொண்டு, காணி நிலத்தைப் பேணிப் பயன்படுத்தி பிறர் சலுகையை எதிர்பாராது எம் முயற்சியை நல்வழியிற் பயன்படுத்தி, தீண்டாமையை அறவே நீக்கி, மத அடிப்படையிலே பிரிந்து தனித்தியங்காது

ஒன்று சேர்ந்து தமிழராக இயங்குவோமாயின் வழி பிறந்தே தீரும். கழிந்த ஆண்டிலே நாம் பலவித இன்னல்களை அனுபவித்தோம். இப்புத்தாண்டிலாவது இந்நிலைமாறி, உரிமையுடன் கூடிய நல்வாழ்வு பெற இப்பொங்கல்விழா உணர்ச்சி ஊட்டுவதாக. இப்பொங்கல் விழாவைத் தமிழர் வாழ்வில் - அரசியல், பொருளியல், மதம், மொழி, கலை ஆகிய துறைகளில் மறுமலர்ச்சி ஏற்படுத்தும் திருநாளாக ஆக்க வேண்டும். பொங்கி எரியும் உள்ளத்தினோடு தமிழர் திருநாளாகிய இப்பொங்கற்றிருநாளிலே நாம் தமிழரெனப் பெருமைகொள்வதற்கு உரிமை அளித்த எம் தூய தமிழ்மேல் ஆணையிட்டுக் கூறுவோம். "அடுத்த ஆண்டிலேனும் தமிழர் திருநாள், உரிமைபெற்ற மக்கள் உணர்ச்சித் திருநாளாகச் செய்வோம்; மானத்துடன், உரிமையுடன் வாழ வழிவகுப்போம்" ஆம், வழி பிறக்கும்.

தினகரன் 1959, ஜனவரி 14 புதன்கிழமை



1962ஆம் ஆண்டில் பேராசிரியர் சு.வித்தியானந்தன் தயாரித்து யாழ்ப்பாணம் பேராதனை, கண்டி, கொழும்பு ஆகிய இடங்களில் மேடையேற்றிய கர்ணன் போர்: வடமோடிக் கூத்தின் நாடகக் குழுவினரைப் படத்தில் காணலாம்.

## 13

# கூடி வாழ்ந்தால் கோடி நன்மையுண்டு

**பசியும் பிணியும் பகையும் நீங்கி வசியும் வளனும் சுரக்கொன வாழ்த்திக் கொண்டாடுவதே விழாவாகும். ஒரு சமூக மக்கள் எவ்வகைத் துன்பத்தை அனுபவித்தபோதும், வாழ்க்கையிற் சில நாட்களுக்காவது எல்லோரும் ஒன்று சேர்ந்து இன்பத்தில் மூழ்கவேண்டும் என்னும் உணர்வே விழாக்கள் கொண்டாடப்படுவதற்குக் காலாக இருக்கின்றது. எனவே எல்லோரும் இன்புற்று வாழ்வதே விழாக்களின் அடிப்படைக் கொள்கையாகும்.**

*விழா எல்லோருக்கும் உரியது. கூடி வாழும் மக்கட் சமுதாயத்தினையே விழா அணைத்துச் செல்கின்றது. சாதி, சமயம், நிறம், செல்வம் முதலிய வேறுபாடுகளுக்கு விழாவில் இடமில்லை. விழாக் கொண்டாடும்போது பசி என்று ஒருவரும் பரிதவிக்கக்கூடாது. மருத்துவ சாலைகளிலே தங்கும் நோயாளிகள்கூட அன்று வீடுபோய்ச் சேர்ந்துவிடுவார்கள்.*

*மாதங்களிற் சித்திரை சிறந்ததாகவும் முதலாவதாகவும் அமைந்துள்ளது. தமிழருக்குச் சித்திரை மாதம் சிறந்ததொரு மாதமாகும். சந்திரன் சித்திரை நட்சத்திரத்தோடு சார்ந்து நிற்கும் மாதமே சித்திரை. மக்கள் யாரிடத்தும் வேறுபாடு நீங்கி வாழவேண்டிய பண்பாட்டை இம்மாதத்திற் கொண்டாடப்படும் விழா உணர்த்துகின்றது. யாதொரு வேறுபாடுமின்றி எல்லாச் சமயத்தவரும் சேர்ந்து கொண்டாடும் விழா இது. மக்களிடையே எத்துணை வேறுபாடிருப்பினும் இவ்விழாவில் யாவரும் ஒன்றியிருக்கின்றனர்.*

**சித்திரை விழா**

*சித்திரை விழா, புத்தாண்டு பிறப்பதைக் குறிக்கும் விழா. கழிந்த ஆண்டில் நடந்தவற்றை மதிப்பிட்டு வரும் ஆண்டில் நடக்க இருப்பவற்றைப் பற்றி மனக்கண்ணால் காட்சி காணும் நாள் புத்தாண்டு பிறக்கும் நாள். தமிழ் பேசும் மக்களாகிய நாம் புத்தாண்டு பிறந்த இன்று, சென்ற ஆண்டிலே எமது வரலாற்றிலே இடம்பெற்ற வற்றைத் தொகுத்து நோக்கி, பிறந்துள்ள இந்த ஆண்டிலே எமது வரலாற்றை எவ்வாறு அமைக்கலாம் என்பதைச் சிந்திக்க வேண்டிய நாள் இந்நாள். தமிழ் பேசும் மக்கள் கழிந்த ஆண்டிலே பெற்ற அனுபவங்கள் இன்னும் உள்ளத்தைவிட்டு அகலவில்லை. தமிழருடைய நிலை சென்ற ஆண்டிற்போல் வேறெந்த ஆண்டிலும் தாழ்ந்திருக்கவில்லை.*

*பிச்சை வேண்டாம் நாயைப்பிடி என்ற முறையிலே, ஆயிரக்கணக்கான தமிழர் தாம் பல ஆண்டுகளாக வாழ்ந்து வந்த பிரதேசங்களைவிட்டு, உயிர்ச்சேதமும் உடற்சேதமும், பணச்சேதமும் அடைந்து, வடக்கேயும், கிழக்கேயும் கப்பல் மூலமும் வேறுவகையிலும், பேய் கண்டவர்போல, ஏக்கவாய்வு பிடித்து ஓடியது சென்ற ஆண்டிற்குரிய வரலாறு.*

*மொழியைப் பொறுத்த அளவில், சிறுபான்மையினர் மொழி என்ற நிலைகூட இல்லாது தமிழர் பரம்பரை பரம்பரையாக வாழும் பிரதேசங்களிலேயும் தம் தாய்மொழியாம் தமிழ்மொழி ஆட்சிமொழியாக அமையாது, மொழிப்பிச்சை கேட்கும்*

*நிலை. உலகாண்ட தமிழ்மொழி, தரணி எங்கும் தன் தலைமையை ஏற்கச் செய்த, நமது மொழி இன்று எய்தியுள்ள நிலை இது! தமிழர் போற்றி வளர்த்த கலைகளின் நிலையும் இவ்வாறே. ஆட்சி அதிகாரம் இல்லாமையாலும், நாட்டில் ஒரே குழப்பமான நிலை நீடித்திருந்தமையாலும் கலைகள் வளர்ச்சி அடையாமல் தேங்கிப்போய்க் கிடக்கின்றன. ஆட்சி பீடத்திலிருப்பவரின் கலைகள் செங்கோல் தாங்கி நிற்கின்றன.*

**சென்ற ஆண்டு**

*பொருளாதாரத்துறையை நோக்குமிடத்து, சென்ற ஆண்டிலே தமிழர் வருவாய் சுருங்கிக்கொண்டே வந்திருக்கின்றது. பிற பிரதேசங்களுக்குச் சென்று, அங்கெல்லாம் தமது ஊக்கமிகுதியினால் தமிழர் திரட்டிய பணத்திற்கும், பணம் திரட்டிய வழிகளுக்கும் முற்றுப்புள்ளியிட்டு விட்டார்கள்.*

*இதுவரை, ஈழத்துத் தமிழர் பொருளாதாரம் அரசாங்க உத்தியோகங்களிலேயே பெரும்பாலும் தங்கியிருந்தது. சென்ற ஆண்டில் ஒற்றையாட்சி அரசாங்கம் கையாண்ட திட்டங்களிலிருந்து தமிழர் இனிமேல் உத்தியோகங்களை நம்பித் தம் பொருளாதாரத்தை விருத்தி செய்ய இயலாதென்பது தெளிவாகிவிட்டது. இது இன்னொரு பெரும் பிரச்சினையைக் கிளப்பிவிட்டுள்ளது. உத்தியோகங்களை அடிப்படையாகக் கொண்டே தமிழரின் கல்வி முறைகள் இதுவரை அமைந்திருந்தன. இவ்விதக் கல்வி கற்றுவரும் மாணவரின் வருங்காலம் எப்படி இருக்குமோ என்ற ஏக்கம் பெற்றோர் உள்ளத்தையும் வருத்திக்கொண்டே இருக்கின்றது.*

*சென்ற ஆண்டில் நடைபெற்றக் குடியேற்றங்களை நோக்குமிடத்து தமிழர் தாம் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வரும் பகுதியிலேகூட வாழ்வது இனிப் பெருஞ் சங்கடமாய் இருக்கும் என்பதற்குரிய அறிகுறிகள் தோன்றுகின்றன. கீழ் மாகாணத்தில் ஆளும் கட்சியினரின் சமூகத்தினர் நாளுக்குநாள் குடியேறிக்கொண்டே வருகின்றனர். வடக்கே ஆனையிறவுக்கு அப்பால் உள்ள பிரதேசம் மட்டுந்தான் தமிழர் பிரதேசம் என்ற நிலை உருவாகிக் கொண்டு வருகின்றது.*

*மொழி உரிமை அற்ற சமூகமாக, கலைவளர்ச்சிக்கு வழி இல்லாத சமூகமாக பொருளாதார அபிவிருத்தி நசுக்கப்படும் சமூகமாக, நாடற்ற சமூகமாகத் தமிழர் சமூகம் சென்ற ஆண்டில் காட்சி அளித்துவந்திருக்கின்றது. சுவாமி விவேகானந்தர் ஓரிடத்தில் அருளியது எமது பரிதாப நிலையை நன்கு விளக்குகின்றது. அவர் கூறுகின்றார்: "இருளையே ஒளியெனக் கொள்கிறோம்; துயரத்தையே மகிழ்ச்சியெனக் கருதுகிறோம்; நோயை ஆரோக்கியமென நினைக்கிறோம்; புதிதாகப் பிறந்த குழந்தையின் அழுகையைக் கேட்டு அது வாழத்தொடங்கிவிட்டதென்று எண்ணுகிறோம்".*

*எமது மக்களின் இன்றைய நிலையை இதைவிட அழகாக வருணிக்க முடியாது. ஓர் ஆங்கில அறிஞன் பிரித்தானிய ஏகாதிபத்தியத்தைப்பற்றி எழுதியுள்ள ஒரு நூலில், இருபதாம் நூற்றாண்டு இந்தியா பதினேழாம் நூற்றாண்டு இங்கிலாந்தில் இருக்கின்றதென்று கூறினான். அதாவது, பதினேழாவது நூற்றாண்டில் இங்கிலாந்தில் தொழில் அபிவிருத்தி. கல்விப் பெருக்கம், பொருளாதார நிலை முதலியன எந்த நிலையில் இருந்தனவோ அந்த நிலையிலேதான் இருபதாம் நூற்றாண்டில் இந்தியாவின் நிலையும் இருக்கின்றது என்பதே கருத்து. இது எமது இன்றைய நிலைக்கும் பொருத்தமானது.*

இன்றைய தமிழர் சமூதாயத்திற்குக் கண் உண்டு. ஆனால் பார்வை இல்லை; காது உண்டு, கேள்வி இல்லை; கால் உண்டு நடையில்லை. நெற்றியுண்டு திலகமில்லை; தலை உண்டு திடம் இல்லை.

**வருங்காலம்**

இவையெல்லாம் சென்ற ஆண்டுகளில் நடந்தவற்றின் விளைவுகள். வருங்காலத்தில் இந்நிலை மாறுவதற்குரிய அறிகுறிகள் தோன்றுகின்றன. தருமத்திற்கு ஒருபொழுதும் அழிவில்லை. கொடுங்கோன்மை ஆட்சி என்றும் நிலைத்திராது. அநீதி தலைபணிந்தே தீரும். அடக்கி ஒடுக்கி வதக்கி ஆண்டவர்கள் நிம்மதியற்ற நிலையில் இன்று அவஸ்தைப்படத் தொடங்கி விட்டார்கள். தமிழரும் நம் நிலையை உணர்ந்துவிட்டர்கள். இந்நிலையை மாற்றி அமைப்பதற்கு முயற்சிகளும் ஆங்காங்கு எடுக்கப்பட்டு வருகின்றன. ஆனால், தனிப்பட்ட முயற்சிகள் இன்றைய சூழ்நிலையில் பயனளிக்கமாட்டா. நாம் ஒன்று சேர்ந்து எமது சுமைகளை இழுத்துச் செல்ல வேண்டும். நாம் ஒன்று சேர்ந்தால் சிறைக்காவலுக்கோ மற்று எத் துன்பங்களுக்கோ பயப்படத்தேவையில்லை. இன்று நாம் கொண்டாடும் புத்தாண்டுவிழா ஒற்றுமையையே வலியுறுத்துகின்றது. கூட்டு வாழ்க்கையே விழாவின் அடிப்படை. இக்கொள்கையை இப்புத்தாண்டிற் கடைப்பிடித்து நடப்போமாயின் புதிய வாழ்க்கைக்கு இடம் உண்டு.

அன்புடன் உள்ளம் மகிழ்ந்திருந்த எம்மைப் பிரித்து ஆண்டு வருகின்றனர் பெரும்பான்மைக் கட்சியினர். தமிழ்ச் சமுதாயத்தின் முன்னேற்றத்திற்குரிய வழிவகைகளைப் பற்றித் தமிழ்த் தலைவரிடையே வேற்றுமையை உண்டாக்கி தமிழரைப் பிரித்து வைப்பதில் இன்றும் கண்ணும் கருத்துமாய் இருக்கின்றனர் பகைவர். எமக்கிடையே உள்ள பிளவைப் பயன்படுத்தியே இன்று எம்மை அடிமைகளாக்கி விட்டனர்.

தமிழ் பேசும் மக்களிடையே சமய அடிப்படையில் பிளவு ஏற்படுத்திவிட்டார்கள். தமிழ் பேசும் இஸ்லாமிய மக்களை மற்றும் தமிழ் பேசும் மக்களிடமிருந்து பிரித்து தமிழ் மக்களின் இனப்பலத்தைக் குறைத்துவிட்டார்கள் அடுத்து, இந்துக்களைக் கிறித்தவரிடதிருந்து பிரிப்பதற்கு நுண்ணிதான முறையிற் சூழ்ச்சிகள் நடைபெறுகின்றன. இவ்வாறு தமிழ் மக்களை பலபிரிவினராகப் பரிந்துவிட்டால், தமிழச் சமுதாயத்தின் அழிவுக்குக் குழிதோண்டியதாகிவிடும். எனவே நாம் விழிப்பாக இருத்தல் வேண்டும். எம்மிடையே உள்ள மாறுபாடு பகைவருக்கு உவகையை அளிக்கும்; கொடுங்கோன்மையை நீடிக்கச் செய்யும். ஒ ற்றுமையினால் உயர்வு உண்டு; பிணக்கினால் எமது சமுதாயத்திற்கே அழிவு கோலுவதாய் முடியும். புத்தாண்டு விழாக் கொண்டாடும் இன்றுபோல என்றும் இருப்போமாயின், இப்பயன்கெழுமாநிலம் எம்கையகப்படுவது பொய்யாகாது. இன்றைய உலகில் தனிப்பட்டவர் முயற்சிக்கு வெற்றி இல்லை. கூட்டு முயற்சியே பயனளிக்கும். தமிழ் பேசும் மக்கள் யாவரும் ஒரே முகமாக உரிமைப்போராட்டம் நிகழ்த்துகின்றார்கள் என்று கண்டால், கொடுங்கோன்மை அரசாங்கம் உரிமைக் குரலுக்குச் செவி சாய்த்தே தீரும். நாடெங்கும் வாழக் கேடொன்றும் இல்லை என்ற நல்ல கருத்திலேதான் புத்தாண்டுப் பிறப்புவிழா அமைந்துள்ளது. எம் எல்லோரின் உள்ளத்திலும் உண்மை ஒளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும். அவ்வாக்கு நல்வாக்காக அமைந்து அனைவரையும் தழுவிச் செல்லும் செயலாகச் சிறக்கும். நம் சமுதாயமும் நம் நாடும் வாழ நாம் வழி வகுப்போமாக.

**நாட்டுப்பற்று**

*புதிய ஆண்டு பிறந்த நாள் விழா, தமிழர் தம் அன்பு விழாவாக, எல்லோரும் இன்புற்றிருப்பதுவே யன்றி வேறொன்றறியாத விழாவாகத் திகழ்கின்றது. இந்த இனிய நாளிலே எங்கும்இன்பம் கொழிக்கின்றது. புதிய ஆண்டில் அனுபவிக்க இருக்கும் இன்பத்தை உலகிற்கு அறிவிக்கும் நாள் இது. தமிழ் பேசும் மக்கள் யாவரும் ஒன்று சேர்ந்தால் மானத்தோடு வாழலாம் என்பதை அறிவுறுத்தும் நாள். நாட்டுப் பற்று எல்லோரிடத்தும் பரவவேண்டும் என்பதை உறுதிப்படுத்தும்நாள் ஓர் உலோபி பணத்தினிடம் வைத்திருக்கும் ஆசையும், கணவன் மனைவியிடத்தும் மனைவி கணவனிடத்தும் ஒருவருக்கொருவர் காட்டுகின்ற பிரேமையும், ஒரு தாய் தன் குழந்தையினிடத்துச் செலுத்துகின்ற அன்பும் ஆகிய மூன்றும் சேர்ந்தால் எதுவோ அதுதான் நாட்டுப்பற்று.*

*இத்தகைய நாட்டுப்பற்றை வளர்த்து கழிந்த ஆண்டில் எய்திய தாழ்ந்த நிலையினின்றும் மாறி, வறுமைக் குழியினின்றும் கரையேறி, தமிழ் மக்கள் மனஒளி பெற்று அன்பு தழைத்து, அனைவரும் பசியும் பிணியும் நீங்கி உரிமையுடன் வாழ இச் சித்திரைத் திருநாள் வழிவகுப்பதாக.*

தினகரன் 1959, ஏப்ரல் 14 செவ்வாய்கிழமை

# 14

# இன்றைய இழிநிலைமாறத் தமிழ்மொழிப் பற்று அவசியம்

## ஊவாமாகாணத் தமிழ்ச் சங்கத்தில் கலாநிதி வித்தியானந்தன் வற்புறுத்தல் "வேற்றுமையிலும் ஒற்றுமை பூண்டு சேவை புரியவாரீர்"

**பண்டைத் தமிழகத்து மக்கள் எல்லாச் சிறப்புக்களிலும் பார்க்க மானத்தையும், வீரத்தையுமே பெரும் சிறப்புக்களெனக் கொண்டிருந்தனர். ஆனால் இன்று தமிழ் மக்கள் தங்கள் உடமைகளையும் இழந்து சிரிக்கக் கூட உரிமையற்றவர்களாக வாழ்கின்றார்கள்.**

*இந்த இழிநிலை மாறவேண்டுமானால், முதலில் தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் தமிழ்மொழிப்பற்றுக் கொண்டு தமக்கென ஒரு சமுதாயத்தை ஏற்படுத்த வேண்டும். இவ்விதம் செய்யத் தவறினால் இன்னும் இரண்டு வருடங்களுள் தமிழ்த்தாய் தன் சீரும் சிறப்பும் இழந்து பொலிவிழப்பாள் என்பது நிச்சயம்.*

*சென்ற சனிக்கிழமை மாலை இலங்கைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் கலாநிதி திரு. சு.வித்தியானந்தன் இங்கே ஊவாமாகாணத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டத்தில் சொற்பொழிவாற்றும்போதுதான் மேற்கண்டவாறு கூறினார். பதுளை நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவிற்கு இப்பகுதி வித்தியாதரிசி திரு. ஜே.எம்.சீமான்பிள்ளை தலைமைதாங்கினார். கலாநிதி சு. வித்தியானந்தன் மேலும் கூறியதாவது:*


**அழியாத மொழி**

*"உலகத்திலே ஆயிரத்திற்கு மேற்பட்ட மொழிகள் உண்டெனினும் காலத்தால் அழியாது, அன்றுபோல் இன்றும் கண்ணியமாய் இருப்பது எமது தமிழ்மொழியேயாகும். எம் தமிழ் மொழியின் சிறப்பின் காரணமாக, அந்நியநாட்டு பிறமொழி அறிஞர்கள் கூடத் தமிழை நன்கு கற்கத் தொடங்கி, நூல்கள் கூடத் தமிழில் எழுதி வெற்றி பெற்றார்கள் என்பதைத் தமிழ்மொழி வரலாறு நமக்குச் சான்று பகருகின்றது. தமிழ்மொழியின் தொன்மை எப்படியோ, அப்படியேதான் தமிழர் தொன்மையும், பண்டைக் காலத்துத் தமிழ் மக்களின் வாழ்க்கை, மானத்தையும் வீரத்தையுமே அடிப்படையாகக் கொண்டு இலங்கிற்று. இதற்குச் சான்றாக, சிறைக்கைதியான தமிழ் அரசன் ஒருவன் தாகம் தீர்க்கும் தண்ணீர், தமக்குக் காலங் கடந்து கொடுக்கப்பட்டதற்காக மானத்தையே பெரிதாக மதித்து தன் உயிரையே நீத்தான் என்பதைத் தமிழ் வரலாற்று மூலம் அறியக் கிடக்கின்றது. வீரத் தமிழ்த்தாய் தனது புதல்வனைப் போர்க்களத்திற்கு அனுப்பி புகழுடம்பு கொண்டாள். பாரெங்கும் போற்ற மற்றவரிடம் கைநீட்டி வாங்காது வாழ்ந்து வந்தவனும் தமிழனே.*

*உலகத்திலேயே தமிழ் மக்கள் தான் தாம் இன்னொருவரிடம் கைநீட்டி வாங்குவதை இழிவாகக் கருதுகின்றார்கள். ஆனால் இன்று தமிழ் மக்கள் சிரிக்கக்கூட*

உரிமையற்றவர்களாக வாழ்கின்றார்கள். இவ்வுரிமைகளை நாம் மீண்டும் பெற வேண்டுமானால், முதலில் சாதி, மதபேதமின்றி, மொழிப்பற்றை வளர்க்கவேண்டும். மொழிப் பற்று வளர, நாட்டப்பற்று வளரும். நாட்டுப் பற்று வளர, நம்மிடை இறுதியில் இனப்பற்று வளரும். இவ்வுரிமைகளை வளர்க்க எப்படிப் பண்டைக்காலத்திலே மதத்தால் வேறுபட்ட தமிழ் பேசும் மக்களிடையே ஒற்றுமை வளர்ந்து, தமிழுக்கும் தமிழர்க்கும் தமிழ் இலக்கியத்திற்கும், தொண்டு செய்தர்களோ, அதேபோன்று நாமும் தொண்டுசெய்ய சங்கற்பம் செய்து கொள்ள வேண்டும்.

தினகரன் 1959 ஒகஸ்ட் 15 சனிக்கிழமை



1968-69களில் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்க உறுப்பினர்களாகத் தொழிற்பட்டவர்களை இப்படத்தில் காணப்படுகின்றனர். பேராசிரியர் சு. வித்தியானந்தன் இதில் பெரும் பொருளாளராகப் பணியாற்றியுள்ளார்.

## 15

# பங்குனித் திங்களில் நடைபெறும் தமிழ்விழா

**அடுத்த பங்குனித் திங்களில் தமிழ்விழா ஒன்றைத் தினகரன் நடத்தும் என்ற செய்தியைக் கேட்டுப் பலர் மகிழ்ச்சியடைகிறார்கள்; இந்த முயற்சியைப் போற்றி வரவேற்கிறார்கள். ஈழத்தில் சிறந்த தமிழறிஞர்களுள் ஒருவரும் இலங்கைத் தமிழ் நாடகக்குழுத் தலைவருமான கலாநிதி சு. வித்தியானந்தன் அவர்கள் தமிழ்விழா குறித்துக் கூறிய கருத்துக்களை நமது கண்டி நிருபர் ஒரு கட்டுரையாகத் தருகிறார்**

*வருகிற ஆண்டு பங்குனித் திங்களில் 'தினகரன்' நடத்த இருக்கும் தமிழ்விழா இதுவரை ஈழத்திலே தமிழ்ப் பத்திரிகை எதுவும் சாதிக்காத ஒரு சாதனை; தமிழ் பேசும் மக்களால் பெரும் ஆவலோடு எதிர்பார்க்கப்படும் ஒரு நிகழ்ச்சி.*

**புதுமுறையில் தமிழ்விழா**

*ஈழத்திலே உள்ள தமிழ்ச் சங்கங்கள் பல தமிழ்விழாக்கள் நடத்தியதைக் கண்டிருக்கின்றோம்; கேள்விப்பட்டிருக்கிறோம். சிலர் பத்து அல்லது ஐந்து ஆண்டுகளுக்கொருமுறை ஒரு விழா நடக்கவேண்டுமென்பதற்காக இரண்டொரு பேச்சாளரை இந்தியாவிலிருந்து அழைத்து சாத்திரப்படிக்கு ஈழத்திலுள்ள சில பேச்சாளரையும் உடன் சேர்த்து "தமிழ்விழா" நடத்தி ஏதோ பெரியதொரு சாதனையைச் சாதித்ததாகத் தம்மைத் தாம் புகழ்ந்து கொள்வார்கள்.*

*"தினகரன்" நடத்தவிருக்கும் தமிழ்விழா இத்தகைய விழாக்களிலிருந்து வேறுபட்டு ஒரு வழிகாட்டியாகவும் இருக்குமென அறிந்து மகிழ்கின்றோம். "தினகரன்" ஈழத்துத் தமிழ்பேசும் மக்களின் வாழ்க்கையில் இன்று முக்கிய இடம் பெற்றுவிட்டது. தமிழ்மொழியின் வளர்ச்சிக்காகப் பல துறைகளிலும் உழைத்துவரும் பத்திரிகை என்ற பெயர் இதற்கு இப்பொழுது கிடைத்துவிட்டது.*

*கடந்த இரண்டு ஆண்டுகளாக இப்பத்திரிகை பெரிதும் முன்னேற்றமடைந்து ஈழத்தின் தலைசிறந்த தமிழ்ப் பத்திரிகையாக அமைந்துவிட்டது. அரசியல்துறையில் தமிழர் முன்னேற்றத்திற்கு வேண்டிய பல விஷயங்களை அவ்வப்போது சுட்டிக்காட்டி தமிழ் மக்களின் உரிமைக்காகப் போராடும் ஒரு பத்திரிகை என்ற அளவுக்குக் கூட பெயர் பெற்றுவிட்டது.*

**பத்திரிகையின் தொண்டு**

*ஈழத்தில் வாழ்கின்ற தமிழ் பேசும் மக்களின் பொருளாதார கலாசார அபிவிருத்தியையும் இப்பத்திரிகை தனது நோக்கமாகக் கொண்டிருப்பது சிறப்பாகக் குறிப்பிடவேண்டியது.*

*தமிழர் வாழும் பிரதேசங்களில் பொருளாதாரத்தை எவ்வாறு அபிவிருத்தி செய்யலாமென்பதைத் "தினகரன்" அடிக்கடி வாசகர்களுக்கு எடுத்துக்கூறியுள்ளது. தமிழ் மக்களின் கலைகள் சம்பந்தமாகப் புதுப்புதுக் கருத்தக்களையும், ஆலோசனைகளையும்*

இப்பத்திரிகை வழங்கி வந்திருக்கின்றது. விளையாட்டுத்துறையிலும் "தினகரன்" சைக்கிள் போட்டி முதலியவற்றை மாகாணங்களில் நடத்தி விளையாட்டிலும் மக்களிடையே ஓர் ஆர்வத்தை உண்டாக்கியுள்ளது.

ஈழத்தில் பல எழுத்தாளர், கவிஞர்கள், இலக்கிய கர்த்தாக்கள் தமது கதைகளையும், எழுத்தோவியங்களையும், கவிதைகளையும் வெளியிட்டு மக்களுக்குப் பயன்படச் செய்ய இயலாது தவித்துக்கொண்டு பல ஆண்டுகளாக இருந்தனர். ஈழத்து எழுத்தாளர்கள், கவிஞர்கள் போன்றோர்களின் ஆற்றலை இந்தியாவிலும் பிற தேசங்களிலும் வாழ்கின்ற தமிழ்பேசும் மக்கள் அறியாதிருந்தனர்.

**எழுத்தாளர் குறை நீங்கியது**

இக்குறையை நீக்கும் நோக்கமாக "தினகரன்" ஈழத்து எழுத்தாளர்களிடையே ஒரு புதிய உணர்ச்சியை ஏற்படுத்தி ஈழத்து எழுத்தாளரின் சிறுகதைகளையும், கவிதைகளையும், நாடகங்களையும் வெளியிட்டுவந்தது பாராட்டத்தக்கதொரு தொண்டு. இக்கதைகளும், நாடகங்களும், கவிதைகளும் தமக்குப் பொருளாக ஈழத்துத் தமிழ்பேசும் மக்களின் வாழ்க்கையையும், பண்பாட்டையும், எண்ணத்துடிப்புகளையும் கொண்டு விளங்குவது சிறப்பாகக் குறிப்பிட வேண்டியதொன்று.

கடந்த சில ஆண்டுகளாகத் தினகரன் செய்துவரும் தொண்டின் சிகரமாக தமிழ் விழா அமையுமென எதிர்பார்க்கின்றோம்.

சிறுகதைப்போட்டியில் ஈழத்துத் தமிழ் மக்களின் வாழ்க்கை, எண்ணம், கருத்துக்கள், உள்ளத்துடிப்புக்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட கதைகளை எழுதுவோரை ஆதரித்தல் வேண்டும். தினகரனில் வெளிவரும் சிறுகதைகளைப் பார்க்கும்போது ஈழத்திலேயும் தென்னகத்தில் போல் சிறந்த உணர்ச்சியும், புதுமைக் கருத்துக்களும் கொண்ட கவிஞர்கள் இருக்கின்றார்கள் எனத்தெரிகின்றது.

அத்தகைய கவிஞர்களுக்கு இவ்விழாவில் முக்கிய இடமளிக்கவேண்டும். நாடகம் பொதுவாகப் பலராலும் கவனிக்கப்படாத ஒரு துறையாகும். நாடக எழுத்துப்போட்டியொன்றை ஏற்படுத்தி சிறந்த நாடகமொன்றை இவ்விழாவிற்கு முன்பே தெரிந்தெடுத்து அதனைவிழாநாட்களில் அரங்கேற்றலாம்.

**கலைகளைப் போற்றுவோம்**

அழிந்துபோகும் நாட்டுக்கூத்துக்குப் புத்துயிர் அளித்து அதனைப் பேணுவதற்கும் இது ஒரு சந்தர்ப்பமாகும். மட்டக்களப்பில் இன்று நிலவிவரும் நாட்டுக்கூத்து ஒன்றினை தெரிந்தெடுத்து விழாநாட்களில் மேடையில் நடித்து எமது பழைய செல்வங்களை மக்களுக்கு அறிமுகப்படுத்தவது தினகரன் செய்யக்கூடியதொரு தொண்டாகும். நாட்டுப் பாடல்களை இசையோடு பாடி அவற்றிற்கு விளக்கம் கூறுதலும் நிகழ்ச்சி நிரலில் இடம்பெறலாம்.

ஈழத்தில் இசையிலும், நாட்டியத்திலும், மிகுதியான பயிற்சியுடையவர்கள் இருக்கின்றார்கள். இன்று பலர் இந்தியாவிற்குச்சென்று அங்குள்ள இசைக்கச்சேரிகளில் பங்குபற்றி ஈழத்துக்குப் புகழும் ஈட்டி இருக்கின்றார்கள். ஆனால் சிலருக்கிடையேயுள்ள

பொறாமையினால் இசையில் நாம் அடைந்துள்ள திறமையை யாவரும் அறியக்கூடியமுறையில் வெளியிடமுடியாமலிருக்கின்றது. இவ்விழாவை இக்குறையைத் தீர்ப்பதற்குப் பயன்படுத்திக்கொள்ளலாம். சிறப்பாக நாட்டியத்தில் கைதேர்ந்தவர்கள் பலர் இருக்கின்றார்கள். இவர்கள் பணியை விழாவிற்குப் பயன்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். நாதசுர இசைக்கும் ஈழம் பேர்போனது. அதனையும் நிகழ்ச்சியில் சேர்த்தால் ஒரு புதுமையாகவுமிருக்கும்.

மாணவர் பகுதியில் சிறப்பாகக் கவனம் செலுத்தல்வேண்டும். அவர்களிடையேயும் சிறுகதை, கவிதை, நாடகம் ஆகியதுறைகளில் போட்டிகள் ஏற்படுத்தி பரிசில்கள் அளித்து விழாவில் அவர்களையும் பங்குபற்றச் செய்யலாம். இலக்கிய விஷயமாக மாணவரிடையே ஒரு விவாத அரங்கு ஏற்படுத்துதலும் பயனளிக்கக்கூடும். இவ்விழா மலராக ஈழத்துச் சிறுகதைகள், நாடகங்கள், கவிதைகள் முதலியவற்றை வெளியிடுதல் பெருந்தொண்டாகும்.

**கௌரவிக்கும் பண்பு**

தமிழ்ப் புலவர்களையும் எழுத்தாளர்களையும் கௌரவிப்பது எம்மிடையே பொதுவாகக் காணப்படாத ஒரு பண்பு. பல புலவர்கள் இறந்து பல ஆண்டுகளாகிவிட்டன. அவர்கள் வாழ்ந்த இடங்கள்கூட இப்பொழுது எவை என்று தெரியாத நிலையிலிருக்கின்றோம். மேல்நாட்டில் புலவர்கள் வாழ்ந்தஇல்லங்களை நூதன பொருட்சாலைகள் போல் பாதுகாத்து வருகின்றனர். அவ்வாறு நாம் இத்துறையில் எம்மாலியன்றதைச் செய்வதற்கு தினகரன் வழிகாட்டுமென எதிர்பார்க்கின்றோம்.

இவை போன்ற விழாக்களைச் சிறந்த முறையில் நடத்துவதன் காரணமாக இலங்கையிலுள்ள ஏனைய இனமக்கள் தமிழ் மக்களின் பண்பு கலை, கலாசாரம் ஆகியவைகளை நன்கு அறிந்துகொள்வதற்கும் ஒரு வாய்ப்புக் கிடைக்கின்றது.

தினகரன் 1959, நவெம்பர் 19 வியாழக்கிழமை

## 16

# தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கத்திற்கு குழிதோண்ட ஆளும் கட்சியினர் எடுத்துவரும் முயற்சி

### கண்டியில் நடைபெற்ற முத்தமிழ் விழாவில் கண்டனம்

**"முஸ்லிம்களின் தாய்மொழி தமிழா அல்லது சிங்களமா என்ற பிரச்சினையைக் கிளப்பிய கல்வி மந்திரியும், பிரதமருமான திரு. டபிள்யூ தஹநாயகா இன்று இக்கூட்டத்தில் சமுகமளித்திருந்ததால் இங்கு நடைபெற்ற நிகழ்ச்சிகளிலிருந்து முஸ்லிம்களின் தாய்மொழி தமிழ்தான் என்பதை அவர் உணர்ந்திருப்பதோடு மட்டுமன்றி அவர் கிளப்பிய இப் பிரச்சினைக்கும் முடிவு கண்டிருப்பார்"**

*பேராதனை பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளர் கலாநிதி சு. வித்தியானந்தன் கண்டி முத்தமிழ் மன்ற ஆதரவில் நகர மண்டபத்தில் நடைபெற்ற முத்தமிழ் விழாவிற்குத் தலைமை தாங்கிச் சொற்பொழிவாற்றுகையில் இவ்வாறு கூறினார். "ஈழத்து வாழும் தமிழ் பேசும் மக்களைப் பிரித்து ஆளும் ஒற்றை ஆட்சி அரசாங்கம், ஈழத்துத் தமிழர், இந்தியத் தமிழர், இஸ்லாமியத் தமிழர், என்று மூன்று பெரும் பிரிவினராகப் பிரித்துவிட்டது. இவ்வாறு பிரித்து ஆளப்படும் இனம், இன்று இவ்விழாவில் இங்கு ஒன்று கூடியிருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும். தமிழரிடையேபெரும் பிளவை ஏற்படுத்த ஆளும் கட்சியினர் கடந்த சில நாட்களாக எடுத்துவரும் முயற்சிகள் இங்கு குறிப்பிடத்தக்கவை. **1956**ம் ஆண்டில் தமிழரின் உயர்தரக் கல்வியில் உள்ளம் கொண்ட சில பெரியார்கள் தமிழ் பேசும் மக்களுக்கென ஒரு பல்கலைக்கழகம் நிறுவுவதற்கு ஓர் இயக்கத்தைத் தொடங்கினர். சில மாதங்களுக்கு முன் திருகோணமலையில் தமிழ் பல்கலைக்கழகம் அமைப்பதற்கு அத்திவாரக் கல்லும் நாட்டினர். இவ்வியக்கம் நாளுக்கு நாள் பலம் பெற்று வருவதைக் கண்ட ஆளும் கட்சியினர், இவ்வியக்கத்திற்குக் குழிதோண்ட வழிகள் வகுத்தனர். முதலில் அரசியல் துறவிகளை மயக்கி யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் ஒன்று தமிழருக்கு அமைக்க வேண்டும் என்று பேச்சைக் கிளப்பினர், அதன் மேல் கொழும்பிலுள்ள ஸாஹிராக் கல்லூரியை இஸ்லாமியப் பல்கலைக் கழகமாக்க வேண்டுமென்று இஸ்லாமியப் பிரதிநிதி ஒருவரைக் கொண்டு குரல் எழுப்பினர். அதன் பின் மட்டக்களப்புத் தமிழருக்கு சிவானந்த வித்தியாலயத்தை ஒரு பல்கலைக்கழகமாக அமைக்க வேண்டுமெனக் கேட்கும்படி தமது கட்சியிலுள்ள ஒரு தமிழ்ப் பிரதிநிதியைத் தூண்டிவிட்டனர். இவ்வாறு தமிழ்பேசும் மக்களிடையே பிளவை ஏற்படுத்திவிட்டு, வேடிக்கை பார்க்கின்றனர்.*

தினகரன் 1959 நவெம்பர் 19 வியாழக்கிழமை

## 17

# தமிழர் வரலாற்றில் சமுதாய ஒற்றுமை

**தினகரன் தமிழ்விழா இரண்டாம் நாள் நிகழ்ச்சியில் இலங்கை சர்வகலாசாலையில் விரிவுரையாளராயிருக்கும் கலாநிதி சு. வித்தியானந்தன் அவர்கள் "தமிழர் வரலாற்றில் சமுதாய ஒற்றுமை" எனும் விடயம் பற்றி சொற்பொழிவு ஆற்றினார். அதன் முற்பகுதி இங்கு வெளியிடப்படுகிறது.**

*ஔவைப் பிராட்டியார் முன்பு ஒரு நாளும் காணாத - காண இயலாத - காட்சியை ஒரு நாட் கண்டார். சேரமான் மாரிவெண்கோ, பாண்டியன் கானப்பேரெயில் தந்த உக்கிரப் பெருவழுதி, சோழன் இராச சூயம்வேட்ட பெருநற் கிள்ளி மூவரும் ஒருங்கிருந்த காட்சி - ஆம், முடியுடைக்கும் மூவேந்தர் ஒற்றுமை உணர்வுடன் ஓரிடத்தமைந்த காண்டற்கரிய காட்சி. இதுவரை காணாத காட்சியைக் கண்டதும், உடனே,*

*"இருபிறப்பாளர் முத்தீப்புரை*
*யக் காண்தக இருந்த*
*கொற்ற வெண்குடைக்*
*கொடித்தேர் வேந்தீர்*
*வானத்து வயங்கித் தோன்றும்*
*மீனினும் இம்மென இயங்கும்*
*மரமழை உறையிலும் உயர்ந்து*
*மந்தோன்றிப் பொலிந்தும் நாளே"*

*என்று வாய்விட்டுப் புகழ்ந்தார்.*

*தமிழருக்கு அந்தக் காலத்திலே அறிவிருந்தது. இமயத்தின் படையெடுத்துச் சென்று கொடிநாட்டும் ஆற்றிலிருந்தது நாவாயால் நானிலத்தின் எப்பாலும் செல்லும் துணிச்சல் இருந்தது. பண்பும் பண்பாடும் கொள்ளை கொள்ளையாய் இருந்தன. இவை யாவற்றையும் குறைவறப் பெற்றிருந்த தமிழினத்தார் ஒரு பண்பை சிறிதும் பெற்றிருக்கவில்லை. ஒற்றுமையென்ற பண்பின் சாயல்தானும் அவர்பாற் காண இயலவில்லை வீரத்தின் விளைநிலமான தமிழகம் வெறுப்புக்கு வித்திடுகின்ற உள்ளங்களையும் வளர்த்துவிட்டது. ஒருமை இன்மையாகிய பண்பு காலத்துக்குக் காலம் தலைகாட்டியே வந்திருக்கின்றது. பிறருக்குப் பணிந்து, பிறர்வழி நடந்து, சலுகைகளுக்காக மொழியை மறந்து, அரை மந்திரிப் பதவிக்காக இனத்தையே விற்கும் நிலை ஒற்றமை இன்மையாலேயே ஏற்பட்டது. இந்தச் செல்வம் எம்முன்னோர் விட்டுச் சென்ற செல்வங்களுள் ஒன்று. தன் மகனுக்கு பல நூறாயிரம் மதிப்புள்ள நில புலன்களை விட்டுச் சென்ற தந்தை அவனுக்கு ஒரு பாழுங்கிணற்றையும் விட்டுப் போய்விட்டான்.*

*ஆம், சங்ககாலத்திலே சேர சோழ பாண்டியர், தாம் தமிழ்க் குடியினர் என்பதை உணராது, ஒருவர் நாட்டின் மீது ஒருவர் மாறி மாறிப் படையெடுத்தனர். புலிக்கொடியும் கயற்கொடியும் விற்கொடியும் ஒன்றாக விளங்குவதற்குப் பதிலாக, தனித் தனியே*

பறந்தன. தமிழரின் ஒற்றுமை வாழ்வு சிதைந்தது. இச் சிதைவினைப் பயன்படுத்திப் பிறநாட்டினர் தமிழரை அடிமைப்படுத்தினர்.

இங்ஙனம் தமிழ் அரசர் ஒற்றுமை சிதறும் வகையில் ஒருவரோடு ஒருவர் போர்செய்து வந்த அந்தக்காலத்திலே, தமிழரிடையே ஒற்றுமையை நிலைநாட்டப் புலவர்கள் எவ்வளவோ முயன்றார்கள்.

அவர்கள் மும்முடி அரசையும் நேரிற் கண்டு பாடினர், சோழநாட்டுப் புலவர் சேர அரசையும் புகழ்ந்து பாடினர்; பாண்டிய நாட்டுப் புலவர் சோழ அரசையும் பாடினர். சேர நாட்டுப் புலவர் பாண்டிய அரசையும் சோழ அரசையும் புகழ்ந்து பாடினர். இவ்வாறு தமிழ் நாட்டுப் புலவர், மூன்று அரசையும் ஒன்றாகவே கருதிப் போற்றி வந்தனர். நாட்டு வேற்றுமை அவர்களிடம் காணப்படாத தொன்று. மூவரும் தமிழரசரே. மூன்று நாடும் தமிழ் நாடே, மூன்று நாட்டிலும் வாழும் மக்கள் தமிழ் மக்களே என்ற மனப்பாண்மையுடனேயே அவர்கள் யாவரையும் மதித்து வந்தனர். எனவே தான் சேர சோழ பாண்டியரை ஒன்றுபடுத்த அக்காலப் புலவர் பெரிதும் முயன்றனர்.

சிலவேளைகளில் ஒரே பரம்பரையைச் சோந்த இருவருக்கிடையே பகை ஏற்பட்டு அப் பரம்பரையே அழிந்து விடுவதும் உண்டு. சோழர் குலத்திலே கிள்ளி வழியைச் சோந்த நலங் கிள்ளிக்கும் நெடுங்கிள்ளிக்கும் ஓயாத பகை இருந்தது. இதனால் அக்குலமே அழியும் போல இருந்தது. சோழர் தலைநகராகிய உரையூரை முற்றுகையிட்டிருந்த நலங் கிள்ளியையும் அடைப்பட்டிருந்த நெடுங்கிள்ளியையும் நோக்கிக் கோவூர்கிழார் கூறுகிறார்:-

நின்ன கண்ணியு
        மார்மிடைந் தன்றே
பொருவோன் கண்ணியு
        மார்மிடைந் தன்றே
ஒருவீர் தோற்பினுந்
        தோற்பதுங் குடியே
இருவீர் வேற லியறகையு
        மன்றே, அதனாற்
குடிப்பொரு ளன்றுநுஞ்
        செய்தி கொடித்தேர்
தும்மோ ரன்ன வேந்தற்கு
        மேய்ம் மலி யுவகை
செய்யுமிவ் விகலே

ஒற்றுமையினால் உயர்வு உண்டு, பிணக்கினால் குலத்துக்கே அழிவு கோலுவதாகும் என்ற கருத்தை இப்புலவர் விளக்குகிறார்.

சோழ நாட்டிற்கும் பாண்டி நாட்டிற்கும் அக்காலத்தில் தீராப்பகை இருந்தது. ஆனால் சோழன் திருமாவளவனும், பாண்டியன் பெருவழுதியும் ஆண்ட காலத்தில், இருவரும் ஒருவரையொருவர் கண்டுகலந்து உரையாடினர். ஒருநாள், இவ்விரு அரசரும் ஒற்றுமையாக, ஒன்றுபட்டுப் பேசிக்கொண்டிருந்த காட்சியைக் காரிக் கண்ணனார் என்னும் புலவர் கண்டார்; உள்ளம் பூரித்தார். அன்றுபோல் என்றும் தமிழரிடையே ஒற்றுமை நிலவின், தமிழர் எவ்வளவு சிறந்த நிலையில் இருப்பார்கள் என்பதை எண்ணி எண்ணி

மகிழ்ந்தார். இந்த இணைப்பு முறிவுறாது என்றும் நீடிக்கவேண்டுமென விரும்பியவர் இருவரையும் விழித்துக் கூறுகிறார். “பானிற உருவிற் பனைக்கொடியோனாகிய பலராமனும், மீனிற உருவின் நேமியோனாகிய திருமாலும் ஒருங்கிருந்தார் போலக் காட்சி அளிக்கின்ற அரசப் பெருந்தகைகளே இக்காட்சி பலருக்கும் அச்சம் விளைவிக்க கூடிய தோற்றமுடையது. உங்களைப் பிரித்து சேர்த்தால் இத்தனை முழுமந்திரிப்பதவி, கிடைக்கும், ஒப்பந்தம் ஒன்றும் வேண்டாம் கைச்சாத்திடு என்று ஒற்றுமையைக் குலைப்பவர் காத்துக்கொண்டிருக்கிறார்கள். நெஞ்சில் வஞ்சனையேயுள்ள அவர்களிடம் ஏமாறாதீர் உங்களைப் பிரித்து வைக்க அவர்கள் கூறும் கலகச்சொற்களைக் கேட்காதீர்கள்.

உடனிலை திரியீராயீ னிமிழ்

திரைப் பௌவ

முடுத் தவிப் பயங்கெழு மானிலம்

கையகப்படுவது பொய்

யாகாதே

ஒன்றுபட்டிருந்தால் உலகம் தமிழர் கையகத்திருக்கும், அவர்கள் மானத்துடன் வாழலாம் என்று வற்புறுத்தினார். அரசர்களும் ஒன்றுகூடி வாழ்ந்தனர். ஆனால் சங்ககாலத்தறுதியிலே மீண்டும் பிழவுஏற்பட்டது. இரண்டாம் நூற்றாண்டுக்குப் பின் மூன்று நான்கு நூற்றாண்டு வரை வரலாறே அறியாத முறையில் இருண்ட காலப்பகுதி நிலவியதற்கு இவ்வொற்றுமை இன்மையே காரணம். இவ்வொற்றுமை இன்மையை அறவே ஒழித்து ஒற்றுமையை நிலைநாட்ட இக்காலப்பகுதியில் - சங்கமருவியகாலத்தில் - சிலப்பதிகாரம் தோன்றியது.

இளங்கோவடிகள், தமிழக வேந்தர் மூவரும் ஒன்றுபட்டு உலகாளவேண்டும் என்ற பெரு நோக்குப் படைத்தவர். சேரசோழ பாண்டியர் மூவரையும் ஏற்றத்தாழ் வின்ற ி நப்பப்புகழ்கின்றது சிலப்பதிகாரம். கதை சோழ நாட்டில் தொடங்கி, பாண்டி நாட்டினுட் பரந்து, சேர நாட்டில் முடிவுறுகின்றது. காவியப்பாகுபாட்டிற்கும் கதை அமைப்பிற்கும் ஏற்ப, இளங்கோவடிகள் ஆங்காங்கே சோழனையோ பாண்டியனையோ சேரனையோ வாழ்த்தியுள்ளவற்றைப் படிக்கும்போது தமிழரசுக்கே கூறிய வாழ்த்து என்று எண்ணி மகிழ்ந்து ஏத்தவேண்டியிருக்கின்றது. புகார்க்காண்டத்தில் இந்திரவிழாவில், சேரநாட்டுப் புலவராகிய இளங்கோ, சோழவேந்தன் திறத்தினை உணர்ச்சியுடன் ஓதுதல் குறிப்பிடத்தக்கது. அடுத்து, கோவலனும் கண்ணகியும் கவுந்தி யடிகளுடன் பாண்டி நாட்டுக்குப்போகும் வழியில் பாண்டியன் புகழைக்கூறிவரும் மறையவன் ஒருவனைச் சந்திக்கின்றனர். “யாதுநும்மூர் ஈங்கென்வரவு” என்று அவனை வினாவுகின்றார்கள். அதற்கு அவன் கூறுகிறான், நான் குடமலை மாங்காட்டுள்ளேன் தென்னவன் நாட்டுச் சிறப்பும் செய்கையும் கண்குளிர்ப்பக்கண்டேன்’ திருவரங்கப்பெருமான் பள்ளிக் கோலமும் வேங்கட மலை உறை நாதன் கோலமும் காண்பான் வந்தேன் என்று இங்கேயே ஒற்றுமையைக் காண்கிறோம்.

மதுரை மாநகரின் சிறப்பை கண்டு மனநிறைவுடன் புறஞ்சேரிக்கு மீண்ட கோவலன் கவந்தியிடம் தீது தீர் மதுரையின் பெருமையும் தென்னவன் கொற்றக் கீர்த்தியும் வாயாரப்புகழ்ந்து பேசினான்.

தினகரன் 1960 ஏப்ரல் 26 செவ்வாய்க்கிழமை

## 18

# தமிழர் வரலாற்றில் சமுதாய ஒற்றுமை

**தினகரன் தமிழ் விழா இரண்டாம் நாள் நிகழ்ச்சியில் இலங்கை சர்வகலாசாலையில் விரிவுரையாளராயிருக்கும் கலாநிதி.சு.வித்தியானந்தன் அவர்கள் "தமிழர் வரலாற்றில் சமுதாய ஒற்றுமை" எனும் விடயம் பற்றி சொற்பொழிவு ஆற்றினார். அதன் பிற் பகுதி இங்கு வெளியிடப்படுகிறது.**

*பாரதி காலம் பிரித்தானிய ஆட்சி பெருமாதிக்கம் செலுத்தியகாலம். பல நூற்றாண்டு காலமாகத் தனியரசு செலுத்தாமற் பிறருக்கு அடிமைப்பட்டு வாழ்ந்த தமிழ்ச் சமுதாயம் ஒற்றுமையாக வாழ்வதற்குத் தடையாகச் சாதி சமயம், அரசியல் முதலிய இருந்தன. இந்நிலையில் தீண்டாமையை மதவேறுபாட்டை நீக்கினால் தான் தமிழன் ஒன்றுபட்டு வாழலாம் என்பதை பாரதியுணர்ந்தார். ஆரியரின் ஆதிக்கத்தினால், மோட்ச நரக உலகைக் காட்டி வயிற்றை வளர்க்கும் கோழைக் கும்பலுக்கு அடங்கி, அவர் வகுத்த சாதித் திட்டததைத் தமிழர் ஏற்றதன் பயனாகத் தீண்டாமை பரவித் தமிழ் சமுதாயம் பிளவுபட்டுக் கிடந்தது. தமிழர் வாழும் பகுதிகளிலே எங்கு பார்த்தாலும் சிற்பிகளின் கைத்திறனை எடுத்து உலகிற்கு விளக்கும் அழகிய கோயில்கள் இருந்தன. அவற்றின் சிறப்பையும் மகிமையையும் பலபடி பலர் பராட்டிப் பேசினர்.*

*திருக்கோயிலை வலம்வராத கால் என்ன காலோ, ஐயனைகச் சென்று காணாத கண் என்ன கண்ணோ என்று கீதங்கள் பாடினர். இவ்வாறு கோயில்களின் அருமை பெருமைகளைப் பற்றியும் அங்கு போக வேண்டியதன் அவசியம் பற்றியும் போவதனால் ஏற்படும் பலன்கள் பற்றியும் எடுத்துக் காட்டிவிட்டு ஆசையைத் தட்டி எழுப்பிவிட்டு கோயில்களுக்கு வரக்கூடாது, அங்கே நுழையக் கூடாதெனச் சிலரைத் தடுத்தனர். பக்தர்களைப் பரமனிடமிருந்து பிரித்தும் இச்செயல் பிள்ளைகளைத் தாயிடமிருந்து பிரிப்பதுபோன்று கொடிய செயலாகும் என்று கருதினார் பாரதியார்.*

*அவர்கள் கோயில்களைக் கட்டலாம், கோபுரத்தை அமைக்கலாம், அவற்றால் இறைவன் ஓடிவிடமாட்டான். ஆனால் அவர்கள் தன்முன்னிலையில் நிற்பது கடவுளுக்குப் பிடிக்காதாம்! தீண்டுதற்குத் தகுதியற்றவர் என்று கருதப்படும் அம்மக்களால் தீண்டப்பட்ட கற்களுக்கிடையில் உறைவதற்கு ஆண்டவனுக்குச் சம்மதம், ஆனால் அவர்களின் வாடை மட்டும் காற்றிலே மிதந்து வந்துகூடக் கடவுள் மேற்படுவது அவருக்குச் சம்மதமில்லையாம். இதுமட்டுமல்ல, வீடுகளில் உணவுச்சாலைகளில் தேநீர்க் கடைகளில் அவர்கள் புகுதல் தடைசெய்யப்பட்டது. இதனாலேயே பாரதி,*

*சாதிச் சண்டைகள்*
*போச்சோ - உங்கள்*
*சமயச் சண்டைகள் போச்சோ*
*ஒற்றுமை பயின்றாயோ வடிமை*
*உடம்பில் வலமைஉண்டோ என கேட்டார்*

*அவரே கூறுகிறார்:*

*நிகரென்று கொட்டு*
*முரசே - இந்த*
*நீணிலம் வாழ்பவரெல்லாம்*
*நிகரென்று கொட்டு*
*முரசே - பொய்மைச்*
*சாதிப்பிரிவினை யெல்லாம்*
*சாதிப்பிரிவினை வேண்டாம் அன்பு*
*தன்னிற் செழித்திடும் வையம்*

*மதத்தின் பேரால் ஒற்றுமையைக் குலைப்பதையும் அவர் கடிந்தார்.*

*தெய்வம் பலபல சொல்லிப் பகைத்*
*தீயை வளர்ப்பவர் மூடர்*
*பாருக்குள்ளே தெய்வமொன்று - இதிற்*
*பற்பல சண்டைகள் வேண்டாம் எனவே, நாம்*
*முப்பது கோடியும் வாழ்வோம் - வீழில்*
*முப்பது கோடி முழுமையும் வீழ்வோம்*
*ஒன்று பட்டால் உண்டு வாழ்வு நம்மில்*
*ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வு*
*நன்றிது தேர்ந்திடல் வேண்டும் இந்த*
*ஞானம் வந்தால் பின் நமக்கேது வேண்டும்.*

*இவ்வாறு தமிழரிடையே ஒற்றுமையை வளர்க்க முயன்ற பாரதி, ஒருபடி உயர்ந்து, பரந்த ஒரு பாரத ஒற்றுமையையும் போதித்தார்.*

*சிந்து நதியின் மிசை நிலவினிலே*
*சேர நன்னாட்டிளம் பெண்களுடனே*
*சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத்துத்*
*தோணிகள் ஓட்டி விளையாடி வருவோம்.*

*என்பது அவர் பாட்டு.*

*எங்கே தோணி விளையாட்டு? தமிழ் நாட்டிலுள்ள நதியிலா? இல்லை. வடக்கே உள்ள சிந்து நதியிலே.*

*காவிரி தென்பண்ணை*
*பாலாறு - தமிழ்*
*கண்டதோர் வையை*
*பொருனைநதி - யென*
*மேவிய ஆறுபல*

வோடத் திரு
மேனி செழித்த தமிழ்நாடு"

என்று தமிழ் நதிகளைப் பற்றி பெருமிதமாகப் பாடிய பாரதி சிந்து நதிமிசை நிலவினிலே தோணிகள் ஓட்டி விளையாடி வருவோம் என்கிறார். யாருடன் தோணியிற் சென்று விளையாடுவது, தமிழ் நாட்டு இளம் வனிதையரோடா? இல்லை. சேரநன்னாட்டினம் பெண்களுடனே தமிழிச்சியைத் காட்டிலும் மற்றொரு ஜாதிக்காரி அழகாயிருப்பதைக் கண்டால் என் மனம் புண்படுகிறது என்று கூறிய பாரதியார் "சேர நன்னாட்டிளம் பெண்களுடன்" தோணிகள் ஓட்டி விளையாடி வருவோம் என்கிறார். இப்பெண்களுடன் எந்த மொழியிற் கீதங்கள் பாடுவது. யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவதெங்கும் காணோம் என்ற பாராட்டப்பட்ட தமிழிலா? இல்லை, சுந்தரத் தெலுங்கினில். தமிழைவிட மற்றொரு பாஷை சுகமாக இருப்பதைப் பார்க்கும்போது எனக்கு வருத்தமுண்டாகிறது என்றும்

"தெள்ளுற்ற தமிழமுதின் சுவை கண்டார் இங்கமரர் சிறப்புக்கண்டார்"

என்றும்

கள்ளையும் தீயையும்
சேர்த்து நல்ல
காற்றையும் வான
வெளியையும் சேர்த்து
தெள்ளு தமிழ்ப்
புலவோர்கள் பல
தீஞ்சுவைக் காவியம்
செய்து தந்தார் என்ப.

தமிழாவேசம் கொண்ட பாரதியார் கண்ட ஒற்றுமை இது.

**பாரதி தாசன்**

எனைஈன்ற தந்தைக்கும்
தாய்க்கும் மக்கள்
இனம் ஈன்ற தமிழ்நாடு
தனக்கும் என்னால்
திணையளவு நலமேனும்
கிடைக்கு மென்றால்
செத்தெரியும் நாளெனக்
குத் திருநாளமே.

என்ற கொள்கை கொண்டவர் சாதியினால் உயர்வு தாழ்வு கற்பித்து, உண்டு கொழுத்து, உறங்கித் திரியும் கூட்டத்தையும், அவர்களுக்கு உழைத்துப்போட்டு உடம்பு இழைத்து, எலும்பும் தோலுமாகக் காட்சியளித்துப் பிணம்போலக் கிடக்கும் மற்றக் கூட்டத்தையும் கண்டு பொறுக்க முடியாது

கொலை வாளினை எடடா
மிகுகொடியோர் செயலறவே
குகைவாழ் ஒரு புலியே.
உயர்குண மேவிய தமிழா

எனக் கொடுமை அகற்றி ஒற்றுமை வாழ்வு காண வாளேந்திப் போர் செய்யத் தமிழருக்கு அறிவுறுத்துகிறார். ஒற்றுமை எப்படிப்பட்டதென்பதை புறாக்கள் மேலேற்றிப்பாடுகிறார்.

இட்டதோர் தாமரைப்பூ
இதழ்விரிந்திருத்தல்போல
வட்டமாய்ப் புறாக்கள் கூடி
இரையுண்ணும் அவற்றின் வாழ்வில்
வெட்டிலிவர் முத்துமில்லை
வேறுவேறிருந்தருந்தும்
கட்டில்லை; கீழ்மேலென்னும்
கண்மூடி வழக்கமில்லை.

தமிழ்ப்பகைவன் முதலமைச்சாய் வாராது தடுத்தல் வேண்டும் என்று பாடியவர் இவர். தமிழ் உணர்ச்சி ஊட்டி ஒற்றுமை வளர்க்க முயன்றவர்.

செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதும்வேண்டும்
சிங்களஞ்சேர் தென்னாட்டு மக்கள்
தீராதி தீரரென்றூது ஊது சங்கே
பொங்கு தமிழர்க்கு இன்னல் விளைத்தால்
சங்காரம் நிசம் என்று சங்கு முழங்கியவர்
தமிழுக்கு அமுதென்றுபேர் - அந்தத்
தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்குநேர்

என்று ஒப்பிட்டவர்.

தமிழன மேன்மையை இகழ்ந்தவனை
உன்தாய் தடுத்தாலும் விடாதே
என்று வஞ்சிமை கூறியவர்
வெள்ளம் போல தமிழர் கூட்டம்

வீரம் கொள் கூட்டம் அன்னார்
உடலினாற் பலராய் காணப்பட்டபோதும்
உள்ளத்தால் ஒருவரே

என்று மக்களை ஒன்றுபடுத்தியவர்.

இதுவரை கண்ட வரலாற்றிலே, பிற இந்திய மொழிகளிற் காணப்படாத அல்லது அம்மொழி பேசும் மக்களிடையே காணப்படாத ஒரு பண்பைத்தமிழரிடையே காண்கின்றோம். அதுதான், மொழியை அடிப்படையாகக்கொண்டு தமது சமுதாயத்தில் ஒற்றுமையைக் கண்டது தமிழர் பண்பாடு, தமிழர் இனம் இன்று அழிவுபடாது இருப்பதற்குக் காரணம் இந்த இனம் ஒற்றுமை, இணைப்பு உணர்வு எனலாம்.

**ஈழத் தமிழர்**

இக்கூற்று இன்றைய ஈழத்து வாழும் தமிழ்ச் சமுதாயத்திற்கு முற்றிலும் பொருந்தும். கடந்த சில ஆண்டுகளுக்கிடையே ஈழத்து வாழ் தமிழ்பேசும் மக்கள் பெரும் சோதனைகட்கு உட்பட்டிருக்கின்றார்கள். தமிழ் மக்களின் ஒற்றுமைக்குக் குழிதோண்டும் முயற்சிகள் காலத்துக்காலம் நடந்துவந்தன.

தினகரன் 1960 ஏப்ரல் 27 புதன்கிழமை

## 19

# கூத்தாடுபவர் பொதுமக்கள் : அதை ரசிப்பதும் அவர்களே!

### மட்டுநகர் மக்களுக்குக் கலாநிதியின் பாராட்டு

**"பொதுமக்கள் கலையாகிய நாட்டுக்கூத்துக்களைப் பேணி வளர்ப்பதில் மட்டு நகர் முன்னணியில் திகழ்கிறது. இக்கூத்தை ஆடுபவர் பொதுமக்கள், இக்கூத்தைப்பார்த்துச் சுவைத்து ஆதரவு அளிப்பவரும் பொதுமக்களே. எனவேதான் இது மக்கள் கலையாக வளர்ந்து மக்களின் எண்ணக்கருத்துக்களையும் உள்ளத்துடிப்புக்களையும் பண்பாட்டையும், பிரதிபலிக்கிறது.**

*இலங்கைக் கலைக்கழகத் தமிழ் நாடக நடனக் குழுவின் ஆதரவில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு எட்டு மணிமுதல் மட்டுநகர் குருக்கள் மடம் மெதடிஸ்தமிஷன் பாடசாலை முன் அரங்கில் நடைபெற்ற கிராமியக் கூத்துக்கள் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு உரையாற்றிய பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை விரிவுரையாளர் கலாநிதி சு. வித்தியானந்தன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.*

**"அலங்கார ரூபன்"**

*குருக்கள் மடக்கிராமத்தார் ''வடமோடியில் குருக்கேத்திரன் போர்'' எனும் நாட்டுக்கூத்தையும், அம்பிளாந்துறைக் கிராமத்தார் ''அலங்கார ரூபன்'' எனும் தென்மோடி நாட்டுக்கூத்தையும் அரங்கேற்றினர். கிராமியக்கூத்துக்களைக் கண்டுகளிக்கக் குழுமியிருந்த ஆயிரக் கணக்கான மக்கள் முன்னிலையில் உரையாற்றிய கலாநிதி சு. வித்தியானந்தன் மேலும் கூறியதாவது கிராமியக் கூத்துக்கள் மக்களுடைய வாழ்க்கையோடு இணைந்துவிட்டன*

*யாழ்ப்பாணத்திலும் வேறு பல தமிழ்ப்பிரதேசங்களிலும் இக்கூத்துவகைகள் அழிந்து கொண்டுபோகின்றன. மட்டக்களப்பிலேதான் இன்று ஆங்காங்கு ஆடப்பட்டு வருகின்றன. இவற்றை அழிந்துபோகாமற் பாதுகாத்து வளர்ப்பதற்காகவே, இலங்கைக் கலைக்கழகத்தின் தமிழ் நாடக நடனக் குழு பல துறைகளில் முயற்சி எடுத்து வருகின்றது"'*

தினகரன் 1960 ஆகஸ்ட் 9 செவ்வாய்க்கிழமை

20

# இலங்கையிலே நாடகக்கலை இன்று இருக்கும் நிலை

**கொழும்பு கலா அபிவிருத்திச் சங்கத்தினர் நேற்று முன்தினம் கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் "காதலன் தந்த கணவன்" என்ற ஒரு சோக நாடகவிருந்தளித்தனர். நாடகத்திற்கு தலைமை தாங்கிய இலங்கை பல்கலைக்கழக விரிவுரையாளர் டாக்டர்.சு.வித்தியானந்தன் ஆற்றிய தலைமைப் பேருரையிலிருந்து எடுக்கப்பட்டது. இக்கட்டுரை.**

மனிதன் உள்ளத்தைக் கவர்ந்து தனக்குள் ஈடுபடச் செய்யும் ஆற்றல் கலைக்குண்டு. கேள்வி இன்பமும் காட்சி இன்பமும் அளிப்பது நாடகக்கலை. சிறந்த நாடகத்தைக் காணும்போது, வேறு காலத்திற்கும் வேறு உலகத்திற்கும் செல்கின்றோம். ஆம், எம்மை வேறு உலகிற்கு அழைத்துச்சென்று எம்மையே மறக்கச்செல்கின்றது நாடகக்கலை.

இத்தகைய சிறந்த நாடகத்தை ஆதரிப்பதற்கு இன்று தமிழரசு இல்லை. தமிழர் சுதந்திரம் இழந்து இரண்டாந்தரக் குடி மக்களாக, மற்றவர்களுக்கு அடிமைப்பட்டு வாழ்கின்றனர். இந்நிலையில் ஆளுங் கட்சியின் ஆதரவால் இக்கலை வளரப்போவதில்லை. வருங்காலத்தில் ஒருவேளை தமிழருக்கு ஆளும் உரிமையிற் பங்கிருந்தால், இக்கலைக்கு ஆட்சியாளரின் ஆதரவு கிடைக்கக்கூடும் ஆனால் அரசாங்கத்தின் ஆதரவில் கலை முற்றாக வளர முடியாது. கலைகளை வளர்க்கும் பொறுப்பு இன்று மக்களைச் சார்ந்தது. மக்கள் ஆட்சி மலர்ந்துள்ள இக்காலத்தில் மக்கள் கலைகளை வளர்ப்பதே பொருத்தமானது.

**கலியாணச்சந்தை**

ஆனால் இன்று மக்களிடையே நாடகத்திற்கு அவ்வளவு ஆதரவில்லை. இன்றும் மேடை ஏறி நடித்தல் இழிவாகக் கருதப்படுகின்றது. பெண் ஒருத்திக்கு நாட்டியம் தெரிந்தால் கலியாணச் சந்தையிலே விலை ஏறும்; அதே பெண் நடிப்பதற்கு மேடை ஏறினால் கலியாணச் சந்தையிலே விலை இறங்கும். பெண்ணுக்குப் பரத நாட்டியத்தில் பாண்டித்தியம் இருந்தால் புகழும் மதிப்பும் உண்டு; நாடகத்தில் நடித்தால் இகழ்ச்சியும் அவமதிப்பும் தாராளமாகக் கிடைக்கும்.

அந்தக் காலத்தில் ஒர் இந்துப் பெண் இராமநாதன் கல்லூரியில் படித்தால், மணம் முடிப்பது இலகுவாய் இருந்தது. அதே போன்று மதிப்பு இன்று பரதநாட்டியம் தெரிந்த இளம்பெண்களுக்குண்டு. ஆனால் நாடகத்தில் நடித்தால் கூத்தாடி, ஆட்டக்காரி, என்று இகழப்படுகின்றனர். இதனாலேயே பெண்பாகம் தரிப்பதற்கு போதிய நடிகர் இல்லாது தயாரிப்பாளர் கஷ்டப்படுகின்றனர். இந்நிலை மாறவேண்டும். நாடகத்தில் நடிப்பவருக்கு மதிப்புக் கொடுத்து, உற்சாகம் அளித்தால் தான் நாடகம் முன்னேறும்.

நாடகத்திற் பங்குபெற்றும் நடிகர் தாமும் சிறந்தாதாக இருத்தல் வேண்டும் அப்பொழுது தான் மக்கள் நடிகரை மதிப்பர். நாடகம் ஒன்றை அரங்கேற்ற வேண்டும் என்பதற்காகச் சில்லறை நடிகரை மேடையில் ஏற்றுவது கலை வளர்ச்சிக்குத் தடையாகவே இருக்கும். நாடகத்திற்கு மதிப்பு ஏற்பட வேண்டுமாயின், நடிப்பில் தாம் உயர வேண்டும். நாடகத்தில்

மக்கள் கேள்வி இன்பத்துடன் காட்சி இன்பத்தையும் எதிர்பார்க்கிறார்களென்பதை நாம் மறத்தல் கூடாது.

**மலிந்து கிடக்கும் சிறுகதைகள்**

நாடக ஆசிரியர்களைப் பற்றிக் குறிப்பிடுமிடத்து, சிறந்த நாடக ஆசிரியர் எம்மிடம் குறைவாகவே காணப்படுகின்றனர். இன்று கவிஞர்களும் சிறுகதை எழுத்தாளரும் எவ்வளவுக்கு மலிந்திருக்கிறார்களோ, அவ்வளவிற்கு அருமையாக இருக்கின்றனர். நாடக ஆசிரியர், எல்லோரும் சிறந்த நாடகம் எழுதிவிட முடியாது. அதற்கு எவ்வளவோ கற்பனையும் அனுபவமும் அறிவும் வேண்டும். நாடகத்தின் கதை, உருவம், அமைப்பு முதலியன நன்றாய் அமைந்தால் தான் நாடகம் வெற்றி பெறும். இக்காலத்திலே வேண்டப்படுபவை மக்கள் இலக்கியம், மக்களின் உள்ள நெகிழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு கதைகளை அமைத்தால், அக்கதைகளைக் கொண்ட நாடகங்களை மக்களும் வரவேற்பர்.

இன்று முன்பிலும் பார்க்கக் கூடிய விழிப்பு நாடகத் துறையில் ஏற்பட்டுள்ளதெனினும் இவ்விழிப்புப் போதாது. இன்று நாடகங்களை நடிப்பதற்கு ஆங்காங்கு மன்றங்களும் சபைகளும் இருக்கின்றன.

இவற்றுள் பெரும்பாலனவை, பெயரளவுடனேயே நின்று விடுகின்றன. ஒரு சிலவே தொடர்ந்து நாடகங்களை அரங்கேற்றுகின்றன. நாடக அரங்கேற்றத்திற்குரிய பணச்செழிப்பு இல்லாமையினாலேயே இச்சங்கங்கள் உயிர்த்துடிப்புடன் இயங்கமுடியாமல் இருக்கின்றன, அத்துடன் அவற்றைக் கண்டனஞ் செய்து, மொட்டோடு கிள்ளிவிடப் பலர் இருக்கின்றனர். நடனவிழா என்றால், நாடகவிழா என்றால், நாடக அரங்கேற்றம் என்றால் அவற்றிற் குற்றம் கண்டு குறைகூறுவதெற்கென்றே பலர் வருகின்றனர்.

எம்மால் ஒன்றைச் செய்ய ஆற்றல் இல்லாதுவிட்டால், அதனைச் செய்ய முன்வருவோரைக் குறைகூறி மட்டந்தட்டாமல் குறைகளைப் பண்பாடான முறையில் சுட்டிக்காட்டி, குணங்களைப்போற்றி ஊக்கம் அளித்தாலே நாடகம் முன்னேறும்.

இன்று சிங்களவரிடையே நாடகத்தில் உள்ள ஆர்வம் எம்மிடையே கிடையாது. அவர்கள் தொடர்ந்து நாளுக்குநாள் நாடகம் அரங்கேற்றக்கூடிய நிலை இன்று வந்துவிட்டது. நாடகக் கொட்டகைக்குச் சென்று, வரிசையில் நின்று துண்டுவாங்கி, நாடகம் பார்க்கும் அளவிற்கு மதிப்பு ஏற்பட்டுவிட்டது. எம்மிடையே, இலவசமாக நாடகவிருந்து அளித்தாலும், வீடு வீடாகச் சென்று ஆள்சேர்க்கும் நிலை இன்று முற்றாக மாறவில்லை.

நாடக ஆசிரியர்கள், தயாரிப்பாளர்கள், நடிகர்கள் ஒன்றுகூடிப் பல பிரச்சினைகளையும் அலசி ஆராய்ந்து, நாடக முன்னேற்றத்திற்குரிய வழிவகைகளைக் கொள்ளவேண்டும், தனி மனிதன் முயற்சிக்கு இன்று இடம் இல்லை. கூட்டு முயற்சியே பயனளிக்கும்.

தினகரன் 1960, செப்டெம்பர் 6 செவ்வாய்க்கிழமை

21

# உலகெலாம் பரவிய தமிழும் தமிழர் சால்பும்

**அண்மையில் மலாயாவில் சுற்றுப் பிரயாணம் செய்து திரும்பிய இலங்கைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி சு. வித்தியானந்தன் அவர்கள் கடந்தவாரம் கோலாம்பூர் விவேகானந்த ஆசிரிமத்திலே அறிஞர்கள் மத்தியில் 'தமிழர் கலாசாரம்" எனும் பொருள் பற்றி நிகழ்த்திய சொற்பெருக்கின் சாராம்சம் இங்கே தரப்படுகிறது. மலாயாப் பல்கலைக்கழகப் பேராசிரியர் முத்துராசாக் கண்ணனார் அவர்கள் அக்கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.**

உலகின் எப்பாகத்திற்குச் சென்றாலும், அங்குத் தமிழ் மொழி முழங்குவதைக் காணலாம். தாயகத்திலும், ஈழத்திலும் பல ஆயிர ஆண்டுகளாகத் தமிழர் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்துவந்த நாடுகளில் தமிழ் மொழி இன்று எடுப்பார்கைப்பிள்ளையாகத் தவிப்பதைக் கண்டு உள்ளம் கொதிக்கும் ஒருவர், உலகைச் சுற்றிவரின் ஆங்காங்குப் பல இடங்களில் தமிழ்மொழி உயிருடன் வழங்குவதைக் கண்டு ஆறுதல் அடைவர்.

இலண்டனில், இலண்டன் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த கீழைத்தேச மொழிக் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளர்களாக ஆஷர், மார் என்னும் ஆங்கிலேயர் இருவர் கடமையாற்றுகின்றனர். ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் பறோஸ் திராவிட மொழி ஆராய்ச்சி செய்கின்றார். பிரான்சு தேசத்தில் சோபோன் பல்கலைக் கழகத்தில் இன்றும் தமிழ்மொழி ஆராய்ச்சி நடைபெற்று வருகின்றது. அமெரிக்காவில் பேராசிரியர் எமனோ திராவிடச் சொற்களின் தோற்றம் பற்றி அகராதி ஒன்று வெளியிடவிருக்கின்றார். தென்கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் மிக விரைவாக முன்னேறிக் கொண்டுவரும் செக்கோசிலவாக்கியாவில் பேராசிரியர் காமில் ஸ்வலபில் என்பவர் சிறந்த தமிழ் அறிஞராகத் திகழ்கின்றார். நான் தமிழில் எழுதிய "தமிழ் சால்பு" என்ற நூலை நன்றாகப் படித்து அதற்கு மதிப்புரை எழுதியவருள் அவரும் ஒருவர். அவரிடம் பிறாக்நகரின் பல மாணவர் தமிழ் கற்கின்றனர். இங்கு மலாயாவில் பல்கலைக்கழத்தில் தமிழுக்குச் சிறப்பிடம் அளித்திருப்பதைக் கண்டு மகிழ்கின்றோம்.

இங்கும் சிங்கப்பூரில் வானொலியில் எப்பொழுதும் தமிழோசை கேட்கின்றது. இதேபோல இலண்டனிலும், மொஸ்கோவிலும் வானொலியில் தமிழ் முழங்குகின்றது. சிங்கப்பூரிலும் மலாயாவிலும் தமிழை வளர்ப்பதற்குப் பல சங்கங்கள் இருப்பதுபோல இலண்டனிலும் தமிழ் பேசும் மக்கள் யாவரையும் அணைத்துக்கொண்ட தமிழ்ச் சங்கம் ஒன்று உயிருடன் இயங்குகின்றது.

**அரிய தமிழ் நூல்கள்**

இதுமட்டுமல்ல, தென்னிந்தியாவிலும் ஈழத்திலும் கிடைக்காத அரிய பழைய தமிழ் நூல்கள் பல, உலகின் பல இடங்களில் நூல் நிலையங்களில் பேணி வளர்க்கப்பட்டிருப்பதை நேரிற் காணலாம். பிரித்தானிய நூதனசாலை நூல் நிலையம், இந்தியா ஒபிஸ் நூல் நிலையம், லண்டன் ஒக்ஸ்போட், கேம்பிர்ஜ், செர்போன், ஒல்லாந்தர் தேசம், கோப்பனசேகன், ஜேர்மனி தேசம் போன்ற இடங்களிலுள்ள பல்கலைக்கழக நூல் நிலையங்களிலெல்லாம் ஏராளமான தமிழ் நூல்கள் இருக்கின்றன.

**தமிழ்க கல்வெட்டுக்கள்**

*தமிழரின் பண்பாட்டுச் சின்னங்களாகிய யாழ், நடராஜர் சிலை, கல்வெட்டு முதலியவற்றையும் பல நூதனசாலைகளிற் காணலாம். ஏன், மலாயாவை உள்ளடக்கிய இந்தோ-சீனாவில் தாய்லாந்தில், பல்லவ அரசன் நந்திவர்மனின் பட்டப் பெயராகிய 'அவனிநாரணன்' என்ற பெயரொடு விளங்கும் குளத்துக்கு அருகில் தமிழக கல்வெட்டு ஒன்று இருக்கின்றது. அந்நாட்டு மன்னர் முடிசூட்டும் விழாவில் இன்றும் திருவாசத்தின் திருவெம்பாவையில் ஒரு பகுதி ஓதப்பட்டு வருகின்றது. தமிழ்க் கல்வெட்டுக்களைக் சுமாத்திராவிலும் காணலாம். இவ்வாறு தமிழ்ப பண்பாடு உலகம் முழுவதும் பரவிய வரலாற்றை, அங்காங்குச் சென்று நேரில் அறிந்து கொள்ளலாம். விரிவாக எடுத்தியம்ப இன்று நேரம் இடங்கொடாது.*

**எங்கும் பரவிய பண்பாடு**

*தமிழன் தனியாட்சி செய்து, பிறநாடுகளிலும் தன் ஆதிக்கத்தைச் செலுத்தியதனாலேயே தமிழன் பண்பாடும் இவ்வாறு எங்கும் பரவக்கூடியதாக இருந்தது. வடக்கேயுள்ள இமயத்தில் மட்டுமல்ல, கிழக்கே சீனா தேசம்வரை தமிழ்க் கொடிவானத்தில் பறந்து கொண்டிருந்தது. இந்து சமுத்திரத்தில் அரபியருக்கு வழிகாட்டியவர் தமிழ் மாலுமிகளே, இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையேயுள்ள நாடுகளில் தமிழர் நாகரிகம் எவ்வளவிற்குப் பரந்துள்ளதென்பதை அந்நாடுகளிலுள்ள கல்வெட்டுக்களும் கோயில்களும் பழக்க வழக்கங்களும் எடுத்துக் காட்டுகின்றன. கப்பலோட்டிய தமிழன் பண்பாடு மேற்கே உரோமாபுரிவரை தனது சாயலைப் பொறித்துள்ளது. தமிழர் வணிகம், சிற்பம், சமயம், மொழி யாவும் இன்றும் உலகின் பல பாகங்களிலும் காணப்பட்டுத் தமிழரின் நாகரிகச் சிறப்பையும் பரப்பையும் எடுத்து இயம்புகின்றன.*

*இத்தகைய தொன்மைவாய்ந்த நாகரிகத்தைக் கொண்ட தமிழன், இன்று உருக்குலைந்து, தனக்கென ஒரு நாடு இல்லாது பிறருக்கு அடிமைப்பட்டு வாழ்கின்றான். ஈழத்திலுள்ள தமிழ் மக்கள் கடந்த சில ஆண்டுகளாக அனுபவித்த இன்னல்களை உலகம் நன்கு அறியவில்லை. உலக வரலாற்றிலே இது வரை எவரும் கேள்விப்படாத இன்னல்களை அங்குள்ள தமிழர் அனுபவித்திருக்கின்றனர். இவற்றை நாமும் சென்ற இடமெல்லாம் எடுத்து இயம்பிக் கொண்டே வருகின்றோம். ஏன்? தமிழ் பேசும் மக்கள் யாவரும் ஒன்று சேர்ந்து இத்தகைய இழிநிலையை மாற்றி அமைப்பதற்கு வழிதேட வேண்டுமென்பதற்கே,*

*தனிமனிதன் தான் சுதந்திரமாக வாழ்வதற்குத் தனக்கென ஒரு வீடு அமைக்கவிரும்புவது போல, தனிப்பட்ட ஒரு மக்கட் கூட்டம் சுதந்திரமாக வாழ்வதற்குத் தனியரசு வேண்டுவது இயல்பே. நாம் சுதந்திரமாக வாழுவதாயின் எமக்கென ஒரு நாடு, எமக்கென ஒரு கொடி, எமக்கென ஒரு மொழி வேண்டும். நாம் தமிழரென வாழ்வது நமது மொழியைக்கொண்டே, அம்மொழிக்கு ஆட்சிப் பலன் இல்லாதுவிட்டால் அது முன்னோக்கிச் செல்ல முடியாது. எனவே, தமிழர் எங்கு வாழ்ந்தாலும், தமது தாய் மொழியின் உரிமைப் போராட்டத்திற் கலந்து கொள்வது அவர்கள் கடன். தமிழ் இரத்தம் எமது நரம்பில் ஓடிக்கொண்டிருக்கும் வரை நாம் ஒன்று சேர்ந்து செயலாற்றுவோமாயின், எமது உரிமைப் போராட்டம் வெற்றி ஈட்டியே தீரும்.*

தினகரன் 1961, ஜனவரி 27 வியாழக்கிழமை

## 22

# சமுதாயப் பண்பைப் பிரதிபலித்துக் காட்டும் கிராமியக் கலைகள்:

### நாட்டுக்கூத்து அரங்கேற்றவிழாவில் கலாநிதி வித்தியானந்தன் பேச்சு

**“பொதுமக்கள் கலையாகிய நாட்டுக்கூத்துக்களைப் பேணி வளர்ப்பதில் மட்டு நகர் முன்னணியில் திகழ்கிறது. இக்கூத்தை ஆடுபவர் பொதுமக்கள், இக்கூத்தைப்பார்த்துச் சுவைத்து ஆதரவு அளிப்பவரும் பொதுமக்களே. எனவேதான் இது மக்கள் கலையாக வளர்ந்து மக்களின் ண்ணக்கருத்துக்களையும் உள்ளத்துடிப்புக்களையும் பண்பாட்டையும், பிரதிபலிக்கிறது.**

*பொது மக்கள் வாழ்க்கையைக் கொண்டே சமூகத்தில் பண்பாட்டை மதிப்பிடலாம். கிராமிய வாழ்கையே ஒரு மக்கள் கூட்டத்தின் சார்பினை பிரதிபலிக்கின்றது. எந்த இனத்தின் கலாசாரத்தையும் அந்த இனத்திடையே வழங்கும் கிராமிய இசை, கிராமிய பாடல், கிராமிய நடனம், கிராமியக் கூத்து முதலியவற்றைக் கொண்டு கணிக்கலாம்.*

*சனிக்கிழமை இரவு, சிலாபப் பகுதியிலுள்ள மருதன் குளத்தில் நடைபெற்ற மார்க்கண்டேயர் நாட்டுக்கூத்து அரங்கேற்றத்தின் போது இலங்கைக் கலைக்கழகத் தமிழ்நாடக குழுத் தலைவர் சு.வித்தியானந்தன் மேற்கண்டவாறு கூறினார்.*

*அவர் மேலும் கூறியதாவது: நாகரிகம் புதிய முறையில் உருவாகி வரும் இந்தக் காலத்தில் உலகின் பல பகுதிகளில் இன்று கிராமியக் கலைகள் பண்பாடற்றனவென்று ஒதுக்கப்பட்டு வருகின்றன. அண்மையில் உலகைச் சுற்றி வந்தபோது, ஈழத்துத் தமிழரிடையே கிராமியக் கலைகள் போற்றிப் பேணப்படுவதுபோல, வேறெந்த மக்களிடமும் உயிர்த்துடிப்புடன் விளங்குவதை நாம் காணவில்லை.*

*நாட்டுக்கூத்து என்ற உடனே யாழ்பாணம் அல்லது மட்டக்களப்பு என்ற பகுதிகளே மனக்கண்முன் தோன்றுகின்றன. காரணம், ஈழத்திலும் பிற பகுதிகளிலும் தமிழர் பரம்பரை பரம்பரையாக, ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக வாழ்ந்து வருகின்றனர். அங்கெல்லாம் பழைய கூத்து முறைகள் உயிருடன் இயங்குகின்றன என்பதை நாம் அறிவோம்.*


*மருதன் குலத்தில் சைவமக்கள் மத்தியில் இன்று ஆடப்படும் இக்கூத்து, பரம்பரை பரம்பரையாக அண்ணாவிமாராற் பேணப்பட்ட இக்கலை தமிழ் மக்கள் இப்பகுதியில் பழங்காலந்தொட்டே வாழ்ந்து வருகின்றனர் என்பதையும் தமிழர் பண்பாடு இன்றும் இப்பகுதிகளில் காட்சியிளக்கின்றது என்பதையும் திட்டவட்டமாக உறுதிப்படுத்துகின்றது.*

*இப்பொழுது ஒன்பதினாயிரம் தமிழ் பேசம் மக்கள் வாழுகின்ற சிலாபப் பகுதி, ஒரு காலத்தில் தமிழ்ப் பிரதேசமாயிருந்தது என்பதும் இதனால் தெளிவாகின்றது. மருத*

நிலத்தில் இயற்கை வனப்பு சோபித்துக்கொண்டிருக்கும் இக்கிராமத்திலே தமிழ்மொழி முழங்குவதைக் கேட்கும்போது உண்மையிலேயே உள்ளம் உவகைகொள்கின்றது.

சைவசமயம் ஓங்க. தமிழ்க் கலைகள் செழிக்க, தமிழ் எங்கும் பரவ இக்கிராமவாசிகள் செய்துவரும் ஆக்க வேலைகள் தமிழ்ச் சமுதாயத்தின் வருங்கால வளர்ச்சிக்கு வழிகோலுவதாக.

தினகரன் 1961 செப்டெம்பர் 18 திங்கட்கிழமை



1962-63களில் பேராதனை தமிழ்ச்சங்க உறுப்பினர்களாகப் பணியாற்றியவர்களையும், பெரும்பொருளாளராகப் பணியாற்றிய பேராசிரியர் சு. வித்தியானந்தனைப் படத்தில் காணலாம்.

## 23

# இடர்களுக்கு மத்தியில் ஈழத்து எழுத்தாளர்கள்

**இலங்கை சாகித்திய மண்டலத்தின் பரிசு பெற்ற தமிழ் எழுத்தாளர் நால்வரைப் பாராட்டும் முகமாக கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில், அதைத் தொடக்கி வைத்துப் பேசிய இலங்கைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி.சு. வித்தியானந்தன் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவை இங்கே பிரசுரிக்கின்றோம்.**

*உலகத்திலே புகழ் ஈட்டக் கூடிய, நல்ல பணவருவாய் தரக்கூடிய தொழில்களிருக்கத் தமிழ் மொழியைக் கற்றோமே அறிவில்லாமல் என்று தமிழ் எழுத்தாளர் உள்ளம் வருந்தும் காலமிது.*

*சங்ககாலத்திலே தமிழைவளர்க்க, தமிழ்ப்புலவரை ஆதரிக்கச் சங்கங்கள் இருந்தன. இதனாலேயே, தமிழ் இலக்கிய வரலாற்றில், தமிழ் எழுத்தாளரைப் போற்றிய அக்காலப் பகுதியைச் சங்க காலம் என்று பெயர் கொடுத்து அழைக்கின்றோம். அதற்குப் பின் பல்லவ அரசரும் சோழப் பெரு மன்னரும் தமிழ் எழுத்தாளருக்கு உறுதுணையாக இருந்தனர். விசய நகர நாயக்க மன்னர் காலத்தில் மடாலயங்கள் தமிழை வளர்த்தன. வள்ளல்களும் புலவரை ஆதரித்தனர். அதற்குப் பிற்பட்ட காலத்தில், பிற நாட்டவர் ஆட்சி தமிழ் நாட்டில் நிலைத்ததனால், எழுத்தாளரை ஆதரிக்கச் சங்கங்களோ அரசரோ, வள்ளல்களோ அரசாங்கமோ முன்வரவில்லை.*

**எழுத்தாளரும் சுயமுயற்சியும்**

*இத்தகைய சூழ்நிலையில் எழுத்தாளர் தம் முயற்சியைக் கொண்டே முன்னேற வேண்டியிருந்தது. பாரதநாடும் ஈழமும் சுதந்திரம் அடைந்தபோதிலும், தமிழைப் பொறுத்தவரையில் அது எடுப்பார் கைப்பிள்ளையாயிற்று. சென்ற சில ஆண்டுகளாகத் தென்னாட்டில் தமிழ் எழுத்தாளர் சிலரின் படைப்புகளை வெளியிடச் சில பதிப்பகங்கள் முன் வந்த போதும், ஈழத்து தமிழ் எழுத்தாளர் நிலை மிகவும் பரிதாபமாகவே இருந்து வந்திருக்கின்றது. தென்னகத்திற் போல இங்குள்ள பதிப்பகங்கள் நூல்களை வெளியிட இயலாமல் இருந்தன. இத்தகைய சூழ்நிலையில் தமது முயற்சிகளைக் கைவிடாது சில எழுத்தாளர் நூல்களை வெளியிட்டு, இன்று மதிப்பும் பெற்றுவிட்டார்கள். அத்தகைய எழுத்தாளருள் நால்வரைப் பாராட்டுமுகமாகவே நாம் இன்று கூடியுள்ளோம்.*

**இரவல் கேட்பவர்கள்**

*ஓர் எழுத்தாளன் ஒரு உருப்படியான நூலை வெளியிடுவதாயின், மொத்தமாக 2000 ரூபா வாதல் செலவாகும். இந்த ரூபாய் 2000 உம் முன் பணமாகச் செலவழித்தாலல்லாமல் நூல் வெளிவருவதற்கு வேறு வழியில்லை. இப்பெருந் தொகையை முன்னதாகச் செலவழித்தால், முதலும் வட்டியும் கரைந்துவிடுகின்றன. பிறகு இத்தொகையைக்*

காண்டல் அரிது. நூலில் ஆயிரம் படிகள் அச்சானால், நூறு படிகளுக்கு மேல் வீண் செலவாய்ப் போகும்.

நண்பர் பலர் படித்துப் பார்ப்பதற்குப் படி ஒன்று கேட்பார்கள்; பணம் கொடார். படித்தும் பாரார்; பிறருக்கு இரவல் கொடுப்பார் - அவருடைய சொந்தப் பொருள் அல்லத்தானே! ஒற்றை ஒற்றையாகக் கிழியும் வரை இரவல் செல்லும்.

இவ்வாறு நண்பர்களுக்கும் நூறு பிரதிகள் வரை போனால் எஞ்சிய தொள்ளாயிரம் படிகள் விற்பனையாகப் பத்தாண்டு செல்லும். அப்பிரதிகளை அவ்வப்போது விற்றெடுக்கும் சிறு தொகைகளோ உடனுக்குடன் செலவாய்ப் போவதால், நூலை வெளியிடுவதற்கென முன் பணமாகச் செலவழித்த தொகையும் வட்டியையும் திரும்பப் பெறுதலும் இயலாது.

இவ்வாறு நாலு நூல்களை ஒருவர் வெளியிடுவதாக இருந்தால் 10,000 ரூபா கையிற் பொறுக்கும், இத்தொகை முழுமையாய்க் கையில் இருந்தால் மாதம் ஒன்றுக்கு 200 ரூபாய் "சும்மா" இருக்கக் கிடைத்திருக்கும்.

**ஆசிரியருக்கு நூறு கேள்விகள்**

சொந்தச் செலவில் எவ்வளவோ சிரமமெடுத்து நூலை வெளியிட்டாலும் அதற்குக் கைம்மாறாகக்கிடைப்பது வசையே, நூல் அச்சில் இருக்கும் போதே "ஆசிரியருக்கு நூறு கேள்வி" என்று துண்டுப் பிரசுரம் வெளிவரும். இதனாலேயே எத்தனையோ எழுத்தாளர் ஒரு கட்டுரையோடு, ஒரு சிறு கதையோடு, ஒரு கவிதையோடு எழுத்து வேலையைக் கைவிடுகின்றனர். காரணம் பலருக்கு ஒருவரின் எழுத்திற் குறைகாணாது விட்டால் நித்திரை வராது.

எழுதுவதற்குத் தமக்குத் தான் தனியுரிமை உண்டு என்பது அவர்கள் கொள்கை. தாமே நல்ல நூல்களை ஆக்கித் தர ஆற்றலில்லாத அவர்கள், பிறரைக் குறை கூறிக்கொண்டிருப்பதே பாண்டியத்தின் முக்கிய இலட்சணம் என்று கருதுபவர்.

"ஆமை புகுந்த வீடும் அமீனா புகுந்த வீடும் உருப்படாது" என்பது தமிழ் நாட்டுப் பழமொழி. இங்கு குறிப்பிடும் ஆமை, குளத்து ஆமையல்ல. கிணற்று ஆமையுமல்ல இது ஆற்றாமை இந்த ஆமை எந்த ஆற்றுக்குரியது. என்று பார்த்தால் அது அழுக்காாற்றுக்கு உரியது. இந்த அழுக்காறாகிய ஆற்றாமை -பொறாமை - எத்தனையோ மன்னர்களை இருந்த இடம் தெரியாமல் மண்ணோடு சேர்ந்திருக்கின்றது. எத்தனையோ இயக்கங்களில் இந்த ஆமை புகுந்து அவ்வியக்கங்களை இருந்த இடமே தெரியாமல் அழித்திருக்கின்றது. எத்தனையோ சமூகங்கள் இதனால் பாழாகி, முடமாகி, அடிமைப்பட்டிருக்கின்றன. எத்தனையோ மந்திரி சபைகள் உருப்படியான வேலை செய்யாமற் கவிழ்ந்திருக்கின்றன. இந்த ஆமை புகுந்த இடம் எல்லாவற்றையும் குட்டிச் சுவராக்கி விட்டது.

**ஓட்டக்கூத்தன் மாளிகையில்**

இந்தப் பொறாமை தமிழ் எழுத்தாளரையும் விட்டு வைக்கவில்லை. எம்முன்னோர் எமக்கு அளித்த செல்வத்தில் முதுசத்தில், சொத்தில் இதுவுமொன்று. ஒட்டக்கூத்தர்

*புகழேந்தி மீது கொண்ட பொறமை பற்றிய கதைகள் நீங்கள் அறிந்தவையே. தம்மீதும் தமது நூலின் மீதும் பொறாமைப்பட்டு, வீண் குற்றஞ் சுமத்தித் தமக்கு இடையூறு விளைவித்த ஒட்டக் கூத்தரைப் புகழேந்தியார் எவ்வகையிலும் மறைந்திருந்து, இரவில் யாரும் அறியாதவாறு தூங்கும் போது கொன்றுவிட்டால் துன்பம் தொலைந்து விடுமெனக் கருதி ஒரு நாளிரவு ஓட்டக் கூத்தர் மாளிகையில் நுளைந்து அவர் பள்ளியறையின் மஞ்சத்தின் கீழ்த் தங்கியிருந்து, அவர் அயர்ந்து நித்திரை கொள்ளும் போது கல்லால் எறிந்து கொல்லக் காத்துக்கொண்டிருந்ததாகக் கதை வழங்குகின்றது.*

*இக்கதையின் உண்மை பொய் எவ்வாறிருப்பினும் அக்காலத்திலும் எழுத்தாளருக்கிடையே பொறாமை நிலவிவந்ததென்பது தெரிகின்றது.*

*பாரதியார் புதுமைக் கவிகள் பாடிப் புகழ்பெறுவதைக் காணப் பொறுக்காத சில பெரும் "புலிகள்" அவரது மனைவியாரை அணுகி "அடுத்த வீட்டுப் பெண்களெல்லாம் நல்ல ஆபரணங்கள் அணிந்திருக்கிறார்கள். உனக்கும் அத்தகைய அணிவகைகள் வேண்டுமெனக் கணவனைத் தொல்லைப்படுத்து" எனத் தூண்டினார்களாம். ஆக்கினைகள் பொறுக்க இயலாது பாரதி தற்கொலை செய்து கொள்வார் என்பது அவர்கள் கருத்து.*

*1868 ம் ஆண்டு புரட்டாதித் திங்கள் தொல்காப்பியம் சொல்லதிகாரம் சேனாவரையும் தாமோதரம்பிள்ளை பதிப்பு வெளிவந்தது. அதனைக் கண்ட சென்னைப்புலவருள் ஒரு பகுதியினர், ஆற்றாமை மிக்கு. அழுக்காறுகொண்டனர். அவருள் ஒருவரான இராசகோபாலபிள்ளை சூழ்ச்சியொன்று செய்தார். தாமோதரம்பிள்ளையின் சேனாவரையப் பதிப்பு வெளிவந்தபின் - இரண்டு திங்களுக்கு அப்பால் - கார்த்திகை மாதத்தில் தன்பெயரால் சேனாவரையத்தை வெளியிட்டார். அது ஒரு கள்ளப்பதிப்பு. தாமோதரம்பிள்ளை பதிப்பின் முகப்பபையும் சில பாகங்களையும் மாற்றிப் பதிப்பித்த பதிப்பு.*

**வடக்கே நோக்கும் பண்பு**

*இவ்வாறு ஆதரவின்னை பண அழிவு, வசை, பொறாமை எனப்பல தொல்லைகளைத்தாண்டி நூல்களை வெளியிட வேண்டிய வில்லங்கங்கள் எழுத்தாளருக்கு உண்டு. ஈழத்து எழுத்தாளர் இன்னுமொரு இடைஞ்சலைத் தாண்டவேண்டி இருக்கின்றது. அது தான் வடக்கு நோக்கும் பண்பு.*

*ஈழத்தில் தமிழ் விழாவென்றால், வடக்கே தென்னகத்திலிருந்து இரண்டொரு பேச்சாளரை இறக்குமதி செய்தாலொழிய விழா உருப்படாது. தாயகத்துப் பேச்சாளர் என்றால் கைதட்டி, கேட்போரை இன்னும் சகிக்க வைப்பர். தமது பேச்சாளர் எனின், கைதட்டி, விரைவில் இருந்துவிடச் செய்வர். ஏன். இனி நிறுவ இருக்கும் இந்துப் பல்கலைக்கழத்திற்குப் பேராசிரியர்களை தென்னாட்டிலிருந்து தானாம் வரவழைக்கப்போகின்றார்கள்!*

*தமிழ் முறைப்படி திருமணம் நடந்தால், அதனை நடத்திவைக்கத் தாயகத்திலிருந்து ஒருவர் வரவேண்டும். ஈழத்து எழுத்தாளர் நூல் ஒன்றினை வெளியிடுவதாயின் வடக்கேயிருக்கும் ஒருவர் தான் தலைமை தாங்கவேண்டும். தலைமை தாங்க வருபவர்,*

*விருந்தாளியாக வருபவர், "உங்கள் இடம் என்ன பண்டம் இருக்கின்றது எழுத்தாளர் என்றால் தமிழக எழுத்தாளர் அல்லவா நல்ல உருப்படிளை ஆக்குகின்றார்கள். ஈழத்தில் சிறந்த எழுத்தாளர் இல்லை" என்று கூறுமளவுக்கு வடக்கே நோக்குகின்றோம்.*

*இதனாலேயே இன்று ஈழத்தில் தமிழ் எழுத்தாளர் முன்னேற முடியாமல் இருக்கின்றது. ஈழத்து அறிஞர் ஒருவர் கட்டுரை எழுதினால் அதற்குமதிப்பில்லை; ஈழத்து எழுத்தாளர் ஒருவர் சிறுகதை எழுதினால் நாம் அதை விரும்பிப் படிப்பதில்லை. இதனைப் பயன்படுத்தியே தென்னாட்டில் வெளிவரும் மாத, கிழமைப் பத்திரிகைகளின் ஆசிரியர்கள், சாத்திரப்படிக்கு இடையிடையே யாராவது ஒரு ஈழத்து எழுத்தாளரின் கதையையோ கட்டுரையையோ வெளியிட்டு, ஈழத்தில் பல்லாயிரக்கணக்கான பிரதிகளை விற்கின்றனர். ஆகவே ஈழத்து எழுத்தாளர் சொந்த நாட்டிலே சொந்த மக்களால் புறக்கணிக்கப்படும் இன்னலையும் சமாளிக்க வேண்டியவராக இருக்கின்றனர்.*

**மாண்டபின் மணி மண்டபம்**

*பாரதியார் கவிதை பாடிய காலத்தில், முதன் முதலில் அவர் பாடல்களைச் "சுதேச மித்திரன்" வெளியிட விரும்பவில்லை தென்னத்திற்கு வந்த ஆங்கிலப் பெரியார் ஒருவர் அவர் பாடல்களை ஆங்கிலத்திற் பெயர்த்து வெளியிட்டு மதிப்பிட்ட போது, சுதேசமித்திரன் ஆசிரியரிடமிருந்த ஓலை வந்தது. " பாடித் தள்ளுங்கள்" நாம் வெளியிடுகிறோம் என்று.*

*பிறநாட்டான் ஒருவன் சிறந்தது என்றுகூறும் வரை பாரத நாடே பாரதியை மதிக்கப் பின் வாங்கியது. இதுபோலவே ஈழத்துஎழுத்தாளரின் சிறுகதையை அல்லது உரை நடை நூலைத் தென்னகத்திலிருந்து வெளியாகும் பத்திரிகைகள் சிறந்த படைப்புகளென்று கணித்த பின்பே நாமும் வேறொன்றும் செய்ய முடியாது, போற்றுகின்றோம்.*


*சிறந்த எழுத்தாளர் உயிரோடிருக்கும் போது அவர்களைச் சிறிதும் மதிக்காமல், அவர்கள் ஆக்க வேலைகளைப் போற்றாமல் எழுத்தைப் பின்பற்றாமல், அவர்கள் வருந்தும்போது ஒரு வேளை உணவுக்கும் வழி செய்யாமல், மாண்ட பிறகு மணி மண்டபம் கட்டுவதும், காலடிபட்ட மண்ணை எடுத்து கண்களில் ஒத்துவதும், மாண்டாயோ மன்னவனே" என மாரடித்து அழுவதும், படந்திறப்பதும், வாழ்த்துக் கவிகள் பாடுவதும், பூமாலை சாற்றிப் போற்றிப் புகழ்வதும் வழக்கமாய் விட்டன. சிலர் இன்னும் ஒருபடி தாண்டி, வாழ்ந்த போது வைது கொண்டிருந்தவர் மாண்ட பிறகு மாறி நாட்டிற்கு அவர் பெயரும் ஊருக்கு அவர் சிலையும் வேண்டுமென ஆலோசனை கூறுவதுண்டு. இத்தகைய ஒரு சமுதாயத்திலே தான் நம் எழுத்தாளர் உருப்படவேண்டியிருக்கின்றது.*

தினகரன் 1961 செப்டெம்பர் 28 வியாழக்கிழமை

# 24

## ஈழத்துத் தவப் பெரு நடிகர் – கலையரசு சொர்ணலிங்கம்

**அறுபது ஆண்டுகள் மேடையிலே தோன்றி, நாடக அறிஞராற் சிறந்த குணசித்திர நடிகரெனப் போற்றப்பட்டவரும், ஈழத்திலே தமிழ் நாடகத்துக்குத் தனிமதிப்புத் தேடிக்கொடுத்தவருமான கலையரசு சொர்ணலிங்கம் அவாக்ள் "எனது நாடக அனுபவங்கள்" என்னும் தலைப்பில் எழுதும் புதிய கட்டுரைத் தொடரை ஆரம்பிக்குமுன்னர், அன்னார் நாடகத்துரைறயிலே ஆற்றியுள்ள ஈடிணையற்ற தொண்டுகளை நினைவூட்டுமுகமாகக் கலாநிதி சு. வித்தியானந்தன் அவர்கள் எழுதியுள்ள இக்கட்டுரை வெளியிடப்படுகின்றது.**



*ஆங்கில மோகத்திலே மூழ்கி ஆங்கில நாடகங்களையே மக்கள் சுவைத்து வந்த காலத்தில், தமிழ் நாடக மேடையிலே தோன்றியவர்களைக் கூத்தாடிகளென மக்கள் இகழ்ந்து ஒதுக்கிய காலத்தில், துணிவுடன் மேடையிலே தோன்றிக் கல்வியறிவுடைய பெரு மக்கள் நாடத்தில் நடிப்பதன் மூலம் அக்கலையைத் தூய ஒரு கலையாக வளர்க்கலாமென்பதைச் செயலிற் காட்டிய பெருமை ஈழத்துத் தவப்பெரு நடிகர் கலையாரசு சொர்ணலிங்கம் அவர்களுக்கு உரியது.*

### அறுபது ஆண்டு நாடக வாழ்வு

*1901ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31ம் நாள் மேடையேறிய, அந்நாடக மேதை அறுபது ஆண்டுகள் நடித்த தினம் இன்றாகும். 73ம் வயதிலும் துடிதுடிப்பு மிகும் இயற்கை நடிப்புடன் நடிக்கும் பெருமை கலையரசையே சாரும்.*

*நாடகச் சபை ஒன்றில் அங்கத்துவம் வகிப்பது மிகவும் இழிவாகக் கருதப்பட்ட காலத்திலே, 'இலங்கா சுபோத விலாச சபா' என்றொரு நாடக மன்றத்தினை 7.7.1913இல் நிறுவி, பல இடையூறுகளுக்கும் எதிர்ப்புக்களுக்குமிடையே அதனை வளர்த்து, நாடகத்துறையில் ஒரு விழிப்பையும் எழுச்சியையம் உண்டாக்கியவர் கலையரசே. அக் காலத்திற் சென்னையிற் றொழிற்பட்டு வந்த 'சுகுண விலாச சபை'யினரின் நாடகங்களின் தரத்திற்குக் குறைந்ததல்ல இவர்கள் அளித்த நாடகங்களின் தரம் என்ற பாராட்டைப் பெற்றிருந்தது இலங்கா சுபோத விலாச சபா, நாடகம் ஆடுவதைத் தொழிலாகக்கொண்ட நடிகர்கள் அக்காலத்தில் இந்தியாவிலிருந்து இங்கு வந்து நடித்தபோது, இலங்கா சுபோத விலாச சபாவுக்கு வந்தனம் செலுத்தினர். ஒவ்வொரு நடிகரும் இச் சபாவுக்கு வணக்கஞ் செலுத்து முகமாக ஒரு பாட்டைப்படித்த பின்னரே நடிக்க முன்வருவர். இத்தகைய பெயர் - பிறரும் தலைசாய்க்கும் கியாதி - அன்று இச்சபாவுக்கு இருந்தது.*

### குணசித்திர நடிப்பின் சிறப்பு

*இருபதாம் நூற்றாண்டில் ஈழத்தில் நாடகத்திற்குப் பெருமையுஞ் சிறப்பும் இப்பெரியாராலேயே ஏற்பட்டன எனக்கூறின், அது மிகையாது. தென்னிந்தியாவிலுள்ளவர் மட்டுமல்ல, மேலை நாட்டவரும் இவரைச் சிறந்த குணசித்திர நடிகரெனக்*

*கணிக்கின்றனர். முதன் முதல் 1901ம் ஆண்டில் அரிச்சந்திர நாடகத்தில் லோகதாசனாக நடித்த இப்பெருந்தகை, 1916ம் ஆண்டு வேதாள உலகத்தில் தத்தனாக நடித்தபோது சிறந்த நடிகரெனப் பாராட்டப் பெற்றார். இவரது நடிப்பும் ஒப்பனையும் பெரிதும் கொண்டாடப்பட்டன. தத்தன் பாத்திரமும் சோறு பச்சடி என்ற பாட்டும் இவரை மக்கள் முன்னிலையில் பேர்பெறச் செய்தன. 'பாதுகா பட்டாபிஷேகம்' என்னும் நாடகத்திற் கூனியாக நடித்தபோது பல நாட்டவரின் பாராட்டைப் பெற்றார். பலர் இப் பாத்திரத்தில் இவரைப் பல தடவை பார்க்க விரும்பினர். இதற்குரிய ஒப்பனை இவரது சொந்தக் கற்பனையே. இன்றுவரை எவரும் இத்தகைய ஒப்பனையை நாடகத்திலோ திரையிலோ செய்யவில்லை. 1917ம் ஆண்டிலிருந்து எழுபது தடவைக்கு மேற்படக் கூனியாக நடித்திருக்கின்றார். கடைசியாகக் கூனியாகத் தோன்றியது 1950ம் ஆண்டில். அப்போது சமூகமளித்திருந்த திரு.வி.வி.கிரி இவரது குணசித்திர நடிப்பையும் ஒப்பனையையும் சிறப்பாகப் பாராட்டிப் பேசினார்.*

**ஆங்கிலேயரின் பாராட்டுரை**

*கலையரசு 'அயன்பார்ட்' ஆடுவது, அதாவது கதாநாயகன் பாத்திரம் தரிப்பது, மிக அருமை; குணசித்திர நடிப்புத் தேவைப்பட்ட பாத்திரத்தை நடிப்பதே வழக்கம். முதன்முதல் இவர் கதாநாயகனாக நடித்தது மனோகரனில். இதில் மனோகரனாக நடித்துப் பல திறப்பட்டவரின் புகழுரையைப் பெற்றார். ஒருமுறை கடற்படையைச் சேர்ந்த ஆங்கிலேய உத்தியோகத்தர் ஒருவர் கலையரசு மனோகரனாக நடித்ததைப் பார்க்கும் வாய்ப்புப் பெற்றார். அவர் அக்காலத்தில் நாடகத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்துகொண்டிருந்தவர். இலங்கா சுபோத விலாச சபா'வுக்குப் போகும் வழி விசாரித்து, அங்கு சென்று சொர்ணலிங்கம் அவர்களின் நடிப்பைப் பெரிதும் போற்றினார். இவ்வுத்தியோகத்தர் தமது கப்பல் தங்கிய பல துறைமுகங்களில் நாடகம் பார்த்ததுண்டு. தான் இதுவரை கண்ட மிகச்சிறந்த நடிகர் இவர் என்றும் தமிழ்மொழி அறிவில்லாதபோதும் இவரின் முகபாவனையாலும் நடிப்பாலும் இவர் கூறிய யாவற்றையும் விளங்கக்கூடியதாய் இருந்ததென்றும் கூறினார். 1918ம் ஆண்டு தொடங்கி 1947ம் ஆண்டுவரை மனோகரனாக நடித்தபோது, செய்தித் தாள்கள் பல இவர் நடிப்பைப்பற்றிச் சிறந்த மதிப்புரைகள் வெளியிட்டிருந்தன.*

**இசைவாணியின் புகழ் மாலை**

*செகசிற்பியார் எழுதிய வெனிஸ் வர்த்தகன் என்னும் நாடகத்தில் 1919ம் ஆண்டில் சைலொக்கா நடித்தார். பிற்காலத்தில் யாழ்ப்பாணச் சங்கீத அபிவிருத்திச் சபையினரால் இந்நாடகம் ஆடப்பட்டபோது இப்பாத்திரம் இவருக்குப் புகழ் ஈட்டியது. செகசிற்பியார் நாடகங்களை ஆங்கிலத்திற் படித்து அத்துறையிற் கைதேர்ந்தோர் இவரின் நடிப்பு மிகவும் சிறப்பாக இருந்ததெனக் கூறினர். பம்பாயிலிருந்து வந்த லலிதா வேங்கடராமன் என்னும் இசைவாணி இவர் நடித்ததைப் பார்த்ததும் திரையிலே நடிப்பதற்கு இவரை இந்தியாவிற்கு அனுப்பும்படி இவரின் மனைவியாரை வற்புறுத்தினாராம்! ஆனால் இவருக்கு அந்த நோக்கம் இருந்தால் தானே!*

*1921ஆம் ஆண்டில் அரிச்சந்திர நாடகத்தில் விசுவாமித்திரனாக நடித்தார். இவர் இதனையே தனது சிறந்த படைப்பெனக் கொள்வர். ஒப்பனை, நடிப்பு, குரல் முதலியன இவரது சொந்தக் கற்பனையின் விளைவுகளே. இந்தியத் தேசிய காங்கிரசின்*

அக்காலத்தலைவராக இருந்த ஸ்ரீநிவாசஐயங்கார் இந்நாடகத்தைப் பார்த்ததும் இவரைப் போன்ற சிறந்த நடிகரைத் தாம் இந்தியாவிலும் காணவில்லை எனப் புகழ்மாலை சூட்டினார்.

**புகழ் அளித்த பாத்திரங்கள்**

1922ம் ஆண்டில் பரதன் பாத்திரத்தை 24 மணித்தியால அறிவிப்பில் நடிக்க வேண்டியிருந்தது. எனவே கூனியாக நடிப்பதோடு, பரதன் பாத்திரத்தையும் தரித்தார். ஒப்பனை ஆற்றலால் தனது தோற்றத்தை மாற்றி அமைத்து, மக்களின் உள்ளத்தைக் கவர்ந்தார். இவர் சிறந்த இலட்சணங்களோடு தோற்றமளித்ததாகப் பாராட்டப்பெற்றார். இதற்குமுன் நடிக்கப்படாத முறையில் இப்பாத்திரத்தை அமைத்து நடித்தார்.

1940ஆண்டில் ஸ்ரீவள்ளியில் சின்னக்குட்டியாக நடித்ததும் குறிப்பிடத்தக்கது. இதுவும் இவருக்கு மிகவும் படித்ததொரு பாத்திரம்; பலர் பாராட்டையும் பெற்றது. இவையே இவருக்குப் பெரும் புகழ் தேடிக்கொடுத்த சில பாத்திரங்கள். இவர் பங்குபற்றிய சமூக நாடகங்கள் பல. அவற்றைக் குறிப்பிடின் பெருகும். ஆயினும் இரு பாத்திரங்கள் மிகவும் கீர்த்தி பெற்றவை. ஒன்று நூற்றொரு வியாதிக்கிழவன்; மற்றது டி.எஸ்.சேனநாயக்கா பல கிழவரின் வியாதிகளை அவதானித்து நடித்ததே முதற் பாத்திரம். இது கதம் பக் கலை நிகழ்ச்சி ஒன்றில் 1918ம் ஆண்டில் முதன் முதல் நடிக்கப்பட்டு, இது வரை நூறு தடவைக்கு மேற்பட நடிக்கப்பட்டுள்ளது. இதனை ஓடியன் கம் பெனியார் ஒலிப்பதிவு செய்தனர். ஒலிப்பதிவு செய்யப்பட்ட தட்டுக்களில் பல ஆயிரக்கணக்கான பிரதிகள் விலைப்பட்டுவிட்டன.

கூட்டுறவு நாடகமொன்றில் 1950ல் கலையரசு டி.எஸ்.சேனநாயக்காவாக நடித்தார். அன்று சமூகமளித்திருந்த சிங்கள மந்திரிமாரும், உயர் உத்தியோகத்தரும் இவர் மேடைக்கு வந்தபோது ஆச்சரியத்தாற் பிரமித்துப் போயிருந்தனர். இவரது தோற்றமும் நடிப்பும் காலஞ்சென்ற பிரதமர் சேனநாயக்காவின் தோற்றத்தையும் செய்கைகளையும் முற்றிலும் ஒத்திருந்தன.

**தன்னடக்கம் உள்ள கலைஞர்**

கலையரசு நமது நடிப்பைப் பற்றி ஒருபோதும் பெருமைப்படுவதில்லை. தன்னிடம் பயிற்சி பெற்ற நடிகரைப்பற்றியே பெருமையாகப் பேசுவார். இவரிடம் பயின்றவர்கள் நல்ல முறையிற் பயிற்சி பெற்றதுமன்றிப் பலருக்குத் தாமும் ஆசிரியர்களாக இருந்து பயிற்சி அளித்திருக்கிறார்கள். இவர் தயாரித்து இயக்கிய நாடகங்கள் 500க்கு மேற்பட்டவை. இவற்றில் ஒரு நாடக மேனும் தோல்வி காணவில்லை. இவரிடம் நேரிற் பயிற்சி பெற்றவர் தொகையும் 500க்கு மேற்பட்டதே. ஈழத்தின் எப்பகுதிக்குச் சென்றாலும் இவரிடம் பயின்று நடித்தவரைக் காணலாம். இது இவருக்குப் பெரும் மகிழ்ச்சியையும் திருப்தியையும் அளிக்கின்றது. இருந்தும், தமது குரு என்று இவர் பெயரைச் சொல்லி வாழும் நடிகர் சிலர் மறைமுகமாக இவரைத் தூற்றுகின்றனர் என்ற செய்தி அண்மையில் இவர் காதுக்கெட்டி ஓரளவுக்கு மனவருத்தத்தையும் அளிக்கின்றது.

கலைக்காகத் தமது நேரத்தையும் பணத்தையும் தாராளமாய்ச் செலவிட்டிருக்கின்றார். இப்பொழுதும் ஓய்வுச் சம்பளத்திலிருந்து நாற்பது வீதத்திற்கு மேல் நாடகக் கலைஞரை ஊக்குவிப்பதிற் செலவாகின்றது. இரு கிழமைகளுக்கு முன் அவரைக் காண்பதற்கு

நவாலிக்கு இரவு 8 மணிக்குச் சென்றபோது யாழ்ப்பாணத்திற்கு நாடக ஒத்திகை பார்ப்பதற்குச் சென்றுவிட்டதாகக் கூறினார்கள். இந்த வயதிலும் இரவிரவாக நாடக ஒத்திகை! சென்ற ஞாயிறு வட்டுக்கோட்டையில் இரவு முழுவதும் பழைய முறைப்படி ஆடப்பட்ட நாட்டுக்கூத்தைப் பார்க்கவும் வந்திருந்தார்!

இவர் நடித்த நாடகங்களைப் பார்க்க வருவோர் ஒரு நாடகத்திலாவது இடையில் எழுந்துபோனதில்லை. இறுதிவரை அமைதியாக இருந்து ஆவலுடன் பார்த்தே செல்வர். இது இவரின் நடிப்புத் திறனுக்கும் தயாரிப்பு ஆற்றலுக்கும் நல்லதொரு சான்று. சென்ற மாதம் கலைக்கழகத் தமிழ் நாடக விழாவில் 'வழி தெரிந்தது" என்னும் நாடகத்தில் தோன்றிய போது மக்கள் இவருக்கு அளித்த வரவேற்பும், நடித்தபோது பாராட்டிச் செய்த கரகோஷமும், இவரது நடிப்பு இன்றும் பாராட்டப்படுவதைக் காட்டுகின்றன.

**மக்களை ஈர்க்கும் அரிய குணங்கள்**

நாடக உலகில் இவர் அடைந்த புகழுக்குக் காலாக இருந்தவை, இவரிடம் காணப்படும் அரிய குணங்களே. தூய கலைஞன் என அறிஞர் கருதிப்போற்றும் அற்புத குணங்கள் பல அமையப்பெற்றவர் இவர். ஆணவமும் தற்பெருமையும் நீக்கித் தன்னடக்கம் பெரிதும் கொண்டு, பொறாமையை அறவே அகற்றிப் பிறரின் கலைத்திறனைப் பெரிதும் மதிக்கும் பெருங்குணம் படைத்த சீரிய ஒழுக்கம் வாய்ந்தவர் கலையரசு சிறந்த நடிகனாக விளங்க விரும்புவோன் தன்னை மறக்க வேண்டுமென இவர் அடிக்கடி கூறுவர். 'நான்' என்பதை மறத்தலே 'தன்னை மறக்கவேண்டும்' என்பதன் பொருள். ஒருவன் மேடையிலே தோன்றி நடிக்கும்போது தான் நடிப்பதாக எண்ணக்கூடாது. என்ன பாத்திரமாக நடிக்கிறானோ, அப்பாத்திரமே தான் என்ற உணர்ச்சியைப் பெற வேண்டும். 'நான் நடிக்கிறேன்'என்ற எண்ணத்தைக் கைவிட்டு, நடிக்கும் பாத்திரத்தைச் சரியாக உணர்ந்து, அதற்கு ஏற்றவாறு பேச்சினையும் முகபாவத்தையும் அங்க அசைவுகளையும் பிறவற்றையும் அமைத்துக் கொள்ளவேண்டும். எனவே இவர் சிறந்த நடிகராக விளங்குவதற்குரிய காரணங்களுள் ஒன்று 'நான்' என்ற அகங்காரத்தை அகற்றியதேயாகும்.

அறுபது ஆண்டு நடித்து அனுபவம் பெற்றபோதும், தான் செய்வதே சரி என்ற அகங்காரம் கொள்ளமாட்டார். எந்த நாடகப்பாத்திரத்தை ஆட முன் வந்தபோதும் பிறர் அபிப்பிராயத்திற்குச் செவிசாய்த்தே ஆடுவார். ஒத்திகை வேளைகளிற் பிறநடிகரின் கருத்துக்களையும் கேட்டுத் தான் செய்வது தான் தரிக்கும் பாத்திரத்திற்கு அமைந்ததாவெனத் தெரிந்து கொள்வர். கற்றார் கல்லார், இளையோர் முதியோர் யாவரிடமும் அபிப்பிராயம் கேட்பார். மேடைக்குப் போகமுன் தன் உடை அலங்காரத்தை காட்டி, தான் தரிக்கும் முகபாவம், நிலை, நடை, பேச்சு முதலியவற்றைச் செய்து காட்டி, அவர்களது எண்ணங்களையும் கேட்டுச் சீர்படுத்திக்கொள்வார்.

**எப்பாத்திரத்திலும் நடிக்கும் பண்பு**

இவரிடம் சுயநலம் தாண்டவமாடுவதில்லையென்பதற்கு இன்னோர் எடுத்துக்காட்டு இவர் கதாநாயகன் பாத்திரத்தைத் தனக்குத் தேடிக்கொள்ளாமையே. சிறிய பாத்திரமாக இருந்தாலும் அப்பாத்திரத்திற்குரிய குணங்கள் வெளிப்படக்கூடிய முறையில் நடிக்க முடியுமானால் அதனை ஏற்றுக்கொள்வர். 1922ம் ஆண்டில் இலங்கா சுபோத விலாச சபா இலங்கைத் தமிழ் நாடக சபாவாக மாற்றி அமைக்கப்பட்டபோது "லீலாவதி

சுலோசனா" என்னும் நாடகத்தில் கொலையை நிறைவேற்றுவோன்' பாத்திரமே இவருக்கு ஏற்றதென நிர்வாகக்குழு தீர்மானித்தபோது, அம்முடிபை உவகையோடு ஏற்று நடித்தார். இது இவரது அடக்கத்திற்குத் தக்க சான்று.

இன்று கலையுலகிலே பொறாமை தாண்டவமாடுகின்றது. கலையைப் பொறுத்தளவில் எல்லோரும் விமர்சகரே என்ற எண்ணம் இன்று இருந்து வருகின்றது. நாடகப் பயிற்சியில்லாதவர், நடித்தறியாதவர், நாடகம் தயாரித்தறியாதவர், சொந்தமாக நாடகநூல் எழுதாதவர், நாடக வரலாறு அறியாதவர், நாடகம்பற்றி அதிகாரத்துடன் முடிவான கருத்துக்கள் தெரிவிக்கும் காலமிது. சிறந்த நாடக நூலை எழுதும் ஆற்றல் இல்லாதவர். சிறந்த நாடகங்களைத் தயாரிக்கத் தெரியாதவர், பத்திரிகை ஆசிரியர் சிலரின் துணைகொண்டு ஆக்கவேலை செய்து வருவோரைப் பண்பாடற்ற முறையில் இகழ்ந்து தமது ஏமாற்றத்துக்குப் பழிதீர்க்க வாயில் பார்க்கும் காலம் இது. எதிலும் நன்மை காண இயலாதவராய், பழுத்த அனுபவம் பெற்றவர்களைக்கூடப் பரிசளிப்பு விழா நாடகத் தயாரிப்பாளர் என்று மானமும் கூச்சமுமின்றித் தாக்கிப்பேசி எழுதும் நாடகாபிமானிகள் செழித்தோங்கும் காலம் இது. சொந்தப் பெயரில் நடமாடத் துணிவின்றிப் புனைபெயர்களிற் பதுங்கித் தாக்கியும் கையொப்பங்களில்லாக் கடிதங்கள் எழுதியும் காலைத்தூக்கி நின்று ஆடும் போலிக்கலை இராசாக்கள் மத்தியில் பிறர் கலை ஆக்கத்திற்கு மதிப்புக் கொடுத்து அவர்களை மேன்மேலும் ஊக்குவிக்கும் பெருமுள்ளம் படைத்த உண்மைக்கலை இராசாவாகத் திகழ்கிறார் சொர்ணலிங்கம். எந்தக் கலை நிகழ்ச்சியையம் இவர் இகழ்ந்து கூறியதில்லை. எந்த மன்றத்தினையும் தாக்கியதில்லை. நாடகங்களிற் குறைகண்ட இடத்தில் அவற்றைப் பண்பான முறையில் எடுத்துக்காட்டி, விருத்திக்கேற்ற ஆலோசனை கூறுவார். சிறந்த நடிகரைத் தேடிச் சென்று பாராட்டுவார். பண்பட்ட கலைஞன் என்பதைத் தன் நடத்தையாற் காட்டுவர். கலைஞனுக்குப் பொறாமை அடியோடு இருக்கக்கூடாதென்றும், பிறகலைஞரைப் பாராட்டும் பண்பு எப்போதும் இருக்க வேண்டும்மென்றும் தம்மிடம் பயிற்சி பெறுவோருக்கு வற்புறுத்தி யுரைப்பதோடு நில்லாது தாமே அதனைச் செயலிலும் காட்டி வருகின்றார். இதனாலேயே பகைவர் எவருமின்றிக் கலைத்தொண்டு செய்து வருகின்றார். குறைகாணுவதையே தமது குறிக்கோளாகக்கொண்ட நஞ்சரின் கண்டனங்கள் இவரின் பெருமையைப் பன்மடங்கு பொலிவோடு தோன்றச் செய்கின்றன.

**வாழ்க்கையில் பல இன்னல்கள்**

மற்றைய கலைஞரைப் போலவே இந்த அறுபதாண்டு மேடை வாழ்க்கையிற் பல இன்னல்களும் இடையூறுகளும் அனுபவத்திருக்கின்றார். ஆனால், தடைகளும் மறுப்புக்களும், மேற்கொண்ட காரியம் ஈற்றில் நன்றாக முடியும் என்பதன் அறிகுறிகளே. தனது சீரிய ஒழுக்கத்தினாலேயே இன்றும் பெருமிதத்துடன் மேடையிலே தோன்றக் கூடியவாராயிருக்கின்றார். இதனாலேயே, நடிகரின் ஒத்துழைப்பை முற்றாகப் பெற்று ஒழுங்கான முறையில் நாடகங்களைத் தயாரித்தளித்திருக்கின்றார்.

1889ம் அண்டு மார்ச் மாதம் 30ம் நாள் பிறந்த இப்பெருந்தகை, மானிப்பாய் மெமோறியல் கல்லூரியிலும் யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரியிலும் பயின்று 1907ம் ஆண்டில் கேம்பிறிஜ் சீனியர் தேர்வில் தேர்ச்சிபெற்றார். படிப்பிற் பல பரிசில்கள் பெற்ற சொர்ணலிங்கம் அவர்கள் விளையாட்டிலும் புகழுடன் விளங்கினார். கல்லூ

*ரிக் கிறிக்கெற் கோஷ்டியிலும், உதைபந்தாட்டக் கோஷ்டியிலும் விளையாடியதோடு அமையாது, கல்லூரிக் கிறிக்கெற் கோஷ்டிக்கு நான்கு ஆண்டுகள் தலைமையும் வகித்தார். சிறு வயதிலேயே நாட்டுக் கூத்து, மேடை நாடகம் முதலியவற்றைத் தவறாது பார்த்து வந்தார். பிறர் நடித்தவாறு வீட்டில் தனது பெற்றோருக்கும் அவர்களின் நண்பருக்கும் நடித்துக் காட்டினார். இவரது தகப்பனாரின் ஊக்கமும் இவருக்கு இத்துறையில் விருப்பத்தை உண்டாக்கிறது.*

**எண்ணற்கரிய தொண்டுகள்**

*இவர் பயிற்சியளித்து நாடகம் தயாரித்துதவிய மன்றங்கள் பல. இலங்கா சுபோத விலாச சபா, வித்திய விநோத சபா, இலங்கைத் தமிழ் நாடக சபை, வெள்ளவத்தை நாடக மன்றங்கள், அனுராதபுரத் தமிழ் நாடகச் சங்கம், புத்தளத் தமிழ் நாடகமன்றம், யாழ்ப்பாணச் சங்கீத அபிவிருத்திச் சங்கம். யாழ்ப்பாண நுண்கலைக் கழகம், யாழ்ப்பாணக் கலாமன்றம் போன்றவை இவர் தயாரிப்பிற் பல நாடகங்களை அரங்கேற்றியிருக்கின்றன. ஆனந்தக் கல்லூரி, பரியோவான் கல்லூரி, யாழ்ப்பாண இந்துக் கல்லூரி, வேம்படி மகளிர் உயர் தரக் கல்லூரி, மானிப்பாய் மெமோறியல் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி போன்ற கல்லூரிகளின் தமிழ்ச் சங்கங்கள் மூலம் மாணவருக்கு நாடகத் துறையிற் பயிற்சியளித்து வருங்கால நடிகர்பலரை உருப்படுத்தியிருக்கின்றார்.*

*தொடர்ச்சியாக, அறுபது ஆண்டு மேடையிலே தோன்றி, நாடக அறிஞராற் சிறந்த குணசித்திர நடிகர் என்றும் திறம் வாய்ந்த தயாரிப்பாளர் என்றும் ஈழத்திற் கணிக்கப்பட்டவர் வேறு எவரும் இலர். ஈழத்திலே தமிழ் நாடகத்திற்கு மதிப்புத் தேடிக் கொடுத்தவர் கலையரசு அவர்களே. நாடக மேடை அனுபவங்களைப் பற்றி அவரோடு உரையாடுவதே ஓர் அனுபவம். தனி இன்பம், நாடக நற்கலையின் முன்னேற்றம், நாட்டினிலே பரவி நிற்க எண்ணற்ற பணிகள் பல செய்யும் கலையரசு சொர்ணலிங்கம் மேலும் பல்லாண்டு தொண்டு செய்ய இறைவன் அருள்வாராக.*

தினகரன் 1961 டிசெம்பர் 31 ஞாயிற்றுக்கிழமை

## 25

# பண்பட்ட கலைஞர்

**இன்று நாடகத்துறையில் விழிப்பும் புத்துணர்ச்சியும் தோன்றியுள்ளன. தாய் மொழிக்கும் மக்கள் கலைக்கும் மதிப்பு ஏற்பட்டுள்ள இக்காலத்தில் இத்தகைய உணர்ச்சிகள் வெளிப்படுவது இயற்கையே. இன்றைய சூழ்நிலையில் நாடகத் தொண்டர் பலர் உருப்படலாம். ஆனால் இவர்களின் தொண்டிலும் கலையரசு சொர்ணலிங்கம் அவர்களின் தொண்டு மிகவும் மேன்மையானது. பாராட்டற்குரியது, காரணம் அவர் தொண்டாற்றத் தொடங்கிய காலத்தில் நாட்டில் மொழிப்பற்று சமய பற்று கலைப்பற்று முதலியன குன்றியிருந்தன.**

தமிழ் நாடகங்களில் நடித்தவர்களை மக்கள் இகழ்ந்தார்கள். பிற நாட்டு நாகரிக மோகத்தில் மூழ்கி இருந்த தமிழ் மக்கள் தமிழ் நாடகங்களை அலட்சியம் செய்தனர்; அவற்றில் நடித்தவர்களை கூத்தாடிகள் எனத் தூற்றினர்.

இந்நிலையில் நாடகம் படிக்காதவர் கையில் அகப்பட்டு தத்தளித்தது. இதனை சீர்படுத்தி நாடகத்திற்கு மதிப்பும் சிறப்பும் அளிக்கும் பணியில் கலையரசு சொர்ண லிங்கம் இறங்கினர். படித்தவர் நடித்தால் தான் நாடகத்திற்கு மதிப்பு ஏற்படும் என உணர்ந்து நாடகங்களில் நடிக்க முன் வந்தார். இவருடன் வேறு சிலரும் சேர்ந்து ‘இலங்கா சுபோத விலாச சபை’ நிறுவித் தமிழ் நாடகத்தை வளர்த்தனர். எனவே, தமக்குச் சார்பில்லாத ஒரு சூழ்நிலையில் இவர் ஆற்றிய தொண்டு மிகவும் மகத்தானது.

### பொறாமை

தொண்டாற்றி வருங்காலத்திலே பல எதிர்ப்புகளும் தடைகளும் ஏற்பட்டன. பொறாமை காரணமாக பல இன்னல்களுக்கு ஆளாயினர். ஆனால் பெரியார் இவற்றால் உள்ளம் தளரவில்லை. கலை உலகில் பொறாமை தாண்டவாடும் என்பதை இவர் நன்கு உணர்ந்தவர். தமது ஏமாற்றத்தையும் ஆற்றலின்மையும் சாதிக்க” நாடக அபிமானிகள்” எனத் தம்மை அழைத்துக் கொண்டு நடமாடும் அம்பலத்தாரை இவர் பொருட்படுத்தவில்லை அவர்களின் ஆராய்ச்சி வாழ்க என இவர் வாழ்த்தினர். கலையை பொறுத்த அளவில் எல்லோரும் ஆராய்ச்சியாளர் தானே! நொண்டியைப் பிடித்து இராசநடை போடச் சொல்லும் மடமை கலையரசுக்கு இல்லை.

அவர்களின் ரசிகத்தன்மையையும் திறமையையும் கலையரசு குறை கூற முன்வரவில்லை. இது கலையரசுக்கு அரணாக இருந்த குணங்களில் ஒன்று. இதனாலேயே அறுபது ஆண்டு தொடர்ச்சியாகத் தொண்டாற்ற அவரால் முடிந்தது. எத்தனையோ நடிகர்கள் சில ஆண்டுக்கே நடித்து புகழ் பெறுவர். பல்லாண்டு தொடர்ச்சியாக அவர்கள் நடிப்பதில்லை எதிர்ப்புக்கும் தடைக்கும் ஏங்கி நடிப்பு தொழிலை கைவிடுவர். ஆகவே இத்தகைய சுற்றாடலில் தோல்வி மனப்பான்மைக்கு இடம் கொடுக்காது முயற்சி செய்து வெற்றி கண்ட பெருமை இவருக்கு உண்டு.

**போற்றும் பண்பு**

*சிறந்த நடிகரை போற்றும் பண்பு கலையரசரிடம் அதிகம் காணப்படுகின்றது எனவே உயர் நடிகர் என இன்று யாவரும் போற்றும் பேறு இவரை சாரும். நடிகருக்கு பாராட்டும் மதிப்புமே ஊக்கத்தை அளிப்பன என்ற காரணத்தால் கலைஞரை ஊக்குவிக்கும் பணியில் இவர் இன்றும் ஈடுபட்டு வருகின்றார். கலை நிகழ்ச்சிகள் எங்கெங்கு நடைபெறுகின்றனவோ அங்கெல்லாம் சென்று ஆதரித்து கலைஞர்களுக்கு கை கொடுத்து வருகிறார் 73 வயதாகியும் இரவிரவாக கூத்து நிகழ்ச்சிகளை பார்த்து கலைஞரைப் போற்றும் நடிகர் வேறு யார் இன்று உளர் ?*

*சில ஆண்டுகளுக்கு முன் நாம் பிற நாடுகளுக்குச் சென்ற போது உலகின் எல்லா பாகங்களிலும் அவ்வந்த நாட்டு மக்கள் நாடக விழாக்கள் நடத்தியும் நாடகக் கலைஞரை பாராட்டியும் நாடகத்தை வளர்க்கும் பணியில் ஈடுபடுவதை நேரில் பார்த்திருந்தோம். இத்தகைய பாராட்டு எமது கலைஞர்களுக்கு வேண்டும் கலைஞரை போற்றுவதன் மூலம் கலையைப் போற்றுகின்றோம். நமது பணியை பொதுமக்கள் சிறந்ததாக கணிக்கிறார்கள் என்பதை கலைஞர் உணரும் போது அவரது உள்ளம் உவகையாற் பொங்குகிறது; கலை வளர்ச்சியில் ஊக்கம் பெருகுகின்றது.*

**பாராட்டு**

*பாராட்டு விழாக்கள் பல விதத்தில் நன்மையை பயக்கின்றன. இவ் விழாக்கள் மூலம் பிறரை போற்றும் பண்பை நாம் வளர்க்கின்றோம். பிளவுகள் குன்றி ஒற்றுமை வளர்கிறது; பிற கலைஞரும் தொண்டாற்ற முன் வருகின்றனர். பிறர் உள்ளத்தைப் புண்படுத்தாது இனியவை சொல்லும் சால்பினை பெறுகின்றோம் பண்பட்ட மனிதராக நாம் வாழ இவை துணை செய்கின்றன. எல்லோரும் இன்புற்று வாழ்கின்றனர். சொர்ணலிங்கம் அவர்களது கைம்மாறு கருதாத தொண்டை வாயாரப் பாராட்டுகின்றோம் அவர் பல்லாண்டு வாழ்ந்து நாடக வளர்ச்சிக்கு மென்மேலும் சேவை செய்வாராக !*

தினகரன் 1962 மார்ச் 29 வியாழக்கிழமை

(கலையரசு சொர்ணலிகங்கம் அவர்கள் நாடகத்துறைக்கு செய்த சேவையைப் பாராட்டி வெளியிடப்பட்ட 'கலையரசு மலரில்' வெளிவந்த கட்டுரை)

## 26

# மரபைக் காக்கும் அண்ணாவி நாடகம்

**காங்கேசன்துறை "வசந்தகான சபை"யைச் சேர்ந்த திரு.வி.வி. வைரமுத்து நடிக்கும் "மயானகாண்டம்" இருநூறாவது தடவையாக சென்ற சனிக்கிழமை யாழ் நகர மண்டபத்தில் அரங்கேற்றியபோது கலாநிதி சு. வித்தியானந்தன் நிகழ்த்திய தலைமையுரை.**

*ஈழத்து தமிழ் நாடக வரலாற்றிலே இன்று பொன்னாளாகும். வி.வி.வைரமுத்துவை அண்ணாவி ஆகவும், அரிச்சந்திரனாகவும் கொண்ட மயான காண்டம் இரு நூறாவது தடவை இன்று அரங்கேறுகின்றது. ஈழத்திலே வேறெவரும் சாதிக்காததை வைரமுத்து சாதித்து விட்டார். எந்த ஒரு நாடகமும் ஈழத்தில் இருநூறு தடவை அரங்கேறவில்லை எனக் கருதுகின்றேன். பேராசிரியர் சரச்சந்திரா சிங்களத்தில் தயாரித்த " மனமே" என்ற நாடகம் கூட, நூறு தடவையே நடிக்கப்பட்டது. எனவே வேறு ஒருவருக்கும் இல்லாத பெருமை வைரமுத்து அவர்களையும், அவர்களைச் சார்ந்த நடிகர்களுக்கும் உடையது. நாடகம் நன்றாக இராது விட்டால் அது பல தடவை அரங்கேற முடியாது. எனவே நாடகத்தின் சிறந்த தரத்தை நாம் அது இருநூறு தடவை அரங்கேற்றப்படுவதில் இருந்து அறிந்து கொள்ளலாம்.*



பேராசிரியர் வித்தியானந்தனுடனிருக்க வசந்தகால சபையில் வி.வி.வைரமுத்து கௌரவிக்கப்படும் நிகழ்வு

*இலங்கைக் கலைக் கழக தமிழ் நாடகக் குழுவினர் நோக்கங்களுள் ஒன்று அண்ணாவி மரபு நாடகங்களை அரங்கேற்ற உதவி செய்வதே. நாடகக் கலையின் மரபை முறிய விடாது பாதுகாக்க அண்ணாவிமார் பெயரால் வழங்கும் அண்ணாவி மரபு நாடகம் இன்று தமிழரிடையே நிலவிவரும் நாடக முறைகளுள் முக்கியமானதொன்றாகும். இம்மரபு நாடகங்களின் வசனங்கள் இடையே வந்த போதும் பாடல்களே முக்கியமானவை. யாழ்ப்பாணத்தில் பழைய நாட்டுக்கூத்து புதிய சமுதாயத்திற்கு ஏற்றதல்ல என்று*

கைவிடப்பட்ட காலத்து அண்ணாவி மரபு நாடகங்கள் நாடகத்தில் இடையூறு ஏற்படாதுவாறு நாடக மரபைப் பாதுகாத்து வந்தனர்.

**அண்ணாவி மரபை வளர்த்தல்**

வழக்கொழிந்து வரும் இவ் அண்ணாவி மரபு நாடகங்களை வளர்க்கும் நோக்கத்தோடு இத்துறை நாடகங்களை கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் கண்டியிலும் மேடையேற்றியிருக்கின்றது தமிழ் நாடக குழு. காங்கேயன் துறை வசந்தகான சபையினர் நாடகக் குழுவின் ஆதரவில் அரிச்சந்திர நாடகம், பக்தநந்தனார், கண்ணகி போன்ற நாடகங்களை அண்ணாவி மரபில் நடித்திருக்கின்றார்கள். இவற்றுள் மயான காண்டமும் பக்த நந்தனாரும் சிங்கள மக்களிடையேயும் நடிக்கப்பட்டு அவர்களுடைய பாராட்டினையும் பெற்றிருக்கின்றன. பேராதனையில் பல ஆயிரக்கணக்கான சிங்கள மக்கள் கூடிய அவையில் மயான காண்டம் சில ஆண்டுகளுக்கு முன் நடிக்கப்பட்டது. அப்பொழுது இவர்கள் நடிப்பையும் பாடலையும் போற்றாதார் இல்லை. சபையில் உள்ள மக்களும் நாடகத்தில் தம் உள்ளத்தை பறிகொடுத்து ஒன்றிவிட்டனர்.

இந்நாடகம் பற்றி எமக்கு தனிப்பட்ட சில அனுபவங்கள் உண்டு. சில ஆண்டுகளுக்கு முன் லண்டன் வானொலி நிலையத்தைச் சேர்ந்த லெலி என்பவர் கிழைத்தேய நடனம், இசை முதலியவற்றை ஒழிப்பதிவு செய்யும் நோக்கமாக யப்பான்,மலாய, இந்தியா போன்ற இடங்களுக்கு சென்று விட்டு இலங்கைக்கு வந்த போது தமிழருடைய கூத்து முறைகளையும் கிராமிய நடனங்களையும் நாட்டுப் பாடல்களையும் ஒலி பதிவு செய்வதற்காக அவரை தமிழர் வாழும் பகுதிகளுக்கு அழைத்துச் சென்றேன். காங்கேசன் துறையில் திறந்த வெளி அரங்கில் மயான காண்டம் ஒலிப்பதிவு செய்யப்பட்டது. இறுதியில் அரிச்சந்திரனும் சந்திரமதியும் புலம்பிய காட்சியில், ஆங்கிலேயர் பேரறிஞரும் புலம்ப தொடங்கி விட்டார். படிப்படியாக உணர்ச்சி வளர்ந்து தம்மையும் பற்றி விட்டது என அவர் கூறினார். இவ்வளவு சிறந்த உணர்ச்சி பொருந்திய நடிப்பையும் இசையையும் தாம் இந்தியாவிலும் காணவில்லை என அவர் கூறினார். அண்மையில் அவரை லண்டனில் சந்தித்தபோது தாம் இலங்கைக்கு மீண்டும் வரப்போவதாகவும் அப்பொழுது வைரமுத்துவின் அண்ணாவின் மரபு நாடகங்கள் வேறு சிலவற்றையும் தாம் ஒலிப்பதிவு செய்ய விரும்புவதாகவும் கூறினார்.

**மயான காண்டம் ஒலிபரப்பு**

பிறநாடுகளில் உள்ள கிராமியக் கூத்து வகைகளையும் நாடகங்களையும் பாடல்களையும் ஆராயும் நோக்குடன் நான் சென்ற ஆண்டு உலகத்தின் பல பாகங்களுக்கு சென்றபோது இங்குள்ள நாட்டுக்கூத்து கிராமிய நடனம், அண்ணாவி மரபு நாடகம் முதலியவற்றின் சிலவற்றை ஒழிப்பதிவு செய்து உடன் கொண்டு சென்றேன். இங்கிலாந்து, வேல்ஸ், அமெரிக்கா போன்ற இடங்களில் மயான காண்ட ஒலிப்பதிவுகளின் உதவிகொண்டு எமது கூத்து முறைகளை பிரசாரம் செய்யும் வாய்ப்பு கிடைத்தது. இதன் பயனாக பல வானொலி நிலையங்களில் வைரமுத்துவின் குரலும் ஏனைய நடிகரின் குரலும் ஒலிபரப்பப்பட்டன. இலண்டன் வானொலி நிலையத்தில் மயான காண்டம் ஒளிபரப்பப்பட்டது. அங்குள்ளவர்கள் இத்தகைய சிறந்த உணர்ச்சி மிகுந்த பாடல்களை தாம் இதுவரை கேட்கவில்லை என்றார்கள். அமெரிக்காவில் வாஷிங்டனில் உள்ள நூல் நிலையத்தில் கிராமிய பாடல்களையும் நாடகங்களையும் ஒளிப்பதிவு செய்து

பாதுகாத்து வைக்கும் நிலையம் ஒன்று உண்டு. அங்கு வைரமுத்துவின் நாடகத்தை கேட்டபோது அதனை தாமும் ஒலிப்பதிவு செய்து தமது நூல் நிலையத்தில் வைத்துக் கொள்ள அனுமதி கேட்டார்கள். இன்று அங்கு யாரும் சென்றால் ஈழத்து தமிழரின் நாடகங்களை ஒழிப்பதிவு கேட்கலாம். எனவே வைரமுத்துவின் மயான காண்டம் ஈழத்தில் மட்டுமல்ல உலகின் பல கோடிகளிற் புகழ் பெற்று விட்டது. பல நூல் நிலையங்களிற் கிடைக்கக்கூடிய செல்வமாக ஒலிப்பதிவு செய்யப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகின்ற என்பதனைப் பெருமை உடன் கூற விரும்புகிறேன்.

பழைய முறை நாடகங்கள் இக்கால நாகரிகத்திற்கு உகந்தனவல்ல என்று கைவிடப்பட்டு வரும் இக்காலத்தில் பழமையைப் போற்றி புதுமையுடன் வளர்த்து நாடகக் கலைக்கு உயிர் கொடுத்து வரும் வைரமுத்து அவர்களை பாராட்டுகின்றோம். நாடகம் நடாத்தியவர்கள் பணம் சேகரித்ததாக நாம் இதுவரை கேள்விப்பட்டதுமில்லை. காண்பதும் இல்லை. நாடக அரங்கேற்றம் வறுமைக்கு வழி வகுத்து எத்தனையோ நாடக சபைகளை இருந்த இடம் தெரியாது தொலைத்து விட்டது. ஆனால் வைரமுத்து அவர்கள் கலையின் மேல் உள்ள நீங்க ஆர்வத்தினாலும் சிறந்த ஈடுபாட்டினாலும் தொடர்ந்து பல ஆண்டுகளாக பல நாடகங்களைப்பெற தடவை அரங்கேற்றியுள்ளார். ஈழத்தில் வேறு எந்த சபையும் இவ்வளவு சாதித்திருக்கும் என நாம் கருதவில்லை.

**பழைய நாடகங்கள்**

பழைய நாட்கள் இந்திய பண்பாட்டை அடிப்படையாகக் கொண்டே எழுதப்பட்டன. வாய்மை,நேர்மை,கற்பு, அறம் என்பன நாடகத்தின் உயிராக விளங்கின. பழைய கதைகளை நாடகமாக அமைத்து எழுத்தாளன் மக்களுக்கு அறிவுத் தானம் அளித்தான். பண்டைய கிராமங்களிலும் சமூக வாழ்வின் முக்கிய பகுதியாக நாடகங்கள் அமைந்தன. கிராமத்தில் உள்ளோர் எல்லோரும் சேர்ந்து நாடகத்திற்கு பொறுப்பாக உள்ளவர்களுக்கு பொருள் உதவி செய்து ஊக்குவித்தனர். 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் இருபதாம் நூற் றாண்டின் முற்பகுதியிலும் சூழ்நிலை மாறியது . ஐரோப்பிய நாகரிகத்தின் தாக்குதலால் தமிழ் நாடகங்களுக்கு ஆதரவு குறைந்தது. காலத்தை ஒட்டி ஆட்டமும் பாட்டும் நடிப்பும் கலந்த நாடகங்களை கைவிட்டு நடிப்பும் பாட்டும் கலந்த நாடகங்களை உருவாக்கினார். இந்தப் பரம்பரையில் வந்தவரே வைரமுத்து அவர்கள். இவரின் முன்னேர்களான இராமு நாகமுத்துப்பிள்ளையினார் போன்றவர்கள் மேல்நாட்டுத் தாகத்தினால் பாதிக்கப்படவில்லை. அவர்களை இங்குள்ளவர்கள் ஆதரித்தனர். எனவே அம்மரபு அழியாமல் இருந்தது. திரைப்படத்தின் தாக்கம் அண்ணாவிமரபு நாடகங்களை பாதித்த போதிலும் வைரமுத்துவும் அவரைச் சேர்ந்த வசந்தகான சபையினரும் இத்தகைய நாடகங்களை தொடர்ந்து நடத்தி வந்திருக்கிறார்கள்.

நாடகத் துறையில் புகழீட்டிய கலையரசு சொர்ணலிங்கம் கிருஷ்ணாழ்வர் சண்முகநாதன் போன்றவர்களும் கலைஞர்களாகிய சண்முகரத்தினம் போன்றவர்களும் வைரமுத்துவைப் பாராட்ட வந்திருப்பதே அவரின் மகத்தான தொண்டினைத் தமிழ் கூறும் நல் உலகத்திற்கு எடுத்துக்காட்டும். இப் பாராட்டு விழா வைரமுத்து குழுவினருக்கு ஆதரவும் உற்சாகமும் அழித்து நாடகத்துறையில் அவர்கள் தொடர்ந்து பணியாற்ற வழி வகுப்பதாக.

தினகரன் 1962 மே 17 வியாழக்கிழமை

## 27

# தனிமனிதன் நலிவுறினும் தமிழினம் நலிவுறலாகாது

**மட்டக்களப்பு தேனுக்கும் பாலுக்கும் பாடுமீனுக்கும் நாட்டுப் பாடலுக்கும் நாட்டுக் கூத்துக்கும் எவ்வளவு புகழ் பெற்றதோ அவ்வளவு புகழ் கண்ணகி வழிபாட்டிற்கும் பெற்றுள்ளது. சிலப்பதிகாரத் தலைவியாகிய கண்ணகி பிறந்தது சோழ நாட்டிலே. அவள் கடுஞ் சினஞ்கொண்டு அரசியல் புரட்சி செய்தது பாண்டியநாட்டிலே.**

*புரட்சிக் கண்ணகிக்கும் சேரன் செங்குடுவன் கோயில் எடுப்பித்தது சேர நாட்டிலே. ஆனால் இம்மூன்று நாட்டையும் தன்னகத்தே கொண்ட தமிழகத்திலே கண்ணகி பெயரில் ஒரு கோயில் கூட இல்லை. ஈழத்திலேயே கண்ணகியம்மன் கோயில்கள் எண்ணிறைந்து காணப்படுகின்றன.*

**கண்ணகி அம்மன் கோவில்கள்**

*வட மாகாணத்தில் பல இடங்களில் கண்ணகி வழிபாடு இருந்து வந்த போதும், மட்டக்களப்பிலே இத் தெய்வத்திற்கு அதிக மதிப்பு அளித்து வருகின்றனர். கண்ணகி விழா மட்டக்களப்பு மக்களால் தேசியத் திருவிழாவாக கொண்டாடப்பட்டு வருகிறது. காரைதீவு, தம்பிலுவில், வீரமுனை, பட்டிமேடு, கல்முனை, பாண்டிருப்பு, கல்லாறு, எருவில், கழுவாஞ்சிகுடி, கழுதாவளை, செட்டிபாளையம், வந்தாறுமூலை, நீலாவணை போன்ற இடங்களில் கண்ணகி அம்மன் கோயில்கள் உண்டு.*

*கண்ணகி அம்மன் வழிபாட்டிற்கெனப் பல கவிதைகள் மட்டக்களப்பில் உள. குளுத்திப் பாடல், ஊர் சுற்றும் காவியம், மழைக்காவியம், கண்ணகி வழக்குரை என்பன ஏட்டுருவிற் கிடைக்கும் அழியா இலக்கியச் செல்வங்கள். மட்டக்களப்பிற் கண்ணகி வழிபாடு நிலைத்தமைக்கு மூன்று காரணங்களைச் சிறப்பாக கூறலாம். மட்டக்களப்பு மக்கள் பெண் தெய்வ வணக்கத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கின்றனர். மருமக்கள் தாய் வழி நாட்டிற் பரவி இருந்தது. ஆகவே பெண்ணுக்கு முதன்மை கொடுக்கும் சமுதாயத்தில் கண்ணகி வழிபாடு செல்வாக்குப் பெற்றதில் வியப்பில்லை. இரண்டாவதாகக் குறிப்பிட வேண்டியது கண்டிக்கும் மட்டக்களப்புக்கும் உள்ள பண்பாட்டுத் தொடர்பு.*

**வழிபட்ட காரணங்கள்**

*அக்காலத்தில் மட்டக்களப்பு கண்டி மன்னர் ஆட்சிக்கு உட்பட்டு இருந்தது. மண்டூர், சம்மாந்துறை போன்ற இடங்களிலிருந்து கண்டிக்குச் சென்ற பழைய குறுக்கு வழிகள் இன்றும் உள. இத்தகைய தொடபினால் சிங்களவரின் பத்தினி வழிபாடு மட்டக்களப்பில் பரவியது.*

*மூன்றாவதாகக் கூற வேண்டியது, பொருளாதார நிலை. மட்டக்களப்பு பொருளாதாரம் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டது. விவசாயவிருத்திக்கு மழை வளம் அதிகம் தேவைப்படுகின்றது. எனவே மழை வளம் குன்றி பசியும் பிணியும் மிகுந்து மக்கள்*

அல்லல் படுங்காலத்து கண்ணகி தேவியினை நினைத்து, தெய்வத்திற்குச் சாந்தி செய்யும் நோக்கமாக வழிபாடாற்றுவது இயல்பே.

**இலக்கியப் புரட்சி**

இவ்வாறு மட்டக்களப்பில் செல்வாக்கு பெற்ற கண்ணகியை தலைவியாக கொண்டு பாடப்பட்டதே சிலப்பதிகாரம். இந்நூலில் பல புரட்சிகளை இளங்கோ சாதித்துள்ளார். தமது காவியத்திற்குக் கடவுளாரையோ, அரசரையோ, வள்ளல்களையோ தலைவராக கொள்ளவில்லை. மண்ணுலகத் தலைவியையே கொண்டார். பொதுமக்களுள் ஒருத்தியாகிய கண்ணகியை தலைவியாக கொண்டு பொது மக்களுக்காக பொது மக்களுக்கு பயன்படக்கூடிய பொது மக்கள் காவியத்தை அமைத்தார். இது இலக்கிய உலகிற்கே அவர் செய்த ஒரு புரட்சி.

இது மட்டுமல்ல, கண்ணகியை ஒரு புரட்சிப் பெண்ணாகவே படைத்தார். கண்ணகி மூலம் பெண்ணினத்தின் வரலாற்றிலேயே பெரும் புரட்சி செய்தார். தாங்க முடியாத கொடுங்கோன்மை தாண்டவம் ஆடினால், ஆக்கும் ஆற்றல் படைத்த பெண்கள் புரட்சியின் முன்னணியில் நின்று அரசை அளிப்பர். அநீதி ஆட்சி செய்தால் அரசியலில் ஈடுபடுவதும் அதை அழிப்பதும் பெண்களின் தலையாய கடன். கொடுங்கோல் ஆட்சியில் பெண்கள் ஆண்மை உணர்வும் அழிப்புச் சக்தியும் பெற்றுப் பெரும் வீரராய் மாறுவர் என்ற புரட்சிக் கருத்துக்களை இலக்கிய உலகிற்கு புகுத்திய பெருமை இளங்கோவிற்கே உரியது.

கோவலன் கொலை தனி மனிதன் கொலை அன்று. அதுவோர் அரசியல் கொலை. ஆகவே கண்ணகி செய்த புரட்சி தேசபக்தியை அடிப்படையாகக் கொண்டது. ஆட்சி நிலை தவறினால் அதனை மாற்றி அமைத்தல் அல்லது அழித்துப் புதியதாகப் படைத்தல் பெண்களின் கடமையாகும். குடிமகன் ஒருவன் மீது அடாத பழியை சுமத்தி அவனைக் கொலை செய்யும் அளவிற்கு ஆட்சி ஒன்று இருக்குமாயின், அவ்வாட்சி நீண்ட பெரிய வரலாற்றை உடைய ஆட்சி ஆயினும், அதனை அழித்து தீருவதே தேச பக்தி என்பதனை புரட்சி கண்ணகி மூலம்காட்டி உள்ளார் இளங்கோ.

**ஆசிரியரின் நோக்கம்**

புரட்சிக் கண்ணகி மூலம் தேசிய உணர்ச்சியையும் ஒற்றுமை உணர்ச்சியையும் தமிழரிடையே வளர்க்க முயன்றார் இளங்கோ. முடியுடை மூவேந்தர் முடி உடைக்கும் வேந்தர் ஆகாது. ஒற்றுமையாக ஒரே இனமாக திகழ வேண்டும் என விரும்பியவர் அவர். இந்நோக்கத்துடனே நூல் முழுவதிலும் நாட்டுப்பற்றையும் தேசிய உணர்ச்சியையும் ஒற்றுமை உணர்வையும் வளர்க்கின்றார் ஆசிரியர். இன்றைய எமது சமுதாயமும் ஈழத்திலே யாழ்ப்பாணத் தமிழர், மட்டக்களப்பு தமிழர், மன்னார் தமிழர், வன்னித்தமிழர், தீவுத் தமிழர் என பல பிரிவாகப் பிரிந்து ஒற்றுமை இழக்கும் நிலையில் இருக்கின்றது. இவ் பிழவை ஏற்படுத்தித் தம் ஆட்சியைப் பலப்படுத்த பிரித்தாளுவோர் முயல்கின்றனர். இந்நிலையில் தமிழினத்தை ஒன்றுபடுத்தி சிலப்பதிகார ஆசிரியர் எடுத்த முயற்சிகள் எமக்கு பயன்படும் என நம்புகின்றோம்.

*சேர நாட்டு இளவரசன் சோழ நாட்டின் தலைநகராகிய புகாரின் சிறப்பை முதலில் பேசுகிறார். பூம்புகார் நிலைக்கு வதில்லை. அங்குள்ள மக்கள் பழங்குடி மக்கள். தம் நாட்டை விட்டு வேறு நாடு செல்லாதவர். காரணம், நாட்டின் பகையின்மையும் செல்வ செழிப்பும் சேர்ந்து விளங்குகின்றன. தமிழர் மானமுடன் வாழ வேண்டுமானால் தம் பிரதேசத்தை விட்டு வேறு இடம் செல்லலாகாது. பிரதேசத்தைப் பிறர் அபகரிக்க விடலாகாது அதனைச் செல்வம் கொழிக்கும் நாடாகப் பாதுகாக்க வேண்டும் என்ற உயரிய கருத்துக்களைப் புகுத்தித் தேசிய உணர்ச்சியை வளர்க்கின்றார்.*

*கோவலனைப் பிரிந்து இடியுண்ட மயில்போல துயருடன் மாதவி வீடு திரும்பிய நேரத்துத் தன் துயரை மறந்து அரசனை நினைத்து " சோழ அரசனின் வெண்கொற்றக்குடை நீடு வாழ்க " என்று வாழ்த்தினாள். தனிப்பட்ட மனிதனின் நலிவுற்றினும் இனம் நலிவுற்றலாகா என்று இன உணர்ச்சியை மனமுடைந்த மாதவி மூலம் வளர்க்கின்றனர். தனிப்பட்ட ஒருவனின் நன்மைக்காகவோ தனிப்பட்ட ஒரு பிரதேச மக்களின் நன்மைக்காகவோ தமிழன் இனத்தை விற்கக் கூடாது என்பதை இங்கு வற்புறுத்துகிறார். இனத்தின் நன்மைக்காகத் தனிப்பட்ட எந்த நலிவையும் எந்த தமிழனும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என கணிக்கின்றார்.*

*சேரன் செங்குட்டுவன் செந்தமிழ் புலவன் சாத்தன் வாயிலாக வீரக்கண்ணகி வரலாற்றைக் கேள்வியுற்றான். கேள்வியுற்றதும் "செங்கோல் வளைய உயிர் வாழர்பாண்டியர் " என்று போற்றினான். வளையாத கோல் வளைந்தது உண்மையே. எதனால் ? பாண்டியன் செயலாலா ? இல்லை, வல்வினையே வளைத்தது. அவ்வாறு ஊழ் செய்த வினைக்கு உயிர் கொடுத்தான் பாண்டியன். அவன் விடுத்த உயிர் வளைந்த கோலினை நிமிர்த்தியது. சேரனுக்கு ஏன் இவ்வளவு பாடு? தமிழ் மன்னருள் ஒருவனை மற்றோர் இகழ்வதற்குரிய ஒரு நிகழ்ச்சி நடந்து விட்டது.*

*ஒற்றுமை வேண்டும் என்ற உணர்ச்சி அற்றோனாயின் உடனேயே " பாண்டியர் கொடுங்கோலர் " எனப்பழி தூற்றி இருப்பான் சேரன். ஆனால் அதற்கு மாறாகப் போற்றினான். குறை மறைத்துக் குணம் போற்றுவதே ஓர் இனத்தினுடைய நல் உறவை வளர்க்க சிறந்த வழியாகும். இதுபோலச் செங்குடுவர் எம்மிடையே பெருகினால் தமிழ்த் தலைவரிடையே தூற்றுதல் ஒழிந்து போற்றுதல் பெருகினால், தமிழினம் விரைவில் விடுதலை எய்தும்.*

**கண்ணகிக்கு கல்லெடுத்தல்**

*தன் தேவியின் வேண்டுகோளுக்கு இணங்கக் கண்ணகிக்குக் கல் எடுக்க புறப்பட்டான் சேரன் கெங்குட்டுவன். ஆம், சோழ நாட்டிற் பிறந்த ஒருத்திக்கு பாண்டி நாட்டில் பெரும் அரசியல் புரட்சி செய்த ஒருத்திக்கு - மன்னர் குடியின் பிறவாத ஒருத்திக்குக் கன்னித் தமிழ்நாட்டுக் காவலன் ஆகிய சேரன் கோயில் கட்டத் துணிந்தான்! என்னே அவன் இன உணர்ச்சி! இமயத்துக் கல்லை தமிழாற்றலை பழித்த கனக வியாசர் தலைமேல் ஏற்றி கொணர முடிவு செய்தான். அவ்வரசர் கூறிய பழிச்சொல் சேரனை குறித்ததன்று. பாண்டியனை குறித்தது அன்று சோழனை குறித்தது அன்று . ஆனால் தமிழரசர் மூவரையும் தமிழர் யாவரையும் சுட்டியது. அதனை அழிப்பது தமிழர் கடன் எனக் கொண்டான் சேரன். அரசன் சபையில் இருந்தோர் "இமயவரம்ப! நின்னை இகழ்ந்தோரல்லர் " என*

விளக்கங் கூறினர். அதனை அரசன் பொருட்படுத்தவில்லை. தமிழுக்கு தமிழ் இனத்திற்கு ஒரு பழி வரின் அதனைத் துடைப்பது தமிழன் ஒவ்வொருவனின் கடமையாகும். "என்னையோ இகழ்ந்தனர், இல்லையே, அவனைத் தானே பழித்தனர்" என்ற மனப்பான்மை ஒற்றுமையை வளர்க்காது. பகைவர் கண் முன்னர் தமிழர் ஒன்றுபட்டுத் தோன்ற வேண்டும். தமிழினத்திற்கு வந்தபழி ஒவ்வொரு தமிழனுக்கும் வந்தபழி என கருதியவன் சேரன்.

**வழிகாட்டும் செங்குட்டுவன்**

இன்றைய தமிழன் தன்னை பழித்தால் சீறுவான், வேறொருவனை பழித்தால் மகிழ்வான். தமிழ் மொழியை பழித்தால் பல்லை இழிப்பான். தமிழ் இனத்தைத் தூற்றினால் "எனக்கு என்ன அதைப் பற்றி கவலை , எமக்கு உத்தியோகம் இருந்தால் போதும்" என்று கட்டைபோற் கிடப்பான். " நான்" என்ற உணர்ச்சித் தடிப்பைத் தவிர " தமிழன்" என்ற இனத்தொகுப்புணர்ச்சி காண்பது இன்று அருமை . இங்கு சிலப்பதிகாரச் செங்குடுவன் எமக்கு வழிகாட்டுகின்றான். " தமிழாற்றல்" பழிக்கப்படக்கூடாது. ஒற்றுமை உள்ளும் புறமும் நிலைத்திருத்தல் அன்றி தமிழினம் உய்ய முடியாது. தமிழினத்தை பழித்து பேச்சு உரிமை வாழ்வுக்கு மாசு தருவது. அந்தப் பேச்சை கேட்ட பின்பும் வாழ விருப்பது உரிமையைப் பறிகொடுத்து உறவு தேடும் இழிமையாகும். இத்தகைய உறவு எமக்குத் தேவையில்லை. ஆதிக்கமும் அடிமைத்தனமும் நிலவ இடம் தரும் உறவு நல்ல உறவல்ல. என இளங்கோ காட்டியுள்ளார்.

சுயநலனை கைவிட்டு இனத்துவத்திற்கு தியாகம் செய்யும் பண்பை இவ்விழா எமக்கு அளிப்பதாக. சமயத்தாலும் பிரதேசத்தாலும் வேறுபட்டுள்ள தமிழர் சமுதாயம் ஓர் இனமாக ஒன்றுபட்டு வாழ புரட்சி கண்ணகி வரலாறு வழிவகுப்பதாக !

தினகரன் 1962 மே 23 வெள்ளிக்கிழமை

## 28

# ஈடிணையற்ற வெற்றி கண்ட இஸ்லாத்தின் திருநபி

### பேராசிரியர் சு. வித்தியானந்தன் இக் கட்டுரையைப் "பிறையன்பன்" என்னும் புனைபெயரில் எழுதியுள்ளார்

**உலக மக்கட்டொகுதியில் நான்கிலொரு பகுதியினர் இன்று இஸ்லாமியராகத் திகழ்கின்றனர். உலகின் எல்லாத் திசைகளிலும் நாள்தோறும் இருபத்துநான்கு மணிநேரத்திலும் 'அல்லாஹு அக்பர்" எனத் தொடங்கும் தொழுகை அழைப்பின் குரல் கேட்கின்றது. இஸ்லாமியர் பேரரசு ஒன்றினை அமைத்ததோடு நில்லாது கலையையும் பண்பையும் உலகிற்கு அளித்தனர். இவர்கள் ஆதிக்கம் பரவிய நாடுகளில் வாழ்ந்த மக்கள் தமது பழைய சமயங்களைக் கைவிட்டு இஸ்லாமியக் கலைகளையும் வாழ்க்கை முறைகளையும் பண்பாடுகளையும் பின்பற்றினர்.**

விக்கிரக வணக்கம் ஆழமாய் வேரூன்றிக் கிடந்த அரபு நாட்டில் கி.பி. 571ம் ஆண்டில் முஹம்மது முஸ்தபா ஸல்லால் லாஹூ அலைஹிவஸல்லா பிறந்தார்கள். தமது நாற்பதாவது வயதில், ஒரு றம்ழான் மாத இரவில், ஹிறா மலைக் குகையில், அல்லாஹூத் தஆலாவின் ஞான ஒளி பெற்று, மதப் பிரசாரம் செய்யத் தொடங்கினார். இப்பணியில் நபிபெருமான் அனுபவித்த இன்னல்களோ பல.

முதன்முதலிற் குறைஷியர் இவரை ஏளனம் செய்தனர்; பின்பு அவமதித்தனர். பித்தன், சூன்யக்காரன் என்றெல்லாம் ஒதுக்கினர். அப்படியிருந்தும் இரண்டிரண்டாக, மும் முன்றாக, முதல் நான்கு ஆண்டுக்கிடையில் நாற்பது பேர்வரை சேர்ந்துவிட்டனர். தொடக்கத்தில் நபிகள் நாயகத்தின்அன்பர்கள் துன்புறுத்தப்பட்டனர். நாளடைவில் நபிகள் நாயகம் பல இன்னல்களுக்கு ஆளாயினர். எனினும், இன்னும் பலர் இச்சமயத்தைத் தழுவிக்கொண்டுவந்தனர். முஸ்லிம்களின் செல்வாக்கு அதிகரிப்பதைக் கண்ட மக்கா வாசிகள் திகிலடைந்து நபிகள் நாயகத்தைக் கொலை செய்யத் திட்டமிட்டனர். இதனை அறிந்த முகம்மது நபி (ஸல்) அவர்கள், இரவில் வெளியேறி 622ம் ஆண்டு தமது ஐம்பத்து மூன்றாம் வயதில் மதீனாவிற்குப் போய்ச் சேர்ந்தார். இதுதான் நபிகள் திலகத்தின் வரலாற்றில் "ஹிஜறத்" எனப் பெரிதாகப் போற்றப்படுகின்றது.

#### ஆன்ம வெற்றி

இவ்வாறு பதின்மூன்று ஆண்டுகளாக நபிகள் பெருமான், தோழமையிற் பயிற்சி பெற்ற முந்நூறுதோழருடன் மக்க நகரிற் பல துன்பங்களைச் சந்தித்தார். தங்கள் வீட்டையும் பிறப்பகத்தையும் உற்றார் உறவினரையும் துறந்து, அகதிகளாக அவர்கள் இவருடன் மக்காவைவிட்டு மதீனா சென்றார்கள் என்பது, இவரின் ஆன்ம வெற்றிக்குச் சான்றாகும். அக்காலத்தே அது அஞ்ஞானத்தில் மூழ்கியிருந்த அராபிய மக்களை ஆத்மீகத்துறையில் ஈடுபடச் செய்து, பணி செய்து கிடப்பதே தம் கடன் என்ற இன்ப

*நிலையை அடையச்செய்த பெருமை நபிகள் நாயகத்திற்கே உரியது. மூட நம்பிக்கையிலும் கொடூரச் செயலிலும் ஆழ்ந்து கிடந்த மக்கா நகர மக்களிடம் பதின்மூன்று ஆண்டுகளில் அற்புதமான மாற்றத்தைக் காண்கின்றோம். மக்கள் விக்கிரக வழிபாட்டைக் கைவிட்டு, ஒரே இறைவனை வணங்கத் தொடங்கினர். எனவே பெருமானார் மக்காவில் தங்கியிருந்த காலப்பகுதி இஸ்லாமிய வரலாற்றிலே சிறந்ததோரிடம் வகிக்கின்றது.*

*மக்காக் குறைஷியருக்கும் முஸ்லிம்களுக்கும் பகை ஏற்பட்டுப் பல போர்கள் நடைபெற்றன. முகம்மது நபி (ஸல்) அவர்கள் கி.பி 630ல், ஹிஜ்ரி எட்டாம் ஆண்டில், பத்தாயிரம் வீரருடன் புறப்பட்டு, மக்கா நகரைக் கைப்பற்றினார். மக்கா மக்கள்திரள் திரளாக வந்து இஸ்லாமிய மார்க்கத்தைத் தழுவினர்.*

**முக்கிய வெற்றி**

*இஸ்லாத்தின் வரலாற்றிலே மக்கா வெற்றியானது சிறந்த இடம் வகிக்கின்றது. கத்தியின்றி இரத்தமின்றி அடைந்த இவ்வெற்றி உலக வரலாற்றிலேயே தனிச்சிறப்புள்ள வெற்றியாகும்; ஒப்புவமையற்ற நிகழ்ச்சியாகும். நபிகள் நாயகத்தின் பிறப்பிடமாகிய மக்கா மாநகரம், பதின்மூன்று ஆண்டுகள் நபிகள் பெருமானைத் துன்புறுத்தியதும் போதாது வெளியேறும்படியும் செய்த நகரம். இவ் வெற்றியின் பயனாக இஸ்லாமிய மக்கள் அனைவரும் புனிதமாகக் கொண்டாடும் நகரமாக மாறியது. முகம்மது நபி (ஸல்) அவர்கள் இஸ்லாம் சமயத்தை உயர்த்தி வைத்தது வாளாலல்ல; இறைவன் மீதும், தமது தூதிலும் தமக்கு இருந்த முழு நம்பிக்கையினாலேயே. பத்தாம் ஹிஜ்ரி ஆண்டுத் தொடக்கத்தில் அரபு நாட்டு மக்கள் உள்ளத்தில் ஒரே தெய்வக் கொள்கை நிலைத்துவிட்டது; உலகம் ஒரே அணியில், ஒரே இறைவனை, ஒரேதூதரைப் பின்பற்றி வந்தது. இதனால், நபிகள் நாயகத்தின் குறிக்கோளும் முற்றுப் பெற்றது. தாம் இருக்கும்போதே தமது குறிக்கோளின் வெற்றியை அடைந்தவர் இவர் ஒருவரே.*

*பாலை வனத்தின் மூலையிலே, ஒரு சில மனிதரின் உதவி கொண்டு நிலையான சமுதாயப் புரட்சியைக் குறுகிய கால எல்லையுட் சாதித்து, பல இனம் பல சமயம் அன்றிருந்த மக்களை ஒரே இனமாக இஸ்லாத்தில் ஒன்று சேர்த்து, தமது இலட்சியத்தில் வெற்றி பெற்றவர் நபிகள் நாயகமாவர்களே.*

**குறுகியகால சீர்திருத்தம்**

*எந்த நகரலிருந்து இரவிரவாக முகம்மது நபி (ஸல்) வெளியேறினாரோ அதே நகரிற் பத்தாண்டுகளுக்குப் பின் **632**இல் ஒன்பதேகால் இலட்சம் முஸ்லிம்களுடன் சென்று இறுதி ஹஜ்ஜை நிறைவேற்றினார். இறுதியாகத் தமது அறுபத்து மூன்றாவது வயதில் (**632**ல்) இறைவனது திருவடி நிழலை அடைந்தார்.*

*மிகக்குறுகிய கால எல்லையாகிய இருபத்து மூன்று ஆண்டுகளில் வரலாற்றிலே கண்டறியாத சீர்திருத்தத்தைச் செய்த பெருமை நபிகள் பெருமானுக்கே உரியது. மிகவும் ஆழமான பாதளப் படுகுழியிலே சிக்கிக் கிடந்த மக்கட் கூட்டத்தை- மூடநம்பிக்கை, கொடிய பழக்க வழக்கம், தீய ஒக்கம் முதலியவற்றிற் படிந்து கிடந்த மக்கட் சமுதாயத்தை*

*மிகவும் உயரிய வழியிற் கொண்டு செலுத்தி, அதில் மாபெரும் வெற்றி அடைந்தவர் நபிகள் நாயகம் (ஸல் அவர்களே).*

*நபிகள் நாயகம் (ஸல்) நிறுவிய இஸ்லாமிய இராச்சியம் கடந்த பதினான்கு நூற்றாண்டுகளாக எல்லா எதிர்ப்புக்களையும் உதறித் தள்ளிச் சிறிதும் நிலை தளராது நிலை பெற்றுவிட்டது. தேசம் இனம், நிறம் ஆகிய வேறுபாடில்லாது, அறுபது கோடி முஸ்லிம்களை ஒரே சகோதரத்துவத்துடன் நபிகள் நாயகம் (ஸல்) இறுதியாக நிறுவிய சமயத்தை இன்று பின்பற்றுகின்றனர்.*

தினகரன் 1962, ஆகஸ்ட் 14 செவ்வாய்க்கிழமை



1979.11.20 ஆந் திகதி பேராசிரியர் சு. வித்தியானந்தன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழ மருத்துவ பீடத்திற்கான அடிக்கல் நாட்டியபோது

29

# கர்ணன் போர்

**சென்ற வாரம் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் திறந்த வெளியரங்கிலே அரங்கேற்றப்பட்ட கர்ணன் போர் எனும் வட மோடிக் கூத்து, ஈழத்துத் தமிழ் நாடக வரலாற்றிலே மிக முக்கியமான தொரு கட்டத்தினை எடுத்தியம்புகிறது.**

*மக்கள் வாழ்க்கையினை நிதர்சனமாகச் சித்திரிக்க வேண்டுமாயின், மக்கள் வாழ்க்கையில் அவர் தம் பேச்சு வழக்கில் உபயோகிக்கும் இயல்பான, இலகுவான மொழியாலேயே திறம்படச் சாதிக்க முடியும் என்பதனை ஆதார பூர்வமாக நிரூபித்துக் காட்டிய தமிழ்ச் சங்கத்தினர், இன்று புதிய திசையிற் சென்று ஈழத்து நாடக வரலாற்றில் புதிய திருப்பம் ஒன்றனை ஏற்படுத்தியுள்ளனர். மானிட வாழ்வின் போராட்டங்களையும் சூறாவளிகளையும் கருவாய்க் கொண்ட சமூக நாடகங்களில் இதுவரை மூழ்கிக்கிடந்த இம்மாணவர்கள், தங்கள் இனத்தின் பராம்பரியத்தைத் தெவிட்டும் பாணியில் எடுத்து விளக்கும் கிராமியக் கலைகட்குப் புத்துயிர் அளித்துப் புதுவாழ்வு கொடுக்க முன்வந்திருப்பதனைத் தமிழ்கூறும் நல்லுலகு வரவேற்றுப் பாராட்டும் என்பதில் ஐயமில்லை. அண்ணாவிகள் கைகளில் மட்டும் சிக்கி மறைந்துகிடக்கும் இக் கவின் கலைகட்குச் சமூகத்தில் சிறப்பிடம் அளிக்க முன்வந்ததல்லாது இவற்றிற்குப் புது மெருகூட்டி, புதிய, பொலிவு கொடுத்துப் புது அழகு பெறச் செய்தமை தமிழ்த்தாய்க்கு மகிழ்வூட்டுகிறது. இப்புதிய மாற்றங்களால் கிராமியக் கலைகள் இந்நாட்டு மக்கள் அனைவரினதும் நன்மதிப்பையும், நல்லாதரவையும் பெறும் என்பதற்குச் சென்ற வாரம் கர்ணன் போருக்கு கிடைத்த பேராதரவே சிறந்த சான்றாகும்.*

*கிராமியக் கலைகள் பண்டை வனப்பையும் சிறப்பையும் பெறாமைக்குத் திரைப்படங்களும் சமூகநாடகங்களும் காரணங்களாக விருப்பினும், இளம் சந்ததியினர் இக்கலைப் பொக்கிஷத்தைப் பேணிப் பாதுகாக்க முன்வராமையே முக்கிய காரணமென நாம் கொள்ள முடியும் மறைந்து வரும் ஒரு பரம்பரையின் பிரத்தியேகச் சொத்தாகவே இவை இருந்து வந்ததால் புதிய பரம்பரை தலையெடுத்ததும் இப்பாரம்பரிய கலைகளும் அழிந்தொழிந்து விடுவனவோ என நாம் அஞ்சவும் வேண்டியிருந்தது. பேராதனை மாணவர்கள் இவவச்சைத்தை நீக்கி விட்டனர் . இந்த நல்வழியில் பிறரும் செல்வர் என்பதே எம் நம்பிக்கை. பல்கலைக்கழக மாணவர்கட்குத் தங்கள் கடமையை அறிவுறுத்தி, புது வழிச்செலுத்தி எம்கலைகட்குப் புத்துயிர் அளித்த கலாநிதி வித்தியானந்தனுக்குத் தமிழுலகு பெரிதும் கடமைப்பட்டுள்ளது. தமிழர் அருங்கலைகள் செழிப்புற்று உயரிய இடத்தினைப் பெறவேண்டும் என்ற இவரது அபிலாஷை நிறைவேறும் வண்ணம் நமது பூரண ஒத்துழைப்பை அன்னாருக்கு நல்குவோமாக.*

தினகரன் 1962 செப்டெம்பர் 9 ஞாயிற்றுக்கிழமை

## 30

# கிறித்தவரும் ஈழத்திலே தமிழ் வளர்ச்சியும்

**கிறித்தவர் ஈழநாட்டிற்கு வந்ததின் பயனாகத் தமிழ்மொழி பலதுறையில் விருத்தியடைந்தது. கிறித்தவர் ஈழத்திற்கு வரும்வரை இலக்கியத் துறையிலேயே ஆக்க வேலைகள் நடைபெற்றன. இவர்கள் வந்ததன் பின்பே விஞ்ஞான நூல்கள், அகராதிகள் வசன நூல்கள், சிறந்த பதிப்புக்கள், பிரசங்கங்கள், பத்திரிகைகள் போன்ற துறைகளில் தமிழ்மொழி ஓங்கி வளர்ந்தது.**

*அச்சியந்திரத்தை நிறுவியதே இவர்கள் செய்த சிறந்த பேருபகாரமாகும். ஆயிரக்கணக்கான தமிழ் நூல்களை அழகிய எழுத்தக்களில் மிகச் சுருங்கிய காலத்தில் வெளியிட்டு, நாட்டின் பல இடங்களிலும் பரவும்படி செய்து, நூல்கள் அழிந்துவிடாதபடி காப்பதற்கு அச்சியந்திரம் நிறுவப்பட்டது.*

*வடஇலங்கையில் முதன் முதல் அச்சியந்திரத்தை நிறுவிக் கல்வி விருத்திக்கும் சமய விருத்திக்கும் ஏதுவாயுள்ள பல நூல்களை அச்சிட்டு வெளியிட்டவர் அமெரிக்க மிஷனரிமாரே. **1821**ம் ஆண்டிற் 'கறெற்' என்பவர் அமெரிக்காவிலிருந்து அச்சியந்திரம் ஒன்றுடன் வந்திறங்கினர். இவ்வச்சகம் **1834**ம் ஆண்டு மானிப்பாயில் நிறுவப்பட்டு, அவ்வாண்டிலிருந்து பல நூல்களை வெளியிடத் துணையாக அமைந்தது. இம்மிஷனரிமாரின் அடிப்படை நோக்கம் தமது சமயத்தைப் பரப்புவதாக இருந்தபோதும், தமிழ் மொழியும் தமிழர் கல்வியும் இவர்கள் முயற்சியாற் பயன் அடைந்தன. யாழ்ப்பாணத்தில் ஆங்கிலக் கல்வியையும் தமிழ்க் கல்வியையும் உரிய முறையில் கற்பித்து வந்தவர்கள் இவர்களே. வேதநூல், பூதநூல் விலங்கியல் நூல், வானநூல், கணிதம் முதலியவற்றைத் தமிழில் மாணவருக்குக் கற்றுக் கொடுக்க முதன்முதல் முன்வந்தவர்கள் இவர்களே.*

**விஞ்ஞானம்**

*முதன் முதல் தமிழில் உரை நடையிலே விஞ்ஞான நூல் எழுதியவர் கிறித்தவரே. வட்டுக்கோட்டைச் செமினரியிலிருந்து மிஷனரிமார் மேலைநாட்டு விஞ்ஞான நூல்களைத் தமிழில் அளித்தனர். இத்தொண்டில் முதலிடம் பெறுபவர் கிறீன் வைத்தியர், மானிப்பாய் வைத்தியசாலையிலிருந்து வைத்தியக் கல்வி புகட்டிவந்த கிறீன் என்பவர், மாணவருக்குத் தமிழ் மூலம் கற்பிக்கும் நோக்கத்துடன் மருத்துவ நூல்கள் பலவற்றைத் தமிழில் பெயர்க்கத்தொடங்கினார். முதன் முதல் 'கற்றர்' என்பவர் எழுதிய உடற் கூறும் உடல்நலமும் என்னும் நூலை **1856**ம் ஆண்டு மொழி பெயர்த்து வெளியிட்டார். இவருடன் சேர்ந்து இவர் மாணவர்கள் பலர் மொழி பெயர்ப்பு வேலையை நடத்தி வந்தனர். அவர்களுட் சாட்மன், டன்போத் எவர்டஸ் என்போர் குறிப்பிடற்குரியர்.*

*'டன்போத்' மொழி பெயர்த்த இரணவைத்தியம், 'சாப்மன்' மொழி பெயர்த்த அங்காதி பாதம், 'வில்லியம்போல்' மொழி பெயர்த்த வைத்திய காரம், 'கிறீன்' மொழி பெயர்த்த கெமிஸ்தம், சாப்மன் மொழி பெயர்த்த இந்து பாதார்த்த சரம் ஆகிய நூல்கள் முறையே **1867, 1872, 1872, 1875,1884** ஆகிய ஆண்டுகளில் அச்சிடப்பட்டன.*

**கல்வி**

*கறோல் விஸ்வநாதபிள்ளை என்பவர் வீசகணிதம் என்னும் நூலை 1855ம் ஆண்டு எழுதி யாழ்ப்பாணத்திற் பதிப்பித்தார். வில்லியம் நெவின்ஸ் (சிதம்பரப்பிள்ளை) நியாய இலக்கணம் என்னும் தருக்க சாத்திர நூல் ஒன்றினை 1850ம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் அச்சிட்டு வெளியிட்டார். வான சாத்திரம், சுகரணவாதம், உற்பாலனம் என்னும் நூல்களும் யழ்ப்பாணத்தில் அச்சிடப்பட்டன. நிலக்கணக்கியல், அளவை நூல் முதலிய துறைகளிலும் நூல்கள் வெளிவந்தன.*

*எனவே தமிழில் விஞ்ஞானக் கல்வியை முதன்முதல் அளித்தவர் கிறித்தவரே. தமிழ் மாணவருக்கு உயர்தரக் கல்வியைத் தமிழ்மூலம் போதிக்கும் பணியில் முதன்முதல் ஈடுபட்டவர் இவர்களே. இற்றைக்கு 125 ஆண்டுகளுக்கு முன்பே தமிழ் மூலம் விஞ்ஞானக் கல்வி புகட்டியும், அக்கல்விக்கு ஏற்ற நூல்களை வெளியிட்டும் இவர்கள் ஆற்றிய தொண்டு அக்காலச் சூழ்நிலை காரணமாக வேரூன்றவில்லை, உத்தியோக மோகத்தினாலும், ஆங்கிலேய அரசாங்கத்தின் கல்வித் திட்டத்தினாலும் ஆங்கிலக் கல்வி மக்கள் மனதைப் பெரிதும் கவர்ந்தது. தமிழ் மூலம் உயர்தரத் கல்வி கற்கும் முறை குறைந்து கொண்டே சென்றது. விஞ்ஞான நூல்கள் கிறித்தவரால் இயற்றப்பட்டன என்ற காரணத்தினாலும் பிற்பட்ட காலத்திற் புறக்கணிக்கப்பட்டன.*

**அகராதி**

*தமிழ்மொழி விருத்திக்கு இன்றியமையாத இன்னொரு துறையிலும் அமெரிக்க மிஷனரிமார் தொண்டாற்றினர். ஐரோப்பிய முறையிலே தமிழ்மொழிக்கு அகராதி ஆக்கும் பணியில் இறங்கினர். 1833ம் ஆண்டு தமிழ் ஆங்கில அகராதி ஆக்கும் திட்டம் உருவாக்கப்பட்டு 1842ம் ஆண்டில் வண.லெவி ஸ்போல்டிங் என்பவர் யாழ்ப்பாண அகராதி எனவும் மானிப்பாய் அகராதி எனவும் வழங்கும் அகராதியை வெளியிட்டனர். சொற்கள் அகரவரிசையாய் அமைந்த இந்நூல் 58,500 சொற்களைத் தன்னகத்தே கொண்டு விளங்கியது. சாமுவேல் கச்சிங்ஸ் வரிசைப்படுத்தி ஆக்கிய ஆங்கிலத் தமிழ் அகராதியை 1842ம் ஆண்டில் வின்ஸ்லோப் பாதிரியார் வெளியிட்டார். இதனையே 1852ம் ஆண்டில் ஸ்போன்டிங் பாதிரியார் புதுக்கியமைத்து வெளியிட்டார்.*

*நைற்றின் மேற்பார்வையில் 1833ம் ஆண்டில் தொடங்கிய தமிழ் ஆங்கில அகராதியை 1862ல் வின்சிலோப் பாதிரியார் சென்னையில் அச்சிட்டு வெளியிட்டார். இம்முயற்சிகளைத் தொடர்ந்து வேறுபல அகராதிகள் வெளிவந்தன. ஆகவே தமிழ் வளர்ச்சிக்குப் பயன்படக்கூடிய அகராதிகளை வெளியிட்டு உதவிய மிஷனரிமாருக்குத் தமிழ்ப் பேசும் மக்கள் பெரிதும் கடமைப்பட்டுள்ளனர்.*

**அச்சியந்திரம்**

*அமெரிக்க மிஷனரிமாரைப் பின்பற்றிக் கத்தோலிக்கரும் இந்துக்களும் யாழ்ப்பாணத்தில் அச்சகங்கள் நிறுவித் தமிழ் வளர்ச்சிக்கு உதவினர். அக்காலத்தில் யாழ்ப்பாண மேற்றிராணியாராய் இருந்த பொன்சீன் ஆண்டவர் அச்சியந்திரம் ஒன்றினை யாழ்ப்பாணத்தில் நிறுவினார். அண்டுறு என்பவர் முயற்சியால் அர்ச்.சூசை*

மாமுனிவரின் கத்தோலிக்க அச்சியந்திரம் என்னும் பெயருடன் 1871ம் ஆண்டிலிருந்து இவ்வச்சகம் பயன்படுத்தப்பட்டது. அச்செழுத்து வார்த்தல், பூகோளப் படங்கள் இயற்றுதல் முதலியனவும் அங்கு நடைபெற்றன. பாடசாலைத் தமிழ் உறுப்புகளை மாணவர் அளவு பிரமாணத்துடன் எழுதிப் பழகக் கூடிய ஐங்கோட்டமைப்பும் முதன் முதல் இவர்களால் இயற்றப்பட்டது. மாணவருக்குத் தேவையான பல பாடப்புத்தகங்கள் இவ்வச்சகத்தில் அச்சிடப்பட்டன.

கிறித்தவர் தமது சமயக் கருத்துக்களைப் பரப்பவும் சமய நூல்களையும் கருவி நூல் களையும் வெளியிடவும் அச்சியந்திரங்களைப் பயன்படுத்தியதைக் கண்ட இந்துக்களும் அச்சியந்திரங்களை நிறுவிப் பல நூல்களை வெளியிட்டனர். ஆறுமுக நாவலரும் கிறித்தவரைப் பின்பற்றியே வித்தியாநுபாலன யந்திரம் எனப் பெயரிய அச்சியந்திரத்தை 1849ம் ஆண்டு வண்ணார் பண்ணையில் நிறுவி மாணவருக்குப் பயன்படக்கூடிய பல நூல்களை வெளியிட்டார். இதற்குப்பின் அச்சியந்திரங்கள் பல இடங்களில் நிறுவப்பட்டு, தமிழ்மொழி வளர்ச்சிக்குக் காலாக இருந்தன.

#### பதிப்பகங்கள்

நூல்களைப் பதிப்பிக்கும் முறையும் கிறித்தவரிடம் பெற்றதே. அக்காலக் கிறித்தவப் பதிப்பாசிரியருட் குறிப்பிடற்குரியவர் ஈழத்துத் தாமோதரம்பிள்ளை. தமிழில் இன்று கிடைத்துள்ள மிகப்பழைய இலக்கண நூலாகிய தொல்காப்பியம் முழுவதையும் முதன் முதலாகப் பதிப்பித்த தனிச் சிறப்பு இவருக்கே உரியது. இறையனார் அகப்பொருள் உரை, வீரசோழியம், இலக்கண விளக்கம், கலித்தொகை, சூளாமணி முதலிய நூல்களை இவரே பதிப்பித்தார். கிறித்தவரைப் பின்பற்றி பல இந்துக்களும் நூல்களைப் பதிப்பித்தனர்.

இவர்களுள் ஆறுமுகநாவலர் பதிப்பித்த நூல்கள் பெரிதும் பாராட்டப்பட்டன. மாணவருக்கும் பொது மக்களுக்கும் பயன்படக்கூடிய நூல்களை இவர் பதிப்பித்தார். நாவலர் பதிப்பு என்றால் நல்ல பதிப்பு என்று பாராட்டுப் பெறும் அளவுக்கு இவர் நூல்களைப் பதிப்பிக்க முன்வந்தமைக்குப் பாதிரிமாரே வழிகாட்டினரெனின் அது மிகையாகாது.

#### சமயப் போர்

ஈழத்திலே தமிழிற் கண்டன நூல்களும் துண்டுப் பிரசுரங்களும் வினா விடைகளும் வெளிவருவதற்குக் காலாக இருந்தவரும் கிறித்தவரே. ஒல்லாந்தர் இலங்கையைக் கைப்பற்றியபோது கத்தோலிக்கச் சமயத்தை அழிக்கப் பல முயற்சிகள் செய்தனர். இதனைக் கண்ட கத்தோலிக்க குருமார் ஒல்லாந்தர் சமயத்துக்கு மாறாகப் பல கண்டன நூல்களை வெளியிட்டனர். அவற்றுள் 'யக்கொமெ கொன்சல் வாஸ்' என்பவர் எழுதிய வாத்தியாரும் குடியானவனும் தர்க்கித்துக்கொண்ட தர்க்கம். நவதர்க்கம், முசல்மான் வேதம், நாலுவேதம் என்பன முக்கியமானவை.

பின்னர் அமெரிக்க மிஷனரிமாருக்கும் நாவலருக்கும் ஏற்பட்ட சமயப் போரில்இத்தகைய நூல்கள் வெளிவந்தன. பாதிரிமார் போன்று ஆறுமுகநாவலரும் தமது அச்சியந்திரம் மூலம் கிறித்தமதக் கண்டன நூல்களையும் துண்டுப் பிரசுரங்களையும் வெளியிட்டார்.

*பாதிரிமார் முதலாம் வேத வினாவிடை, இரண்டாம் வேத வினா விடை எழுதிப் பரப்புவதைக் கண்டு தாமும் முதலாம் சைவ வினாவிடை, இரண்டாம் சைவ வினாவிடை முதலியவற்றை மாணவருக்கு இயற்றினார்.*

**பத்திரிகைகள்**

*இத்தகைய நூல்கள் வெளிவந்ததன் பயனாகத் தமிழ் உரைநடை இலக்கியமும் விருத்தியடைந்தது. ஈழத்திலே தமிழ்மொழியில் தனி வசன நூல்களை உண்டாக்கியவரும் கிறித்தவரே. கிறித்தவர் வெளியிட்ட மதச்சார்பான வசன நூல்களைக் கண்ட இந்துக்களும் இந்துமதம் சார்பான நூல்களையும் புராண இதிகாசங்களையும் வசனமாக எழுதி வெளியிட்டனர். கிறித்த சமயத்தைக் கண்டித்தும் நூல்களை வெளியிட்டனர். இவற்றின் பயனாக வசன நடை ஈழத்திலே வேரூன்றி வளரத் தொடங்கியது.*

*செய்தித்தாள், கிழமைப் பத்திரிகை, மாதப்பத்திரிகை முதலிய வெளியீடுகளும் கிறித்தவத் தொண்டினாலேயே முதன் முதல் ஈழத்திலே தோன்றின. உதயதாரகை என்னும் பத்திரிகையே யாழ்ப்பாணத்தில் முதன் முதல் வெளிவந்த பத்திரிகையாகும். **1841**ம் ஆண்டில் அமெரிக்க மிஷன் சார்பாகத் தொடங்கிய பத்திரிகையின் ஆங்கிலப்பகுதிக்கு என்றிமாட்டீன் என்பவரும் தமிழ்ப் பகுதிக்கு செத்மேசன் என்பவரும் முதன் முதல் பத்திராசிரியராக இருந்தனர். பாலியர்நேசன் மாணாக்கரின் பொருட்டு **1859**ம் ஆண்டு முதல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்று வந்தது. ஈழத்துக் கத்தோலிக்க சார்பாகப் 'பாதுகாவலன்' என்னும் மாத இருமுறை வெளியீடு, பொன்சீன் என்பவரால் **1876**ல் தொடங்கப்பட்டது. **1877**இல் இலங்கைக் கத்தோலிக்கச் சபையார் இதனை ஏற்று நடத்தினர். **1878** முதல் இது கிழமைப் பத்திரிகையாக மாற்றப்பட்டது. இப்பத்திரிகைகளைத் தொடர்ந்து பல தமிழ்ப் பத்திரிகைகள் ஈழத்தில் வெளிவந்துள்ளன.*

**நாவல்**

*தமிழில் வழங்கும் பழமொழிகளைத் திரட்டி வசன வடிவில் முதன்முதல் வெளியிட்டவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பேர்சிவல் பாதிரியாரே. முன்பு சமணர் வெண்பா யாப்பில் பழமொழி நாநூறு என்னும் நூலை இயற்றிப்போந்தனர். அதற்குப் பின் வெளிவந்த நூல் பேர்சிசவல் பாதிரியார் யாழ்ப்பாணத்தில் **1843**ம் ஆண்டில் திரட்டி வெளியிட்டதாகும்.*

*முதலாவது தமிழ் நாவலெனக்கொள்ளப்படும் பிரதாபமுதலியார் சரித்திரத்தை எழுதிய வேதநாயகம்பிள்ளையைப் போல ஈழத்தின் முதலாவது தமிழ் நாவலை எழுதிய இன்னாசித்தம்பியும் கத்தோலிக்கராவர். கிறித்தவப் பின்னணிகொண்டு இவரால் எழுதப்பட்ட "ஊசோன் பாலந்தை கதை" என்பதே ஈழத்தின் முதல் தமிழ் நாவலாகும். திருகோணமலையைச் சேர்ந்த இவ்வாசிரியர் எழுதிய நூல் **1891**ம் ஆண்டில் எஸ். தம்பிமுத்துப்பிள்ளை அவர்களால் பதிப்பிக்கப்பட்டது. இவரே மோவர்ணன், தாமோதரன், இரத்தினசங்கம் என்னும் நூல்களைப் பதிப்பித்தனர். தாமும் இரு நூல் களை எழுதியுள்ளார். எனவே ஈழத்தில் நாவலிலக்கியத்துறையில் முதலிற் கவனத்தைச் செலுத்தியவர் கிறித்தவர்கள். அவர்களைப் பின்பற்றியே பிற்காலத்திற் சிருஷ்டி இலக்கியத்தை ஈழத்தில் பலர் படைத்தனர்.*

**இலக்கணம்**

*தமிழ் இலக்கிய வரலாற்று நூல்களுக்கு முன்னோடியாக அமைந்துள்ள தமிழ் புளூற்றாக் என்னும் நூல் தமிழ்ப் புலவர்களைப் பற்றிக் கூறும் சிறந்த நூலாகும். இதனைச் சைமன் காசிட்டி **1859**ம் ஆண்டில் வெளியிட்டார். தமிழரிடையே சாதி மரபுகள், பழக்கவழக்கங்கள், இலக்கியம் என்ற வரலாற்றுக் கண்ணோட்டமுள்ள நூலை எழுதியவரும் இவரே" சதாசிவம்பிள்ளை (ஆர்ணோல்டு) அவர்கள் **1886**ல் பாவலாசரித்திர தீபகம் என்ற பெயரிய நூலை வெளியிட்டனர். இந்நூல்களே பிற்காலத்தில் எழுந்த தமிழ் இலக்கிய வரலாற்று நூல்களுக்கு வழிகாட்டிகளாக விளங்கின.*

*பழங்காலத்து இலக்கண நூல்கள் வடமொழிப் பண்பைப் பின்பற்றிச் சூத்திரங்களால் இயற்றப்பட்டவை. எனவே யாவரும் எளிதிற் கற்றறிவதற்கேற்ற எளிய உரைநடையில் இலக்கண நூல்கள் இயற்றத் தொடங்கினர். அவர்களுள் ஈழத்தில் முன்னோடிகளாக விளங்கியவர் கிறித்தவர். தமது சமயத்தினர் தமிழை இலகுவிற் படித்துக்கொள்வதற்கு ஏற்ற இலக்கண நூல்களை இவர்கள் தமிழில் உரைநடையில் அமைத்தனர். இவர்கள் நூல்களைப் பின்பற்றியே ஆறுமுக நாவலரின் இலக்கணச்சுருக்கம் இலக்கண வினாவிடை போன்ற நூல்கள்வெளிவந்தன.*

**நாடகம்**

*கிறித்தவராற் பல நாடக நூல்களும் ஈழத்தில் இயற்றப்பெற்றன. பூதத்தம்பி நாடகம், அலேக நாடகம் என்றிக்கு எம்பிறதோர் நாடகம், யோசேப்பு டிறாமா, மூவிராசாக்கள் டிறாமா, பத்திராசு விலாசம், எஸ்தர் விலாசம், எஸ்தாக்கியர் சபா, பஞ்சரத்தின சபா, அந்தோனியார் வாசகப்பா, சூசையப்பர் வாசாப்பு போன்ற பலவகைப்பட்ட நாடகங்கள் சிறித்தவரால் ஈழத்தில் எழுதப்பட்டன.*

*ஈழத்திலே தமிழ் மொழியைப் பிரசங்கத்திற்குப் பயன்படுத்தி அதற்கேற்ற மொழியாக வளர்த்த பெருமையும் கிறித்தவருக்கே உரியது. சைவரைக் கிறித்தவராக மதம் மாற்றவும் கிறித்த சமய உண்மைகளை யாவரும் எளிதில் அறிந்துகொள்வதற்கும் கிறித்தவப் பாதிரிமார் தெளிவான முறையிற் பிரசங்கங்கள் செய்தனர். இவர்களைப் பின்பற்றியே ஆறுமுகநாவலர் அவர்களும் சைவசமயத்தைப் பற்றியும் சமய குரவரைப் பற்றியும் விரிவுரைகள் ஆற்றினர். நாவலர் என்ற பட்டம் இவர் பெறுவதற்கு இவ்விரிவுரைகளே அடிப்படையாகவிருந்தன. புறம்பான பொருள்பற்றி விரிவுரை நிகழ்த்தக்கூடிய நிலையைத் தமிழ்மொழி கிறித்தவராலேயே பெற்றது.*

*பலவகைகளிலே தேங்கிக் கிடந்த தமிழிலக்கிய உலகிலே புதுமை வேட்கையையும் திறனாய்வு நோக்கினையும், பரந்த மனப்பான்மையினையும் புகுத்திப் புதுயுகத்தின் தலைவாயிலில் எம்மைக் கொண்டு வந்து நிறுத்தியவர் அவரே. இவ்வாறு தமிழ் மொழி வளர்ச்சிக்கு வேண்டிய பல துறைகளில் ஈழத்துக் கிறித்தவப் பெரியார் தொண்டாற்றியிருக்கின்றனர். இத்தொண்டின் பயனாகவே தமிழ்மொழி பல புதிய அம்சங்களைப் பெற்றுப் பொலிவுடன் விளங்குகின்றது.*

*(தினகரன் நத்தார் மலரில் **23.12.1963**இல் வெளிவந்த கட்டுரை*

தினகரன் 1962 டிசெம்பர் 23 ஞாயிற்றுக்கிழமை

# கலைஞரைப் பாராட்டுதல்

**அளவெட்டி வடக்கு கலாசேவா ஜன சமூக நிலையப்பொதுக் கூட்டத்தில் உடுக்குப்பாட்டு கலைஞர் சிதம்பரப்பிள்ளை, கந்தையா ஆகியோரையும் கரக காவடிக் கலைஞர் ஜெயரத்தினம் சிவனேசன் ஆகியோரையும் பாராட்டி பத்திரம் வழங்கிய போது கலாநிதி வித்தியானந்த கூறிய கருத்துகள்**

**தமிழர் நிலை**

*பதினெட்டாம் நூற்றாண்டில் சீமையில் வாழ்ந்த ஒரு பெரிய இராசதந்திரி அவர் தன் வீட்டு வாசற்படியில் வந்து திசை கொள்வார். சிறிது நாழிகை கிழக்கே பார்ப்பார், சிறிது நாழிகை மேற்கே பார்ப்பார், கிழக்கே போவதா மேற்கே போவதா என்பது பற்றி அவர் உள்ளத்தில் பிரமாதமான போராட்டம்! இறுதி கிழக்கேயும் போகாது மேற்கையும் போகாது உள்ளேயே போய்விடுவாராம்.*

*இந்நிலையிலேதான், கலையைப் பொறுத்தளவில் தமிழர் இருக்கிறார்கள் பல ஆண்டுகளாக மேல்நாட்டு நாகரிகத்தின் தாக்குதலினால் சொந்த நாட்டு கலைகளை புறக்கணித்து பிறநாட்டுக் கலைகளை போற்றிய தமிழர், இன்று நாட்டில் தேசிய உணர்ச்சி ஏற்பட்டு நிலை மாறி இருப்பதைக் கண்டு என்ன செய்வதென தெரியாது. தத்தளிக்கின்றனர். பிறநாட்டு கலைகளுக்கும் தமது சொந்த கலைகளுக்கும் இடையே அகப்பட்டு தடுமாறுகின்றனர்.*

**மக்கள் பொறுப்பு**

*இச் சூழ்நிலையில் அளவெட்டி சனசமூக நிலையத்தார் கலைஞர்களை பாராட்ட விழாவெடுத்தது பிறருக்கு முன்மாதிரியானது. பிறர் பின்பற்ற வேண்டிய இசையையும் கூத்தையும் வளர்க்கப் பாணரும், விறலியரும் பண்டைக் காலத்தில் இருந்தனர். அரசரும் வள்ளல்களும் கோயில்களும் இக் கலைகளை ஆதரித்து கலைஞர்களுக்கு ஊக்கம் அளித்தனர். அரசர் அவைக்களத்திலும் கோயில் மண்டபங்களிலும் இக்கலைகள் ஓங்கி வளர்ந்தன. இன்று இந்த வாய்ப்புகள் இல்லை. அரசாங்க ஆதரவும் இல்லை. எனவே கலைகளை வளர்க்கும் பொறுப்பு மக்களுடையது ஆகின்றது. சனசமூக நிலையங்கள் போன்ற ஸ்தாபனங்கள் இத்துறையில் உழைத்தல் போற்றற்குரியது.*

**இசை உருவான இறைவன்**

*இசையையும் நடனத்தையும் இறைவனோடு சேர்த்து அவற்றிற்குப் பெருமை கொடுத்தனர் தமிழ் மக்கள். நடனம் இறைவனோடு இணைந்துப் பேசப்படுகிறது. எல்லா தெய்வங்களும் பல்வகை கூத்துக்களை ஆடியதாக நூல்கள் கூறும். இறைவனை இசை உருவாகக் கண்டனர் அடியார்கள் பார்த்தார்கள். இத்தகைய சிறப்பு வாய்ந்த கலைகளை பொதுமக்களின் அழியாச் செல்வங்கள். கலைகள் சிறந்த நாடு பண்பாடு உள்ள நாடக*

கணிக்கப்படுகிறது. ஒரு நாட்டு மக்களின் பெருமையை அவர்கள் கலைச்செல்வங் கொண்டு மதிப்பிடலாம். மக்களுக்கு தொழிலால் உரம் ஏறுகிறது; கலையால் அந்த உரத்திற்கு மெருகு ஏறுகின்றது. தொழில் செல்வத்தை தருகின்றது. கலை இன்பத்தை தருகின்றது தொழில் ஊக்கத்தை அளிக்கின்றது கலை. அமைதி அளிக்கின்றது.

**மேல்நாட்டில் மதிப்பு**

கிராமிய கலைகளுக்கு முக்கியத்துவம் உண்டு. அவை அழகு கலைகள். அவை நாட்டு மக்களது கருத்துக்களை பிரதிபலிக்கின்றன. மக்களின் குணச்சிறப்பு, கலை பண்பாடு வாழ்க்கை முறை முதலியவற்றை எடுத்து விளக்குவன. இக்கலைகளின் இசை நுணுக்கங்களையும் ஆடல் முறைகளையும் நன்கு உணர்ந்தோர் இன்றும் இருக்கின்றனர். அத்தகையோரில் நால்வரை பாராட்டு முகமாக இன்று இங்கு கூடியுள்ளோம். இவர்களின் பாடல்களும் ஆடலும் ஒளிப்பதிவு செய்யப்பட்டு இங்கிலாந்து அமெரிக்கா போன்ற தேசங்களில் பாதுகாக்கப்பட்டும், ஒலிபரப்பப்பட்டும் வருகின்றன. பிறநாட்டாரும் எமது கிராமிய கலைகளை மதிக்கும் அளவுக்கு இக்கலைஞர்கள் இக்கலைகளை வளர்த்து வருகிறார்கள். இவர்களைப் பாராட்டும் முகமாக நாம் இவர்கள் வளர்க்கும் கலைகளைப் பாராட்டுகின்றோம்.

பாராட்டு விழாக்கள் பல வகையில் நன்மை பயக்கின்றன. அவற்றின் மூலம் பிறரை போற்றும் பண்பை நாம் வளர்க்கின்றோம். இனியவை கூறும் சால்பை பெறுகின்றோம், பிழவு குன்றி ஒற்றுமை பெருகுகின்றது. பண்பட்ட மனிதராக வாழ வழி வகுக்கின்றோம். கலைஞர்களைப் போற்றும் பணியில் இறங்குகின்றனர். கலைஞர்களுக்கு உள்ளம் உவகையால் பொங்குகின்றது இதன் கலைஞர்களும் ஊக்கம் பெறுகின்றன.

**புத்துயிரும் புது வாழ்வும்**

தில்லை நாதனின் திருக்கரத்திலே திகழ்ந்து பல்லுலகும் பலவுயிரும் படைத்தருளும் திருவருட்செயலை விளக்கி ஓங்கார நாதம் எழுப்பி ஒளிர்கின்றது. உடுக்கு எனும் இசைக்கருவி புனிதமானது.

தினகரன் 1963 ஜனவரி 2 புதன்கிழமை

## 32

# பசியும் பிணியும் போக்கவும் கண்ணீருக்கு பதில் கழிப்பினைக் காணவும்

**ஏருழுது பாடுபட்டு, எடுத்த நெல்லைக் கொடுத்திட்டு, இரண்டு கொத்து அரிசி வாங்கி, அதில் அரைக் கொத்துக் கல் ஒதுக்கி, காரிருட் சந்தையிலே, மண்கலந்தவெல்லம் வாங்கிச் சீருடனே கொண்டாடும் பொங்கற்றிருநாள்! வழக்கம் போல இவ்வாண்டும் வருகின்றது தைப்பொங்கல். பானையிற் பொங்கி அதைக்கண்டு மனதில் மகிழ்ச்சி கொண்ட நாட்கள் மறைந்துவிட்டன. பொங்குவதற்குப் பானையும் அதிற்போட அரிசியும் இல்லாத நிலையில் எத்தனையோ உழவர் தவித்துத் தடுமாறுகிறார்கள். நெற் களஞ்சியமாக ஒரு காலத்தில் விளங்கிய நாட்டிலே மக்கள் கூப்பன் அரிசிகொண்டு பொங்குகிறார்கள்!**

*வா ழ்க்கைக்கு இன்றியமையாத பொருள்களின் கொடியவிலை விவசாயிகளை ஒரு புறம் வருத்துகின்றது; அவர்கள் வாழும் வீடுகள், அவர்கள் உண்ணும் உணவு, அவர்கள் உடுக்கும் உடை இவற்றை நினைக்கும்தோறும் கண்ணீர் பெருகுகின்றது.*

**பட்டினி வாழ்வு.**

*குந்தக் குடியற்றுப் படுக்கப் பாயற்றுக் கட்டத்துணியற்றுப் பிய்ந்த கூரையை வேய ஈக்கற்றுத் தவிக்கிறார்கள் உழைப்பாளர். வயிறார உண்ண இயலாத பட்டினிப் பட்டாளமாகக் காட்சியளிக்கின்றனர் உழவுத் தொழிலாளர். பொங்கல்விழாவைத் தோற்றுவித்த உழவருக்குப் பொங்கலில்லை. உழவோர் உலகத்திற்கு ஆணி என்பர்; ஆனால், உழவோரின் வேதனைமிக்க வாழ்க்கைச் சமையால் அந்த அச்சாணி இன்று சுழன்று சுழன்று தேய்ந்து இற்றுப்போகும் நிலைக்குவந்துவிட்டது.*

*இப்பொங்கல் விழா இவ்வளவு காலமும் போலவே இனியும் நடைபெற்றால், தன்சுவை இழந்துவிடும்; அதற்குரிய தனிச்சிறப்பு நீங்கி விடும்; உழவர் பெருநாள் அவர்களுக்கே துயர் நாளாகித் தமிழருக்குக் கருநாளாகிவிடும். பொங்கல் நாளைத் தமிழர் வாழ்விற் பல்வேறு துறைகளிலும் மறுமலர்ச்சி ஏற்படுத்தும் திருநாளாக்க வேண்டும்.*

*ஒரு நாட்டு மக்கள் நன்மக்களாக விளங்குவதற்கு அவர்கள் உணவுக் குறைவின்றி வாழவேண்டும்; இயற்கைப் பசியாகிய பசி ஒழிதல்வேண்டும். உணவுப் பொருளை உண்டாக்குவதற்குக் காணி நிலம் வேண்டும். நிலத்தை வளம்படுத்த ஏரி குளம் முதலிய நீர்நிலைகள் வேண்டும். எனவே நிலவளமும் நீர்வளம் சிறந்த மக்கள் உயர்ந்து விளங்குகின்றனர். இதனாலேயே உணவெனப்படுவது நிலத்தொடு நீரே என்று புலவர் பாடிச் சென்றனர்.*

**நிலமும் நீரும்**

*நீரை இன்றியமையாத உடம்பிற்கெல்லாம் உணவு கொடுத்தோர் உயிரைக் கொடுத்தோராவர். உணவை முதலாக உடையது அவ்வுணவால் உளதாகிய உடம்பாதலால்,*

உணவென்று கூறப்படுவது நிலத்தொடு கூடிய நீரே. இக்காரணம் பற்றியே நிலத்தையும் நீரையும் ஒரு வழிக்கூட்ட முயன்றனர் பண்டைத் தமிழரசர். நிலமும் நீரும் எல்லாருக்கும் எளியனவாக நிறைந்து செழித்த நாடாக எமது நாடு விளங்கவேண்டும்.

ஒரு நாட்டின் தொழில்களிலே உழவும் வணிகமும் தலைசிறந்தன. ஒரு சமுகத்தின் மேம்பாட்டுக்கு விவசாயமும் வணிகமும் ஒருங்கு செழித்திருத்தல் வேண்டும். விவசாயத்திற்கு உரிய மதிப்பை அளியாதே இன்று தமிழர் ஆலாய்ப் பறக்கின்றனர். இன்று தமிழரிடையே நிலம் படைத்தவர் உழவர் அல்லர். பிற பிரதேசங்களில் உத்தியோகம் பார்ப்போரும் வியாபாரம் நடத்துவோருமே. இதனாற் பல காணிகள் குத்தகைக் குக் கொடுக்கப்பட்டுப் பாழாகக் கிடக்கின்றன. தன் நிலத்தைப் பண்படுத்திப் பயிர் செய்பவனுக்கு நிகர் யாருமே இல்லை. இதனாலேயே “உழவு அற உழுதவன் ஊரிற் பெரியவன்” என்ப.

தமிழரது பொருளாதார நிலை மாற்றி அமைக்கப்படவேண்டும். நாளுக்கு நாள் அருகிக்கொண்டுவரும் அரசாங்க உத்தியோகமும், அரை உயிருடன் சேடமிழுத்துக் கொண்டிருக்கும் சிங்கப்பூர்க்காசுமே எமது பொருளாதார அடிப்படையாகக் கடந்து பல ஆண்டுகளாக அமைந்து வந்திருக்கின்றன. வருங்காலத்தில் அரசாங்க உத்தியோகத்தை நம்பியிருக்க முடியாதென்பது இப்பொழுது தெளிவாகிவிட்டது; பிற பிரதேசங்களில் வியாபாரம் செய்து பொருளாதாரத்தை நிலையாக அமைக்கலாம் என்ற நம்பிக்கையும் குறைந்துகொண்டு ருகின்றது; சிங்கப்பூர், மலாயா, கானா போன்ற இடங்களிலிருந்தும் தமிழர்கள் விரட்டப்படுவார்கள் என்பதற்குரிய அறிகுறிகளும் இப்பொழுது தோன்றுகின்றன.

இந்நிலையில், முன்பு போலக் காணி பூமியைத் திருத்திப் பண்படுத்தி விவசாயம் மூலம் மானத்துடன் வாழ வழி வகுத்தல் வேண்டும். மாற்றான் அருள்நாடி எம்மை விற்று எம்முடைய பொருளாதாரத்தை உயர்த்த முயலும் போலி முயற்சி எமக்கு ஈற்றில் அழிவையே தரும். அரசியல் வேட்டையிற் சிக்குண்டு நாளுக்கு நாள் தோல்மாறும் அரசாங்கங்களின் விருப்பு வெறுப்புக்களிலே தங்கி, எந்நேரம் அடி விழும் எந்நேரம் கடை தீக்கிரையாகும் என்று எப்பொழுதும் ஏங்கிக்கொண்டிராது, தமிழனம் என்றென்றும் மன அமைதியுடனும் வாழத் திட்டம் வகுக்க வேண்டும். தமிழரின் பொருளாதார நிலையைச் செவ்வனே அமைப்பதிலேயே தமிழரின் வருங்காலம் தங்கியுள்ளது. ஒவ்வொரு தமிழ் மகனும் பசி ஆற உண்பதற்கு உணவும் மானங்காக்க உடுப்பதற்கு உடையும் பெருமளவிற்கு பொருளாதாரத் திட்டம் வகுப்போமாயின், அதுவே வேண்டற்பாலது.

**பயிரிட வேண்டும்**

ஒவ்வொருவரும் தம்மால் இயன்றவரை உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டும். ஒரு சிறு தோட்டம் இருந்தாலும் அதிலே தக்காளிச் செடியையாவது பயிரிடுங்கள் என மகாத்மா காந்தி கூறிச் சென்றிருக்கிறார். ஒவ்வொருவரும் தமது வீட்டுக் கோடியில் ஏதாவது கொடியையோ செடியையோ நடலாம். குழியிலுள்ள பயிரைக் கூரைமேல் விட்டாற் போதுமே! ஆடி மாதத்தில் அவரை போட்டால், கார்த்திகை மாதத்திற் காய் காய்க்கும். தமிழ் பேசும் மக்கள் வாழும் பிரதேசங்களிலுள்ள காணி நிலத்தை - பயன் தரக்கூடிய ஒவ்வொரு பரப்பையும் - விவசாயத்திற்குப் பயன்படுத்தவேண்டும்.

*எல்லாற்றிலும் மேலாக உழவனுக்குக் காணி நிலம் வெண்டும். இன்று ஈழத்திலே காணியைச் சொந்தமாகப் பெறத் தமிழர் துடிதுடிக்கின்றனர். உழவுத் தொழிலில் ஈடுபடுவோன் - உழைப்பாளி - தனக்கெனச் சொந்தக்காணி பெறவேண்டும். அந்தக் காணியின் வளத்தைப் பெருக்குவதற்கு நீர் வளம் பெறவேண்டும். அப்பொழுதுதான் விவசாயம் உண்மையிலே முன்னேறும்.*

**எழுத்தாளர் பொறுப்பு**

*இத்தகைய சூழ்நிலையை பொருளாதாரவிருத்திக்கேற்ற அமைப்பை - உருவாக்குவதில் இன்றைய எழுத்தாளருக்கும் பெரும் பங்குண்டு. உழைப்பாளியின் தரம் உயர - மக்கள் உண்ண உணவும் உடுக்க உடையும் பெற- வகுக்கும் திட்டத்தில் எழுத்தாளர் இடம் பெற்றே தீர வேண்டும். ஒரு சமுதாயத்தின் உண்மையான நிலையையும் எண்ணக் கருத்தக்களையும் உள்ளத் துடிப்புக்களையும் பிரச்சினைகளையும் எழுத்து மூலம் எடுத்தக் காட்டுவது எழுத்தாளர் பொறுப்பு. விஷயம் தெரியாதவர், தம் முன்னேற்றமே கண்ணாகக் கொண்ட சுய விளம்பரப் புலிகள், துரும்பாகக் கணிக்கப்பட வேண்டிய பதர்கள். தாமும் ஏதோ இயக்கத்தைக் கொண்டு செலுத்துபவர் எனக் காட்ட விரும்பித் தேவையற்ற வீண் பிரச்சினைகளைக் கிளப்புவோர், உள்ளே ஒன்றுமே இல்லாத சப்பட்டைகள் என்ன கூக்குரல் எழுப்பினும், இது எழுத்தாளர் கடனாகும்.*

*பொங்கல் திருநாள், சமூகம் முழுவதற்குமுரிய பெருநாள். சாதி சமய வேறுபாடின்றித் தமிழராகப் பிறந்தோர் அனைவரும் கலந்து கொள்ளும் பெருமைபடைத்த திராவிடத்திருநாள். தமிழ்ச் சமுகத்திலே நிலைபேறான பொருளாதார அமைப்பினை வகுக்க - பசியும் பிணியும் நீங்கி வசியும் வளமும் சுரக்க - எல்லோரும் இன்புற்றிருக்க இத்தேசியத் திருவிழா வழிகாட்டுவதாக.*

தினகரன் 1963 தை 14 திங்கட்கிழமை

## 33

# பள்ளிவாசல்களில் வழங்கும் புனித மொழிகளில் ஒன்று தமிழ்

**கண்டியில் சென்ற ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற "ஏமாற்றம்" என்ற சமூக நாவலின் வெளியீட்டு விழாவில் கலாநிதி சு. வித்தியானந்தன் ஆற்றிய உரை. கொழும்பு ஸாஹிராக் கல்லூரி அதிபர் ஜனாப் ஜூ எல்.எம். மஷ்ஹூர் தலைமையில் விழா நடைபெற்றது.**

*தமிழ் பேசும் பெருமக்கள் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வரும் மத்திய மாகாணத்திலே, ஈழத்துக் கடைசி மன்னன்- தமிழரசன்- தலைநகராகக் கொண்டு ஆண்ட கண்டி மாநகரிலே, முஸ்லிம் மக்களின் திருத்தலங்களில் ஒன்றாகிய கண்டித்திருநகரிலே இன்று "ஏமாற்றத்திற்கு" விழா எடுப்பு! கண்டி 'மீராமக்காம்' பள்ளியில் உள்ள கல்லறையில் அடங்கி இருப்பவர் ஷிஹா புத்தீன் வலியுல்லா என்னும் முஸ்லிம் ஞானி. இதனாலே கண்டி மாநகரம் முஸ்லிம்களின் திருத்தலங்களில் ஒன்றாக விளங்குகின்றது. இக்கல்லறையில் அடங்கிய ஞானியை பாட்டுடைத் தலைவராக அமைத்து கண்டிப் பதிற்றுப்பத்தாதி என்னும் பிரபந்தத்தை அப்துல் காதிறுப் புலவர் பாடியுள்ளார். இதே பொருளில் வேறொரு புலவர் கலம்பக உறுப்புகள் அமைய கண்டிக்கலம்பகம் எனும் நூலை பாடியுள்ளார். எனவே பாடல் பெற்ற இஸ்லாமிய திருத்தலம் ஆகிய கண்டியிலேயே முஸ்லிம்கள் பழங்காலம் தொட்டு தமிழை வளர்த்து வந்த இந்நகரில் இன்று சிறந்ததொரு தமிழ் நூல் வெளி வெளிவருகின்றது.*

**முஸ்லிம்களின் தமிழ் புத்தாண்டு**

*ஈழத்து முஸ்லிம்கள் கண்டியிலிருந்து மட்டும் தமிழை வளர்க்கவில்லை. கவிதைகள் புனைந்தும், வசன நூல்கள் இயற்றியும் சமய கிரந்தங்கள் எழுதியும், இசையோடு தொடர்புடைய பாடல்கள் பலவற்றை யாத்தும் ஈழத்து இஸ்லாமியர் தமிழ் மொழிக்கு தனிப்பெரும் தொண்டாற்றி உள்ளனர். வேர்விலையைச் சேர்ந்த அப்துல் ஹமீது மரைக்கார், அஹமது லெப்பை மரிக்கார் உபாத்தியாயர் என்போர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அசனாலெப்பை, மீரான் முகிய்யித்தீன் என்போர் கற்பிட்டி முகம்மது தம்பி மரைக்கார் அவர்கள், மட்டக்களப்பு மருதமுனை சின்ன ஆலிம் அப்பா, அக்கரைப்பற்று சேகு மதாறு சாகிப் புலவர் எனப்பலர் தமிழ் மொழியைச் சென்ற பல ஆண்டுகளில் வளர்த்திருக்கிறார்கள். இச்சான்றோரைப் பின்பற்றி இன்று பல முஸ்லிம்கள் கவிதை சிறுகதை, நாவல் நாடகம், குழந்தை இலக்கியம் எனப் பல துறைகளில் தமிழ் மொழியைப் பேணி வளர்க்கின்றார்கள்.*

*இவர்கள் தமிழ் மொழியை இதுவரை வளர்த்ததிலும், இப்பொழுது வளர்ப்பதிலும் யாதோர் வியப்பும் இல்லை. ஏனெனில் ஈழத்து முஸ்லிம்களின் வீட்டு மொழி தமிழ் மொழியே. ஆம் அவர்களின் தாய்மொழி தமிழில் வெள்ளிக்கிழமைகளில் நடைபெறும் ஜூம்ஆத் தொழுகையுடன் தொடர்புட்ட குதுப்பாப் பிரசங்கம் அரபியிலும் தமிழிலுமே நடைபெறுகின்றது. முஸ்லிம் பள்ளிவாசல்களில் வழங்கும் புனித மொழிகளில் ஒன்றாக தமிழ் மொழி விளங்குகின்றது. இஸ்லாமியரின் தமிழ்மொழி வளத்தையும்*

ஈடுபாட்டையும் உலகறிய எடுத்து விளம்பும் சான்றுகளாக என்றென்றும் விளங்குவன இவர்கள் நாவிலே பல்லாண்டுகளாகத் தவழும் நாடோடி பாடல்கள் தமிழில் உள்ள இப் பாக்கள் இஸ்லாமிய மக்களின் எண்ணக் கருத்துக்களை உள்ளத் துடிப்புகளை கலைப் பண்பை வாழ்க்கை முறையை படம் பிடித்துக் காட்டுகின்றன. ஈழத்தில் இஸ்லாமியர் வாழும் மூலை முடுக்குகளிலும் வயல்வெளிகளிலும் உலாவுகின்ற இப்பாடல்கள் இஸ்லாமியரின் உயிர்நாடி தமிழ் என்பதை எமக்கு தெளிவாக காட்டுகின்றன.

**சிறந்த படைப்புகள்**

இப்பொழுது இலங்கை முஸ்லிம்களில் மூன்றில் ஒரு பகுதியினர் தமிழ் மொழி பெரும்பான்மையாக வழங்கும் பிரதேசங்களில் வாழ்கின்றனர். மூன்றில் இரு பகுதியினர் சிங்களப் பகுதிகளில் வாழ்கின்றனர். ஆனால், சிங்களவர் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் முஸ்லிம்களிற் பெரும்பான்மையோர் காணப்பட்டபோதும் , அப்பகுதிகளில் இருந்தே பல தமிழ் இலக்கியப் படைப்புக்கள் இன்று தோன்றுகின்றன அப்பகுதிகளில் வாழும் முஸ்லிம் சிறுவர் மீது இன்று சிங்கள மொழி இரண்டாவது மொழியாகத் திணிக்கப்பட்டு திட்டவட்டமாக வகுக்கப்பட்ட கொள்கைப்படி தமிழ் ஒதுக்கப்பட்ட போதும், இத்தகைய கொடுங்கோன்மைச் செயலுக்கு சவால் விடுவது போல பல தமிழ் இலக்கிய சிருஷ்டிகள் நாளுக்கு நாள் அப்பகுதிகளில் இருந்து வந்து கொண்டிருக்கின்றன.

முஸ்லிம் மக்களை அவர்தம் தாய்மொழியில் இருந்து பிரிக்க முயற்சிகள் அதிகரித்து வரும் இன்றைய சூழ்நிலையில், தம்மை வளப்படுத்திய, தம்மை தமிழ் பேசும் இனமாக்கிய தாய் மொழியை தாம் ஒருபோதும் மாற்றான் தாயை பெறுவதற்கு பலி கொடுக்கப் போவதில்லை என அறைகூவுவதாக இருக்கின்றது இன்று முஸ்லிம்களிடையே காணப்படும் தமிழ் இலக்கிய உணர்ச்சி. ஈழத்திலே வெளிவரும் தமிழ் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் முஸ்லிம்களுடைய படைப்புக்களை இன்று ஏராளமாக காணலாம். தமிழ் இலக்கிய உலகிலே இன்று முஸ்லிம்களிடம் காணப்படும் விழிப்புக்கும் உணர்ச்சிக்கும் எடுத்துக்காட்டாக அமைவது நூல் வெளியீடு. இந்த ஆண்டு கடந்த மூன்று மாத எல்லையில் நான் அறிந்த வரையில் மூன்று முஸ்லிம் எழுத்தாளர்களின் நூல்கள் வெளிவந்திருக்கின்றன. அவற்றுள் ஒன்று புரட்சிக்காமலின் கவிதைகள். மற்றது ஜனாப் முகமது உவைஸ் உரை எழுதிய குத்பு நாயகம். மூன்றாவது மாமாவின் “ஏமாற்றம்”.

**நூல் வெளியீடு**

இச் சந்தர்ப்பத்தில் நூல் வெளியீட்டகங்களைப் பற்றி குறிப்பிடலாம் என கருதுகின்றேன். எழுத்து உலகிலே மிக உயரிய பணி நூல் வெளியீடாகும். ஓர் எழுத்தாளரின் படைப்புக்கு தேசியப் பண்பை அளிப்பது நூல் வெளியீடு ஆகும். எழுத்தாளனை பொதுமக்களுடன் தொடர்பு படுத்துகின்ற வெளியீட்டங்கள் இன்று ஈழத்திலே சில நிறுவனங்களும், தனிப்பட்டவரும் குழுக்களும் எழுத்து உலகிலே வெளிவரும் படைப்புக்களை வெளியிட முன்வந்திருப்பது இலக்கிய வளர்ச்சிக்குரிய நல்ல அறிகுறியே. கடந்த மூன்று மாதங்களில் பல நிறுவனங்கள், பல நூல்களை வெளியிடுகின்றன. இலங்கை முதற் போக்கு சங்கத்தினர் நிறுவனம் ஆகிய கூட்டுறவு பதிப்பகம் , டானியல் சிறுகதைகளையும், பல்கலை வெளியீடு விண்ணும் மண்ணும் என்னும் சிறுகதைத் தொகுதியையும், கண்டி முஸ்லிம் ஹோட்டல் புத்தக நிலையம் புரட்சி கமாலின் கவிதைகளையும் அரசு வெளியீடு பகவத் கீதை வெண்பாவையும் , ஸபீனா

*பதிப்பகம் முகியித்தீன் புராணத்தையும். கல்கின்னைக் கலா நிலையம் 'ஏமாற்றத்'தையும் வெளியிட்டு இருக்கின்றன.*

*இன்றைய எழுத்தாளருக்கு சாவுமணி அடிக்கும் முயற்சியில் அதிகார வெறி கொண்ட சிலர் முயன்று கொண்டிருக்கும் வேளையில், இளம் எழுத்தாளரின் நூல்களை வெளியிடும் பதிப்பகங்களின் துணிவைப் பாராட்டாமல் இருக்க முடியாது. இன்றைய சிறுகதைகளும் நாவல்களும் நாடகங்களும் கவிதைகளும் இழிசனர் படைப்புகள் என்று குறிசுடப்படும் சூழ்நிலையில் அக்கூக்குரலுக்கு எதிரொலியாக 'ஏமாற்றம்' எனும் நாவலை வெளியிட்ட கலா நிலையத்தாரை நாம் மனமாரப்பாராட்டுகின்றோம். கலாநிலையத்தர் இன்னும் பல நூல்களைத் தமிழில் வெளியிட்டு தமிழ்த் தொண்டை இடைவிடாது ஆற்றிவருவார்கள் என எதிர்பார்க்கின்றோம்.*

*இந்நூலை அச்சிட்டு றோயல் அச்சக சொந்தக்காரர் ரொட்ரிகஸ் அவர்களின் தமிழ்ப் பணியையும் இங்கு குறிப்பிட வேண்டும். ஈழத்திலே இன்றுள்ள சிறந்த அச்சகங்களை விரல் விட்டு எண்ணிவிடலாம். அத்தகைய அச்சகங்களில் ஒன்று றோயல் அச்சகம் நூல்களையும் வெளியிடும் பெருமை ரொட்ரிகஸ் அவர்களைச் சாரும். பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ் சஞ்சிகை, கண்டி ஆசிரியர் பயிற்சி கல்லூரி சஞ்சிகை, கலையும் பண்பும், மட்டக்களப்பு நாட்டுப் பாடல்கள், ஏமாற்றம் முதலிய நூல்களை ரொட்ரிகஸ் அச்சிட்டுள்ளார். பணமுடை அவரைப் பெரிதும் வருத்தியபோது தமிழன்னை மேலும் பற்றால் இவ்வரிய சேவையைச் செய்து வரும் அப் பெரியாரையும் பாராட்டுகின்றோம்.*

**தமிழின் சக்தி**

*ஏமாற்றத்தின் தரத்தைப் பற்றி பேச பல அறிஞர்கள் இங்கு வந்திருக்கின்றார்கள். சில ஆண்டுகளில் ஈழத்தின் தலைசிறந்த நாவல் எழுத்தாளரின் ஒருவர் என்று கணிக்க கூடிய முறையில் இவர் எழுத்துத் துறையில் மேலேங்கி வளர்ந்து எம்மைப் பெருமைப்படுத்துவார் என எதிர்பார்க்கலாம்.*

*முஸ்லிம் எழுத்தாளர் ஒருவரின் நூலை எம்மை வெளியிட்டு வைக்குமாறு கலாநிலையத்தார் கேட்டதும் தமிழின் தனிப்பெரும் சிறப்பு ஒன்றினை வற்புறுத்துகின்றது. சமயத்தால் வேறுபட்டவரை அணைத்து செல்லும் சக்தி தமிழுக்குண்டு . எட்டயபுரத்துச் சமஸ்தான அதிபதியாக இருந்தவர் ஓர் இந்து. அவரது ஆஸ்தான கவிஞராக இருந்த கடிகை முத்துப் புலவரும் ஓர் இந்து. அவருடைய சிஷ்யர் பலருள் உமறுப் புலவர் என்ற முஸ்லீம் புலவரும் ஒருவர். கடிகை முத்துப்புலவரின் பின் உமறுப்புலவர் ஆஸ்தான கவிஞராக நியமிக்கப்பட்டார். 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்த பிச்சை இபுறாஹீம் புலவரிடம் தமிழ் கற்றவருள் இந்துக்களுக்கும் கிறிஸ்தவர்களும் பலர். மஸ்தான் சாகிபு தமிழகம் அறிந்த முஸ்லிம் புலவர் - சித்தர். முஸ்லிம் புலவராகிய இவரின் சிறந்த சிஷ்யர் ஓர் இந்துவாகிய சரவணப் பெருமாள் ஐயர். மஸ்தான் சாகிபு பாடலுக்கு 'நான்மணி மாலை' பாடினார் சரவணப் பெருமாள் ஐயர். மஸ்தான் சாகிப்பின் பாக்களை காத்து வளர்த்து உலகெல்லாம் பரவச் செய்த தனது கடவுளாகிய விநாயகரை அவர் இறைஞ்சுகிறார். தமிழ்மொழியின் அமர நிலை இது. தோன்றுதே போன்று அன்பர் "மாமா" அவர்களின் இலக்கிய படைப்புகளுக்கு என்றும் அருள் செய்ய வேண்டும் என எமது இறைவனை இறைஞ்சி 'ஏமாற்றத்தை' வெளியிடுகின்றேன்*

தினகரன் 1963 மார்ச் 28 வியாழக்கிழமை

# 34

# சாதி, மத அடிப்படையில் இலக்கியத்தை நோக்குவது சரியல்ல

## முஸ்லிம்கள் தமிழ் தொண்டு

**யாழ்ப்பாண நகர மண்டபத்தில் நடைபெற்ற இலங்கை முற்போக்கு எழுத்தாளர் மகாநாட்டில் அல்ஹாஜ் வி.எம். சம்சுதீனைப் பராட்டுமுகமாகத் கலாநிதி. சு. வித்தியானந்தன் பேசியதன் சுருக்கம்**

*அசனாலெப்பை, முகிய்யித்தீன் போன்ற தமிழ் அறிஞர் புலமையோடு விளங்கிய யாழ்ப்பாணத்திலே, தமிழின உரிமைக்கு தமிழ் மொழி உரிமைக்கும் ஏனைய சமூகத்தினரோடு முஸ்லிம்களும் எழுத்திலும் பேச்சிலும் எழுச்சி முரசு கொட்டிய இந்நகரிலே, எழுத்தாளர் மகாநாட்டில், முஸ்லிம் அறிஞர் ஒருவரை பாராட்ட நீங்கள் இங்கு குழுமி இருப்பது வரவேற்றத்தக்கதே. ஏனெனில் முஸ்லிம் இலக்கிய கர்தாக்களினதும் புலவர்களினும் தமிழ் தொண்டை மதிப்பிடுவதில் தமிழ் ஆராய்ச்சியாளரும் ஏனையோரும் இதுவரை நடந்து கொண்டுள்ள விதம் தமிழ் சமூகம் வெட்கித் தலை குனிய வேண்டியது தொன்று.*

*பிற மதங்களைச் சார்ந்த தமிழறிஞர், தமிழ் மேதைகள், தமிழ் பண்டிதர் ஆகியோருக்குக் கொடுக்கப்படும் மதிப்பும் பெருமையும் இஸ்லாமியத் தமிழ் அறிஞருக்கும், இஸ்லாமிய தமிழ் மேதைகளுக்கும், இஸ்லாமிய தமிழ் பண்டிதர்களுக்கும் கொடுக்கப்படுவதில்லை. வேண்டுமென்றே அவர்களின் தமிழ் பணிகள் மறைக்கப்படுகின்றன என்று குற்றஞ்சாட்டும் அளவிற்கு இக்குறைபாடு இருந்து வருகின்றது. முஸ்லிம் புலவர் இயற்றிய இலக்கியம் பற்றிப் பலருக்குத் தெரியாது. சிலருக்கு விளங்காது. சிலப்பதிகாரத்தையும் மணிமேகலையும் தேவாரத்தையும் திருவாய் மொழியையும் சீவக சிந்தாமணியும் கம்ப ராமாயணத்தையும் முஸ்லிம்கள் படித்து உணர்ந்து சுவைக்கும் போது சீறாப்புராணம் நூறு மசலா, காசீம் படைப்போர், மஸ்தான் சாகிபு பாடல்கள் போன்றவற்றை மற்றைய வித்துவான்கள் ஏன் படிக்க கூடாது ?*

**தாய்ப்பாலும் தமிழ் பாலும்**

*தமிழைத் தாய்மொழியாக கொண்ட பிற சமயத்தவரை போலவே, முஸ்லிம்களும் தொட்டிலில் இருக்கும் போதே தம் அருமை தாய்மாரின் அழகு தமிழ் பாட்டைச் செவியேற்றுத் தாய்ப்பாலோடு தமிழ் பாலும் சேர்த்து உண்டு வந்தவர்கள். தமிழைக் கற்று, தமிழிலேயே சிந்தித்து, தமிழிலே பேசி, தமிழ் வழியே நின்று வாழ்க்கை நடாத்தியவர்கள் நடத்துபவர்கள், ஆனால் துரதிஷ்ட்டவசமாகத் தமிழ் மொழியை தாய்மொழியாக கொண்ட பிற சமயத்தவருக்கு முஸ்லிம்களுக்கு தமிழ் உணர்வு இல்லை தமக்கு இருப்பது போன்ற தமிழ்ப் பற்று இல்லை என்ற தப்பான எண்ணங்கள் இருந்து வருகின்றன.*

இத் தவறான உணர்வுகளுக்கும் எண்ணங்களுக்கும் காரணம் முஸ்லிம்களை மொழி அடிப்படையாகக் கொண்டு பார்க்காது, மத அடிப்படையாகக் கொண்டு பார்ப்பதே. அதனாலேயே தமிழ் மீது மங்காத பற்று கொண்டு அத் தெய்வ மொழி க்கு பெருந் தொண்டாற்றிய தமிழ் முஸ்லிம் புலவரையும் அறிஞரையும் ஒதுக்கியும் புறக்கணித்தும் வந்திருக்கின்றனர். தவிர்க்க முடியாத சில காரணங்களினால் சீறாப்புராணம் பாடிய உமறுப்புலவர் போன்ற சில புலவர்கள் தமிழ் உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றாரே யொழியத் தமிழ்த் தொண்டிலே ஊறித் திளைத்த நூற்றுக்கணக்கான முஸ்லிம் புலவர்கள் தமிழ் பேசும் மக்களுக்கு அறிமுகப்படுத்தப்படவில்லை அவர்களின் நூல்கள் மதிப்பிடப்படவில்லை.

**முஸ்லிம்களின் தனிப்பெரும் பணி**

கவிதைகள் புனைந்தும், வசன நூல்கள் இயற்றியும், சமயக் கிரந்தங்களை இற்றியும், இசையோடு தொடர்புடைய பாடல்கள் பலவற்றை யாத்தும் இஸ்லாமியர் தமிழுக்கு தனிப்பெரும் தொண்டாற்றி இருக்கின்றனர். பொருள் அமைதியிலும் உருவத்திலும் தமிழ் இலக்கியம் முஸ்லிம்களின் சேவையினால் பெரும் பயனடைகின்றது. ஆனால் இத்தொண்டினைத் தமிழ் அறிஞர் அறிவுறுத்தவில்லை. தமிழ் இலக்கிய பரப்பில் அதன் வளர்ச்சிக்கு அரும்பணி ஆற்றியவரின் பணியைச் சரியாக நிர்ணயிப்பதற்கும், தமிழ் இலக்கிய வரலாற்றை முறையாக நோக்குவாற்கும் இது இடையூறாக இருக்கின்றது. இது தமிழ் மொழிக்கும் தமிழ் இலக்கியத்திற்கும் எத்துணை நட்டம் என்பதனை நாம் உணர்வதில்லை.

தமிழ் வளர்ச்சிக்கு சமணரும், பௌத்தரும், சைவமும், வைணவரும், கிறித்தவரும் ஆற்றிய தொண்டினைப் போல, முஸ்லிம்களும் பெரும் பணி செய்திருக்கின்றனர். கற்பனை ஆற்றலும் கருத்தழகும் கவிதை நயமும் எந்த அளவுக்கு மற்ற தமிழ் நூல்களில் இடம்பெற்றிருக்கின்றனவோ அந்த அளவுக்கு முஸ்லிம் தமிழ் நூல்களிலும் இடம் பெற்றுள்ளன. இஸ்லாமிய இலக்கியங்கள் உருது மொழிக்கு அடுத்தாற் போல தமிழ் மொழியிலே தான் அதிகமாக இருக்கின்றன. பாரசீகப் பெரும் கவிஞன் உமர்கய்யாமின் பாடல்களில் இருந்து அரபு நாட்டின் பெருங்கதையாம் அல்பு லைலா வலைலா வரை, திருக் குர்ஆனின் திரு வாக்கியங்களினதும் தித்திக்கும் இக் பாலின் பாடல்கள் வரை உயர்ந்த இலக்கிய முறையிலும், சிறந்த அமைப்பிலும் இஸ்லாமியக் இலக்கியங்களைத் தமிழிலே தான் காண முடியும்.

**சிறை சென்ற சம்சுதீன்**

அரசியல் ஆதிக்கக்காரர் முஸ்லிம்கள் மொழி பற்றி ஆங்காங்கு சில சமயங்களில் குழப்பமான எண்ணங்களை வெளியிட்டு வந்த போதும் முஸ்லிம் எழுத்தாளர் தமது தமிழ்த் தொண்டினை அமைதியான முறையில் முறைப்படி செய்து கொண்டுடே வருகின்றனர். இன்று கவிதை, சிறுகதை, நாவல், நாடகம், குழந்தை இலக்கியம் என பல்துறைகளிலே இவர்கள் தமிழைப் பேணி வளர்க்கின்றனர். இவர்களின் மகத்தான இலக்கியங்களை மதக் கண்கொண்டோ, சாதித் துவேஷம் கொண்டோ மதிப்பிடாமல் இலக்கிய ரசனையோடு தமிழ்க்கண்ணோடு, மொழி நோக்கோடு கணிப்பீடு செய்யும்

பணியே இன்று வேண்டற்பாலது. அப்பொழுதுதான் தமிழைப் பற்றிய - தமிழின் மொத்த வளர்ச்சியை பற்றிய - தெளிவான ஞானம் ஏற்படும்.

அல்ஹாஜ் லி.எம். சம்சுதீன் அவர்கள் 40 ஆண்டுகளாக தமிழ் இலக்கியச் சேவை செய்து வருவர். இவரது பிறப்பிடம் திருநெல்வேலி மாவட்டத்தில் ஸ்ரீவைகுண்டம். இங்கேயே குமரகுருபர சுவாமிகள் பிறந்தார். தினகரன் பத்திரிகாலயத்தில் 1935 தொடக்கம் 1943 வரை பணியாற்றினார் "முஸ்லிம் முரசின்" கௌரவ ஆசிரியராகவும் கடமையாற்றினார். காங்கிரசு போராட்டத்திலே தீவிரமாக ஈடுபட்ட போது சுவாமி சுவாமி சுத்தானந்த பாரதியின் தொடர்பு கிட்டியது. இவர் அவரையே தமது ஞான குருவாகக் கொள்கின்றார். இப்போபோராட்டங்களிற் கலந்துகொண்ட காலங்களில் சிறையிலும் அடைக்கப்பட்டார். தமிழக முஸ்லிம்களிடையே மறுமலர்ச்சியை ஏற்படுத்தியவருள் இவர் முக்கிய இடம் பெறுவர்.

1923 ஆம் ஆண்டில் திரு.பொ. திரிகூடசுந்தரம்பிள்ளை இலங்கை வந்தபோது அவருடன் சேர்ந்து பிறநாட்டு உடைகளை பகிஷ்கரிக்கச் செய்தார். இலங்கை வாழ் முஸ்லிம்களின் தாய்மொழி தமிழே தான் என்பதை கட்டுரைகள் மூலமும் பேச்சுக்கள் மூலமும் ஆணித்தரமாக நிறுவி வந்திருக்கின்றார். இலங்கை முஸ்லிம்களின் தாய்மொழி அரபி எனச் சில மேதாவிகள் கூக்குரல் எழுப்பிய போது அவர்களை இவர் காரமாகத் தாக்கியுள்ளார். இதன் பயனாக இவரை இந்தியாவுக்கு கடத்த முயற்சிகள் செய்தனர் எனவும் அவை கைகூடவில்லை எனவும் அறிகின்றோம்.

"பாகிஸ்தான் விளக்கம்" "உமர் கய்யாம் பாடல்கள்" என்பன இவர் எழுதிய மொழிபெயர்ப்பு நூல்கள். முஸ்லிம்களின் அரசியல் நிலைமை, வியாசக் கோவை, இஸ்லாத்தின் ஏகத்துவம், இஸ்லாமும் அத்வைதமும் என்பன இவர் இயற்றிய நூல்கள். இலங்கையில் முஸ்லிம்கள் குடியேறியது பற்றி இவர் எழுதிய கட்டுரைகள் சுதந்திரனில் வெளிவந்தன. கௌதம புத்தர் பற்றிய நூல் இப்பொழுது தயாராகி வருகின்றது.

**முதுபெரும் அறிஞர்**

ஒரு ஹாஜ் ஆக இருந்தும் மத அடிப்படையிலே தொண்டாற்றாது மொழி அடிப்படையில் தமிழுக்கும் தமிழினத்திற்கும் பெருந் தொண்டாற்றிய முதுபெரும் தமிழ் அறிஞரைப் பாராட்டுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். இன்னும் பல்லாண்டு வாழ்ந்து பல துறைகளிலும் தொண்டாற்றுவாராக.

பதவிகளிலும் புகழிலும் கண் உள்ளவர்கள் எப்படித்தான் குழப்பி அடித்தாலும் முஸ்லிம்களின் தமிழ் பணி நாளுக்கு நாள் பல்கிப் பெருகுமேயொளிய கூனிக்குறுகி விடாது என அறுதியிட்டு கூறுகிறது அல்ஹாஜ் சம்சுதீன் அவர்களின் மகத்தான தொண்டு. இப்பெருந்தகையைப் பாராட்டும் முகமாகச் சாதித்துவேசமற்ற இலக்கிய நோக்கினை- இலக்கிய மதிப்பீட்டினை- உருப்படுத்துவோமாயின் ஈழத்திலே இலக்கியத்திற்கு விமோசனம் உண்டு: சாதி மத அடிப்படையில் இலக்கியத்தை நோக்குவோருக்கு பிறர் வாழ்வதை சகிக்க முடியாத அற்ப பதர்களுக்கு வீழ்ச்சி உண்டு, தமிழ் எழுத்தாளருக்கு நல்ல காலம் உண்டு.

தினகரன் 1963 மே 17 வியாழக்கிழமை

## 35

# ஈழத்து எழுத்தாளரும் நூல் வெளியீடும்

### "சொக்கன்" எழுதிய "சிங்கரிக் காவலன்" என்னும் நாடகத்தை இலங்கை தமிழ்ப் புத்தக வெளியீட்டு களத்தினர் வெளியிட்ட போது நிகழ்த்திய உரையில் சுருக்கம்

**ஒரு நூலை வெளியிடுவது ஒரு திருமணத்தை ஒப்பேற்றுவது போன்றது. பெண்ணுக்கு நல்ல யோகம் இருந்தால் வீடு தேடி வந்து மணம் முடிப்பது போல எழுத்தாளனுக்கு நல்ல யோகம் இருந்தால் பதிப்பகக்காரர் வீடு தேடி வந்து நூல்களைப் பெற்று வெளியிடுவார்கள். நாலிற் செவ்வாய் என்றால் சிறிது இழுபடும். ஏழில் அல்லது எட்டிற் செவ்வாய் என்றால் ஒப்பேற்றுவது பெரிதும் வில்லங்கமாகும். இன்றைய எழுத்தாளர் பலருக்கு ஏழில் அல்லது எட்டிற் செவ்வாயாக தான் இருக்கின்றது.**

**எழுத்தாளர் படும் அல்லல்**

*பேச்சுக் கால் முற்றித் தாலி கட்டும் வரை திருமணம் முற்றாகாதது போல, நூல் வெளிவரும் வரை எழுத்தாளருக்கு ஒரே ஏக்கந்தான் !அச்சில் இருக்கும் போதே நூறு கேள்விகள் நூலை படியாதவர் நூலை பற்றிக் கிளப்புவர். "நூலை இவர் எழுதுவதில்லை வேறு யாரோ எழுதிக் கொடுத்ததாகக் கதைக்கிறார்கள் "என்றெல்லாம் புகார் பரப்புவார்கள். அச்சிடும் அச்சகம் மூடப்பட்டு, எஞ்சிய பகுதியை வேறு அச்சகத்தில் அச்சிட வேண்டிய நிலையும் சிலருக்கு ஏற்படுவதுண்டு. காணி பூமி உடமை யாவற்றையும் ஈடு வைத்து சீதனம் கொடுத்து அறுந்து போவது போல, எழுத்தாளரும் ஒரே நூலோடு யாவற்றையும் ஈடு வைத்து அல்லற்படுவது வழக்கம்.*

*எத்தனை செருப்புகள் தேய்கின்றன ஒரு கலியாணத்தை ஒப்பேற்ற! அச்சகத்திற்குச் சென்று படி ஒப்பு நோக்கி நூலை வெளியிட எழுத்தாளருக்கு எத்தனை செருப்புகள் தேய்கின்றன. சில சமயங்களில் பணச்சடங்கு வைக்கும் நிலை கூட ஏற்படுகின்றது. யார் யாருக்கு அழைப்பிதழ் அனுப்புவது, யார் யாருக்கு நேரிற் சென்று சொல்வது, யாருக்கு முதலில் செம்பு கொடுப்பது போன்றவை எழுத்தாளருக்குமுரிய பிரச்சினைகள்.*

*திருமணத்தின் பின் "போயும் போயும் இதிலியோ விழுந்தார்கள்" என்று குசு குசுப்பார்கள். அதுபோல நூல் வெளியீட்டின் பின் பலர் கல்லெறிவார்கள். சிலர் நேரில் எறிவார்கள். சிலர் வடலிக்குப் பின் நின்று எறிவார்கள். இன்னும் சிலர் புனைபெயரில் மறைந்து நின்று எறிவார்கள். பொறாமையிலும் வயிற்றெரிச்சலினாலும் இயல்பாக அமைந்த தீய குணத்தினாலும், திருமணம் முடிந்த பின் சொட்டை சொல்பவர் போல, நூல் வெளிவந்த பின் நொட்டை பேசுவோர் பலர். இவற்றினாலே ஒரு கல்யாணம் நடத்துவது போதும் என்றாற் போல ஒரு நூல் வெளியிட்டதே போதும் என்ற மனம் நிலை இறுதியில் ஏற்படுகின்றது.*

**தட்சணை கேட்கும் இலக்கியப் பூசாரிகள்**

இராமச்சந்திர கவிராயர் என்பவர் மனிதனுக்கு வாழ்க்கையில் அடுத்தடுத்து வரும் இன்னல்களை குறிப்பிடும்போது,

"ஆவீன மழை பொழிய
இல்லம் வீழ
அகத்தடியாள்
மெய்ந்நோவ
அடிமை சாவ
மாவீரம் போகுதென்று
விதைகொண் டோட
வழியிலே கடன்காரர்
மறித்துக் கொள்ளச்
சாவோலை
கொண்டொருவன்
எதிரே செல்லத்
தள்ள வொண்ணா
விருந்துவரச்
சர்ப்பத் தீண்டக்
கோவேந்தர் உழுதுண்ட
கடமை கேட்கக்
குருக்களோ தட்சணைகள்
கொடுவென் றாரே".

என்ன அழகாக பாடியிருக்கிறார். இதேபோல எழுத்தாளர் எத்தனையோ இன்னல்களுக்கிடையே நூலை வெளியிடும்போது இலக்கியப் பூசாரிகள், இலக்கியப் பண்டாரங்கள் தட்சணை கேட்கின்றார்கள். "உன்னுடைய நூல் எம்மால் மதிப்பிடப்பட வேண்டுமாயின், எம்மிடம் பரிசில் வேண்டுமாயின், நாம் சொல்லுகின்றபடி எழுதுங்கள், நாம் எது மரபு என்கின்றோமோ அதன்படி எழுத்துகள்" என்று அதிகார வெறி கொண்டு ஆணை இடுகின்றார்கள். இவ்வளவு குழப்பமான சூழ்நிலையிலே தான் எழுத்தாளர் உருவாக வேண்டி இருக்கின்றது.

எழுத்தாளன் ஒரு வியாபாரி என்று இவர்கள் கருதுகின்றார்கள். ஆனால் அவன் தன் சுதந்திரத்தை விலை பேசும் வணிகன் அல்லன். உலகில் அவன் யாருக்கும் எச் சக்திக்கும் அடிமை அல்லான். கட்டற்றவனாக நினைத்ததை எழுதக்கூடிய சுதந்திரம் எழுத்தாளனுக்கு வேண்டும் என்பர் அறிஞர். கூண்டுக் குயிலின் கீதத்தில் இயற்கையின் இனிமையை எதிர்பார்க்க முடியாது உயிருள்ள சமூகத்தின் முக்கியமான நாடி நரம்புகளில் எழுத்தாளனும் ஒன்று என்பதை நாம் உணர வேண்டும்.

" புத்தகத்தை பணம் கொடுத்து வாங்கி படியுங்கள், இரவல் கொடுக்காதீர்கள் கொடுக்க நேரிடும் என்று தெரிந்தால் படித்து முடித்தவுடன் அதை தீக்கு இரையாக்கி விடுங்கள். எழுத்துக்கலை அப்போதுதான் முன்னேறும்" என்று மேநாட்டு எழுத்தாளர் ஒருவர் கூறியது போல நாம் நமது வாசகர்களுக்கு கூற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இன்றைய இலக்கிய விழிப்புணர்ச்சியின் பயனாக வாசகர் தொகை சிறிது கூடியிருந்தும் நூல்களை பணம் கொடுத்து வாங்கி படிப்போர் தொகை அவ்வளவு பெருகவில்லை. வாசகர் எல்லோரும் ஏழைகள் அல்ல. நூல்களை வாங்குவதற்கு பணக்காரர் தேவையில்லை. மாதத்தில் ஐந்து ரூபாய்க்கு உட்படப் புத்தகம் வாங்க பணக்காரர் தேவையில்லை. பல லட்சம் தமிழ் மக்கள் வாழும் ஈழத்திலே ஒரு எழுத்தாளன் 500 பிரதிநிதிகள் விற்பதே பெரும் பொறுப்பாக இருக்கின்றது. ஒரே ஒருவனை மட்டும் ஊர் எல்லாம் ஏமாற்றுகின்றது. ஆம் ஏமாற்றப்படுபவனும் திருட்டுக் கொடுப்பவனும் எழுத்தாளன் ஒருவனேதான். ஈழத்திலே எழுத்தாளர் முன்னேறுவதற்கு வழி வகுப்பது எமது நோக்கமாயின் புத்தகத்தை பணம் கொடுத்து வாங்குவோர் தொகை பெருக வேண்டும் குடிக்கக் கூழ் கொடாது எழுத்தாளருக்கு கொப்பளிக்க பன்னீர்கொடுத்துக் கொண்டிருந்தால் பலன் ஏதும் இராது.

**திறனாய்வு கலை வளர்ச்சி**

மதிப்புரையைப் பற்றியும் இச்சந்தர்ப்பத்தில் சிந்தித்தல் பயனுடைத்து. புதுமை தமிழ் வளரவேண்டுமாயின் மதிப்புரைக் கலையும் வளர வேண்டும். ஏனெனில், படிப்பவருக்கும் எழுதுவோருக்கும் பாலம் அமைத்துக் கொடுப்பது மதிப்புரை, ஆனால் ஈழத்தில் புதுமை எழுத்துக்கள் பெருகி இருக்கும் அளவுக்கு அவற்றைத் திறனாய்வு செய்து வளர்க்கும் பணி பெருகவில்லை. பத்திரிகைகள் மதிப்புரைக் கலையை வளர்ப்பதில் அவ்வளவு அக்கறை காட்டவில்லை. விரிவான முறையில் தகுதியானவரை கொண்டு அதிகமான நூல்களை திறனாயப் பத்திரிகைகள் முன்வர வேண்டும். திறனாயும் தகுதி நடுநிலை, மனப்பான்மை, பரந்த நூலறிவு ஆகியன திறனாய்வு செய்வோருக்கு அடிப்படைத் தேவைகள். வாசகருக்கு நூலின் தரத்தையும் நயத்தையும் எடுத்துச் சொல்லி படிக்க தூண்டுவதும் குறைபாடுகளை பயன்பாடான முறையில் சுட்டிக் காட்டுவதும் இவர்கள் பொறுப்பு. இப்படிச் செய்வதால் ஒருபுறம் படிக்கும் ஆர்வமுள்ள ரசிகர் கூட்டத்தை இவர்கள் நாட்டில் வளர்ப்பார்கள். மறுபுறம் இலக்கியப் பணியில் ஈடுபடுபவருக்கு உற்சாகமளித்து நல்ல நூல்களை எழுதச் செய்வார்கள்.

வேண்டியவர் என்றாற் கண்களை மூடி வானளாவ புகழ்வதும், வேண்டாதவர் என்றால் உள்ளம் நோகும் முறையில் தாக்கி எழுதுவதும் மதிப்புரை அல்ல; எழுத்து உலகில் அனுபவம் இல்லாதவரும் புத்தக உலகிலோ எழுத்துப் போட்டியிலோ, தோல்வி மனப்பான்மை கொண்டவரும், இயற்கையாகவே ஒன்றில் நன்மையைக் காண ஆற்றாதவரும், பிறர் உள்ளம் நோவதிலே தனி இன்பம் கொள்பவருமே பெருந்தொகையினராக இன்று மதிப்புரை செய்கின்றனர் . எழுத்தாளரின் சுதந்திரத்திற்கும் உணர்ச்சிக்கும் எழுச்சிக்கும் ஆர்வத்திற்கும் மேடையாக மதிப்புரை பகுதி அமையக்கூடாது.

" சொக்கனின்" நாடகத்தை மதிப்பிட பல அறிஞர் வந்திருக்கிறார்கள். ஆகவே அத்துறையில் நாம் இறங்கவில்லை. பலரும் ஈடுபடாத நாடகத்துறையில் ஈடுபட்டு

இலங்கை கலைக் கழகத்தின் நாடகப் போட்டியில் தொடர்ந்து ஈராண்டு முதல் பரிசு பெற்றவர் " சொக்கன்" . இதனால் பலரின் பெருமைக்கும் வயிற்றெரிச்சலுக்கும் இலக்காக அமைந்த போதும், தமது பணியைச் செவ்வனே தொடர்ந்து செய்து வருகின்றார். இன்னும் பல நாட்கள் எழுதி ஈழத்தின் சிறந்த நாடக ஆசிரியர் ஒருவராக கணிக்கப்படுபவர் என எதிர்பார்க்கின்றோம். அவர் எழுதிய நாடகங்களைப் படிக்கும் போது ஓர் எழுத்தாளனுக்கும் கற்பனை உள்ளம், அடிப்படைக் கல்வி, மொழி வளர்ச்சி, தளராத உழைப்பு, தன்னம்பிக்கை, சுய சிந்தனை ஆகிய பண்புகள் இருக்க வேண்டும் என்பதை நாம் அறிந்து கொள்ளலாம். எதை எழுதுபவனுக்கும் அடிப்படைக் கல்வி வேண்டும். இதனால் எழுத்தாளர் பண்டிதராகவோ, தமிழ் புலமை உடையவராகவோ இருக்க வேண்டும் என நாம் கூறவில்லை. எழுத்தாளனின் எண்ணங்களை வெளிப்படுத்தும் வலிமை மிக்க கருவியாகிய மொழியை திறமையுடன் கையாள அடிப்படைக் கல்வி வேண்டும் என்பதே இதன் கருத்து.

**போதியளவு அறிவு விருத்தி**

ஆற்றல் இலக்கியம் படைப்பவர்கள் பெரும்பாலும் செய்யும் தவறு - பெருந்தவறு தமது அறிவை போதிய அளவு விருத்தி செய்யாமையே. வளர்ந்து விரிந்து செல்லும் இன்றைய அறிவுலகு கணம் தோறும் புதுமை காட்டுகின்றது. எழுத்தாளன் மொழி வரலாறு, பொருளாதாரம் தத்துவம், அடிப்படை விஞ்ஞானம் ஆகிய துறைகளில் முக்கியமான உண்மைகளை நிச்சயம் அறிந்திருத்தல் வேண்டும். ஆனால் எமது நாட்டின் பெரும்பாலான எழுத்தாளர் இவ்உண்மையைப் புறக்கணித்து விடுகின்றனர் . "சொக்கன்" அதற்கு விலக்காக இருப்பதை அவரின் நாடகங்களில் இருந்தும் மற்றைய படைப்பு இலக்கியங்களில் இருந்தும் நாம் அறிந்து கொள்ளலாம். ஆற்றல் இலக்கியம் நிலையான தன்மை பெற வேண்டுமாயின் அறிவுப்பண்பு மிக மிக அவசியம் என்பதனைச் சொக்கன் இயற்றிய "சிங்ககிரிக்காவலன்" எமக்கு வற்புறுத்துகின்றது.

தினகரன் 1963 மே மாதம் 19 ஞாயிற்றுக்கிழமை

36

# TAMIL FOLK DRAMA

*The Tamils of Ceylon have a rich heritage of folk arts, especially of folk drama. Folk drama, which was once a vital element in the community life of the Tamil people, seems to be on the eve of extinction today.*

Our social surroundings are so much revolutlonised during the last century, that a number of old social institutions have lost much of their social value. Under the colonial regime, it has been the fashion with the educated to condemn everything that savored 'indigenous'. Folk drama offers perhaps the best illustration. It is in a moribund condition primarily because it has been denied the social status it once enjoyed by the sophisticated society of today.

I have been doing research into our own dramatic tradition for the last nine years. In the course of this research, I had to study the Indian and Sinhalese folk dramatic forms and the folk dramatic forms in other parts of the world, especially in Japan. A study of the Sinhalese folk play has revealed that we possess a common heritage in drama and music.

One of the Sinhalese dramatic traditions is certainly taken directly over from the Tamil folk drama–this is what is called the Sinhalese Nadagama.

**INFLUENCE**

The earliest Nadagamas were translated into Sinhalese from Tamil originals, though later works drew their themes from sources nearer home. The language of the early Nadagamas also shows considerable Tamil influence–in fact their language is a peculiar mixture of Sinhalese and Tamil words.

The verses are in Tamil metre, the common metres used being Viruttam. Innisai, Kalippa, Kavi, Kochchakam, Venpa and Parani. Mostly, all the melodies are of South Indian origin, but Sinhalese singers dropped the Tamil intonation and method of voice production when they sang them.

The original Tamil tunes must have undergone slight changes and absorbed something of the genius of the people in the hands of the Sinhalese musicians and poets.

It is therefore clear that the Sinhalese and Tamils have a common heritage in drama and a study of the folk drama of the Tamils will. I am sure it draws the two communities together more closely.

The intelligentsia of modern times have more or less concluded that the Tamils have no dramatic tradition worth talking about, that the new dramatic tradition has to be built on the basis of the Western play.

**MISTAKEN**

This is a mistaken idea, because the existing dramatic tradition is a folk tradition – though not in a refined state–and its conventions and styles have not been so obvious to people.

Moreover, modern plays with stage, lighting devices, curtains, sets, and décor fascinated the people and created the impression that the type of play was real theatre.

For, in the Tamil Nattukuttu, the folk play, there is no décor, no sets, no furniture, or no change of scenes.

The Nattukuttu is usually performed in a circular mandapam; the floor is raised from the ground level by means of earth or sand. The audience sits on the bare ground outside the mandapam around the circumference. Two people hold a piece of cloth (as a curtain) as each actor enters the stage from behind. The actor remains standing behind this cloth while Annavi, the Presenter, introduces him to the audience. After this introduction, the cloth is removed, and the actor enters into full view of the audience.

When educated people saw this type of play, they thought that this was primitive; that a real play was to have sets, décor, chairs and tables, curtains, etc. This notion is quite wrong, because in folk drama they did not have sets scenes etc as the conventions were made in such a way as to do away with those things.

**IMITATIVE**

Change of scenes and actions are indicated by abhinaya or by other techniques. For example, chariot flight, picking of flowers, watering of plants, etc are portrayed by indicative gestures and by music.

Let us assume that we want to represent a person going in a boat and crossing a river. In modern drama, you could bring something like a boat and have something like real water, but for folk drama, this is unnecessary and out of place. This is indicated by miming or imitative gestures and other such devices.

Imagination is the essence of an art form. People do not come to see a real flight or a real journey across the river. They come to see drama, and that is where, again, we have to redefine our concept of drama.

**DANCE**

Our common word for drama is Nadagam, the root meaning of which is dancing. So, our conception of drama is primarily as a dance. This is evident in such idioms as nadagam adinan–Kuttu adinan, he danced a play. The word adinan gives not only the meaning of acting but also of rhythm–the representation of the whole action through rhythmic motion.

Through the English word 'drama' also goes back to the meaning 'dance', yet in the European Theatre now acting is distinct from dancing. But this is not so in our Theatre. Our conventions still remain closely connected to dance.

It is a mistake for us to think that the ancient dramatic forms are dance dramas, and that the only dramas are the modern dialogue plays where people come and sit on chairs and drink tea-that this type of drama is the only drama.

The essence of drama consists in rhythmic movement, in representing a thing in rhythm.

This is a definition and a kind of drama which is connected with our entire cultural pattern and should not be lost sight of. We are heirs to a symbolic theatre and that is pure theatre.

**PURE THEATRE**

Even in Europe the tendency now is to get back to the idea of Pure Theatre. They have begun to realise more and more that naturalism in the theatre is something which has been stolen away by the film.

Once you have the film as an art form, you do not need naturalisation in the theatre because the film can do that much better. In the theatre, you can bring all sorts of gadgets onto the stage, but you cannot convince people very much as you can in a film.

So why should we bring these gadgets on the stage? We can use symbols. The province of the theatre and the province of the film are clearly different. That is why now more and more in Europe and America there is a tendency towards symbolism, a tendency towards stylization and the use of music and dance movements.

**DEFECT**

Of course, the defect in Tamil drama as well as in Sinhalese drama and in the films has been that we have not combined these in an artistic way.

I have seen many folk performances in Batticaloa. These last for about ten hours. After two or three hours, while the performance is on, people go out for dinner or short eats. By that time, only one act would have been covered. Besides, when a star actor comes on the stage, some of the minor actors go for a drink, come back after some hours and then start acting again.

So, the defect has been that we have not combined these elements of dance, song, costumes, lighting etc., into an artistic unit with the dramatic element as the predominant one. If we have the dramatic element as the predominant feature, we can always make use of music, dancing, poetry etc., to make the dramatic experience richer.

Our fault has been that we have used them indiscriminately so that the real dramatic element fades into the background. People come to listen to the song or to see the dance and not to follow the play. If we study the craft of the folk drama more artistically and evolve out of the elements existing in the folk drama the techniques and conventions necessary for modern theatre, then we would have worked out the basis on which we can build the Tamil Theatre.

**FUTURE**

The task ahead is, therefore, one of assimilation and interpretation rather than imitation. Schools can play a leading role in initiating the young children into this art. Developing folk drama at that level would help the coming generations to take up this art form as an integral part of their culture and not as a museum piece.

Therefore, the role of the Education Department is a very important and responsible one. Annual competitions may be a sure incentive for more production.

At the adult level every effort should be taken to popularise this form and popularisation demands adaptation of modern methods. Makeup is one department where the old should definitely give place to the new. Costumes should be elegantly designed so as not to hamper the movement. Shortening the duration is another essential factor. Deft handling of lighting will increase the dramatic effect of the play. From my own experience of the productions of Karnan Por, I am quite convinced that with modern makeup and careful handling of lights, we can make the folk plays irresistible in their appeal.

**POPULARISE**

But this is not enough. The people who have long forgotten their cultural heritage should also be educated. Radio, the most popular form of entertainment, should be used to the utmost to achieve this purpose.

I would strongly urge that the present practice of relegating and confining the nattukkuttus to the rural programme should be given up and a more positive approach should be adopted. Radio can perform the useful function of recording traditional folk dramas and broadcasting them as standard ones. The technical details of dance and music can very well be explained over the radio.

Every effort should be made to build a good library of folk recordings. The useful services rendered by the former Tamil Drama Panel of the Arts Council of Ceylon in arranging such recordings and broadcasting them should be continued.

More enterprising and imaginative producers should take new themes for presentations. Folk drama today is essentially religious and puranic in its theme. It does not touch on the needs of the present society. A change in theme is essential. It is only with such a change that the drama would have some meaning to the actor and the audience.

The first step in this direction may be interpretative production. Themes depicting the struggle of native heroes against the imperialists may be well exploited at the start and later present-day themes can very well be executed in this drama. The course that is discernibly seen in the development of the Sinhalese Theatre should be of some guidance to the Tamil producer.

Again, by the revival of such a society as the Folk-Lore Society of Ceylon, something positive in this field could be achieved.

(Condensed from a paper read at the Seminar on Ceylon's Contemporary Theatre, held under the auspices of the Sangitha Natya Sangam of Ceylon)

*The Ceylon Daily News 1963 July 29*

# மரபுப்போர் அறிவுப் போரா? : தனிப்பட்ட சிலரை தாக்கும் போரா ?

**வெள்ளவத்தை சைவமங்கையர் கழக மண்டபத்தில் நடைபெற்ற விபுலாநந்த விழாவில் ஈழத்து பரிசுக்கதைகள் என்ற நூலை வெளியிட்டு வைத்துக் கலாநிதி சு. வித்தியானந்தன் அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம்**

*தமிழ் மொழியின் முன்னேற்றத்திற்கு இன்றியமையாத பல துறைகளில் ஈழநாட்டுப் பெரியாரே தமிழ் நாட்டவரும் வழிகாட்டி இருக்கின்றனர். தமிழ்நாடு தமிழின் உயர்வினை மறந்த காலங்களில் அதனை நினைவூட்ட ஈழத்திலிருந்து அறிஞர்கள் தோன்றினர். பழமையைப் புது மெருகுடன் பேணியவர்கள் ஈழ நாட்டவர். இதனாலேயே ஈழத்து அறிஞருக்கு அன்று நல்ல மதிப்பு இருந்தது.*

*தமிழ்நாட்டவரின் மதிப்பைப் பெற்றவருள் உயர் திரு.விபுலானந்த அடிகளும் ஒருவர். மேலைத்தேயர் கலைகளை தமிழில் அறிவுறுத்தி விஞ்ஞான தினையும் செந்தமிழாய்த் துய்க்கத் துணை செய்து உருவம் கூட தெரியாதவாறு மறைந்து கிடந்த பழைய யாழின் நுட்பங்களை நுணுகி ஆராய்ந்து வெளியிட்டு, யாழ் நூல் ஆசிரியர் என உலகப் புகழ்பெற்ற விபுலானந்த அடிகள் தமிழ்நாட்டிலே தமிழ் பேராசிரியர் என்ற பதவியினைப் முதன்முதலாகப் பெற்ற பெருமைக்குரியவர்.*

**கிழக்கிலங்கை நாவலர்**

*இந்தியாவிலுள்ள பல்கலைக்கழகங்களிலே தமிழ்த் துறைப் பேராசிரியர் பதவி முதன்முதல் அமைக்கப்பபெற்றது அண்ணாமலை பல்கலைக்கழகத்திலேயே. "எனவே பாரத நாட்டின் முதல் தமிழ் பேராசிரியராக நியமிக்கப்பட்ட சிறப்பு விபுலானந்த அடிகளுக்குரியது" . அவர் பேராசிரியராக இருந்த காலத்தின் பாரதி பாடல்களை மாணவருக்கு அறிமுகப்படுத்தி படிப்பித்து வந்தார். பாரதி பாடல்களை தமிழ் பேசும் மக்களிடம் பரவச் செய்த பெருமை அடிகளாரைச் சாரும். இவர் கிழக்கிலங்கையின் ஆறுமுக நாவலராகவும் விளங்கினர். கீழ் மாகாணத்தில் சைவமும் தமிழும் தழைக்கப் பல கல்லூரிகளை நிறுவியும் கொண்டு நடத்தியும் தலைமை ஆசிரியராகப் பதவி ஏற்று கல்வி புகட்டியும் ஈழத்துத் தமிழரின் கல்வியை விருத்தி செய்த இப்பெரியார் இலங்கை பல்கலைக்கழகத்தின் முதல் தமிழ் பேராசிரியராகவும் தொண்டாற்றினார். எனவே தமிழகத்து முதல் தமிழ் பேராசிரியர் என்ற சிறப்பை பெற்ற விபுலானந்த அடிகளுக்கு ஈழத்து முதல் தமிழ் பேராசிரியர் என்ற பெருமையும் உண்டு.*

**முதல் தமிழ் பேராசிரியர்**

*ஆகவே தமிழ் பேராசிரியர் - தமிழ்ப் போதனாசிரியர் ஆசிரியர் என்ற பதவிக்குத் தகுந்தவர் என்று தமிழ் பேசும் மக்களால் கணிக்கப்பட்ட விபுலானந்த அடிகளுக்கு,*

பாரத நாட்டு அரசாங்கத்தின் அடக்குமுறைகளைக் கூடப் பொருட்படுத்தாது பாரதியின் பாடல்களை தமிழ் பேசும் மக்களிடத்தில் பரவச் செய்து, பாரதியை சிறந்த புலவர் ஆக்கிய விபுலானந்த அடிகளுக்கு, பொதுமக்கள் பணியில் ஈடுபட்டுப் பொது மக்களுக்கு என ஈழத்தின் பல பாகங்களிலும் சைவ சமயப் கல்லூரிகளை நிறுவி பொதுமக்களின் கல்வியை விருத்தி செய்த அடிகளாருக்குக் காணிக்கையாக "பரிசு சிறு கதைகள்" என்ற நூலை வெளியிடும் தமிழ் எழுத்தாளர் மன்றத்தின் துணிவினைப் பாராட்டுகின்றோம்.

ஆம் துணிவு என்றேன் - ஒரு காரணம் பற்றி விபுலானந்த அடிகளார் சிறந்த புலவன் என அறிமுகப்படுத்திய பாரதியை, விபுலானந்த அடிகளார் தமது பணிக்கு முன்மாதிரியாகக் கொண்ட ஆறுமுக நாவலரைத் தமிழ் மரபு பிறழ பாடியவர்கள், தமிழ் மரபு பிறள வசனம் எழுதியவர்கள் தமிழ் துரோகிகள் என்று இன்று ஈழத்து அப்பாவிகள் சிலர் தூற்றி வரும் சூழலிலே, அவர்கள் கொள்கைக்கு சவால் விடுவதாக அமைந்துள்ளது விபுலானந்த அடிகளுக்குக் காணிக்கையாக வெளிவரும் இந்த நூல் தொகுதி. பாரதியும் ஆறுமுக நாவலரும் மரபுப் படி எழுதாத பதர்கள் என்று கொண்டால் பரிசில் பெற்ற இச்சிறு கதைகள் யாவும் வெளியிடுவதற்குத் தகுதியற்ற குப்பைகள் ஆகிவிடும். ஆகவே தான் இந்தப் போலி அறிஞரின் விசித்திரமான கொள்கைகளுக்கு குழி தோண்டுவது போல இந்நூற்தொகுதியை வெளியிடும் மன்றத்தாரின் துணிவை பாராட்டாமல் இருக்க முடியாது.

**மரபுப் போராட்டம்**

இந்த மரபுப் போராட்டமும் விசித்திரமான போராட்டமே. ஆதரவற்றுப் பேர்வழி தெரியாது எங்கோயோ கிடந்த சில பதர்கள், அரசாங்க ஆதரவில் இயங்கும் நிறுவனம் ஒன்றின் பலன் கொண்டு தமக்கு பிடிக்காத சிலரை தாக்குவதற்கும் அவர்களை, சில பத்திரிகைகளின் உதவி கொண்டு தூஷிப்பதற்கும் நடத்தி வரும் போராட்டமாகவே அது இப்பொழுது காட்சியளிக்கின்றது. அவ்வாறு தாக்கப்படுவோரின் கொள்கையோடு முரண்பட்ட கொள்கையை உடையவரும், அவர்கள் மேல் தங்கள் சொந்தப் பகையை சாதிக்க இயலாது திண்டாடியவரும் இதனை பயன்படுத்தி வருகின்றார்கள் என்பதும் தெளிவாகின்றது. உயர்ந்த நிலையில் அறிவுச் சமராக இருக்க வேண்டிய போராட்டம் தனிப்பட்ட சிலரைத் தாக்கும் போராட்டமாக மாறிவிட்டது. இது மக்களிடையே ஒரு குழப்பத்தை ஏற்படுத்தி வெறுப்பையும் வளர்த்து விட்டது. ஈழத்தில் வளர்ந்து கொண்டு வரும் இலக்கிய எழுச்சியில் இது ஒரு அருவருக்கத்தக்க கட்டமாகும். பொறாமை காரணமாகவும் தனிப்பட்ட பகைமை காரணமாகவும் எழுத்தாளர் ஒருவரை ஒருவர் நிந்திக்கும் இவ் வழக்கம் நீங்க வேண்டும்.

எழுத்துத் துறையில் முன்னேற்றம் காண வேண்டுமாயின் எண்ணங்கள் வளர வேண்டும். மாறுபட்ட எண்ணங்கள் தோன்றும் போதே வளர்ச்சியை காணலாம். மாறுபட்ட கொள்கைகள் மோதும் போது முன்னேற்றம் தோன்றுகிறது. எண்ணக் கருத்துக்கள் வேறுபட்டிருப்பதை தடை செய்வோமானால் முன்னேற முடியாது. கொள்கைக்காக ஒருவரை நிந்திப்பது பண்பாடற்றது. கொள்கையைப் பிரசாரம் செய்வதையும் எவரும் தடுக்க முடியாது யார் கொள்கை ஏற்றது என்பது மக்கள் தீர்ப்பு. ஓரிரு விடு தேங்காய்கள் சேர்ந்து இதுதான் சரி என்று தீர்ப்பு கூற முடியாது. அவர்கள் தங்கள் தீர்ப்பை திணிக்க எவ்வளவு தான் முயன்றாலும், எவ்வளவு கூட்டத்திற் பேசினாலும்

அவர்கள் கொள்கைகளைப் பொதுமக்கள் ஏற்கப் போவதில்லை. வாசகர் தீர்ப்பே கடைசித் தீர்ப்பாகும். அதிகார பலம் கொண்டும் சூறாவளிகளின் துணைகொண்டும் பொது மக்களை இவ்வாறு ஏமாற்ற முடியாது.

**பேதைகளும் மேதைகளும்**

இன்று எழுத்துலகில் உள்ள குழப்பமான நிலையை நோக்கும்போது விவகாரமே எமக்கு முக்கியம். கொள்கை அல்ல என்பது தெளிவாகின்றது. ஒரு விவாதத்தை தொடங்கிய போது எதிர்க்கட்சியினர் சொன்னதை மறுத்தவர், இப்போது அதை ஏற்று வேறு விவாதத்தில் இறங்கி விடுகின்றறார் என்பதை பற்றி விவாதித்ததென்பதை மறந்து திரும்பித் திரும்பி மாறி மாறி விவகாரம் செய்து கொண்டே இருக்கின்றார்கள். இப்பொழுதுள்ள நிலை இதுவாதலால் இவர்களுக்கென நிலைத்த கொள்கை ஒன்று கிடையாது என தெரிகின்றது. சென்ற ஆண்டு ஓர் எழுத்தாளனுக்கு நூறு புள்ளிகள் கொடுத்தவர் இந்த ஆண்டு பத்துப் புள்ளிகள் கூடக்கொடுக்கார். காரணம் போன ஆண்டு நண்பனாக இருந்தவர் இந்த ஆண்டு விரோதி ஆகிவிட்டார். சென்ற மாதம் குப்பை எழுத்தாளன் என்று ஒதுக்கிய வரை இந்த மாதம் தலைசிறந்த எழுத்தாளர் என மதிக்கின்றனர். எங்கேயோ மண்டி கிடந்த பேதை இப்போது மேதை. காரணம் இப்போது அவர் எமது நண்பர். எமது காரியம் கை கூறுவதற்கு தேவைப்பட்டவர் ஏன் இவ்வாறு இம்மக்களை சிநேகிதம் செய்கின்றார்கள் என்றால் அது ஆண்டவனுக்கே தெரியாது.

**விமர்சகர் பொறுப்பு**

அடுத்து, இன்றைய விமர்சகர் ஆறுமுக நாவலர்ப் பற்றி விமர்சனம் செய்பவர் .ஆறுமுக நாவலரிலும் பெரியவர் என தம்மை கருதிக் கொள்கின்றார். கடவுளை பற்றி கூட இவர்கள் ஒரு நாள் மதிப்புரை எழுதிவிட்டால் , அடுத்த நாள் முதல் இவர்களுக்குக் கோயில் கட்டுவதா அல்லது உள்ள கோயிலை இடிப்பதா என்று கஷ்டம் ஏற்படும் . மற்றவர்களைத் தூற்றும் இவர்களைப் பற்றி மற்றவர்கள் கொண்டுள்ள விமர்சனம் என்ன என்பதை இவர்கள் அறிந்ததால் தானே? விமர்சனம் என்பது மிகுந்த பொறுப்புடன் பக்தியுடன் அனுதாபத்துடன் செய்ய வேண்டியதொன்று என்பதை இவர்கள் உணர்வதில்லை.

நியமனம் பெறாத நீதிபதிகளாக இவர்கள் அமர்ந்து விடுகிறார்கள். தர்ம நியாயத்திற்கு பயந்தும், சொந்தக் குறைகளை உணர்ந்தும் , படைத்தவனின் உள்ளடக்கிடக்கை யை விளங்கிக் கொள்ளும் வேட்கையைப் பெற்றும் இவர்கள் பேனாவை கையில் பிடிப்பதில்லை. “எத்தனையோ எழுத்தாளரை கொன்றவர்கள்” என உலகம் இவர்களை நொந்து கொண்டிருக்கும். “ இத்தனை இத்தனை எழுத்தாளரின் படைப்புகளைக் கண்டுபிடித்து அவற்றின் நுட்பத்தைச் சரியான முறையில் மக்கள் அனுபவிக்க வழிகாட்டி னார்கள்” என்று பெயர் பெறுவது தான் பெருமை. எழுத்தாளரின் பக்தர்களாகவே இவர்கள் நடந்து கொள்ள வேண்டும்.

**சீர்தூக்கும் பண்பு**

ஏதோ ஆவி உலகில் இருந்து விமர்சனம் செய்வதாக இவர்கள் கருதுகின்றார்கள். இந்த பௌதிக உலகின் குறைகளுக்கும் வரம்புகளுக்கும் தாமும் ஆட்பட்டவரே என்பதை இவர்கள் நினைவு கூருவதில்லை. ஒரு மனிதனுக்கு உணவானது மற்றொரு மனிதனுக்கு

நஞ்சாக இருக்கின்றது. ஒரே மனிதனுக்கு கூட ஒரு வேளை உணவாக உள்ளது மறுவேளை நஞ்சாக இருக்கின்றது. எனவே தமக்குள்ள வரம்புகளை இவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். தமது சொந்த உணர்ச்சிகளையோ கவலையோ மட்டும் உரை கல்லாகக் கொண்டு எழுத்தை மதிப்பிடாமல் மக்கள் சமூகத்தின் பொது உணர்ச்சி சுவைகளின் பிரதிநிதிகளாகவும் அவற்றை உயர்த்தி தூய்மை செய்யும் பணியில் எழுத்தாளரின் துணைவராகவும் இவர்கள் நடந்து கொள்ள வேண்டும் . விமர்சகர் தமது எழுத்துக்களை ஊறுகாய் போட்டு வைத்துக் கொள்ளலாம். ஆனால் பிறரும் அப்படிச் செய்ய வேண்டும் என எதிர்பார்க்கக் கூடாது.

ஏதாவது சுடச்சுட எழுதினால் தானே வாசகர்களுக்கு பிடிக்கும் என நினைத்து கட்டுத்தெறித்த குதிரை போலத் தம்முடைய உள்ளத்தை ஓட்டம் எடுக்க விடுகின்றார்கள் விமர்சகர். வாசகர்களைக் குதூகலப்படுத்துவதை விட எழுத்தாளனுக்கு நீதி வழங்குவதே அவர்களது மிக முக்கியமான கடமை. விமர்சனத்தில் அனுதாபம் வேண்டும் தராசு முனை போல சீர்தூக்கி குணம் குறைகளை கூற வேண்டும். குணங்களை கூறுவது அவசியம் குறைகளை நயமான முறையிற் குறிப்பிடுவதும் வேண்டும். எழுத்து வளர விமர்சகர் துணையாக இருக்க வேண்டுமானால் இதுவே அவர்கள் கடமை.

**தமிழ் நூல் வெளியீடு**

எழுத்து உலகிலே மிக மேன்மையான சேவை நூல் வெளியீடாகும். ஆறுமுகநாவலர் செய்த மிகச்சிறந்த தொண்டுகளை பொது மக்களும் படித்து பயன்படும் நோக்குடன் அவற்றை வெளியிட்டமையே. இந்தத் துறையில் சி.வை.தாமோதரம் பிள்ளை அவர்கள் செய்த தொண்டு சால பெரிது. தமிழ் மொழி வரலாற்றின் வெளியீட்டுத் துறையில் தாமோதரம் பிள்ளையும் ஆறுமுக நாவலரும் செய்த தொண்டு அவர்கள் புகழை என்றென்றும் நிலைக்கச் செய்யும்.

தாமோதரம் பிள்ளையும் நாவலரும் ஆற்றிய தொண்டின் வழி , இன்று ஈழத்திலே சில நிறுவனங்களை சேர்ந்த வரும் தனிப்பட்ட சிலரும் எழுத்து உலகில் வெளிவரும் படைப்புகளைப் பதிப்பித்து உதவி வருகின்றனர். ஈழத்தை எழுத்தாளர் எழுத்துப் பொருள் பற்றி எழுத வேண்டும் என்ற உணர்ச்சி பொங்கிப் பெருகி வரும் இக்காலத்தில் உணர்ச்சியை உந்துவதாக அமைந்துள்ளது இந்த நூல் வெளியீடும். இன்று ஈழத்திலே தரமுள்ள சிறுகதைகள் பல எழுதப்பட்டு வருகின்றன, சிறுகதை எழுத்தாளர் பலரின் கதைகள் தொகுதிகளாக இப்பொழுது வெளி வருகின்றன.


**படைப்பிலக்கிய விரோதிகள்**

படைப்பிலக்கியத்திற்கு எதிராகச் சில பழமை சுமைதாங்கிகள் எழுத்துலகில் சேடமிழுத்துக்கொண்டிருப்போர் - கல்லெறிந்த போதும், சிறுகதைகள் கூடிய வேகத்துடன் இப்பொழுது வெளி வருகின்றன. இந்தத் துறையில் தமிழ் எழுத்தாளர் மறைந்தினரும் முன்னணியில் நின்று, இத்தொகுதி வெளியிட்டின் மூலம் தங்கள் ஆட்சேபத்தை ஆணித்தரமான எதிர்ப்பை செயலிற் காட்டியமைக்கு அவர்களுக்குத் தலை வணங்குகின்றோம். நாவலர் ஐயாவிலும் தாமோதரம் பிள்ளையிலும் கை வைக்கும் பக்தர்கள்- இல்லை பத்தர்கள் - உங்கள் மேலும் கை வைத்தால் அது வியப்பன்று.

*"1963ஆம் ஆண்டு நாவலர்கள்" என்றாவது உங்களுக்கு பெயர் வரட்டும். இத்தொண்டினை தொடர்ந்து செய்து என்றும் பணியாற்ற வேண்டும் என்று தமிழன்னை போரில் உங்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.*

*இச் சிறுகதை தொகுதி இப்போதுதான் என் கைக் கெட்டியது. ஆகவே தரம் பற்றி கூற முடியாத நிலையில் இருக்கின்றேன். எனினும் பரிசில் பெற்ற கதைகள் என்றமையால் தரம் உயர்ந்திருக்கும் என எதிர்பார்க்கின்றோம் . பல்கலைக்கழக மாணவர் நால்லரின் சிறுகதைகள் இதில் இடம்பெற்றிருப்பது எமக்கு மகிழ்ச்சியை அளிக்கின்றது. இத்தொகுதியை வெளியிட்டு எழுத்தாளருக்கு உற்சாகம் அளித்தமைக்கும் ,காலத்தோ டொட்டி இப்பணியை மேற்கொண்டமைக்கும் இம்மன்றத்தினரைப் பாராட்டுகிறோம்.*

தினகரன் 1963 யூலை 30 செவ்வாய்கிழமை



1956-57களில் பேராதனைத் தமிழ்ச் சங்க பிரதமபொருளாளராக பேராசிரியர் சு. வித்தியானந்தன் செயற்பட்டமையைப் படத்தில் காணலாம்.

## 38

# இலக்கண நூற் கல்விக்குத் தந்தை

**சி.வை.தாமோதரம்பிள்ளை அவர்களைப் பின்பற்றி எழுந்த பதிப்பாசிரியர் டாக்டர் உ.வே சாமிநாதையர். ஏடுகாத்தகிழவர் என போற்றப்படும் சாமிநாதையருக்கு வழிகாட்டியாக இருந்து அவரை பல்வகையிலும் தூண்டிப் பதிப்பாசிரியராக விளங்க அடி கோலிக் கொடுத்தவர் தாமோதரம் பிள்ளையே. சுவாமிநாதஐயர் தாமோதரம்பிள்ளைக்கு பிந்தியவர்.**

*தாமோதரம்பிள்ளை சென்னை பல்கலைக்கழகத்தின் முதற்கலைமானிப் பட்டதாரி என்ற சிறப்பு பெற்றபோது சாமிநாதையருக்கு வயது இரண்டு. தாமோதரம்பிள்ளை பதிப்பித்த தொல்காப்பியம், இலக்கண விளக்கம், களவியல் உரை, வீரசோழியம், சூளாமணி, கலித்தொகை போன்ற நூல்களின் பதிப்புகளை பின்பற்றியே சுவாமிநாத ஐயர் நூல்களை பதிப்பித்து வந்தார். தாமோதரம்பிள்ளையை தொடர்ந்து தாமும் பழைய நூல்களைப் பதிப்பிக்க ஆசை கொண்டு தாமோதரம்பிள்ளையின் தூண்டுதலின் பயனாகத் தமது முதல் முயற்சியாக 1887ல் சீவகசிந்தாமணியை பதித்து வெளியிட்டார்.*

*"யாழ்ப்பாணம் ஒரு சிறு நூலையேனும், ஒரு சிற்றுரையேனும் செய்குநரில்லாத தேசம்" என்று தென்னிந்திய தமிழ் பெருந்தகைகள் பொறாமையினால் வீண் பொய் பிரசாரம் செய்த காலத்தில் வாழ்ந்தவர் தாமோதரம்பிள்ளை. நூல்களையும், உரைகளையும் பிழையறப் பரிசோதித்து அச்சிற் பதிப்பிக்க வல்லவர் ஈழத்தவர் என்பதை செயலிற்காட்டி அத்துறையில் பிறருக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்தவர் இப்ப பெரியார். தமிழ்மொழியின் சீர்குலையாமல் இருப்பதற்குத் தமிழ் இலக்கண நூல்கள் சிலவற்றை அச்சு வாகனம் ஏற்றி, அவற்றை மக்களுக்குப் பயன்படும் வண்ணம் செய்தார் இவர்.*

### நூல்களின் நிலை

*இலக்கண நூல்களைப் பொதுமக்கள் கற்கமாட்டார்கள் அந்நூல்கள் விலை போவதும் மிகக் குறைவு; எனினும், தமிழ்மொழி மேலுள்ள பற்றினால் அச்சிடப் பெறாத அரிய பழந்தமிழ் நூல்கள் பலவற்றை இவர் பனையோலைச் சுவடிகளை கொண்டு பரிசோதித்தார் ஏட்டுச் சுவடிகள் நீர்வாய் பட்டும், தீவாய்ப்பட்டும், சிதல் வாய்ப்பட்டும் மறைந்து கிடந்தன. ஏடு எடுக்கும்போது ஓரங்கள் சொரிந்தன, அவற்றின் கட்டுக்களை அவிழ்க்கும் போது இதழ்கள் முரிந்தன, ஒற்றைகளைப் புரட்டும் போது ஒற்றைகள் துண்டு துண்டாகப் பறந்தன, எழுத்துக்களோ எனில் வாலும் தலையும் இன்றி நாலுபுறமும் பாணக் கலப்பை மறுத்து மறுத்து உழுது கிடந்தன. பழைய சுவடிகள் யாவும் கீலமாய் ஒன்றொன்றாய் அழிந்து போய்க் கிடந்தன புது ஏடுகளைச் சேர்த்து அவற்றை எழுதி வைப்பாரும் அக்காலத்தில் இருக்கவில்லை .அரசாங்கத்தவரும் அதன் மேல் கவனம் செலுத்தவில்லை.*

*இந்நிலையைக் கண்ணுற்று உள்ளம் துடிதுடித்து அவரே கூறுகின்றார் "எத்தனையோ திவ்ய மதுர கிரந்தங்கள் காலாந்தரத்தில் ஒன்றன்பின் ஒன்றாக அழிகின்றன,*

*சீமான்களே! இவ்வாறு இறந்தொழியும் நூல்களில் உங்களுக்குச் சற்றாயினும் கிருபை பிறக்கவில்லையா? ஆச்சரியம்! ஆச்சரியம்! ஆச்சரியம்! அயலான் அழியக் காண்கிலும் மனம் தளம்புகின்றதே! தமிழ் மாது நும் தாயல்லவா? இவள் அழிய நமக்கு என்னவென்று வாளா இருக்கின்றீர்களா? தேசாபிமானம் மத அபிமானம், பாஷா அபினாமனம் என்று இவை இல்லாதார் பெருமையும் பெருமையோ இதனை தயைகூர்ந்து சிந்திப்பீர்களாக"*

*"திருவுடையீர் நும்கருணை இந்நாள் தவறினில் பின்பு தவம் புரிந்தாலும் ஒரு தரம் அழிந்த தமிழ் நூல்களை மீட்டல் அரிது. யானை வாய்ப்பட்ட விளாம்பழத்தை பின் இலண்டத்துள் எடுத்து மென்ன ? ஒடன்றோ கிட்டுவது காலத்தின் வாய்ப்பட்ட ஏடுகளை பின் தேடி எடுப்பினும் கம்பையும் நாராச முந்தான் மீளும்"*

*இவ்வாறு உள்ளம் கொதித்து ஆவேசத்துடன் கூறுகிறார். சி.வை.தாமோதரம் பிள்ளை இதுவரை எவரும் எட்டியும் பாராத துறையின் பணியாற்ற முன்வந்தார். தன்னந்தனியாக பழைய தமிழ் இலக்கண புதையலை தமிழ் மக்களுக்கு அகழ்ந்து எடுத்து அரும்பணியில் ஈடுபட்டார். இச்சேவையில் ஈடுபட்ட இடைஞ்சலுக்கு குறையில்லை. இலக்கண எட்டுப் பிரதிகளை பெறுவது மிகவும் கடினமாய் இருந்தமையால் பலர் வீடுகள் தோறும் சென்று பிரதிநிதிகள் தேட வேண்டிய நிலை காணப்பட்டது. ஏடுகளை வைத்திருப்பவரிடம் அவற்றை பெறுவது இன்னும் கடினமாய் இருந்தது. ஏட்டுப் பிரதிகளை ஒப்பு நோக்கி ஆராய்ந்து பிழைகளை அகற்றி பிரதி செய்வது அதிலும் பொறுப்பாக இருந்தது.*

**பணியும் கண்டனமும்**

*மேலும் அக்காலத்தில் நூல்களை பதிப்பதற்கு அதிக பணம் தேவைப்பட்டது. இத்துறையில் பணம் செலவிட முன்வருவோர் தொகை குறைவாக இருந்தது. நூல்களை பரிசோதித்து பதிப்பவரே முதற்பணம் பொறுக்க வேண்டி இருந்தது. இன்று போல் அக்காலத்தில் நூல்களைப் பெற்று வெளியிடும் பதிப்பகங்கள் கிடையா. அத்துடன் இவ்வளவு இடையூறுகளையும் தாண்டி நூல்களை பதிப்பித்தாலும் அதனை பாராட்டுவோர் இல்லை. இகழ்ந்து கூறப் பலர் முன்வரிசையில் நின்றனர். தாமோதரம் பிள்ளை அவர்கள் தொல்காப்பியத்தை பதிப்பித்த போது, நரசிங்கபுரம் வீரசாமி முதலியார் அவருக்கு மாறாகப்பத்திரிகை ஒன்றை அச்சிட்டு வெளியிட்டதனையும், பத்திரிகைக்கு மாறாக தாமோதரம்பிள்ளை சார்பாக யாழ்ப்பாணத்து ஆறுமுகநாவலர் "நல்லறிவுச் சுடர் கொளுத்தல்" என ஒரு கண்டனம் வெளியிட்டதனையும் தமிழ் உலகம் நன்கறியும். இத்தகைய தடைகள் எதிர்பட்ட போதும் தாமோதரம்பிள்ளை அவர்கள் உள்ளம் தளரவில்லை. முழு நம்பிக்கை உடன் தான் செய்ய தொடங்கிய பணியைத் தொடர்ந்து நடத்தினர். இவரின் விடாமுயற்சியாலேயே தமிழ் தாயை இன்று அலங்கரித்து விளக்கும் இலக்கண நூல்கள் பல தோன்றின.*

*தமிழ் மொழியிலே இன்று கிடைத்துள்ள மிகப் பழைய இலக்கண நூல் தொல்காப்பியம் ஆகும். தமிழன் தொன்மையையும் செம்மையையும் எடுத்துக்காட்டும் ஒப்பற்ற இந்நூல் முழுவதையும் முதன் முதலாக பதிப்பித்த தனிச்சிறப்பு இவருக்கே உரியது. நச்சினாக்கினியர் உரை எழுதிய எழுத்ததிகாரமும் ஐந்தியல் நச்சினர்கினியர் உரையும் ஏனைய பேராசிரியர் உரையுமாய் உள்ள பொருளதிகாரமும் ஆறுமுக நாவலர் பரிசோதித்த சேனாவரையர் உரையைக் கொண்ட சொல்லதிகாரமும் முறையே இவரால் பதிப்பிக்கப்பட்டன.*

*இவருக்கு முன்பே 1847ம் ஆண்டில் மழவை மகாலிங்கையர் தொல்காப்பிய எழுத்ததிகாரத்தை நச்சினார்க்கினியர் உரையோடு பதிப்பித்திருந்தார். அதன்பின்பே, 1886ல் தாமோதரம்பிள்ளை தொல்காப்பியச் செல்லதிகாரத்தைச் சேனாவரையர் உரையோடு பதிப்பித்தார். அதற்குப் பின்னார் எழுத்ததிகாரம் நச்சினார்க்கினியம், மகாலிங்கையர் பதிப்புக் கிடையாமையால் பலர் வேண்டுகோளுக்கிணங்க தாமோதரம்பிள்ளை அதனைத் திருப்பிப் பதிப்பித்தார். பொருளதிகாரம் இவரால் 1885ம் ஆண்டிலேயே பதிப்பிக்கப்பெற்றது. யாரும் சிந்தியாத பொருளதிகாரம் பற்றிச் சிந்தித்து அதனை வெளியிட்ட தாமோதரம்பிள்ளைக்குத் தமிழ் உலகம் என்றென்றும் கடமைப்பட்டுள்ளது. தொல்காப்பியம் முழுவதனையும் முதன் முதல் அச்சுவாகனம் ஏற்றிய பெருமை தாமோதரம்பிள்ளை அவர்களையே சாரும். அவரைப் பின்பற்றியே உரை விளக்கக் குறிப்புடன் தொல்காப்பிய மூன்றதிகாரத்தையும் சிறந்த முறையில் வெளியிட்டார் புன்னாலைக்கட்டுவன் கணேசையர்.*

*நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே எனவாதாடிய நக்கீரர் எழுதியதாகக் கொள்ளப்படுவதும், பழந்தமிழ் உரைநடைக்கு ஓர் எடுத்துக்காட்டாக இலங்குவதுமாகிய இறையனார் அகப்பொருளுரையும் இவர் பதிப்பித்ததே. மேலும், இவர் வெளியிட்ட வீரசோழியம் தமிழ் மொழியின் வரலாற்றிலே தனியிடம் பெற்றுள்ளது. பதினோராம் நூற்றாண்டிற் புத்தமித்திரர் எழுதிய இவ்விலக்கணம், இடைக்கால இலக்கியத்திற்கு இலக்கணமாகக் கொள்ளப்படுகின்றது. குட்டித் தொல்காப்பியம் எனப் போற்றப்படும் சிறப்பு வாய்ந்த இலக்கண விளக்கத்தையும் இவரே பதிப்பித்தார்.வைத்தியநாததேசிகர் இயற்றிய இந்நூல் இலக்கண அறிவு படைத்தோர் போற்றற்குரிய ஏற்றம் வாய்ந்தது. இவ்வாறு பல இலக்கண நூல்களை முதன் முதற் பதிப்பித்துத் தமிழரின் இலக்கணப் பயிற்சியைக் குன்றவிடாது இப்பெரியார் ஆற்றியதொண்டு போற்றற்குரியது. இதனால் இவரை இலக்கண நூற் கல்விக்குத் தந்தையெக் கூறல் மிகையாகாது.*

*கலித்தொகை, சூளாமணி, தணிகைப்புராணம் முதலிய நூல்களையும் இவர் அச்சேற்றி வெளியிட்டார். இவரின் தூண்டுதலினாலேயே சாமிநாதையரும் நூல்களைப் பதிப்பிக்கத் தொடங்கினார். தாமோதரம்பிள்ளைக்குப் பின்னரே தமிழ் இலக்கண நூல்களும் பழைய இலக்கிய நூல்களும் தமிழ் கூறும் நல்லுலகத்தில் நடமாடத்தொடங்கின. ஆங்கிலக் கல்வி கற்ற தமிழறிஞர் தமிழ்மொழிக்குச் செய்யக்கூடிய அரிய சேவையை இவரின் பதிப்புக்கள் உலகிற்குக் காட்டவல்லன. மக்களுக்கு அத்தியாவசியம் பயன்படும் நூல்களை ஆறுமுகநாவலர் வெளியிட, மொழியின் செம்மைக்கு இன்றியமையாத இலக்கண நூல்களையும் கற்றறிந்தோர் ஏத்தும் பழந்தமிழ் இலக்கியங்களையும் வெளியிட்டார் தாமோதரம்பிள்ளை.*

தினகரன்1963 டிசெம்பர் 21 சனிக்கிழமை.

# பண்பாடான இனத்தை உருவாக்க கல்வி பயன்பட வேண்டும்

## கல்லூரி பரிசளிப்பு விழாவில் கலாநிதி வித்தியானந்தன் உரை

**“அறிவின் எல்லைகளை விஸ்தரிப்பதற்கும் தேசிய முன்னேற்றத்தை விருத்தி செய்வதற்கும் ஏற்ற முறையில் கல்வித் திட்டம் அமைய வேண்டும். அறிவு படைத்த பண்பாடான மக்கள் இனத்தை உருவாக்கக் கல்வி பயன்பாட வேண்டும்” என்று இலங்கை பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளரான கலாநிதி சு வித்யானந்தன் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி பரிசளிப்பு விழாவில் உரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.**

**கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா நேற்று இரவு கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக கலந்து கொண்ட கலாநிதி சு. வித்யானந்தன் தொடர்ந்து பேசியதாவது.**

*இன்றைய கல்வி உலகப் பெரிய குழப்பமான நிலையில் இருக்கின்றது. பெருக்கெடுத்த கடலிலே தத்தளிக்கும் மாலுமிகள் போல குழப்பமான ஒரு சூழலிலே கல்லூரிகள் தத்தளிக்கின்றன. அரசியல் பலிபீடத்தில் கல்வித் திட்டங்கள் பலியிடப்படும் காலமிது. மொழிப்பித்தும் சமய வெறியும் தாண்டவமாடிக் கல்வி உலகை கலக்கி அடிக்கும் காலம் இது. ஏக்கத்தினாலும் ஏமாற்றித்தாலும் மாணவர்கள் செயலற்றுத் திண்டாடும் காலமிது. எமது பண்பாட்டையும் கல்வியையும் வளம்படுத்த உரிமைப் போர் தொடுத்து ஆங்கிலேயர் ஆட்சியை அகற்றினோம். உரிமை பெற்றபின் நாம் கண்டதொன்றும் இல்லை. பயிர் வளர்தற்காக களை பறித்தோம். ஆனால் கறையான் புற்றெடுக்கக் கருநாகம் குடிகொண்ட கதையாகிவிட்டது.*

*தன்னளவில் நல்ல தான ஒன்றினையை கல்வி என்ற சொல் குறிக்கின்றது. சாத்திர ரீதியாக அறிவை நாடுவதே எந்த கல்விக் திட்டத்தினதும் முக்கிய நோக்கமாகும். அத்தகைய கல்வியினால் வாழ்க்கையின் தரம் உயரும் என்பதே அந்நோக்கத்தின் அடிப்படையாகும்.*

### 67 ஆயிரம் மாணவர்கள் வேலை தேடுகின்றனர்

*எமது நாட்டிலேயே 8000 சிரேஷ்ட பாடசாலைகள் இருக்கின்றன. மூன்று பல்கலைக்கழகங்களும் 30க்கும் மேற்பட்ட உயர் கல்விக்கூடங்களும் இருக்கின்றன. இவற்றில் கல்வி பயிலும் மாணவர்களை எதிர் நோக்கியுள்ள பிரச்சனைகள் பல. இவற்றைப் பற்றி இந்நாட்டிலுள்ள சிந்திக்கும் ஆற்றல் படைத்த ஒவ்வொரு மனிதனும் சிந்திக்க வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் 67,000 மாணவர்கள் சிரேஷ்ட பாடசாலைக் கல்வியை முடித்துவிட்டு தொழில் தோடுகின்றனர். பல்கலைக்கழகத்திலிருந்து ஆண்டுதோறும் 900 பட்டதாரிகள் வெளியேறுகின்றனர். இம்மாணவரின் தொகைக்கு ஏற்ப நாட்டின் பொருளாதார விருத்தி முன்னேற்றம் அடையவில்லை. தொழில் தேடுவோர் தொகை*

இவ்வளவாக இருந்தும் உயர்ந்த தகுதி உடையவருக்கு சிறப்பாக விஞ்ஞானத் துறையில் இன்னும் தீர்க்க முடியாத கிராக்கி உண்டு. ஒரு நாடு இயற்கை மூலப் பொருள்களில் எவ்வளவு வளம் பெற்றிருந்த போதும். மனித ஆற்றல்களைச் செவ்வனே விருத்தி செய்து, இயற்கை ஆற்றல்களை நல்ல முறையில் செயல்படுத்தக் கூடிய வகையில் அவை பயன்படுத்தப்படாது விட்டால் அந்நாடு முன்னேற முடியாது. தேசிய சேவைகளை கணித்து நோக்கங்களை வகுத்தே கல்வித்திட்டங்களை அமைத்தல் வேண்டும்.

**தமிழ் மாணவர் எதிர்காலம்**

இந்நாட்டு தமிழ் பேசும் மக்களின் கதி கவலைக்குரியது. சிரேஷ்ட பாடசாலை கல்வியை முடித்து வெளியேறும் மாணவர் கதி மிகவும் மோசமானது. இலங்கையிலும் வெளியிலும் உள்ள பல்கலைக்கழகங்களில் புகுந்து நான்கு ஐந்து ஆண்டு கல்வி கற்றுப் பட்டம் பெற்றிருக்கும் நூற்றுக்கணக்கான பட்டதாரிகள் கல்வி மந்திரியின் அலுவலகத்தில் காத்து நிற்கின்றனர். இவர்களைக் கவனிப்பார் எவரும் இல்லை. ஏமாற்றமும் வெறுப்பும் கொண்ட இவர்களின் எதிர்காலம் என்ன என்பதை உறுதி சொல்ல முடியாது. தகுதி இருந்தும் பல்கலைக்கழகத்தில் இடமில்லாததனால் பல்கலைக்கழக கல்வி பெற இயலாமல் தமிழ் மாணவர் தத்தளிக்கின்றனர்.

**யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம்**

இத்தகைய குழப்பமான சூழ்நிலையில் இலங்கை பல்கலைக்கழகத்தின் ஓர் உறுப்பாக யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகப் பிரிவு ஒன்றினை அமைக்க அரசாங்கம் எண்ணியுள்ளதாக செய்திகள் கூறுகின்றன. தமிழ் பேசும் மக்களும் பல்கலைக்கழகமும் என்பது பற்றி உயர்தர கல்விக் கமிஷன், இலங்கை பல்கலைக்கழக கமிஷன் 1961 மகா தேசாதிபதி நிகழ்த்திய சிம்மாசனப் பிரசங்கம், தமிழ் பல்கலைக்கழக இயக்கம், குணவர்த்தன கமிஷன் போன்றன தெரிவித்துள்ள கருத்துக்கள் நாடறிந்தவை. யாழ்ப்பாணத்தில் அமைக்கப்படும் பல்கலைக்கழகப் பிரிவு நன்மை தரக்கூடியது.

இப்போது இலங்கை பல்கலைக்கழகத்தில் 1400 தமிழ் மாணவர்கள் படிக்கின்றனர். இப் பல்கலைக்கழகத்திலும் லண்டன் பல்கலைக்கழகத்திலும் பதிவு செய்துள்ள வெளி மாணவர் தொகை ஆயிரம் இருக்கும். இந்திய பல்கலை கழகங்களில் சேர விரும்பும் மாணவர்கள் தொகை நாளுக்குநாள் கட்டுப்படுத்தப்படுகிறது. இந்நிலையில் தகுதியுடையவராக இருந்தும் பல்கலைக்கழகத்தில் புக இயலாமலிருக்கும் மேலதிகமான தமிழ் மாணவர்களுக்கு கல்வி அளிக்கக்கூடிய பல்கலைக்கழகப் பிரிவை யாழ்ப்பாணத்தில் அரசாங்கம் அமைக்குமாயின் இது இப் பிரச்சனையை தீர்ப்பதற்கு ஒரு வழியாகும். யாழ்ப்பாணம் பல்கலைக்கழக பகுதி முழு பல்கலைக்கழக அந்தஸ்தினை விரைவில் பெற வேண்டும். பேராதனையில் உள்ள பல்கலைக்கழகம் எல்லா இனத்தவரும் இப்போது கற்று வருவது போல தேசிய பல்கலைக்கழகமாகவும் ஆராய்ச்சி நிலையமாகவும் தொடர்ந்து நடைபெற வேண்டும்.

தமிழ் பேசும் பட்டதாரிகள் வேலை இல்லாது திண்டாடுதல் நாட்டில் காணப்படும் வேலையில்லா பிரச்சினையின் ஓர் அங்கமே. அது நன்றாக ஆராய்ந்து நிரந்தரமான முடிவு காண வேண்டிய ஒரு பிரச்சினை. உடன் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக

அந்நேரத்துக்குச் சமாளிக்கும் பிரச்சினை அன்று. இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் எதிர்நோக்கி உள்ள இப்பிரச்சனைகளை தீர்க்க அறிவியல் கல்வியும் திட்டமான பொருளாதாரக் கொள்கையும், தேசிய உணர்வும், உயரிய குறிக்கோளும் மான உணர்ச்சியும், மன உறுதியும், உறுதுணையாக அமையும்.

கல்லூரியின் பதில் அதிபர் திரு .ஈ. கே. சண்முகானந்தன் நமது அறிக்கையை சமர்ப்பித்தார் தமது அறிக்கையை சமர்ப்பித்தார். மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

ஈழநாடு 1964 மார்ச் 24 செவ்வாய்க்கிழமை



மத்திய மாகாண சைவமகாசபை மங்கையர் கழக அங்குரார்ப்பண நிகழ்வில் (26.11.1966) பேராசிரியர் சு.வித்தியானந்தன்

40

# "ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் குறிப்பிடக் கூடிய காலம்"

## நாடக நூல் வெளியீட்டு விழாவில் கலாநிதி வித்தியானந்தன்.

**" கடந்த சில மாதங்களாக எழுத்தாளர் உலகை ஒரு குழப்பமான சூழ்நிலை கலக்கி வருகின்றது. இந்தக் குழப்பமான சூழ்நிலையிலே பண்பாடான முறையில் பூதத்தம்பி நாடகம் வெளிவருவது நல்ல முயற்சி. இந்நூலை வெளியிடும் கணேசையர் தமிழ் சங்கம் அனைவரதும் பாராட்டுக்கு உரியது. இச்சங்கத்தாரின் பண்பான சேவையும் உழைப்பும் பிறர் பின்பற்றுவதற்குரியன " என்று இலங்கை பல்கலைக்கழக தமிழ் விரிவுரையாளர் கலாநிதி சு. வித்யானந்தன் " பூதத்தம்பி என்னும்" நாடக நூலை வெளியிட்டு வைத்து பேசுகையில் கூறினார்.**

*தெல்லிப்பழை மகாஜன கல்லூரி மண்டபத்தில் திங்கட்கிழமை மாலை கணேசையர் தமிழ் சங்கம் திரு தா.சண்முகசுந்தரம் எழுதிய பூதத்தம்பி என்னும் நாடக நூல் வெளியீட்டு விழாவை நடத்தியது. கல்லூரி அதிபர் தெ. து. ஜெயரத்தினம் தலைமையில் நடைபெற்ற விழாவில் கலாநிதி சு வித்தியானந்தன் தொடர்ந்து பேசியதாவது: - 1961 ஆம் ஆண்டிலும் 1962 ஆம் ஆண்டிலும் ஈழத்திலே பல நூல்கள் வெளியாகின. வெளியீட்டகங்கள் சில நிறுவப்பட்டு பல நூல்கள் ஈழத்திலேயே வெளியிடப்பட்டன. தனிப்பட்ட அச்சகங்களுக்கும் நிறுவனங்களுக்கும் சிறுகதை தொகுதிகளையும் நவல்களையும் ஆராய்ச்சி நூல்களையும் வெளியிட்டன. ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் அந்த இரு ஆண்டுகளும் சிறப்பாக குறிப்பிடத்தற்குரியன. எழுத்தாளர் இடையே உணர்ச்சியும் உற்சாகமும் உழைப்பும் கலையாக்க முயற்சியும் காணப்பட்டன. பல்வேறுபட்ட கொள்கை உடைய எழுத்தாளர் ஒன்று கூடி உழைத்தனர்.*

*கடந்த ஆண்டில் ஏற்பட்ட சில சம்பவங்கள் காரணமாக எழுத்தாளர் மத்தியில் பொறாமை சுயநலம் பகைமை என்பன தலை தூக்கின. இது ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் அருவருக்கத்தக்கட்டம். ஒழுங்காக எழுதி வந்த எழுத்தாளர் கூட விவாதங்களில் ஈடுபட்டு பகையை வளர்த்து வந்தனரே தவிர படைப்புக்களை அளிக்கவில்லை. வீண் சண்டைகளிலும் நிந்தனைகளிலும் நேரத்தையும் மூளையையும் வீணாக்காது படைப்புக்களைப் பொதுமக்கள் மத்தியில் நடமாட விட்டு பொதுமக்களின் ஆதரவையும் மதிப்பையும் பெறுவதே சாலச் சிறந்தது.*

*எழுத்தாளரைப் பொதுமக்களுடன் தொடர்பு கொள்ள வைப்பவர்கள் வெளியீட்டு நிலையத்தாரே! பரந்துபட்ட மக்கள் சமுதாயத்தில் எழுத்தாளனை நடமாட செய்கின்ற இப்பணி ஒப்பற்றது. எழுத்தாளனின் முயற்சிக்கு ஒரு அந்தஸ்தை கொடுக்கின்றது நூல் வெளியீடு இதனால் எழுத்தாளன் மன அமைதியும் ஊக்கமும் பெற்று ஆக்க வேலையை தொடர்ந்து செய்கின்றான்.*

*எழுத்தாளனுக்கு ஆதரவளிப்பது வாசகர் கடன். பல்லாயிரக் கணக்கான தமிழ் பேசும் மக்கள் வாழும் ஈழத்தில் ஓர் எழுத்தாளன் தனது நூலின் 500 பிரதிகள் விற்பதற்கே*

சங்கடமாக இருக்கின்றது. இதனாலேயே சில பதிப்பகங்கள் முதலாவது வெளியீட்டுடன் நிலையத்தை மூடி விடுகின்றன. நூல்களைக் காசு கொடுத்து வாங்குவோர் தொகை பெருக வேண்டும் நூல்களை இரவல் கொடுக்கும் பழக்கம் ஒழிய வேண்டும். எழுத்தாளனை ஆதரிக்க அவர்களது நூல்களை வாங்கிப் படிக்க அனைவரும் முயற்சி எடுக்க வேண்டும்.

தமிழில் சிறுகதை இலக்கியம் எவ்வளவு அதிகமாய் இருக்கின்றதோ அவ்வளவு குறைவாக நாடக இலக்கியம் இருக்கிறது. ஒரு கதைக்கு நாடக உருவமும் நாடகத்தன்மையும் கொடுப்பதற்கு மிகுந்த கற்பனை ஆற்றல் வேண்டும். நாடக அமைப்பு எளிதில் செய்யக்கூடிய ஒன்றல்ல. பாத்திரங்களின் குண மோதல்களை அவர்களுடைய உரையாடலிலும் நடிப்பிலும் காட்டுவது இலகுவானதல்ல. கதைச்செறிவும் பாத்திர வளர்ப்பும் இலக்கியத் தரமும் ஒருங்கி அமைய நாடக எழுதக்கூடியவர் மிகச் சிலரே.

இன்று ஈழத்திலே சிலர் நாடகங்களை எழுத முன் வந்துள்ளனர். எனினும் இவ் இலக்கியத்துறை போதிய தொகையினரைக் கவரவில்லை என்றே கூற வேண்டும். இத்துறையில் இடையறாது ஆர்வம் காட்டி வரும் திரு.த.சண்முகசுந்தரம் தமது இரு வரலாற்று நாடகங்களிலும் பெரும் வெற்றி கண்டுள்ளார்.

“ பூதத்தம்பி” நாடகத்தில் 17ம்நூற்றாண்டுக்குரிய பாத்திரங்கள் உயிர்த்துடிப்புடன் வாழும் மனிதராக இயங்குகின்றன. காலக் களரியில் உணர்ச்சி மோதல்களோடு பாத்திரங்களின் குண இயல்பும் துலங்க பெறுகின்றன. துன்பியல் நாடகங்களில் மாறுபடும் சக்திகளின் மோதல் துலக்கம் ஆக தெரிய வேண்டும். பூதத்தம்பி நாடகத்தில் இம்மோதல் முக்கியமானதாக அமைகின்றது.

**தமிழன் பண்பாட்டின் சின்னம்**


விலாசமாக ஆடிப் புகழ்பெற்ற இக்கதையை சில மாற்றங்களுடன் இக்கால நாடக முறையில் அமைக்கப்பட்டுள்ளது பாராட்டுக்குரியது. தமிழனுடைய பண்பாட்டின் சின்னமாக பூதத்தம்பியைப் படைத்திருப்பதும் போற்றத்தக்கது. மேடையில் இலகுவில் நடிப்பதற்கு ஏற்ற முறையில் இது அமைந்துள்ளது. கதை நிகழ் இடங்கள் மூன்றாக இருபது பிற நாடக ஆசிரியர்கள் கட்டாயம் பின்பற்ற வேண்டியது. ஒளி இருந்தால் இருள் இருப்பது உண்மை என்பது போல பண்பட்ட சிறந்த எழுத்தாளர் இருப்பதினாலேயே பண்பாடற்ற நையாண்டி சிருஷ்டிக்காரரும் இருக்கின்றார்கள்.

நூல் வெளியீட்டு விழாவிற்கு தலைமை வகித்த கல்லூரி அதிபர் திரு.தெ. து ஜெயரத்தினம் தமது உரையில் கூறியதாவது:

அரசாங்க உதவியுடன் இயங்கும் சபைகள் ஸ்தாபனங்களை விட தனித்து நின்று செயல்படும் சங்கங்களின் பணி உயர்வானவை தமிழை வளர்க்கும் நோக்கத்தை தூய மனதுடன் மேற்கொண்டுள்ள கணேசையர் தமிழ் சங்கம் இலங்கையிலேயே மிகப்பெரிய நிறுவனமாக வளரும் வாய்ப்பு பெற்றிருப்பது நமது அதிருஷ்டமே. தமிழ் மொழி இத்தகைய நிறுவனங்களால் பெருமையும் வளர்ச்சியும் பெறுவதற்கான அறிகுறிகள் ஏராளமாக உண்டு.

பூதத்தம்பி நாடக நூலை பற்றி ஆய்வுரைகள் வழங்கிய புலவர் நா. சிவபாதசுந்தரம், கவிஞர் செ.கதிரேசபிள்ளை, திருமதி வள்ளிநாயகி இராமலிங்கம் ஆகியோர் நூலாசிரியர்களின் நாடகப் புலமையைப் பாராட்டி பேசினார். நூல் ஆசிரியர் திரு சண்முகசுந்தரம் பேசுகையில் யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழர் பாரம்பரியத்தைப் பாதுகாக்க கூடிய வகையில் தமிழ் நூல்கள் வெளிவர வேண்டும் என்று குறிப்பிட்டார்

ஈழநாடு 1964 மார்ச் 26 வியாழக்கிழமை




பேராசிரியர் சு. வித்தியானந்தனின் கையொப்பங்கள்

# நாடகத்திற்கு மதிப்பும் சிறப்பும் அளித்த மக்கள் கலைஞன்

**நாடகம் கலைக்கரசு. நாட்டின் பண்பாட்டிற்குக் கண்ணாடி, பொது மக்களின் பல்கலைக்கழகம், உணர்ச்சியைத் தூண்டி உள்ளத்திற் புதைந்து கிடக்கும் அன்பையும் அறிவையும் தூய்மையையும் வெளிப்படுத்தி மக்களைப் பண்படுத்தும் மகத்தான கலை. எனவே, நாடகப் பேராசான் சொர்ணலிங்கம், அவர்கள், கலையரசு அவர்கள், நாடகத்தின் சின்னம்; தமிழ்ப் பண்பாட்டிற்குக் கண்ணாடி; பொதுமக்களின் பல்கலைக்கழகம்; மக்களின் உணர்வைத் தட்டியெழுப்பி, அவர்கள் மனதிற் படிந்து கிடந்த அன்பையும் அறிவையும் தூய்மையையும் வளர்த்துப் பண்பாடான மக்களை உருப்படுத்தி மங்காப் புகழ் படைத்த கலைஞன். தொடர்ந்து அறுபத்திரண்டு ஆண்டுகளாக நாடகக் கலைக்கு வழிகாட்டிய இப் பெருந்தகையின் எழுபத்தைந்தாவது பிறந்தநாளை இன்று கொண்டாடுகின்றோம்.**


கலையரசு ஒரு நாடகத்தில்

*சமூகத்திற்குப் பெரும்பராமாயிராது சமூகம் தன்னாற் பயன்பட வாழ்கின்ற கலைஞன் கலையரசு அவர்கள்; தரமான பல நாடகங்களை அரங்கேற்றியும் நிகரற்ற பல நடிகரை உருவாக்கியும், நாடகத்திற்கு மதிப்பும் சிறப்பும் தேடிக்கொடுத்துத் தமிழ்நாடகக் கலை சுடர் விட்டெரிய வழி வகுத்த, நாடகத் தந்தை கலையரசு அவர்கள்.*

**கூத்தாடிகள்**

*ஒரு காலத்தில் நாடகம் நடிப்பவர்களுக்கும் நாடகம் பார்ப்பவர்களுக்கும் சமூக வாழ்வில் ஸ்தானம் உயர்ந்ததாய் இருக்கவில்லை, நாடக மேடையில் தோன்றியவர் கூத்தாடிகள் எனக் கருதப்பட்டனர். இத்தகைய கூத்தாடிகள் ஆடும் களத்திற்குச் சென்றோரும் ஏதோ பெருந் தவறு செய்தவராகக் கருதப்பட்டனர். இன்று இந்நிலை மாறிவிட்டது. நடிகர்கள் கலைஞராகத் திகழ்கிறார்கள். நாடகம் பார்ப்பவர் ரசிகராகப் போற்றப்படுகின்றனர். ஈழத்தில் இத்தகைய மாற்றம் ஏற்படுவதற்குக் காலாக இருந்தவர் சொர்ணலிங்கம் அவர்களே. படியாத மக்களிடம் சிக்கித் தவித்த நாடகக்கலை அக்காலத்துச் சமூக வாழ்விற்கு ஏற்ப மாற்றம் அடையாது பழைமையை இறுகப் பிடித்துத் தேங்கி நின்றது; பெரும்பாலும் நாடகம் சமயச்சடங்காகவே கருதப்பட்டு வந்தது. இந்நிலையில் நாடகத் துறையில் காலத்திற் கியைய மாற்றம் ஏற்படுத்தி நாடகத்திற்கு உயிர் கொடுத்த பெருமை கலையரசைச் சாரும்.*

*நாடகத்தோடு தொடர்பு கொள்வதே இழிவாகக் கருதப்பட்ட காலத்தில், இலங்கா சுபோத விலாச சபா என்னும் நாடக மன்றத்தினை **7-7-1913** ல் நிறுவி, கல்வி அறிவுடைய பெருமக்களை அதிற்சேர்த்துத் துணிவுடன் மேடையேறி நாடகக் கலையைத் தூய கலையாக மாற்றியமைத்த சிறப்பு அவருக்குரியது. நாடகத்தை தொழில் முறைப்படி நடத்தாது விருப்பு முயற்சி யடிப்படையிற் பொழுதுபோக்கிற்காக நடத்தப்படும் கலையாக அமைத்தார். ஆண்களே பெண்களாக வேஷம் போட்டு வெற்றிகரமாக நடிக்கலாமென்பதைத் தாம் அரங்கேற்றிய நாடகங்கள் மூலம் காட்டினார். மாறிய*

*சூழ்நிலையைப் பிரதிபலிக்கும் நாடகங்களையும் அரங்கேற்றினார். பழைய வரலாற்று நாடகங்களை நடிப்பதோடு புதிய சமூக நாடகங்களையும் பேச்சு வழக்கு நாடகங்களையும் நடித்து வெற்றிகண்டார். நாடகத்துறையில் இவருக்கு வழிகாட்டியாயிருந்தவர் பம்மல் சம்பந்த முதலியார். அக்காலத்தில் தென்னிந்தியாவிலே இதே துறையில் பணியாற்றி வந்த அப்பெருந்தகை இவரின் குருவாவர். அவரைப் பின்பற்றிப் பல ஆங்கில நாடகங்களைத் தமிழ் மரபிற்கேற்ப அரங்கேற்றினார்.*

*இழிவாகக் கருதப்பட்டு வந்த நாடகக் கலைக்கு நெறி வகுத்து அதனை வளர்ச்சிப் பாதையில் கொண்டுசெலுத்திய கலையரசு அவர்கள் 1901ம் ஆண்டில் 'லோகதாச'னாக நடித்து முதன் முதல் நாடக மேடையிலே தோன்றியபோதும், 1916ம் ஆண்டு வேதாள உலகத்தில் 'தத்தனா'க நடித்ததிலிருந்தே இவர் சிறந்த நடிகரெனக் கணிக்கப்பட்டார். இவர் கூனியாக நடித்தபொழுது இவர் புகழ் எங்கும் பரவியது. தமது சொந்த கற்பனைகொண்டு இவர் செய்த ஒப்பனையை இதுவரை எவரும் நாடகத்திலோ திரையிலோ செய்யவில்லையெனக் கூறுவர். இவர் எழுபத்தைந்து தடவைக்கு மேற் கூனியாக நடித்திருக்கின்றார். மனோகரனாக இவர் நடித்த காலங்களில் இவரது நடிப்புத் திறனைப் பிறநாட்டுக் கலைஞரும் போற்றிப் பராட்டினர். 'சைலொக்'காக நடித்ததும் இவருக்கு புகழ் ஈட்டிக் கொடுத்தது. எனினும் விசுவாமித்திரனாக நடித்ததையே இவர் சிறந்த நடிப்பாகக் கருதுகின்றார். இதில் நடிப்பு, குரல் ஒப்பனை முதலியன மிகவும் சிறப்பாக அமைந்திருந்தன. பரதனாகவும் சின்னக்குட்டியாகவும் நடித்தபோது பலரது பாராட்டைப் பெற்றார்.*

**சமூக நாடகம்**

*பல சமூக நாடகங்களிலும் பங்குபற்றிப் புகழ் பெற்றிருக்கின்றார். இவற்றில் நூற்றொரு வியாதிக் கிழவனாகவும் டி.எஸ் சேனநாயக்காவாகவும் நடித்தவை கலையன்பர் நினைவிலிருந்து என்றும் அகல மாட்டா. 1918ம் ஆண்டில் கதம்பக்கலை நிகழ்ச்சி ஒன்றில் முதன் முதல் நடிக்கப்பெற்ற நூற்றொரு வியாதிக் கிழவன் என்னும் பாத்திரம் இது வரை நூற்றொரு தடவைக்கு மேல் நடிக்கப்பட்டுவிட்டது. இவ்வாறு ஒவ்வொரு பாத்திரத்திலும் கலையரசு ஈட்டிய வெற்றிக்குக் காரணம் நடிப்புக் கலையில் அவர் தம்மை எப்பொழுதும் ஒரு மாணவனாகக் கருதியமையே. "நடிகர்கள் தம்மைத் தாம் அறிய வேண்டும்" என்றும், "தம்மைத் தாம் மறக்க வேண்டும்" என்றும் இவர் அடிக்கடி கூறுவார். நடிகர் தாம் மேடை மீது அளிக்கும் காட்சியை (உடை, ஒப்பனை, முகபாவம், நிலை, நடை, அங்க அசைவு, பேச்சு, பாட்டு முதலியவற்றை) மண்டபத்திலுள்ளோர் எவ்வாறு இரசித்து உணர்ந்து கொள்கிறார்கள் என்பதைத் தாமே அறிந்து கொள்ளும் ஆற்றலைப் பெற்றிருக்க வேண்டும். அதாவது தாம் நினைத்துக் காட்டுவதை தம்மைப் போலவே மற்றவரும் ஏற்றுக் கொள்கிறார்களோ என்பதை அவதானிக்கவேண்டும். தம்மைத் தாம் அறிந்தால்தான், மனதில் இருப்பவற்றை நடித்துக் காட்டலாம். எனவே "நான் " என்பதனை உள்ளத்திலிருந்து நீக்கினால் தான் மற்றவர்கள் தம்மை எவ்வாறு மதிக்கிறார்கள் என நடிகர் அறியலாமென்று கலையரசு வற்புறுத்திக் கூறுவார்.*

**அபிப்பிராயம் கேட்பார்**

*கலையரசு அவர்கள் ஒரு பாத்திரத்தை ஏற்றுக் கொண்டவுடன் அதை நன்றாகப் படித்து விளங்கி, அதன் குணங்களையும் இலட்சியங்களையும் ஆராய்ந்து அறிந்து, தன் தேகம்,*

முகபாவம், குரல் முதலியவற்றை அவற்றிற்கேற்றவாறு அமைத்துக் கொள்ள முயல்வார். தெருக்களிலோ வேறு இடங்களிலோ அப்பாத்திரத்திற்கேற்ற சாயல் உடையவரைக் கண்டால் அவர்களை அவதானித்துக் கற்பனையில் அமைத்துத் தனிமையாக வீட்டில் முகக் கண்ணாடிக்கு முன் நின்று செய்து பழகிப் பின் தன் நண்பர்களுக்குச் செய்து காட்டி அவர்களது எண்ணத்தையும் அறிந்த பின்பே தன் கற்பனைப்படி ஒத்திகை செய்யத் தொடங்குவார். ஒத்திகை வேளைகளிலும் சக நடிகர்களிடம் அவர்கள் கருத்துக்களைக் கேட்டுத் தான் செய்வது தமது, கற்பனைக்கு ஏற்ப இருக்கின்றதோ எனத் தெரிந்துகொள்வார். சிறுவர், பெரியார், படித்தவர், படியாதவர் யாவரிடத்திலும் அபிப்பிராயம் கேட்பார். இது நடிகருக்கு மிக அவசியம் என அவர் கருதுபவர். 75 வயதாகியும் இக்காலத்திலும் மேடைக்குப் போகு முன் மற்றைய நடிகரிடம் தன் உடை, ஒப்பனை பற்றிக் கேட்டுவிட்டுச் சில பாகங்களைச் செய்து காட்டி அவர்கள் கருத்துக்களை அறிந்துகொள்வார். தன்னை எப்பொழுதும் ஒரு மாணவனாகக் கருதுவதே அவரின் வெற்றிக்கு முக்கிய காரணமாகும்.

இவ்வளவு சிறந்த நடிகராக விளங்கியபோதும் இவர் தமது நடிப்புத் திறனைப் பற்றிப் பெருமை பேசுவதில்லை. தம்மிடம் கற்றுத் தேறிய மாணவரது திறனைப் பற்றியே சிறப்பாக எடுத்துப் பேசுவர். இவரிடம் பழகி மேடையேறிய நடிகர் தொகை எண்ணில் அடங்காது. கலை வளர்ச்சிக்காக எவர் உதவியை நாடினாலும் உள்ளம் உவந்து உதவி செய்வார். இன்று கூடத் தமது சொந்தச் செலவிற் பல இடங்களுக்குச் சென்று கலைஞர்களுக்கு வேண்டிய பயிற்சி அளித்து வருகின்றார். கலைஞரைப் பராட்டும் விழாக்களில் முன்னணியில் நிற்பார். பிறரைப் போற்றுவதிலும் கௌரவிப்பதிலும் இவர் காட்டும் ஆர்வம் ஏனைய கலைஞர் பின்பற்றுவதற்குரியது. நாடகத்தில் யாராவது திறம்பட நடித்தால், நாடகம் முடிந்ததும் மேடைக்குச் சென்று தனிப்பட்ட முறையில் அவர்களை வாழ்த்தி ஊக்கமளிப்பார். குறைகளையும் பண்பான முறையில் சுட்டிக் காட்டுவர். ஒரு நாடகம் சிறப்பாக அரங்கேற்றினால் அவருக்கு இருக்கும் மகிழ்ச்சி அளவற்றது. காண்பவர்கள் எல்லோருடனும் அதைப்பற்றிக் கதைப்பார். விமர்சனம் செய்யக்கூடிய பத்திரிகைகளில் அதனைப்பற்றிப் பாராட்டி எழுதுவார். இத்தகைய சிறந்த பண்பை, தூய உளப்பாங்கை, பிறர் நலம் கருதும் சால்பை நான் பிற கலைஞரிடம் கண்டதில்லை.

**கலைப் படைப்புக்கள்**

இன்று நாளுக்குநாள் பல நாடகங்கள் அரங்கேற்றப்படுகின்றன. ஆனால் இவற்றுட் பெரும்பாலானவை தரத்தில் மிகக் குறைந்தவை; ஏதோ ஒரு நாடகமன்றம் அமைத்து ஒரு நாடகமாயினும் அரங்கேற்றுவதற்கென நடிக்கப்படுபவை; நான்கு ஐந்து நாள் ஒத்திகையுடன் அரங்கேற்றப்படுபவை. ஆனாற் கலையரசு அவர்கள் நடித்த நாடகங்களிலும் அரங்கேற்றிய நாடகங்களிலும் ஒன்றேனும் தரங்குறைந்ததாகக் கண்டனம் பெறவில்லை. அவரது நாடகங்களைப் பார்ப்போர் இறுதிவரை அமைதியாக இருந்து பார்ப்பர். காரணம், அவை எவ்வளவோ முயற்சி செய்து அளிக்கப்படும் கலைப்படைப்புக்கள், நாடகம் அரங்கேற்ற வேண்டும் என்பதற்காக அரங்கேற்றப்படுபவையல்ல. பல மாதங்களாக ஒத்திகை பார்த்து, தரமானவை என்று கண்டபின் நடிக்கப்படுபவை. ஒத்திகைகள் ஒழுங்காகப் பலகாலம் நடைபெறுவதே இவர் நாடகங்களின் வெற்றிக்குக் காலாகும்.

*இன்று எழுத்துலகிலும் கலையுலகிலும் பொறாமை பெருக்கெடுத்தோடுகின்றது. வாழ்க்கையில் முன்னேறும் ஆற்றல் இல்லாதவர்கள் ஆக்க வேளையில் ஈடுபடுபவரை நிந்திக்கும் காலம் இது. படித்தவர்கள், பட்டம் பெற்றவர்கள் கூச்சமின்றிப் பிறரைத் தூற்றும் காலம். நன்மை ஆபத்தானதாவென்று பெரியோர் கவலையுறுங்காலம். இத்தகைய சூழ்நிலையில் பண்பாடற்ற கலைஞர் மத்தியில், சால்பு படைத்த பெருந்தகையாக, மக்கள் கலைஞனாக, ஒப்பற்ற தலைவனாக, என்றும் அணையாத விளக்காகக் காட்சியளிக்கின்றார் கலையரசு சொர்ணலிங்கம் அவர்கள். உயர்ந்த உள்ளம் படைத்த அவர்களின் வாழ்வும் தொண்டும் மேலும் சிறக்க இறைவன் அருள் செய்வாராக.*

*(தினகரன் **1964** மார்ச் கலையரசு சொர்ணலிங்கம் அவர்களின் **75**வது பிறந்த தினச் சிறப்பிதழில் வெளியான கட்டுரை)*

தினகரன் 1964 மார்ச் 30 திங்கட்கிழமை

## 42

# தமிழர் வாழ்வில் மகிழ்ச்சி பொங்குக!

**மாதத்திற் சித்திரை சிறந்ததாகவும் முதலாவதாகவும் கொள்ளப்படுகின்றது. வானத்திலே ஒளி வீசிச் செல்லும் சந்திரன் தன் முழு அழகையும் காட்டும் ஒரு மாதம் சித்திரையேயாகும். நிறைமதி நாட்களை உலகில் எவ்விடத்து வாழ்வோரும் இன்ப நாட்களாகக் கொண்டாடுவார்கள்.**

*இந் நிறைமதி நாள் மாதந்தோறும் வருகின்றது. ஒவ்வொரு நிறைமதி நாளும் ஒவ்வொரு வகையில் விழாவாகக் கொண்டப்படுகின்றது. மாதத்திற் சந்திரன் ஒவ்வொரு நட்சத்திரத்தில் நிறைமதியாகக் காட்சியளிக்கின்றது. அந்த நட்சத்திரத்தின் பெயரை ஒட்டியே மாதங்களின் பெயர்கள் அமையும். சந்திரன் தன் நிறை நாளைச் சித்திரை நட்சத்தித்தோடு சார்த்திநிற்கும் அந்த மாதமே சித்திரை மாதமாகும். சித்திரை மாதத்திற் சித்திரை நட்சத்திரத்தோடு சந்திரன் கூடும் நாளே "சித்திரா பௌர்ணமி" என்னும் நாள்.*

*இந்நாளிலே பொங்கி வழியும் பால்நிலவைப் போல மக்கள் உள்ளமும் மகிழ்சியாற் பொங்கித் திளைக்கும் என்பதே புத்தாண்டு விழாவின் அடிப்படை. பங்குனியும் சித்திரையும் கலந்த இளவேனிற் பருவம் மகிழ்ச்சி தரும் நாளாகக் கொண்டாடப்படுகின்றது. ஆடிமாதம் தொடக்கம் வயலில் உழைத்து, அதனாற் பெற்ற பயனைக் கார்த்திகையிலும் மார்கழியிலும் கைக்கொண்டு, பெற்றதைத் தைமாதத்திற் பங்கிட்டு கொடுத்துப் பொங்கல் விழா எடுத்து பனி வாடையும் குளிரும் நீங்க இரண்டு மாதங்கள் கழித்து, பின்வரும் சித்திரை நாளை மனத் திருப்தியோடு, மகிழ்ச்சியுடன் எதிர்பார்க்கின்றான் தமிழன். இனிவரும் புத்தாண்டு பழைய ஆண்டிலும் பார்க்க மன அமைதியையும் இன்பத்தையும் அளிக்குமென எதிர்பார்க்கின்றேன்.*

**இலக்கைப் பெற ஏற்ற வாழ்க்கை**

*இம்மரபுக்கு ஏற்ப நாளை கெண்டாடும் புத்தாண்டு தமிழருக்கு மகிழ்ச்சியையும் இன்பத்தையும் உறுதியையும் அமைதியையும் அளிக்குமென எதிர்பார்க்கின்றோம். ஆனால், அத்தகைய இலக்கைப் பெறுவதற்கு ஏற்ற முறையில் எமது வாழ்க்கையை அமைத்துக்கொள்ளவேண்டும். உயரிய எண்ணமும், மான உணர்ச்சியும், மன உறுதியும், பொருளாதார உயர்வும், பொறுப்பு உணர்ச்சியும், தளராத முயற்சியும், பரந்த மனப்பான்மையும் பெற்றால் தான் தமிழர் சமுதாயம் முன்னேற வழியுண்டு.*

*"உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்" என்றார் திருவள்ளுவர். எண்ணு, நல்லதை எண்ணு, பெரியதை எண்ணு என்பது இதன் பொருள். உண்மையில் பெரியதை எண்ணி அதில் வெற்றி பெறாதவன், சிறியதை எண்ணி அதில் வெற்றி பெறுபவனிலும் மேன்மையானவன் வேடர் தலைவன் ஒருவன், வயது வந்தவன் படுத்துவிட்டான். அவனுக்கு மக்கள் இருவர். "போய் வேட்டையாடி வாருங்கள்" என்று அவர்களை அனுப்பி வைக்கிறான் வேடர் தலைவன். மூத்த மகன் முயல்வேட்டைக்குப் போக எண்ணி, முயலை எய்யும் அம்பும் வில்லும் கையிலெடுத்து, முயல்வாழும் காட்டுக்குச்*

சென்று, முயலுக்கு குறி பார்த்து எய்து, முயலையும் வீழ்த்தி, அதன் உடலையும் கைப்பற்றித் தந்தை முன்கொண்டு வைத்து வீர வணக்கம் வணங்கினான். எவ்வளவு பெரிய வெற்றி, ஆற்றலிலே, துணிவிலே, குறியிலே! வேடர் தலைவன் வாழ்த்தினானா? இல்லை. திரும்பிப் படுத்துக்கொண்டான். இளைய மகன் யானை வேட்டைக்குப் போக எண்ணி, வேலைக் கையிலேந்திக் காடு சென்று, யானை கண்டு, குறி பார்த்து வேலை வீசி எறிந்து, குறிதவறி, யானை பிழைத்தோடி, வேலையும் இழந்து வெறுங் கையோடு, தந்தை முன் வந்து வணங்கினான். வேடர் தலைவன் உடனே எழுந்து அவனை இறுகக் கட்டி அணைத்து "நீதான் வீரன், நீதான் என் மகன்" என்று வாழ்த்தினான் ஆம்,

"கான முயல் எய்த

அம்பினில் யானை

பிழைத்த - வேல்

ஏந்தல் இனிது"

சிறிய காரியங்களிலே முயன்று வெற்றி பெறுவதிலும், பெரிய காரியங்களில் முயன்று தோல்வியடைவது சாலச் சிறந்தது.

**முன்னேற்றத்துக்கு உதவும் கொள்கை**

எமது எண்ணம் உயர்ந்திருத்தால் தான் எம்மைப் பிறர் மதிப்பர். உயரிய குறிக்கோள், சீரிய எண்ணம் படைத்த சமுதாயம் வாழ்க்கையில் முன்னேறும். சுயநலத்திற்காக, உடன் தேவைக்காக, குறுகிய கால எல்லையுள் உயரவேண்டுமென்பதற்காக ஒரு சமூகம் குறிக்கோளிலிருந்து தளர்ச்சியடையுமாயின் அச்சமூகத்திற்கு விமோசனம் இல்லை. சலுகைகையிலே நம்பியிருக்கும் சமூகம் உடனடியாகச் சில நன்மைகள் பெற்றபோதும் முடிவில் முதுகெலும்பற்ற வீணர் சமூகமாகவே காட்சியளிக்கும். ஒரு சிலரின் உயர்வுக்காக இனத்தை விற்கும் மனப்பாண்மை இருக்கும்வரை ஓர் இனம் தலையெடுக்க இயலாது. ஆகவே, தமிழர் சமுதாயம் முன்னேற வேண்டுமாயின் நாம் உயரிய கொள்கைகளுக்காகப் பாடுபடவேண்டும். எம் எண்ணம் உயரியதாயிருக்கும் வரை எம்மைப் பிறர் தாழ்த்த முடியாது. சலுகைகளும், குறுக்குவழிகளும், தனிப்பட்ட சிலரின் உயர்வும், தமிழ்ச் சமூகத்திற்கு ஒரு பொழுதும் நன்மை பயக்கா.

உயரிய எண்ணத்தைக் கைப்பிடிப்பதற்கு அச்சமற்ற வாழ்க்கை தேவைப்படுகிறது. வாழ்க்கைப் போராட்டத்திலே துன்பங்களைக் கண்டு ஏங்குவது சிறந்த மனப்பாண்மையன்று. உரோசாப் பூ வேண்டுமென்றால் அதில் முள் இருக்கின்றது எனப் பயப்படக்கூடாது. தேன் குடிக்க வேண்டுமென்று ஆசையிருந்தால் வண்டு கொட்டும் என்ற பயம் இருத்தல் கூடாது. நாம் யாருக்கும் குடியல்லோம்; நாம் அஞ்சுவது யாதென்றுமில்லை. தூய்மையான குறிக்கோளுடன் அச்சமின்றி நின்றால் எவரும் எம்மை எமது வழியினின்றும் அகற்ற முடியாது. நாம் தேம்பி அழும் தொடை நடுங்கிகள் அல்லர் என்பதைச் செயலிற் காட்டவேண்டும்.

இதற்கு மானம் மிகவும் வேண்டற்பாலது. முன்னொருகால் வட நாட்டரசர் குழுமியிருந்த சபை தனிலே, கனகவிசயர் என்னும் சிற்றரசர் தமிழ் மேன்மை இகழ்ந்தனர் என்பதைக் கேட்டு மான வீரம் மனத்தில் எழுந்து ,தமிழ்ப்படை திரட்டிச்சென்று, வாய்வீரம்

பேசிய இருவரையும் வாள் வீரத்தால் அடக்கிக் கண்ணகிக்கு கோயில் அமைப்பதற்கு இமயமலையில் எடுத்த கல்லை அவர் தலையில் ஏற்றி வஞ்சிமாநகர் வரை சுமந்து வரச்செய்யவில்லையா சேரன் செங்குட்டுவன்? சேரமான் கணைக்காலிரும்பொறை சோழன் செங்கண்னோடுபொருது சிறையிற் கிடந்தபோது, நீர் விடயாய் எடுக்க அதனைத் தீர்க்க நீர் தா என்று கேட்டான். அவர்கள் உடனே கொடுக்காது சிறிது தாமதித்துக் கொடுத்தார்கள். மானபங்கமுற வந்த அதனைக் குடிப்பதா என்ற எண்ணத்துடன் தண்ணீரைக் கையில் வைத்துக் கொண்டே உயிர் நீத்தான் அச் சேரவரசன்! மானத்தின் மிக்க அறமும் பொருளும் இல்லை என்பது இவற்றாற் பெறப்படும். மானக் கேட்டுடன் வாழ்வதிலும் உயிர் துறத்தல் சிறந்தது என்ற பண்பு இரத்தத்துடன் கலந்து இருத்தல் வேண்டும்.

**மான வாழ்வுக்குப் பொறுப்புணர்ச்சி**

மானத்துடன் வாழ்வதற்குப் பொறுப்புணர்ச்சி வேண்டும். கல்லை அடித்தோம் என்று சொல்வதே முறையானது. கல்லை அடித்த நாம் அந்தக் குற்றத்தை ஏற்க மனமில்லாமற், கல் அடித்தது என்கின்றோம். பேசும் சக்தியில்லாத கல்லின் மேற் குற்றத்தைச் சுமத்தி எமக்கு அதில் ஒரு பொறுப்புமில்லாதது போல நடக்கின்றோம். தமிழர் சமுதாயம் முன்னேற வேண்டுமாயின் மனப்பான்மை மாறவேண்டும். அந்நியன் ஆட்சியையும், கெட்ட காலத்தையும் காரணங்களாகக் கொண்டு, எமது நிலைக்கு நாமும் பொறுப்பானவர் என்பதனை ஏற்க மறுப்பதனாலேயே நாம் இன்றும் கோழைகளாக வாழ்கின்றோம். முதலில் நாம் எம்மைத் திருத்தி அமைத்துக் கொள்ள வேண்டும். நல்ல சூழ்நிலை உருப்படும் என்றும், காலம் மாறும் என்றும் இருந்தால் நாம் ஒருபொழுதும் முன்னேற முடியாது.

பிறரை நம்பியிருந்த தனாலேயே, அரசாங்க உத்தியோகத்தை நாடி அதனையே எமது பொருளாதார அமைப்புக்கு அடிப்படையாகக் கொண்டதனாலேயே, சிங்கப்பூர் உழைப்பை எதிர்பார்த்ததனாலேயே, நாம் இன்று முதுகெலும்பு இழந்து நிற்கின்றோம். இன்று, தமிழ் பேசும் மக்களது பொருளாதார நிலை மிகவும் மோசமாக இருக்கின்றது. ஆண்டு தோறும் சிரேஷ்ட பாடசாலைகளிலிருந்தும் பல்கலைக் கழகங்களிலிருந்தும் வெளியேறும் மாணவரில் ஆயிரக்கணக்கானோர் வேலையில்லாது திண்டாடுகின்றனர். இந்நிலை நீடிக்குமாயின் இளைஞர் வாழ்க்கையில் ஏமாற்றமும் வெறுப்பும் குடி கொண்டு அவர்களைப் பிணங்களாக்கிவிடும், இந்தப் புத்தாண்டிலாவது தமிழ் மக்களின் நல்வாழ்வுக்குரிய பொருளாதாரத்திட்டம் நன்கு வகுக்கப்பட்டு அது கைகூடுவதற்குரிய செயல்முறைகள் கையாளப்பட வேண்டும், இதிற் பெரியோர்கள் உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டும்.

இதற்குத் தளராத முயற்சியும் மன உறுதியும் இன்றியமையாது வேண்டப்படுவன. வயலிலே இருக்கும் எலிக்கு வாழ்வதற்குச் சிறு முயற்சி போதும், வளைந்து கிடக்கும் உணவைக் கதிர்கதிராகக் கொறித்துக் கொண்டுபோய்த் தனது பொந்தில் நிறைய வைத்துக்கொள்கின்றது எலி, புலி, தனது குகையிலிருந்து புறப்பட்டு, மலைப் பிளவுகளிற் பாய்ந்து, தனது பெரு முயற்சியால் ஆண்யானை ஒன்றைத் தனது வலிமை மிகுந்த வலது பக்கத்திலே விழுந்து இறக்கும்படி செய்து, தன் ஆண்மைக் கிளர்ச்சி தோன்ற அந்த யானையைக் கிழித்துப் பெருமித்தோடு தின்று பசி ஆறுகின்றது. எலியைப் போல

முயற்சி செய்யும் பண்பு மாறவேண்டும். புலியைப் போலத் தமிழர் வாழ வேண்டும். நாம் விரும்பியவாறே எல்லாம் நடைபெறவேண்டும் என்ற முறைமை இல்லை. அரிய தொழிலான யானை வேட்டைக்குச் செல்லும் யானை வேட்டுவன் ஒரு யானையை எளிதாகப் பெறவுங் கூடும். ஆனால், மிகவும் எளிய தொழிலான குறும்பு வேட்டைக்குப் போவோன் அது பெறாமல் வெறுங் கையோடு திரும்பவும் கூடும். அதனால் முயற்சி செய்வதொன்றே மக்கள் கருத வேண்டியது, மற்றவை கருதுவது அவரின் கடமையன்று. இம் முறையில் நற்செயல்கள் செய்யும் போதே சமுதாயம் நலன் எய்தும்.

**கடவுளுக்குகந்த வழிபாட்டு முறை**

தமிழ் மக்களிடையே அரசியலிலும் சமுதாயத்திலும் எழுத்துலகிலும் கலையுலகிலும் பொறாமையும் பிணக்கும் தலைவிரித்தாடுகின்றன. தமிழர் ஒருவரை ஒருவர் தாக்குவதிலும் காட்டிக் கொடுப்பதிலுமே காலத்தைக் கழிக்கின்றனர். ஒருவரையொருவர் நிந்தனை செய்வதில் தனி இன்பம் கொள்ளுகின்றனர். சிலர் இதற்கென்றே தம் வாழ்நாளை அர்ப்பணித்துவருகின்றனர். இந்தநிலை நீடிக்குமாயின் பண்பாடற்ற ஒரு சமூகமாக, தமது இனத்தைத் தாமே கெடுக்கும் இனமாக, பிறர் பார்த்து நகையாடும் மக்கட் கூட்டமாக, ஒற்றுமை இல்லாத மனிதக் கும்பலாகத் தமிழர் காணப்படுவர். இயன்றவரை நல்ல செயல்களையே அறிந்து செய்து கொண்டிருத்தலே தலையானது. ஆனால், இது செய்யமுடியாமலிருந்தால், நல்லது அல்லாதவற்றைச் செய்தலை நீக்கவேண்டும். அதுதான் யாவரும் புகழ்வது, எம்மாற் செய்ய இயலாததை மற்றவன் செய்தால், அவனைத் தடைசெய்தல் கூடாது; அவனைப் புகழ எமக்கு மனமில்லாது விட்டால், பேசாதிருத்தல் நலம். அவனைப் புகழ விருப்பமில்லாது விட்டால் அவனை இகழ வேண்டியதில்லை. அவ்வாறு இகழ்வது எமது சிறுமையை வெளிக்காட்டுகின்றதேயொழிய ஒரு நன்மையும் தருகின்றதில்லை. பிறரை இகழ்வதைக் கைவிட்டுப் பராட்டுவதைக் கடைப்பிடிப்போமாயின் எமது சமூகம் முன்னேறும், ஏனெனில், ஒருவரைப் பாராட்டுதல் கடவுளுக்குகந்த வழிபாட்டு முறைகளில் ஒன்றாக கணிக்கப்படுகின்றது. எல்லோரும் இன்புற்றிருப்பதுவே வாழ்க்கையின் நோக்கமாகும்.

எனவே, நாளை பிறக்கும் ஆண்டில் தமிழர் சமூகம் முன்னேறுவதற்குரிய வழிகளைக் கடைப்பிடித்து, இன்பமாகவும் அமைதியாகவும் வளம்படைத்து வாழ்க்கை நடத்த முயல்வாராக. தமிழர் வாழ்வில் மகிழ்ச்சி பொங்குக!

(தினகரன் புத்தாண்டு மலரில் **12.04.64** அன்று வெளியான கட்டுரை)

தினகரன் 1964 ஏப்ரல் 12 ஞாயிற்றுக்கிழமை

# ஆங்கில மகாகவியின் விழா

**உயர் திரு.விபுலானந்த அடிகள் ஆங்கிலக் கவிஞராகிய ஷேக்ஸ்பியரின் இயற் பெயரைத் தமிழிற் செகசிற்பியர் என வழங்கினார். உலகம் முழுவதையும் ஒரு நாடக மேடையாகவும் மக்களை அந்நாடக மேடையினுட் புகுந்து நடிக்கும் கூத்தராகவும் கொண்டவர் இக் கவிஞர்.**

*இவ்வாறு உலக வாழ்க்கையை நாடகமாகக் கற்பித்துக் கூறிய செகசிற்பியர் சிறப்பு வாய்ந்த நாடக நூல்கள் பலவற்றை உலகிற்கு அளித்தனர்; தாமும் கூத்தருள் ஒருவராக அரங்கினுட் புகுந்து நடித்தனர். நாடகக் கவிகளுள் இவருக்கு ஒப்பாரும் மிக்காரும் இலர் என்பது பல அறிஞர் துணிபு.*

**முதல் தரமான நாடகாசிரியர்**




*மேடையிற் சிறப்பாக நடிக்கக்கூடிய நாடகங்களை எழுதிய ஒப்புயர்வற்ற முதல்தர நாடகாசிரியராக விளங்கும் அப் பேரறிஞர், தலை சிறந்த கவிஞராகவும், காட்சியளிக்கின்றார். மனித இயல்பை தீர்க்கமாய் அறிந்தவராய் சிறந்த நாவலாசிரியர்கள் போல மனித இயல்பை மிகுந்த கூர்மையுடன் நோக்கிக் கிரகித்த விவேகியாய் நாம் அவரைக் காணுகின்றோம். அவருடைய நாடகங்களைப் படிக்கும்போது அவற்றின் கவியின்பத்தை அனுபவிக்கின்றோம்; அவருடைய கதா பாத்திரங்களை ஆறுதலாய் ஆராய்ந்து பார்க்கின்றோம்; நாடகத்தில் வரும் பேச்சுக்களைப் பல தடவை திருப்பித் திருப்பி படித்து அவற்றிலுள்ள கற்பனைத் திறனைச் சுவைக்கின்றோம். நாடகங்களைப் படிக்கும் போது கற்பனை நுட்பங்களையும் செழிப்பையும் உணர்கின்றோம். ஆகவே, அவருடைய படைப்புக்கள் மேடையிற் பார்ப்பதற்கும், தனியே படிப்பதற்கும் உகந்த, சிறந்த நாடகங்களாக விளங்குகின்றன.*

*உலகப் புகழ்பெற்ற அந்நாடகக் கவியின் நோக்கங்களும், நாடகம் எழுதும் துறைகளும், நாடக பாத்திரங்களின் குணங்களை வெளிப்படுத்தும் திறனும், சந்தர்ப்பங்களால் அந்நாடகப் பாத்திரங்களின் குணங்கள் மாறும் வகையும் தமிழ் அறிஞர் பலரின் உள்ளத்தைக் கவர்ந்தன. இதன் பயனாக அவர் எழுதிய பல நாடகங்கள் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டன. ஏறக்குறைய எண்பது ஆண்டுகளுக்கு முன் இருந்த வேணுகோபாலாச்சாரியார் மொழிபெயர்த்த "வெனிஸ் வர்த்தகன்" அவற்றுட் காலத்தால் முற்பட்டது. இது சிறந்ததொரு மொழிபெயர்ப்பு நூலாகக் கொள்ளப்படுகின்றது. இந்நூலைத் தழுவி ப. சம்பந்த முதலியார் " வாணீபுர வணிகன்" என்னும் நூலை வெளியிட்டு அரங்கேற்றினார். மேலும் இந் நாடகம் 1909ம் ஆண்டு வி.கண்ணபிரான்பிள்ளை என்பவராலும் மொழி பெயர்க்கப்பட்டது. 1893ம் ஆண்டு*

எஸ். நாராயணசாமி ஐயர் என்பவர் "மிட் சமர் நைட்ஸ் டிரீம்" என்னும் நாடகத்தை "நடுவேனிற் கனவு" என்னும் பெயரில் மொழிபெயர்த்து வெளியிட்டார். "ஒதெல்லோ" என்னும் நாடகம் அ.மாதவையா அவர்களாற் சிறந்த முறையில் மொழி பெயர்க்கப்பட்டது. இதே நாடகத்தை "யுத்தலோலன்" என்னும் பெயரில் பி.எஸ் துரைசாமி ஐயங்கார் மொழி பெயர்த்தார், இவர் "ரோமியோ அன்ட் ஜூலியெட்" என்னும் நாடகத்தையும் "பாம்யனும் ஜொலியையும்" என்னும் பெயரில் மொழி பெயர்த்தார்.

#### தமிழ் நாட்டிலே நாடகத்துறை

"ஹம்லெட்" என்னும் நாடகம் முதன் முதல் கே.வெங்கடராம ஐயரவர்களால் 1917ம் ஆண்டு மொழிபெயர்க்கப்பட்டது. ப.சம்பந்த முதலியார் இதனை "அமலாதித்தயன்" என்னும் பெயரில் 1908இல் தமிழில் அமைத்து வெளியிட்டார். "கிங்லியர்" என்னும் நாடகத்தை "மங்கையர் பகட்டு" என்னும் பெயரில் கே. ராமசாமி ஐயங்கார் 1921இல் வெளியிட்டார். "சிம்பலைன்" என்னும் வரலாற்று நாடகம் சரசலோசன செட்டியாரால் "சரசாங்கி" என்னும் பெயரில் 1897ம் ஆண்டு வெளியிடப்பட்டது. இதே நாடகத்தைச் "சிம்ஹளநாதன்" என்னும் பெயரில் 1914ம் ஆண்டில் ப. சம்பந்த முதலியார் வெளியிட்டார். இதே நாடகம் "பாண்டியராஜன் நாடகம்" என்னும் பெயரில் ஜி. ஜோசெப் என்பவரால் 1918ம் ஆண்டில் மொழி பெயர்க்கப்பட்டது. மகபதி (Macbeth) விரும்பிய விதமே (As you like it) என்ற நாடகங்களைப் ப. சம்பந்த முதலியார், தமிழில் அமைத்தார். அக்காலத்தில் தமிழ் நாட்டிலே நாடகத் துறையில் ஒரு விழிப்பை உண்டாக்கிய சுகுணவிலாச சபையினர் இந்நாடகங்கள் பலவற்றை அரங்கேற்றிப் புகழ் பெற்றனர். ஈழத்திலும் இலங்கா சுபோத விலாச சபாவினர் செகசிற்பியரின் நாடகங்களை நடித்து மதிப்புப் பெற்றனர். இச் சுபாவிலிருந்தே கலையரசு சொர்ணலிங்கம் அவர்கள் "வெனிஸ் வர்த்தகன்" என்னும் நாடகத்தில் சைலொக்காக 1919ம் ஆண்டில் நடித்தார். பிற்காலத்தில் யாழ்ப்பாணச் சங்கீத அபிவிருத்திச் சபையினரால் இந்நாடகம் ஆடப்பட்டபோது இப்பாத்திரம் இவருக்குப் புகழ் ஈட்டியது. இவர் இப் பாத்திரத்திற் சிறப்பாக நடித்ததைப் பார்த்தே பம்பாயிலிருந்து வந்த இசைவாணி லலிதா வேங்கட் ராமன் என்பவர் இவரைத் திரையிலே நடிப்பதற்கு இந்தியாவிற்கு அனுப்பும்படி இவரது மனைவியாரை வற்புறுத்தினார்.

இவ்வாறு தமிழிலே மொழி பெயர்க்கப்பட்டு சிறந்த முறையில் அரங்கேற்றப்பட்ட உலகப் புகழ் பெற்ற நாடகங்களை இயற்றிய செகசிற்பியர் பிறந்த இடம் ஸ்ரிறற் வோட் - ஓன் - ஏவன (Stafford – on – Avon) என்னும் நாட்டுப் பகுதியாகும். இப்பகுதி ஆங்கிலேயரின் அடிப்படைப் பண்பாட்டுக்கு அறிகுறியாய், காலக் கழிவினாலும் போரின் விளைவினாலும் மாற்றமடையாது, பழைய மரபுகளும் பண்டைக்காலக் கட்டடங்களும் அழிவுறாது விளங்குகின்றது. உலகத்தின் பல பகுதிகளிலிருந்து ஆண்டு தோறும் சித்திரை மாதந் தொடங்கி அடுத்த ஆறு மாதங்களுக்கு அங்கு நிகழும் செகசிற்பியார் விழாவிற்கு மக்கள் திரள் திரளாக வந்து குவிவார்கள். பதினைந்து ஆண்டுகளுக்கு முன், 1949ம் ஆண்டில், நடந்த விழாவிற்கு விருந்தினனாகச் சென்று அங்கு சில நாட்கள் தங்கும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது.

#### புலவர் பிறந்த வீட்டின் புகழ்

ஏவன் என்னும் ஆற்றின் தோற்றம் கவர்ச்சியுள்ளதாகவோ பொலிவு பெற்றதாகவோ அமையாதபோதும், அவரிச் செடி, புன்னை முதலியவற்றாற் பக்கங்களிற் சூழப்பெற்று,

வனப்பு வாய்ந்த பகுதிகள் பலவற்றிற் கூடாக இந்த ஆறு பாய்கின்றது. புலவர் பிறந்த வீட்டிற்கு ஆண்டு தோறும் நூறாயிரம் மக்கள் வரையிற் செல்வார்கள். குசினி அறையிலிருந்து பூஞ்சோலைக்குப் போவதற்கமைத்த படித்தட்டுக்கள் இப்பொழுதும் பழம் மாதிரியே இருக்கின்றன. அறைகளுட் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது நூதனப் பொருள் உள்ள அறையே, இவ்வறை செகசிற்பியார் காலத்திலே தொடக்கத்திற் கம்பளிக்கடையாகவும் பின்பு மடமாகவும் வழங்கியதெனக் கூறுவர். றிச் கேட் குவினேய் (Richard Quiney) என்பவர் செகசிற்பியாருக்கு எழுதிய கடிதத்தை அறையின் நடுப்பகுதியிற் கண்ணாடிப் பெட்டியில் வைத்திருக்கிறார்கள். செகசிற்பியாருக்கு அக்காலப் பெரியார்கள் எழுதிய கடிதங்களுள், இப்பொழுது கிடைத்துள்ளது இதுவே. சிறிய வாள், பக்கரை முதலிய பண்டைக்காலப் பொருள்களும் இங்கு இருக்கின்றன. நூல் நிலையமாக வழங்கும் அறையில் ஓவிய படங்களைச் சுவரிலே தூக்கியுள்ளார்கள். செகசிற்பியார் கற்ற பல அரிய நூல்கள் போற்றி வைக்கப்பட்டுள்ளன. கவிவாணரைப் பற்றி அக்காலத்திற் பலர் சஞ்சிகைகளில் எழுதிய வரலாற்றையும் அங்கு காணலாம். அவர் அணிந்த மோதிரம், ஒரு கண்ணாடிப் பெட்டியுள் மின்னுகின்றது. புலவர் பெருந்தகை பள்ளியிற் கற்ற காலத்திற் பாவித்த மேசை கூட ஒரு மூலையில் இருக்கின்றது.

தெருவைப் பார்த்தாற் போலுள்ளது செகசிற்பியார் பிறந்த அறை. இங்கு சில நூதனப் பொருள்களைத் தவிர வேறு குறிப்பிடக்கூடிய பொருள்கள் இல்லை. ஆனால், அவ்வீட்டுக்குச் சென்ற பெரியார்கள் தமது பெயர்களைச் சீலிங் பலகைகளிலும் சாளரங்களிலும் சுவர்களிலும் பொறித்துள்ளார்கள்.

வால்டர் ஸ்கொற்(Walter Scott) தொமஸ் காளையில் (Thomas Carlyle) ஆகியவர்களின் பெயர்கள் தெளிவாககத் தோன்றுகின்றன. பயிறன் (Byron) தக்கரேய் (Thackeray) டிக்கின்ஸ் (Dickens) முதலியோரின் பெயர்கள் அழிந்து போய்விட்டன. ஆயினும் எம்மை அங்கு அழைத்துச் சென்றவர் அப்பெயர்கள் பொறிக்கப்பட்ட இடங்களைச் சுட்டிக்காட்டினார். பிறவுணிங் (Browing)புலவரது கையெழுத்தின் ஒரு பகுதியைக் குறுக்குவளையில் இப்பொழுதும் காணலாம்.

**மனைவி இல்லத்தில் பன்னிரண்டு அறை**

செகசிற்பியார் வீட்டிற்குச் சிறிது அப்பாலுள்ளது அவர் மனைவியாரின் இல்லம். பன்னிரண்டு அறை கொண்ட வீடு இது; வீட்டுக் குசினியிற் பாண் சுடுவதற்குரிய போறணையும், தோலினால் ஆக்கப்பட்ட போத்தல் ஒன்றும் இருக்கின்றன. நடு அறையில், அடுப்படிக்கு அண்மையில், பழங்காலத்து நீட்டுக் கதிரை ஒன்றுண்டு. செகசிற்பியார் திருமணம் செய்வதற்கு முன்னர் தம் காதற் கிழத்தியோடு இக் கதிரையிலமர்ந்தே காதலுரையாடினரெனக் கூறுவர். பெற்றோர் பார்வைக்குட்பட அமைந்துள்ளது.

இந்நாற்காலி, இப்பெற்றோர்கள் படுத்துறங்கிய கட்டில்களின் கீழ்ப் பாகங்களும், கோரைப் புல்லினால் ஆக்கப்பட்ட மெத்தையும் இப்பொழுதும் பழைய மாதிரியே இருக்கின்றன.

செகசிற்பியார் பிறந்த இடத்திற் சிறப்பாகக் குறிப்பிடக்கூடிய கட்டடம் அவரின் நினைவு காரணமாகக் கட்டப்பட்ட நாடகசாலையே. இது இப்பொழுது ஏவன் ஆற்றிற்கு

அண்மையில் அமைந்துள்ளது. இந் நாடகசாலையின் முகப்பில் அழகிய சோலை ஒன்றுண்டு. செகசிற்பியார், யூலியஸ்சீசர் (Julius Casesar) மகபதிப் பிரியை (Lady Macbeth) முதலியோரின் உருவங்களை இச்சோலையிற் கல்லிற் செதுக்கி நாட்டியிருக்கின்றார்கள். 1827ம் ஆண்டிற் கவிவாணரின் நாடகங்களை நடிப்பதற்கு நாடகசாலையொன்று கட்டும் நோக்கத்துடன் அத்திவாரம் போட்டார்கள். அவ்வாண்டில் "வேனிற் காதை" (As you like it) நாடகத்தை நடித்தனர். ஆனாற் பணம் போதியளவு சேரவில்லை. 1864ம் ஆண்டிலே பன்னிரண்டு நாட்களாகச் செகசிற்பியார் விழாவைக் கொண்டாடினார். அவ்விழாக் காலத்தில் ஆறு நாடகங்கள் அரங்கேற்றப்பட்டன. 1876ம் ஆண்டில் நாடகச் சாலைக் கட்டடம் முற்றுப்பெற்றுச் சில கிழமைகள் விழாவும் கொண்டாடப்பட்டது.

ஆனால் 1926ம் ஆண்டில் இக்கட்டடம் தீக்கிரையாயிற்று. இச் செய்தி பேனாட் ஷா (Bernard Shaw) அவர்களின் காதுக்கெட்டியபோது அவர் கூறியதாவது:- " இச் செய்தியைக் கேட்டு நான் மகிழ்ந்தேன். செகசிற்பியார் ஓர் உலக கவி, அவர் நினைவு காரணமாக இக்காலத் தேவைகளுக்கேற்ற முறையிலே தகுந்த கட்டடம் ஒன்று அமைப்பதற்குக் கடவுள் காட்டிய வழி இது" இவர் கூற்று உண்மை மொழியாயிற்று. ஏழாண்டுக்கிடையில் பலரின் பண உதவியாற் புதுக்கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டது. 1933ம் ஆண்டு தொடங்கிச் செகசிற்பியார் விழாவைச் சித்திரை மாதத்திலிருந்து புரட்டாதி வரை கொண்டாடினர். இப்பொழுதும் அப்படியே நடந்து வருகின்றது. பேர்பெற்ற நடிகர்கள் உலகத்தின் பல பாகங்களிலுமிருந்து இங்கு வந்து நடிக்கின்றனர். நான் தங்கிய முதல்நாளில் அம்முணர்த்தும் மகபதி (Macbeth) நாடகத்தை அரங்கேற்றினர். பன்னீராயிரம் மக்கள் வசதியாகவிருந்து பார்க்கக் கூடிய முறையில் நாடகசாலை கட்டப்பட்டுள்ளது. சுழலும் மேடைகள் இரண்டு இருக்கின்றன. நேர தாமதமின்றிக் களம் மாற்றுவதற்கு இவை மிகவும் உதவியாக இருக்கின்றன. சிறந்த மாபிற் கட்டப்பட்டுள்ள இந் நாடகசாலையின் தோற்றமும் கவர்ச்சியுள்ளதாகவே அமைந்திருக்கின்றது.

**ஆண்டு தோறும் நிகழும் விழா**

இவ்வாறு ஆண்டு தோறும் செகசிற்பியார் விழாவைக்கொண்டாடுகின்றனர், ஆங்கிலேயர். தமிழ் நாட்டிற் செகசிற்பியாரைப் போலச் சிறந்த நாடகக் கவிஞர் இல்லாதது பெருங்குறையே. இயல் இசைக் கவிஞர் பலர் தோன்றி மறைந்தார்களேயாயினும், அத்தகைய நாடகக் கவிஞர் தொகை மிகக் குறைவென்பது யாவருக்கும் உடன்பாடே. அன்றியும் தமிழ் நாட்டில் மேனாடுகளிற் போல நாடகங்கள் நடிப்பதும் மிகக் குறைவே. நாடக ஆசிரியர்களையும், நாடகத் தயாரிப்பாளரையும் நாடக நடிகரையும் ஆதரிப்போர் மிக அருமை. இதிலும் பார்க்கக் கவலைக்குரியது இத்துறைகளில் ஈடுபடும் சிலரைத் தூற்றும் பழிச்செயல் கூலிக்கு மாரடிப்போரும் பண்பாடற்ற புல்லறிவாளரும் நாடகக் கலையைக் கொல்ல முயலுகின்றனர். கலை என்றால் என்ன என்பதை அறியாதவர்கள், நாடகங்களை எழுதியோ, தயாரித்தோ, பார்த்தோ அறியாதவர்கள், நாடகத்தைப் பற்றி விமர்சனம் செய்யும் காலம் இது!

கூட்டத்திற்குப் போகாது கூட்டம் பற்றிச் செய்தி அனுப்பும் நிருபர்கள் போல, நாடகம் பாராது நாடகத்தைப் பற்றி விமரிசனம் எழுதும் அளவிற்கு விமரிசனக் கலை வந்துவிட்டது. விமர்சனம் படைப்போர் தூய பண்பட்ட வாழ்க்கை நடத்தினாற்றான்

அவர்களின் விமரிசனத்தைப் பிறர் மதிப்பர். காலம் இவர்களின் உண்மைத் தன்மையை வெளிக்காட்டும்; இவர்களின் விஷமச் செயல்கள் நீண்ட காலம் நிலைக்கா.

பொதுவாகப் புலவர்களுக்கு எமது நாட்டில் இக் காலத்தில் நன்மதிப்பில்லை. பசிப்பிணியாற் பீடிக்கப்பட்டுத் தமது தலைவிதியையும் கல்வியையும் நொந்து அவர்கள் காலத்தைக் கழிக்கின்றனர். அவர்கள் பெருமை வெளிநாட்டினருக்குப் புலப்படாது, பெருமை மங்கித் தலைகுனிந்து வாழ்கின்றனர். ஆனால் மேனாட்டிலுள்ள நிலையே இதற்கு முற்றிலும் மாறானது, கவிஞரைப் பொதுமக்களும் ஆதரிக்கின்றனர். குட்டிப் புலவரைக் கூடயாவரும் நன்கறிவர்; கவிஞர் புலமையை உலகறிய வைப்பதிற் பெரிதும் முயல்கின்றனர். புலவர்களும், கலைஞர்களும் வாழ்ந்த இல்லங்களைப் போற்றி வைத்திருக்கின்றனர். எமது நாட்டிற் புலவர்கள் வாழ்ந்த இல்லங்கள் அடையாளம் தெரியாமல் அழிந்துவிட்டன. அவர்களிற் சிலரின் விழாக்களையே நாம் கொண்டாடுகின்றோம். அதுவும் ஆண்டுக்கொரு முறை ஒருநாள் நாட்டின் சில பகுதியிற் சிலர் கூடி இரண்டொரு சொற்பொழிவாற்றி இசைப்பாட்டுக்கள் பாடக்கேட்டு ஏதோ ஒரு பெருஞ்சுமை நீங்கியதெனப் பெருமூச்சு விடுகின்றார். புலவரின் பெருமை என்றும் நிலவ, அவரின் புலமைத் திறனை உலகறிய, நாம் முயல்கின்றோமா? இல்லை, எமக்கேன் அவற்றைப் பற்றிய கவலையென்று ஊக்கமற்றிருக்கின்றோம். ஆங்கிலக் கவிஞன் சேக்பியர் விழாவை உலகம் கொண்டாடுவது போலத் தமிழ்க் கவிஞர் விழாவைக் கொண்டாடுவது எக்காலமோ?

தினகரன் 1964 ஏப்ரல் 26 ஞாயிற்றுக்கிழமை

## 44

# மகாஜனக்கல்லூரி நிறுவியர் நினைவு நாட் பேருரைச்சுருக்கம்

**மகாஜனக் கல்லூரி நிறுவியவர் நினைவு நாளும் பரிசளிப்பு விழாவும் 24.6.64 ல் தெல்லிப்பழையில் நடைபெற்றது. இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்துறை விரிவுரையாளர் கலாநிதி சு. வித்தியானந்தன் அவர்கள் ஆற்றிய நிறுவியவர் நினைவு நாட் பேருரையின் சுருக்கம் இது.**

*தெல்லிப்பழையும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களையும் கல்வி வளம் படைத்த பகுதிகளாக மாற்றி அதன்மூலம் அப்பகுதி மக்களின் பொருளாதாரத்தை விருத்திசெய்து, பண்பட்ட மக்களை உருப்படுத்திய மகாஜனக் கல்லூரியிலே நிறுவியவர் நினைவு நாளிலே, சிற்றுரை நிகழ்த்த வாய்ப்புக் கிடைத்ததுபற்றிப் பெருமைப் படுகின்றேன். மகாஜனத்தில் ஒருவனாகிய நான், மகாஜனவைப்பற்றிப் பேசுவது பொருத்தமானதே.*

*நிறுவனங்கள் யாவும் மகாஜனங்களுக்குரியன, அவை மகாஜனங்களாலேயே இயங்குகின்றன என்ற சீரிய கொள்கை அமெரிக்க நாட்டிலே தோன்றுவதற்குப் பல்லாண்டுகளுக்கு முன்பே, அக்கருத்து துரையப்பா அவர்களின் உள்ளத்தில் உருப்பெற்றதை எண்ணும்போதே அவருடைய தீர்க்க தரிசனத்தை நாம் பாராட்டாது இருக்கமுடியாது. இக் கல்லூரியின் பெயரே இப்பெரியாரின் இலட்சியத்தை உலகறியச்செய்கின்றது.*

**துரையப்பா சகாப்தம்**

*மகாஜனக் கல்லூரி ஒரு பண்பாட்டுக் கழகம். இக் கல்லூரியின் வளவிலே காலெடுத்துவைக்கும் போதே பண்பாட்டுச்சாலை ஒன்றிற் புகுகின்றோம் என்ற உணர்ச்சி ஏற்படுகின்றது. உயரிய பண்பாட்டின் மறுகாட்சியாக இக்கல்லூரி காட்சியளிக்கின்றது. கலாசாரத்தின் பழைமையைச் சிதைவுறாது பாதுகாத்துப் புதுமையினையும் சேர்த்து, வழி வழியாக வழங்கி வருவதே கல்வியாகும்.*

*இப்பணியைச் செவ்வனே செய்யக்கூடிய சாதனம் கல்லூரியே. கல்வியின் அடிப்படைத் தொழிலையே மகாஜனம் என்ற சொல் குறிக்கின்றது. மகாஜன சகாப்தமாகிய துரையப்பா சகாப்தம், ஆறுமுகநாவலர் சகாப்தத்தின் தொடர்ச்சியேயாம். அக்காலப் பகுதியிலேயே அரசியலிலும் பண்பாட்டுத் துறையிலும் தேசிய உணர்ச்சி தோன்றியது. அக்காலப் பகுதியிலேயே அறிவாளிகளான நடுத்தர வகுப்பினர் தோன்றினர். அவர்கள் தங்கள் சொந்த நாட்டுக்குரியவை யாவற்றையும் புதுமெருகுடன் உயிர்ப்பிக்க ஆவேசத்துடனும் உற்சாகத்துடனும் உழைத்தனர். இம்மறுமலர்ச்சி இயக்கம் பௌத்த இந்துசமய நிறுவனங்களின் முயற்சியாலும், திரு.துரையப்பா போன்ற தனிப்பட்ட சான்றோரின் பணியினாலும் வலுப்பெற்று வளர்ச்சியடைந்தது.*

*பௌத்தசமயச் சங்கம், சைவபரிபாலன சபை போன்ற நிறுவனங்களுக்கு இப்பணி இலகுவாக இருந்தது. ஆனால் நிறுவனப் பலமோ அரசியற் செல்வாக்கோ இல்லாத*

தனிப்பட்ட மனிதனாகிய துரையப்பா அவர்கள் எத்தனையோ இடர்ப்பாடுகளையும் தடைகளையும் எவ்வாறு தகர்தெறிந்து முன்னேறினார்கள் என்பது வியப்பிற்குரியதே.

அக்காலத்து அரசாங்கம் இப்பெரியாரின் முயற்சியை முளையோடு கிள்ளியெறிய முனைந்தது. கல்லூரிக்கு அங்கீகாரம் அளிக்க எட்டு ஆண்டுகளாக மறுத்தது. அரசாங்கம் செய்த அநீதிக்கு அளவேயில்லை. இது போதாதென்று அக்கிராம மக்களே இவரின் முயற்சியைச் சமுதாயத்தோடு நோக்கினர். தனிப்பட்டவர்களின் பொறாமையும் ஒத்துழையாமையும் இடையூறுகளை இன்னும் அதிகரித்தன. சைவ மக்கள் தமக்கென ஒரு இந்துக் கல்லூரி தேவையென்பனை ஏற்க மறுத்த காலமது. மகாஜனக் கல்லூரியிற் பிள்ளைகள் சேராமலிப்பதற்காக மிசனரிமார் அவர்களுக்கு உடுப்பும் உணவும் இலவசக் கல்வியும் அள்ளி வீசிப் போர் தொடுத்த காலம் அது. பலம் வாய்ந்த அவர்களின் நிறுவனங்களின் கூட்டு முயற்சிகளைத் தனி மனிதன் சமாளிக்க முடியாமலிருந்த காலம். இவை யாவற்றிற்கும் மேலாகப் பணக் கஷ்டமே அவரைப் பெரிதும் வருத்தியது. குறைவான சம்பளக் காசைக் கூட மாணவர் ஒழுங்காகக் கொடுக்கவில்லை. இந்நிலையில் ஆசிரியருக்குச் சம்பளம் கொடுப்பதும், கட்டிடங்கள் எழுப்புவதும் எங்ஙனம்? போதாக் குறைவுக்கு கல்லூரி அரசாங்க அங்கீகாரம் பெறுதற்குச் சில மாதங்களுக்கு முன் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால், இருந்த கட்டிடங்களும் அழிந்துபோயின. இத்தகைய இடையூறுகளையும் தாண்டி அவர் தமது நோக்கத்தில் முன்னேறியது ஆச்சரியத்திற்குரியதே.

உறுதிப்பாடு, விடாமுயற்சி, பழமைபேணல், புதுமை தழுவல், காலத்திற்கு அமைய ஒழுகுதல் ஆகியவற்றின் சின்னமாக மகாஜனக் கல்லூரி இன்று விளங்குகின்றது. இக் காலக் கல்விக்குரிய எல்லா அம்சங்களையும் இக்கல்லூரியிற் காணலாம். கலைகள், விஞ்ஞானம், இசை, சமயம், விளையாட்டு, இலக்கிய முயற்சிகள், தொழில் முறைப் போதனை முதலியன இங்கு இடம் பெற்றிருக்கின்றன. வித்தியா பகுதியினர் தொழில் முறைக் கல்வியின் இன்றியமையாமையை உணர்ந்து கொள்வதற்குப் பல்லாண்டுகளுக்கு முன்பே மாணவர் தொழில் முறைக் கல்வி பயில வசதி தேடிக் கொடுத்த பெருமை இவரைச் சாரும்.

நெருப்புக் குச்சு, ஆணி, சவுக்காரம், ஊசி, கண்ணாடி, சீலை இவை செய்யும் மாதிரியைக் கற்றுத் தொழிற்சாலைகளை மாணவர் நிறுவவேண்டுமென்று கனவு கண்டவர் இவர். கைத்தொழில், விவசாயம், வர்த்தகம் ஆகிய மூன்றும் காரணமாகவே எத்தேசத்திலும் செல்வம் கொழிக்கின்றதென்பதனை நன்குணர்ந்தே, இவற்றின் மாணவரை ஊக்க முயன்றனர்.

**வயது ஐம்பத்துநாலு**

கிடுகுக் கொட்டிலில் ஐம்பத்து நான்கு ஆண்டுகளுக்குமுன் தொடங்கிய பள்ளி, இன்று ஈழத்தின் தலைசிறந்த கல்லூரிகள் பத்தில் ஒன்றாகத் திகழ்கின்றது. கடந்த பத்தாண்டாகப் பல்கலைக்கழகத்திற் புகுந்த மாணவர் தொகையைக் கணக்கெடுத்துப் பார்ப்போமாயின், இப் பத்து ஆண்டுகளில் ஆறு மாகாணங்களிலிருந்து இடம் பெற்றவரின் தொகையில் இரண்டு மடங்கு மாணவர் மகாஜனக் கல்லூரியிலிருந்து பல்கலைக்கழகத்திற் பிரவேசித்திருக்கின்றனர் என்ற பேருண்மை பெறப்படும்.

மகாஜனப் பெருமக்களே, நீங்கள் பழமையின் பாதுகாவலர், புதுமையின் முன்னோடிகள், பல சமயங்கள், பல பண்பாடுகள், பல போக்குக்கள் வந்து சந்திக்கும் களமாக நீங்கள் விளங்குகின்றீர்கள். எல்லாச் சமயங்களினதும் சிறந்த பண்புகளை, எல்லாக் கலாசாரத்தினதும் சிறந்த அம்சங்களை உங்களிடம் காண்கின்றோம். காலத்திற்கு காலம் சீரிய கொள்கைகள் உங்களிடம் குடி கொண்டிருப்பதைக் காணுகின்றோம். சிறந்த வைத்தியர்களை, பேர்போன நியாயவாதிகளை, அரசாங்க பரிபாலன அதிகாரிகளை, மதிப்பிற்குரிய அறிஞர்களை, கைதேர்ந்த அரசியல் வாதிகளை, நிறைவுமனம் படைத்த விவசாயிகளை, எல்லாவற்றிலும் மேலாகச் சமரசச் செய்தியை நீங்கள் ஈழத்திருநாட்டிற்கு வழங்கியுள்ளீர்கள். ஈழத்தின் எப்பாகத்திற்குச் சென்றாலும், பிற நாடுகளுக்குச் சென்றாலும், இக் கல்லூரியின் பழைய மாணவர்கள் சகல துறைகளிலும் மேன்மையுடன் திகழ்வதைக் காணலாம்.

எனவே நீங்கள் ஆற்றிய தொண்டிற்கு ஈழம் உங்களுக்குப் பெரிதும் கடமைப் பட்டுள்ளது. ஆனால் எந்த இலட்சியங்களுக்காகத் துரையப்பா அவர்கள் பாடுபட்டாரோ, எந்தக் கொள்கைகளை மகாஜனக் கல்லூரி பரப்ப முயன்றதோ, அவையாவும் இன்று வகுப்புவாதப் பலி பீடத்தில், சமயப் பொறுமை என்ற பலிபீடத்தில், உண்மைத் திரிவு என்ற பலி பீடத்தில் பலியிடப்படுகின்றன. எல்லோரும் நல்லாயிருக்கவேண்டும், இகம் இயன்றது போல் இயங்கவும் வேண்டும், எல்லாம் கவினுறு சமாதனானமாக வேண்டும் என்று நீங்கள் உழைத்து வந்தவை யாவும் அரசியலில் பலியிடப்படுகின்றன. சிந்தனை, சொல், செயல் மூன்றிலும் உண்மை தெரிந்திட நடப்பதுவே பெரும் நன்மை என்ற அவரது பரந்த நோக்கம் இன்று காற்றிலே பறந்து விட்டது. உண்மைக்கு மதிப்பில்லை, உண்மையைத் திரித்துச் செல்வாக்குப் பெறுவதையே நாம் காணுகின்றோம்.

இன்று உயர்தர கல்விகற்று பல்கலைக் கழகப் பட்டமும் பெற்றிருக்கும் தமிழ் இளைஞரின் நிலை கவலைக்குரியது. கடந்த சில ஆண்டுகளாகக் கலைமாணிப் பட்டங்களோடு இலங்கைப் பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறிய தமிழ் இளைஞரின் நிலை கவலைக்குரியது. கடந்த சில ஆண்டுகளாகக் கலைமாணிப்பட்டங்களோடு இலங்கைப் பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறிய தமிழ் இளைஞர்களுக்கு இன்னும் உத்தியோகம் கிடைக்கவில்லை. சென்ற ஆண்டு பல்கலைக் கழகத்தில் விஞ்ஞானப்பட்டம் பெற்றவர்களிற்கூடப் பலர் இன்னும் தெருத்தெருவாக வேலை தேடி அலைகின்றனர். பயணப் பணமும் விணாகிக் கவலை ததும்பும் முகத்துடன், குனிந்த தலையுடன், ஏமாற்றமும் ஏக்கமுமே தஞ்சமாகத் திரியும். இவர்களின் கதியென்ன? இது மிக மோசமான நிலையல்லவா, இவற்றைப் பற்றிச் சிந்திப்பார் யார்? உள்ளம் ஒடுங்கி, உற்சாகம் ஒழிந்து, தன்னம்பிக்கையற்று வாழ்க்கையில் வெறுப்புக் கொண்டிருக்கும் இளைஞரின் தொகை நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது.

**விழிப்பு அவசியம்**

எனவே, நாம் விழிப்பாக இருத்தல் வேண்டும். நடப்பது நடக்கட்டும் என்ற மலட்டு வேதாந்தம் வேண்டாம், அது மகாஜனத்தின் இலட்சியங்களுக்கு மாறானது. எந்த இன்னலையும், எந்த எதிர்ப்பையும் தளராத மன உறுதியினால், உரிய இலட்சியங்களினால் உண்மையைக் கடைப்பிடிப்பதனால், சமய நம்பிக்கையினால், கூட்டு முயற்சியால் தகர்த்தெறிய முடியுமென்பதைக் காட்டியவர் துரையப்பா அவர்கள். அவரை ஒரு கூட்டு

மேதாவி எனலாம். எமது நாட்டுப் பழக்க வழக்கங்கள், சமய வழிபாட்டு முறைகள் பேணப்பட வேண்டும், செந்தமிழும் வேண்டும் ஆங்கிலமும் வேண்டும், எல்லோரும் நல்லாயிருக்க வேண்டுமென்ற பரந்த கருத்துக்களைப் பரப்பியவர் அவர். அன்னாருடைய தொண்டு தெல்லிப்பழைக்கு, யாழ்ப்பாணத்திற்கு, தமிழினத்திற்கு, எல்லாமவற்றிலும் மேலாக உலகிலுள்ள இனம் யாவற்றிற்கும் முன்மாதிரியாக அமைந்திருக்கின்றது.

மொழி இரவல், உத்தியோகம் இரவல், உடை இரவல், பழக்கவழக்கம் இரவலென்று வேஷம் போட்டு நடனஞ் செய்யும் போலியர் வேடிக்கை போல எமது வாழ்க்கை அமைந்துவிட்டது. ஒவ்வொரு மனிதனும் தன் சொந்தக் கால்தனில் ஓங்கி நிலைத்திடலே உதிசம் எனத் துரையப்பாபிள்ளை கூறுவன முற்றிலும் உண்மை. அவர் தமது இலட்சியங்களுக்காக மேற்கொண்ட அறிவியற் கல்வியும் திடமான பொருளாதாரக் கொள்கையும், தேசிய உணர்வும், உயரிய குறிக்கோளும், மான உணர்ச்சியும், மன உறுதியும் தமிழ் பேசும் மக்களை இன்று எதிர்நோக்கி நிற்கும் பிரச்சினைகளைத் தீர்க்கவும் உறுதுணையாய் அமையும். இவ்விலட்சியங்களை நீங்களும் கடைப்பிடித்து, அறிவு படைத்த பண்பாடான தமிழ் இனத்தை, பிறர் மதிக்கக்கூடிய தமிழ் இனத்தை, மானத்துடன் வாழும் தமிழ் இனத்தை உருவாக்குவீர்களாக!

தினகரன் 1964 ஜீலை 2 வியாழக்கிழமை

45

# நாடகமேடையில் 65 ஆண்டுகள்

**கலையுலகிலே தொடர்ந்து 65 ஆண்டுகளாகத் தமக்கு ஒப்பாரும் மிக்காருமம் இல்லாது விளங்கும் பெருமை கலையரசு சொர்ணலிங்கம் அவர்களுக்குரியது. 1910ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ம் நாள் அரிச்சந்திரன் நாடகத்தில் லோகதாசனாக நடித்த கலையரசு சொர்ணலிங்கம் அவர்கள் இன்று 65 ஆண்டுகள் மேடையேறிய சாதனையை நிலைநாட்டிவிட்டார். எழுபத்தெட்டாவது வயதிலும் நாடக மேடையிலே தோன்றி நாடக அபிமானிகளின் புகழ் மாலையைப் பெற்றபேறு இருவருக்குண்டு.**

*இரு கிழமைகளுக்கு முன் கொழும்பிற் கலைக்கழத் தமிழ் நாடகக் குழுவின் நாடகவிழா நடைபெற்றது. அவ்விழாவில் இடம் பெற்ற நாடகங்களைத் தொடர்ந்து நான்கு நாட்களாகப் பார்த்த சில பேரிற் கலையரசும் ஒருவராவார். நாடகம் பார்க்க அழைப்பிதழ் அனுப்புவோருக்கு நாடகம் பார்க்க மோட்டார் வண்டிச் செலவும் கொடுத்தால் தான் வந்து பார்ப்பார்கள்! இத்தகையதொரு சூழ்நிலையிலே யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு வந்து நான்கு நாட்களாகத் தொடர்ந்து கலையரசு நாடகங்களைப் பார்த்தாரென்றால், அவரை நாடகப் பித்தன் என்று கூறுவதேயொழிய வேறென்னென்று குறிப்பிடுவது.*

**சீலமும் வாய்மையும்**

*இதுமட்டுமன்று; அவ்விழாவில் இடம் பெற்ற நாடகங்கள் முடிந்தபின், திரைக்குப் பின்னாற் சென்று, நன்றாக நடித்தவர்களைப் பாராட்டியும், சிறப்பாக அமையாத நாடகங்களின் குறைபாடுகளைப் பண்போடு சுட்டிக்காட்டியும் வந்ததைப் பலர் அவதானித்திருக்கலாம். உயரிய சீலமும் வாய்மையும் படைத்த இப்பெருந்தகையின் ஒழுக்கமும் நடத்தையும் பிற கலைஞரிடம் காணமுடியாதவை.*

*கடந்த சில ஆண்டுகளாகக் கலைக் கழகம் நடத்திய பாடசாலைகளுக்கான நாடகப் போட்டிகளிலும் நாடகமன்றப் போட்டிகளிலும் இவர் ஆற்றிய தொண்டு அளப்பரியது. யாழ்ப்பாணப் பிரதேசப் போட்டியிற் கலந்து கொண்ட பாடசாலை நாடகங்களையும் நாடக மன்றங்களின் நாடகங்களையும் நேரிற் சென்று பார்த்து மதிப்பிடுவதில் இவர் பெருந்துணையாக இருந்தார். முல்லைத்தீவு வரை பல இடங்களுக்குச் சென்று நாடகங்களைப் பார்த்திருக்கின்றார். பாஷையூர் போன்ற இடங்களில் இரவு 8 மணி தொடக்கம் விடியும்வரை நாடகங்கள் பார்த்திருக்கின்றார். பொறுமையாகவும் அனுதாபத்துடனும் கலையரசு நடந்து கொண்டதை நாம் அறிவோம். நாடகக் கலைக்காக இப்பொழுது இவர் செய்யும் இப்பணிகள் பலர் அறியாதவை. ஆனால் விளம்பரமில்லாது அடக்கமாக இப்பெரியார் நாள்தோறும் நாடகக் கலைக்கு ஆற்றும் பணி மகத்தானது.*

**நூல் வடிவில்**

*ஆங்கில மோகத்தாலே தாய் மொழியிற் பேசுவது கூடக் கௌரவக் குறைவு என்று கருதப்பட்ட காலத்தில் நாடக மேடையின் மூலம் தமிழ்மொழி வளர்த்த பெரியார் இவர்.*

*நாடகத்திற்கு ஏற்பட்டிருந்த மாசைப்போக்கிப் படித்தவர்களை நாடக மேடையிலேற்றி நாடகக் கலையை ஒரு தூய கலையாகப் பேணி வளர்த்த கலைஞர் இவர். இவை யாவும் பழைய வரலாற்றுகள்; பெருஞ்சாதனைகள். ஆனால் இவையாவற்றிலும் மகத்தானது தொடர்ந்து **65** ஆண்டுகளாக நாடக மேடையிலேதோன்றி அப்புனித கலையை வளர்த்த தொண்டு.*

*இவரது **65** ஆண்டு நாடக மேடை அனுபவங்கள் விரைவில் நூல் வடிவில் வெளிவர இருக்கின்றன. அம் முயற்சி **1967**ம் ஆண்டின் முற்பகுதியிற் கைகூடுமென எதிர்பார்க்கின்றோம். அதற்குத் தமிழ் நாடக அபிமானிகளின் ஆதரவு நிரம்ப வேண்டும்.*

*நாடக மேடையில் **65** ஆண்டுகள் நிறைவுபெற்ற கலையரசின் வரலாறு, உழைப்பால் உயர்ந்த, ஊக்கத்தால் ஆக்கம் பெற்ற, ஒழுக்கத்தால் வலுப்பெற்ற, கட்டுப்பாட்டால் நிலைபெற்ற, நலியாத உணர்ச்சியால் நலம் சிறந்த, வற்றாத நாடகப்பற்றால் வாழ்வு கொண்ட இன்ப வரலாறாகும்.*

*தலை நிமிர்ந்து, கண்டோர் வியந்திடத் தன்னேரில்லாது தழைத்தோங்கி நிற்கும் கலையரசு சொர்ணலிங்கம் அவர்களின் நூறாவது ஆண்டு நாடக மேடை வரலாற்றினை எடுத்துக்கூறும் பேற்றை எமக்கு அளிக்க வேண்டுமெனக் கலைகளுக்கெல்லாம் மூலமான ஆடவல்லானை இறைஞ்சுகின்றோம்.*

தினகரன் 1966 டிசெம்பர் 21 சனிக்கிழமை

## 46

# தமிழ்க்கிராமியக் கலைமன்றம் உடனே நிறுவப்பட வேண்டும்

### உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் கலாநிதி சு. வித்தியானந்தன் வற்புறுத்தல்

**தமிழ் மக்கள் வளர்த்த அழகுக் கிராமியக் கலைகளைப் பேணிக் காப்பதற்கும், அவற்றைப் பற்றி ஆராய்ச்சி நடாத்துவதற்கும், அவ்வாராய்ச்சிகளை ஒருமுகப்படுத்திப் பயன் அடைவதற்கும் 'தமிழக் கிராமியக் கலைமன்றம்' என ஒருநிறுவனம் உடனடியாக நிறுவப்படவேண்டும்" எனக் கலாநிதி சு. வித்தியானந்தன் அவர்கள் இரண்டாவது தமிழாராய்ச்சி மகாநாட்டில், 8.1.68இல் படித்த ஆராய்ச்சிக் கட்டுரையின் இறுதியில், வேண்டுகொள் விடுத்தார்.**

*அவர் படித்த ஆராய்ச்சிக் கட்டுரையின் சுருக்கம் பின்வருமாறு:*

*'ஈழத்துத் தமிழருக்குச் சிறப்பாக உரிய இரு நாட்டுக் கூத்து முறைகள்' என்பதே எமது ஆராய்ச்சிக் கட்டுரையின் பொருளாகும். 'பாடுபடுபவர்க்கே இப்பாரிடம் சொந்தமையா" என்றார் கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை, இடையறாது பாடுபட்டுப் பிறர் வாழத் தாம் வாழ்பவர் கிராமிய மக்கள், அவர்கள் வளர்த்த அழகுக் கலையே நாட்டுக்கூத்து, இது பல்லாயிரக் கணக்கான பொது மக்களின் சொத்து.*

**நாட்டுக்கூத்து**

*இந்நாட்டுக்கூத்து தென்னகத்திலே மறைந்து கொண்டு போகின்றது. ஆனால் ஈழத்திலே இன்று மறுமலர்ச்சி பெற்று, பல்கலைக்கழக மாணவர் மாணவிகளும் பட்டதாரிகளும் ஆடுமளவிற்கு உயிர்த்துடிப்புடன் விளங்குகின்றது. இந்நாட்டுக் கூத்து, ஈழத்திலே, வடமோடி தென்மோடி என இரு கூத்து முறையிற் பேணி வளர்க்கப்பட்டு வருகின்றது. கதை , இசை, ஆட்டம், உடை தாளக் கட்டு முதலியவற்றில் தென்மோடிக்கும் வடமோடிக்கும் வித்தியாசங்கள் உண்டு. இவ் வேறுபாடுகளை இவ்வாராய்ச்சிக் கட்டுரையின் முதற்பகுதி விளக்குகின்றது.*


*நாட்டுக் கூத்துக்களில் ஆடப்படும் ஆட்டங்களுக்கு அச்சாணியாக அமைந்திருப்பது தாளக்கட்டு. கிராமியக் கூத்துக்களின் அடிச்சரடாக விளங்கும் இத்தாளக்கட்டுக்கள் வடமொழிக்கும் தென்மொழிக்கும் வேறுபட்டவை என்பதையும் ஒவ்வொரு மொழிக்குரிய தாளக்கட்டுகளுக்குரிய வெவ்வேறான ஆட்டங்கள் எவை என்பதையும் இக்கட்டுரை விளக்குகின்றது.*

*ஈழத்துச் சிங்கள மக்களிடையே வழங்கும் 'நாடகம' என்ற கூத்துமுறை ஈழத்துத் தமிழரின் நாட்டுக்கூத்திலிருந்தே தோன்றியது என்பதனையும், அவர்களின் கூத்துக்குரிய இசை, யாப்பு, மொழி, கதைப்பொருள், ஆட்டம் முதலியன தமிழிலிருந்தே பெறப்பட்டவை என்பதனையும், தென்னகத்தே வழங்கும் தெருக்கூத்து, கதகளி, யக்சகான போன்றவற்றிற்கும் ஈழத்து நாட்டுக்கூத்து முறைகளுக்கும் மேடை அமைப்பு, ஒப்பனை, தயாரிப்பு போன்ற துறைகளில் ஒற்றுமை காணப்படுகின்றது என்பதனையும், அவ்வாறு*

ஒப்புமை காணப்பட்டபோதும் ஆட்டம், இசை, தாளக்கட்டு ஆகியவற்றில் ஈழத்துத் தமிழரின் நாட்டுக்கூத்துக்கள் தமக்கே உரிய சிறப்பு முறைகளைப் பெற்றுவிளங்குகின்றன என்பதனையும் இவ்வாராய்ச்சிக் கட்டுரை ஆதாரங்களுடன் அத்தாட்சிப்படுத்துகின்றது.

தமிழ் பேசும் மக்களிடையே வழங்கும் கூத்துமுறைகளை ஒப்பிட்டு ஆராய இக்கட்டுரை ஆராய்ச்சியாளர் பெருமக்களைத் தூண்டுமென எதிர்பார்க்கின்றோம். அத்துடன் தமிழர் வளர்த்த பலவகைப்பட்ட கிராமியக்கலைகளை, கிராமிய நாடகம், கிராமியப்பாடல்கள், கிராமிய நடனம், கிராமிய இசை, கிராமியக் கதைகள் முதலியவற்றைப் பேணிவளர்க்கவும், அவற்றைப் பற்றி முறையான ஆராய்ச்சி செய்யவும், செய்யும் ஆராய்ச்சிகளை ஒருமுகப்படுத்திப் பயனடையவும் 'தமிழ்க் கிராமியக் கலைமன்றம்' (Tamil) Folk Arts socity) என ஒரு நிறுவனத்தை உடனடியாக நிறுவவேண்டுமென இச்சந்தர்ப்பத்தில் வேண்டுகோள்விடுகின்றேன்.

தினகரன் வாரமஞ்சரி 1968 ஜனவரி 14 ஞாயிற்றுக்கிழமை



பேராசிரியர் சு. வித்தியானந்தனின் கையொப்பங்கள்

47

# என்னை ஆளாக்கிய பெருமான் பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை

**என்னை ஆளாக்கிய பெருமான், என் சிந்தனையினின்றும் என்றும் அகலாத அருளாளன், எனது வாழ்க்கையின் முக்கிய கட்டங்களில் எனக்கு வழி காட்டிய செம்மல், என்னிடம் தனிப்பற்றும் வாரப்பாடும் கொண்ட குரு, ஈழத் திருநாட்டின் விலை மதிக்க முடியாத தமிழ்த் தொண்டன் பேராசான் கணபதிப்பிள்ளையவர்கள் சித்திரைப் பறுவத்தில் இறைவன் திருவடிகளைச் சரணடைந்த அன்றிரவு 27 ஆண்டு நிகழ்ச்சிகள் என் உள்ளத்தில் காட்சியளித்தன. பேராசானைப்பற்றி நினைப்பது என்னைப்பற்றி நினைப்பதேயாகும்.**

*1941- ம் ஆண்டிற் பல்கலைக்கழகத்தில் நான் மாணவனாகச் சேர்ந்த காலந்தொட்டு அவர் மறையுங்காலம் வரையுள்ள எனது வாழ்க்கை வரலாற்றில் அவருக்குப் பெரும் பாகமுண்டு. தமிழைச் சிறப்புப் பாடமாகச் செய்யவைத்து, பல்கலைக்கழகத்துக்கு வெளியே போகவிடாது, அங்கேயே விரிவுரையாளராக நியமித்து, விரிவுரையாற்றப் பழக்கி, ஆராய்ச்சியில் வழி நடத்தி, திருமணத்தைத் தலைமைதாங்கி நடத்திவைத்து, திருமணத்தின்பின் குடியிருக்கத் தனி வீட்டைத் தந்து, 'புறொபெசர் மாமா' என்று இன்றும் எனது பிள்ளைகள் வாரப்பாட்டுடன் கொண்டாடும் அளவிற்கு அவர்களிடம் அன்போடு பழகி, எனது இன்ப துன்பங்களிற் பங்குகொண்ட என் குருவைப் பற்றி எழுதும் பொழுது என்னைப்பற்றியும் எழுதாமல் இருக்க முடியாது. உடல் அளவிற் பிரிந்துவிட்டாலும் என்னிடமிருந்து அவரைப் பிரிக்க முடியாது.*

**பேராசிரியர் அளித்த ஊக்கம்**

*1941 – ம் ஆண்டு இலங்கைப் பல்கலைக்கழகம் உருவாகிய போது அதன் முதல் மாணவராகச் சேர்ந்தவருள் நானும் ஒருவன். ஆங்கில மோகமும் மேனாட்டு நாகரிகத் தாக்கமும் ஆதிக்கஞ் செலுத்திய காலம் அது, ஆங்கிலம், இலத்தீன், வரலாறு ஆகிய பாடங்களுடன் தமிழையும் ஒரு பாடமாகப் படித்தேன். அப்பொழுதுதான் பேராசிரியர் செல்வநாயகம் அவர்கள் தமிழ்த்துறை விரிவுரையாளராக நியமனம் பெற்றார். பேராசிரியர் கணபதிப்பிள்ளையவர்கள் தமிழ்த்துறைத் தலைவராக இருந்தார். இருவரும் தமிழ் கற்றுக்கொடுத்தார்கள். முதலாண்டு வகுப்பில் 7,8 பேர்தான் தமிழ் படிக்கும் மாணவர் முதலாண்டுத் தேர்வு முடிந்ததும், என்ன படிப்பது என்பது பிரச்சினையாக இருந்தது. பேராசிரியர் அவர்கள் தமிழ்ச் சிறப்புத் தேர்வு வகுப்பிற் சேர்ந்து படிக்கும்படி தூண்டினார்.*



*எனக்கு முதலிலே துணிவு வரவில்லை. எனது தகப்பனாரும் அதனையே விரும்பினார். எனவே, தமிழ்ச் சிறப்பு வகுப்பிற் சேர்ந்தேன். நண்பர்கள் கேலி செய்தார்கள். "பனங்கொட்டையான் பேயன்; வேறொரு பாடமும் இல்லாது தமிழ் படிக்கிறான்" என்று பலர் தூற்றினார்கள்*

*(அவர்கள் இன்று தமிழிற் பேச முயலுகின்றார்கள்) திருமதி மகேஸ்வரி பாலகிருஷ்ணனும், ஒ.ஏ.விஸ்வலிங்கம் அவர்களின் மகன் மகேந்திரன் (வவுனியாக் கூட்றவுப் பகுதித் துணை ஆணையாளர்) உடன் பயின்றனர். பேராசிரியர் தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்களைப் படிப்பித்தார். பேராசிரியர் செல்வநாயகம் இலக்கிய வரலாறு, இலக்கியம் முதலியவற்றைக் கற்றுக் கொடுத்தார். கலைமாணிப் பட்டமும் கிடைத்தது.*

*அந்நேரம் தகப்பனார் இறந்துவிட்டார். சிவில் சேவை உத்தியோகத்திற்குரிய தேர்வு எழுதுவதற்கு வயது குறைவு. குடும்பப் பாரத்தினால் மேலே படிப்பதும் பொறுப்பாக இருந்தது. ஆனால் பேராசிரியர் அவர்களும், முதற்றமிழ்ப் பேராசிரியராக நியமனம் பெற்றிருந்த உயர்திரு.விபுலானந்த அடிகளும் மேலே படிக்கும்படி தூண்டினர். முதுமாணிப் பட்டமும் ஈராண்டிற் கிடைத்தது. அதன் பின் விரிவுரையாளராக நியமனம் பெற்று இதுவரை தமிழ்த்துறையிற் கடமையாற்றி வருகின்றேன்.*

**24 ஆண்டுகளாகத் தமிழ்த்துறைத் தலைவர்**

*இந்த வரலாற்றைக் கூறுவதன் நோக்கம் பேராசிரியர் கணபதிப்பிள்ளை பல்கலைக்கழகத்திற் செய்த பணியை மதிப்பிடுவதற்காகும். இலங்கைப் பல்கலைக்கழகத்திற்கு இப்பொழுது வயது 27. இந்தக் கால எல்லையில், 24 ஆண்டுகளாக,(பல்கலைக்கழகம், பல்கலைக்கழகக் கல்லூரியாக இருந்த காலத்தையும் சேர்த்தால் 38 ஆண்டுகளாக) இங்கு தமிழ்த் துறைத் தலைவராக இருந்து தமிழுக்கும் தமிழ் இனத்திற்கும் செய்த தொண்டினை மதிப்பிட எனது பல்கலைக்கழக வரலாறும் துணையாக இருக்கின்றது.*

*நாம் படித்த காலத்திற் பல்கலைக்கழகத்திலே தமிழ் படித்தவர் மிகக் குறைவு. பொதுக்கலை வகுப்பில் ஆறு ஏழு பேரும், சிறப்புக் கலை வகுப்பில் ஒருவர் அல்லது இருவரே கற்று வந்தனர். பொதுக் கலை வகுப்பிற் பலருக்குத் தமிழ் பேச வராது. எழுத்துக் கூட்டிப் படிப்பிக்க வேண்டும். இத்தகைய சூழலிலே தமிழ்ப்பணியைத் தொடங்கித் தமது இறுதிக் காலத்தில் ஒலிபெருக்கியிற் பல நூற்றுக்கணக்கானவருக்குத் தமிழ் கற்பிக்கும் அளவிற்குத் தமிழ்த்துறையை வளர்த்துவிட்டுச் சென்றிருக்கின்றார். தமிழையும் தமிழ் படிக்கின்றவரையும் இகழ்ந்துவந்த காலத்திலே தமிழ்த்துறையை உயிர்த் துடிப்புடன் இயங்கச் செய்த பெருமை அவருக்கே உரியது.*

*தமிழ்த் துறை தலைவராகக் கடமை ஏற்றபோது இலண்டன் பல்கலைக்கழகத்திலே தமிழ்ச் சிறப்புக் கலைத்தேர்வினைத் தொடங்கும்படி அப்பல்கலைக்கழகத்தினரைத் தூண்டினார். அவரின் முயற்சியால் இலண்டன் பல்கலைக்கழகத்திலே தமிழ்ச் சிறப்புக் கலைத்தேர்வு ஏற்படுத்தப்பட்டு, முதலாவதாக நடந்த தேர்வில் இவரிடம் கற்ற திருமதி மகேஸ்வரி மகாதேவா முதலாம் வகுப்பிலே தேர்ச்சியடைந்தார். அதன் பின்னர் இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரி 1941ம் ஆண்டில் இலங்கைப் பல்கலைக்கழகமாக மாறியபோது, தமிழ்ப் பொதுக்கலைத்தேர்வுக்கும் சிறப்புக் கலைத்தேர்வுக்குமுரிய பாடத்திட்டங்கள் வகுத்தமைத்தார். தமிழில் முதுமாணித் தேர்வினையும் தொடக்கி வைத்தார்.*

*1944-ம் ஆண்டில் இலங்கைப்பல்கலைக்கழக முதற்றமிழ் பேராசிரியராக உயர்திரு. விபுலானந்த அடிகளை நியமித்தனர். பேராசிரியர் கணபதிப்பிள்ளை அண்ணாமலையில்*

விபுலானந்த அடிகளிடம் படித்தவர். பேராசிரியர் கணபதிப்பிள்ளை அவர்களிடம் விபுலானந்த அடிகளுக்குப் பெருமதிப்பிருந்தது. இதனாலே, தான் பேராசிரியராக இருந்தபோதும், தமிழ்த்துறையை நடத்தும் பொறுப்பினைப் பேராசிரியர் கணபதிப்பிள்ளையிடம் ஒப்படைத்துவிட்டார்.

**விபுலானந்த அடிகள் வெளியிட்ட கருத்து**

இந்தக் காலப் பகுதியிலே தான் பல்கலைக்கழகத்தில் வித்துவான் வகுப்புக்கள் தொடங்கப்பட்டன. இவ்வகுப்புக்களுக்குரிய பாடத்திட்டங்களையும் பேராசிரியர் கணபதிப்பிள்ளை அவர்களே வகுத்துக் கொடுத்தார். அப்பொழுது, நானும் விரிவுரையாளராகக் கடமை பார்த்து வந்தேன். அந்த வித்துவான் வகுப்புகளிற் படித்துத் தேர்ச்சியடைந்தவர்கள் பலர் - வித்துவான் எப். எக்ஸ்.ஸி. நடராசா, வித்துவான் க.செ. நடராசா போன்றவர்கள் இன்று அரசாங்கத்தில் அப்பட்டத்தின் துணைகொண்டு உயரிய பதவிகளிலிருக்கின்றார்கள்.

உயர் திரு. விபுலானந்த அடிகள் இலங்கைப் பல்கலைக்கழகத்திற்கு வந்தபின் நோய்வாய்பட்டிருந்தார். கணபதிப்பிள்ளை அவர்களையே முதற் தமிழ்ப் பேராசிரியராக நியமித்திருக்கலாம் என்று அவர் பலதடவை கூறியதுண்டு. நோய்வாய்பப்பட்ட அடிகளார் 1947-ம் ஆண்டில் இறந்ததும், அவ்வாண்டிலேயே கணபதிப்பிள்ளை அவர்கள் தமிழ்ப் பேராசிரியராக நியமிக்கப்பட்டார். தொடர்ந்து பதினெட்டு ஆண்டுளாகத் தமிழ் போசிரியராகக் கடமையாற்றித் தமிழ்த்துறையைப் பல வகையில் விருத்தி செய்திருக்கின்றார். இலங்கைப் பல்கலைக்கழகத்திலும் கொழும்பு பல்கலைக் கழகத்திலும் தமிழ் விரிவுரையாளராகக் கடமையாற்றுவோரை உருப்படுத்தியவர் அவரே, அவர் காலத்தில் முதுமாணிப்பட்டம் பெற்றவரும் பலர். இலங்கைப் பல்கலைகழகத்திலே தமிழிற் கலாநிதிப்பட்டம் பெற்றவர் ஒருவரே யாவர். அவரை ஆளாக்கிய சிறப்பும் பேராசானுக்குரியது. இன்னும் சில காலம் கழிந்த பின்பே இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை வளர்ச்சியில் அவருக்குரிய பங்கினை மக்கள் செம்மையாக உணர்வர்.

**இயல் இசை நாடகத் துறைகளில் சேவை**

பல்கலைக்கழகத்திற் கல்வி அறிவு அளிப்பதோடு அமையாது, மாணவர்களை இயல், இசை நாடகத் துறைகளில் ஈடுபடச் செய்த பெருமையும் அவருக்குண்டு. இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கத்திற்கு இப்போது வயது நாற்பத்து மூன்று. இதனைச் தொடக்கி வைத்தவர் பேராசிரியர் சுந்தரலிங்கம் அவர்கள், பல்கலைக்கழகத்திலுள்ள மிகப் பழைய மாணவர் சங்கம் இது. தொடர்ச்சியாக உயிர்த் துடிப்புடன் இயங்கும் சங்கம் இதுவொன்றேயாகும். இவ்வாறு இயங்கச் செய்தவர் பேராசிரியர் கணபதிப்பிள்ளை அவர்களே, 29 ஆண்டுகளாக அதன் பெருந்தலைவராக இருந்து அதனை வழிநடத்தி வந்திருக்கின்றார். தொடக்கத்திலே ஆண்டுக்கொரு நாடகம் நடிப்பதும், கலை நிகழ்ச்சிகளுடன் தேநீர் விருந்து அளிப்பதுமே தமிழ்ச்சங்கத்தின் கலைநிகழ்ச்சிகளாக இருந்தன. தமிழ்ச் சங்கத்தினர் நடிப்பதற்கு இவர் பல நாடகங்களை எழுதி உதவினார். அவை பற்றிப் பின்பு குறிப்பிடுவோம். கடந்த பல ஆண்டுகளாகத் தமிழ்ச்சங்கத்தைப் பல துறைகளிற் பணியாற்றச் செய்தவர் பேராசிரியர் அவர்களே. தமிழ்ச் சங்கம் ஆண்டு தோறும் நடத்தும் இலக்கியக் கலைவிழாக்கள் நல்ல முறையில் அமையத் திட்டம் வகுத்து, ஆண்டுதோறும் தமிழ்ச் சங்கக் கொடியை ஏற்றித் தலைமையுரை நிகழ்த்திப்

பரிசில்கள் வழங்கித் தமிழ்ச்சங்கத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்திருக்கின்றார்.

இவர் செய்த இன்னொரு சிறப்புத் தொண்டு, தமிழ்ச் சங்க ஏடாகிய இளங்கதிரைத் தொடக்கி வைத்து, இதுவரை அதனைத் தொடர்ந்து நடத்த உதவி செய்தமையாகும். இளங்கதிர் 1948ம் ஆண்டு திரு. த. சண்முகசுந்தரம் அவர்களை முதல் இதழ் ஆசிரியராகக் கொண்டு வெளிவந்தது. ஈழத்திலே வெளிவரும் தரமான இலக்கிய சஞ்சிகை இது. இவ்வாறு பேராசிரியர் கணபதிப்பிள்ளை அவர்களின் பெருந் தலைமையிலே தமிழ்ச் சங்கம் தமிழ் இலக்கியத்தையும் தமிழ்ப் பண்பாட்டையும் பேணி வளர்க்கும் சங்கமாகப் புகழுடன் விளங்கிற்று.

மாணவரிடையே தமிழ் இனப் பற்றையும் மொழிப் பற்றையும் வளர்க்கப் பெரிதும் முயன்றார் பேராசான். இறுதி வருட மாணவருக்குத் தாம் ஆண்டு தோறும் அளிக்கும் தேநீர் விருந்துகளிலே தமது உரையில் இவ்வளர்ச்சிக்குரிய வழிகள் பற்றிப் பேசுவார். ஓராண்டு சுதந்திர தினத்தைத் துக்க தினமாகக் கொண்டாடியபோது, தமிழ்ச் சங்கத்தினர் கண்டியிலுள்ள கட்டுக்கலைப் பிள்ளையார் கோயிலில் மௌனமாக உண்ணாவிரதம் மேற்கொண்டனர். பல்கலைக்கழக அதிகாரிகளின் மிரட்டலுக்கு அஞ்சாது பேராசான் தாமும் கலந்து கொண்டனர். அவர் எழுதிய சங்கிலி என்னும் நாடகத்தில் அவர் கூறியவை இவரின் மனக்கிடக்கையைப் படம் பிடிக்கின்றன. ஓரிடத்தில் கூறுகிறார் "தமிழன் வீர பரம்பரையிலே தோன்றியவன். அச்சம் என்பதை அறியான். போர் என்றால் தோள் புடைத்துக் களித்து நிற்பான். ஆனால், தம் நலம் கருதி யாரையாவது பின்சென்று தொழுது நிற்கும் துரோகிகளாலேயே தமிழனுக்குக் கேடு ஏற்பட்டது" அரசியற் பிரச்சினைகளை மையக் கருவாகக் கொண்டு எழுதப்பட்ட 'தவறான எண்ண'மும், 'துரோகிகள்' ஆகிய இரு நாடகங்கள் தமிழ்ச் சமுதாயத்தின் நலனைப் பற்றி அவர் சிந்தித்தவற்றை எமக்குக் காட்டுகின்றன.

**நாடக அரங்கில் பேச்சு மொழி**

அவரின் சமூக நாடகங்களைப் பார்த்தவர்கள் அவரைத் தமிழ்நாட்டு மோலியர் என்று புகழ்ந்தனர். சமூகத்திலேயுள்ள பாசாங்குகளையும் ஒழுக்கக்கோடுகளையும் பிரச்சினைகளையும் நாடகம் மூலம் அவரைப் போல வேறு ஒருவரும் சிறப்பாக வெளியிடவில்லை. நாடகங்களைப் பற்றிக் குறிப்பிடும்போது பேராசானின் பிறிதொரு தொண்டினையும் சுட்டிக்காட்ட வேண்டும். நாடக அரங்கில் பேச்சு மொழியை உரையாடலுக்கு வழங்கலாமா என்று ஐயம் தோன்றிய காலத்திலே, மக்களைப் பற்றி மக்களுக்காக ஆக்கப்படும் நாடகங்களில் மக்கள் பேசும் மொழி கையாளப்பட வேண்டும் என்பதை 'நானாடகம்', 'சுந்தரம் எங்கே' போன்ற நாடகங்கள் மூலம் நிலைநாட்டியவர் அவரேயாவர். பேச்சு வழங்குத் தமிழைக் கையாளுவதில் அவருக்கு நேரானவர் வேறு எவரும் இல்லை. அவரே கூறுவார். "உலகத்திலே நடப்பதை அரங்கிற் காட்டுவதே நாடகம்; எனவே நாடகத்தில் வரும் பாத்திரங்கள் பேசும் மொழியும் உலக வழக்கிற் பேசும் மொழியாக இருத்தல் வேண்டும்" அவர் இயற்றிய இந்நாடகங்கள் ஒலியியற் பயிற்சிக்குப் பெரிதும் பயன்படுபவை. உலகத்தின் பல பாகத்திலுள்ள ஆராய்ச்சியாளர் அவரது நாடக நூல்களைத் தமது ஒலியியல் ஆராய்ச்சிக்குப் பயன்படுத்துகின்றனர்.

அவரிடம் காணப்படும் இன்னொரு பண்பை அவர் எழுதிய நாடக நூல்கள் காட்டுகின்றன. பெரும்பாலான நாடக நூல்கள் பேச்சுத் தமிழில் எழுதப்பட்ட

போதும், 'சங்கிலி', 'துரோகிகள்' என்னும் இரு நூல்கள் செந்தமிழில் எழுதப்பட்டவை. பழைமையைப் பேணியும் புதுமையை நாடியும் அவர் இருந்தமையை இது காட்டுகின்றது. அவர் பழைய யாப்பு முறைகளிற் செய்யுள் இயற்றியதும், புதிய இலக்கிய வகையாகிய நாவல்கள் எழுதியதும் இதே பண்பை வற்புறுத்துகின்றன.

கிராமிய வாழ்க்கையிலும், கிராமியக் கலைகளிலும் கிராமிய வழிபாட்டு முறைகளிலும் அவருக்கு அதிக ஈடுபாடிருந்தது. பல கட்டுரைகளிற் பழைய பழக்க வழக்கங்கள், உடைகள், உணவுகள், கலைகள், கிராமிய வழிபாட்டு முறைகள் முதலியவற்றைப் பற்றி எழுதியிருக்கிறார்கள். இவற்றைப் பற்றி அவரோடு உரையாடுவது தனியின்பம். அவரின் தொடர்பாலேயே நாட்டுக் கூத்திலும், கிராமிய நடனங்களிலும் எமக்கு ஈடுபாடு ஏற்பட்டது. கிராமியப் பண்பாட்டுக் கவர்ச்சியினாலேதான் அவர் சாதாரண மக்களுடன் தொடர்பு கொள்வதைப் பெரும் பேறாகக் கருதினார். றிக்சோக்காரக் காளிமுத்து கடைசிவரை அவரோடேயே இருந்தார். வெற்றிலைக்கடை, சுருட்டுக்கடை, சீலைக்கடை போன்ற இடங்களிலுள்ள தொழிலாளருடன் அடிக்கடி பேசிக்கொள்வார். அவர்களைப் பற்றியெல்லாம் தமது நாவல்களில் எழுதியுள்ளார். அவர்களைப் பற்றியெல்லாம் தமது நாவல்களில் எழுதியுள்ளார். பேராசிரியரின் எளிமையையும் அடக்கத்தினையும் பரந்த மனப்பான்மையையும் இப்பண்பு எடுத்துக் காட்டுகின்றது.

**அவரிடம் கண்ட அரிய குணம் குருபக்தி**

அவரிடம் காணப்படும் அரிய குணம் குருபக்தி. இளமையிலேயே தமிழினையும் சங்கீதத்தினையும் கற்றுக் கொடுத்த பருத்தித்துறை ஆரிய திராவிட மகா பண்டிதர் பிரம்மஸ்ரீ முத்துக்குமாரசுவாமிக் குருக்கள், அண்ணாமலையில் தமிழ் இலக்கியமும் இலக்கணமும் அறிவுறுத்திய விபுலானந்த அடிகள், பொன்னோதுவார் மூர்த்திகள், சர்க்கரை இராமசாமிப் புலவர், சோழவந்தான் கந்தசாமி முதலியார், மேனாட்டில் மொழியியல் ஆராய்ச்சியிலே தமக்கு வழிவகுத்துக் கொடுத்த பேராசிரியர்கள் ரேணர், பாணற், பெயிலி ஆகியோர் பற்றிப் பக்தியுடனும் மரியாதையுடனும், நன்றியுடனும் அடிக்கடி பேசிக்கொள்வர். பேராசிரியர் ரேணர் இலங்கைக்கு வந்தபோது அவருக்குத் தேநீர் விருந்தளித்தார். அப்பொழுது எமது பேராசிரியரின் குரு பக்தியையும் ஈடுபாட்டையும் நேரிற் காணக்கூடியதாக இருந்தது. பேராசிரியர் ரேணர் அவர்களும் எமது பேராசானின் மொழியியல் ஆராய்ச்சியைப் பெரிதும் பாராட்டிப் பேசினார். அவரின் ஆராய்ச்சியைப் பின் பற்றிப் பலர் பிற்காலத்திலே சாசனங்களின் மொழியமைப்பு முதலியன பற்றி ஆராய்ந்தனர் என்பது அவர் வாயிலாக அறிந்தவை.

பேராசான் எழுதிய நாவல் இலக்கியங்களையும் நாடக இலக்கியங்களையும் கட்டுரைகளையும் மதிப்பிடுவது எமது நோக்கம் அன்று. அது விரிவாகச் செய்யப்படவேண்டியதொன்று. ஆனால், அவர் எழுதிய இரண்டு நாடகங்களும் பல கட்டுரைகளும் செய்யுட்டொகுதிகளும் இன்னும் அச்சில் வரவில்லை. அவருடைய மாணவரும் நண்பர்களும் அபிமானிகளும் இவற்றை விரைவில் அச்சிட வழி வகுப்பார்களாக. அவரைப் பற்றியும் அவரது சேவையைப் பற்றியும் விரிவான மலரொன்றும் வெளியிடப்படவேண்டும். இது தமிழுலகம் அவருக்குச் செய்ய வேண்டிய கடன்.

*பேராசானிடம் மாணவர்க்குள்ள மதிப்பும் பற்றும் அளவிடற்கரியன. அவருடைய நற்பண்புகள் அவரை என்றும் நினைப்பூட்டுவன. பொறுமை என்ற பண்பின் நிலைக்களனாகத் திகழ்ந்தவர் பேராசிரியர். அவருடன் பலர் சினந்து பேசினாலும் அவர் கடிந்து பேசியதை நாம் இதுவரை கண்டதில்லை. அவர் ஒருவருக்கும் தீங்கு இழைத்தது இல்லை. எல்லா மாணவரையும் வேற்றுமை பாராட்டாது கணித்து வந்தார். இதனாலே அவரை மாணவர் போற்றிப் பணிந்தனர். தாம் பேராசிரியர் என்ற இறுமாப்பு அவரிடம் எள்ளளவும் இருக்கவில்லை. மாணவர் அவரை எந்நேரமும் எந்த இடத்திலும் கண்டு பேசலாம். இவ்வாறு காட்சிக்கு எளியராகவும் கடுஞ் சொல்லரல்லராகவும் விளங்கியமையாலேயே இன்று மாணவ உலகத்திலே அவருக்குத் தனி மதிப்புண்டு. பேராசிரியர் கணபதிப்பிள்ளையவர்களைத் திட்டுவார் இல்லை. மாணவரிடையே வேற்றுமை பாராட்டாமையே இதற்கு முக்கிய காரணமாகும்.*

*அவர் பேச்சில் எப்பொழுதும் அன்பு கனிந்தவண்ணம் இருக்கும். அவர் மரியாதைப் பன்மைகள் வழங்குவது இல்லை. மாணவர்களை (ஆணாயினும் பெண்ணாயினும்) 'நீ' என்றே அழைப்பார். 'நீ' என அழைத்து அன்பு பாராட்டும் அவர் பண்பு எவ்வளவு மேலானது? 'டேய்' 'வாடா' இஞ்சை வந்திரு' என்றெல்லாம் கூறும்போது அன்பு வழிந்தோடும். இன்னும் ஒரு தடவையாதல் அவ்வாறு கூறமாட்டாரா என உள்ளம் அவாவும்.*

*அவர் தமது உழைப்பு முழுவதையும் தமது பிள்ளைகளின் படிப்பிற்காகச் செலவு செய்தார். பிள்ளைகள்மேல் அவருக்கு அளவிலா வாரப்பாடு. அவர்களைப் பற்றிப் பெருமையாகப் பேசுவார். 'கந்தசாமி அலுவல் பார்ப்பான். அவன் குடும்பத்தைக் கொண்டு நடத்துவான். ஒப்பிலாமணி என்னைப் போன்றவன். பபாவும், சின்ன பபாவும் மற்றவர்களைக் கவனிப்பார்கள்', என்றெல்லாம் பெருமையாகப் பேசுவார். அவர்களும் பொறுமையுடன் நடக்கிறார்கள். நன்மைக்குக் கேடில்லை. நன்மை செய்தோர் சந்ததி வாழும். பேராசான் கணபதிப்பிள்ளை எவரையும் வருத்தியதேயில்லை; அவர் புகழ் நிலைக்கும்; அவர் குடும்பம் வாழும்.*

*(பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையின் நினைவாக மலர்ந்த "பேராசிரியர் சிறப்பிதழில் வெளிவந்த கட்டுரை)*

தினகரன் 1968 மே 19 ஞாயிற்றுக்கிழமை

48

# சைவத்திற்குப் புரியும் தொண்டு

**இலங்கையில் மிகப் பழைய காலத்திலிருந்தே சைவ சமயம் வேரூன்றி வளர்ச்சியுற்றதென்பதனை இங்குள்ள சைவ ஆலயங்கள் நன்கெடுத்துக் காட்டுகின்றன. சைவ சமய வளர்ச்சிக்கு அயராது உழைத்த சைவப்பெரியார்களை ஈன்றெடுத்த பெருமையும் ஈழத்திற்குண்டு. தமிழகத்திற்குச்சென்று சைவப்பணிகள் செய்தும், சமயச் சொற்பொழிவுகள் ஆற்றியும், சைவசமய நூல்களை அச்சிட்டு வெளியிட்டும், சைவ நூல்களுக்கு சிறந்த உரைகள் எழுதியும் சமய உண்மைகளை நூல்களாக வெளியிட்டும் ஈழத்துச் சைவப் பெரியார் பலர் பணிகள் செய்திருக்கின்றனர். செய்து வருகின்றனர்.**

*இந்த வகையிற் சைவத்தையும் தமிழையும் வளர்த்த சபைகளும் ஈழத்தில் பலவுள. அவற்றிலே தலை சிறந்து விளங்குவது சைவ பரிபாலனசபையாகும். தமிழகத்திற் சென்னையிலிருந்து சைவம் வளர்க்கும் சைவ சித்தாந்த சமாஜத்திலும் பதினெட்டாண்டுகள் பழைமையானது இச்சபை. சமய நூல்களையும் சமய பாட நூல்களையும் அச்சிட்டு வெளியிட்டும், பத்திரிகைகள் நடாத்தியும், சமயக் கல்வி புகட்டியும், மகாநாடுகள் நடத்தியும் சைவத்தையும் தமிழையும் இச்சபை கடந்த எண்பது ஆண்டுகளாக வளர்த்து வந்து இருக்கின்றன. சைவபரிபாலனசபை நடத்திவரும் இந்து சாதனம் எனும் பத்திரிகை ஈழத்திலுள்ள மிகப் பழைய சைவசமயப் பத்திரிகையாகும். இதற்கு வயது எண்பது. சைவபரிபாலனசபை எழுபத்தொன்பது ஆண்டுகளுக்கு முன் நிறுவிய யாழ்ப்பாண இந்துக்கல்லூரி இன்று ஈழத்திலுள்ள தலைசிறந்த இந்துக்கல்லூரியாக திகழ்கிறது.*

**நோக்கம்**

*சிறிஸ்தவ சமயமும், ஆங்கிலக் கல்வியும் சைவ சமயத்தையும் தமிழ்க் கல்வியையும் அமுக்கிய காலத்திலே சைவத்தையும் தமிழையும் அழியவிடாது பேணிக்காக்கத் தோன்றியதே சைவபரிபாலனசபை. இன்று ஈழம் சுதந்திரம் பெற்ற நாடாக விளங்கியபோதும் எமது சமயத்தையும் மொழியையும் பாதுகாக்க வேண்டிய நிலையில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. நாம் விழிப்பாகவிருந்து தொண்டாற்ற வேண்டிய நிலை இன்றும் இருக்கின்றது. இந்தப் பணியைச் சைவபரிபாலனசபை தொடர்ந்து செய்ய வேண்டும்.*

*வீறு புகழ் கொண்ட ஆறுமுகநாவலர் ஏறுபோற் சைவமும் இன்றமிழும் வளர்த்த யாழ்ப்பாணத்திலே சைவ பரிபாலனசபையின் எண்பதாவது ஆண்டு நிறைவு விழா எடுக்கப்படுகின்றது. சபையின் எண்பது ஆண்டுத் தொண்டினை மதிப்பிடவும் வருங்காலத் தொண்டிற்கு வழிவகுக்கவும், இவ்விழா உதவுவதாக விழாச் சிறப்பாக அமைய எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.*

தினகரன் 1969 ஏப்பிரல் 23 புதன்கிழமை

# ஆண்டுதோறும் தமிழ்த் தின விழா கொண்டாட வேண்டும்

**கல்வி நூற்றாண்டு வைபவத்தையொட்டி அகில இலங்கை பாடசாலைகளின் தமிழ் தின விழா நாளை யாழ்ப்பாணம் இந்து கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் ஆரம்பமாகிறது.இவ்விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளும் கலாநிதி சு.வித்யானந்தன் விடுத்த செய்தி இது.**

*பாடசாலைகளில் மாணவர் பயிலும் தமிழ் பாடங்களை அடிப்படையாகக் கொண்டு நாடகம் இசை, பேச்சு எழுத்து முதலிய துறைகளில் மாணவர்களிடையே போட்டியை ஏற்படுத்தி, இப் போட்டியை மாவட்ட ரீதியாக முதலில் நடத்தி இறுதிப்போட்டியை யாழ்ப்பாணத்திற் கல்வி அமைச்சு நடத்துகின்றது. மூன்று நாள் விழாவாக அமையும் இப்போட்டி தமிழ் கல்வியில் ஆர்வத்தை ஏற்படுத்துவதோடு பாடசாலைகளில் குறிப்பிட்ட துறைகளில் தமிழ் கல்வி எவ்வளவுக்கு முன்னேற்றம் அடைந்திருக்கின்றது. என்பதனை அறிய உதவுகின்றது. அத்துடன் ஒவ்வொரு மாவட்டத்திலும் தமிழ் பயிலும் மாணவரின் தரத்தை மதிப்பிடவும் இவ்விழா கருவியாக உள்ளது.*

*தமக்குரிய பாடசாலைகளை விருப்பத்தோடும் உற்சாகத்தோடும் பயில இப் போட்டிகள் மாணவர்களுக்கு உதவுகின்றன. ஆசிரியர்களும் கடமையை ஒப்படைப்பதோடு அமையாது, மாணவரின் பல்வகைத்துறை வளர்ச்சியில் ஊக்கம், மாணவரின் உயற்சிக்காகவும் பாடசாலையின் பெயருக்காகவும் உழைக்கின்றனர். பெற்றோருக்கு தமது பிள்ளைகளின் கல்வியில் கவனம் செல்கின்றது. நமது பிள்ளைகளின் ஆற்றல்களைக் காண அவர்கள் விளைகின்றனர். இதனால் பெற்றோர் மாணவர் ஆசிரியர் தொடர்பு வலுப்பெறுகின்றது.*

*மாணவரின் நேரத்தையும் ஆர்வத்தையும் நல்வழிப்படுத்த போட்டிகள் உதவுகின்றன. நடிப்பிலும், பேச்சிலும், எழுத்திலும் ஏனைய துறைகளிலும் திறமை வாய்ந்த மாணவர் உருவாகின்றனர். மாணவர் ஒழுங்கு கட்டுப்பாடு ஆகியவற்றை நடைமுறையில் கடைபிடிக்கின்றனர். அத்துடன் மாணவரின் கற்பனை உடல் அமைப்பு கலை ரசனை முதலியனவும் வளர்ச்சி அடைகின்றன நுண்கலை அறிவு பெருகின்றது.*

*மேலும் இப்போட்டிகள் மூலம் மாணவரும் ஆசிரியரும் பல்வகை அனுபவம் பெற்று பரந்த நோக்கினைப் பெறுகின்றனர். ஏனைய மாவட்டங்களில் உள்ள மாணவரின் ஆற்றலை மதிக்கவும் அவர்களுடன் கலந்து உரையாடிப் பழகும் சந்தர்ப்பம் பெறுகின்றன. மேலும் இவற்றால் கட்டுப்பாட்டுடன் ஒன்றனைச் செய்யவும் மனதை ஒரு வழி படுத்தவும் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தவும் மாணவரால் முடிகின்றது. நன்றாக பேசவும், சீராக ஒழுகவும், பிறருக்கு உதவவும், தன்னம்பிக்கை கொள்ளவும், தமக்குரிய பலவீனங்களை அடக்கிக் கொள்ளவும் கற்றுக் கொள்கின்றனர். இவை யாவும் தட்டிக் கழிக்கக் கூடிய சித்தகள் அல்ல.*

நாடகம் போன்ற கூட்டு நிகழ்ச்சிகள் பொறுமை, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, யூகம், நற்பண்பு முதலான குணங்களை வளர்க்கின்றன. மாணவர் எல்லோரும் ஒரு பொது நோக்கத்திற்காக தமது ஆற்றலுக்கு ஏற்ப ஒத்துழைக்கின்றனர். எனவே நாடகம் போன்றவை தனிப்பட்ட வகையில் மாணவருக்கும் பொதுவாக சமூகத்திற்கும் அதிக பயனை அளிக்கின்றன. எனவே கல்வி அமைச்சு ஒழுங்கு செய்துள்ள தமிழ்த்தினம் மாணவர்களின் தமிழ் பயிற்சியை சீர்படுத்தவும் அவர்களின் பலவகை ஆற்றலை விருத்தி செய்யவும் நற்பண்புகளை வளர்க்கவும் மாணவர்களுக்கு ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும் உள்ள உறவை பலப்படுத்த உதவும். நல்ல மாணவ உலகை படைக்கவும் சமுதாய முன்னேற்றத்திற்கு வழி காட்டவும் உதவுகின்றதெனலாம். அடுத்த தமிழ் தினத்தை கொண்டாட இன்னும் நூற்றாண்டு காத்திருக்க தேவையில்லை தமிழ் தின விழா ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும் விழாவாக அமையும் என எதிர்பார்க்கின்றோம் அப்போதுதான் நிரந்தரமான தொடர்பான பயனை எதிர்பார்க்க முடியும் .

ஈழநாடு 1969 ஓகஸ்ட் 13 புதன்கிழமை

# 50

# இலக்கியத்திலும் கலையிலும் கண்ட வளர்ச்சி

**தமிழ்பேசும் மக்களின் வாழ்க்கையில் இன்பம் பொங்கியெழக் கொண்டாடப்படுவது பொங்கல்விழா. பழமையை நோக்கி மதிப்பிட்டுப் புதுமையில் மலர்ச்சிகாண அடிகோலுவது இவ்விழா. இந்த அடிப்படையில் ஈழத்துத் தமிழ் பேசும் மக்கள் கலைத்துறையிலும் இலக்கியத் துறையிலும் சென்ற ஆண்டு கண்டவை யாவை. தை பிறந்ததும் இனிக்கான விரும்புபவை யாவை எனச் சிந்திப்பதே இக்கட்டுரையின் நோக்கம்.**

*கலைத் துறையிலே 1969ம் ஆண்டு அதிக வளர்ச்சியைக் கண்டதெனக் கொள்ளலாம். இசைத் துறையிலே மேதைகளாகக் கணிக்கக்கூடியவர்கள் பலர் இன்று எம்மிடையே இருக்கின்றார்கள். தரமான இசைக்கலைஞரை மதிக்கும் பண்பும் பெருகி வந்திருக்கின்றது. சங்கீதத்துறையில் தாம் பெறவிரும்புவோர் பலரின் அரங்கேற்றங்களும் இடம் பெற்றிருக்கின்றன.*

*நாட்டியத் துறையிலே நாம் பெரும் முன்னேற்றம் கண்டிருக்கின்றோம். பரத நாட்டியத்தைத் தூய்மையுடன் பாதுகாத்துப் பல பரதநாட்டியக் கலைஞர்களை உருப்படுத்தியிருக்கின்றோம். சென்ற ஆண்டிற் பல நாட்டிய விழாக்களும் அரங்கேற்றங்களும் நடைபெற்றிருக்கின்றன. ஈழத்தின் பல பாகங்களில் நடன வகுப்புக்கள் ஒழுங்காக நடைபெற்று வருகின்றன. மெச்சர் கூடிய வகையிலே இக்கலையில் வளர்ச்சி பெற்றிருக்கின்றோம்.*

*நாடகக் கலையிலும் ஒரு திருப்பத்தைக் காணுகின்றோம். நாடகம் பற்றிய உணர்வும், நாடகத் துறையிலே நிலையான ஒரு வளர்ச்சியைக் காணவேண்டுமென்ற துடிப்பும், அக்கலைப் புதிய வகையில் முன்னேற்றமடையச் செய்யும் ஆவலும் சென்ற ஆண்டிற் கூடுதலாகக் காணப்பட்டன. பத்திரிகைத் தாபனமே நாடக விழா நடத்தி நாடகக் கலைஞர்களைக் கௌரவிக்குமளவிற்கு நாடக வளர்ச்சியின் முக்கியத்துவத்தைப் பத்திரிகைகளே உணர்த்திருப்பதைக் காணுகிறோம். நாடக மன்றங்களும் நாடகத் தயாரிப்பாளரும் நாடக முன்னேற்றத்திற்காக ஒருமைப்பாடுடன் ஒத்துழைக்கும் நற்பண்பும் வளர்ச்சியடைந்திருக்கின்றது. சிறந்த நாடகப் படைப்புக்கள் என்று விஷயமறிந்தவர்கள் போற்றும் பல நாடகங்களும் அரங்கேற்றப்பட்டுள்ளன. ஈழத்துத் தமிழ்நாடகத் தந்தை கலையரசு செர்ணலிங்கம் அவர்களின் நாடக அனுபவங்களைக் கொண்ட நூல் வெளியீடு சிறப்பாக நடைபெற்றது. அண்ணாவி மரபு நாடகத்தை அல்லது கொட்டகைக் கூத்தினை இன்று சீரிய நிலையில் வளர்த்துவரும் நடிகமணி வைரமுத்துவின் மயான காண்டத்தின் ஆயிரத்தாவது தடவை அரங்கேற்றத்தைத் தேசிய நாடக நிறுவனம் ஏற்று நடாத்தி அக்கலைஞரைக் கௌரவித்தது. நாட்டுக்கூத்தும் கலைத் துறையிலே இன்று உயரிய அந்தஸ்தைப் பெற்றுவிட்டது. பாடசாலை மாணவர் - சிறப்பாகப் பெண் பாடசாலை மாணவர் - அதனைப் பாதுகாக்கக் கங்கணம் கட்டி நிற்கின்றனர்.*

இலக்கியத் துறையிலே தான் பெரிய முன்னேற்றத்தைச் காணக்கூடியதாக இருக்கின்றது. ஆறுமுக நாவலருக்கு நல்லூரிற் சிலை அமைத்தமையும், விபுலானந்த அடிகளுக்கு மட்டக்கள்புக் காரைதீவில் சிலை எடுத்தமையும் குறிப்பிடவேண்டிய நிகழ்ச்சிகள். தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு ஈழத்துப் பெரியார்கள் இதுவரை ஆற்றிய தொண்டு மகத்தானதென்பதனை இவ்வைபகங்களும் இவ் வைபவங்களின்போது வெளியிடப்பட்ட தரமான மலர்களும் வற்புறுத்தின. மேலும் **1969**ம் ஆண்டில் வெளி வந்த ஈழத்து எழுத்தாளர்களின் படைப்புக்களை நோக்கும்போது, இன்றைய ஈழத்து எழுத்தாளரும் தமிழ்மொழி வளர்ச்சிக்கும் இலக்கிய வளர்ச்சிக்கும் அரும்பெருந் தொண்டாற்றுகின்றன என்பது புலனாகின்றது. அன்பர் இரசிகமணி கனகசெந்திநாதன் அவர்கள் எமக்குத் தொகுத்துதவிய பட்டியலின் படி **1969**ம் ஆண்டில் ஏறக்குறைய **40** ஈழத்து நூல்கள் வெளிவந்துள்ளன. அவர் பட்டியலில் இடம்பெறாத நூல்கள் பல இருக்கின்றன. அவற்றையும் சேர்த்துக் கணக்கிடும்போது குறைந்தது **50** நூல்களாவது ஈழத்து எழுத்தாளரின் படைப்பாகச் சென்ற ஆண்டு எமக்குக் கிடைத்திருக்கின்றன.

ஈழத்துத் தமிழ்பேசும் மக்களின் எண்ணிக்கையையும் வாசகர் தொகையையும் பதிப்பு வசதிகளையும் அச்சிடும் செலவையும் நோக்கும் போது இதனைக் குறிப்பிடக் கூடிய ஒரு சாதனையாகவே கொள்ள வேண்டும். நூல்களின் பெயர்களை இக்கட்டுரையில் தருவரு சாத்தியமில்லை. ஆனால் நாவல், சிறுகதை, கவிதை, ஒப்பியல் இலக்கியம், கட்டுரை நூல்கள், சீவிய சரித்திரம், மொழி பெயர்ப்பு, விஞ்ஞானம் சம்பந்தமான இலக்கியப் படைப்புக்கள் உருவச் சித்திரங்கள், நாட்டுக் கூத்து நூல்கள் எனப் பல துறைகளிற் சென்ற ஆண்டு ஈழத்து எழுத்தாளரின் சிருஷ்டிகள் நூல்வடிவம் பெற்றிருக்கின்றன. இவற்றைவிட, நாவலர் மலர், விபுலானந்த அடிகளார் படிவ மலர் போன்ற மலர்களும் இளங்கதிர், சிந்தனை, முல்லை, விவேகி போன்ற இலக்கிய சஞ்சிகைகளும் நூலுருவம் பெறாத இலக்கியப் படைப்புக்களும் எமது எழுத்தாளரின் ஆக்க வேலைகளுக்குச் சான்று பகருகின்றன.

இந்த முன்னேற்றத்திற்கு விசேட காரணம் ஒன்றுமுண்டு. சில ஆண்டுகளாக எழுத்தாளர் பயன்படாத சர்ச்சைகளில் ஈடுபட்டு ஆக்கவேலைக்குப் பதிலாக அழிவுத் தொழிலிலேயே ஈடுபட்டிருந்தனர். சிறந்த எழுத்தாளர் எனக் கொள்ளக்கூடியவர் பலரின் ஆற்றல் நித்தனைப்பாதையில் வீணாகக் கழிந்தது. இதனாலே நூல்களின் வெளியீடு மந்தமாகக் காணப்பட்டது. அத்தகைய துறையில் ஈடுபடுவோர் இன்றும் இருக்கிறார்கள்தான். ஆனால் அவர்களை அவர்களின் நண்பர்கள் இன்று விட்டு அகன்று, ஆக்க வேலையில் ஈடுபடுகின்றனர். வாழ், வாழவிடு என்ற தத்துவத்தின் மகிமையை எழுத்தாளர் இன்று உணருகிறார்கள். எனவேதான் இன்று நூல் வெளியீடுகளும் பாராட்டு விழாக்களும் அதிகம் இடம் பெறுகின்றன. நூல்களை விமர்சனம் செய்வோரும் கடமை உணர்ச்சியுடன் சிறப்புகளைப் புகழ்ந்து குறைபாடுகளை பண்புடன் சுட்டிக் காட்டப் பழகுகின்றனர்.

இவை யாவற்றையும் தொகுத்து நோக்கும்போது சென்ற ஆண்டு நாம் இலக்கியத்திலும் கலையிலும் பல வளர்ச்சியைக் கண்டிருக்கிறோமெனக் கூறலாம். தை பிறந்தால் வழி பிறக்கும் என்பார்கள். இன்று தை பிறக்கின்றது. இவ்வாண்டில் இலக்கியத்திலும் கலையிலும் மேலும் முன்னேற்றமடைந்து, தரமான பல நூல்களையும் கலைப்படைப்புக்களையும் உலகிற்கு அளிப்போமென்ற நம்பிக்கையுண்டு.

தினகரன் பொங்கல் மலர் 1970 ஜனவரி 14 புதன்கிழமை

# 51

# மேற்கில் முதல் உலகத் தமிழ் மாநாடு

## புராதனப் புதையலின் மாண்பைத் துலக்கும்

**எழில் கொஞ்சும் ஏற்றமிகு மேற்றிசை நகர் பாரிஸில் இம்மாதம் 15ஆம் தேதி ஆரம்பமாகும் மூன்றாவது அனைத்து உலக தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் ஈழத்தின் பங்கு மகத்தானதாக அமையும்.**

*பொற்றமிழின் புராதன புதையலை ஆய்ந்து அனைத்து உலகுக்கும் அறிவுறுத்தும் இம் மகாநாட்டின் முடிவுகள் பல புதிய பெருமைகளை வலியுறுத்த வழி செய்யும் என எண்ணுகின்றேன் என்று ஈழத்தின் பிரதிநிதியாக இம் மாநாட்டில் கலந்து கொள்ளும் மூவரில் ஒருவரான பேராதனை பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட் தமிழ் விரிவுரையாளரான கலாநிதி சு. வித்தியானாந்தன் அவர்கள் எனக்களித்த விசேட போட்டி ஒன்றில் கூறினார்.*

*பாரிஸ் மகாநாட்டுக் குழுவினரால் இலங்கையின் சார்பில் மகாநாட்டில் சிறப்பாக கலந்து கொள்வதற்கு கொழும்பு பல்கலைக்கழக தமிழ் விரிவுரையாளர் கலாநிதி க.கைலாசபதி, பேராதனை பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளராக கலாநிதி சு. வித்தியானந்தன், கலாசார அமைச்சின் மத்திய ஆலோசகர் சபை அங்கத்தவரும் கொழும்பு பொது நூல் நிலையத்தின் அதிபருமான ஜனாப் எஸ்.எம். கமாலுத்தீன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்ற செய்தி அறிந்ததும் அவர்களுடன் நான் தொடர்பு கொண்டேன்.*

### இலங்கையின் பெரும் பங்கு

*பாரிஸ் மகாநாட்டில் இலங்கையின் மகத்தான பங்கை நாம் பெருமைப்படுத்துவோம் என்று மூவரும் கூறினர்: மகாநாட்டில் இடம்பெறும் ஆறு பிரிவுகளில். கலாநிதி க.கைலாசபதி நவீன தமிழ் இலக்கியக் கருத்தரங்கிலும். கலாநிதி சு. வித்யானந்தன் கடல் கடந்த தமிழர்கலாசார வரலாறு பற்றி கருத்தரங்கிலும். ஜனாப், எஸ்.எம்.கமாலுத்தீன் தமிழ்நாட்டு அயலகத் தொடர்பு ஆகிய துறைகள் பற்றிய கருத்தரங்கிலும் சிறப்பாக கலந்து கொள்கின்றனர்.*

### பாரிசும் தமிழ் ஆய்வும்

*கலாநிதி க.கைலாசபதி அவர்களை நான் சந்தித்து பாரிஸ் மகாநாடு பற்றி கேட்டபோது அவர் சொன்னார் இப்படி- இம் மகாநாட்டின் பலாபலன்கள் இனி வரும் ஆண்டுகளில் புது வழிகாட்டுவதாக அமையும் . நான்கு நாட்கள் நடைபெறும் ஆறு பெரும் பிரிவுகளுக்கு இடையிலான ஆராய்ச்சிகள் கடந்த காலங்களில் நடைபெற்று வந்த ஆராய்ச்சிகளின் கணக்கெடுப்பாகவும் மதிப்பீடாகவும் அமையுமென எதிர்பார்க்கின்றேன்.*

*பாரிசுக்கும் தமிழ் ஆராய்ச்சிக்கும் நீண்ட கால தொடர்புண்டு. பதிப்பாசிரியராக விளங்கிய தமிழ் தாத்தா உ. வே. சாமிநாதையர் அவர்கள், பழந்தமிழ் நூல்கள் பலவற்றை பதிப்பித்த காலை பாரிஸின் நூதன சாலையில் உள்ள ஏட்டுப் பிரதிகளில் இருந்து ஜூலியன் வின்செட் போன்ற அறிஞர்கள் பிரதிகளை உதவினர் என்பது குறிப்பிடத்தக்கது. அதுமட்டுமன்றி பிரெஞ்சு ஆசியக் கழகத்தில் பல்லாண்டுகளாகவே தமிழ் ஆராய்ச்சியும் ஆராய்ச்சி வெளியீடுகளும் சிறப்பிடம் பெற்று வந்துள்ளன என்பது கவனிக்கத்தக்கதாகும்!*

*பிரெஞ்சுத் தொடர்பு காரணமாக புதுச்சேரியில் உள்ள கல்விக் கூடத்தில் உயர்ந்த பல ஆராய்ச்சிகள் உதாரணமாக அகராதிகள் சிற்ப நூல்கள் கல்வெட்டு ஆராய்ச்சி நூல்கள் ஆகியனவும் சமீப காலத்தில் வெளிவந்துள்ளன. தமிழ் மீது பற்றும் தமிழர்களுடன் தொடர்பும், தமிழை ஆராயும் புலனும், கூடிய மக்கள் வதியும் பிரஞ்சு நாட்டு தலைநகரில் இம் மகாநாடு நடைபெறுவது சாலப் பொருத்தமானதாகும் என்று பாரிசின் பெருமையைச் சொல்லி முடித்தார் கலாநிதி.*

**கருத்துப் பரிமாற்ற வசதி**

*கலாநிதி சு.வித்யானந்தன் அவர்களைச் சந்தித்தபோது அவர் கூறியதாவது - நாங்கள் பார்வையாளராக அல்ல மகாநாட்டில் சிறப்பாக பங்குபெற்றும் பிரதிநிதிகளாக செல்கிறோம். அப்படியானதோர் அழைப்பை ஏற்று செல்லும் நாம் இலங்கையின் பங்கை செலுத்துவோம். இம் மகாநாட்டில் எமது பங்கு மகத்தானதாகும். பெருந்தொகையான பிரதிநிதிகள் கலந்து கொள்ளும் இம்ம மகாநாட்டில் பலரைச் சந்திப்பதற்கு நமது எண்ணங்களை பகிர்ந்து கொள்ளவும் வாய்ப்பு கிடைக்கும். 1973 ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெறவிருக்கும் மகாநாடு பற்றியும் நாம் கலந்துரையாடுவோம். தவிர மகாநாட்டில் லண்டனில் உள்ள தமிழ் மாணவர்கள் பார்வையாளர்களாக கலந்து கொள்ளவிருப்பது மகிழ்ச்சியான செய்தியாகும்.*

**முஸ்லிம் பிரதிநிதித்துவம்**

*கொழும்பு பொது நூல் நிலைய பதில் அதிபர் ஜனாப் எஸ். எம். கமாலுத்தீன் அவர்களைக் கண்டு பேசியபோது அவர் கூறினார் இப்படி - பாரிஸ் மகாநாட்டில் இலங்கையின் பங்கு ஏற்ற மிகுந்ததாக இருக்கும். நடந்து முடிந்த இரு மகாநாடுகளிலும் ஜனாப் எ.எம். எ.அஸீஸ், ஜனாப் எம். எம். உவைஸ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பு செய்தார்கள்.*

*தமிழ் மொழிக்கு முஸ்லிம்களின் பணி கணிசமான அளவு பல ஆண்டுகளாக இருந்து வருகிறது. இதுபோன்ற மகாநாடுகளிலே முஸ்லிம்கள் பிரதிநிதித்துவம் பெற்று தமிழின் பொதுவான வளர்ச்சிக்கு உதவுவதற்கு கிடைத்துள்ள வாய்ப்பையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன். பாரிஸ் மகாநாட்டில் பெருந்தொகையான இலங்கை பிரதிநிதிகள் கலந்து கொள்ள இயலாதது குறித்து வருந்துகின்றேன். எனினும், இலங்கையும் இந்த முக்கிய மகாநாட்டில் இடம் பெறுவது வரவேற்கத்தக்கது சிறப்பாக இலங்கையில் அடுத்த உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு இடம் பெறும் என்று எதிர்பார்க்கப்படுவதால் பாரிசிலும் அதற்கு, முதலில் நடைபெற்ற மகாநாடுகளிலும் இலங்கை பிரதிநிதிகள் கலந்து கொண்டு வருவதனால் ஏற்படும் தொடர்புகள் இந்நாட்டின் அடுத்த மகாநாட்டை*

*நடத்துவதற்கு பல வகைகளில் அனுகூலமாக அமையும் என்று நம்புகின்றேன். இத்தகைய மகாநாடு ஒன்று இங்கு நடைபெறுவதற்கு எமது அரசாங்கம் வேண்டிய உதவிகளை அளிக்கும் என்று எதிர்பார்க்கின்றேன்.*

**ஆறுபெரும் பிரிவுகள்**

*மகாநாடு பற்றிய சில குறிப்புகளை பார்வைக்கு கொடுக்கலாம் என நினைக்கின்றேன்.*

*முக்கியமாக ஆறு பெரும் பிரிவுகளில் இம் மகாநாடு நடைபெறுகிறது.*

*1. தமிழ் கல்வெட்டுக்களும் அகழ்வாராய்ச்சிகளும்*

*2. சங்க இலக்கியம்.*

*3. தமிழும் வடமொழியும்.*

*4. தமிழ்நாட்டின் அயலகத் தொடர்பு.*

*5. கடல் கடந்த தமிழர்களுடைய கலாசார வரலாறு.*

*6. நவீன தமிழ் இலக்கியம்.*

*மகாநாட்டிற்கு வருபவர்களுக்கு விருந்து உபசாரங்களை ஒழுங்கு செய்துள்ள யுனெஸ்கோ ஸ்தாபனம் மகாநாட்டிற்கு நிதி உதவி உட்பட பல்வேறு உதவிகளையும் வழங்கியுள்ளது. மகாநாடு “ பிரெஞ்சு கழகம்” என்ற அந்நாட்டின் தலையாய கல்வித் கூடத்தின் ஆதரவுடன் நிகழ்த்துவதும் குறிப்பிடத்தக்கது.*

*இங்கிலாந்திலிருந்து தமிழர் வாழும் அபிமானமும் உள்ள பல இலங்கை தமிழ் மாணவர்களும் இளைஞர்களும் மகாநாட்டின் போது பாரிசுக்கு வருகை தந்து ஆராய்ச்சி மகாநாட்டின் பயன் பெற திட்டமிட்டுள்ளனர். சுமார் 150 பேர் பாரிசுக்கு வருவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.*

தினகரன் வாரமஞ்சரி 1970 யூலை 11 சனிக்கிழமை

# பணியின் சின்னமாக விளங்கிய வி.ரி. செல்லத்துரை அவர்கள்

**சமூகத் தொண்டனாகவும் சமயத் காப்பாளரராகவும் விளங்கிய வி.ரி. செல்லத்துரை அவர்களை உயிருடன் கண்டு ஓராண்டாகிவிட்டது. ஆயினும், அவரின் பணிகள் அன்னாரை நாள்தோறும் எம்முன் நிறுத்துகின்றன.**


வி.ரி. செல்லத்துரை

*மத்திய மாகாணத்தின் எப்பகுதிக்குச் சென்றாலும் அவர் எம்கண்முன் காட்சியளிக்கின்றார். பேராதனைக் குறிஞ்சிக்குமரன் ஆலயம் அவரின் பணியை நினைவூட்டும். குண்டசாலையிலுள்ள திறந்த சிறைச்சாலைக் கைதிகளுக்கு அவர் கட்டி உதவிய சிவன் கோயில் அவர் பெயரால் விசேட ஆராதனைகளும் அன்னதானமும் இன்றும் இடம் பெற்று வருகின்றன. கட்டுக்கலைப் பிள்ளையார் கோயிலுக்கு அவர் செய்த சேவைகளைப் பற்றி மக்கள் இன்றும் பேசிக் கொண்டே இருக்கின்றார்கள்.*

*உரும்பிராய்க் கருணாகரப் பிள்ளையார் தேர்க் கொட்டகை அவரின் பெயரை என்றும் நினைக்கச்செய்யும். அவ்வாலயத் திருப்பணிகளுக்கு அவர் செய்த உதவி சாலப் பெரிது. உரும்பிராய் சமூகத் துறையிலும், சமயத்துறையிலும் கல்வித்துறையிலும், அடைந்துள்ள வளர்ச்சியில் அவருக்கும் பெரும் பங்குண்டு.*

*மத்திய மாகாணச் சைவ மகாசபையை நினைக்கும்போது வி.ரி. செல்லத்துரை அவர்களின் நினைவே வரும். அவ்வளவிற்குச் சபையுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு. அதனைப் பல துறையிலும் வளர்த்தவர் அவர். மத்திய மாகாணச் சைவ மகா சபையின் ஒரு கிளையாக மங்கையர் கழகத்தை ஸ்ரீஸ்கந்தராஜா தம்பதிகள் 1968ஆம் ஆண்டிலே தொடக்கி வைத்தபோது, தமது குறிக்கோளொன்று நிறைவேறியதைக் கண்டு உளம்பூரித்து குத்துவிளக்குக்கு அண்மையில் உளப்பூரிப்போடு நின்ற காட்சி எம்மை விட்டு ஒருபோதும் நீங்காது.*

*புகழுடன் மாண்டவரை நினைவு கூரும்போது, அன்னாரின் சேவைகளும் நற்பண்புகளும் எமக்குப் பல வகையிலும் ஊக்கமளிக்கின்றன. வரையாது கொடுக்கும் அவரது வண்மையும், எடுத்த கருமம் எதனையும் துணிவுடன் செய்து முடிக்கும் ஆற்றலும், அடுத்து வரும் இன்னல்களையும் பகைகளையும் உளம் தளராது தாங்கும் பொறுமையும், எப்பொழுதும் மலர்ந்த முகத்துடன் வழங்கும் இன்னுரைகளும், நம்பினார்க்குக் கைகொடுத்துதவும் பெருந்தன்மையும் , எல்லாவற்றிற்கும் மேலாக அவரிடம் சிறப்பாகக் காணப்பட்ட மனித அனுதாபமும் என்றும் அவரை நினைவூட்டிக் கொண்டேயிருக்கும்.*

தினகரன் 1971 மார்ச் 03 புதன்கிழமை

# முஸ்லிம் அறிஞர்களின் தமிழ்த் தொண்டின் சிறப்பு

**வித்தியானந்தன் உரை**

"தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு முஸ்லிம் அறிஞர்கள் ஆற்றி வரும் தொண்டு மகத்தானது"

*இலங்கை இஸ்லாமிய எழுத்தாளர் இயக்கத்தின் ஆதரவில் கண்டி முஸ்லீம் ஹோட்டலில் தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு விழாவில் நன்றி தெரிவித்துப் பேசிய பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் மேற்கண்டவாறு கூறினார்.*

*அவர் மேலும் பேசுகையில், "உலகறியும் வகையில் இஸ்லாமிய இலக்கியங்களை தமிழில் தரக்கூடிய தகுதி வாய்ந்த முஸ்லிம் - தமிழ் அறிஞர்கள் ஈழத்தில் தோன்றி இருக்கின்றனர் என்பதைப் பெருமையோடு எடுத்துக் கூறலாம்.*

*"ஆனால் தற்சமயம் பல்கலைக்கழகத்தில் நூற்றுக்கு அதிகமான முஸ்லிம் மாணவர்கள் கல்வி கற்றபொழுதிலும் அவர்களில் ஒரிருவர் மாத்திரமே தமிழை ஒரு பாடமாக எடுக்கின்றனர். ஏனையோர் வேறு பாடங்களை எடுக்கின்றனர். இது வருந்தத் தக்கது" என்றார்.*

*இலங்கை வர்த்தகக் கூட்டுத்தாபன உறுப்பினர் அல்ஹாஜ் எம். எம். உவைஸ் பேசுகையில் "இதற்கு முன்னர் பல்வேறு பேராசிரியர்கள் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் பதவி வகித்த போதிலும் கலாநிதி சு. வித்தியானந்தனைப் போன்ற இஸ்லாமியப் பேரினத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்ட பேராசியர் ஒருவர் இத்தகைய பதவிக்கு வந்ததில்லை. சீறாப்புராணம் ஒரு இஸ்லாமிய இலக்கியமா என்று கூட தெரியாமல் இருந்த என்னை சிறப்புப் பாடமாக தமிழை ஏற்று கொள்ளச் செய்த பெருமை அவரையே சாரும்" என்றார்.*

*கொழும்புப் பொது நூல் நிலைய உதவி நூலகர் ஜனாப் எல். எம். கமாலுதீன் பேசுகையில் "இஸ்லாமிய தமிழ் இலக்கியத்திற்கு பெரும் தொண்டு புரிந்துள்ள பேராசிரியர் இன்னும் மகத்தான பணியைச் செய்ய வேண்டும்" என்றார்.*

*பிரஸ்தாப விழாவில் இலங்கையின் பிரபல இஸ்லாமிய எழுத்தாளர்கள். பேராசிரியரின் பழைய மாணவர்கள். ஆசிரியர்கள், பிரமுகர்கள் உட்பட முஸ்லிம் பெண்களும் கலந்து கொண்டனர். பேராசிரியருக்கு வாழ்த்து பாமாலையை இயக்கத்தின் உபதலைவர் ஜனாப் எம்.வை.எம். முஸ்லிம் வாசித்து அளித்தார்.*

*பேராதனை ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் அல்ஹாஜ் எல் .எம்.ஏ.ஹசன், இயக்கத்தலைவர் ஜனாப் எம்.சி.எம். சுபைர். செயலாளர் ஜனாப் ஐ.ஏ.றசாக் உட்பட பலர்*

உரையாற்றினார். பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் சு. வித்தியானந்தனுக்கு இலங்கை இஸ்லாமிய எழுத்தாளர் இயக்கம் கண்டி முஸ்லீம் ஹோட்டலில் இராப்போசன விருந்து அளித்துக் கௌரவித்தது.

தினபதி 1971 மார்ச் 26 வெள்ளிக்கிழமை



1963, 1964களில் பேராசிரியர் சு.வித்தியானந்தன் தயாரித்து மேடையேற்றிய நொண்டி நாடகம்: தென்மோடிக் கூத்தின் நாடகக் குழுவிரையும், பேராசிரியரையும் இப்படத்தில் காணலாம்.

# இலங்கைக்கு எதற்காக ஒரே பல்கலைக்கழகம்

**ஒஸ்மண்ட் ஜயரத்தினா கமிட்டி தனது உயர் கல்வி சம்பந்தமான அறிக்கையை, கல்வி அமைச்சர் டாக்டர் அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூத்திடம் சமர்ப்பித்து ஒரு வாரம் கூட ஆகவில்லை. எதிர்ப்புக்கள் நாலா பக்கங்களிலும்மிருந்தும் வரத் தொடங்கின கண்டனங்கள் ஆரம்பமாகின. இதனைப் பற்றி டாக்டர் ஒஸ்மண்ட் ஜெயரத்தினா என்ன சொல்கின்றார் என்பதைக் கவனிப்போம்.**

*"1967ம் ஆண்டு அக்டோபர் மாதம் கொழும்புப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது. அப்போது கூடுதலான பல்கலைக்கழகங்கள் இலங்கைக்கு வேண்டாம் என்று பல திசைகளிலிருந்தும் எதிர்ப்புகள் ஆரம்பித்தன. அன்று அக் கண்டனங்களும், எதிர்ப்புக்களும் சரியாகவே இருந்தன. இன்று அதற்கு மாற்று நடவடிக்கையாக நாங்கள் இலங்கைக்கு ஒரு பல்கலைக்கழகம் மட்டும் இருந்தால் போதும் என்று சிபார்சு செய்தோம். அன்று கொழும்புப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டபோது அதிகமான பல்கலைக் கழகங்கள் வேண்டாம் என்று யார் யார் எதிர்த்தார்களோ, அவர்களே இன்று "ஒரு பல்கலைக்கழகம் மட்டும்" என்ற முடிவையும் எதிர்க்கின்றார்கள்; கண்டித்து அறிக்கையும் விடுகின்றார்கள். இதுதான் எமக்கு மிகுந்த வியப்பைக் கொடுக்கின்றது"*

**அறிக்கை பற்றிய கண்டனங்கள்**

*இனிக் கமிட்டி அறிக்கையின் மீதான கண்டனங்களுக்கு வருவோம்.*

*1) பேராதனையிலுள்ள இலங்கைப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடம் ஜயரத்தினா கமிட்டி சமர்ப்பித்துள்ள அறிக்கையை அமுலுக்குக் கொண்டுவருவதை நிறுத்திவைக்குமாறு கல்வி அமைச்சரைக் கேட்டுக்கொள்வதென ஏகமனதாக முடிவு செய்தது. கலைப்பீடத் தலைவர் டாக்டா அஷ்லி ஹல்பே இக் கூட்டத்துக்குத் தலைமை வகித்தார். கலைத்துறையின் சில பகுதிகளையும், கீழைத்தேசக் கல்விப்பீடம் முழுவதையும் பேராதனையிலிருந்து மாற்றுவதால் ஏற்படும் தீமை பற்றியும் இங்கு கண்டனத் தெரிவிக்கப்பட்டது.ஜயரத்தினா கமிட்டியின் அறிக்கை பற்றி விரிவாக ஆராயவும் ஓர் உப கமிட்டி இக்கூட்டத்தில் தெரியப்பட்டது.*

*2) இலங்கைப் பல்கலைக்கழக விஞ்ஞான ஆசிரிய சங்கம் கல்வி அமைச்சருக்கு ஒரு மகஜர் அனுப்பி வைத்துள்ளது. உயர் கல்வி சம்பந்தமான இக்கமிட்டியின் அறிக்கையை, அதன் பல அம்சங்களையும் இச் சங்கம் மிக வன்மையாகக் கண்டித்திருக்கிறது.*

*புதிய பாடத் திட்டத்தை உருவாக்குதல், அமுல் நடத்துதல் ஆகியவை சம்பந்தப்பட்டதுறை, போதனா பீடத்தின் தனிப் பொறுப்பில் இருக்க வேண்டும் என்று இம் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*நான்கு பல்கலைக்கழகங்களும், அவற்றின் நிதி, அபிவிருத்தியை மேற்பார்வை செய்ய மான்யக் கமிஷன் ஒன்றும் வைத்திருப்பதற்கு மேலாக ஒரே பல்கலைக்கழகத்*

திட்டத்தினால் அனுகூலம் ஏற்படுமென்று தாம் நினைக்கவில்லை. இதனால் சிக்கல்களே மேலும் மேலும் உண்டாகும் என்றும் மகஜரில் கூறப்பட்டிருக்கின்றது.

பல்கலைக்கழகப் பாடத்திட்டச் சீர்திருத்தங்கள் படிப்படியாக நடைபெறவேண்டும். இவற்றை அடிக்கடி மதிப்பீடு செய்யவேண்டும் என்றும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இம் மகஜரின் பிரதி பிரதம மந்திரிக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

*3)* இலங்கையில் ஒரே பல்கலைக்கழகம் இருக்கவேண்டும் பல்கலைக்கழகங்களைத் தரப்படுத்தல், பல்கலைக்கழக இணைப்புக் கல்லூரிகளை அமைத்தல் போன்ற சிபார்சுகளைச் செய்த ஜயரத்தினா கமிஷன் அறிக்கையை முற்றாக நிராகரிக்கும்படி பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் சு. வித்தியானந்தன் வேண்டுகோள் விடுத்தார்.

இவ்விசாரணைக் குழுவில் தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதி ஒருவரோ, அல்லது இலக்கிய போதனாபீடத்தின் பிரதிநிதி ஒருவரோ நியமிக்கப்படாததும் இங்கு குறிப்பிடத்தக்கது. இக் கமிஷன் மேற்சொல்லப்பட்டது போன்ற குறைகள் இருப்பதற்கு இதுவே காரணம் என்றும் பேராசிரியர் வித்தியானந்தன் தமது வேண்டுகோளில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது பற்றி பேராசிரியர் வித்தியானந்தன் விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவித்ததாவது.

**தேசியமொழி பாதிக்கப்படும்**


ஒஸ்மன்ட் ஜயர்தினா

ஒஸ்மன்ட் ஜயர்தினா திட்டத்தில் கலைப்பாடங்களும், மொழிகளும் இரண்டாம் தரத்திற்குத் தள்ளப்பட்டு, அவை வித்தியோதயாவில் நடாத்தப்படவேண்டுமென்று கூறப்பட்டுள்ளது. இந்நடவடிக்கையின் விளைவாக தமிழ், சிங்களம் ஆகிய இரண்டு தேசியமொழிகளும் பின்னுக்குத் தள்ளப்பட்டுள்ளன.

ஜயரத்னா கமிஷன் அறிக்கை முற்றாக ஏற்றுக்கொள்ளப் பட்டால் கீழைத்தேய மொழிகளைக் கற்கும் மாணவர்கள் தொகை குறைய ஆரம்பிக்கும். தேசிய மொழிகளான தமிழையும், சிங்களத்தையும் ஊக்குவிப்பது அரசாங்கத்தின் நோக்கமாகவிருந்தால் ஜயரத்தினா கமிஷன் அறிக்கையை நிராகரிப்பதைவிட வேறு வழியில்லை.

இந்து மதக் கலாசாரம், இஸ்லாமிய கலாசாரம், தத்துவம் ஆகியவற்றை இக் கமிஷன் கவனத்துக்கு எடுக்கவில்லை. இவ்வறிக்கையின்படி இந்தப் பல்கலைக் கழகங்களில் இவ்விரு கலாசாரங்களையும் கற்கத் தேவையில்லை போலும் என்றும் பேராசிரியர் வித்தியானந்தன் தெரிவித்துள்ளார்.

*4)* இலங்கைப் பல்கலைக்கழக கீழைத்தேய மொழிப் போதனாபீடம் **1971** ஜூலை **18**ம் திகதி பின்வரும் தீர்மானத்தை எடுத்தது.

*உயர் கல்வி சம்பந்தமான ஜயரத்தினா அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் இந்நாட்டின் பல்கலைக்கழகக் கல்வி முன்னேற்றத்துக்குப் பெரும் தீமையும், நட்டம் விளைவிக்கக்கூடியனவாக விருப்பதால், அவற்றை நடைமுறைக்குக் கொண்டு வருதலைத் தவிர்க்குமாறு கல்வி மந்திரி அவர்களையும், பிரதம மந்திரியையும், மற்றும் அமைச்சர் குழு அங்கத்தவர்களையும் கேட்டுக்கொள்வது.*

*5) இக் கமிட்டி அறிக்கை சம்பந்தமாகத் தங்களுடைய கருத்துக்கள் வெளியிடப்படும் வரை நடவடிக்கை எதுவும் எடுக்க வேண்டாமெனக் கோரிப் பேராதனைப் பல்கலைக் கழகப்பேராசிரியர்கள் சுமார் நூறு பேர் பிரதமருக்குத் தந்தி அடித்தனர்.*

*பேராசிரியர்கள் டாக்டர் ஈ. ஆர். சரத்தந்திரா, டாக்டர் பி. ஈ. ஈ. பெர்னாண்டோ, டாக்டர் ஜோர்ஜ் தம்பையாபிள்ளை, டாக்டர் கே. எம். டி. சில்வா, டாக்டர் ஆஷ்லி ஹால்ப், டாக்டர் எஸ்.யூ. எஸ். சுல்தான் பாவா, டாக்டர் டபிள்யூ.ஜே.எப்.லாப்ராய் ஆகியோர் இங்கு கையெழுத்திட்டவர்களின் முக்கியமானோராவர்.*

*இது மட்டுமன்றி இன்னும் பலர் இவ்வறிக்கையைக் கண்டித்தும், இதனை அமுல்படுத்தக்கூடாதென்றும், அறிக்கைகள் விடுத்திருந்தனர்.*

*முழு அறிக்கையையும் படிக்காமல் ஒருபோதும் விமர்சனம் செய்யக்கூடாது. இப்பொழுது எமது அறிக்கை முழுவதையும் படிக்காமல், அரைகுறையாக மேலோட்டமாகப் படித்ததால் தான் இவ்வளவு எதிர்ப்புகள் ஏற்பட்டுள்ளன என்றால் கமிட்டித் தலைவர் டாக்டர் ஒஸ்மன்ட் ஜெயரத்தினா.*

*இதனை எதிர்ப்பவர்கள் அதிகமானவர்கள் பேராசிரியர்கள் தான். இதற்குக் காரணம் என்ன? டாக்டர் ஒஸ்மன்ட் ஜயரத்தினாவும் மற்றும் கமிட்டி உறுப்பினர்களும் இதற்குத் தனித்தனியாகத்தரும் காரணங்களை அடுத்து கட்டுரையில் காண்போம்.*

தினகரன் 1961 ஓகஸ்ட் 16 திங்கட்கிழமை

## 55

# மக்கள் சகாப்த முன்னோடி

**தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி ஸ்தாபகர் பாவலர் துரையப்பா பிள்ளை நூற்றாண்டு விழா அண்மையில் மேற்படி கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றபோது விழாவிற் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பேராசிரியர் கலாநிதி சு. வித்தியானந்தன் நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம்**

*இன்று மக்கள் சகாப்தம் என்று கூறப்படுகின்றது. ஆனால் **62** ஆண்டுகளுக்கு முன்பே தெல்லிப்பழையில் மக்கள் சகாப்தத்தை - மகாஜன சகாப்தத்தை -துரையப்பா பிள்ளை ஆரம்பித்து வைத்து விட்டார். பாடசாலைகளை, அரசாங்க பாடசாலைகளென, பொதுஜன பாடசாலைகளெனப் பெயரிடவேண்டுமென இப்போது கல்வி அமைச்சு கருதுகின்றது. ஆனால் பாவலர் அவர்கள் எவ்வளவு தீர்க்க தரிசனத்துடன் மக்கள் கல்லூரியாக- மகாஜனக் கல்லூரியாக - அன்றே அமைத்துவிட்டார்.*

**ஆற்றலும் ஆளுமையும்**

*மகாஜனங்களுக்குரிய கல்வி அவர்களின் சமய அடிப்படையில், அவர்களின் சொந்த மரபுகளுக்கும் பண்பாட்டிற்கும் அமையச் சகல மாணவரின் ஆற்றலையும் ஆளுமையையும் வெளிக் கொணரக் கூடிய வகையில் அமைய வேண்டும். இதனையே இன்றைய கல்வித்திட்டமும் வற்புறுத்துகின்றது. இதனைத் துரையப்பா பிள்ளை அன்றே வகுத்துவிட்டார்.*

*இந்து மக்கள் இந்து மத அடிப்படையில் தம் தேச ஆசாரங்களுக்கேற்ப கல்வி கற்பதற்கே மகாஜனக்கல்லுரியை எழுப்பினார். மாணவர் தத்தம் இயல்புக்கமைய உயர்தரப் படிப்பும் தொழில்முறைக் கல்வியும் பயிலப் பாடத் திட்டம் அமைத்தார். கைத்தொழில், விவசாயம், வர்த்தகம் ஆகிய மூன்றுமே ஓர் இனத்தின் பொருளாதாரத்தை விருத்தி செய்யும் என்பதனை நன்குணர்ந்து அப்பாடங்களை கல்லூரியிற் பயிற்றுவித்தார்.*

*இவரைப் பின்பற்றி இன்றைய கல்வி நிபுணர் மாணவருக்கு விவசாயத்தின் முக்கியத்துவத்தையும், கைத்தொழில்களின் இன்றியமையாமையையும் வற்புறுத்துகின்றனர். துரையப்பா பிள்ளை பல துறைப்பட்ட கல்விப் பீடமாக கல்லூரியை அமைத்து, புகைப்படம் பிடித்தல், புத்தகம் கட்டுதல், போன்றவற்றையும் படிப்பித்தமையை நோக்கும்போது, அவர் ஒரு செயல்முறை வீரர் என்பது தெளிவாகின்றது.*

*தாய்மொழிக் கல்வியையும் பெரிதும் போற்றியவர் அவர். இங்கிலிசும் வேணும் செந்தமிழும் வேணும் என்பது அவர் கொள்கை. சொந்தத் தமிழ் தனைச் சாஸ்திரங்கள் தமைத் துாரவிட்டுப் பிறமொழி மோகங்கொண்டவரைச் சாடுகின்றார் தமது பாக்களில்.*

இவற்றை நோக்கும்போது, இன்றைய தேசியக் கல்வித் திட்டத்தின் முக்கிய அம்சங்களை 62 ஆண்டுகளுக்கு முன்பே அவர் தமது கல்லூரியில் அமைத்திருந்தார் எனக் கூறக் கூடியதாக இருக்கின்றது. மக்கள் அரசாங்கம் வகுத்திருக்கும் கல்வி முறையில் எவ்வித கஷ்டமுமின்றி பொருந்தக்கூடிய கல்லூரி மகாஜனக் கல்லூரி ஒன்றே. சமயமும் மொழியும் இக்கல்லூரி ஸ்தாபகரின் இரு கண்கள்.

### மகாஜனப் பாவலர்

பொது சன - மகாஜன - அடிப்படையிலே இவர் செயலாற்றி வந்தார் என்பதற்கு இவர் இயற்றிய பாக்களே தக்க சான்று. மகாஜனங்களிடையே செல்வாக்குப் பெற்றிருந்த பதங்கள், கீர்த்தனங்கள், கும்மிகள் ஆகிய சந்தப்பா வகைகளைக் கையாண்டார். சாதாரண மக்களுக்கு விளங்கக்கூடிய சொற்களை வழங்கினார். அவர்களின் முன்னேற்றத்திற்கான கருத்துக்களைப் பாக்களில் வெளியிட்டார்; மகாஜனப் பாவலராக விளங்கினார்.

செல்வப் பிரபுக்கள் பற்பலர் சேர்ந்து சீர் மருவுங் சங்கம் ஏற்படுத்தி நல்ல சுதேச வைத்தியக் கல்லூரி நடத்தல் வேண்டும் எனப் போதித்தவர் அவர். அது மட்டுமன்று; இலங்கைக்கொரு பல்கலைக்கழகம் வேண்டுமென்று வாதாடியவரும் அவர். ஈழத்தில் நல்ல பல கல்லூரிகள் இருக்கின்றன; கல்வி கற்போர் தொகையும் பெரிது; எனவே, மேலாம் உயர்தரக் கல்வியை மிக்க விருத்தி செய்யும் பொருட்டுச் சர்வகலாசாலை ஒன்று கேட்டவர் அவர்.

எனவே, நடைமுறையில் அவர் கொண்டு வந்த கல்வித் திட்டமும் சீரிய கருத்துக்களும் அவரை மிக உன்னத நிலைக்குக் கொண்டு செல்கின்றன. அக்காலத்திற் சுதேசிகளுக்கு மந்திரிப் பதவி கொடுத்திருந்தால் கல்வி மந்திரிப் பதவிக்கு இவரையே நாடியிருப்பார்.

### மதிப்பும் அந்தஸ்தும்

ஆசிரியத் தொழிலுக்கு மதிப்பையும் அந்தஸ்தையும் தேடிக் கொடுத்தவர் அவர். ஆசிரியர்கள் தொழிலுக்குத் தம்மை அர்ப்பணம் செய்ய வேண்டும்; கடமை உணர்ச்சி உடையவராய் இருத்தல் வேண்டும்; ஒழுங்கு முறையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பவற்றைச் செயலிற் காட்டியவர் அவர்; இதனாலேயே சம்பளம் இல்லாமலும் குறைந்த சம்பளத்துடனும் தமது கல்லூரியில் மேலும் சிலரை ஆசிரியராகக் கடமையாற்றச் செய்யக்கூடிய சக்தி அவரிடம் இருந்தது. இன்றைய ஆசிரியர்கள் சம்பளத்திற்கு ஏற்ற வேலை செய்கின்றார்களில்லை. தம்மிடம் பயிலும் மாணவரைப் பாடசாலை வேளைக்குப் பின் பெருந்தொகை பணம் பெற்று அதே பாடத்தை வீட்டிற் சொல்லிக் கொடுக்கின்றார்கள் எனக் குற்றஞ் சாட்டப்படுகின்றது.

மேலும் அவர்கள் வகுப்புகளுக்குப் போவதில்லை; மாணவரின் முன்னேற்றத்திற் கருத்துச் செலுத்துவதில்லை; கட்டுப்பாட்டுக்கு அடங்காது தாம் விரும்பியவாறு நடக்கின்றார்கள் எனப் பொது மக்கள் கூறுவதை நாம் நாள் தோறும் கேட்கின்றோம். ஆனால், துரையப்பா பிள்ளை அவர்கள் ஆசிரியத் தொழில் மற்றெத்தொழிலினும் மான்மியமானது. அத்தொழில் எல்லாத் தொழிலுக்கும் இன்றியமையாதது என்று கொண்டவர். எனவே, அத்தொழிலுக்குப் பங்கம் ஏற்படாத வகையில் நடந்து கொண்டார்.

இதன் காரணமாக ஊரும் நாடும் அவரை மதித்தன. பள்ளிக்கூட நேரத்திற்குப் பின்பும் மாணவருக்கு இலவசக் கல்வியைத் தமது இல்லத்தில் அளித்து வந்தார். அவர்களது குடும்ப நிலைகளை அறிந்து அவற்றிற்கேற்ப மாணவரின் நலனைக் கவனித்து வந்தார். ஆசிரியரிடையேயும் மாணவரிடையேயும் ஒழுங்கை நிலை நாட்டினார். இவற்றால் ஆசிரியத் தொழிலுக்கு மதிப்பேற்பட்டது. மாணவருக்கும் ஆசிரியருக்கும் தொடர்பு ஏற்பட்டு மாணவ உலகமும் நல்லமுறையில் ஒழுகிற்று.

துரையப்பா பிள்ளை சீர் திருத்தவாதியாகவும் விளங்கினார். பாரதி தமது காலத்து மக்களின் சீர்கெட்ட நம்பிக்கைகளையும் பழக்க வழக்கங்களையும் பாடல்கள் மூலம் சாடியது போல இவரும் தமது பாக்களில் அக்காலத்திலே சமூகத்தில் தலைகாட்டிய சீதனக் கொடுமை, சாதி ஏற்றத்தாழ்வு, பிறநாட்டுப் பண்பாட்டு மோகம் முதலியவற்றைக் கண்டித்தார். ஆயினும் இவற்றிற் சிலவற்றிற்கு உடனடியாகப் பரிகாரம் காணமுடியாது என்பதனையும் உணர்ந்தார். சாதி வேறுபாடு படிப்படியாக நீங்கவேண்டியது என்ற நம்பிக்கை உடையவர்.

பெண் கல்விக்காக பரிந்து பாடிய பாவலர் வீட்டினிற் சீவியம் இன்பம் நிறைந்து விளக்குவதற்கேற்ற கல்வி அவர்களுக்கு ஊட்டினாற் போதும் என்று கருதியவர். ஆண்களோடு போட்டியிட்டுப் படித்து, உடம்பைக் கெடுத்து இல்லறம் செவ்வனம் நடத்த முடியாத பரிதாப நிலை பெண்களுக்கு ஏற்படக்கூடும் என அவர் அஞ்சியது உண்மையாகிவிட்டது.

**பாவலரின் தூரதிருஷ்டி**

எல்லோருக்கும் உத்தியோகம் இனிக் கிடையாது, தமிழ் மக்கள் பல்வேறு தொழில்களில் ஈடுபடவேண்டும் என்று அன்றே கூறியவர் பாவலர், படித்த மாணவர் நல்ல மரியாதைக்கேற்ற குணங்களில்லாதவராக, சுதேச ஆசாரங்களை முற்றும் கைவிட்டுப் பரதேசிகளாகத் திரிகின்றார்களே எனக் கவலை கொண்டார்.

மொழியிரவல், உத்தியோகம் இரவல், பழக்கவழக்கம் இரவல் என்று, வேஷம் போட்டு நடனம் செய்யும் போலியர் வேடிக்கை போல எமது வாழ்க்கை இரவல் வாழ்க்கையாக அமைந்துவிட்டதென அவர் கூறியவை இன்றும் பெருமளவிற்குப் பொருத்தமாகவே இருக்கின்றன.

எல்லாவற்றிற்கும் மேலாக நாம் துரையப்பாபிள்ளை அவர்களை, அவரின் மனத்திட்பத்திற்காக மதிக்கின்றோம். தனி மனிதன் சமய நம்பிக்கையினாலும் விடா முயற்சியினாலும், உறுதிப்பாட்டினாலும், தன்நம்பிக்கையினாலும், துணிவினாலும் எந்த இடரையும் களைத்தெறிந்து வெற்றி காணலாமென்பதற்கு அவர் ஒரு எடுத்துக்காட்டு. எந்த இன்னலையும் உயரிய இலட்சியம் கொண்ட தன்னலமற்ற கூட்டு முயற்சியினால் தகர்த்தெறிய முடியுமென்பதைச் செயலறிற் காட்டியவர் அவர், அரசாங்க எதிர்ப்பு, தனிப்பட்டவரின் பொறாமை, சமய நிறுவனங்களின் எதிர்ப்பு, பணமுடை முதலியவற்றைச் சமாளித்து மகாஜனங்களுக்கு கல்லூாரி ஒன்றனை நிறுவி, எமக்கு முன் மாதிரியாக அவர் திகழ்கின்றார்.

*அவர் தாபித்த கல்லூரியை அவர் மகன் ஜெயரத்தினம் அவர்கள் ஈழத்தின் தலைசிறந்த கல்லூரிகளில் ஒன்றாக அமைத்து எமக்கு அளித்துள்ளார். இன்று கல்லூரிகள் அரசியல் மேடையிற் பலியிடப்படுவதைக் காணுகின்றோம். அந்த நிலை மகாஜனக்கல்லூரிக்கு ஏற்படாது பாதுகாக்க வேண்டிய பொறுப்பு மகாஜனத்திற்கு உரியது. இக் கல்லூரி மேன்மேலும் வளர்ச்சியடைந்து மக்களின் தலைசிறந்த கல்வி நிலையமாக விளங்கத் தெல்லிப்பழை மக்கள் ஒத்துழைப்பாராக!*

தினகரன் 1972 ஜுலை 4 செவ்வாய்க்கிழமை



யாழ். பல்கலைக்கழக வித்தியானந்தன் நூலகத்தில் பேராசிரியர் நா. சண்முகலிங்கன் அவர்களால் வித்தியானந்தனின் சிலை திறப்பு வைபவம். (2009.10.06)

## 56

# பத்தாம் ஆண்டில் ஏற்படவிருந்த தத்திலிருந்து தப்பிப் பிழைத்து விட்டது தமிழ் ஆராய்ச்சி மன்றம்!

### தனிநாயக அடிகளின் தொண்டால் தமிழ் இன்று தலை நிமிர்ந்து நிற்கிறது. 4வது அனைத்துலக தழிழாராய்ச்சி மாநாட்டில் பேராசிரியர் வித்தியானந்தன் முழக்கம்!

**யாழ் வீரசிங்க மண்டபத்தில் 3.1.74 காலை 10 மணிக்கு நடைபெற்ற நான்காவது அனைத்து உலக தமிழராய்ச்சி மாநாட்டுத் தொடக்க விழாவில் பேராசிரியர் சு வித்யானந்தன் அவர்கள் ஆற்றிய உரை.**

*தமிழ் மன்னர் சங்கம் நிறுவித் தமிழ் ஆராய்ந்த யாழ்ப்பாணத்திலே, ஈழத்துப் பூதம் தேவனார் தொடக்கம் பண்டிதமணி கணபதிப்பிள்ளை வரை தமிழ் வளர்த்த தமிழர் தலைநகரிலே, தமிழ் ஆராய்ச்சி நடத்த வந்துள்ள பேரறிஞர்களையும், பொது மக்களையும் அனைத்து உலக தமிழ் ஆராய்ச்சி மன்ற இலங்கை கிளையின் சார்பிலே வரவேற்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றோம். பெருமை கொள்கின்றோம். உங்கள் யாவரினது வரவும் நல்வரவாகுக. மகா நாடு முடிந்து நீங்கள் "போய் வருகின்றோம் " என்று கூறும் போது கூட நாம் "போய் வாருங்கள் " என்று கூறாமல் வரப் போகிறீர்களா என்று தான் கேட்போம்.*

*தமிழகத்திற்கு அடுத்தாற் போலத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு நடத்துவதற்கேற்ற தகுதி உரிமை யாழ்ப்பாணத்திற்கே உரியது யாழ்ப்பாணம் வீறுபடைத்த தமிழர் நிலம். அதற்குச் சொற்றிறனும் உண்டு விற்றிறனும் உண்டு . ஆதி முதலே அது அந்நியர் அட்டூழியங்களை எதிர்த்து எதிர்த்து வந்திருக்கிறது. யாழ்ப்பாணத் தமிழர் மற்றவர்க்கும் சளைத்தவர் அல்லர் எல்லாத் துறைகளிலும் அவர் முந்தி நிற்கின்றார்கள் என்று தமிழகத்தில் யோகி சுத்தானந்தர் அவர்களே கூறி இருக்கின்றார்கள்.*

*இம் மகா நாடு தொடர்பாக டாக்டர் சாலை இளந்திரையன் அவர்கள் எமக்கு எழுதிய மடலில் குறிப்பிடுகின்றார். தமிழ் நலன், தமிழ் உணர்ச்சி என்பவற்றில் தாய் தமிழகத்தை விட ஈழத் தமிழகத்தாரே ஆர்வம் மிகுந்தவர்கள் என்பது என் கணிப்பு. அங்குள்ள அரசியலும் மற்றும் சமுதாய சூழ்நிலைகளும் இதற்கு ஒரு காரணம் என்றாலும் ஈழத்தின் ஆர்வப் பெருக்கை யாரும் குறைத்து மதிப்பிட முடியாது.*

*இவ்வாறு தமிழகத்தாரே பெருமிதம் அடையும் வகையில் தமிழ் ஆர்வமும் தமிழ்ப் பற்றும் கொண்ட நாம், யாழ்ப்பாணத்தில் தமிழ் ஆராய்ச்சி மகாநாடு நடத்துவது பொருத்தமானது. ஏற்றமானது உயரியமானதும் கூட. உண்மைத் தமிழ் உணர்ச்சி உள்ள எவரும் ஈழத் தமிழ் பேசும் மக்களின் பாரம்பரியத்தை தமிழ் தொண்டை அறிந்த எவரும் இதனை வரவேற்பார்.*

ஈழத் தமிழ் பேசும் மக்கள் தமிழ் மொழிக்காற்றிய தொண்டு சாலப்பெரிது. தமிழ் மொழி வளர்ச்சியில் பல துறைகளில் ஈழநாட்டுப் பெரியாரே வழிகாட்டி உதவியுள்ளார். இறக்கும் நிலையிலிருந்து ஏட்டுச் சுவடிகளுக்கு உயிர் கொடுத்தவர் ஈழ நாட்டவரே. தெளிவான நடையில் வசன நூல் பல எழுதியும் பழந்தமிழ் நூல்கள் பலவற்றை ப்புதுப்பித்தும் வழிகாட்டியவர் ஈழத் தமிழ் பெரியாரே. தமிழ் மக்களின் பண்பாட்டை நாகரீகச் சிறப்பை முதன்முதல் புலப்படுத்தி தமிழ் இலக்கியப் பெருமையை தெளிவாக உணர்த்தி தமிழர் வரலாற்று ஆராய்ச்சிக்கு அடி கோலியவர் ஈழநாட்டு பெருமகன் ஒருவரே. தமிழ் முதன் முதல் வெளியிடப்பட்ட கலைக்களஞ்சியத்தின் ஆசிரியர் யாழ்ப்பாணத்தவர். மேல்நாட்டு முறையில் முதன் முதல் தமிழ் அகராதி இயற்றிய தமிழர் ஈழத்து நாட்டவர் ஒருவரே. இசைத் தமிழ் வரலாற்றைத் தமிழ் உலகிற்கு வழங்கியவர் ஈழத்து விபுலானந்த அடிகளே. அவரே தமிழகத்தில் பல்கலைக்கழக முதல் தமிழ் பேராசிரியராகவும் விளங்கினார்.

விஞ்ஞான நூல்கள் பல எழுதியும் விஞ்ஞான கல்வியை தமிழில் போதித்தும் வழிகாட்டிய பெருமை ஈழத்திற்குரியது. பேச்சு வழக்குத் தமிழை எழுதிற் பொறித்து நாடகங்களை எழுதியவரும் ஈழநாட்டு பேராசிரியர் ஒருவரே. இது போன்ற பல துறைகளில் வழிகாட்டி தமிழ் அன்னைக்கு கை கொடுத்து அவளைத் தாங்கி வந்திருக்கின்றது ஈழநாடு.

சுருங்கக் கூறின் 19ஆம் நூற்றாண்டிலும் 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் தமிழ் தொண்டிலே முன்னணியில் நின்றவர்கள் ஈழத்தவர்களே. கடந்த 25 ஆண்டு காலத்திற்கு கூட புதிய துறைகளாகிய சிறுகதை, நாவல்கள் போன்றவற்றிலும் கவிதையிலும் ஈழத்தவர் பெரும் சாதனைகளை நிலைநாட்டியுள்ளனர். இலங்கை பல்கலைக்கழகத்தை பொறுத்தவரையில் தமிழ் இலக்கியம், இலக்கணம், மொழியியல், ஆகிய துறைகளிலும் தமிழர் வரலாறு தொல்பொருளியல் பொருளாதாரவியல் போன்ற துறைகளிலும் பல ஆராய்ச்சிகள் வெளிவந்துள்ளன. இலங்கை பல்கலைக்கழகத்தில் பல பகுதிகளிலும் தமிழ் அறிஞர்கள் நிகழ்த்திய ஆராய்ச்சிகள் மிகவும் உயர்ந்த தரமானவை என பிற நாட்டறிஞர்கள் பாராட்டிப் போற்றி இருக்கின்றனர்.

**ஈழத்தின் பெருமை**

மேலும் தமிழகத்திற்கு அடுத்ததாக ஈழத்திலேயே தமிழ் மொழி உயிர் துடிப்புடன் விளங்குகின்றது. தென்னிந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், பர்மா, மொரேசிரியஸ், இந்தோனேசியா , வியட்நாம், பிஜி, தென் ஆப்பிரிக்கா , ரோடிசியா குடெலோட், மாற்றினிக், றியூனியன், றினிடாட், போன்ற தேசங்களில் தமிழர் வாழ்கின்றனர். ஆனால் இத்தேசங்கள் பலவற்றில் அவர்கள் தமிழராக வாழ வில்லை. தமிழில் பேச முடியாது தவிக்கின்றனர். சிலர் பெயரளவிலே - இங்குள்ள சிலர் போல - தமிழராக இருக்கின்றனர். இந்த நிலையிலேயே தமிழகத்திலும் தமிழ் வாழ்கின்றது. உயிர் துடிப்புடன் விளங்குகின்றது: ஈழத்திலே பல்கலைக்கழகத்தில் போதனா மொழியாகவும் இடம்பெற்றுள்ளது. இத்தகைய சூழலில் இங்கு தமிழ் ஆராய்ச்சி மகாநாடு கூடுவது பொருத்தமானதே.

இச்சந்தர்ப்பத்திலே, அனைத்து உலக தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் தோற்றம் பற்றியும் வளர்ச்சி பற்றியும் சிந்தித்தல் அவசியமாகின்றது. அனைத்து உலக தமிழ் ஆராய்ச்சி

மன்றத்திற்கு இன்னும் நான்கு நாட்களில் பத்து வயது முடிகின்றது. 1964ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் புதுடில்லியில் நடைபெற்ற அனைத்து உலக கீழைத்தேய தேசிய அறிஞர் மகாநாட்டின் போது, ஜனவரி மாதம் ஏழாம் நாள் அனைத்து உலக தமிழர் ஆராய்ச்சி மன்றம் நிறுவப்பட்டது. பதினைந்து நாடுகளிலிருந்து அறிஞர்கள் கூடி இம்மன்றத்தினை நிறுவினர். இலங்கையின் பிரதிநிதியாக பேராசிரியர் கணபதிப் பிள்ளையும், மலேசியாவின் பிரதிநிதியாக வணக்கத்திற்குரிய தனிநாயக அடிகளும் பண்டிதர் இரத்தினமும் தொடக்க விழாவில் பங்குபற்றினர். அதன்பின் அம் மன்றம் மலேசியாவிலும், இந்தியாவிலும், பிரான்சிலும் மூன்று தமிழராய்ச்சி மகாநாடுகளை நடாத்தியது. இம்மன்றம் பத்து ஆண்டு நிறைவு விழாவை அடுத்த திங்கட்கிழமை 7ஆம் தேதி நான்காம் மகாநாட்டின் போது யாழ்ப்பாணத்தில் கொண்டாட இருக்கின்றது.

**சாதனை**

பத்தாண்டு காலமாக இம்மன்றம் சாதித்தவை யாவை? முதலாவதாக தமிழ் இலக்கியம் பற்றியோ மொழிபற்றியோ ஆராயும் உரிமை தமிழைத் தாய் மொழியாக கொண்டவருக்கு உரியது என்ற கொள்கையை இது தகர்த்தெறிந்து விட்டது. தமிழ் ஆராய்ச்சி குறுகிய எல்லைகளுள் கட்டுப்பட்டிராது. பரந்து விரிந்து பல துறைகளில் விருத்தி அடைந்துந்துள்ளது. தமிழ் இலக்கியம் பற்றியும், இலக்கணம் பற்றியும், உள்ள ஆராய்ச்சி மட்டும் தமிழ் ஆராய்ச்சி என்ற நிலை மாறி தமிழர் பண்பாடு, தமிழர் வரலாறு தமிழர் தொல்பொருளியல், சமூகவியல் போன்ற துறைகளிலும் ஆராய்ச்சி விரிந்து சென்றிருக்கின்றது. தமிழ் இலக்கியத்தின் சிறப்புப் பற்றியும் பண்பாட்டின் வளர்ச்சி பற்றியும் தொன்மை பற்றியும் மொழியியல் பற்றியும் பல உண்மைகள் வெளிவந்தன. இவை யாவற்றையும் ஒன்று திரட்டிப் பல நாடுகளிலும் தமிழராய்ச்சி செய்கின்ற அறிஞர் தமது ஆராய்ச்சி முடிவுகளைப் பொது மன்றம் ஒன்றில் சமர்ப்பித்து பயன் பெற தமிழராய்ச்சி மன்றம் வழி வகுத்திருக்கின்றது. இது ஒரு பெரும் சாதனை என்றே கூற வேண்டும்.

ஆராய்ச்சி மகாநாடுகளில் அறிஞர்களை கருத்து பரிமாற செய்ததோடு, பார்வையாளராக கலந்து கொண்ட பலர் தமிழராய் தமிழ் ஆராய்ச்சியில் ஈடுபடவும் ஆராய்ச்சி மகாநாடுகள் காலாக இருந்தன. ஒவ்வொரு மகாநாட்டின் பின்பும் தமிழ் ஆராய்ச்சி செய்வோர் தொகை பெருகிக் கொண்டு வந்தது. கடந்த மூன்று மகாநாடுகளில் ஆராய்ச்சி கட்டுரைகள் படித்தோர் பெயர்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இவ்உண்மை புலப்படும். ஒவ்வொரு மகாநாட்டிலும் பழைய பிரதிநிதிகளுடன் பல புதிய அறிஞர்களும் கலந்து கொள்வதை அவர் அவதானிக்கலாம். எனவே இம் மகாநாடுகள் தமிழ் ஆராய்ச்சியில் அறிஞரை ஈடுபடத் தூண்டியதோடு ஆராய்ச்சியாளர் தொகையையும் விரியச் செய்திருக்கின்றது.

**தலை குனிவு**

மேலும் இன்று பிற நாடுகள் பலவற்றில் உள்ள பல்கலைக்கழகங்களில் தமிழை ஒரு பாடமாக அமைப்பதற்கும், தமிழ் ஆராய்ச்சியில் அப்ப பல்கலைக்கழகப் பேராசிரியர்களை ஈடுபடச் செய்வதற்கும் இம் மன்றமே காலாக இருந்தது. ஒரு காலத்தில் மேநாட்டுப் பல்கலைக்கழகங்களில் சமஸ்கிருதம் பற்றியும், இந்தோ ஆரிய மொழிகள் பற்றியுமே

*ஆராய்ச்சி செய்து வந்தனர். இப்பொழுது அந்நிலை மாறி, தமிழ் மொழி தமிழ் இலக்கியம் தமிழர் வரலாறு தமிழர் பண்பாடு முதலியன பற்றியும் ஆராய்ச்சி செய்கின்ற நிலை அப்ப பல்கலைக்கழகங்களில் உருவாகி வளர்ச்சி பெற்றிருக்கின்றது. முன்பு பிற நாட்டவர் சமய பிரச்சாரத்திற்கும் வணிகப் பெருக்கத்திற்கும், அரசியல் ஆதிக்கத்திற்குமே தமிழைப் பெரும்பாலும் கற்றனர். ஆனால் இன்று ஆராய்ச்சியாகவும் தமிழ் மொழியின் சிறப்பியல்புகளுக்காகவுமே தமிழை அவர்கள் கற்கின்றனர். அவர்களின் தமிழ்ப் பற்றையும் அபிமானத்தையும் அவர்கள் தமக்கு தமது பிள்ளைகளுக்கும் தமிழ் பெயர்களை வைப்பதிலிருந்து மதிப்பிடலாம். ரஷ்யாவில் உள்ள அறிஞர்கள் செம்பியன், ஐங்குன்றன் என்று தமிழ் பெயரைத் தமக்குச் சூட்டிக் கொள்ளும் அளவிற்கு தமிழ் அபிமானம் கொண்டுள்ளனர். செக்கோசிலவக்கியாவிலுள்ள தமிழ் ஆராய்ச்சியாளர் ஒருவர் தன் மகளுக்கு கண்ணம்மா என்று பெயரிட்டுள்ளார். நாம் எமது பிள்ளைகளுக்கு தமிழ் பெயர்கள் வைப்பது சினிமா நட்சத்திரங்களின் பெயர்களை சூட்டி தமிழ் இனத்தின் மானத்தை வாங்குவதை எண்ணும்போது தலைகுனிய வேண்டி இருக்கின்றது. பிறநாட்டவர் தாம் இறந்த பின்பு தமது கல்லறையில் 'தமிழ் மாணவர்' எனப் பொறிக்கப்பட வேண்டும் என விரும்புகின்றனர். தமிழ் அபிமானம் கொண்ட இவர்கள் மறு பிறப்பெடுத்தால் தமிழராகப் பிறக்க விரும்புகின்றனர். இப் பிற நாட்டவரை எம் மகாநாட்டிற்குவர விட வேண்டாம் என எம்மிடையே சிலர் வற்புறுத்தியதை நினைக்கும் போது தலை நிமிர்ந்து நிற்க முடியாமல் இருக்கின்றது.*

**அடிகளார் தொண்டு**

*இவ்வாறு பிறநாட்டவர் இடையே தமிழ் ஆர்வத்தையும் தமிழ் ஆராய்ச்சியையும் வளர்த்த மன்றத்தின் தொண்டினை மதிப்பிடும்போது, இம்மன்றத்தின் ஸ்தாபகர் வண.தனிநாயக அடிகளை நாம் பாராட்ட வேண்டியவர்கள் ஆகின்றோம். தனிநாயக அடிகள் தமிழ் தூதர், உலக ஆசைகளை துறந்திருப்பினும் தமிழ் ஆசையை துறவாதவர் தாம் செல்லும் நாடுகளில் தமிழ் தூதராய் விளங்கித் தமிழின் மென்மையையும் தொன்மையையும் பற்றி சொற்பொழிவுகள் நிகழ்த்தியும் கட்டுரைகள் எழுதியும் வானொலியின் பேசியும், அந்த அந்த நாட்டு மக்களுக்கு தமிழ் மொழி இடத்தில் அன்பு அக்கறையும் ஏற்படச் செய்தவர், உலகமெல்லாம் தமிழ் முழங்க தமிழ் பண்பாடு (*Tamil culture*) என்ற ஆங்கில முத்திங்கள் இதழ் ஒன்றை தோற்றுவித்து , அதன் ஆசிரியராகவும் பணி செய்தவர். இத்தொண்டுகள் யாவற்றிலும் மேலாக இது வரை யாரும் செயதிராத பெரிய அளவில் ஐரோப்பிய, ஆப்பிரிக்கா ஆசியா முதலிய எல்லா கண்டங்களிலும் உள்ள தமிழ் அறிஞர்களை ஒன்று கூட்டி அனைத்துலக தமிழ் ஆராய்ச்சி மன்றத்தினை நிறுவியவர்.*

*எனவே இம்மன்றம் அவரின் குழந்தையாகும் இக் குழந்தையைக் கடந்த பத்தாண்டாக சீராட்டித் தாலாட்டி வளர்த்து, அதன் பத்தாண்டு நிறைவு விழாவினை பிற நாட்டுப் பேரறிஞர்களும் கூடியுள்ள இவ் அரங்கிலே உள்ளம் குளிரக் கண்டு ,மகிழ்கிறார் குழந்தை வளர்ப்பு எவ்வளவு கடினமானது என்பதை நீங்கள் அறிவீர்கள் இந்த குழந்தைக்குப் பத்தாவது ஆண்டு இறுதியில் ஒரு தத்து ஏற்பட்டது. அப்போது குழந்தையை தவிக்க வைத்து ஓடி விட்டனர் என்ற பழியை அடிகளார் மீது பலர் சுமத்த முயன்றார்கள். குழந்தை துரோகம் அறியாத தமிழ் பண்பாட்டின் காவலர் அவர் எனவேதான் தத்திலிருந்து*

குழந்தையைத் தப்ப வைக்க எம்மோடு சேர்ந்து உழைத்தார். இக் குழந்தையின் வளர்ச்சியே தமது லட்சியம் என்பதை நான்காவது மகாநாட்டை திறந்து வைக்க முன்வந்ததிலிருந்து உலகறிய செய்திருக்கின்றார் அவருக்கும் நாம் பெரிதும் கடமைப்பட்டுள்ளோம்.

இம் மகாநாடு குறுகிய தமிழ் விழா அன்று. அனைத்து உலக தமிழராய்ச்சி மகாநாடு என்பதை நிலை நாட்டுவதற்காக, ஏற்பட்ட இன்னல்களையும் தடைகளையும் பொருட்படுத்தாது இந்தியா, மலேசியா, இங்கிலாந்து, இத்தாலி, ஸ்வீடன், சுவிஸ்லாந்து, அமெரிக்கா, கனடா , கங்கேரி, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் இருந்து இங்கு வந்து சமூக மளித்துள்ள பிற நாட்டு பிரதிநிதிகளுக்குப் பெரிதும் நன்றியுடையோம்.

தமிழ் இனவாதத்தை வளர்க்கும் மகாநாடன்று; தேசிய மகா நாடாகும். இம் மகா நாடு என்பதை எடுத்துக்காட்டும் முகமாக இம் மகாநாட்டிற் பிரதிநிதிகளாகவும் பார்வையாளராகவும் கலந்து கொள்ளும் சிங்கள, முஸ்லிம் அறிஞர்களையும் நாம் பணிவுடன் வரவேற்கின்றோம். மட்டக்களப்பு, திருகோணமலை, மலைநாடு, வவுனியா, மன்னர், முல்லைத்தீவு போன்ற பிரதேசங்களில் இருந்து இங்கு குழுமியுள்ள அன்பர்களுக்கும் எமக்கு உறுதுணையாக இருந்து இவ் மகாநாட்டை திட்டமிட்டபடி நடத்துவதற்கு பலவகையிலும் உதவிய பொதுமக்களுக்கும் நாம் தலை வணங்குகின்றோம்.

ஈழத்திலே இத்தகையதொரு மகாநாடு மொழிக்கென அகில உலக அடிப்படையில் நடைபெறுவது இதுவே முதல் தடவையாகும். இம் மாநாடு தொடங்குவதற்கு முன்பே அது உலகப் பிரசித்தி பெற்றுவிட்டது .இம் மகாநாட்டின் வெற்றியை உலகம் ஆவலுடன் எதிர்பார்க்கின்றது அதற்கு உங்கள் யாவரினதும் ஒத்துழைப்பு நாடுகின்றேன் “இறைவன் எம்மை நன்றாக படைத்தான் தன்னை நன்றாக தமிழ் செய்யுமாறே”

சுதந்திரன் 1974 ஜனவரி 13 ஞாயிற்றுக்கிழமை

# 57

# அறிஞர்களையும் பொதுமக்களையும் அவமதித்தவர் துரையப்பா!

## யாழ் மேயரை 'Funny Mayor' ' நவீன மேயர்' என்று வருணித்தார் செருமானியர்! துரோகப்பரின் பித்தலாட்டங்களுக்கு வித்தியானந்தனின் சூடான பதில்

**17.1.74 ல் யாழ்ப்பாணத்தில் பத்திரிகையாளர் கூட்டத்தில் யாழ் மாநகரசபைத் தலைவர் அல்பிரட் துரையப்பா உண்மைக்கு மாறான பல தகவல்களை வெளியிட்டு, அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்ற இலங்கைக் கிளையின் மீது பல பழிகளைச் சுமத்தியிருப்பதனால், அவருக்கும் நான்காவது ஆராய்ச்சி மாநாட்டிற்கும் உள்ள தொடர்பை விளக்கிப் பதில் கூறும் வகையில் இவ்வறிக்கை இடம் பெறுகின்றது.**

*நான்காவது தமிழ் ஆராய்ச்சி மாநாட்டைத் திட்டமிட்டபடி யாழ்ப்பாணத்தில் வெற்றிகரமாக நடத்தி முடித்த அமைப்புக்குழு, அம்மாநாட்டைக் கடந்த 3 மாத கால எல்லையுடன் சிறப்பாக நடத்தியது என்பதை முதலிற் குறிப்பிட விரும்புகின்றேன். நான் தலைவர் பதவியை ஏற்றுப் புதிய அமைப்புக்குழு தெரிவு செய்யப்பட்டு, நாம் இயங்கத் தொடங்கியது 73ம் ஆண்டு ஒக்ரோபர் 1ம் திகதியிலிருந்தே.*

*1) யாழ்ப்பாணத்திலே வாந்திபேதி நோய் பரவியதன் காரணத்தினால் யாழ்ப்பாணத்தில் மாநாடு நடத்துவது பற்றிச் சில உறுப்பினரிடையே அபிப்பிராய பேதம் இருந்ததனால், இது பற்றி வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கு எழுதி, அவர்கள் கட்டாயம் யாழ்ப்பாணத்திலேதான் மாநாட்டை குறித்த காலத்தில் நடத்தவேண்டுமென்று வற்புறுத்தியதன் பெயரால், நவம்பர் மாத இறுதியில் திட்டமிட்டபடி யாழ்ப்பாணத்திற்கு டிசெம்பர் முற்பகுதியில் வந்த அமைப்புக் குழுவினர் மேயர் துரையப்பாவுடன் இது பற்றித் தொடர்பு கொண்டனர்.*

*டாக்டர் கோபாலபிள்ளை மகாதேவா, திருவாளர் வி.எஸ் துரைராஜா சச்சிதானந்தன் ஆகியோருடன் நான் மேயரின் அலுவலகத்திற்குச் சென்று எங்கள் திட்டம் பற்றிக் கூறி, திறந்த வெளி அரங்கை மாநாட்டு நிகழ்ச்சிகளுக்குத் தரவேண்டும் என்றும், மாநகரசபை வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கு வரவேற்பு அளிக்கவேண்டும் என்றும் கேட்டோம். அத்துடன் இம்மகாநாட்டில் எந்தக் கட்சியைச் சேர்ந்த அரசியல் வாதிகளுக்கும் மேடை அளிக்கப்படாதென்றும் அரசியல் வாதிகள் பதிவு செய்து கட்டுரை சமர்ப்பித்து கல்வி ஆய்வுக்குழு அக்கட்டுரை தகுதியுடையதென ஏற்றுக்கொண்டால், அவர்கள் பிரதிநிதிகளாகக் கலந்து கொள்ளலாம் என்று வற்புறுத்திக் கூறினேன்.*

*எனினும், முதலாம் நாள் காலை நிகழ்ச்சிக்கு தொடக்க விழாவிற்கு எல்லா நாடாளுமன்ற உறுப்பினர் முதலியோரும், எல்லா அரசியல் கட்சித் தலைவர்களும் செலாளர்களும், யாழ் மாநகர சபைத் தலைவரும் உறுப்பினர்களும் அழைக்கப்படுவார்கள் எனவும் கூறினோம். ஆனால் அவர்கள் மாநாடிற் பிரதிகளாக கட்டுரையாசிரியர்களாக பதிவு*

செய்த பர்வையாளராக இருக்காவிட்டால் பேச அனுமதிக்கப்படமாட்டார்கள் என்பதனைச் சுட்டிக் காட்டினோம்.

இவற்றுக்குக் செவிமடுத்த மேயர் திறந்த வெளியரங்கு பாவிப்பதற்கு மனுச்செய்தால் அதனைத் தரலாமென்றும், வரவேற்பு அளிப்பது தமது கடமையென்றும் அரசாங்கம் சார்பில்வாதிருந்தாலும் வரவேற்பளிப்பது நமது கடமையென்பதை அவர்களுக்குக் கூறும்வேன் என்றும் கொழும்பு சென்று தமது கட்சிப் பிரமுகர்களுடன் பேசிய பின் எம்மோடு தொடர்பு கொள்வதாகவும் பதில் அளித்தார்.

2) கொழும்பிலிருந்து திரும்பிவந்ததும் அவருடன் நான் தொடர்புகொண்டபோது, மாநகரசபை திறந்த வெளியரங்கைத் தரமுடியாதென்றும், வரவேற்பளிக்க முடியாதென்றும் கூறினார். "தனிநாயக அடிகள் உங்களுடன் இல்லை; பொது மக்கள் இம்மாநாட்டிற்கு மாறானவர்கள்" என்று குழப்பியடித்தார். அரசாங்கத்தின் எதிர்ப்பில் பொது மக்கள் ஆதரவோடுதான் இதனை நடத்துகின்றோம். பொது மக்களுக்குப் பயன்படுத்துவதற்காகக் கட்டப்பட்ட திறந்த வெளியரங்கைத் தரவேண்டும். வரவேற்பில்லாது விட்டாலும் கவலையில்லை" என்றேன். அதற்கு அவர் கூறிய பதில் "பொதுமக்கள் அபிப்பிராயம் பற்றி நீரா எனக்குச் சொல்லுகிறீர்; எனக்கு 25 ஆண்டுகளுக்கு மேற்பட்ட தொடர்பு பொது மக்களுடன் உண்டு. நீர் இன்று வந்து, எனக்கு உபதேசம் பண்ணுகிறீர். பொதுமக்கள் உங்களுக்குமாறு. திறந்த வெளியரங்கு பொது மக்களுக்குரியதாயினும் அதனை வழங்கும் அதிகாரம் எனக்குண்டு; நான் தரமாட்டேன்; நீங்கள் வேறு இடம் பாருங்கள்.

3) இங்கு யார் யாரை அவமதித்தார் என்பது கவனிக்க வேண்டியது. நாம் முதலிற் சந்தித்தபோது, மனுச்செய்தால் திறந்தவெளி அரங்கைத் தரலாமென்றும், வரவேற்பளித்தல் தமது கடமையென்றும் கூறிய 'மேயர்' கொழும்பிலிருந்து திரும்பி வந்ததும் திறந்த வெளியரங்கை தரமுடியாது என்றும் பிற நாட்டு பிரதிநிதிகளுக்கு வரவேற்பு அளிக்கமுடியாது என்றும் கூறியதன் தன் வாயிலாக ஆராய்ச்சிமன்ற அமைப்புக் குழுவினையும், பிறநாட்டு அறிஞரையும் - பொது மக்களையும் அவமதித்தார் என்பது யாவரும் புரிந்து கொள்ளக்கூடிய உண்மையாகும்.

4) இந்தஅவமானம் போதாதென்று, மாநகரசபை உறுப்பினர் சிலர் மகாநாட்டிற்கு ஆதரவு அளிப்பது பற்றிக் கொண்டு வந்த பிரேரணையைப் பிரேரிக்கவேவிடாது, மேயரும் அவர் கட்சியினரும் அப்பிரேரணையைத் தோற்கடித்தபோது, யார், யாரை அவமதித்தார்கள் என்பது உலகப் பிரசித்தி பெற்றுவிட்டது. அக்கூட்டத்தில் நடந்த விவாத மூலம், மேயர் வெளிநாட்டுப் பிரதிநிதிகளையும் பொது மக்களையும் ஆராய்ச்சிமன்ற அமைப்புக் குழுவினையும் எவ்வளவிற்கு அவமதித்தாரென்பது அம்பலமாகிவிட்டது. செய்தித்தாள்களில் வந்த செய்திகள் இக்கூற்றை நிரூபிக்கும்.

இம்மகாநட்டில் தமது அரசியல் செல்வாக்குக்காக அரசியலைப் புகுத்திய குற்றம் மேயருக்குரியது.

5) அரசாங்கமும், மாநகரசபையும், எதிர்ப்பையும் பல தடைகளை விதிப்பதையும் கண்ட பொது மக்கள், எழுச்சி பெற்ற எமது தூண்டுதல் இல்லாதே, தாமாக நகரை அலங்கரித்தும், நிதி உதவி நல்வியும் எமக்கு ஆதரவு அளித்தனர். உடனே அரசாங்கம் வெளிநாட்டுப் பிரதிநிதிகளை இங்கு வருவதற்கு விதித்த தடையை நீக்கியது.

*மக்களின் எழுச்சியையும் அரசாங்கத்தின் மனமாற்றத்தையும் கண்ட மேயர் திகில் அடைந்து இச்செய்தி கிடைத்த அடுத்தநாட் காலை திரு.வி.எஸ். துரைராஜாவைத் தமது அலுவலகத்திற்கு அழைத்து, மாநகரசபை திறந்த வெளியரங்கைத் தரும் என்றும், வரவேற்பு அளிக்குமென்றும் கூறினார்.*

*பொதுமக்கள் நலன் கருதியும், வெளிநாட்டில் யாழ் மாநகர சபைக்குப் பங்கம் ஏற்படக்கூடாதென்றும் நாம் கருதியதனால் இதனை ஏற்றோம். வரவேற்புக்கும் சென்றோம். ஆனால் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் வரவேற்புக்குச் செல்லவில்லை. அவர்களைச் செல்லவேண்டாமென அமைப்புக்குழுவினர் தடைசெய்யவில்லை. மேயரினது போக்கையும் மாநகரசபையின் நடத்தையையும் இங்கு வரமுன்பே செய்தித்தாள்கள் மூலம் அறிந்து அதனால் அவஸ்தைப்பட்ட வெளிநாட்டுப் பிரதிநிதிகள் தம்மை அவமதித்த வாசலில் மிதிக்க மறுத்ததில் என்ன குற்றம்? மேயரின் பித்தலாட்டங்களை அவர்கள எப்படி அறிவார்கள்?*

*செருமானிய தேசத்துப் பிரதிநிதியொருவர் எங்கள் மேயரை “நூதன மேயர்” '*Funny mayor*' என்று அழைத்ததில் என்ன வியப்பு. அப்பிரதிநிதிகளிற் சிலர் பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையில் இளைஞரின் எழுச்சியையும் தன்மானத்தைக் கருதியே தாம் போகவில்லை என்று கூறியதை எவரும் அறிவர். வெளிநாடுகளில் நூதன மேயரைப் பற்றி வெளிவரும் செய்திகளையும் மேயர் படித்துப் பார்ப்பாராக!*

*6) மாநாட்டுக் கருத்தரங்கிற் பங்கு பற்றுவோர் ரூபா 100/= கட்டிப்பதிவு செய்தாற்றான் பங்கு பற்றலாம். அமைப்புக்குழுவினரும் ஏனையோரும் அப்படியே பதிவு செய்தனர். மாநாடுகளின் ஒழுங்குகள் பற்றி அறியாத மேயர் தன்னிடமிருந்த ரூபா 100/= பதிவுப் பணமாகக் கேட்டார்கள் என்பது அவரின் அறியாமையை மேலும் துலக்குவதாகும்.*

*7) தொடக்க விழாவிற்கு வர ஆசனத்தைப் பதிவு செய்யவேண்டிஇருந்ததனால் தான் வரவில்லை; அது அவமானம் என்கின்றார். இத்தகைய மாநாடுகளில் இப்படித்தான் நடப்பது என்பதை அவர் அறியார் என்பதே இதிலிருந்து பெறப்படுவது. பிரதம மந்திரி உட்படப் பலருக்கு அழைப்புக்கள் அனுப்பப்பட்டன. அவர்களும் ஆசனம் தேவைப்படின் வருவது பற்றி அறிவிக்க வேண்டுமெனக் கேட்டிருந்தோம். மேயர் ‘சிறுமை’த் தனமாக நடந்துகொள்வது நகைப்புக்கு இடமாகும்.*

*8) தானே மகாநாட்டைத் திறந்திருக்க வேண்டுமாம்; தமிழாராய்ச்சி மாநாடுகள், ஒன்றில் தேசாதிபதிகளால் அல்லது உலக ஆராய்ச்சிமன்ற உறுப்பினராலேயே திறந்து வைக்கப்பட்டன. அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றத் தாபகரும் அதன் பொதுச் செயலாளருமான வண. தனிநாயக அடிகளா, மேயரா திறந்து வைக்கத் தகுதியுடையவர்?*

*9) தொடக்கத்திலேயே ஆதரவளித்து ஒத்துழைத்திருந்தால், மக்களின் மதிப்பை பெற்றிருப்பார்; நடைபெற்ற அசம்பாவிதங்களும் நடைபெற்றிரா. தடுமாறும் உள்ளங்கொண்ட துரையப்பா அரசியற் கண்ணோட்டத்தில் நடந்து கொண்டதனால் மக்கள் தம்மேற் பழிசுமத்துகின்றனர் எனத் தாமே கூறுகின்ற நிலைக்கு வந்துவிட்டார். பரிதாபமான நிலைதான்!*

*இறுதிநாள் நடைபெற்ற அசம்பாவித நிகழ்ச்சி மாநாட்டின் வெற்றியையோ, அதற்கு எதிராக இருந்தவர்களின் சதிகளையோ மறைக்கவோ மறுக்கவோ முடியாது. மக்கள் தீர்ப்பும் மகேஸ்வரன் தீர்ப்பும் என்று மேயர் கருதுவாரானால், யார் பக்கம் செல்வாக்கு, யார் பக்கம் நல்லெண்ணம் இருக்கிறது. யார், யாரை அவமதித்தர்கள் என்பதை பொது மக்கள் மத்தியில் தீர்ப்புக் காண நான் தயார்.*

சுந்திரன் 1974 தை 27 ஞாயிற்றுக்கிழமை



ஓவியர் இராசையாவின் கைவண்ணத்தில் வித்தியானந்தன்

# பல்கலைக்கழகத் தமிழ் சங்கப் பொன்விழா இன்று ஆரம்பம்

**பேராதனையிலுள்ள இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கத்தின் பொன்விழா இன்றும் நாளையும் கலைமண்டபத்தில் மிக விமரிசையான முறையிலே நடைபெறவுள்ளது. தலைவர் திரு. நவரெத்தினம் சிறப்பான முறையிலே ஏற்பாடுகளைச் செய்திருக்கின்றார்.**

*தமிழ்த்துறைப் பேராசிரியரும் பெருந்தலைவருமான கலாநிதி சு. வித்தியானந்தன் விடுத்துள்ள செய்தி பின்வருமாறு: பல்கலைக் கழகத்திலே பயிலும் தமிழ் மாணவருக்கு எழுத்து, நாடகம், பேச்சு முதலிய பல்கலைகளில் ஆர்வத்தைப் பெருக்கும் நோக்குடன் ஐம்பதாண்டுகளுக்கு முன்னர் அப்போது, கணிதப் பேராசிரியராக இருந்த திரு. சி.சுந்தலிங்கம் அவர்கள் நிறுவியதே பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கம். கலைத்துறை 1942ம் ஆண்டு பிற்பகுதியில் பேராதனைக்கு மாற்றப்படுமுன், தமிழ்ச்சங்கத்தின் வெள்ளிவிழாவைக் கொழும்பிற்கொண்டாடினோம்.*

*பேராதனைக்கு வந்து 23ஆண்டுகளாகிவிட்டன. 1977ம் ஆண்டிற் சங்கம் பொன்விழா எடுக்கின்றது. ஒரு சங்கம் தொடர்ச்சியாக 50 ஆண்டுகளுக்இலக்கியப் பல்துறைகளிலே தொண்டு செய்து வருகின்றதென்றால் அது அரும்பெருஞ்சாதனையேயாகும். ஈழவளநாட்டின் மலைவளமும் கலைவளமுஞ் சிறந்து விளங்கும் பேராதனைப் பல்கலைக்கழகத்திலே இங்கு 23 ஆண்டுகளாகக் கடமையாற்றிவரும் ஆசிரியர்கள் இச்சங்கத்தின் பணிகளை நன்கு அறிவர். பல்கலைக்கழகத்திலே பல்லாண்டாக உயிர்த்துடிப்புடன் இங்கிவரும் ஒரே ஒருமாணவர் சங்கம் என்ற பெருமை தமிழ்ச் சங்கத்திற்குரியது. பல கலைஞர்களையும் எழுத்தாளர்களையும் பேச்சாளர்களையும் இச்சங்கம் உருவாக்கியுள்ளது. ஆண்டுதோறும் நடைபெறும் கலைவிழாக்கள் பல துறைப்பட்ட நிகழ்ச்சிகளைக் கொண்டனவாய் யாவராலும் ஆவலுடன் எதிர்பார்க்கப்படும் நிகழ்ச்சிகளாக அமைந்துவிட்டன.*

*பொன்விழா இலக்கியத்தின் நற்சுவையையும், இசையின் சீரையும், நாட்டியத்தின் திறனையும் நாடகத்தின் நற்பண்புகளையும் நன்கு நாட்டிச் சிறப்பாக அமையுமென எதிர்பார்க்கின்றோம். பொன்விழாவையொட்டி வெளிவரும் இளங்கதிர் மலரும் தொடர்ந்து ஆண்டுதோறும் வெளிவரும்.*

தினகரன் 1977 ஏப்ரல் 23 சனிக்கிழமை

## 59

# கிழக்கிற்கும் வடக்கிற்கும் புலவர்மணி இலக்கியப் பாலமாயமைந்தவர்

### யாழ். வளாகத் தலைர் 'வித்தி' செய்தி

**"விபுலானந்த அடிகள் தொடர்பாலும் பண்டிதமணி கணபதிப்பிள்ளை தொடர்பாலும் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை வடஇலங்கைக்கும் கிழக்கிலங்கைக்கும் ஓர் இலக்கியப்பாலமாக அமைந்தார்" இவ்வாறு யாழ். வளாகத்தலைவர் பேராசிரியர் கலாநிதி சுப்பிரமணியம் வித்தியானந்தன் புலவர்மணி பெரிய தம்பிப்பிள்ளையின் மறைவு குறித்து வெளியிட்ட செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.**

*அச்செய்தியில் கலாநிதி வித்தியானந்தன் குறிப்பிட்டுள்ளதாவது "இயற்கைக் கவி வளம் படைத்த மட்டக்களப்பிலே பல புலவர் தோன்றித் தமிழ் வளத்தைப் பெருக்கியிருக்கின்றனர். வித்துவான் ச. பூபாலபிள்ளை அ. சரவணமுத்தன், குமாரசுவாமிஐயர், பண்டிதர் குஞ்சித்தம்பி, வித்துவான் வைத்திலிங்கதேசிகர், புலவர் வினாசித்தம்பி முத்தமிழ் வித்தகர் விபுலானந்த அடிகளார் போன்றோர் குறிப்பிடற்குரியவர். இவர்கள் வரிசையில் விபுலானந்த அடிகளாருக்குப் பின் **02.10.1978** வரை தமிழ்க்கவிதை உலகிலே கிழக்கிலங்கையிற் கவியரசாக விளங்கியவர் காலஞ்சென்ற புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்களே,*

*"விபுலானந்த அடிகள் தொடர்பாலும் பண்டிதமணி கணபதிப்பிள்ளை தொடர்பினாலும் இவர் வட இலங்கைக்கும் கிழக்கிலங்கைக்கும் ஓர் இலக்கிய பாலமாக அமைந்தார். விபுலானந்த அடிகளின் தொடர்பாலே தமது அறிவை வளம்படுத்தியதோடு அமையாது, விபுலானந்த அடிகளாருக்குப் பலவகையிலே கைகொடுத்துதவிய யாழ்ப்பாணத்தின் கல்வி வளத்தினையும் சான்றோர் தொடர்பினையும் உணர்ந்துகொண்டார்.*

*இயல்பாகவே இயல், இசை, நாடக அமைதிகள் பெற்று விளங்கும் மட்டக்களப்பிலே மண்டூரைப் பிறப்பகமாகக் கொண்டு குருக்கள் மடத்தைப் புக்கமாகக்கொண்ட புலவர்மணி யாழ்ப்பாணத்தில் ஆறுமுகநாவலர் நிறுவிய காவிய பாடசாலையிலே பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களுடன் சேர்ந்து சுன்னாகம் குமாரசுவாமிப்புலவரிடம் முறையாகப் பாடங்கேட்டார். காவிய பாடசாலையிலே தொடங்கிய தொடர்பு இவர்கள் இருவரையும் நெருங்கிய நண்பர்களாக்கி, இலக்கிய உலகிலே இருபிரதேசங்களுக்குமிடையில் ஒரு பாலத்தையும் அமைத்துவிட்டது. எமக்கும் மட்டக்களப்புக்கும் கலைத்துறையிலும் கல்வித்துறையிலும் இணைப்பு பல்லாண்டிருந்தமையால் பண்டிதமணியைப் பார்க்கச் சென்றபோதெல்லாம் அவர் புலவர்மணிபற்றி விசாரித்துக்கொள்வார் அவரது கவியாற்றலை விதந்து பேசுவார்.*

*கீதைக் கவிசெய்து கீர்த்தி மிகப்பெற்றான்*
*ஏபெரிய தம்பி எனதன்பன் - ஓதக்கேள்*
*பாட்டுக்கொருபுலவன்*

*பாரதியென் றா ரொருவர்*
*பாட்டுக் கிவனென்பான் யான்*
*எனப் புலவர்மணியைப் பண்டிதமணி பாராட்டியதை யாவரும் அறிவர்.*

*இலங்கை மணித்திருநாடு என்ற தேசிய கீதத்தோடு பிரபல்யம் பெற்ற புலவர்மணி, மண்டூர்ப்பதிகம்; மீனாட்சிப் பத்து முதலிய நூல்களின் ஆசிரியராவர். இவர் சீவகசிந்தாமணி நாமகள் இலம்பகத்தை நாடகமாக எழுதியுள்ளார். இவர் சில ஆண்டுகளுக்கு முன் பகவத்கீதை வெண்பாப் பாடிச் சாகித்திய மண்டலப் பரிசில் பெற்றார். ஒரு காலத்திலே*

*"வெண்பாவிற் புகழேந்தி" என்றிருந்தது. இக்காலத்திலே 'வெண்பாவிற் பெரியதம்பி' எனக் கவிதை உலகு இவரைப் பாராட்டியது. சாரமற்ற கவிகள் பாடும் 'கவிஞர்' மலிந்துள்ள காலகட்டத்திலே உயிர்ப்புள்ள கவிதைகள் பாடிய புலவர்மணியை நாம் பெற்றிருந்தமை எமது பாக்கியமே.*

*"இன்று ஈழத்துத் தமிழ் பேசம் மக்களிடையே பல கலாநிதிகளும் பண்டிதமணிகளும் புலவர்மணிகளும் தோன்றியிருக்கின்றார்கள், ஆனால் ஈழத்திலே பண்டிதமணி என்பது திருநெல்வேலி கணபதிப்பிள்ளை அவர்களையும், புலவர்மணி என்பது மண்டூர் பெரியதம்பிப்பிள்ளை அவர்களையும் சிறப்பாகக் குறிக்கும்.*

*"மட்டக்களப்புக்கும் எமக்குமுள்ள நெருங்கிய தொடர்பிற் புலவர்மணி அவர்களும் ஒரு பலமாக இருந்தார். அவரை எண்ணும்போதெல்லாம் எத்தனையோ நிகழ்ச்சிகள் உரையாடல்கள் கண்முன் தோன்றுகின்றன.*

*"அவரை மறப்பதற்கில்லை"*

ஈழநாடு 1978 நவெம்பர் 6 திங்ட்கிழமை

60

# நாடக வித்தகர் கலையரசு சொர்ணலிங்கம்

**நாடக உலகிலே எழுபது ஆண்டுகளுக்கு மேல் தனியிடம் வகித்து வந்த வித்தகர் கலையரசு சொர்ணலிங்கம் அவர்களின் திருமண வாழ்க்கை 13.09.1980 ஆகிய இன்று அறுபது ஆண்டுகள் நிறைவு பெறுகின்றன என்பதைக் கேட்கும்பொழுது கலைஞர் யாவரும் பெருமைப்படுவர். அவர் தம் மனைவியுடன் அறுபது ஆண்டு இல்லறமாகிய நல்லறம் நன்கு நடத்தினார் என்பதில் வியப்பொன்றுமில்லை. ஏனெனில் நாடகத்துறையில் தகப்பனின் ஒத்தாசையும், ஆதரவும் இளம் வயதில் கிடைத்ததுபோல திருமணமாகிய பின்னர் அவருக்கு மனைவியின் ஒத்துழைப்பும், அன்பும், அருளும் அளவின்றிக் கிடைத்தன. கணவனுக்கு ஏற்ற மனைவியாக, நாடக வித்தகரின் ஆக்கவேலைகளுக்கு ஆக்கமும், ஆதரவும் நல்கி வள்ளுவத்திற் கூறப்படும் இல்வாழ்க்கையைக் கடந்த அறுபது ஆண்டுகளாக வெற்றிகரமாக நடாத்திவரும் அம்மையாருக்கு நாம் தலைவணங்குகின்றோம்.**

*அறுபதாண்டு நிறைவு விழாக் கொண்டாடும் இன்றைய நாளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கலையரசிற்கு நாடக வித்தகர் என்ற கௌரவ விருதுதை அளிக்க இருப்பதும் பொருத்தமானதே; பெருத்தமான நல்நாளிற் பொருத்தமான பட்டமளிப்பு இடம்பெறுகின்றது. நாடகத்துறைகள் பலவற்றின் வித்தைகளையெல்லாம் கலையரசு மூலம் கரைகண்டவர் வேறொருவருமில்லை. நாடகத்தயாரிப்பு, பேச்சு, ஒப்பனை, உடையலங்காரம், ஒலியமைப்பு போன்ற வித்தைகளை நன்கு அறிந்த கலையரசு சொர்ணலிங்கம் அவரே, தமது நூலில் ஓரிடத்திற் பின்வருமாறு கூறுகின்றார். "டைரக்ரர்; கதையமைப்பு; பேச்சு; பாட்டு; நடிப்பு; வேஷத்தயாரிப்பு; மேடையலங்காரம்; ஒளியமைப்பு முதலியவற்றில் நுண்ணறிவுடையவராய் இருத்தல் வேண்டும். சுயநலம், பொறாமை, பாராபட்சம் என்பன மருந்துக்கும் இருக்கக்கூடாது. மனித சுபாவங்களை எளிதாய் அறிந்துகொள்ளக்கூடிவராய் இருத்தல் வேண்டும். களைப்பும், சலிப்பும் இல்லாது மன உறுதியுடன் நாடக வெற்றிக்கு உழைக்கவேண்டும்".*

*இவ்வாறெல்லா வித்தைகளும் அவரிடம் நன்கு அமைந்திருந்தன. ஒழுங்கும், ஒழுக்கமும் இவர் எல்லா நடிகர்களிடமும் எதிர்பார்த்தவை; இரவர் குரல் கொடுத்தலும்; ஒலிபெருக்கியை பாவித்தலும்; மண்டப ஒளியை அணைத்தலும் இவர் தயாரித்த நாடகங்களில் கிடையா. ஒழுங்காக மாதக்காலங்களில் ஒத்திகை கண்ட பின்னரே நாடகத்தை மேடையேற்றுவார்.*

*கூனி, விசுவாமித்தரன்; தத்தன்; சங்கிரஹரி; சகுனி போன்ற குணச்சித்திர பாத்திரங்களில் இவர் நடித்தபோது அந்தந்த பாத்திரங்களின் நடை; உடை; பாவனை; ஒப்பனை முதலியவற்றை நன்கு கிரகித்து நடித்தார். கூனியின் வாய்ச்சப்பல், சிரிப்பு; பேச்சு, ஒப்பனை அத்தனையும் பல கிழகிகளிடமிருந்து தான் கற்று அமைத்துக்கொண்டனவாகும்.*

*இவ்வாறு நாடகத்தின் வித்தைகள் யாவற்றிலும் துறைபோகிய கலையரசு சொர்ணலிங்கம் அவர்களும் அவரின் வாழ்க்கை விளக்காகிய திருமதி சொர்ணலிங்கம் அவர்களும் இன்னும் பல்லாண்டு அமைதியான சிறந்த இல்லற வாழ்க்கை நடாத்த எல்லாம் வல்ல ஆடவல்லான் அருள்புரிவாராக.*

தினகரன் 1980 செப்டெம்பர் 13 சனிக்கிழமை

# 4 – வது தமிழாராச்சி மாநாடு வெற்றிபெற உழைத்தவர் திருமதி புனிதம் திருச்செல்வம்

## 4வது தமிழாராய்ச்சி மாநாட்டில் பேராசிரியர் வித்தியானந்தன்

**நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு பலத்த அரசியல் எதிர்ப்புக்களுக்கும், பெரும்புள்ளிகளின் தடைகளுக்கு மத்தியில் திட்டமிட்டபடி யாழ்ப்பாணத்திற் குறிப்பிட்ட காலத்தில் நடைபெற்று முடிந்தது. மிகக்குறுகிய காலத்தில் மகாநாட்டினைச் சிறப்பாக நடாத்தி முடிக்க உறுதுணையாக இருந்தவர்களுள் முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டியவர் திருமதி புனிதவதி திருச்செல்வம் அவர்களே. இவ்வாறு அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்ற இலங்கைக் கிளைக் தலைவரும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தருமான பேராசிரியர் திரு. சு.வித்தியானந்தன், திருமதி புனிதம் திருச்செல்வத்தின் மறைவு குறித்து வெளியிட்டுள்ள செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.**

*அனைத்துலக தமிழாராயச்சி மன்ற இலங்கைக் கிளையில் துணைத் தலைவர்களில் ஒருவராகக் கடமையாற்றிய புனிதவதி திருச்செல்வம், உபசரிப்பு உபகுழுத்தலைவராக மாநாட்டுடன் தொடர்பான முக்கிய அலுவல்களுக்குப் பெறுப்பாக இருந்தார். தென்னிந்தியா, வடஇந்தியா, சிங்கப்பூர், மலேசியா, அமெரிக்கா, கனடா, சுவிற்சர்லாந்து, இத்தாலி, இங்கிலாந்து முதலிய நாடுகளிலிருந்து வந்த பிரதிநிதிகளையும், பார்வையாளரையும் விமான நிலையங்களிலும், புகைவண்டி நிலையங்களிலும் வரவேற்று அவர்களுக்குரிய ஒழுங்குகளை செய்ய வேண்டிய பொறுப்பு அரசாங்கம் விதித்த தடையினால் பல பிரச்சினைகளை எதிர்நோக்க நேர்ந்தது. அவற்றையெல்லாம் சமாளித்து தடைகளை எவ்வாறு மீறி நாளுக்கு நாள் வந்துகொண்டிருந்த பிரதிநிதிகளையும், தடை நீக்கம் செய்யப்பட்டு எதிர்பாராதவிதத்தில் தாமதித்து வந்து சேர்ந்தவர்களையும் வரவேற்று உபசரிக்கும் வேலையை தளராது செய்து முடித்த பெருமை அவருக்குரியது.*


*மாநாடு நடத்தவதற்கு முதலில் வீரசிங்கம் மண்டபத்தினைத் தரமறுத்துவிட்டார்கள். மண்டப ஒழுங்குகள் திருமதி திருச்செல்வத்திடம் ஒப்படைக்கப்பட்டன. றிம்மர் மண்டபத்தில் மகாநாடு நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன. உலக அபிப்பிராயம் அரசாங்கம் விதித்த தடைக்கு மாறாக இருப்பதைக் கண்ட அரசாங்கம், கடைசி நேரத்தில் தடையை நீக்கியதும், மகாநாடு தொடங்குவதற்கு முதல்நாள் மகாநாடு நடத்த வீரசிங்கம் மண்டபம் கிடைத்தது. அடுத்தநாளாகிய 1974ஆம் ஆண்டு ஜனவரி 4ம் நாள் வீரசிங்க மண்டபத்தில் நடைபெற வழிவகுத்தவர் திருமதி திருச்செல்வம் அவர்களே. நம்பிக்கையின் திருவுருவமாக எடுத்த காரியத்தை செம்மையாக நடத்தி முடிக்குமாற்றல் அவரிடமிருந்தது.*

*பலத்த எதிர்ப்பின் மத்தியிலே செயலாற்றி வெற்றி கண்டவர் அவர். அன்னாரின் செயற்பாடு, ஆற்றலின் வெளிப்பாடாக அமைந்தது. நுண்ணிய அறிவும், எதையும் நுணுக்கமாய் நோக்கும் பார்வையும், திண்ணிய நெஞ்சும் அவருக்கு இயற்கையாய்*

*அமைந்திருந்தன. கொடுத்த கருமத்தை எழிலுற முடிக்கும் பான்மையை அவர் வெற்றிருந்தார். அவரின் பன்முகப்பட்ட ஆற்றலைப் போற்றாதவர் இல்லை. தமிழாராச்சி மன்றத்தின் தூணை நாம் இன்று இழந்துவிட்டோம் என்று திரு. வித்தியானந்தன் தெரிவித்துள்ளார்.*

*(திருமதி புனிதம் திருச்செல்வம் காலமாகி இன்று **31**வது நாள்)*

ஈழநாடு 1981 ஜீன் 18 வியாழக்கிழமை



கலாநிதி க. கணபதிப்பிள்ளை அவர்கள், பேராசிரியர் ரேணர் அவர்களுக்கும் அவருடைய பாரியாருக்கும் கலாநிதி சு. வித்தியானந்தன் அவர்களின் இல்லத்தில் வைத்து அளித்த தேநீர் விருந்துபசாரத்தின்போது எடுக்கப்பட்ட படம்.

## 62

# ஆறுமுக நாவலருடைய பணிகளின் இக்காலப் பயன்பாடுகள்

**"நல்லைநகர் ஆறுமுகநாவலர் பிறந்திலரேற் சொல்லுதமிழ் எங்கே...." என்று சி.வை. தாமோதரம்பிள்ளை பாடியது வெறும் இரங்கற்பா அன்று. நாவலருடைய தோற்றமும் அவருடைய பணியும் ஒரு காலத்தின் தேவைகளாக அமைந்தன. ஆங்கிலேயருடைய ஆட்சி தமிழ்ப் பிரதேசங்களில் எல்லாம் பரவி அவ்வாட்சியின் அதிகாரப் பயனால் தமிழருடைய கலாசாரம் ஊடுருவப் பெறுகின்ற காலத்திலேயே நாவலர் தன்னுடைய பணிகளை ஆற்ற முயன்றார். தமிழர் கலாசாரத்துக்கு அடிப்படையாக அமைவது சமயமே என நாவலர் கருதினார். அதனால் அவருடைய தலையாய பணி சமய சம்பந்தமாகவே அமைந்தது.**

### போலிச் சமயவாதிகள்

*"நாவலர் அவர்களுக்கு இனியும் இங்கே இடமுண்டா?" என்னும் வினாவைத் தொடுத்து, அவர் அன்று சமயப் போர்வையினுள்ளே இஷ்ட போதங்களில் ஈடுபட்டு வாழ்பவர்கள் பற்றிக் கடிந்துரைத்த பல கூற்றுக்களை எடுத்துத்தந்து, அக்கூற்றுக்கள் இன்றும் பயனளிக்க வேண்டும் என பண்டிதமணி இலக்கிய கலாநிதி சி. கணபதிப்பிள்ளை கூறுகின்றார். நாவலர் அவ்வாறு கூறிய கூற்றுக்களில் ஒன்று பின்வருமாறு அமைகின்றது:*

*"அடிமையானவான் தன்னிடத்தே தன் நாயகன் ஒப்பித்த பொருளை அவன் கருத்தறிந்து அக் கருத்தின்படியே செலவு செய்தல் வேண்டுமன்றோ? அந்த நாயகன் கருத்துக்கு மாறாகச் சேமித்து வைத்துக் கொண்டாலும் தன்னிச்சைப்படி செலவு செய்து அழித்தாலும் அதனாலே தண்டிக்கப்படுவாளன்றோ? ஆன்மாக்கள் எல்லாம் சர்வலோக நாயகராகிய கடவுளுக்கு மீளா அடிமைகள். தமக்கு திருத்தொண்டு செய்யும் பொருட்டு ஆன்மாக்களுக்கு இவ்வருமையாகிய மனித சரீரத்தைக் கொடுத்தருளியவர் அக்கடவுளே. மனிதர்களிடத்துள்ள பொருளெல்லாம் அவர் கொடுத்தருளிய பொருளே. பொருள் கொடுத்தருளிய கடவுளுடைய திருவுள்ளக் கருத்து யாது? கடவுளுடைய திருவுள்ளக் கருத்துக்கு மாறாக வீண் செலவு செய்வோரும், உலோபத்தினாலே சேமித்து வைப்போரும் அக்கடவுளாலே தண்டிக்கப்படுவர்." சமயம், சமூகம் தொடர்பான பல நல்ல கருத்துக்கள் நாவலருடைய இக்கூற்றிலே பொதிந்துள்ளன. இவை இன்னும் எம்மிடையே வாழும் பலருக்கு அறிவுரை வழங்கத்தக்கன; பயனிக்கக்கூடியன.*

*போலிச் சமயவாதிகள் அன்று மாத்திரமல்ல இன்றும் எம்மிடையே வாழ்கின்றனர். நாவலர் அன்று இப்போலிகளைக் கண்டித்துக் கூறியவை இன்றும் பொருள் பொதிந்தனவாக, காலத் தேவைகளாக அமைந்துள்ளன. சமயத்தை நிலைக்களனாகக் கொண்டே எம்முடைய கலாசாரம் வளர்ச்சியடைய வேண்டும் என்பது நாவலருடைய எண்ணம். இன்று அது உணரப்பட்டு வருகின்றது. சமய விழிப்புணர்வு இன்று நாடெங்கணும் ஏற்பட்டு வருகின்றது. இச்சந்தர்ப்பத்திலே நாவலர்தம் போதனைகள் எமக்கு வழி காட்டிகளாக அமைவனவாயுள்ளன.*

### புராண படைப் பணி

*நாவலர் சமயத் தொடர்பாக ஆற்றிய இன்னொரு பணியினை நாம் நினைவு கூர்கின்றோம். அதுவே அவருடைய புராணப் படனப் பணியாகும்.*

"திருக்கோயிலேனும் திருமடத்திலேனும் நாடோறும் இரவிலே கேட்போர் யாருக்கும் பயன்படும் பொருட்டுத் தக்கோர்களைக் கொண்டு பெரிய புராணம், திருவிளையாடற்புராணம், திருவாதவூரடிகள் புராணம், கோயிற்புராணம், கந்த புராணம், உபதேசகாண்டம், வாயு சங்கிதை முதலிய சிவபுராணங்களையும் சிவத் தருமோத்திரத்தையும் படித்துப் பொருள் சொல்லுவிக்க வேண்டும்."

என்று நாவலர் அன்று எழுதினார். அவரே கோயிலில் மக்கள் கூடியிருக்கும் சந்தர்ப்பத்தில் புராணபடனம் செய்தார். நாவலர் அன்று மக்கள் மத்தியிலே எம்முடைய சமய நூல்களின் உண்மைகளை இலகுவாகப் பரப்ப வேண்டும் என எண்ணினார். அதற்குத் தகுந்த வழியாகப் புராணபடனம் அமைந்தது. அன்று நாவலராலே தொடங்கப்பட்ட பணி இன்றுவரை தொடர்ந்து ஆற்றப்பட்டு வருகின்றது. இன்று அப்பணியின் தேவை அதிகமாகவே உணரப்படுகின்றது. இன்று கோயில்களுடைய தொகை அதிகரித்துக் கொண்டே வருகின்றது. கிராமத்து மக்கள் எல்லோருக்கும் புராணங்களையும் சமய நூல்களையும் படித்துணரும் வாய்ப்பு ஏற்படுவதில்லை. ஆகவே இக்கோயில்களிலே நிகழும் திருவிழாக்களைச் சாட்டாக வைத்துக்கொண்டு புராண படனங்களை நடத்துதல் மூலம் மக்களுக்கு ஆன்மீக அறிவினை ஊட்டலாமென நம்பப்படுகின்றது. நாவலருடைய இத்தகைய முயற்சி இன்று தேவைப்படுவதுடன் அம்முயற்சியிலே சில மாற்றங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இன்று கோயில்களிலே வெறுமனே புராண படனம் மாத்திரம் செய்யாது சமயப் பொருள்பற்றிய விரிவுரைகளும் ஒழுங்கு செய்யப்படுகின்றன.

**உரைநடையில் சமய நூல்கள்**

சமயப் பணி காரணமாக, நாவலர் சமய நூல்களில் உள்ளவற்றை எல்லோரும் அறிந்துகொள்ள வேண்டும் என எண்ணினார். இதனால் காலத்தின் தேவையையொட்டி அவர் பெரியதொரு பணியாற்றினார். சமய நூல்கள் யாவும் செய்யுள் வடிவிலேயே இருந்தன. நாவலர் வாழ்ந்த காலம் உரைநடைக் காலம். நாவலரும் கைதேர்ந்த உரைநடைகாரர். எனவே எழுத்து வாசனை உடையவர்கள் வாசித்துப் பயன் பெறுவதற்காகச் செய்யுள் நடையில் அமைந்த நூல்களை உரை நடையிலே எழுதி வழங்கினார். கேள்வி வாயிலாகச் சமய உண்மைகளை அறிய விரும்பியவர்களுக்குப் புராணபடனம் மூலமும், எழுத்து வாயிலாக அறிய விரும்பியவர்களுக்கு உரைநூல்கள் வாயிலாகவும் பணியாற்றினார். அப்பணி இன்றும் நிலைபேறுடையதாயுள்ளது. சமயக் கல்வி பாடசாலைகளிலே இன்று முக்கியத்துவம் பெற்று வருகின்றது. அத்தகைய கல்வியைப் போதிக்க ஆசிரியருக்கும் கற்பதற்கு மாணவர்க்கும் நாவலருடைய பணி இன்று பெருந்துணை புரிவதாயுள்ளது.

நாவலருடைய சமூகப்பணி இன்று நாம் நினைவுகூர வேண்டியதொன்றாகும். நாட்டிலே அதிகாரிகளால் அநீதி விளையும் போதும் அவர்களால் அக்கிரமங்கள் செய்யப்பட்டபோதும் நாவலர் தன்னுடைய எழுத்துக்களாலே அஞ்சாமல் எடுத்துக்கூறிய பாங்கு இன்றுள்ளவர்கள் எப்படி இயங்கவேண்டும் என்பதை எடுத்துக்காட்டவல்லது. அதிகாரிகளின் அட்டூழியங்களை அவர் சீற்றத்துடன் சித்தரித்தபோது,

"குலாமிகளின் உறவினர்க்கெல்லாம் வேட்டை தான், வேலைதான். சில இடங்களில் உறவினரே உடையாரும், நொத்தாரிசுமாகி அட்டூழியம் செய்கிறார்கள். பத்திரப்

பதிவுகளில் படுமோசம் நடக்கிறது. பாதை போடுவதற்கென்று ஏஜண்டு தன் குலாமிகளின் பேச்சையே கேட்டு நல்ல கனிமரங்ளை வெட்டிச் சாய்க்கிறார்; வேலிகளைப் பிரிக்கிறார், வீடுகளை இடிக்கிறார், நிலங்களை ஆக்கிரமிக்கிறார் என்று எழுதினார். இந்தகைய கண்டனம் இன்றும் பொருந்துவதாகச் சில சமயங்களிலே அமைந்து விடுவது உண்டு.

**இருவகைக் கல்விப் பணி**

நாவலருடைய கல்விப்பணி இன்று எமக்கு எத்தனையோ பயனை அளித்துக் கொண்டிருக்கின்றது. சமயத்தைவிட்டு, கலாசாரத்தைத் துறந்து, ஆங்கிலக்கல்வி பெற்று நல்ல உத்தியோகம் பெறுகின்ற நிலை நீடித்திருந்தால் இன்று எம்முடைய நிலை எப்படி இருந்திருக்கும்? அத்தகைய நிலை மாறுதற்கு நாவலர் மேற்கொண்ட கல்விப்பணி இரண்டு வகைப்பட்டது. ஒன்று அரசினாலே அளிக்கப்பட்ட கல்விமுறையில் மாற்றம் ஏற்படுத்தும்படி செய்த முயற்சியாகும். ஒரு தடவை வில்லியம் அண்டர்சன் என்னும் தேசாதிபதிக்குச் சமர்ப்பித்த 'பிட்டீச' த்திலே நாவலர்;

"மிஷனரிமார் பாடசாலைகளில் தமிழ் இளைஞர்களை அவர்களது சுயமத ஈடுபாட்டிலிருந்து விடுவிப்பதற்கு எடுத்த முயற்சிகளைச் சிறிது தளர்த்தியிருந்தால் அக்கற்பித்தல் முறையினால் அவர்கள் அதிகமான அறநெறி நிலைப்பட்ட நன்மைகளைப் பெற்றிருப்பார்கள்." என்று கூறிவிட்டு,

"வாழ்க்கையிற் பிரயோசனமானதும் இலாபகரமானதுமான ஒரு தொழிலைப் பெறுவதற்கான தகுதியைத் தங்கள் பிள்ளைகள் பெறுவதென்பது அவர்களை அவர்களது தேசத்தினரிடமிருந்தும் அம்மக்களிடையே வாழ்வதற்கான அறநெறிப்பட்ட தேவைகளிலிருந்தும் அந்நியப்படுத்துவதாக இருத்தல் கூடா."

எனக் கூறினார். அவருடைய ஆழ்ந்த நுண்ணறிவுள்ள கல்விக் கோட்பாட்டினை இதன் மூலம் உணரக்கூடியதாக இருக்கின்றது. ஆங்கிலக் கல்வியை ஏற்றுக்கொண்ட நாவலர் அக் கல்வியினால் யாழ்ப்பாண மக்களின் கலாசாரம் பிறழக்கூடாதெனவே எண்ணினார். இத்தகைய ஒரு கல்விமுறையை நாவலர் போன்றவர்கள் எண்ணியதாலேயே இன்று இந்த நாட்டிலே இந்து, பௌத்த கலாசாரப் பின்னணியிலே கல்விமுறை அமையக் கூடியதாயிருந்தது.

**அமைத்த பாசாலைகள்**

கல்விப் பணியிலே நாவலர் அமைத்த பாடசாலைகள் பற்றிக் குறிப்பிடல் வேண்டும். வித்தியாசாலைகளைத் தாபிக்கின்ற பணியினை நாவலர் தொடங்கி வைத்த காரணத்தினாலேயே இன்று யாழ்ப்பாணத்திலே இந்துக் கல்லூரிகளும் இந்து மகளிர் கல்லூரிகளும் நிலைபேறான தொண்டினை ஆற்றக்கூடியதாயுள்ளன. நாவலரே கூறுகின்றார்;

"இவைகளெல்லாவற்றிற்கும் காரணம் சைவ சமயத்தையும் அதன் வளர்ச்சிக்கும் கருவியாகிய கல்வியையும் வளர்த்தல் வேண்டும் என்னும் பேராசையேயாகும். இப்பேராசையினால் இருபது வருஷகாலம் நான் செய்த முயற்சிகள் பல. அவைகளுள்ளே சித்திபெற்றவை மிகச்சில. சைவசமயிகள் யாவரும் சைவசமயத்திலே சிரத்தை உடையவர்களாகித் தங்கள் தங்களால் இயன்ற உதவிகள் செய்தார்களாயின் நான்

எடுத்த முயற்சிகளெல்லாம் இதற்கு முன்னரே நிறைவேறி விடும். நிறைவேறின், என்னைப் போலவே பிறரும் அங்கங்கு நன்முயற்சிகளைச் செய்வார்கள். செய்யிற் கல்வியும் சமயமும் தழைத்தோங்கும்... நிலையில்லாத என் சரீரம் உள்ள பொழுதே என் கருத்து நிறைவேறுமா நிறைவேறாதோ என்னும் கவலை என்னை இரவும் பகலும் வருத்துகின்றது. அக்கருத்து இது. தமிழ்க் கல்வியும் சைவசமயமும் அபிவிருத்தியாதற்குக் கருவிகள் முக்கிய ஸ்தலம்தோறும் வித்தியாசாலை தாபித்தலும் சைவப் பிரசாரணஞ் செய்வித்தலுமேயாம்"

இவ்வாறு வித்தியாசாலைகளைத் தாபித்துத் தமிழ்ப் பிள்ளைகளுக்கு அவர்களுடைய சமூக, சமய, கலாசாரப் பின்னணியிலான கல்வியைப் போதிக்க வேண்டும் என நாவலர் எண்ணிப் பணியுமாற்றினார். அப்பணியினை அவருக்குப் பின்வந்தோரும் தொடர்ந்து செய்தனர். அப்பணிகளுள் ஒன்று இன்று நாம் எல்லோரும் பெரும் பயன் பெறும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாகும். நாவலரின் கொள்கைகளிலே ஈடுபாடுகொண்ட சேர் பொன். இராமநாதன், எமது தமிழ்ப் பிள்ளைகள் உயர் கல்வி கற்பதற்காக நாவலர் வழிநின்று பரமேஸ்வராக் கல்லூரியைத் தாபித்தார். அக்கல்லூரியும் கல்லூரி வளவும் இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு நிலைக்களன்களாய் உள்ளன. பரமேஸ்வராக் கல்லூரி நாவலர் வழி நின்றமைந்ததொன்று. அக் கல்லூரியினைச் சேர். பொன். இராமநாதன் அமைத்த பொழுது எதிர் காலத்திலே அக்கல்லூரி வளர்ச்சி அடைந்து யாழ்ப்பாண இந்து மாணவர்களுக்குரிய உயர் கல்வி நிறுவனமாக அமைய வேண்டும் என எண்ணினார். ஆனால் அவர் எண்ணம் இன்னொரு படி உயர்வாக நிறைவேறியது. பரமேஸ்வராக் கல்லூரி இலங்கையில் உள்ள தமிழ் மாணவர்கள் எவருமே பயிலக்கூடிய பல்கலைக்கழகமாக மாறிவிட்டது.

**தமிழ் நூல் அச்சிடல்**

நாவலரின் கல்விப் பணிக்குத் தமிழில் நூல்களை அச்சிட்டு வெளியிடுவது ஒரு கருவியாக அமைந்தது. பாதிரிமாரைப் பின்பற்றி மாணவர் தகுதிக்கு ஏற்ப அவர் நூல்களை எழுதினார். பால பாடம், சைவ வினாவிடை, பெரியபுராணம், கந்தபுராண வசனம், இலக்கணச்சுருக்கம் முதலியன சாதாரண மாணவருக்கென வெளியிடப்பட்டவை. அவர் எழுதிய பால பாடங்கள் இன்றும் பாடசாலைகளிலே படிப்பிக்கக்கூடிய தகைமை உடையனவெனக் கல்வியியலாளர் கூறுகின்றனர். வெறுமனே சமய நோக்காக மட்டுமின்றிப் பொதுவான கல்வி நோக்கிலே இப்பாலபாடங்கள் எழுதப்பட்டன. நான்காம் பாலபாடத்திலே அவர் கையாண்டுள்ள உரைநடை இக்கால அறிவியல்துறை சார்ந்தவர்கள் எத்தகைய உரைநடையைக் கையாளவேண்டுமென்பதை அறிவுறுத்துவதாக அமைந்துள்ளது. அவர் எழுதிய இலக்கணச் சுருக்கம் இன்றும் பாடசாலைகளிலே பயன்படுத்தக்கூடியதாக விளங்குகின்றது. பெரியபுராண வசனம், கந்தபுராண வசனம் முதலியன புதிய பதிப்புக்களாக வெளிவர வேண்டியவை. நன்னூல் விருத்தியுரை, திருமுருகாற்றுப்படை உரை, திருக்கோவையாருரை, தருக்க சங்கிரகம் போன்றவை உயர் கல்வி மாணவருக்கெனப் பதிப்பிக்கப்பட்டவை. திருக்கோவையார்ப் பதிப்பிலே தம் அச்சிற் பதிக்கவிருக்கும் நூல்களின் பெயர்களைக் குறிப்பிடுகின்றார். அவையாவன - இறையனார் அகப்பொருளுரை, தொல்காப்பியம் சேனாவரையருரை, அகல்பொருள் விளக்கவுரை, வீரசோழியவுரை, சீவக சிந்தாமணியுரை, சிலப்பதிகாரவுரை, மணிமேகலை,

*வளையாபதி, கலித்தொகையுரை, புறநானூறு முதலியன. இதனை நோக்கும்போது பல்கலைக்கழகப் படிப்பிற்குரிய நூல்களையும் அவர் பதிப்பிக்கவிருந்தார் என்பதும் அவர் பின்னுஞ் சில ஆண்டுகள் உயிருடன் இருந்திருந்தால் சாமிநாதையர் பதிப்பித்த நூல்களை அவருக்கு முன்பே வெளியீட்டிருந்திருப்பார் என்பதும் தெளிவாகின்றன.*

**தன்னாட்டு உணர்வூட்டல்**

*நாவலருடைய தமிழ்ப்பணி அதன் இன்றைய பயன்பாட்டுத் தொடர்பாக விதந்து கூற வேண்டியதொன்றாக அமைந்துள்ளது. நாவலருடைய தமிழ்ப் பணிகளில் இன்றும் நமக்குப் பயனளித்துக்கொண்டிருப்பது அவர் இலக்கிய விடயமாகத் தொடக்கி வைத்த தன்னாட்டு உணர்வாகும். எங்களுடைய நாட்டிலும் தமிழ் இலக்கியம், இலக்கணம் வளர்ச்சி அடைந்துள்ளன. அத்துறையிலே பலர் தொண்டாற்றியுள்ளனர். அவற்றுக்குத் தனித்துவமான பண்புகள் உண்டு. இத்தகைய ஓர் உணர்வினை ஈழத்து அறிஞர்களுக்கு முதன்முதல் ஊட்டியவர் நாவலரே. "யாழ்ப்பாணம் ஒரு சிறு நூலையேனும் ஒரு சிற்றுரையையேனும் செய்குநரில்லாத தேசம்" என்று வீராசாமி முதலியார் பழித்துக் கூறியபொழுது நாவலர் அவருக்கு நல்லறிவுச் சுடர் கொளுத்தி விட்டார். அந்த உரையிலே யாழ்ப்பாணத்திலே தோன்றிய நூல்கள், அவற்றை இயற்றிய புலவர்கள், அவர்களால் ஆகிய பிற தொண்டுகள் ஆகியன வரிசைப்படுத்தப்பட்டன. அவ்வுரையிலே கூறியவற்றைப் பின்வருமாறு சுருக்கிக் கூறலாம்.:*

*"தமிழிலே ஹேமாந்திரிகற்பம், இரகுவம்சம், தக்ஷிண கைலாச புராணம், சிவராத்திரி புராணம், வீசகணிதம், விரிவகராதி முதலியன யாழ்ப்பாணத்தாராற் செய்யப்பட்டனவென்பதை அறிந்தடங்கக்கடவீர். சிதம்பரத்திலே ஞானப்பிரகாசம் என்னும் திருக்குளம் செய்வித்தவராகிய ஸ்ரீ ஞானப்பிரகாச முனிவர் யாழ்ப்பாணத்தார் என்பதை அறிந்து இனியாயினும் வாய் மூடக்கடவீர்."*

*இவ்வாறு தன்னாட்டுணர்வுடனும், தமிழ்ப்புலமை அபிமானத்துடனும் கூறிச் சென்றார். இப்படி எமது தேச இலக்கிய முயற்சியினையும் அதன் தனித்துவத்தினையும் இன்று நாம் அடிக்கடி எடுத்துக்கூறவேண்டியவர்களாக இருக்கின்றோம். அதற்கு நாவலருடைய நல்லறிவுச் சுடர் கொளுத்துதல் நல்ல பயனளிக்கும்.*

தினகரன் 1981 செப்டெம்பர் 13 ஞாயிற்றுக்கிழமை

## 63

# உயர்கல்வி வாய்ப்பற்ற தமிழ் இளைஞரால் தான் தமிழ்ப் பிரச்சினை இன்று முனைப்புறுகிறது

### யாழ். பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் உபவேந்தர் வித்தி

**இன்றைய தமிழ்ப் பிரச்சினை உயர்கல்வி பெற முடியாத தமிழ் மாணவர்களின் தமிழ் இளைஞர்களின் பிரச்சினை தான் என்று ஒருவர் கூறினால், கருத்து வேறுபாடு எழ இடமுண்டு. ஆனால், அந்தக் கருத்தைச் சிறிது மாற்றி, உயர் கல்வி வாய்ப்பற்ற தமிழ் இளைஞர்களினால் தான் தமிழ்ப் பிரச்சினை இன்று முனைப்புறச் செய்யப்பட்டுள்ளதெனக் கூறினால், அக்கூற்றை எவரும் எதிர்க்கமாட்டார்கள்**

*யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன், வெள்ளிக்கிழமை மாலை நடைபெற்ற யாழ். பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.*

*பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா, யாழ். வீரசிங்கம் மண்டபத்தில், யாழ். பல்கலைக்கழக வேந்தர் திரு. வி. மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெற்றது.*

*எதிர்க் கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், நல்லூர் எம்.பி. திரு. எம்.சிவசிதம்பரம், திருகோணமலை அரச அதிபர் திரு. லயனல் பெர்னான்டோ, யாழ். அரச அதிபர் திரு. தேவநேசன் நேசையா, யாழ். எம்.பி. திரு. வி.யோகேஸ்வரன், கோப்பாய் எம்.பி.திரு. எம். ஆலாலசுந்தரம், யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. சு. நடராசா ஆகியோர் இவ்விழாவில் பார்வையாளர்களாகக் கலந்து கொண்டனர்.*

*யாழ். பல்கலைக்கழக வேந்தர் திரு. வி.மாணிக்கவாசகர், துணைவேந்தர் பேராசிரியர் வித்தியானந்தன் ஆகியோர் மங்களவிளக்கேற்றி பட்டமளிப்பு விழாவை ஆரம்பித்து வைத்தனர். துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் பட்டமளிப்பு விழாப் பேருரை நிகழ்த்திய போது தெரிவித்ததாவது- எமது மாணவர் தொகை **1861**ஆகும். அக்டோபர் மாதத்திற் புதிதாகச் சேர இருக்கும் மாணவர் தொகை **545** ஆகும். தன்னாதிக்கம் கொண்ட பல்கலைக்கழகமெனும் வகையில் ஆண்டுகள் இரண்டுதான் சென்றிருப்பினும் எமது பல்கலைக்கழகம் இரண்டு பட்டமளிப்பு விழாக்களையும், சில மாணவர் ஆர்ப்பாட்டங்களையும்கூட கண்டுவிட்டது.*

*இலங்கையிற் சிறுபான்மையோர் பெரும்பான்மையாக வாழும் பிரதேசமொன்றிலே நிறுவப்பட்ட முதலாவது தேசியப் பல்கலைக்கழகம் இதுவாகும்.*

*வேற்றுமையுள் ஒற்றுமை காண முனையும் தேசிய இலட்சியத்தைப் பொறுத்தமட்டில், பல இனங்களுக்கிடையே உணர்வொருமைப்பாட்டை நிறுவ வேண்டிய தேசாமிமானப் பணியில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திடமிருந்து எதிர்பார்க்கப்படுவது யாது என்பது இயல்பாக எழும் வினாவாகும்.*

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சமூகப் பயன்பாடு, தமிழ்பேசும் மக்களிடையே உயர்கல்வி வாய்ப்புக்கள், ஆகியன பற்றிச் சிந்திக்கும் பொழுது நாம் எம்மையறியாமலே தேசியப் பிரச்சினைகளின் விளிம்புக்கல்ல, அவற்றின் மையத்துக்கே, வந்து விடுகின்றோம்.

கடந்த முப்பத்தைந்து ஆண்டு காலம் பல்கலைக்கழக ஆசிரியனாகவிருந்தவன் என்கின்ற முறையில் அந்தக் கால எல்லையுள் பல்கலைக்கழக மாணவருடன் இனவேறுபாடு காட்டாது பழகியவன் என்ற முறையில், அவர்கள் இதயதாகங்களை அறிந்தவனென்ற முறையில், தேசிய இனப்பிரச்சினை சிக்கலுற்றதற்கான காரணம், உயர்கல்விக் களத்தைத் தேசிய இனப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான இடமாக அரசாங்கங்கள் கொண்டமையேயாகுமென்பதை வன்மையாக எடுத்தக்கூற விரும்புகின்றேன்.

சமூக வர்க்கங்களின் உந்தற்பாடுகளுக்கும், இனங்களின் கோரிக்கைகளுக்கும் வித்தியாசம் காணமுடியாத நிலையில், பல்கலைக் கழகங்களின் மூலவளங்களையும், மூளைவளத்தையும் விரிவாக்க முடியாத நிலையில், இனத்தனித்துவத்துக்கும் உயர்கல்வி மாணவர் தொகைக்கும் முடிச்சுப் போடப்பட்டது.

தரப்படுத்தல், மாவட்ட அளவுத்தொகை, பின்தங்கிய பிரதேச அளவுத் தொகை என்பன இவற்றுக்கான ஆயுதங்களாயின.

இப்பிரச்சினைச் சிக்கலுள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆற்றக்கூடிய ஒரு பணியுண்டு. இன்றைய நிலையிற் தமிழ் பேசும் இளைஞர்கள் உயர்கல்வித் தன்மை காரணமாகத் தேசிய வாழ்வில் இடம் பெறுவதற்கு வாயிலாக அமைவது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமே.

இவ்வாண்டு தொடங்கப் பெறவிருக்கும் மட்டக்களப்புப் பல்கலைக்கழகக் கல்லூரியும் இன்னும் சில ஆண்டுகளில் அவ்விடத்தைப் பெறும். ஆனால் இன்றுள்ள நிலையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமே முக்கிய இடம்பெறுகின்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இந்தத் தேசிய முக்கியத்துவத்தினை உயர்கல்வி நிர்வாகத்தினர், மிக்க சிரத்தையுடன் ஊன்றிக் கவனிக்கவேண்டும். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தேசிய முக்கியத்தவத்தினைத் தேசத் தலைவர்கள் உணரவேண்டிய அதேவேளையில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் பல்கலைக்கழகமென்ற முறையிலும், அது யாழ்ப்பாணத்திலுள்ளது என்ற நிலையிலும், தனக்குள்ள பெரும்பொறுப்பை உணரவேண்டும். இன்று நாம் எமது இளைஞர்களைப் பயிற்றி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றோம். நாம் பயிற்றுவதெல்லாம் இந்த மண்ணுக்கு நேரடியாகச் சுவறாமல், முதலில் நைஜீரியாவிலோ, சவூதி அரேபியாவிலோ உறிஞ்சப்பட்டு, அந்நாட்டுப் பணமாகத் தான் எம்மிடையே வருகின்றது.

எமது பயிற்சிக்கும், எமது மூலவளங்களுக்குமுள்ள தொடர்பு யாது? வேலை வாய்ப்பின்மையை எத்தகைய பொருளியற் கோட்பாடு கொண்டு தீர்மானிக்கின்றோம்? இவை பற்றி நாம் ஆழமாகச் சிந்திக்க வேண்டிய கட்டம் வந்துள்ளது.

பல்கலைக்கழகத்தின் பணி, அறிவைத் தோற்றுவிப்பது மாத்திரமன்று. தோற்றுவித்துப் பரப்பும் அறிவைப் பிரயோகப்படுத்தல் வேண்டும். பிரயோகப்படுத்தப்படாத,

படுத்தப்படமுடியாத அறிவாற் பயனில்லை. செய்முறை இல்லாத கொள்கை இல்லை, கொள்கை இல்லாது செய்முறையும் இல்லை.

எமது அறிவின் நிறைவான பிரயோகத்தால் எமது நாட்டிலேயே வாய்ப்புக்கள் உருவாக்கப்படும்வரை நாம் காசுக்காகக் கல்வியை ஏற்றுமதி செய்பவர்களாகவே இருப்போம். தம்மில் தாம் நம்பிக்கையற்றவர்களுக்கு முன்னேற்றமில்லை, எம்மில் எமக்கு நம்பிக்கையுண்டு. சமூகமும் எங்களில் நம்பிக்கை வைத்தல் வேண்டும். அத்தகைய நம்பிக்கை, உண்டென்பதை நிரூபிக்கின்றன எமது பல்கலைக்கழகத்திற்குக் கிடைத்துள்ள பணக்கொடைகள், நூற்கொடைகள், தளபாடக்கொடைகள் முதலியன. இந்த உறவு வளரவேண்டும் ஏனெனில் உங்கள் நம்பிக்கையிலேதான் எங்கள் வளர்ச்சி தங்கியுள்ளது. இவ்வாறு பேராசிரியர் சு. வித்தியானந்தன் தமது பேருரையில் குறிப்பிட்டார்.

தினபதி 1981 செப்டெம்பர் 28 திங்கட்கிழமை




பேராசிரியர் வித்தியானந்தனின் உருவப்படத்தை வரைந்து வித்தியானந்தனிடமே அதனை மகிழ்வுடன் கையளிக்கும் நிகழ்வு குறித்த பதிவு : கையளிப்பவர் ஓவியர் மணியம்.

## 64

# உயர்கல்வி வாய்ப்பு

**"உயர்கல்வி வாய்ப்பற்ற தமிழ் இளைஞர்களினால்தான் தமிழ்ப்பிரச்சினை இன்று முனைப்புறுச் செய்யப்பட்டுள்ளதெனக் கூறினால் அக்கூற்றை எவரும் எதிர்க்கமாட்டார்கள்" இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இரண்டாவது பட்டமளிப்புவிழாப் பேருரை நிகழ்த்திய துணைவேந்தர் சு. வித்தியானந்தன் தமிழிலும், ஆங்கிலத்திலும் அடித்துக்கூறியிருக்கிறார்.**

*இந்த உண்மையை அவர் கூறியதுபோல் பண்புடைய எவரும் ஆட்சேபிக்கத்துணியார். எம்மைப் பொறுத்தளவில் எமது பேனாதேயத்தேய இதனை வற்புறுத்தி வந்தோம். தரப்படுத்தல், மாவட்ட அளவுத்தொகை, பின்தங்கிய பிரதேச அளவுத்தொகை போன்ற ஆயுதங்களுக்கு யாழ்ப்பாணத்தில் நிலவுவதாகக் கருதப்படும் பயங்கரவாதத்துக்கும் தொடர்புண்டா என்பதையும் ஆராயவேண்டுமெனக் கோரி வந்தோம்.*

*சில உண்மைகளைப் போல கசப்பான பண்டங்கள் காண்பதரிது. சிறந்த மருந்துகள் கசப்பாயிருப்பதால் அவற்றிற்கு இனிப்பூட்டும் வழக்கம் இன்றைய மருத்துவக்கலையில் காணப்படுகின்றது.*

*இதனை வைத்திய நிபுணர் குழாமே கையாளுகின்றது. எனவே நாட்டின் ஆட்சியாளர்கட்கு இந்தக் கோரிக்கையை அடிக்கடி விட்டிருந்தோம். இனிப்பூட்டுவதற்கும் நிபுணத்துவம் தேவைப்படும்.*

*சென்ற பொதுத் தேர்தலில் தரப்படுத்தல் என்ற அநாகரிக முறையைக் கைவிடுவோமென்று வாக்குறுதி ஐ.தே.கட்சியின் தேர்தல் பிரசாரத்தில் காணப்பட்டது. சொன்ன பாவத்துக்கு ஒருமுறை அதனைச் செய்தனர். தமிழ் மாணவர்களின் தொகை மீண்டும் நியாயமான இடத்தைப் பிடித்தது.*

*இதன் எதிரொலியைப் பாராளுமன்றத்தில் கேட்டவர்கள் இவ்விடயத்தினால் ஜனாதிபதி ஜெயவர்த்தனா எவ்வித சமபோக்கை நாடியபோதும், நிதானம் நடுக் கடலில் நீந்தும் ஆற்றல் அற்றதென்பதை அறிந்தனர்.*

*தரப்படுத்தல் என்ற பழைய பாட்டை வேறு இராகத்தில் பாடவெண்டும் என்பதே இன்று அமுலிலிருக்கும் மாற்றுப்பிரவேசமுறை. இதனாற் பாதிக்கப்பட்ட தமிழ் இளைஞர்களின் தொகையை என்றும் பரீட்சைத் திணைக்களத்தின் பரீட்சை முடிவுப்பட்டியலில் காணலாம். இன்று மேனாடுகளில் குறிப்பாக இங்கிலாந்தில் உயர் பட்டம் பெற்று, விஞ்ஞான, பொறியியற்கலாநிதிகளாக, பல்கலைக்கழகப் புலமைப் பரிசில் பெற்று ஆராய்ச்சியாளர்களாகக் கடமை புரியும் தமிழ்ப் பட்டதாரிகள் சிலர் இங்கு அனுமதி பெறாத பாக்கியசாலிகள்.*

*இன்னொரு சாரார் பல்கலைக்கழக அனுமதியை வீணாக்க காத்திருக்காமல் இங்கேயேயிருந்து கணக்கியல் படித்து சாட்டேர்ட், ஐ.சீ.எம்.ஏ. போன்ற பெரும்*

*பட்டங்களை எவ்வித தாமதமுமின்றி சிலர் மூன்று வருடங்களில் படித்து முடித்தனர். முடிக்கின்றனர். இந்த வர்க்கத்தினர் உண்மையில் அதிர்ஷ்டசாலிகளே! உலகில் பல பகுதிகளில் நினைக்க முடியாத உயர் சம்பளம் பெறக்கூடிய வாய்ப்புப் பெற்றவர்கள். ஆனால் வசதியற்ற ஏனையோரின் கதி என்ன?*

*நாட்டில் வாழும் பிரஜைகள், தேசிய அடிப்படையில் - சரிநிகர் சமானமானவர்கள் என்று பறைசாற்றினால் தகுதி அடிப்படையை விட வேறு எதுவும் இடம்பெறலாமா? ''தனிச் சிங்களம்'' என்ற சட்டத்துக்குத் தம்பியாகப் பிறந்ததே இந்த இன்றைய ''மாவட்ட அளவுத்தொகை, பின்தங்கிய பிரதேச அளவுத்தொகை என்ற நிதானமற்ற அனுமதித்திட்டம்.*

*''தனிச் சிங்களத்தால்'' வந்த அரசியல் சமுதாய நன்மை தீமைகளை ஆராய்ந்து பார்த்தால், இந்த விபரீதமான பல்கலைக்கழக அனுமதித்திட்டம் கைவிடவேண்டியது தெளிவாகும். எவ்வாறு ''தனிச் சிங்களம்'' திணிக்கப்பட்டதால் தமிழ் மாணவர்கள் சிங்களம் படிப்பதை நிறுத்தினார்களோ, அவ்வாறே இவ்வித அனுமதிப் பாகுபாட்டை அவர்கள் என்றும் ஏற்றுக் கொள்ளப்போவதில்லையென்பது திண்ணம்.*

*அரசின் அதிகாரத்தைப் பயன்படுத்தி அநீதியான செயலொன்றைச்செய்ய முடிந்தபோதும் அதன்விளைவுகள் பாதிக்கப்பட்ட தமிழ் மாணவர்களை மட்டுமல்ல, நாட்டுக்கே நட்டமென்பதை ஆட்சியாளர்கள் உணரக்காலம் வந்துவிட்டது. ''கெடுகிறேன் பந்தயம் பிடி'' என்பது அரசியல் முதிர்வுக்கு அழகல்ல.*

*தமிழர்களின் கடைகளை பொதுநலஸ்தாபனங்களை எரித்தது. அவர்களின் சொத்துக்களைச் சூறையாடல், அவர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படுத்துதல், அவர்களை நேரடியாகப் பாதிக்கிறதென்பதை எந்தக் குழந்தையும் அறியும். சாதாரண, பொது அறிவுள்ள மக்கள் இவ்வித கலவரங்கள், அழிவுச் சம்பவங்கள் நாட்டை நாலாவழியிலும் குட்டிச் சுவராக்கிவிடுகிறதே என்று உணரத் தொடங்கினால் இனப்பிரச்சினை உயர்கல்விக்குள் இடம்பெறமாட்டாது.*

ஈழநாடு 1981 செப்டெம்பர் 28 திங்கட்கிழமை

## 65

# யாழ் பல்கலைக்கழகம் தமிழ் இளைஞர்கள் தேசிய வாழ்வில் நுழையும் வாயிலாகும்

**இலங்கையிற் சிறுபான்மையோர் பெரும்பான்மையாக வாழும் பிரதேசம் ஒன்றிலே நிறுவப்பட்ட முதலாவது தேசிய பல்கலைக்கழகம் யாழ் பல்கலைக்கழகம் ஆகும். வேற்றுமையில் ஒற்றுமையுள் ஒற்றுமை காண முனையும் தேசிய இலட்சியத்தை பொறுத்தமட்டில் பல இனங்களுக்கு இடையே உணர்வு ஒருமைப்பாட்டை நிறுவ வேண்டிய தேசாபிமான பணியில் யாழ் பல்கலைக்கழகத்திடம் இருந்து எதிர்பார்க்கப்படுவது யாது என்பது இயல்பாக எழும் வினாவாகும்.**

*இதனை தீர்மானிக்கும் முக்கிய காரணியாக உள்ள கல்வி, பண்பாடு பற்றிய எத்தகைய நோக்கினை உடையவர்கள் மத்தியில் இப்பல்கலைக் கழகம் இயங்குகின்றது என்பதாகும். என்று யாழ் பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் சு.வித்யானந்தன் யாழ் பல்கலைக்கழக இரண்டாவது பட்டமளிப்பு விழா பேருரையினை ஆற்றுகையில் கூறினர். பல்கலைக்கழக வேந்தர் திரு வி.மாணிக்கவாசகர் தலைமையில் பட்டமளிப்பு விழா வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.*

*விழாவின் முன்பு யாழ் திறந்தவெளி அரங்கில் இருந்து வேந்தர் அவர்கள் பட்டுக்குடையின் கீழ் ஆலவட்டம் சகிதம் துணைவேந்தர், பீடாதிபதிகள், பதிவாளர் சகிதம் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், பட்டம் பெறுவோர் முன்செல்ல ஊர்வலமாக பட்டமளிப்பு விழா மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டார்கள். பட்டமளிப்புவிழா மண்டப வாசலில் நாதஸ்வர இசையுடன் வேந்தர் அவர்கள் மண்டபத்தினுள் அழைத்து வரப்பட்டார்கள். விழாவினை வேந்தர், துணைவேந்தர் ஆகியோர் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார்கள். இதை அடுத்து துணைவேந்தர் பேராசிரியர் சு.வித்யானந்தன் பட்டமளிப்பு பேருரையில் தொடர்ந்து கூறியதாவது.*

*இளம் பல்கலைக்கழகமான எமது யாழ்ப்பாண பல்கலைக்கழகம் அதன் உருவாக்க காலத்திலே செப்பமான முன்மாதிரிகளையும் செம்மை சேர் நடைமுறைகளையும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதில் மிகுந்த ஆர்வமும் மிகுந்த கவனமும் காட்டும் மூதவையும், பல்கலைக்கழக பேரவையும், பட்டமளிப்பு விழா சொற்பொழிவினைத் துணைவேந்தர் ஆகிய நானே அளித்தல் வேண்டும் என கேட்டுக்கொண்டனர். அந்த அன்பு பணிப்பை ஏற்றுக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன். எண்ணிற் கண்ட துணைவேந்தருக்கோ, துணைவேந்தராகக் கண்ட எனக்கோ தரப்பட்டுள்ள இம்மதிப்பு பல்கலைக்கழகம் தன்னை நான் மதிப்பீடு செய்ததன் முடிவென்றே நான் கருத விரும்புகிறேன்.*

*இந்தப் பல்கலைக்கழகத்தின் கருத்தியல் நிலைப்பாடுகளை புலமை பெருக்கத்தில் இது ஆற்றும் பணிகளின் ஐந்தொகையை கண்ணுக்கு எண்ணுக்கணக்காலன்றி எடுத்துக் கூறலாம் என்று நான் கருதுகின்றேன். பல்கலைக்கழகம் ஒன்று கொலு நிறைவுடன் பயின்ற மாணவர் ஒருவரின் அறிவு மட்டத்தை அத்தாட்சி படுத்தி அவரை அவரது திறமையியைந்த*

பெறுவோர்களை ஏற்பதற்கு தகுதி உடையவரென வழி அனுப்பும் நாளான இன்று, அப்ப பல்கலைக்கழகம் தான் இயங்கும் சமூகப் பின்னணியில் தனக்குரிய இடம் யாது என்பதை பற்றி சிந்திப்பது அத்தியாவசியமான ஒரு பணியாகும். இது தன்னைத்தான் நோக்கும் தவம். எமது பல்கலைக்கழகத்தை யாழ்ப்பாண பல்கலைக்கழகம் மென்ற பெயரிலும் நிலையிலும் வயது இரண்டு எனினும் அதன் வளாக நிலை வாழ்க்கையும் சேர்த்துக் கொள்ளும் பொழுது வயது ஏழாகின்றது. மேலும் இப்ப பல்கலைக்கழகத்தின் அடித்தளங்களாக அமைந்த உயர்கல்வி நிறுவனங்களினதும் உயர்கல்வி இயக்கங்களினதும் வயதினை நோக்கும்பொழுது ஏழு ஆண்டுகள் நீளும்.

இங்கு கலை, அறிவியல், மருத்துவம் எனும் மூன்று புலமை பீடங்கள் உள்ளன. விவசாய பீடம் விரைவில் அமைய உள்ளது. மூன்று பீடங்களிலும் **23** பயில்துறைகளும் நிரந்தர சேவையில் **20** பேராசிரியர்களும் இரண்டு இணை பேராசிரியர்களும் **17** சிரேஷ்ட விரிவுரையாளர்களும் **31** விரிவுரையாளர்களும் **19** போதனா ஆசிரியர்களும் கடமை ஆற்றுகின்றனர். எமது மாணவர் தொகை **1801** ஆகும். அக்டோபர் மாதத்தில் புதிதாகச் சேர இருக்கும் மாணவர் தொகை **545** ஆகும். தன்னாதிக்கம் கொண்ட பல்கலைக்கழகம் என்னும் வகையில் ஆண்டுகள் இரண்டு தான் சென்றிருப்பினும் எமது பல்கலைக்கழகம் இரண்டு பட்டமளிப்பு விழாக்களையும் சில மாணவர் ஆர்ப்பாட்டங்களையும் கூட கண்டுவிட்டது.

இலங்கையின் சிறுபான்மையோர் பெரும்பான்மையோராக வாழும் பிரதேச ஒன்றிலே நிறுவப்பட்ட முதலாவது தேசிய பல்கலைக்கழகம் இது என்பதாகும். வேற்றுமையுள் ஒற்றுமை காண முனையும் தேசிய லட்சியத்தை பொருத்தமட்டில் பல இன்னல்களுக்கிடையே உணர்வொருமைப்பாட்டை நிறுவ வேண்டிய தேசபிமானப்பணியில் யாழ் பல்கலைக்கழகத்திடமிருந்து எதிர்பார்க்கப்படுவது யாது என்பது இயல்பாக எழும் வினாவாகும். இதனை தீர்மானிக்கும் முக்கிய காரணிகளாக உள்ள கல்வி, பண்பாடு பற்றிய எத்தகைய நோக்கினை உடையவர்கள் மத்தியில் இப்ப பல்கலைக்கழகம் இயங்குகின்றது என்பதாகும்.

எமது சமூக கல்வியை முதலீடாக கொள்ளும் ஒரு சமூகம். இச்சமூகத்தினரிடையே மாணவர்களின் படிப்பு முடியும் வரை அவர்களை "பாலகராக"வே கருதுவதுண்டு. படிப்புத் தரும் பயன் கொண்டு குடும்ப பொறுப்புகளை ஏற்று நடத்த வேண்டியவர்கள் என்பதால் அவர் அத்தகமை பெரும் வரை தாய் தகப்பன் மாத்திரமல்லாது உடன் பிறந்தோரும் தங்கள் " வயிற்றைக் கட்டி" இவர்களை வளர்ப்பார்கள்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் சமூகப் பயன்பாடு தமிழ் பேசும் மக்களிடையே உயர்கல்வி வாய்ப்புகள் ஆகியனபற்றிச் சிந்திக்கும் பொழுது நாம் எம்மை அறியாமலே தேசிய பிரச்சனைகளில் விளிம்புக்கல்ல , அவற்றின் மையத்துக்கு வந்து விடுகின்றோம். இலங்கையின் இன்றைய முக்கிய அரசியல் பிரச்சினை தேசிய இனங்கள் பற்றிய பிரச்சினை என்பதில் இரு வேறு கருத்து இருக்க முடியாது. கடந்த **35** ஆண்டுகாலம் பல்கலைக்கழக ஆசிரியராக இருந்தவன் என்கின்ற முறையில் அந்தக் கால எல்லைக்குள் பல்கலைக்கழக மாணவருடன் இன வேறுபாடு காட்டாது, பழகியவன் என்ற முறையில் அவர்கள் இதய தாகங்களை அறிந்தனவென்ற முறையில் தேசிய இன பிரச்சனை சிக்கியலுற்றுவதற்கு காரணம் உயர்கல்வி களகத்தை தேசிய இன பிரச்சினைகளைத்

தீர்ப்பதற்கான இடமாக அரசாங்கங்கள் கொண்டாமையேயாகும் என்பதை வன்மையாக எடுத்துக் கூற விரும்புகின்றேன். சமூக வர்க்கங்களின் உந்தற்பாடுகளுக்கும் இனங்களின் கோரிக்கைகளுக்கும் வித்தியாசம் காண முடியாத நிலையில் பல்கலைக்கழகங்களின் மூல வளங்களையும் மூளை வளங்களையும் விரிவாக்க முடியாத நிலையில் இனத்த தனித்துவத்துக்கும் உயர்கல்வி மாணவர் தொகைக்கும் முடிச்சு போடப்பட்டது தரப்படுத்தல் மாவட்ட அளவுத் தொகை, பின் தங்கிய பிரதேச அளவுத் தொகை என்பன இவற்றுக்கான ஆயுதங்கள் ஆயின.

இன்றைய தமிழ்ப் பிரச்சனை உயர் கல்வி பெற முடியாத தமிழ் மாணவர்களின் தமிழ் இளைஞர்களின் பிரச்சினைகள் தான் என்று ஒருவர் கூறினால், கருத்து வேறுபாடு எழ இடமுண்டு. ஆனால் அந்த கருத்தை சிறிது மாற்றி உயர் கல்வி வாய்ப்பற்ற தமிழ் இளைஞர்களால் தான் தமிழ் பிரச்சினை இன்று முனைப்புறச் செய்யப்பட்டுள்ளது என்று கூறினால் அக்கூற்றை எவரும் எதிர்க்க மாட்டார்கள்.

இப் பிரச்சனை சிக்கலுள் யாழ்ப்பாண பல்கலைக்கழகம் ஆற்றக்கூடிய ஒரு பணி உண்டு. இன்றைய நிலையில் தமிழ் பேசும் இளைஞர்கள் உயர்கல்வி தகமை காரணமாகத் தேசிய வாழ்வில் இடம்பெறுவதற்கு வாயிலாக அமைவது யாழ்ப்பாண பல்கலைக்கழகமே. இவ்வாண்டு தொடக்கவிருக்கும் மட்டக்களப்பு பல்கலைக்கழக கல்லூரியும் இன்னும் சில ஆண்டுகளில் அவ்விடத்தை பெறும். ஆனால் இன்றுள்ள நிலையில் யாழ்ப்பாண பல்கலைக்கழகமே முக்கிய இடம் பெறுகின்றது .யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் இத் தேசிய முக்கியத்துவத்தினை உயர் கல்வி நிர்வாகத்தினர் மிகச் சிறத்தையுடன் ஊன்றி கவனிக்க வேண்டும்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் தேசிய முக்கியத்துவத்தினை தேச தலைவர்கள் உணர வேண்டிய அதே வேளையில், யாழ்ப்பாண பல்கலைக்கழகமும் பல்கலைக்கழகமென்ற முறையிலும், அது யாழ்ப்பாணத்தில் உள்ளது என்ற நிலையிலும் தனக்குள் பெரும் பொறுப்பை உணர வேண்டும் அந்தப் பொறுப்பினை மும்முனைப் படுத்தி நோக்கலாம் என எண்ணுகின்றேன்.

முதலாவது இப்ப பல்கலைக்கழகம் திறமைசாலிகளை புத்திசாலிகளை கொண்டதாக இருத்தல் வேண்டும். ஆனால் அத்திறமையும் அறிவும் காரணமாக இந்த நிறுவனம் சாதாரண மக்களில் இருந்து அன்னியப்படுத்தப்பட்ட “ தந்த கோபுரமாக “ மாறக்கூடாது.

இரண்டாவது சர்வதேச நியமனங்களுக்கு இசைய தேசிய வாழ்வுக்கும் பொறுப்புகளுக்கும் மாணவர்களை பயிற்றும் அதே வேளையில் அவர்களை தங்கள் மண்ணில் காலூன்றி நிற்கத்தக்கவர்களாகவும் பயிற்றல் வேண்டும்.

மூன்றாவது இனத்தின் பண்பாடு லட்சியங்கள் ஆகியவற்றின் தீபமாக விளங்கும் அதே வேளையில் இனவாதத்தின் வழியாக வரக்கூடிய ஒதுங்கு நிலையான மனக்கோட்டத்திற்கு இடமளிக்காது இருத்தல் வேண்டும்.

தம்மில் தாம் நம்பிக்கையற்றவர்களுக்கு முன்னேற்றம் இல்லை. எம்மில் உமக்கு நம்பிக்கை உண்டு சமூகமும் எங்களின் நம்பிக்கை வைத்து வைக்க வேண்டும் அத்தகைய நம்பிக்கை உண்டு என்பதை நிரூபிக்கின்ற எமது பல்கலைக்கழகத்திற்கு கிடைத்துள்ள

பணக்கொடைகள் நூற்கொடைகள் தளபாடக் கொடைகள் முதலியன இந்த உறவு வளர வேண்டும். ஏனெனில் உங்கள் நம்பிக்கையில் தான் எங்கள் வளர்ச்சி தங்கி உள்ளது. எங்கள் வளர்ச்சியிலே தான் உங்கள் நம்பிக்கை தங்கியுள்ளது.

இவ் வைபவத்தில் கௌரவப் பட்டமளிக்கப்பட்ட நால்வரில் டாக்டர் ராமச்சந்திரா பரராஜசேகரம் மாத்திரம் நேரில் சமூகம் தந்து தமக்குரிய பட்டத்தினை பெற்றுக் கொண்டார்கள். காலம் சென்ற வண. சேவியர் ஸ்ரனிஸ்லாஸ் தனிநாயகம் அடிகளாருக்கு தேகாந்த நிலையில் அவருக்குரிய பட்டமளிக்கப்பட்டது.

பட்டமளிப்பு விழா வைபவத்திற்கு திருகோணமலை அரசாங்க அதிபர் திரு லயனல் பெர்னான்டோ, எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமுதலிங்கம், திரு. மு. சிவசிதம்பரம், எம். பி. திரு. ஆலாலசுந்தரம், எம். பி. திரு. வே. லோகேஸ்வரன், எம். பி. யாழ் மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. சு. நடராசா, செயலாளர் திரு. தேவநேயசன் நேசையா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

தினகரன் 1981 செப்டெம்பர் 28 திங்கட்கிழமை



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முதலாவது பேரவை (1979) உறுப்பினர்கள் பலருடன் அதன் தலைவராகப் பேராசிரியர் வித்தியானந்தன்.

# JAFFNA UNIVERSITY, TAMIL YOUTHS LINK WITH NATIONAL LIFE

*The Vice-Chancellor of the University of Jaffna, Prof. S. Vithiananthan, delivering the convocation address at the Veerasingham Hall here on Friday, said the national question had worsened as a result of successive governments attempting to solve the nationality problem within the confines of higher education.*

The chancellor of the University Mr.V.Manicavasagar, retired Supreme Court Judge, presided.

Adverting to his 35-year experience as a university teacher who had moved closely with students of all nationalities and creeds, he said, " In a situation where they could not distinguish between class motivations and communal demands and a context wherein they could not expand the intellectual and physical resources of the universities, successive governments decided to link up the question of the identity of the community with the number of those seeking higher education."

"Once that decision was made, concepts like standardisation, district quota and quota for backward areas were used as instruments to achieve that aim."

He said the opinion might differ if it was argued that the Tamil problem was really the problem of those Tamil youth who had been denied the chance of higher education.


But there would be no disagreement whatsoever if it was stated that the Tamil problem had been made acute by those Tamil youths who had been denied higher education.

"In this whole web of complexities, I think the University of Jaffna has a role to play. Under the present circumstances, the University of Jaffna is perhaps the most important channel through which young men from the Tamil-speaking community capable of handling national responsibilities would enter national life.

The proposed University College of Batticaloa, too, would acquire that statue. But that would take some time. Right now, it is the University of Jaffna that can play that role, and it is important that those who are in charge of higher education in this country take this fact into serious consideration "Prof. Vidiyanathan added.

Calling on the national leaders to understand the role of the University of Jaffna in the national life of the country, he said it was obligatory on the part of those teaching and studying to realise their three-fold responsibilities.

First, the university should not be alienated from the common man. Second, students should be trained to take up national responsibilities while being firmly rooted in their own traditions. Third, Jaffna University should not lend itself to the isolation that could result from communalism.



*Friday's convocation at the Jaffna University - left the Chancellor's procession on Its way to the venue of the convocation. The Chancellor of the University Mr. V. Manicavasagar, retired Supreme Court Judge, is seen here under Paddukkudal flanked by 'alavattam' bearers. Also in the picture are Prof. S. Vithiananthan, Vice-Chancellor, Mr. K. C. Logeswaran, Register, Dr. R. Pararajasegaram At right is the procession of graduands (Picture by Jaffna Cor)*

## 67

# தேசிய வாழ்வுக்கு மாணவரைப் பயிற்றுவதே இலட்சியம்:

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாப் பேருரை

*இளம் பல்கலைக்கழகமான எமது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், அதன் உருவாக்கக் காலத்திலே செப்பமான முன்மாதிரிகளையும் செம்மைசேர் நடைமுறைகளையும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதில் மிகுந்த ஆர்வமும் மிகுந்த கவனமும் காட்டும் மூதவையும், பல்கலைக்கழகப் பேரவையும் பட்டமளிப்பு விழாச் சொற்பொழிவினைத் துணைவேந்தராகிய நானே அளித்தல் வேண்டும் எனக் கேட்டுக்கொண்டன. அந்த அன்புப் பணிப்பை ஏற்றுக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன். என்னிற் கண்ட துணைவேந்தருக்கோ, துணைவேந்தராகக் கண்ட எனக்கோ தரப்பட்டுள்ள இம்மதிப்பு பல்கலைக்கழகம் தன்னைத்தான் மதிப்பீடு செய்ததன் முடிவென்றே நான் கருத விரும்புகின்றேன்.*

*ஆனால் அதே வேளையில் பட்டமளிப்பு விழாவினதும் அந்த விழாவில் வரும் சிறப்பு உரையினதும் முக்கியத்துவத்தை, அதன் பெருமை சேர் பாரம்பரியங்களை, நன்கு அறிவோம் என்று கருதிக்கொள்ளும் சிலருக்கு கல்வி நிறுவனத்தின் அதிபர் ஒருவர் அந்நிறுவனத்தின் பரிசளிப்பு விழாவில் ஆற்றுமுறைபோலப் பட்டமளிப்பு உரை அமைந்துவிடுமோ என்ற அச்சமுமேற்படலாம். பட்டத்தையே படிப்பாகவும் அப்பட்டத்தைக் குறிப்பிடும் சான்றிதழையே பட்டமாகவும் கொள்ளும் ஒரு மனநிலையிலேயே அத்தகைய பயம் ஏற்படும். ஆனால் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழா, பரிசளிப்பு விழாவன்று; அது தகமைக்காண் நாள், பட்டதாரி மாணவனிடத்துக் காணப்பட்ட தகைமையைச் சபையிற் சூழ்ந்துள்ள அறிஞர் குழாத்துக்கு எடுத்துக்கூறும் நாள் அது. அது அறிவின் நாள். அறிவைத் தேடுபவர்களுக்கு நடத்தப்பெறும் பெயர் சூட்டு விழா.*

#### மதிப்பான கடமை

*அத்தகைய ஒரு நாளில் அதுவும் இந்தப் பல்கலைக்கழகத்தின் வரலாற்றிலே இரண்டாவது முறையாக நடைபெறும் விழாவில் அதன் துணைவேந்தரே விழாவுரையினை நிகழ்த்துமாறு வேண்டப்படுவதை மிக்க மதிப்பான கடமையாக நான் ஏற்றுக்கொள்கின்றேன்.*

*இப்பணியை ஏற்கும் பொழுது இதன் வழியாக இந்தப் பல்கலைக்கழகத்தின் கருத்தியல் நிலைப்பாடுகளை, புலமைப் பெருக்கத்தில் இது ஆற்றும் பணிகளின் ஐந்தொகையை, எண்ணுக்கணக்கால் கணக்காலன்றி எண்ணக் கணக்கால் எடுத்துக் கூறலாம் என்று நான் கருதுகின்றேன்.*

பல்கலைக்கழகமொன்று, கொலு நிறைவுடன், தன் நிழறிற் பயின்ற மாணவர் ஒருவரின் அறிவு மட்டத்தை அத்தாட்சிப்படுத்தி. அவரை அவரது திறமைக்கியைந்த பொறுப்புக்களை ஏற்பதற்குத் தகுதி உடையவரென வழியனுப்பும் நாளான இன்று, அப்பல்கலைக்கழகம், தான் இயங்கும் சமூகப் பின்னணியில் தனக்குரிய இடம் யாது என்பதுபற்றிச் சிந்திப்பது அத்தியாவசியமான ஒரு பணியாகும். இது தன்னைத்தான் நோக்கும் தவம்.

எமது பல்கலைக்கழகத்துக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மென்ற பெயரிலும் நிலையிலும் வயது இரண்டு எனினும், அதன் வளாகநிலை வாழ்வையும் சேர்த்துக்கொள்ளும் பொழுது வயது ஏழாகின்றது. மேலும் இப் பல்கலைக்கழகத்தின் அடித்தளங்களாக அமைந்த உயர் கல்வி நிறுவனங்களினதும் உயர் கல்வி இயக்கங்களினதும் வயதினை நோக்கும் பொழுது ஏழு ஆண்டுகள் நீளும்.

ஆனால் இங்கு காலத்தின நீட்சியன்று முக்கியமானது இலங்கையின் மற்றைய ஐந்து பல்கலைக்கழகங்களுடன் ஒப்பு நோக்கும் பொழுது நாம் எங்கே எப்படி நிற்கிறோமென்பது முதலில் எழும் வினாக்களாகும்.

**மூன்று புலமைப் பீடங்கள்**

இங்கு கலை, அறிவியல், மருத்துவம் எனும் மூன்று புலமைப்பீடங்கள் உள்ளன. விவசாயபீடம் விரைவில் அமைய உள்ளது. மூன்று பீடங்களிலும் 23 பயில் துறைகளும், நிரந்தர சேவையில் 20 பேராசிரியர்களும், 2 இணைப்பேராசிரியர்களும் 17 சிரேஷ்ட விரிவுரையாளர்களும், 31 விரிவுரையாளர்களும் 69 உதவி விரிவுரையாளர்களும் 19 போதனாசிரியர்களும் கடமையாற்றுகின்றனர். எமது மாணவர் தொகை 1861 ஆகும். ஒக்ரோபர் மாதத்திற் புதிதாகச் சேர இருக்கும் மாணவர் தொகை 545 ஆகும். தன்னாதிக்கம் கொண்ட பல்கலைக்கழகமெனும் வகையில் ஆண்டுகள் இரண்டு தான் சென்றிருப்பினும் எமது பல்கலைக்கழகம் இரண்டு பட்டமளிப்பு விழாக்களையும், சில மாணவர் ஆர்ப்பாட்டங்களையும்கூடக் கண்டு விட்டது.

இந்த அங்க இலட்சணங்களை மாத்திரம் கொண்டு பாாத்தாலே நாம் பல்கலைக்கழகமாக இருப்பதற்கு, பல்கலைக்கழகம் என்று பெயர் சூட்டப்படுவதற்கு, பொருத்தமானவர்கள் என்பது வெளிப்படை. சற்று ஆழமாகச் சென்று இதன் ஆளுமைப் பொலிவை நோக்கும்போதும் திருப்தியே ஏற்படுகின்றது. எமது பல்கலைக்கழகப் பேராசிரியர்களும் விரிவரையாளர்களும் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் ஈட்டியுள்ள புலமைச் சாதனைகள், வெளியிட்டுள்ள ஆராய்ச்சி முதலியனவற்றைக் கொண்டு நோக்கும்பொழுதும், அவரவர் துறையில் அவரவருக்குள்ள உள்நாட்டு, வெளிநாட்டுக் கணிப்பினை நோக்கும்பொழுதும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கையின் மற்றெந்தப் பல்கலைக்கழகத்திற்கும் குறைந்ததல்ல என்னும் உண்மை தெளிவாகும். ஆனால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஐந்தொகையைத் தயாரிக்கும் பொழுது பல்கலைக்கழகங்களுக்குப் பொதுவான இந்த அம்சங்களோடு வேறொரு முக்கிய அம்சத்தையும் கணிக்கவேண்டியுள்ளது. அக்கணக்கெடுப்பில் இதன் நிலை யாது என்பதையும் நோக்கவேண்டி உள்ளது.

**தேசியப் பல்கலைக் கழகம்**

இவ்வாறு நோக்கும்பொழுது நாம் கவனத்திலிருத்த வேண்டிய முதலுண்மை "இலங்கையிற் சிறுபான்மையோர் பெருபான்மையாக வாழும் பிரதேசமொன்றிலே நிறுவப்பட்ட முதலாவது தேசியப் பல்கலைக்கழகம் இது" என்பதாகும். வேற்றுமையுள் ஒற்றுமை காண முனையும் தேசிய இலட்சியத்தைப் பொறுத்த மட்டில், பல இனங்களுக்கிடையே உணர்வொருமைபாட்டை நிறுவ வேண்டிய தேசாபிமானப் பணியில், யாழப்பாணப் பல்கலைக்கழகத்திடமிருந்து எதிர்பார்க்கப்படுவது யாது என்பது இயல்பாக எழும் வினாவாகும்.

இதனைத் தீர்மானிக்கும் முக்கிய காரணியாகவுள்ளது கல்வி, பண்பாடுபற்றிய எத்தகைய நோக்கினை உடையவர்கள் மத்தியில் இப் பல்கலைக்கழகம் இயங்குகின்றதென்பதாகும்.

எமது சமூகம் கல்வியை முதலீடாகக் கொள்ளும் ஒரு சமூகம். இச்சமூகத்தினரிடையே மாணவர்களின் படிப்பு முடியும் வரை அவர்களைப் "பாலகரா" கவே கருதுவதுண்டு. படிப்புத்தரும் பயன்கொண்டு குடும்பப் பொறுப்புக்களை ஏற்று நடத்த வேண்டியவரென்பதால் அவர் அத்தகமை பெறும்வரையும் தாய் தகப்பன் மாத்திரமல்லாது உடன்பிறந்தோரும் தங்கள் 'வயிற்றைக் கட்டி' இவர்களை வளர்ப்பார்கள்.

இக்கண்ணோட்டத்தில் நோக்கும் போது எமது அடிப்படைச் சமூக அலகு தனிமனிதன் அன்று. குடும்பமே என்பது தெளிவாகும். எனவே குடும்பத்தில் ஒருவர் படிக்கின்றார் எனில் அந்தப் படிப்பின் பயன் முழுக் குடும்பத்தையுமே முன்னுக்குக் கொண்டுவருவதாயிருத்தல் வேண்டும். எங்களைப் பொறுத்தவரையிற் பல்கலைக்கழகப் படிப்பு இன்னும் ஒரு குடும்ப முதலீடுதான். குடும்பங்களின் மேலோங்குகைக்குப் பட்டம் உதவல் வேண்டும். அப்படியில்லை என்றால்...? அங்குதான் முக்கியமான தேசியப் பிரச்சினை ஒன்று முளைவிடத் தொடங்குகின்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகதின் சமூகப் பயன்பாடு, தமிழ் பேசும் மக்களிடையே உயர்கல்வி வாய்ப்புக்கள் ஆதியன பற்றிச் சிந்திக்கும்பொழுது நாம் எம்மை அறியாமலே தேசியப் பிரச்சனையின் விளிம்புக்கல்ல, அவற்றின் மையத்துக்கே, வந்துவிடுகின்றோம்.

**முக்கிய அரசியற் பிரச்சினை**

இலங்கையின் இன்றைய முக்கிய அரசியற் பிரச்சினை தேசிய இனங்கள் பற்றிய பிரச்சினை என்பதில் இருவேறு கருத்து இருக்க முடியாது. கடந்த முப்பத்தைந்து ஆண்டு காலம் பல்கலைக்கழக ஆசிரியனாக இருந்தவன் என்கின்ற முறையில், அந்தக்கால எல்லையுள் பல்கலைக்கழக மாணவருடன் இனவேறுபாடு காட்டாது பழகியவன் என்ற முறையில், அவர்கள் இதய தாகங்களை அறிந்தவனென்ற முறையில், "தேசிய இனப் பிரச்சினை சிக்கலுற்றதற்கான காரணம், உயர் கல்விக் களத்தைத் தேசிய இனப்பிரச்சினைகளை தீர்ப்பதற்கான இடமாக அரசாங்கங்கள் கொண்டமையேயாகுமென்பதை வன்மையாக எடுத்துக் கூற விரும்புகின்றேன்." சமூக வர்க்கங்களின் உந்தற்பாடுகளுக்கும், இனங்களின் கோரிக்கைகளுக்கும் வித்தியாசம் காணமுடியாத நிலையில், பல்கலைக்கழகங்களின் மூலைவளத்தையும் விரிவாக்க முடியாத நிலையில், இனத் தனித்துவத்துக்கும் உயர் கல்வி மாணவர் தொகைக்கும் முடிச்சுப் போடப்பட்டது. தரப்படுத்தல், மாவட்ட

அளவுத்தொகை, பின் தங்கிய பிரதேச அளவுத் தொகை என்பன இவற்றுக்கான ஆயுதங்களாயின.

இன்றைய தமிழ்ப் பிரச்சினை உயர்கல்வி பெறமுடியாத தமிழ் மாணவர்களின், தமிழ் இளைஞர்களின் பிரச்சினைதான் என்று ஒருவர் கூறினால், கருத்து வேறுபாடு எழ இடமுண்டு. ஆனால் அந்தக் கருத்தைச் சிறிது மாற்றி, உயர் கல்வி வாய்ப்பற்ற தமிழ் இளைஞர்களினால்தான் தமிழ்ப் பிரச்சினை இன்று முனைப்புறச் செய்யப்பட்டுள்ளதெனக் கூறினால் அக்கூற்றை எவரும் எதிர்க்க மாட்டார்கள்.

**தேசிய வாழ்வின் வாயில்**

இப் பிரச்சினைச் சிக்கலுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆற்றக்கூடிய ஒரு பணியுண்டு. "இன்றைய நிலையில் தமிழ் பேசும் இளைஞர்கள் உயர் கல்வித் தகைமை காரணமாகத் தேசிய வாழ்வில் இடம்பெறுவதற்கு வாயிலாக அமைவது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமே." இவ்வாண்டு தொடங்கப்பெறவிருக்கும் மட்டக்களப்பு பல்கலைக்கழகக் கல்லூாரியும் இன்னும் சில ஆண்டுகளில் அவ்விடத்தைப் பெறும். ஆனால் இன்றுள்ள நிலையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமே முக்கிய இடம் பெறுகின்றது. "யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இந்தத் தேசிய முக்கியத்துவத்தினை உயர் கல்வி நிர்வாகத்தினர் மிக்க சிரத்தையுடன ஊன்றிக் கவனிக்க வேண்டும்."

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தேசிய முக்கியத்துவத்தினைத் தேசத் தலைவர் உணர வேண்டிய அதே வேளையில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற முறையிலும், அது யாழ்ப்பாணத்தில் உள்ளது என்ற நிலையிலும், தனக்குள்ள பெரும் பொறுப்பை உணர வேண்டும். அந்தப் பொறுப்பினை மும்முனைப் படுத்தி நோக்கலாமென எண்ணுகின்றேன்.

முதலாவது "இப்பல்கலைக் கழகம் திறமைசாலிகளை, புத்திமான்களைக் கொண்டதாக இருத்தல் வேண்டும். ஆனால் அத்திறமையும் அறிவும் காரணமாக இந்நிறுவனம் சாதாரண மக்களிலிருந்து அந்நியப்படுத்தித் தரப்பட்ட ' தந்த கோபுர' மாக மாறக்கூடாது.

இரண்டாவது, "சர்வதேசிய நியமங்களுக்கமைய தேசிய வாழ்வுக்குப் பொறுப்புகளுக்கும் மாணவர்களைப் பயிற்றும் அதே வேளையில், அவர்களைத் தங்கள் மண்ணிற் காலுான்றி நிற்கத்தக்கவர்களாகவும் பயிற்றுதல் வேண்டும்."

மூன்றாவது, இனத்தின் பண்பாடு, இலட்சியங்கள் ஆகியவற்றின் தீபமாக விளங்கும் அதேவேளையில் இனவாதத்தின் வழியாக வரக்கூடிய ஒதுங்குநிலை மனக்கோட்டத்திற்கு இடமளிக்காதிருத்தல் வேண்டும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினை எதிர்நோக்கும் சவால்கள் இவைதான். ஏழு வருடங்கள் மாத்திரம் இயங்கிய பல்கலைக்கழக நிறுவனத்திடம் இருந்து பலவற்றை எதிர்பார்க்க முடியாதுதான். ஆனால் எதிர்பார்ப்பு இருக்கின்றதென்பதை மறக்கவும் முடியாது.

இந்தப் பணிகளைச் செய்வதற்கான ஆரம்பத் தொழிற்பாடுகள் எமது பல்கலைக்கழத்தில் நடைபெறுவதை எனது பதவிக் காலத்திலேயே நான் கண்டுள்ளேன். கலை நிகழ்ச்சிகளிலும்.

கல்வி முயற்சிகளிலும் ஆய்வுத்தேடல்களிலும் அறிவியற் பிரயோக முறைகளிலும் எமது பல்கலைக்கழகமானது ஒரு முக்கிய இடத்தைப் பெறுகின்றது. மேலும் எமது பேராசிரியர்கள் விரிவுரையாளர்கள் ஆகியோரின் தனிப்பட்ட ஆளுமை காரணமாகவும் இன்று யாழ்ப்பாண வாழ்வின் இன்றியமையாத ஓரிடத்தைப் பெற்றுள்ளது. எனினும் நான் சற்று முன்னர் கூறிய முப்பெரும் பணிகளை ஆற்றுவதற்கு அது இன்னும் முற்றாக தயாராக வில்லை என்றே கூறவேண்டும்.

இவ்வாறு நோக்கும்பொழுது தான் பல்கலைக்கழகமென்பது யாது? அது யார் யாரைக் கொண்டுள்ளது என்னும் வினாக்களுக்கு விடைகூற வேண்டிய தேவை ஏற்படுகின்றது.

**இரு முக்கிய அம்சங்கள்**

பல்கலைக்கழகங்கங்கள் பற்றிய கவர்ச்சிகரமான, மேற்கோள் காட்டக்கூடிய, பல்வேறு வரைவிலக்கணங்கள் உள்ளன. அவை யாவும் பல்ககலைக்கழகத்தின் இரு முக்கிய அம்சங்களை உள்ளடக்கியனவாகவே இருக்கும். “நிதானமாகச் சிந்தித்துப் பார்க்கையிற் பல்கலைக்கழகமென்பது அதன் மாணவரும் ஆசிரியருமே, துணைவேந்தர் உட்பட மற்றையோர் யாவரும் இவர்களது நலனுக்கும் விருத்திக்கும் உழைப்பவர்களே.” பல்கலைக்கழக நிலைக்கு முற்பட்ட வகுப்புக்களில் ஆசிரியர்களின் திறமை முற்றுமுழுதாக மாணவர் தேவை கொண்டே தீர்மானிக்கப்படுவதுண்டு. ஆனால் பல்கலைக்கழக மட்டத்திலோ, பயிலும் மாணவர்களின் தேவைகளை ஆசிரியர் உணர வேண்டிய அதே வேளையில், மாணவனும் ஆசிரியனது அறிவு வீச்சின் எல்லைகளைப் புரிந்துகொள்ளல் வேண்டும். ஏனெனில் பல்கலைக்கழக ஆசிரியனுக்கு மாணவர்க்குப் பாடத்தைப் போதிக்கும் பணியொன்றே போதுமானதன்று. “பல்கலைக்கழக ஆசிரியன் அறிவைப் பரப்பும் அதே வேளையில், அறிவைத் தோற்றுவிக்கவும் பாடுபடுகின்றான். ஆராய்ச்சிகளின் பயன் அறிவின் தோற்றமே.” அது சங்க காலத்துச் சமூக வரலாறாகவோ, கடற்கரைக் கிளிஞ்சல்களின் அமைப்பாகவோ, வேதங்களின் உட்கிடக்கையாகவோ, கொம்பியூட்டர்களின் தொழிற்பாடகவோ இருக்கலாம். ஆய்வு அறிவின் பரப்பை விஸ்தரிக்கின்றது. பல்கலைக்கழகங்களினாற் பெயர்பெறும் பேராசிரியர்களும் உண்டு. ஆனால் பேராசிரியர்களாலே பெயர் பெறும் பல்கலைக்கழகங்களுமுண்டு. இத்தகைய பேர் - ஆசிரியர்கள் உலவும் அறிவுச் சோலையாகப் பல்கலைக்கழகம் விளங்க வேண்டும். அடுத்து மாணவர்கள் முக்கிய இடம் பெறுகின்றனர்.

எமது மாணவர் குழந்தைகளல்லர், வயதுவந்தவர்கள். தங்களைத் தாங்களே கவனித்துக் கொள்ளக்கூடிய வயதினர், அறிவினர், அவர்களிடம் அறிவின் முதிர்ச்சியை எதிர்பார்க்க முடியாது ஆனால் அறிவைப் பெறுவதற்கான ஆற்றலும் தாகமும் அவரிடமுண்டு.

இந்தக் கட்டத்திற் பல்கலைக்கழக மாணவர் பற்றிய ஒரு குறிப்பினை எனது உரையின் கருத்தோட்டத்துக்கு வலுச் செய்கின்ற ஒரு குறிப்பினைக் கூற விரும்புகின்றேன்.

**மாணவர்கள் பிரச்சினை**

இப்பொழுத பல்கலைக்கழகத்திற் பயிலும் மாணவர்கள் பற்றி முன்னர் பல்கலைக்கழக மாணவர்களாக இருந்தவர்களும். இருக்காதவர்களும் கூறும் முக்கிய குறைபாடுகளை நோக்குமாறு வேண்டுகின்றேன். “ஆங்கிலம் தெரியாது”. ‘அதிகம் வாசிப்பதில்லை.’

*நடமாடும் வட்டம் குறுகியது' என்று பல குறைபாடுகள் விவரிக்கப்படுவதுண்டு. இத்தகைய குறைபாடுகளைக் கூறுவோர் பல்கலைக்கழக மாணவர் மட்டத்தில ஏற்பட்டுள்ள சமூக மாறுதல்களை அவதானிப்பதில்லை. 'இன்றைய பல்கலைக்கழ மாணவர்கள் வசதியுள்ள குடும்பங்களில் வாளிப்பான சந்ததியல்ல. இந்த நாட்டில் மக்களாட்சி பரவியன் காரணமாக, சமூக ஜனநாயகக் கோட்பாடுகள் பரவியதன் காரணமாக, கல்வி வாய்ப்பபைப் பெற்றவர்கள் இவர்கள்; ஏற்கனவே வசதியுள்ள குடும்பங்களின் வாய்ப்பை மேலும் பெருக்குவதற்காக வந்தவர்களல்லர். இவர்களிற் பெரும்பாலானோர் அவ்வக் குடும்பங்களில் முதன் முதல் மேற்கல்வி கற்போராய் வந்திருப்பவர். பி. ஏ. என்ற சொற்றொடரைக் குடும்பப் பேச்சு வட்டத்துட் கேட்காதவர்கள். ஆனால் குடும்பப் பொறுப்புணர்வு உடையவர்கள். தங்கள் குடும்பங்களின் எதிர்கால நம்பிக்கைகளாக இங்கு வந்துள்ளவர்கள். தங்கள் சிந்தனைகள் ஒரு குடும்பத்தையோ வட்டாரத்தையோ மாற்றத்தக்க அளவுக்கு அடிநிலைச் செல்வாக்கு உடையவர்கள்.*

*இத்தகைய மாணவருக்கு நாம் அளிக்கும் பயிற்சி எத்தகையதாக இருத்தல் வேண்டும்? இன்னொரு வகையிற் கூறினால், இவர்களுக்கு எத்தகைய பயிற்சியை அளிப்பதன் மூலம் பல்கலைக்கழகம் நான் முன்னர் குறிப்பிட்ட மூன்று பணிகளையும் நிறைவு செய்ய முடியும்?*

*இந்தப் பிரச்சினை எமது பல்கலைக்கழகத்திற்கு மாத்திரமல்ல. இலங்கையின் எல்லாப் பல்கலைக்கழகங்களுக்கும், மூன்றாவது உலக நாடுகளின் பல்கலைக்கழகங்களுக்கும் பொதுவான ஒரு பிரச்சினை தான்.*

*இந்த வினாவுக்கு மிகச் சுலபமான விடை உண்டு அவரவர் துறையில் நன்கு பயிற்றுவதன் மூலம் அவர்களைச் சிந்திக்கப் பழக்குவோம், மக்களிடையே அவர்களைப் பணியாற்ற பழக்குவோம் என்று கூறிவிடலாம். ஆனால் நாம் அளிக்கும் பயிற்சிக்கும் அவர்கள் குடும்ப எதிர்பார்ப்புகளுக்கும் உள்ள தொடர்பு யாது? அவர்கள் பெறும் சான்றிதழ்களுக்கும் வேலைவாய்ப்புகளுக்கு முள்ள உறவு யாது?*

**அறிவின் பிரயோக வழி**

*இன்று நாம் எமது இளைஞர்களைப் பயிற்றி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றோம். நாம் பயிற்றுவதெல்லாம் இந்த மண்ணுக்கு நேரடியாகச் சுவறாமல், முதலில் நைஜீரியாவிலோ, சவுதி அரேபியாவிலோ உறிஞ்சப்பட்டு, அந்நாட்டுப் பணமாகத்தான் எம்மிடையே வருகின்றது. எமது பயிற்சிக்கும் எமது மூலவளங்களுக்கும் உள்ள தொடர்பு யாது? வேலை வாய்ப்பின்மையை எத்தகைய பொருளியற் கோட்பாடு கொண்டு தீர்மானிக்கின்றோம்? இவை பற்றி நாம் ஆழமாகச் சிந்திக்க வேண்டிய கட்டம் வந்துள்ளது. "பல்கலைக்கழகத்தின் பணி, அறிவைத் தோற்றுவிப்பது மாத்திரமன்று, தோற்றுவித்துப் பரப்பும் அறிவைப் பிரயோகப்படுதல் வேண்டும். பிரயோகப்படுத்தப்படாத, படுத்தப்பட முடியாத அறிவாற் பயனில்லை." செப்பமுறை இல்லாத கொள்கை இல்லை; கொள்கை இல்லாது செய்முறையும் இல்லை. எமது அறிவின் நிறைவான பிரயோகத்தால் எமது நாட்டிலேயே வாய்ப்புக்கள் உருவாக்கப்படும்வரை நாம் காசுக்காக கல்வியை ஏற்றுமதி செய்பவர்களாகவே இருப்போம்.*

அறிவின் பிரயோகம் எனும் கருத்து எம்மை ஆராய்ச்சியாளனிடத்துக் கொண்டு வந்து நிறுத்திவிடுகின்றது. பல்கழக ஆராய்ச்சியாளருக்கு நாம் கொடுக்கும் உந்துதல் தான் அறிவுப் பிரயோகம்பற்றிய இப்பிரச்சினைக்குத் தீர்வு தரமுடியும். ஆனால் அது வெறும் உற்சாக வார்த்தைகளால் மாத்திரம் செய்யப்படக்கூடியதன்று; அதற்கு நிதி வேண்டும்.

பல்கலைக்கழகம் தனக்குள் தான் தனி உலகமாக இருக்கலாம். ஆனால் அது சமூகத்தில் ஓர் அங்கமென்பதை மறந்து தொழிற்படக் கூடாது. ஒரு பல்கலைக்கழகத்தின் பயன்பாடு இரண்டொரு ஆண்டுகளிலோ இரண்டொரு தசாப்தங்களிலோ தெரிந்துவிடுவதில்லை என்பதைச் சமூகமும் மறந்துவிடக்கூடாது.

**செம்மையான மரபுகள்**

பல்கலைக்கழகத்தின் செம்மையான மரபுகள் போற்றப்படவேண்டுமென்றும், நியமமான பராம்பரியங்கள் ஏற்படுத்தப்படவேண்டும் என்றும் நாம் முனையும் பொழுது அந்த முயற்சியின்பயன் எமது ‘உற்பத்தியில்’ தெரிய வேண்டும். ஆராய்ச்சிகள் மூலம் அறிவுலருக்கு நாம் தரும் ‘உற்பத்திகளை ஒருபுறம் விடுத்து நோக்கினால், சமூகத்தைப் பொறுத்தவரையில் எமது ‘உற்பத்திப்’ பொருள் எமது பட்டதாரி தான் . ஒவ்வொரு பீடமும் ஒவ்வொரு விதமான மனிதனை ‘உற்பத்தி’ செய்வதாக அமையாது, “விஞ்ஞானக் கண்ணோட்டத்துடன் சமூகத்தையும் சமூகக் கண்ணோட்டத்துடன் விஞ்ஞானத்தையும் நோக்கும் மாணவர்களைத் தோற்றுவித்தல் வேண்டும். அறிவியல் நிலை நின்று உலகை விளக்கும் கலைமாணியும், எமது சமூகத்தையும் சமூகப் பராம்பரியத்தையும் மதிக்கும் விஞ்ஞானமாணியும், நோயைக் குணப்படுத்துவதிலும் பார்க்க நோயாளியைக் குணப்படுத்துகின்ற வைத்தியமாணியும் பல்கலைக்கழகத்தைவிட்டு வெளியே செல்லும்பொழுது இந்தப் பல்கலைக்கழகம் தனது சமூகப் பணியை ஆற்றுகிறதென்பது தெளிவு.” இங்கு பயிலும் மாணவர்களையும் பயிற்றுவிக்கும் அறிஞர்களையும் நோக்கும்பொழுது இந்த இலட்சியம் தூரத்துக்கனவல்ல அண்மைக் காலத்தில் நிச்சயம் வரப்போகும் நிகழ்வுதான் என்று நான் துணிந்து கூறுவேன்.

தம்மில் தாம் நம்பிக்கையற்றவர்களுக்கு முன்னேற்றமில்லை; எம்மில் எமக்கு நம்பிக்கை உண்டு. சமூகமும் எங்களில் நம்பிக்கை வைத்தல் வேண்டும். அத்தகைய நம்பிக்கை உண்டென்பதை நிருபிக்கின்றன எமது பல்கலைக்கழகத்திற்குக் கிடைத்துள்ள பணக்கொடைகள், நூற்கொடைகள் தளபாடக் கொடைகள் முதலியன. இந்த உறவு வளர வேண்டும். ஏனெனில் “உங்கள் நம்பிக்கையிலேதான் எங்கள் வளர்ச்சி தங்கியுள்ளது. எங்கள் வளர்ச்சியிலே தான் உங்கள் நம்பிக்கைகள் தங்கியுள்ளன.

தினகரன் 1981 ஒக்டோபர் 4 ஞாயிற்றுக்கிழமை

## 68

# பெரிய தமிழ் மேதையாகத் திகழ்ந்த வித்துவ சிரோமணி கணேசையர்

**12.04.83 அன்று நடைபெற்ற வித்துவ சிரோமணி கணேசையர் அவர்களின் 105 வது நினைவு நாள் விழாவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் கலாநிதி. சு. வித்தியானந்தன் நிகழ்த்திய பேருரை.**

*ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாறு ஈழத்துப் பூதந்தேவனாரிலிருந்து தொடங்குகின்றது என்று குறிப்பிடப்படுகின்ற போதிலும், யாழ்ப்பாண மன்னர்கள் காலத்திலிருந்தே தொடர்ச்சியான இலக்கிய வரலாறொன்றனை நாம் காணுகின்றோம். யாழ்ப்பாண மன்னர் காலத்திலிருந்து துவக்கமடையும் ஈழத்து இலக்கிய மரபு பல்வேறு சமூக சமய அரசியற் காரணிகளால் மாறுபட்டும் வேறுபட்டும் வளர்ந்து வந்திருக்கின்றது.*

*தமிழிலக்கிய வரலாற்றில் 19ம் நூற்றாண்டு ஈழத்துக்குரியது என்பது இப்பொழுது ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. தமிழிலக்கிய வரலாற்றில் ஈழத்தின் நிலையை, ஈழத்தவரின் நிலையை முன்னெடுத்து உயர்த்திய பெருமை ஆறுமுகநாவலரைச் சாரும். நாவலர் தொடக்கி வைத்த கல்வி மரபு இன்றும் அருந் தொடர்ச்சியுடன் வளர்ந்து வருகின்றது. நாவலர் மரபின் கடைசிக் கொழுந்தாக இன்றும் நம்மிடையே பண்டிதமணியவர்கள் காணப்படுகின்றார்.*

### ஈழத்துக் கல்வி மரபு

*ஈழத்து இலக்கிய வரலாற்றை ஈழத்தவர்களின் இலக்கிய முயற்சிகளை அறிய முற்படுபவர்கள் ஈழத்துக் கல்வி மரபினையும் செம்மையாக அறிந்திருக்க வேண்டும்.*

*ஐரோப்பியர் வருகையையொட்டி நிறுவன ரீதியான கல்விக் கூடங்கள் தொடங்குவதற்குப் பலகாலம் முந்தியே பாரம்பரியக் கல்விமுறை, அதாவது மரபு ரீதியான திண்ணைப் பள்ளிக்கூட முறை நிலவி வந்தது. திண்ணைப் பள்ளிக் கூடங்களில் மாணவர்கள் ஆசிரியர்களை அணுகி 'உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்' கற்றனர். நீண்ட காலமாக ஆசிரியர் வீட்டிலேயே உடனுறைந்து கல்விச் செல்வத்தைப் பெற்றனர். மாணவருக்குரிய பாடத் திட்டமாக இலக்கணம், இலக்கியம், நீதி நூல்கள், வைத்தியம், சோதிடம், என்பன அமைந்திருந்தன. செய்யுள் இயற்றுதலும் கட்டாய பாடமாக இடம் பெற்றிருந்தது.*

*மனனம் செய்தல், பொருள் விளக்குதல், உரை கூறுதல், செய்யுள் இயற்றல் என்பன.*

*ஈழத்து இலக்கியவானில் சுடர்விடும் பலர் இந்த இரு மரபுகளுள்ளும் புகுந்து தேறியவர்கள். ஆறுமுகநாவலர், சி.வை. தாமோதரம்பிள்ளை, கனகசுந்தரம்பிள்ளை, சுவாமி விபுலானந்தர் போன்றவர்கள், மரபுவழிக் கல்வியையும் நிறுவன ரீதியான*

கல்வியையும் முழுமையாகப் பெற்று முழுமையாக வெளிப்போந்தவர்கள். இவர்கள் பெற்ற ஆங்கிலக் கல்வி, சமகால இலக்கியப் போக்கினை அகலுலகப் பார்வையிற் கண்டு தெளியவும் அப் போக்குக்கு இயைபு படத் தமிழ் இலக்கிய முயற்சிகளை முன்னெடுத்துச் செல்லவும் வழி வகுத்தனவெனலாம்.

ஈழத்து இலக்கியப் பரப்பில் மாத்திரமன்றித் தமிழிலக்கியப் பரப்பிலே முதன்மைபெறும் சிலர் மரபு வழிக் கல்வியை - பாரம்பரியக் கல்வி முறையிலே திறம்படப் பெற்றவர்கள் எனலாம். தமிழ் நாட்டில் ஆங்கிலக் கல்வியின் தாக்கத்தால் அறிவால், முன்னின்ற அறிஞர்களோடு: சரிசமமாக, அல்லது அதற்கு மேலாக மதிக்கப்பட்ட, இன்றும் மதிக்கப்படுகின்ற உ.வே. சாமிநாதையர் போன்றவர்கள் மரபு ரீதியான, பாரம்பரியக் கல்வி மரபிலேயே வந்தவர்கள்.

**எழுத்து மூலம் உயர்வு**

வித்துவ சிரோமணி கணேசையர் மரபு ரீதியான கல்வி முறையிலே வந்தவர். அவ்வாறிருந்தும், தமிழகத்தவரும் மதிக்குமளவு புகழ் பெற்றவர். ஈழத்தவர் பலர் போன்று தமிழகம் சென்று தம் புகழ் நிறுவியவரல்லர். யாழ்ப்பாண மாவட்டத்திற்குள் இருந்தே தமது புலமையைச் சேய் நாட்டவரும் மதிக்கச் செய்தவர். தமது எழுத்தின் மூலம் தம்மை உயர்த்திக் கொண்டவர். அவர் விளக்கக் குறிப்புகளுடன் பதிப்பித்த தொல்காப்பியம் உலகிலுள்ள பல்கலைக்கழகங்களில் - மேலைத்தேயப் பல்கலைக்கழகங்கள் உட்படப் பயன்படுத்தப்படுகின்றதென்றால் அவரின் பெருமையை என்னவென்று சாற்றுவது? இன்று அன்னாரின் தொல்காப்பியப் பதிப்பு நூல்கள் அச்சில் இல்லாததனால் ஆராய்ச்சியாளர்கள் தவிக்கின்றார்கள் என்பதை நீங்கள் ஒருவேளை அறியாதிருக்கலாம்.

கணேசையர் முதலில் வித்துவ சிரோமணி பொன்னம்பல பிள்ளையவர்களிடம் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் படித்தவர். அவர் மறைந்த பின்னர் சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரிடம் ஏறத்தாழ இருபது ஆண்டுகள் பாடங் கேட்டவர். இதனாலே அவருடன் நெருங்கிப் பழகியவர். மிகுந்த குருபத்தி உடையவர். புலவர் அவர்கள் சிவபதமடைந்தபோது நன்றியறிதலாக அவர் மீது பல கவிகள் பாடி அச்சிட்டு வெளியிட்டார். அவர் வாழ்க்கை வரலாற்றைத் தாமே திறம்பட எழுதி அறிஞர்களின் பாராட்டுக்கள், இரங்கற் பாக்கள் என்பவற்றுடன் வெளியிட்டனர். சீடன் குருவுடன் எவ்வாறு நடக்க வேண்டும், எவ்வாறு நன்றியுடையவனாயிருத்தல் வேண்டும் என்பதற்குக் கணேசையர் பணி சிறந்த எடுத்துக் காட்டு.

**ஆராய்ச்சித் திறன்**

கற்றலினாலும் கற்பித்தலினாலுமே ஒருவன் முழுமையடையலாமென்பதற்கு இலக்கணமாய் விளங்கியவர் கணேசையர். அவர் கற்ற கல்வி ஆழந்தகன்ற நுண்ணிய புத்தி, ஆராய்ச்சித் திறன் என்பவற்றால் புதுமைக்கும் ஈடுகொடுத்து நின்று பிடித்த பெருமைக்குரியவர்.

வித்துசிரோமணி கணேசையர் அவர்களின் பணி பன்முகப்பட்டது. கற்பித்தலில் ஒரு வகைச் “சுகத்தை” க் கண்ட ஐயரவர்கள் கற்பித்தலுக்காகவே மீண்டும் மீண்டும் கற்றார். வயது முதிர்ந்து விவாகம் செய்த பின்னரும் பல மைல்களுக்கு மேல் நடந்து

சென்று கல்வி கற்று வந்தனர். பல கஷ்டங்களையும் பொருட்படுத்தாது, வெள்ளைக் குடையுடனும், புத்தகங்களுடனும் இவர் நடந்து செல்லும் காட்சி அற்புதமானது. மிகுந்த பொறுமையுடன் பல தொல்லைகளையும் பொருட்படுத்தாது, அவதிப்படாது, அடக்கமாக இவர் தமது அறிவை வளர்த்துக் கொண்டமையாலேயே பெரிய தமிழ் மேதையாய்த் திகழ்ந்தனர். இது இவரிடத்துக் காணப்பட்ட தனிச் சிறப்பு.

தொடர்ந்து தமது அறிவைப் பெருக்கிக் கொண்டமையினாலேயே ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதுதல், தொல் இலக்கியங்களுக்கு உரை எழுதுதல், இலக்கண நூல்களை உரை விளக்கக் குறிப்புக்களுடன் பதிப்பித்தல், இலக்கிய வாழ்க்கை வரலாற்று நூல்களை எழுதுதல், செய்யுளியற்றுதல், சிறுவர்களுக்கான உரை நடை நூல்களை எழுதல் என்ற பல் துறைகளிலும் தமது பங்களிப்பைச் செவ்வையாகச் செய்தனர்.

**ஆழ்ந்தகன்ற புலமை**

ஐயரவர்களின் பெருமையையும் ஆழ்ந்தகன்ற புலமையையும் எங்கும் பரவச் செய்தது அவரின் தொல்காப்பிய உரை விளக்கக் குறிப்புடனான பதிப்புக்களே எனலாம். தமிழின் புதிய துறையாகக் கருதப்படும் மூல பாடத்திறனாய்வு என்ற துறையை அனுசரித்த அறிஞர்களுள் முதன்மையானவர் சி.வை.தமோதரம்பிள்ளை "சுத்தப் பதிப்பு நாவலர் பதிப்பு " என்ற பதப்பிரயோகமே சுத்தப் பதிப்பினைக் குறிப்பிடலாயிற்று. இந்தத் தொடர்ச்சியிலே கணேசையரின் தொல்காப்பிய பதிப்பு, மையப் புள்ளியாக, மைற் கல்லாக அமைந்து விட்டது. மற்றைய பதிப்பாசிரியர்களை மனந் திறந்து பாராட்டாத உ. வே. சாமிநாதையர் கணேசையரைப் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுவார்.

"நூலிலே அன்பு வைத்து, அதன்பாலுள்ள விஷயங்களையே வெளிப்படுத்துதலையே தனி இன்பமாகக் கொண்டு பல காலம் ஆராய்ந்து பதிப்பிக்கும் முயற்சியுடையார் சிலருள் ஐயர் ஒருவர்."

**பதிப்புத் திறன்**

இக் குறிப்பிலிருந்து கணேசையர் அவர்களின் பதிப்புத் திறனை அறிந்த கொள்ளலாம்.

நான் பல்கலைக்கழத்திலே கல்வி பயின்ற காலத்திலே தொல்காப்பியம் எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும் படிப்பித்தவர் பேராசிரியர் கணபதிப்பிள்ளை அவர்கள். அவர் இலண்டன் பல்கலைக்கழகத்திற் கலாநிதிப் பட்டம் பெறச் செய்து முன்னர் உயர்திரு. விபுலானந்த அடிகள் தன்னுடன் அண்ணாமலைக்கு அழைத்துச் சென்று அங்கு பேராசிரியராக இருந்த காலத்து வித்துவான் வகுப்பில் இவரைப் படிக்க வைத்தார். இவருக்குத் தொல்காப்பியம் கற்பித்தவர் சோழவந்தான் கிண்ணி மடத்தைச் சேர்ந்த கந்தசாமியார்.

அவர் திருவாவடுதுறை ஆதினத்தில் கல்வி பயின்றவர். அரசன் சண்முகனாரின் மாணாக்கர் பேராசிரியர் சி. கணபதிப்பிள்ளையிடம் தொல்காப்பியம் பாடம் கேட்டபோது கந்தசாமியாரின் குறிப்புக்களை நான் குறித்து வைத்துக் கொண்டேன். அதன் மேல் நான் கொழும்புப் பல்கலைக்கழத்திலும், பேராதனைப் பல்கலைக்கழத்திலும் தொல்காப்பியம் படிப்பித்த **30** ஆண்டு காலத்திலே அக்குறிப்புகளுடன் கணேசையர்

*பதிப்பினையும் பயன்படுத்தியே படிப்பித்து வந்திருக்கின்றேன். கணேசையரின் சொல்லதிகாரப் பதிப்பு இப்போது கிடையாதது பெரும் குறையாக இருக்கின்றது. சொல்லதிகாரப் பதிப்பை மீண்டும் அச்சிட வேண்டும்.*

*ஐயரவர்களின் பதிப்பு முயற்சிகளுக்கும் ஆக்கபூர்வமான பல விஷயங்களுக்கும் கைகொடுத்துதவிய ஈழகேசரி நா.பொன்னையா அவர்கள் போன்ற தமிழ்ப் பரோபகாரிகள் இப் போது ஈழத்திற்கு அதிகந் தேவைப்படுகின்றார்கள்.*

*கணேசையர் அவர்களின் தொல்காப்பியப் பதிப்புப்பற்றி மு.இராகவையங்கார், தேவநேயப்பாவாணர், பூவராகம்பிள்ளை போன்ற தமிழக அறிஞர்கள் விதந்து பாராட்டியமை குறிப்பிடத்தக்கது.*

*பதிப்பு முயற்சியின் மூலவேராகக் கருதக் கூடிய மூலபாடத் திறனாய்வினைப் 'பாடாந்தரம்' என்ற பெயரால் அணுகி அறிந்தவர் ஐயர் அவர்கள் தாம் எழுதிய உரைகளில் பாடபேதத்தையும் அதற்கான காரணத்தையும் நுணுகி ஆராய்ந்த ஐயர், தாம் எழுதிய உரைகளில் பாடபேதத்திற்குச் சிறிதும் இடமளிக்காமலே செயற்பட்டார். செந்தமிழ் பத்திரிகையில் இராமாவதாரப் பாடந்தரம் என்று ஐயரவர்கள் எழுதிய கட்டுரை அக்கால இலக்கிய உலகைக் கவர்ந்ததாகும்.*

*கூர்ந்த மதியும் அதிதீவிரப் போக்கும் அஞ்சாமையும் கொண்டவரெனத் தமிழக அறிஞராற் போற்றப்பட்ட அரசஞ் சண்முகனாருடன் இரு பெயரொட்டு ஆகு பெயர், அன் மொழித் தொகை என்பன பற்றி ஐயர் விவாதம் நடத்தி வெற்றியுங் கண்டவர். வாதப் பிரதிவாதங்கள் செந்தமிழ்ப் பத்திரிகையிலேயே நடைபெற்றன என்பதும் மனங்கொள்ள வேண்டியது.*

*ஈழநாட்டு இலக்கிய வரலாற்றைப் பின்வருவோர் அறிந்து கொள்ள வேண்டுமென்ற உந்துதலின் விளைவாகக் கணேசையர் எழுதிய ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரித்திரத்தைக் கொள்ளலாம். குருபக்தி வெளிப்பாடாக அவர் எழுதிய குமாரசாமிப் புலவர் சரித்திரம் பற்றி முன்னர் குறிப்பிட்டுள்ளோம்.*

**சிறந்த உரைநடை**

*எளிய பதம், எளிய நடை என்பனவற்றிற் பாடசாலை மாணவர்களுக்கு உதவக் கூடிய குசேலர் சரித்திரம் என்னும் உரைநடை நூலையும் எழுதினார். சிறந்த உரைநடை ஆசிரியரான ஐயர் அகநானூறு எனும் சங்க நூலின் முதல் நூறு பாடல்களுக்கும் புத்துரை எழுதியிருக்கின்றார். ஐயரின் உரைச் சிறப்பினை நாணிக் கண்கண் புதைத்தல் என்ற ஒருதுறைக்கோவை உரையினூடுங் காணலாம். மேக தூதக் காரிகையுரையும் ஐயரின் உரை முயற்சிகளுட் சுட்டியுணர்த்தக் கூடியது.*

*அரசகேசரி இயற்றிய இரகு வமிசத்திற்கு இவர் எழுதிய உரை சாலச் சிறந்தது. இந்த உரைக்கு உ. வே. சாமிநாதையர் சிறப்புப்பாயிரம் அளித்தார்.*

*ஐயர் செய்யுளிலக்கியங்களும் செய்துள்ளார். வறுத்தலை விளான் மருதடி விநாயகர் மீது இருபா இருபஃது, அந்தாதி, கலிவெண்பா, ஊஞ்சல், கலைநிலைத்துறை என்பவற்றையும் பாடியிருக்கின்றார்.*

*நல்லாசிரியர் ஒருவரை அவரது மாணவர் பரம்பரையினால் இனங் காணுதல் எளிது. ஈழம் அடங்கவும் ஐயரவர்களின் மாணவர்கள் தங்கள் எச்சங்களை விட்டே சென்றுள்ளனர். ஐயரவர்களின் அபிமானத்திற்குரிய மாணவராகத் திகழ்ந்த பண்டிதர் நமசிவாயம் அவர்களுக்கு யாழ்ப்பாண பல்கலைக்கழகம் இலக்கண வித்துவான் என்னும் பட்டத்தை வழங்கி கௌரவித்தமை ஒரு வகையில் ஐயர் பெற்ற பெருமதிப்பேயெனலாம்.*

தினகரன் வார மஞ்சரி 1983 ஏப்ரல் 24 ஞாயிற்றுக்கிழமை




1981இல் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற யாழ். பல்கலைக்கழக முதலாவது பட்டமளிப்பு விழாவில் துணைவேந்தர் வித்தியானந்தன் அமர்ந்திருக்கின்றார்.

69

# திருத்தொண்டர் பெரியபுராண வசனம் வெளியீட்டுரை

**ஒரு சமுதாயத்தின் பண்பாடு சீர்குன்றத் தொடங்கும் வேளைகளிலும், அந்நியத் தலையீடுகளால் அச்சுறுத்தப்படும் வேளைகளிலும் அதைப் பேணிக்காத்து வளர்த்தெடுப்பதற்கான முயற்சி பல வகைளிலும் பல நிலைகளிலும் மேற்கொள்ளப்படும்.**

பண்பாட்டுப் பற்றுறுதி மிக்க தனி மனிதர்கள் தம் சுய ஆற்றலை முன் வைத்தும், ஒத்த நோக்குடையவர்களோடு இணைந்தும் இத்தகைய பாதுகாப்பிலும் வளர்த்தெடுப்பிலும் ஈடுபடுவர். இம்முயற்சியின் வெற்றி வரலாற்றிலே அவர்களுக்கு நிலையான இடத்தைப் பெற்றுத் தரும். சமுதாய வரலாற்றின் பொது நியதி இது. சேக்கிழார் இயற்றிய திருத்தொண்டர் பெரிய புராணத்திற்கு நாவலரளித்த வசன வடிவத்தின் பதினெட்டாவது பதிப்புக்குத் தெல்லிப்பழைத் துர்க்காதேவி தேவஸ்தானத்தின் சார்பில் வெளியீட்டுரை நிகழ்த்தும் இவ்வேளையில் மேற்படி சமுதாய வரலாற்றுப் பொது நியதி நினைவுக்கு வருகின்றது.

சைவத் தமிழ் பண்பாட்டு வரலாற்றிலே நிலைத்த இடம் பெற்ற சேக்கிழார், ஸ்ரீலஸ்ரீ.ஆறுமுகநாவலர் ஆகிய பெருமக்கள் பண்பாட்டுப் பாதுகாப்பிலும் அதனை வளர்த்தெடுப்பதிலும் ஆற்றிய பணிகளின் சிறப்பைக் காலத்தின் பின்னணியில் மதிப்பிட்டு நன்றியுடன் நினைவுகூருவதற்கும், இன்று இவ்வெளியீட்டின் மூலம் தெல்லிப்பழைத் துர்க்காதேவி தேவஸ்தானம் சமுதாயத்தின் தேவையை உணர்ந்து செய்துள்ள பணியின் முக்கியத்துவத்தை மதிப்பிடுவதற்கும் இது பொருத்தமான சந்தர்ப்பமெனக் கருதுகின்றேன்.

**சைவத் தமிழ்ச் சுவை**

"பக்திச் சுவை நனிசொட்டப் பாடிய கவிவல்லவன்" என்று பாராட்டைப் பெற்ற சேக்கிழார், சோழப் பேரரசர் காலத்தில் வாழ்ந்தவர். அதிகாரம் மிக்க அமைச்சர் பதவியில் அமர்ந்திருந்தவர். செல்வச் சிறப்பிலே திளைத்து மகிழ்ந்திருக்க வேண்டிய அவரை, அம்பலக் கூத்தனின் அடியார்க்குமடியனாக ஆக்கி, மன்னுளராடியாரவர் வான புகழை இந்நிலவுலகமெலாம் நின்று நிலவச் செய்யும் பெரிய புராண காவியத்தைப் பாடத்தூண்டியது எது? அவர் வாழ்ந்த காலச் சமுதாயத்தின் பண்பாட்டுச் சூழலே அவரைத் தூண்டி நின்ற அடிப்படைக் காரணியாகும். அதிகாரப்பீடத்திலுள்ளவர்களைப் புறச்சமய இருள் மயக்க முயன்ற வேளையில், இவ்விருளை அகற்றும் தனி விளக்காகச் சைவச் சான்றோர்களாகிய நாயன்மாரது வரலாற்றுக்காவியமாகிய திருத்தொண்டர் பெரிய புராணத்தைப் பாடினார் அவர். அநபாய சோழன் சமண காவியமாகிய சீவக சிந்தாமணியின் இலக்கியக் சுவையிலே ஈடுபட்டு நயந்தவேளை அச்சுவைக்கு மேலானது சைவத் தமிழ்ச்சுவை என்று காட்டுவதற்காக அவர் மேற்கொண்ட முயற்சியே திருத்தொண்டர் பெரிய புராணமாக மலர்ந்தது என்ற புராண வரலாற்றுச் செய்தி,

இப்புராணம் எழுந்த காலச் சமுதாயத்தின் தேவையையும் அதனைச் சேக்கிழார் எவ்வண்ணம் நிறைவு செய்தார் என்பதனையும் உணர்த்துவது. அன்று இப்புராணம் பாடல் பாடாதிருப்பின் இன்று எமது சைவத் தமிழ் பண்பாட்டின் நிலை எப்படி இருந்திக்குமென்ற வினாவை எழுப்பினாற் சேக்கிழார் பணியின் வரலாற்று முக்கியத்துவம் புலனாகும்.

திருத்தொண்டர் பெரிய புராணம் ஒரு வகையிற் சைவத் தமிழ்ப் பண்பாட்டின் வரலாற்றுக்கான ஆதார நூல்களிலொன்றாகவும், இன்னொரு வகையிலே தமிழ்ப் பெருங்காப்பியங்களிலொன்றாகவும் திகழ்வது. இந்நூலினைத் தமிழரின் தேசிய இலக்கியம் என்று அறிஞர் போற்றுவர். இன்று இந்துநாகரிகத்தைக் கற்கும் மாணவரும், தமிழ் கற்கும் மாணவரும் கட்டாயமாகக் கற்றிருக்க வேண்டிய நூலாகப் பாடத்திட்டங்களில் இந்நூலுக்கு உரிய இடம் வழங்கப்பட்டுள்ளது.

**நாவலர் தொண்டு**

சோழப் பெருமன்னர் கால இலக்கியச் சூழலுக்கேற்பக் காவிய உருவிலமைந்த இந்நூலைக் கடந்த நூற்றாண்டிலே அக்காலச் சமுதாயச் சூழலுக்கேற்ப வசனவடிவிலே தந்தவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள். சைவத் தமிழ்ப் பண்பாடு மேலைத்தேய ஆதிக்கத்தாற் சீர் குலைந்து குற்றுயிராய் கிடந்தவேளையில், அதனை மீட்டெடுத்துப் புதிய வேகத்தோடு நிமிர்ந்து நிற்கச் செய்தவர் என்ற வகையில் அவரது பணி மகத்தானது. நாம் இன்று சைவர்களாத் திகழ்கின்றோமென்றால் அதற்கு அடிப்படை கடந்த நூற்றாண்டில் நாவலர் தமது வாழ்க்கைக் காலம் முழுவதையம் அர்ப்பணித்து நடத்திய சமயப் போராட்டமாகும். அது அதிகார வர்க்கத்தின் ஆதரவுடைய அந்நிய மதத்தினருக் கெதிரான போராட்டம் மட்டுமல்ல, எமது மத்தியில் நிலவிய அறியாமைக்கெதிரான போராட்டமுங்கூட. இப்போராட்டத்தில் அவர் பயன்படுத்திய ஆயுதங்களிலொன்று செய்யுள் வடிவிலமைந்த இலக்கியங்களை வசனவடிவில் எழுதிப் பதிப்பித்து வெளியிடுவது. சிவனது பேரருட் சிறப்பினையும், அவனைப் பணிவோர் அடையும் மேன்மையினையும் தொண்டின் சிறப்பினையும் கூறும் புராண இலக்கியங்களைச் சாதாரண பொது மனிதனும் படித்து விளங்கிக் கொள்ள வேண்டுமென அவர் விரும்பினார். அவ்விருப்பம் திருத்தொண்டர் பெரிய புராண வசனம், திருவிளையாடற் புராண வசனம் முதலியனவாகச் செயல்வடிவம் பெற்றது.

ஸ்ரீலஸ்ரீ நாவலருக்குத் தமிழ் உரைநடையின் தந்தை என்றும், வசனநடை கைவந்த வல்லாளர் என்றும், அறிஞர்களது பாராட்டுக்கள் உண்டு. தமிழ் உரைநடை வரலாற்றில் தனக்கெனத் தனியிடம் பெற்றுத்திகழும் நாவலருக்கு அப்பெருமையைத் தந்த ஆக்கங்களுளொன்று இத்திருத்தொண்டர் பெரியபுராண வசனமாகும். எடுத்தாளப்படுகின்ற விடயத்திற்கும் அது புலப்படுத்தி நிற்கும் உணர்ச்சிக்கும் வாசிப்பவரது கிரகித்தல் திறனுக்குமேற்ப வசன நடையைக் கையாண்டவரான நாவலர் இந்நூலிலே பழைய செந்தமிழ் நடையைத் தழுவியும், வடமொழிப் பதங்கள் கலந்த நீண்ட வாக்கியங்களை அமைத்தும் கதைகளைக் கூறிச் செல்கின்றார். இவ்வகையிலே தமிழ் உரைநடை வரலாற்றை ஆராய்கின்றவர்களுக்கு இன்றியமையாத ஆதார நூல்களிலொன்றாகவும் இந்நூல் அமைகின்றது.

சேக்கிழாரின் காவியத்துக்கு நாவலர் அளித்த இவ்வசன வடிவம் சைவத்தமிழ்ப் பண்பாட்டு வரலாற்றைச் சாதாரண பொது மனித மட்டத்திற்கு இட்டுவந்த சிறப்புடையது. இன்று ஈழத்தமிழரிடையே - சிறப்பாக யாழ்ப்பாணத் தமிழ் மக்களிடையில் நாயன்மார்களின் வரலாறுகள் நன்கு அறியப்பட்டுள்ளன வென்றால், அதற்கு இத் திருத்தொண்டர் பெரிய புராண வசனந்தான் முதற்காரணமாகின்றதென்றால் மிகையாகாது.

**நூலின் பெருமை**

இத்தகைய சிறப்புடைய இந்நூல் பதினேழு பதிப்புக்களைக் கண்டுள்ளது.

இன்று இப் பதிப்புக்கள் கிடைப்பதற்கு அரிதான சூழ்நிலையில், தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம் இப்பதினெட்டாம் பதிப்பை வெளியிடுகிறது. இவ்வெளியீடு தொடர்பான வெளியீட்டுரை நிகழ்த்தும் போது, வெளியிடப்படும் நூலின் பெருமை, வெளியீட்டின் அவசியம் பற்றியும், வெளியிடும் நிறுவனத்தின் தகுதி முதலியன பற்றிக் குறிப்பிட வேண்டும். வெளியிடப்படும் நூலின் பெருமை பற்றியும், வெளியீட்டின் அவசியம் பற்றியும் எனது உரையில் முன்னர் குறிப்பிட்டுள்ளேன். இறுதியாக இந்நூலை வெளியிடும் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தைப் பற்றி சில குறிப்புக்கள் கூறுவது எனது கடமையாகும்.

ஆலயம் என்பது ஆன்மாக்களை வயப்படுத்தும் இடம். ஆன்மாக்களை வயப்படுத்துவதற்கு முதலில் அவற்றின் உள்ளத்தில் அறிவொளியைப் பாய்ச்சல் வேண்டும். அன்பைச் செலுத்த வேண்டும். அவ்வகையில் ஆலயம் ஒரு வழிபாட்டிடமாக மட்டுமன்றிப் பண்பாட்டின் பல அம்சங்களுக்கும் உரிய களமாகப் பரிணமிக்க வேண்டியது இன்றைய தேவையாகும். அந்நியப் பண்பாடு பல முனைகளில் எம்மை விழுங்க முயலும் இக்காலச் சூழலில் எமது ஆலயங்களே பண்பாட்டுக் காவல் நிலையங்களாக அமைதல் வேண்டும். தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம் அவ்வகையில் அமைந்து அரும்பணி செய்து வருகின்றது. இன்று ஈழத்திலே வாழும் சைவப் பெருமக்கள் பெருவாரியாக் கிழமை தோறும் சென்று தரிசிக்கும் தலம் ஒன்று உண்டென்றால் அது இதுவேயாகும். பிற கோயில்களில் மகோற்சவ நாட்களிலே திரளும் மக்களிலும் பார்க்க இக்கோயிலுக்குச் செவ்வாய்க்கிழமைகளிலும், வெள்ளிக்கிழமைகளிலும் கூடுதலான மக்கள் வழிபாட்டிற்கு வருகின்றனர். கடந்த சில ஆண்டுக் காலத்திற்குள் பக்தர் கோடியைத் தன்பால் இழுக்கும் சக்தி வாய்ந்ததாக இத் தேவஸ்தானம் வளர்ந்துவிட்டது. துர்க்கா துரந்தரி, சிவத்தமிழ்ச் செல்வி. பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் தலைமையில் இவ்வாலயம் இன்று சைவப் பெருமக்களிடையே பெரும் பிரசித்தி பெற்ற ஆலயமாக நிலவுகின்றது.

**ஆலயத்தின் சேவை**

சிறந்த வழிபாட்டுத் தலமாக விளங்கும் இவ்வாலயம், மக்களின் சமூக வாழ்க்கைக்கு அச்சாணியாக இருந்து, அவர்களின் பண்பாட்டின் இருப்பிடமாகத் திகழ்கின்றது. மகளிர் இல்வாழ்க்கையைச் செவ்வனே நடத்துவதற்கும், ஆன்மீக முன்னேற்றத்தில் ஈடுபடுவதற்கும் மங்கையர் கழகம் சிறப்புற இயங்குகின்றது. அநாதைப் பிள்ளைகளைப் பராமரிக்கும் இல்லம் தனது சேவைகளை ஒழுங்குறச் செய்து வருகின்றது. வயோதிபர்

பலர் இவ்வாலயத்திலே தஞ்சம் புகுந்து பேணப்பட்டு வருகின்றனர். கோயிற் கலைஞர் கௌரவிக்கப்பட்டு கலைகளின் இருப்பிடமாகவும் ஆலயம் விளங்குகின்றது. யாழ்ப்பாண மருத்துவசாலையின் அபிவிருத்திக்கு தேவஸ்தானம் நன்கொடை வழங்கி மருத்துவத்துறையில் தொண்டாற்றி வருகின்றது. ஞாயிற்றுக்கிழமைகளில் யோகப் பயிற்சி நடத்தி மக்கள் உடல் வளர்ச்சியிற் கவனம் செலுத்துகின்றது. சென்னைச் சைவசித்தாந்த மகாசமாஜ சைவச்சித்தாந்த பவள மகாநாடு 1981 ஆம் ஆண்டு வைகாசி மாதம் மூன்று நாட்களாக வெகு சிறப்பாகத் துர்க்காதேவி தேவஸ்தானத்தில் நடைபெற்று, வரலாற்றுப்புகழ்பெற்றது. அந்தப் பவளவிழாவில் இடம்பெற்ற சொற்பொழிவுகள் நூல் வடிவமாகத் தேவஸ்தானத்தால் வெளியிடப்பட்டன. சைவத்திரு நூல்களை வெளியிட்டும் , இலக்கிய விழாக்களை எடுத்தும் நற்பணியாற்றி வந்திருக்கின்றது. இத்தொடர்பிலே இப்போது திருத்தொண்டர் பெரியபுராணத்தை வெளியிட்டு அறிவுப் பணி செய்கிறது. ஆறுமுகநாவலரின் நூல்களில் வேறுபலவும் இன்று கிடைப்பதரிது. இவற்றுள் சைவ வினாவிடைகள் மீண்டும் அச்சேறி வெளிவருமானால் இன்றைய சிறாருக்குப் பயன் தருவதாக அமையும். இவைபோலப் பிற சைவ அறிஞர்களது நூல்களையும் காலத்துத் தேவையையொட்டி வெளியிடும் வகையில் இத்தேவஸ்தானத்தின் நூல் வெளியீட்டுப் பணி தொடரப்படும்.

இன்னுமொரு துறையிலே தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் சேவையைச் சைவ உலகம் எதிர்பார்த்து நிற்கின்றது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சைவ சித்தாந்தத்துறையை அமைக்கும் முயற்சியில் பல்கலைக்கழகம் ஈடுபட்டிருக்கின்றது. இது கைகூடுவதற்கு துர்க்காதேவி தேவஸ்தானத்தின் உதவியை நாடி நிற்கின்றோம். பெரிய புராண வசனத்தின் 19வது பதிப்பைச் சைவ உலகம் மனமுவந்து வரவேற்று அவர்களை வெளியிட்டுத் துறையில் மேலும் ஊக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு எனது வெளியீட்டுரையை முடித்துக் கொள்கின்றேன்.

தினகரன் வாரமஞ்சரி 1983 அக்டோபர் 30 ஞாயிற்றுக்கிழமை.

# 70

# கலையரசின் 'நாடக அனுபவங்கள்'

### கலாநிதி சு. வித்தியானந்தன் அவர்களின் அணிந்துரை

**நாடகமே என் நினைவு; நாடகமே என் கனவு; நாடகமே என் இன்பம்; நாடகமே என் கவலை; நாடக கலையே என் தெய்வம்" இவ்வாறு வாழ்ந்து வருபவர் கலையரசு சொர்ணலிங்கம் அவர்கள். ஈழத்து நாடகக் கலையுலகிலே தொடர்ந்து 67 ஆண்டுகளாகத் தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாது விளங்கும் பெருமை சொர்ணலிங்கம் அவர்களுக்குரியது. ஈழத்திலே தமிழ் நாடகத்திற்கு மதிப்பும் தூய்மையும் தேடிக் கொடுத்தவர் கலையரசு அவர்களே.**

*இன்று ஈழத்திலே நாடகத் துறையில் விழிப்பும், புத்துணர்ச்சியும் தோன்றியுள்ளன. தாய் மொழிக்கும் மக்கள் கலைக்கும் மதிப்பு ஏற்பட்டுள்ள இக்காலத்திலே இத்தகைய உணர்ச்சிகள் வெளிப்படுவதிற் புதுமையில்லை. ஆனால், தாய் மொழிப்பற்றும் சமயப்பற்றும் கலைப்பற்றும் அற்று, ஆங்கில மோகத்திலே மூழ்கி ஆங்கில நாடகங்களையே சுவைத்து வந்த காலத்திலே, தமிழ் நாடக மேடையில் தோன்றியவர்களைக் கூத்தாடிகள் என்று ஏளனம் செய்து ஒதுக்கிய காலத்திலே, நாடகம் படிக்காதவர்கள் கையில் அகப்பட்டுத் தத்தளித்துச் சீரழிந்து மதிப்பிழந்த காலத்திலே, துணிந்து மேடையிலே தோன்றிப் படித்தவர் நாடகத்தில் நடிப்பதன் மூலம் அக்கலையைத் துாய ஒரு கலையாக வளர்த்து மதிப்பிற்குரிய கலையாக ஆகலாம் என்பதைச் செயலிற் காட்டினார் கலையரசு சொர்ணலிங்கம் என்றால், அவர் தொண்டின் பெருமைதான் என்னே?*

**கலையரசின் துணிவு**

*நாடகக்கலை இழிவானதென்றும், அது வெறுத்தொதுக்கப்படவேண்டிய கலைத்துறையென்றும், எனவே, அதில் எவரும் ஈடுபடக் கூடாதென்றும், நாடகச்சபையில் அங்கத்துவம் வகிப்பதே ஒருவரின் அந்தஸ்தைப் பாதிக்கும் என்றும் கருதப்பட்ட காலத்திலே 7-7-1913 இல் 'இலங்கா சுபோத விலாச சபா' என்றொரு நாடகமன்றத்தினை நிறுவி, அக்காலச் சமூக அமைப்பிலே முக்கிய அந்தஸ்துப் பெற்றிருந்த ஆங்கில வைத்தியர்களையும் வழக்கறிஞர்களையும் ஆசிரியர்களையும் உயர்தர அரசாங்க உத்தியோகத்தர்களையும் அம்மன்ற உறுப்பினராகக் கொண்டு நாடகத்துறையில் ஒரு விழிப்பையும் எழுச்சியையும் உண்டாக்கியவர் கலையரசே.*

*இருபதாம் நூற்றாண்டிலே ஈழத்தில் நாடகத்திற்குப் பெருமையும் சிறப்பும் தேடிக் கொடுத்ததுடன் கலையரசின் பணி முற்றுப்பெறவில்லை; தொடர்ச்சியாக 67 ஆண்டுகளாக நாடக உலகிலே தனக்கென ஒரு தனியிடம் பெற்று விளங்குபவர் இப்பெரியார். 1901ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ம் நாள் தமது பன்னிரண்டாவது வயதிலே லோகதாசன் பாத்திரத்தை ஏற்று நடித்த அன்று தொடக்கம் இன்றுவரை தொடர்ச்சியாக 67*

ஆண்டுகள் நடித்து வந்த பெருமை இவருக்கேயுரியது. 67 ஆண்டு உயிருடன் வாழ்வதே அருமையாகவுள்ள இக்காலத்தில், சென்ற மார்ச் மாதம் 30 - ம் நாள் தமது எண்பதாவது பிறந்தநாளைக் கொண்டாடிய இப்பெருந்தகை, அவ்வெண்பதாண்டில் 67 ஆண்டுகள் மேடையிலே தோன்றி நடித்தாரென்றால் அஃது ஓர் அரும்பெருஞ் சாதனையேயாகும். அந்த 67 ஆண்டுகள் நடிப்பு அனுபவம் விலைமதிப்பற்ற அனுபவமாகும்.

இவர் எண்ணற்ற நாடகங்களில் நடித்தது மட்டுமன்றி 500க்கு மேற்பட்ட நாடகங்களைத் தயாரித்துமளித்திருக்கின்றார். அந்நாடகங்களில் ஒன்றாயினும் இதுவரை தோல்வியடையவில்லை. எனவே இவரது நாடகத் தயாரிப்பு அனுபவமும் மகத்தானது.

மேலும், இன்றுவரை ஈழத்தில் பல பாகங்களிலும் நாடகங்களையும் கூத்துக்களையும் இசை நாடகங்களையும் நாள்தோறும் கலையரசு பார்த்து வருகின்றார். பல நாடகப் போட்டிகளிலே பிரதான நடுவராகவும் கடமையாற்றியிருக்கின்றார். பல வகை நாடகங்களைப் பார்த்தவர் மதிப்பிட்டவர் என்ற வகையிலும் இக்கலைஞருக்கு ஆழமான பரந்த அனுபவமுண்டு.

**மூவகை அனுபவங்கள்**

மேலே குறிப்பிட்ட மூன்று வகை அனுபவங்களும் இப்பொழுது எமக்கு நூல் வடிவிற் கலையரசின் நாடக அனுபவமாகக் கிடைத்திருக்கின்றன. இந்நூல் கலையரசின் வெறும் மேடை நினைவுகள் மட்டுமன்று; அது இருபதாம் நூற்றாண்டு ஈழத்து நாடக வரலாற்றினை இவ்வரிய நூல் தருகின்றது. ஈழத்திலும் இந்தியாவிலும் தோன்றிய தலை சிறந்த நடிகர்களின் வரலாறும் இதிலுண்டு. பல்வகைப் பட்ட நாடகங்களின் இயல்புகள், வளர்ச்சி, இன்றைய நிலை முதலியன துலக்கமாகக் காட்டப்படுகின்றன. நடிப்பு, தயாரிப்பு, நாடகமன்ற அமைப்பு முதலியன பற்றிய அரிய கருத்துக்கள் இந்நூலிற் செறிந்து கிடக்கின்றன. சுருங்கக் கூறின், நாடகக் கலைக் களஞ்சியமாக விளங்குகின்றது இந்தப் படைப்பு.

நூலின் முற்பகுதியில் கலைஞனை ஆக்குவதிற் சூழ்நிலை வகுக்குமிடத்தைச் சுட்டிக் காட்டுகின்றார். பெற்றோர், மனைவி, மக்கள், நண்பர் முதலியோர் தடையாக இராது உற்சாகமளிப்பாராயின் அது கலைஞனின் முன்னேற்றத்திற்கு அடிகோலிக் கொடுத்து வளர்ச்சிக்கும் பெருந்துணையாக அமையும். கலையரசின் தகப்பனார் கலையரசை நாடகங்களுக்கு அழைத்துச் சென்றும், நாடகங்களைப் பார்க்கப் பிறருடன் அனுப்பியும் நடிக்க அனுமதித்தும் உதவினாரென அறிகிறோம். மேலும், இவரின் தந்தையார் இவர் நடிப்பதற்கு அனுமதி கொடுத்த போது கேட்டுக் கொண்ட வாக்குறுதி கலைஞர்களுக்குப் பயனளிக்கக் கூடியது. அவர் கூறினார் ‘நீ ஒரு நடிகனாகப் பங்கு பற்றியோ அல்லது வேறு யாரையும் கொண்டு நாடகம் நடத்தியோ அல்லது வேறு விதத்திலோ இந்தக் கலையைக் கொண்டு ஒரு சதமாவது சம்பாதிக்கக் கூடாது அப்படிச் செய்வதில்லை என்று எனக்கு வாக்குறுதி கொடுக்க வேண்டும்.’ தகப்பனாருக்குக் கொடுத்த வாக்குறுதிப்படியே, தாம் நடித்த நாடகத்தின் மூலமோ பணம் சேகரிக்கவில்லை. இப்பண்பு ஓர் உண்மையைத் தெளிவாக விளக்குகின்றது. கலைஞன் கலைவணிகனாக இயங்கினால், அவன் வளர்ச்சிக்கும் கலை தூய்மையையும் மதிப்பையும் இழக்கின்றது.

தகப்பனின் ஒத்தாசையும் ஆதரவும் இளம் பிரயாத்திற் கிடைத்தது போல மணம் முடித்தபின் மனைவியாரின் ஒத்துழைப்பும் அருளும் நிறையக் கிடைத்தன என இந்நூல் வாயிலாக அறிகின்றோம். ஒரு நடிகனுக்கோ நாடகத் தயாரிப்பாளனுக்கோ மனைவியாக வாய்த்தவள்படும் இன்னல்கள் பல. கணவனுக்கேற்ற மனைவியாகவும், நற்பண்புகளுக்கெல்லாம் உறைவிடமாகவும், கலையரசின் முயற்சிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிப்பவராகவும், அமைதியான இல்வாழ்க்கை நடாத்தி வரும் இவர் மனைவியாருக்கு நாடக உலகம் பெரிதும் கடமைப்பட்டுள்ளது.

**ஏற்ற பாத்திரங்கள்**

இவர் ஏற்ற பாத்திரங்கள் பற்றி நூலில் விரிவாகப் பல இடங்களிற் கூறுகின்றார். அவ்வாறு கூறுமிடங்களில் நடிகருக்குப் பயன்படக் கூடிய குறிப்புக்கள் மலிந்து கிடக்கின்றன. ஒரு குணசித்திர நடிகனுக்கு ஒப்பனையும் நடிப்பும் முக்கியமென்பதனை இவர் வரலாற்றிலிருந்து அறிகிறோம். நடிகனுக்கு கற்பனையும் சிந்தனையும் முயற்சியும் தன்னம்பிக்கையும் கட்டாயம் வேண்டுமென்பது இவருக்குப் புகழீட்டிய பாத்திரங்களிலிருந்து அறியக் கிடக்கின்றது. ஒரு கலைஞனைப் பிற நாட்டவர் சிறந்த கலைஞன் எனப் பாராட்டும் போது அவனுக்கு மனத் திருப்தி ஏற்படுகின்றதென்றும் சொந்த நாட்டிற் புகழ் அதிகரிக்கின்றதென்றும், இவரின் வரலாற்றிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

பம்பாயிலிருந்து வந்த லலிதா வேங்கடராமன் என்னும் இசைவாணி, வாணீபுர வணிகனில் இவர் 'சைலொக்'காக நடித்ததைப் பார்த்ததும் திரையிலே நடிப்பதற்கு இந்தியாவிற்கு அனுப்பும்படி இவரின் மனைவியாரை வற்புறுத்தினாராம்.

பிறநாட்டவரும் போற்றக்கூடிய நடிகனாக இவர் எவ்வாறு ஆனார் என்பதற்கும் நமது நூலில் ஆங்காங்கு காரணங்களைச் சுட்டிக் காட்டியுள்ளார். சிறந்த நடிகனாக விளங்க விரும்புவோன், தன்னை மறக்க வேண்டுமென இவர் கூறுகின்றார். 'நான்' என்பதினை மறத்தலே ' தன்னை' மறக்க வேண்டும் என்பதன் பொருள். ஒருவன் மேடையிலே தோன்றி நடிக்கும் போது, தான் நடிப்பதாக எண்ணக்கூடாது. என்ன பாத்திரமாக நடிக்கிறானோ அப்பாத்திரமே தான் என்ற உணர்ச்சியைப்பெற வேண்டும். "நான் நடிக்கிறேன்" என்ற எண்ணத்தைக் கைவிட்டு நடிக்கும் பாத்திரத்தைச் சரியாக உணர்ந்து அதற்கு ஏற்றவாறு பேச்சினையும் முகப்பாவத்தினையும் அங்க அசைவுகளையும் பிறவற்றையும் அமைத்துக் கொள்ள வேண்டும். எனவே சிறந்த நடிகனாக விளங்குபவன் 'நான்' என்ற அகங்காரத்தை அகற்றியவனாக இருப்பான்.

அறுபத்தேழு ஆண்டு நடித்து அனுபவம் பெற்ற போதும், தான் செய்வதே சரி என்று அகங்காரம் கொள்ள மாட்டார். எந்த நாடகப் பாத்திரத்தை ஆட முன்வந்தபோதும் பிறர் அபிப்பிராயத்திற்குச் செவிசாய்ந்தே நடிப்பார். ஒத்திகை வேளையிற் பிற நடிகரின் கருத்துக்களையும் கேட்டு, தான் செய்வது தான் தரிக்கும் பாத்திரத்திற்கு ஏற்றதாவெனத் தெரிந்து கொள்வர். கற்றார், கல்லார், இளையோர் யாவரிடமும் அபிப்பிராயம் கேட்பார். மேடைக்குப்போக முன் தன் உடை அலங்காரத்தைக் காட்டி தான் தரிக்கும் வேஷம், முகபாவம், நிலை, நடை, பேச்சு முதலியவற்றை செய்து காட்டி மற்றவர்களது எண்ணங்களையும் கேட்டுச் சீர்படுத்திக் கொள்வர்.

**சுயநலத்தின எதிரி**

*கலைஞனிடம் சுயநலம் தாண்டவமாடக் கூடாது என்பதற்கு இன்னோர் எடுத்துக் காட்டைக் காணலாம். சிறிய பாத்திரமாக இருந்தாலும், அப்பாத்திரத்திற்குரிய குணங்கள் வெளிப்படக்கூடிய முறையில் நடிக்க முடியுமானால் அதனை அன்புடன் கலையரசு ஏற்றுக் கொள்வர். 1922ம் ஆண்டில் "லீலாவதி சுலோசனா" என்னும் நாடகத்திற் கொலையை நிறைவேற்றுவோன் பாத்திரமே இவருக்கு ஏற்றதென நிருவாகக் குழு தீர்மானித்தபோது, அம்முடிவை உவகையோடு ஏற்று நடித்தார். நடிகருக்கு அடக்கமும் கட்டுப்பாடும் பணிவும் இன்றியமையாதன என இதிலிருந்து தெரிகின்றது.*

*இதனாலேயே இவர் ஓரிடத்திற் கூறுகிறார் "யாராவது சிறந்த முறையில் நடித்தேன் என்று பாராட்டினால் நான் அச்சமடைவேன். காரணம் அடுத்த முறை. இதிலும் தரம் மேலானதாக எவ்வாறு நடிக்கலாம் என்ற ஏக்கமே" இவ்வச்சங் காரணமாக நாடக துறையில் எப்பொழுதும் தம்மை ஒரு மாணவனாகவே கருதி வந்தார். "நடிகன் கேட்டுப் படிக்க வேண்டும்; தேடிப் படிக்க வேண்டும்; பார்த்துப் படிக்க வேண்டும் தன்னையே காட்ட வேண்டும் என்ற எண்ணம் இருக்கக் கூடாது தனது பாத்திரத்தைப் படைத்துக் காட்ட வேண்டுமென்ற எண்ணமே இருக்க வேண்டும்" என்பது இவர் கூற்று.*

*நாடகத் தயாரிப்பு பற்றி இவரது அனுபவங்கள் பல வகைப்பட்டன. நாடகத்தைப் பற்றிய எவ்வித அறிவும் இல்லாதவர்களே இன்று பெரும்பான்மையான நாடகங்களைத் தயாரிக்கின்றார்கள். இதனைக் கலையரசு வன்மையாகக் கண்டிக்கிறார். கலையரசின் கூற்றிற்சொல்வதாக இருந்தால், "டைரக்டர் கதையமைப்பு பேச்சு, பாட்டு, நடிப்பு, வேஷத் தயாரிப்பு மேடையலங்காரம், ஒளியமைப்பு முதலியவற்றில் நுண்ணறிவு உடையவராயிருத்தல் வேண்டும். சுயநலம், பொறாமை பராபட்சம் என்பன மருந்துக்கும் இருக்கக்கூடாது. மனித சுபாவங்களைத் தெளிவாய் அறிந்து கொள்ளக் கூடியவராய் இருத்தல் வேண்டும். களைப்பும் சலிப்பும் இல்லாது மன உறுதியுடன் நாடகவெற்றிக்கு உழைக்க வேண்டும்."*

**நடிகர் தெரிவு**

*நடிகரைத் தெரிவு செய்யும் போது பாத்திரத்திற்கேற்ற முகபாவமும் அங்கவமைப்பும் பொருத்தமாக உள்ளவர்களையே தெரிவு செய்ய வேண்டுமென்கிறார். சபையில் பிரபல அங்கத்துவர் என்ற காரணத்தால் அவர்களைப் பொருத்தமில்லாத பாத்திரங்களுக்குத் தெரிவு செய்வதை அவர் கண்டிப்பர். ஒரு குறிப்பிடட்ட காலத்தில் உரிய பகுதியை மனப்பாடம் செய்யாதவர்களையும், ஒழுங்காகவும் நேரத்திற்கும் ஒத்திகைக்கு வராதவர்களையும், முழு ஒத்திகைக்கும் பிரசன்னமாயிராது தமது பகுதி முடிந்ததும் வீட்டுக்குப் போகின்றவரையும் இவர் தமது நாடகங்களிலிருந்து நீக்கிவிடுவார். ஒழுங்கும் ஒழுக்கமும் இவர் எல்லா நடிகரிடமும் எதிர்பார்ப்பவை. இரவற்குரல் கொடுப்பதையும் ஒலிபெருக்கியைப் பாவித்தலையும் மண்டப ஒளியை அணைத்தலையும் இவர் விரும்பவில்லை. எந்த நாடகத்தினையும் குறைந்தது ஆறு மாத ஒத்திகையின் பின், நாடகசபாவின் செயற்குழுவின் முன் நடித்து அவர்களின் அங்கீகாரம் பெற்றதன் மேலேயே மேடையேற்றுவார். நாடகக் கதையைப் பலமுறை படித்துக் கிரகித்த பின்பே*

நடிகர் தெரிவு செய்வார். இதற்கு மாறாகக் கதையில்லாது நாடகம் நடிப்பவரும், நாலு அல்லது ஐந்து நாள் ஒத்திகையோடு நாடகம் அரங்கேற்றுபவரும், கட்டுப்பாடும் அடக்கமும் இல்லாத நடிகரும் மலிந்துள்ள காலம் இது! இதனாலேயே நாடகத்தை ஒரு சிறுபிள்ளை விளையாட்டாகக் கருதாது நாடகத்தைச் சிறந்த கலையென உணர்நதவரே நாடகத்தில் நடிக்கவும் நாடகத்தை நடாத்தவும் முன்வர வேண்டும் என்று எச்சரிக்கைப் படுத்துகின்றார்.

கலையரசுக்கும் எமக்கும் கடந்த 15 ஆண்டுகளாக நெருங்கிய தொடர்பு இருந்து வந்திருக்கின்றது. இலங்கைக் கலைக்கழகத் தமிழ் நாடகக் குழுவின் சார்பாகவும், சாகித்திய மண்டலத் தமிழ் நாடகக் குழுவின் சார்பாகவும் நாம் நாடகத்துறையில் செய்யும் முயற்சிகளுக்கு உறுதுணையாக இருப்பவர் கலையரசு அவர்களே. இத்தொடர்பினாலே அவருடன் நெருங்கிப் பழகவும், அவரின் நாடக அனுபவங்களை அவர் மூலம் அறியவும் வாய்ப்புக் கிடைத்தது. கடந்த பதினைந்தாண்டுகளுக்கு முன் கலையரசு அவர்கள் நாடகங்களில் நடித்தும் நாடகங்களை தயாரித்தும் நாடகத்துறையிலே தொண்டாற்றியுமிருக்கின்றார். அதற்குப் பின்னர், 1952 ல் இருந்து இன்றுவரை, தொடர்ந்தும் நடித்தும் தயாரித்தும் வந்த போதும், அவரின் சேவைகள் பிறரின் கலைத்தொண்டுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிப்பதிலேயே பெரும்பாலும் காணப்படுகின்றன. அந்த வகையிலே எமக்கும் அவரின் சேவையும், ஆதரவம் அன்பும் தாராளமாகக் கிடைத்திருக்கின்றன. நாம் ஒழுங்கு செய்யும் நாடக விழாக்களிலும் கருத்தரங்கிலும், பாராட்டு விழாக்களிலும், நாடகப் போட்டிகளிலும் ஒழுங்காகக்கலந்து கொண்டு அரிய தொண்டாற்றி வருகின்றார்.

கடந்த பதினைந்து ஆண்டுகளாகப் பெரும்பாலும் ஓயாது நாடகத்திற்குத் தலைமை வகித்தோ, கருத்தரங்கிற் பங்குபற்றியோ நாடகப் போட்டிக்கு நடுவராகக் கடமையாற்றியோ வருகின்றார். இதன் பயனாக இவர் பெற்ற அனுபவங்களும் இந்நூலில் அடங்கியுள்ளன மற்றும் கலைஞர்களைப் போற்றுவதிலும், கௌரவிப்பதிலும் இவர் காட்டும் ஆர்வம் ஏனைய கலைஞர்கள் பின் பற்றுவதற்கு உரியது. எது ஒரு நாடகத்தில யாராவது திறம்பட நடித்தால், நாடகம் முடிந்ததும் மேடைக்குச் சென்று தனிப்பட்ட முறையில் அவர்களை வாழ்த்தி ஊக்கமளிப்பார். குறைகளை எடுத்துக்கூறவும் பின்வாங்க மாட்டார். ஆனால் அவற்றைப் பண்பான முறையிற் சுட்டிக் காட்டித் திருந்துவதற்குரிய வழிகளையும் எடுத்துக்காட்டுவார். ஒரு நாடகம் சிறப்பாக அரங்கேற்றினால் அவருக்கு இருக்கும் மகிழ்ச்சி அளவற்றது. விமர்சனம் செய்யக்கூடிய பத்திரிகைகளிற் பாராட்டி எழுதுவார். இத்தகைய சிறந்த பண்பை, துாய உளப்பாங்கை, பிறர் நலம் கருதும் சால்பைக் கலைஞர் பெற்றிருத்தல் வேண்டும் .

நாடகப் பேராசான் சொர்ணலிங்கம் அவர்கள் நாடகக் கலையின் அரசன்; நாடகத்தின் சின்னம்; தமிழ்ப் பண்பாட்டிற்குக் கண்ணாடி; பொதுமக்களின் பல்கலைக்கழகம்; மக்கள் உணர்வைத் தட்டியெழுப்பி அன்பையும், அறிவையும், துாய்மையையும் வளர்த்து மங்காப் புகழ் படைத்த கலைஞன். தம்மை நாடகப் பைத்தியக்காரன் என்றும், நாடகமே எப்பொழுதும் தனது இலட்சியம் என்றும் பெருமைப்படும் கலையரசு சொர்ணலிங்கம் அவர்கள் வெளியிடும் நாடக அனுபவ நூல் எமக்குக் கிடைத்துள்ள

விலைமதிக்க முடியாத அரிய கலைச் செல்வமாகும். இந்நூலை விரைவில் வெளியிட வேண்டும் என்று அடிக்கடி இவரைத் தூண்டியவர்களில் நானும் ஒருவன் எனவே, இது வெளிவருவதில் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேன்.

இன்று எழுத்துலகிலும் கலையுலகிலும் பொறாமை பெருக்கெடுத்தோடுகின்றது. வாழ்க்கையில் முன்னேறும் ஆற்றல் இல்லாதவர்கள், ஆக்க வேலையில் ஈடுபடுபவரை நிந்திக்கும் காலம் இது. படித்தவர்களும் பட்டம் பெற்றவர்களும் உயர் பதவியிலுள்ளவர்களும் கூச்சமின்றிப் பிறரைத் தூற்றுங் காலம்; நன்மை ஆபத்தானதா என்று பெரியோர் கவலையுறுங் காலம். இத்தகைய சூழ்நிலையில் பண்பாடற்ற கலைஞர் மத்தியில் சால்பு படைத்த பெருந்தகையாக மக்கள் கலைஞனாக, ஒப்பற்ற கலையரசாக, என்றும் அணையாத விளக்காகக் காட்சியளிக்கும் சொர்ணலிங்கம் அவர்களின் வாழ்வும் தொண்டும் மேலும் சிறக்கக் கலைகளுக்கெல்லாம் இறைவனாகிய ஆடவல்லான் அருள் செய்வாராக.

தினகரன் வாரமஞ்சரி 1984 ஏப்பிரல் 1 ஞாயிற்றுக்கிழமை



2003. 11.07 அன்று தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் முனைவர் இ. சுந்தரமூர்த்தி அவர்கள் வித்தியானந்தனின் நினைவுப் பேருரையை நிகழ்த்திய பதிவு. பேருரையின் பொருள் : தமிழியல் ஆய்வுகள்

# கட்டுரைத் தலைப்புச் சுட்டி


| கட்டுரைத் தலைப்புக்கள் | பக்கம் |
|---|---|
| **அ** | |
| அறிஞர்களையும் பொதுமக்களையும் அவமதித்தவர் துரையப்பா! | 193 |
| **ஆ** | |
| ஆங்கில மகாகவியின் விழா | 151 |
| ஆண்டுதோறும் தமிழ்த் தின விழா கொண்டாட வேண்டும் | 171 |
| ஆறுமுக நாவலருடைய பணிகளின் இக்கால பயன்பாடுகள் | 203 |
| **இ** | |
| இலக்கண நூல் கல்விக்கு தந்தை | 134 |
| இலக்கியத்திலும் கலையிலும் கண்ட வளர்ச்சி | 173 |
| இலங்கைக்கு எதற்காக ஒரே பல்கலைக்கழகம் | 181 |
| இலங்கையிலே நாடகக்கலை இன்று இருக்கும் நிலை | 75 |
| இடர்களுக்கு மத்தியில் ஈழத்து எழுத்தாளர்கள் | 81 |
| இன்றைய இழிநிலைமாறத் தமிழ்மொழிப் பற்று அவசியம் | 60 |
| **ஈ** | |
| ஈடிணையற்ற வெற்றிகண்ட இஸ்லாத்தின் திருநபி | 100 |
| ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் குறிப்பிடக்கூடிய காலம் | 140 |
| ஈழத்து எழுத்தாளரும் நூல் வெளியீடும் | 120 |
| ஈழத்துத் தவப் பெரு நடிகர் - கலையரசு சொர்ணலிங்கம் | 85 |
| **உ** | |
| உலகெலாம் பரவிய தமிழும் தமிழர் சால்பும் | 77 |
| உயர்கல்வி வாய்ப்பற்ற தமிழ் இளைஞரால்தான் தமிழ்ப் பிரச்சினை இன்று முனைப்புறுகிறது | 208 |
| உயர்கல்வி வாய்ப்பு | 211 |
| **எ** | |
| என்னை ஆளாக்கிய பெருமான் | 164 |
| **க்** | |
| கர்ணன் போர் | 103 |
| கலைஞரைப் பாராட்டுதல் | 109 |
| கலையரசின் ‘நாடக அனுபவங்கள்’ | 235 |
| கிழக்கிற்கும் வடக்கிற்கும் புலவர்மணி இலக்கியப் பாலமாயமைந்தவர் | 198 |
| கிறித்தவரும் ஈழத்திலே தமிழ் வளர்ச்சியும் | 104 |
| கூடி வாழ்ந்தால் கோடி நன்மையுண்டு | 56 |

கூத்தாடுபவர் பொதுமக்கள் : அதை ரசிப்பதும் அவர்களே! 74

கைப்பச்சை கட்டவும் காத்திருக்கவும் வேண்டாம் 1

ச்

சமுதாயப் பண்பைப் பிரதிபலித்துக் காட்டும் கிராமியக் கலைகள் 79

சாதி, மத அடிப்படையில் இலக்கியத்தை நோக்குவது சரியல்ல 117

சைவத்திற்குப் புரியும் தொண்டு 170

சேர, சோழ, பாண்டி நாடுகளுடன் என்றும் தொடர்புள்ள ஈழநாடு 17

த்

தமிழ் ஆசிரியர் தரித்திரத்திலுழன்றால் தமிழ்மொழி வளர்வதெங்ஙனம்? 21

தமிழ்க்கிராமியக் கலைமன்றம் உடனே நிறுவப்பட வேண்டும் 163

தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கத்திற்கு குழிதோண்ட ஆளும் கட்சியினர் எடுத்துவரும் முயற்சி 65

தமிழ்மொழி வளர்ச்சிக்கு வழிகாட்டியவர் ஈழநாட்டவர் 13

தமிழர் வரலாற்றில் சமுதாய ஒற்றுமை – முற்பகுதி 66

தமிழர் வரலாற்றில் சமுதாய ஒற்றுமை – பிற்பகுதி 69

தமிழர் வாழ்வில் மகிழ்ச்சி பொங்குக! 147

தனிமனிதன் நலிவுறினும் தமிழினம் நலிவுறலாகாது 96

திருத்தொண்டர் பெரியபுராண வசனம் வெளியீட்டுரை 231

தேசிய வாழ்வுக்கு மாணவரைப் பயிற்றுவதே இலட்சியம் 219

ந்

நாடகத்திற்கு மதிப்பும் சிறப்பும் அளித்த மக்கள் கலைஞன் 143

நாடகமேடையில் 65 ஆண்டுகள் 160

நாடக வித்தகர் கலையரசு சொர்ணலிங்கம் 200

நாட்டுப் பாடல்கள் செறிந்து இலங்கும் வேல்சுநாடு 10

நாட்டு மாந்தர் அனைவரையும் வாழ்விக்க வரும் நன்னாள்! 48

4-வது தமிழாராச்சி மாநாடு வெற்றிபெற உழைத்தவர் திருமதி புனிதம் திருச்செல்வம் 201

நீயும் வாழ், ஏனையோர் வாழவும் வழிவிடு 47

ப்

பங்குனித் திங்களில் நடைபெறும் தமிழ்விழா 62

பசியும் பிணியும் போக்கவும் கண்ணீருக்கு பதில் களிப்பினைக் காணவும் 111

பண்பட்ட கலைஞர் 91

பண்பாடான இனத்தை உருவாக்க கல்வி பயன்பட வேண்டும் 137

பணியின் சின்னமாக விளங்கிய வி.ரி. செல்லத்துரை அவர்கள் 178

பத்தாம் ஆண்டில் ஏற்படவிருந்த தத்திலிருந்து தப்பிப் பிழைத்து விட்டது தமிழ் ஆராய்ச்சி மன்றம்! 188
பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கப் பொன்விழா இன்று ஆரம்பம் 197
பள்ளிவாசல்களில் வழங்கும் புனித மொழிகளில் ஒன்று தமிழ் 114
பிறர் நலத்துக்குத் தொண்டாற்றிய தியாகமூர்த்தி மகாத்மா காந்தி 40
பெரிய தமிழ் மேதையாகத் திகழ்ந்த வித்துவ சிரோமணி கணேசையர் 226

**ம்**

மக்கள் சகாப்த முன்னோடி 184
மகாஜனக்கல்லூரி நிறுவியவர் நினைவு நாட் பேருரைச்சுருக்கம் 156
மரபுப்போர் அறிவுப் போரா? : தனிப்பட்ட சிலரை தாக்கும் போரா ? 129
மரபைக் காக்கும் அண்ணாவி நாடகம் 93
முஸ்லிம் அறிஞர்களின் தமிழ்த் தொண்டின் சிறப்பு 179
மேற்கில் முதல் உலகத் தமிழ் மாநாடு 175

**ய்**

யாழ் பல்கலைக்கழகம் தமிழ் இளைஞர்கள் தேசிய வாழ்வில் நுழையும் வாயிலாகும் 213

**வ்**

வழி பிறக்குமா? 51
வள்ளுவர் கூறும் இன்பத்தின் இயல்பு 25
வாக்குரிமையை விலைகொடுத்துப் பறிக்கும் வம்பர் இல்லை 07
வாழ்க்கையின் சகல துறைகளிலும் வழிகாட்டிய வள்ளல் நபி 43

**A - Z**

Jaffna University, Tamil Youths Link with National Life 217
Tamil Folk Drama 124

## சு. வித்தியானந்தனின் நினைவுகளில் பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை...

என்னை ஆளாக்கிய பெருமான். என் சிந்தனையினின்றும் என்றும் அகலாத அருளாளன். எனது வாழ்க்கையின் முக்கிய கட்டங்களில் எனக்கு வழிகாட்டிய செம்மல். என்னிடம் தனிப்பற்றும் வாரப்பாடும் கொண்ட குரு. ஈழத்திருநாட்டின் விலை மதிக்க முடியாத தமிழ்த் தொண்டன். பேராசானைப் பற்றி நினைப்பது என்னைப்பற்றி நினைப்பதேயாகும்.

1941-ம் ஆண்டிற் பல்கலைக்கழகத்தில் நான் மாணவனாகச் சேர்ந்த காலந்தொட்டு அவர் மறையுங்காலம் வரையுள்ள எனது வாழ்க்கை வரலாற்றில் அவருக்குப் பெரும் பாகமுண்டு. தமிழைச் சிறப்புப் பாடமாகச் செய்யவைத்து, பல்கலைக்கழகத்துக்கு வெளியே போகவிடாது, அங்கேயே விரிவுரையாளராக நியமித்து, விரிவுரையாற்றப் பழக்கி, ஆராய்ச்சியில் வழி நடத்தி, திருமணத்தைத் தலைமைதாங்கி நடத்திவைத்து, திருமணத்தின் பின் குடியிருக்கத் தனி வீட்டைத் தந்து, 'புறொபெசர் மாமா' என்று, இன்றும் எனது பிள்ளைகள் வாரப்பாட்டுடன் கொண்டாடும் அளவிற்கு அவர்களிடம் அன்போடு பழகி, எனது இன்ப துன்பங்களிற் பங்குகொண்ட என் குருவைப் பற்றி எழுதும் பொழுது என்னைப் பற்றியும் எழுதாமல் இருக்க முடியாது. உடல் அளவிற் பிரிந்துவிட்டாலும் என்னிடமிருந்து அவரைப் பிரிக்க முடியாது.

நாம் படித்த காலத்திற் பல்கலைக்கழகத்திலே தமிழ் படித்தவர் மிகக் குறைவு. பொதுக்கலை வகுப்பில் ஆறு ஏழு பேரும், சிறப்புக் கலை வகுப்பில் ஒருவர் அல்லது இருவரே கற்று வந்தனர். பொதுக்கலை வகுப்பிற் பலருக்குத் தமிழ் பேச வராது. எழுத்துக் கூட்டிப் படிப்பிக்க வேண்டும். இத்தகைய சூழலிலே தமிழ்ப்பணியைத் தொடங்கி தமது இறுதிக் காலத்தில் ஒலிபெருக்கியிற் பல நூற்றுக்கணக்கானவருக்குத் தமிழ் கற்பிக்கும் அளவிற்குத் தமிழ்த்துறையை வளர்த்துவிட்டுச் சென்றிருக்கின்றார். தமிழையும் தமிழ் படிக்கின்றவரையும் இகழ்ந்து வந்த காலத்திலே தமிழ்த்துறையை உயிர்த்துடிப்புடன் இயங்கச் செய்த பெருமை பேராசிரியர் க.கணபதிப்பிள்ளைக்கே உரியது.

அவரோடு உரையாடுவது தனியின்பம். அவரின் தொடர்பினாலேயே நாட்டுக் கூத்திலும் கிராமிய நடனங்களிலும் எனக்கு ஈடுபாடு ஏற்பட்டது. நன்மைக்குக் கேடில்லை. நன்மை செய்தோர் சந்ததி வாழும். பேராசான் கணபதிப்பிள்ளை எவரையும் வருத்தியதே இல்லை. அவர் புகழ் நிலைக்கும். அவர் குடும்பம் வாழும்.

ISBN 955533492-7

9789555334921

Print@Mickey-Chava
021-2-27-17-07